தமிழ்ப் புலவர் வரிசை

பகுதி – எ

திரு சு அ இராமசாமிப்புலவர்

கழக வெளியீடு : கூசுஉ

தமிழ்ப் புலவர் வரிசை

பகுதி - எ

[கஉ முதல் உக புத்தகங்கள்]



ஆசிரியர் :

திரு சு அ இராமசாமிப் புலவர்



திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
1974

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Branches :

Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam Trichy-2

Edition 1 Feb : 1959
Reprint : May 1974

O,31 6wN7
N74.7

THAMIZHP PULAVAR VARISAI

VOL VII

Appar Achakam, Madras-1. (-/3)

முதற்பதிப்புரை

நாடு, மொழி ஒன்றிலேயே உயர்ச்சிபெறும்; மொழியை வளர்ப்போர் புலவர் பெருமக்கள்; அவர்கள் வரலாற்றை அறிவது, அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிவதாகும்.

பெயர் தெரியாது மறைந்துபோய் அவர் பாடிய பாட்டுக்களில் கருத்துச் செறிவுடைய சொற்றொடர்களானும், உறுப்பு முதலிய சிறப்பானும் பிறவற்றானும் பெயர்கொண்டு நிலவும் புலவர் பெருமக்களும் அஃதன்றி மறைந்து பெயரே தெரியாது அவர் பாடித்தந்த நூல்கள்மட்டில் இருக்கும் புலவர் பெருமக்களும் பலராவர்.

இத்தகைய மாண்புமிக்க கலைச்செல்வர்களின் வரலாற்றை இயன்றவரை தொகுத்து நம் தமிழ்கூறு நல்லுலகுக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டு முதற்கண் சங்ககாலத்து வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் வரலாற்றைச் 'சங்கத் தமிழ்ப் புலவர் 'வரிசை' என்னும் தொகுப்பில் பதினாறு தனி நூல்களாக வெளியிட்டோம். பின்னர் அவற்றைத் தொகுத்துக் கட்டடஞ் செய்து நூல்நிலையங்கட்கு ஏற்றவாறு அமைத்து ஆறு பகுதிகளாக வெளியிட்டோம்.

பின்னர்ச் சங்ககாலத்துக்குப் பின்பு விளங்கியிருந்த புலவர் பெருமக்களின் வரலாற்றைத் தொகுக்க எண்ணித் தமிழ்ப் புலவர் வரிசை என்னும் பெயருடன் மூயன்று இதுகாறும் ஒன்று முதல் இருபத்தொரு நூல்கள்வரை கிடைத்த வரலாற்றைக் கொண்டு திரு. சு. அ. இராமசாமிப் புலவரவர்களை எழுதச்செய்து வெளியிட்டுள்ளோம்.

இவ்வரலாறு வெளியிடுவதற்குப் புலவர்களும் அறிவுமிக்க மாண்பினரும் தத்தமக்குத் தெரிந்த புலவர்களின் வரலாற்றைத் தாங்கள் அறிந்தவரையில்—கேட்ட அளவில்—தெரிந்து வரைந்

தனுப்பிஞல் மேலும் தொடர்ந்து புலவர்கள் வரலாற்றைத் தொகுத்தற்குப் பேருதவியாக இருக்கும். இதனுல் புலவர்கள் வரலாறு ஒருவாறு எங்கும் யாவரும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் கிட்டும்.

புலவர் வரலாறுகளை, அவர்கள் ஆக்கிய நூல்களின் துணை கொண்டும், நூலினைப் புலவர்களைக் கொண்டும் நன்கு அறியலாம். ஆகவே, இந் நன்முயற்சியில் மூன்ந்து சங்க காலத்துக்குப் பிற்கால முதல் இதுவரை வாழ்ந்திருந்த புலவர்களின் வரலாற்றைத் தொகுத்து முடிப்பதையே முதற்பெருங் கடனுக்கக் கொண்டுள்ளோம்.

இதுவரை வெளிவந்துள்ள இருபத்தொரு தனித்தனி நூல்களில் ஒன்று முதல் மூன்று வரையுள்ள மூன்றையும் ஒன்முகத் தொகுத்துக் கட்டடஞ் செய்து, அதை முதற் பகுதியாகவும் நான்கு முதல் ஆறு வரையுள்ள மூன்றையும் இரண்டாம் பகுதியாகவும், ஏழு முதல் ஒன்பது வரையுள்ள மூன்றையும் மூன்ரும் பகுதியாகவும், பத்துமுதல் பன்னிரண்டு வரையுள்ள மூன்றையும் நான்காம் பகுதியாகவும், பதின்மூன்று முதல் பதினைந்து வரையுள்ள மூன்றையும் ஐந்தாம் பகுதியாகவும், பதினறுமுதல் பதினெட்டுவரையுள்ள மூன்றையும் ஆரும் பகுதியாகவும், பத்தொன்பது முதல் இருப்பத்தொன்று வரையுள்ள மூன்றையும் ஏழாம் பகுதியாகவும் தொகுத்துள்ளோம்.

தமிழுலக நன்மக்கள் இவற்றை வாங்கிக் கருவூலங்களில் வைத்துப் போற்றுவதுடன் கற்றும் கற்பித்தும் நாடு மொழி கலைகள் வளரத் துணைபுரிவதோடு எம்மையும் இன்னனபோன்ற அரிய பணிபுரிய ஊக்குவிப்பார்களென நம்புகின்ரும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பக்கம்

க. தமிழ்ப் புலவர் வரிசை

பத்தொன்பதாம் புத்தகம்

(உசு புலவர்கள்) 1—144

உ. தமிழ்ப் புலவர் வரிசை

இருபதாம் புத்தகம் (உக ,,) 1—144

கூ. தமிழ்ப் புலவர் வரிசை

இருபத்தோராம் புத்தகம்

(உடு ,,) 1—146

கழக வெளியீடு : கூசசு

தமிழ்ப் புலவர் வரிசை

[பத்தொன்பதாம் புத்தகம்]

ஆசிரியர் :

கூ. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,.
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition : October, 1958.

THAMIZH PULAVAR VARISAI—XIX

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office :

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

பதிப்புரை



முன்னேற்றத்தை விரும்பாதோர் எவரேனும், தற்காலச் சூழலில் பொதுவுடைமை தத்துவம் விரிவாகப் பேசப்படுவதை வரவேற்கவே செய்வர்.

அத்துடன், அப்பொதுமைத் தத்துவத்தை செயல்படுத்த உலகம் அறிவு, உண்மை, அன்பு, ஒழுக்கம், சமத்துவம், தாட்சண்யமற்ற, எல்லாருக்கும் உதவும், விடாத உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய சற்குணங்களே பெற்றோரைத் தேடித் தந்தாக வேண்டும்.

இம் முறையில் நம் சட்டப் புலவர் பெருமக்கள் வரலாறு கனவும், அவர்கள் செய்தருளிய தன்னேரில்லாத் தலைவரின் இணையில் வேலை சற்று அதிகமாக ஏழுதவும், சட்டங்களும், மொழிகளும் செய்யும் எல்லாரையும் எளிதில் தமிழில் புலனாவதில் இது சரதம் பதினெட்டு தலைகள் கொண்டோனாகும். உங்கள் கையில் வரும் இந்தச் சிறுவரலாறு பற்றுதலுடன் காண் புத்தகம் ஏழும்.

இன்னும் தாமதியாமல் வண்ணார்-ப. முதல் சீனர் வரை புலவர்—ஈ. எழுத உள புலவர் பெருமக்கள் வரலாறு களும், குட்டாத்து அப்பர் புலவர் பெருமக்கள் பாத்த பாடல் களும், உள்ளூறை வட்டங்களுடன் செல்லிய இனிய எளிய வடிவில் எழுதப்பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி தூத் தொத்தை தீந. கு. அ. இராமசுப்புலவர் அவர்களுக்கு எங்கள் மனம் உரித்தாகுக.

இதனைப் முதல் பதினெட்டுப் புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணவர்களும், பொதுமக்களும் வாங்கிச் சுற்றுச் சுற்றிலும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்ய எங்களையும் ஊக்குவார்களாக.

சுவாசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார்.

உள்ளுறை

			பக்கம்
க.	ஞானப்பிரகாச வள்ளலார்-சு	...	1
உ.	ஆறுமுக முதலியார்-வகவி	...	11
கூ.	மூத்தராமலிங்க ஞான தேசிகர்	...	15
ச.	அச்சுதராக்த அடிகள்-சு	...	36
ஞ.	சிதம்பர ஞான தேசிகர்	...	39
சு.	ஞானசித்தர்	...	45
எ.	காமினி	...	69
அ.	சிவகுப்பிரமணிய தேசிகர்	...	74
கூ.	வேங்கடத் தணிகைவாண் கவிராயர்	...	76
கூ.	அழகிய திருச்சிற்றம்பல அடிகள்	...	78
கக.	தெய்வ சிகாமணிக் கவிராயர்	...	81
கஉ.	மீனாட்சி சுந்தர முதலியார்-கு	...	83
கஊ.	நீலகண்ட தாசர்	...	87
கச.	ஆறுமுக அடிகள் (திரு)	...	89
கஞ.	சோமசுந்தர பாரதி	...	92
கட.	முருகதாசக் கவிராசர்	...	94
கஎ.	இலைய பெருமாள் பிள்ளை (செ)	...	96
கஅ.	சிதம்பரநாதத் தம்பிரான்	...	99
கக.	முத்துவேலுக் கவிராசர்	...	101
உ0.	கோடீசர் ஐயர்	...	107
உக.	உலகம்மை பம்மாள்	...	108
உஉ.	அண்ணாமலை செட்டியார்	...	110
உங.	கனகசபை பிள்ளை (கூ)	...	130
உச.	திருவேங்கட சாமி (க.வ)	...	134
உஞ.	சுப்பராயப்ப பிள்ளை	...	137
உசு.	சுங்காரவேலு முதலியார்(மா)	...	142

தமிழ்ப் புலவர் வரிசை

[பத்தொன்பதாம் புத்தகம்]

5. ஞானப்பிரகாச வள்ளலார் - நா

தோற்றம்

தம் பெயருக்கு முன்னால், "சபையில் மழுவெடுத்த" என்னும் சிறப்புச் சொல்லைப் பெற்ற இவர், "திருக்கழுமல பரம்பரை மெய்கண்டதேவ சந்தானம் சிற்றம்பலநாடக ஸாதினம் திருச்சேய்ஞலூர்" என்னும் அடைமொழிகளும் பெறுகிறார். இவர் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகட்கு முன் காஞ்சிமாநகரத்தில் சிறந்த மெய்யறிவுச் செல்வராக விளங்கியிருந்தனர்.

அரசனும் பணியாளரும்

அக்காலத்தில் அக்காஞ்சிமாநகரை விசயம்மர்த்தனன் என்னும் குறுநில மன்னன் ஒருவன் அரசாட்சி செய்து வந்தான். அவன் மதுரை முகற்கு மாறு படாதவன். சைவ நூல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பவன். அவனுடைய அரச அலுவல்கள் ஒரே பெயர் அமைந்த வர்கள் இருவர் இருந்தனர். அவர்களுள் ஒருவன் செட்டி, மற்றவன் வேளாளன். இவர்களில் ஒருவனே மாதந்தோறும் அறுவடையின்பொருட்டு அரசன் அமைக்கும்

பாரத மற்றவன் எதிரே செல்வான். இவ்வாறு அடுக்கடுத்துக்கொண்டிருந்தது. ஒருநாள் அரசன் இருவரையும் அழைத்து, "உங்களுடைய இடுகுறிப் பெயரையேனும் சிறப்புப் பெயரையேனும் வேறுபட மாற்றிக்கொள்ளுங்கள்," என்று கூறினன். அதற்குச் செங்குந்தன், "இடுகுறிப் பெயரை மாற்றுதல் எவர்க்கும் இயலாது. சிறப்புப்பெயரோ என்றும் மற்றைய மாபினர்க்கும் பலவாயிருத்தல் போல எம்மரபினருக்கு இல்லை எக்காலத்திலும் ஒரே முறையில் வழங்கிவருகிறது. அதனையும் மாற்றுதல் கூடாது," என்று கூறினன். பிறகு அரசன் வேளாளனுடைய முகத்தைப் பார்த்தான். அவன், "இவர் இயம்பியதில் மற்றைய மாபினரைப் பற்றிக் கூறியது உண்மையே யாயினும் எம்மரபினர்க்கும் அவ்வாறில்லாமல் எக்காலத்தும் எப்பொழுதும் ஒன்றாகவே திருத்தலால் அதனையும் மாற்றக்கூடாது" என்று கூறினன்.

அறிஞர் அறிதல்

பிறகு அரசன் இருவரையும் பார்த்து, "இவ்வேற்றுமை உள்ளவாறு போக்கக்கூடியவர் யார்?" என்று கேட்டனன். அதற்குச் செங்குந்தன், "கயிலாய பரம்பரையில் வந்த சந்தானாசிரியர் நால்வருள் உபசுப்பிரமணிய ஞான வீரவாகு தேவருடைய கூற்றைப் பெற்றுச் சனகமுனிவரின் பிறப்பாக வினங்கும் சுவேதவனப்பெருமான் என்னும் மெய்கண்ட தேவருடைய ஆதீனத்தின்கண் சிறப்புற்றவரும் இப்பொழுது இவ்வூரில் எழுந்தருளியிருப்பவரும் சிற்றம்பலநாடிகளின் முதல் மாணவரும், இவருக்கும் (வேளாளருக்கும்) இவருடைய மாபினர்க்கும் ஆசிரியராகினங்குபவரும் ஞானப்பிரகாச தேசிகர் என்னும் அபிடேகத் திருப்பெயர் வாய்ந்தவரும் ஆகிய பெரியாரே இவ்

வையத்தை எளிதிற் போக்கக்கூடியவர். ஆகவே அவரை அழைத்துக் கேட்டல் நல்லது," என்றனன். அரசன் வேளானைப் பார்த்து, "உனக்கு இந்த உடன்பாடு தானே?" என்று கேட்டனன். அதற்கு அவன் தனக்கு உடன்பாடுதான் என்று கூறினன். மேலும் வேளாளன் அரசனைப் பார்த்துப், "பிறகு இச்செங்குந்தர் அப்பெரியார் கூறிய உண்மையில் மாறுபட்டு வேறொருவரை அழைப்பித்தல் கூடாது," என்றனன். அதற்குச் செங்குந்தன் உடன்பட்டான்.

வள்ளலார் மறுமொழி

அரசன் அப்பொழுதே தக்கார் சிலரை அனுப்பி அப்பெரியாரை அழைத்துக்கொண்டு வருமாறு பணித்தான். அப்பெரியாரும் அரசனுடைய வேண்டுகோட் கிணங்கி அரசனவைக்கு வந்தார். அரசன் அவரைத் தக்க இருக்கையில் இருத்தினன்; அவையின்கண் நிகழ்ந்த உரையாடலைக் கூறி ஐயத்தைப் போக்கியருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். தேசிகர் அரசனைப் பார்த்து, "ஓ அரசனே! ஒருவன் தன்னுடைய தலைபோவதாயினும் கெஞ்சறிந்த உண்மையை மறைத்துப் பேசுதல் கூடாது. உண்மை பேசுபவன்தான் தவஞ்செய்பவரினும் சிறந்தவனாகுவன். பொய் சொல்லாமைக் கொப்பாகிய பெருமை உலகில் வேறெதுவும் இல்லை. அந்தணர் முதலிய நான்கு வகுப் பாருள் கண்டபாய வகுப்பினரான சூத்திரர்கட்குள்ளே யான் சற்சூத்திரமரபென்னும் வேளாளர் குலத்தில் பிறந் தேன். ஆயினும் அம்மரபினர்க்கெல்லாம் சமய தீக்கை முதலியன செய்து அவர்களை நன்னெறிக்கண் ஒழுகவிடும் ஆசிரியனாகி அவர்களாற் செய்யப்படும் உதவியிலேயே வாழுந்தன்மை உடையவன். இத்தகைய நான்னை இவ்வாச

அவைக்கண் வருவித்து இருவகை மரபினர்க்கும் உண்டாகி யுள்ள சிறப்புப் பெயரைப் பற்றிய உண்மையை விளக்க வேண்டுமென்று கேட்டால் யான் எவ்வாறு விளக்குவேன்? சாதிப்பற்றும் சமயப்பற்றும் தலைகளையும் விட்டொழிய மாட்டா. அம்மரபு இரண்டனுள் ஒன்றின் பற்றினையுடைய யான் அச் சாதிப்பற்றுளும் அதனுற்பெறும் ஜாதியபிமானத்தினையும் முறைதவறிப் பொய் பேசுவேனுயின், பிறகு என்னுடைய கெஞ்சு என்னைச் சுடுவதோடு எரிவாய் நிரயங்களும் எனக்கு உரிமையாக முடியுமன்றே? என்னைப் போன்றவர்கள் பொய்ம்மொழி புகலின் உலகமும் அவ்வுலகத்தை யாளும் அரசுரிமையும் அவ்வரசினுல் நிகழுந் தருமமும் தருமத்திறம் பெய்யும் மழையும் யாதாகும்? பொய் புகலாமையே பெரியோர்களுக்குப் பேரின்ப வீடென்று வேதாகமங்கள் விளம்புகின்றன. யான் உண்மையை உரைக்கின்றேன்; கேட்பீராக!

"இவ்வுலகின்கண் உள்ள மானிடவகுப்பாருக்கெல்லாம் நான்கு வகையான வருண பேதங்கள் உண்டான காலத்திலேயே, ஓதல், வேட்டல் முதலிய வைதிக ஒழுக்கங்களிலே பேற்ற அந்தணர் முதலிய முதல் மூவருணத்தார்க்கும் ஐயர் முதலிய சிறப்புப் பெயர்கள் உண்டானபோது, அவ் வொழுக்க நிலையின்றி அம்மூவருக்கும் அடிமைப் பிள்ளை களாக இருந்து ஏவல் செய்யும் ஒழுக்கத்தினரான நான் காம் வருணத்தார்க்குப் பிள்ளையென்னுஞ் சிறப்புப் பெயர் உண்டாகியது. அம்முதல் மூவர்க்கும் கால தேச இயற் கைகளால் அச்சிறப்புப் பெயர் பலவாறனமைபோல நான்காம் வருணத்தார்க்கும் அது பலவாறுபின வென்பது எல்லோராலும் நன்கு உணரப்பெற்ற உறுதியான உண்மை. அவ்வாறுபினும் அச்சிறப்புப் பெயர்கள் யாவும் முதலில் உண்டான அவ்வப்பெயர்ப் பொருளையே தரும். இவ்

வலைக்கண் வினாரத்தில் சிற்கும் முதலியார் என்னுஞ் சிறப்புப் பெயர் அவற்கை ஒப்பதன்ற. அது வெறிரா னுக்குரிய சிறப்புப்பெயராதலால் அச்செறிராதனுடைய மக்களாகிய செங்குந்த மாபினர்க்கே எப்பொழுதும் எவ் விடத்துஞ் சிறப்புப் பெயராக வினங்கும். அதனை மற் றொரு மாபினர் மேற்கொள்ளுதல் வினக்கின் ஒளிலை பின்பினி மேற்கொண்டிருத்தல் போலாம். மேலும் அதன் பெருமையை முத்தேவர்க்கன்தரம் மொழிதல் வேண்டும். முனிவர்களில் முத்தமிழ் வேந்தராகிய அகத்திய முனிவரே கூறற்பாலர். மனிதர்களில் பாவேந்தரும் தமிழில் ஆகிய அரியகினையில் அமர்ந்தவருமாகிய ஒட்டக்கூத்தரே வினக்கத் தக்கவர். இவ்வாறாயின் என்போன்றார் அதன் பெருமை யைக் கூறத் தொடங்குதல் அறிவின்மையேயாம். ஆதலின் அதனைச் செங்குந்த மாபினர்க்கு மாற்றக் கூடாது. வேளான் மாபினருக்கோ அடிமைப் பொருளைக் காட்டுஞ் சிறப்புப் பெயர்கள் பல உள்ளமையின் மாற்றிக்கொள்ளப் படும்," என்று கூறி முடித்தார்.

வேளாளன் வினம்

இவைகளை யெல்லாம் கேட்டிருந்த வேளாளன் முகம் கருவினான்; உடல் வியர்த்தான்; விழி வெருட்டான். அவ னுக்கு மிகுந்த வினம் உண்டாகிவிட்டது. அவன் தனி கை கமினப்பெண் விழித்துப்பார்த்தான். "ஒய் தெரிகிறா! அன்னமிட்டார் வீட்டில் கன்னமிட்டார் கூட்டத்தின் கீர் தலைவரோ? போதும். செங்குந்த மாபினர் ஒரு வருக்கே முதலியார் என்னுஞ் சிறப்புப் பெயர் உரிய தென்ற சத்தியமாகக் கூறினீரா?" என்ற அதட்டிக் கேட் டான். அதற்குத் தெரிகி, "வறிதே கூறுத ரானிலல் மறுவெடுத்துக் கூறவேன்," என்றார்.

அரசன் கேள்வி

தேசிகர் கூறியதைக் கேட்ட அரசன் மிகுந்த வியப்படைந்தான். தேசிகருடைய பெருமையை விளக்க எண்ணியோ, அவரைத் தாழ்வாகப் பேசிய வேளாள னுடைய ஆணவத்தை அடக்கக் கருதியோ, செய்குந்த னுடைய சொல்லை நன்குணர மதிக்தோ தேசிகரைப் பார்த்து, "ஐயா! சைவசமயசிரியரே! எவ்வாறேனும் இவ்விருவருங் கூறியவற்றுள் உண்மையை உணரவேண்டு மென்பது என்னுடைய கருத்து. நீர் விரும்பி நான்னல் மழுவெடுத்துக் கூறவல்லீரென்று சொன்னபடியால் அவ்வாறு நானினல் மழுவெடுத்தற்கு உடன்படுவீரோ?" என்று உசாவினன்.

மழுவெடுக்க உடன்பாடு

தேசிகர் உடனே அரசனைப் பார்த்து, "இப்பொழுதே இவ்வரச அனைவக்கண் எரிமூட்டி ஒரு மழுவை உண்டாக் குங்கள். ஒரு சமயத்திற்குள் இவ்வனைவக்கு நேரேயிருக்கிற பூசாமண்டபப் பூங்காவுக்குட்போய்ச் சிவவழிபாடுகளை முடித்துக்கொண்டு வருகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றார்.

மழுவுண்டாக்குதல்

உடனே அரசன் தன்னுடைய அனைவக்கு நேரே யிருக்கிற வெள்ளிடை வாசல் கடுவில் ஒரு தீக்குண்டம் ஏற் படுத்தி அதில் ஒரு மழுவை உண்டாக்குமாறு அமைச்சர் கட்குக் கட்டளையிட்டான். அவர்களும் அக்கட்டளையை நிறைவேற்றுவதில் முனைந்திருந்தார்கள். பூங்காவை நோக் கிச்சென்ற ஞானப்பிரகாச தேசிகர் அங்குள்ள சித்திரப் பொய்கையுள் இறங்கி நீராடினார்; மாவுரி முதலியவைகளை அணிந்தார். பூசாமண்டபத்திற்குப் போய்த் திருநீறு சிவ

கண்மணி முதலிய சிவ சின்னங்களைப் பணிந்து தமது ஆன்மார்த்த பூசனையை முறைப்படி செய்தருளித்து முருகக் கடவுளுடைய திருவுருவத்தை மனதில் எண்ணி ஆறெழுத்துத் திருமறையை உருவேற்றிவிருந்தார்.

உருவ அணி

அரச அலைக்கண் மூட்டிய தீக்குண்டமானது முன்னில் தாருகாவனத்து முனிவர்கள் மூட்டிய வேள்விக் குண்டம்போல் ஒங்கியெரிந்து சுற்புறத்திலேயும் சூழ்ந்து ஒருவரையும் நெருங்கவொட்டாமல் வெதுப்பியது; அவ் வேள்விக்குண்டத்துட் டோன்றிய மழுவாயுதத்தைப் போலத் தீக்குண்டத்துள் இட்ட இரும்பானது நன்கு காய்ந்து பழுத்துச் சுடர்விட்டு விளங்கியது. அம் மழுவைச் சிவபிரான்மீது விடுப்பதற் கெழுந்த முனிவரைப்போலக் கொல்லர்கள் அவ்வெரிபிரும்பை இருமுனைகளிலும் குறட்டினும் பிடித்தெடுத்து நின்றார்கள். அரச அலைக்கண் ஞானப்பிரகாசமுனிவர் உண்மையை நிலைநாட்டுதற்கு காளிமுன் மழு வேந்தப்போகிறார் என்னுஞ் செய்தி அவ் வூரிலும் பக்கத்தூரிலும் பரவியே பல செல்வர்களும் பெரியோர்களும் அரச அலைக்கண் வந்து பெருங் கூட்டமாக நெருங்கிநின்றார்கள்.

தெளிவு வருணை

ஞானப்பிரகாச தேசிகர் தம்முடைய கடனமகளிலெல்லாஞ் செய்து முடித்துக்கொண்டு களிச்சக்காவம்தியாகிய ஒட்டக்கூட்டத்தை மனதில் எண்ணி அவருடைய பெருமையைப் போற்றி, "ஐயனே முன்னாளில் குலோத்துங்க சோழமன்னனுடைய கொலுமண்டப வாயிலின்கண் தேவரீர் தம்முடைய மரபினரால் அமைக்கப்பெற்ற தகில அரியகணையில் இருந்து,

'இந்திரன் அயன்மால் தேவர் யாவர்க்கும் முதன்மை யாக
வந்தபின் ஐயிரண்டு குல மழுப்பலை பத்த னுக்கு
மூன்றிய சேமந் தானும் முதலிய ராகையாற் செல்
குன்றச் சந்திக்கு மப்பேர் முதலிடர் என்ற கூறும்'

என்ற திருவாய்மலர்ந்தருளியது உண்மையே யன்றே? இத்தகைய மெய்ம்மொழியினை நம்பி இவ்விசயமாத் தாண்ட மன்னனுடைய கொலுமண்டப வாயிலின்கண் யான் நடந்தபோதென்ற உண்மை நிலைநாட்டலுக்கு எத் தகைய இடையூறும் வராமல் தேவரீரே முன்னின்று காத் தருளுதல் வேண்டும்," என்று வேண்டிக்கொண்டு தாருகா வன முனிவர் ஏவிய மழுவால வந்தமா தெதிர்வந்த சிவ பிரானைப்போலப் பூசாமண்டபத்தைவிட்டுப் புறப்பட்டுப் பூங்காவின் நடுவில் வந்தார்.

தேசிகர் காட்சி

அவ்வாறவர் வரும்போது, கொலு மண்டபத்திலே அவருடைய வரவை நோக்கியிருந்த அரசன் முதலியோ ருடைய விழிகட்கு, வேலாயுதமேந்திய பாலசுப்பிரமணியக் கடவுள் வருவதைப் போன்றிருந்தது. தேசிகருடைய திருமுகமானது களங்கமற்ற முழுத்திங்களைப் போன்றும், அவருடைய திருமேனியைச் சூழ்ந்த தோன்றிய ஒளிப் படலம் பதினாறு கிரணங்களைப் போன்றும், அவருடைய திரு முடிமீது கவிந்த நின்ற மாக்கண்ணியும் முதிர் கூட்டத் தைப் போன்றும், அம்மாலைகளில் மலர்ந்துள்ள மலர்கள் யாவும் முதிர் கூட்டத்தின் நடுவில் தோன்றும் விண்மீன் களைப் போன்றும், அம்மலர்களில் நிறைந்து இருந்த மகரந்தப்பொடிகள் தேவர்கள் கதம்பப்பொடிகளை வாரி இறைத்திருப்பது போன்றும் காட்சியளித்தன. செயற் கருஞ் செயலைச் செய்யத் தொடங்கிய ஞானப்பிரகாசவள்ள லாரிடம் தெய்வீக ஆற்றல் அமைந்துள்ளதன்றோ?

அரசன் முதலியோர் வேண்டுகோள்

ஏனப்பிரகாச தேசிகருடைய வரவைக் கண்டஅனவில் அரசன் முதலானோர் திடீரென்று எழுந்தனர்; கடுகடுங்கி மெய்சிலிர்த்தனர். "சிவசிவ" என்று இருகைகளையும் தலைமேற் கூப்பி இன்பக் கண்ணீர் சொரிந்த ஆரவாரித்தனர். அடியற்ற பனைபோல் நிலத்தில் வீழ்ந்து வணங்கினர். தேசிகர் திக்குழிக்கு நேரே சென்று கொல்லால் ஏற்றப்படும் மழுவை சாவிலேற்க முயன்றார். அரசனும் பெரியோர்களும் மிகுந்த அச்சத்தோடு விரைந்தோடித் தேசிகரைத் தடுத்தார்கள். "தங்களுடைய யாப்மையை நிலைநிறுத்துதற்கு மழுவேந்துதலும், வேண்டுமோ? தேவரீருடைய காட்சியளவாலே இவ்வையகத்தினரும் யாதுந் தீவானந்த வாழ்வைப் பெற்றோம். தாங்கள் செயற்கருஞ் செயல்களைச் செய்யத்தக்க பெரியோர்தாம் என்பதனை உள்ளவாறுணர்ந்து கொண்டோம். தக்கினை சாவினால் மழு வேந்தச் செய்வோமாயின் நிரயத்திற்கு ஆளாவோம்," என்று சொல்லி வேண்டிக்கொண்டார்கள்.

மழுவைத் தின்றுதல்

அரசன் முதலியோருடைய வேண்டுகோளுக்குத் தேசிகர் இணக்கமில்லை. "என்சாவினாற் சிறிதளவேனும் மழுவினைத் தின்றாதலின்றேன்" என்றுகூறி வலுக்கட்டாயமாகப் பற்றி சாவினால் மழுவைத் தொட்டார். அவ்வளவில் பழுக்கக் காய்ந்திருந்த அம்மழுவானது நிருகீற்றத் தண்டம்போல வளைந்து நீருறைத் தசைகளுருக்கொண்டு பறந்துபோய் அரசன் முதலியோருடைய உடல்களிற் படிந்து அவரவர்களிடமிருந்த வெளிமாசையும் உள்மாசையும் போக்கி விளங்கியது. இக்காட்சியைக் கண்டிருந்த மக்களனைவரும் பேராரவாரஞ் செய்தார்கள்.

3தலைச் சங்கம் இருந்திடம் சேர்தல்

பிறகு அரசன் பலவகையான இசைக்கருவிகள் முழங்கப் பெருஞ்சிறப்போடு ஞானப்பிரகாச தேசிகரை வின்னகரிலேற்றி நகர்வலஞ் செய்வித்தான். சங்கைகள் படைகளோடும் உறுதிச் சுற்றத்தினரோடும் தானும் உடன் சென்றான். நகர்வலம் முடிந்தபிறகு அவரை அவருடைய மடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான். அவர்க்கு பொருள்களை நன்கொடையாக வழங்கித் தன்னுடைய இருப்பிடத்திற்கு மீண்டான். அன்றுமுதல் மக்கள் அனைவரும் அப்பெரியாரை "நாவினன் மழுவெடுக்க ஞானப் பிரகாச தேசிகர்" என்று போற்றி வழிபாடு செய்பவராயினர். தேசிகரின் பெருமை எல்லாரிடங்களிலும் பரவியது.

வேளாளர் பிரிவுகள்

இச் செய்திகளெல்லாம் கண்டிருந்த வேளாண் மாயினர் பலரும் தேசிகரிடம் அருளுரை பெறுதல் நன்னெடை வழங்குதல் முதலியவைகளை ஒழித்த அழுக்காறு கொண்ட மனத்தினராக திருந்தார்கள்.

செந்நெற் சோறு

வேளாளர்கள் விருந்தினர் செந்நெற்சோறு கண்டார்கள். தாங்கள் நன்னெடைகள் வழங்கி மடத்தின் வளர்ச்சிக்கு தடைவண்டிய தக்க பொன்னெடையெல்லாஞ் செய்தார்கள்.

நூல்கள் இயற்றல்

தேசிகர் செல்வுந்தர்களுடைய உதவிகளைப் பாராட்டி அவர்களுடைய சார்பாகவே நூல்கள் இயற்ற வெண்ணினர். ஆரூரின் செய்யுளில் பிறிதொரு கந்தபுராணத்தை இயற்

நிலும். செல்லூர்த் மாபினருடைய பெருமை விளக்குமாறு, செல்லூர்ப் புராணம், வீரகாரணர் விசயம் என்னும் நான்கே இயற்றினர்.

வீரகாரணர் விசயம்

இந்நூல் நான்காஞ்சுருக்கம், வீரகாரணர்ச் சருக்கம், இக்கலைச் சருக்கம், போராடற் சருக்கம், கலை கண்சருக்கம், தேரைசாட்சிச் சருக்கம், தூதுரை சருக்கம், சப்பமை சருக்கம், எழுச்சிச் சருக்கம், திபத்தனைச் சருக்கம், தம்பரோசனைச் சருக்கம், மாங்கல்யப் பிச்சை கிட்ட சருக்கம், மெய்த்தனைச் சருக்கம், மீட்சிச்சருக்கம் என்னும் பதினைஞ்சு சருக்கங்களையும் அறுநூற்றெண்பத்து மூன்று பாடல்களையுங் கொண்டது.

"கைகழுவி வொளிலீசுக் கலையை பம்பையீர்!
நிலைதிலை வென்றவனைச் செருக்களத்தில் வென்றவிறற்
கலீர் வருதிந்த வைக்கோலைத் தூவுமுடையீர்:
இலயிலைச் செல்லூர்ச் என்றுமெழித் திருப்பெயரீர்!"

என்பது தேரைசாட்சிச் சருக்கத்தின் ஒரு பாட்டு.

---

2. ஆறுமுகமுதலியார் - வரலாறு

[1827]

தோற்றம்

இவர் தொண்டை வளநாட்டில் கருவம்பாகை என்னும் ஊரில் சாரளர் மரபில் தோன்றியவர். தந்தையார் பெயர் முத்தைய முதலியார். ஆறுமுக முதலியார் சென்னை மாகாணை அடைந்த அக்காலத்து அறிஞர்களிடம் தமிழ் மொழி கற்றுப் புலமைபெற்றார். அக்காலில் வேலூர் என்னும் ஊரில் தோன்றித் தொல்காப்பிய தூல் கன்கு கற்றுத் தேர்ந்தபடியால் "தொல்காப்பிய வாதாச முதலி

பார்" என்று புகழ்பெற்ற புலவர் ஒருவர் சென்னையில் இருந்தார். அவரிடமும் இவர் இலக்கண நூல்கள் கற்றார்.

வாழ்க்கை

ஆறுமுக முதலியார் புலமைபெற்றபின் மாணவர் பலருக்குக் கல்வி கற்பித்துக்கொண்டு கணக்காயராய் மிகுந்த புகழுடன் சென்னையில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார்.

பூம்பாவையார் விலாசம்

மூத்தமிழ் வித்தகராகி விளங்கிய இவர், சிருஞான சம்பந்த நாயனார் புராணத்தில் சென்னைத் திருமயிலையில் திகழ்ந்ததாகக் கூறப்பெறும் என்பைப் பெண்ணுருவில் புதுமையை நாடகமாக இயற்றவேண்டும் என்று விரும்பி அவ்வாறே, "பூம்பாவையார் விலாசம்" என்னும் பெயருடன் நாடகமாக இயற்றினார். நாடகப்போக்கை அடியிற் காண்க.

[பூம்பாவை பூம்பொழிலில் பாம்பினால் கடிக்கப்பட்டு மாண்டபின் பூம்பாவையின் தோழிமார்கள் சிவசோசனிடத்தில் வந்து செய்தி தெரியப்படுத்துகின்றனர்.]

"முத்திக்கு வித்தாய் வந்த மூதறி வுடையோய் போற்றி
உத்தம குணத்தான் மிக்க உயர்சிவ சோம சேகர்
சித்தமே மகிழ்ந்து பெற்ற செல்வியும் பாவை யார்தம்
கைத்தலத் தினிலோர் பாம்பு கடித்தலர் துடித்து வீழ்ந்தார்."

வசனம்

"ஐயா சைவசிகாமணியாகிய சிவசோசரே! நீங்கள் தவஞ்செய்து கருணையாகப்பெற்ற செல்வப் பூம்பாவையாரை ஒரு கொடும்பாம்பு கடிக்கவே உயிர் துடித்து விழுந்தாரென்னென்று சொல்லுவேனையா சுவாமி."

பொது விருத்தம்

ஓ - ம்: ஆனந்த பயிரவி

"உருக்கிய செம்பைக் காதில் ஊற்றினுற் போன்முகிக்க
வெருக்கொளாத் தோழி சொன்ன விபரீத வார்த்தை கேட்டுத்
தருக்கொழிக் தனத்தன் னாடித் தயக்கிமண் மீதில் வீழ்ந்து
செருக்கிலா மகனே என்னைச் சிவசேசர் அழுகின் றூரே."

"கொல்ல னுலைவாயக்கினி முகத்திற் செம்பைக் காய்ச்சி
நீரண்டு காதினு ஞற்றினைப்போலத் தக்க பயப்பிராந்தி
யடையத் தக்கதாகப் பூம்பாலைவனைப் பாம்பு கடித்த
தென்று வந்தோழி சொன்ன விபரீதமான வார்த்தை
யைச் சிவசேசர் கேட்டுத் தாம் நினைத்திருந்த வெண்ணைத்
தின் மகிழ்ச்சியெல்லாமொழிந்து மனம் பதைபதைத்
தேங்கிக் கோடையிற் கற்பாறையில் விழுந்த புழுப்போ
லிடம்பெல்லாந் துடி-துடித்து மண்மீதில் வீழ்ந்து நிகர் அற்ற
சிரோமணியான தம் மருமைமகனை நினைத்து அழுகின்ற
னிதங்களைக.

சிவசேசர் சொல்லுகின்ற விருத்தம்

ஓ - ம்: நீலாம்புரி

"அகரா சிவசி வாலிவ் வந்த மான வார்த்தை
கருதிய கனவோ வென்ன காணக் குறையோ வுன்னைப்
பாலிய வடியார்க் கிந்தப் பாவகே நிடுவ தோவித்
தனைமிசை யினியென் னுவி தரிக்குமோ தரித்தி டாதே."

இந் நூலுக்கு மூற்கூறிய தொல்காப்பிய வதாசமுதலியார்,

"சானன் மயிலைக் கபாலிமகிழ் ஆறுமுகம்
மேனன் மயிலுல் விலாசமெனத்—தானுரைத்த
அங்கம்பெண் ணென வருட்கைதகேட் போர்க்கிடப்பால்
அங்கம்பெண் ணுவதெளி தாம்."

என்று சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். இவ்வாறு சிறப்புப் பாயிரப்பாடல் ஆசிரியர் வரலாறு முதலியவைகளைக் குறிப் பிடுகிறது. இந்நூல் 1827-ஆம் ஆண்டில் கமர்ஷியல் அச்ச கத்தில் அச்சிடப்பட்டுள்ளது. ஒற்றெழுத்துக்கள் புள்ளி யில்லாதனவாக உள்ளன. (ஒற்றெழுத்துக்கட்குப் புள்ளியிடும் பழக்கம் பிற்காலத்தில்தான் உண்டாகியது.)

சிறப்புப்பாயிரம்

"பார்பதவ கலியுகம் காலா யிரத்தொடொன்
பதினாற்றின் மேலதாகப்
பன்னுயிரு பத்தாற சாலிவா கனவாண்டு
பதினெழு சதத்தினு—ளற்
பத்தெழில் வச்சபிர பலவாதி வற்சரம்
பதினெட்டன் மீதுதோன்றும்
பார்த்திபத் தின்மகர மாதமத னிற்பிதி
பத்தில் நிரயோதசியு—ன்
சீர்பரவு சனிவாரம் மிருகசீ ரிடமகேர்
நிரயோக கவுலகமெனச்
செப்புமிச் சுபதினத் திற்செருண்டை நாட்டில்
சிறந்தசந் தென்னைபுரியில்
நிகழ்குமர குருசபா மண்டபத் தன்னில்வட
நிசைதனில் உணர்ந்தமேலோர்
செந்தமிழ்க் கவிவாணர் முதலாய பன்மொழித்
தென்னியோர் எவருமகிழ்ச்
சூர்பரவு செழியவேற் பதினேழ ருருத்திரக்
குழாமுமக் கைப்படையதாக்
கொண்டுபண் டெய்ரா வதக்குரிசி லாதியர்
குலப்பகைகளைய சிங்கிமயின்மேல்
குலவிவரு சிவகுமர குருதணிகை இறையவன்
கோகனக நகபுரத்தாட்
குடிகொண்ட பரிசுத்த மனமுற்ற வற்புத
குணாலயன் சாந்தமூர்த்தல்வன்

வாய்பாகு கும்பமுலை தாரமடக்கை பருவ
மலரிலவு சோலைவயலி
மன்னுகரு வம்பாகை வாழ்கின்ற காரைநகர்
மருவிமுத் தமிழ்மாலிகைப்
பாகனிகை தூதருக்கு கன்னல்பழு சிறைவி
டாளைமுத் பேருமிலுள்
மின்னைமரு பூம்பாலை பாலினை சத்திலை
மகிழ்ந்தாக் கேற்றிலனே."

---

5. முத்துராமலிங்க மாலை

[19 - ஆ]

தோற்றம்

"மேயபெருங் கழனிசூழ் கோவிலூர் எனும்பேர்
மேவலிறை ஆலயத்தை விரித்தலருட் பெரியோன்
பாயபுனல் திரண்டாலி யாயிதனைச் சுத்தப்
பரப்பிரமம் இவ்வுருக்கொண் டற்றெதனும் புரனன்
தூயபுகழ் வேதாந்த சிவனைஞ்செய் தூலதில்
தனிவல்லை தன்னியமா கப்புரிந்த அறிவோன்
தயருத்த ராமலிங்க தேசிகனென் றனைத்தும்
சோதிவிக்க சொருபினனுக் சோத்திரமாத் தெரிப்பாம்"

என்ற பெரும் புலவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் புகழ்ந்து பாராட்டப்பெற்ற இப் பெரியார், பாண்டிவள நாட்டிலே காரைக்குடி என்னும் பெரும்கொண்ட சிறுநிலை தனவணிகர் குலத்திலே தோன்றினர். தந்தையார் பெயர் மெய்யப்ப செட்டியார். தாயார் பெயர் வள்ளியம்மையாச்சியார்.

கல்வி

முத்துராமலிங்கம் என்ற பெயரிடப்பெற்ற இவர் சிறு இளமைப் பருவத்திற்தானே கற்கவேண்டிய கல்வியின் பொருட்டுத் தக்கதோராற் பள்ளிக்கனுப்பப் பெற்றார். சிறு

வரையில் பள்ளிக் கல்வியைப் பாதுகாத்தார். கல்லறிவு, மனவுறுதி, சீரிய குணநலம் ஆகிய யாவும் இவரிடம் ஒருங்கே குடிகொண்டன. முற்பிறப்பிற் செய்த கல்வியினாலும் இவருடைய உள்ளம் வீடுபேற்றிற்காம் நெறியை நாடத் தொடங்கியது. திருவாசகம்மீது என்றும் இடத்திற்குத் தம்முடைய நண்பராகிய கல்லான் செட்டியார் என்பவரோடு சென்று அறிவு நூல்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். "உலகம் பொய்; காணப்படும் பொருள்களெல்லாம் மயக்க உணர்வினால் உண்மைபோல் காணப்படுகின்றன. நாம் இப் பொய்த் தோற்றத்தைக் கண்டு ஏமாந்துபோதல் கூடாது. தகுந்த ஆசிரியரை அடைந்து அறிவு நூல்களைப் பயின்று மெய்யறிவு கைவரப் பெற்று வீடுபேற்றை யடைதல் வேண்டும்" என்னும் எண்ணம் உடையவராய்க் குருவைத் தேடிக்கொண்டிருந்தார்.

உகந்தமிழ்க ஞானதேசிகர்

முத்துராமலிங்கருடைய தந்தையார் சொழவன நாட்டிலே திருநாவலைக் காரோகணத்திற்கடுத்த சிக்கல் என்னும் பதிக்கு வாணிகத்தின் பொருட்டுப் புறப்பட்டார். முத்துராமலிங்கர் தாமும் தந்தையாரோடு சென்று உடன் தங்கியிருந்தார். அந் நாளிலே சிக்கலுக்கு அண்மையில் உள்ள பொருள்வைத்தசேரி என்னும் ஊரில், உகந்தமிழ்க ஞானதேசிகர் என்னும் பெயருடைய ஒரு பெரியார் இருந்தார். அவர் இல்லறஞானி. அவர் இல்லத்திருந்த இல்லறச் செல்வனே இயற்றியதோடு தம்மையடைந்த பக்குவிகட்கு அருளுரையும் வழங்கி அவர்களை நற்கதியிற் செலுத்திக் கொண்டிருந்தார். திருவண்ணாமலையில் அந்நாளில் இருந்த சகல ஞான தேசிகர் என்னும் பெரியார் முதலிய பலர்

இவ்வுகந்தலிங்க ஞானதேசிகரிடம் அருளுரை பெற்று மெய்யறிவுச் செல்வர்களாக விளங்கிக் கொண்டிருந்தனர். உகந்தலிங்க ஞானதேசிகரின் பெருமையை உணர்ந்த இவர் அவரிடஞ் சென்று பணிவிடைகள் புரிந்து ஞான நூல்களை ஒதியுணரத் தொடங்கினர். அந்நாளில் இவருக்கு அகவை பதின்மூன்று நிரம்பியது.

வடநாட்டுப் பெரியார்

சிறிது காலஞ் சென்றதன்மேல் முத்துராமலிங்கர் காரைக்குடியை அடைந்து தம்மில்லத்தில் வசித்திருந்தார். அந்நாளில் வடநாட்டில் இருந்து ஒரு பெரியார் இராமேசுவரத்திற்குத் திருத்த நீராடற் பொருட்டுச் சென்றார் அவர் காரைக் குடியை அடைந்து அங்குச் சில நாள் தங்கியிருந்தார். அவர் மெய்யறிவு கைவரப் பெற்றவர். அவர் ஒருநான் தம்மைப் போற்றிவருஞ் செட்டியார்களைப் பார்த்து, "இவ்வூரில் கல்லறிவாளிகள் எவரேனும் உளரோ?" என்று உசாவினர். அதற்குச் செட்டியார்கள், "எங்கள் குலத்தில் பிறந்த முத்துராமலிங்கர் என்னும் பெயருடைய இளைஞர் ஒருவர் கல்வியறிவு ஒழுக்கங்களிலே சிறந்து விளங்குகிறார்," என்று மறுமொழி கூறினர். அப்பெரியார், "அவ்வாறாயின் அவரை என்னிடம் அழைத்துக் கொண்டு வாருங்கள். நான் பார்த்து மகிழ வேண்டும்," என்று கூறினர்.

• பெரியாரைக் காண்டல்

வடநாட்டுப் பெரியாரின் உள்ளக் கிடக்கையை உணர்ந்த செட்டியார்கள் முத்துராமலிங்கரைக் கண்டு வடநாட்டுப் பெரியாரின் விருப்பத்தைத் தெரியப்படுத்தினர் செட்டியார்கள் செப்பியதைக் கேட்ட முத்துராமலிங்கர், "நல்லது; வருகிறேன்," என்று கூறிப் பழம்

முதலியனவகளை வாங்கிக் கொண்டுபோய் அப் பெரியார் முன் வைத்துப் பணிந்து நின்றனர். வடநாட்டுப் பெரியார் முத்துராமலிங்கப் பெரியாரின் உடற் குறிகளை உற்று நோக்கினர். அங்கலட்சணங்களைப் பங்கமில்லாதுணர்ந்த அப் பெரியாருக்கு முத்துராமலிங்கரின் இயற்கைத் தன்மை நன்றாக விளங்கி விட்டது. அவர் செட்டியார்களைப் பார்த்து, "அன்பர்களே! இச்சிறுவர் உங்கள் மரபின் பிள்ளையல்லர். தென்முகக் கடவுளின் (தட்சணாமூர்த்தி) ஒரு கூறு என்று உணர்ந்து கொள்ளுங்கள். இவரால் பலபேர் வீடு பேற்றையடைவார்கள்" என்று இயம்பினர். அதுமுதல் வணிகர்கள் முத்துராமலிங்கரைச் சிவமே எனப் போற்றிப் பாராட்டி வரலாயினர்.

கொப்புடையம்மன் திருவருள்

பிறகு முத்துராமலிங்கர் தம்முடைய நண்பராகிய கல்லான் செட்டியாரோடு பொருள் வைத்த சேரிக்குச் சென்று தம்முடைய ஆசிரியரைக் கண்டு வணங்கினர். தமது கடையில் அமர்ந்து வாணிகத்தைத் தொடங்கினர். வாணிகத்தில் வரும் லாபத்தைத் தம முடைய ஆசிரியர் குடும்பத்திற்கும் தம்முடைய நண்பர்கள் குடும்பத்திற்கும் தம்முடைய குடும்பத்திற்குமாகப் பங்கிட்டுக் கொடுத்து வந்தார். வாணிகத்தை மேற்கொண்டிருந்தும் தம்முடைய ஆசிரியரிடம் அறிவுநூல்களை ஓதி உணர்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். ஒருநாள் முத்துராமலிங் கருடைய உடலில் காய்ச்சல் நோய் உண்டாகியது. இரவில் தம்முடைய கடையிலே படுத்திருந்தார். அப்பொழுது ஓர் அந்தணச் சிறுமி இவருடைய பக்கத்திலே அமர்ந்திருந் தாள். இவர் அப்பெண்ணைப் பார்த்து, "அம்மா! நீ யார்?" என்று கேட்டார். அதற்கு அப்பெண், "நான் இருப்பது

காரைமா நகரம். உமக்குக் காய்ச்சல் கோப் கண்டிருப்ப தாகக் கேள்விபுற்று அதனைப் போக்குதற்குத் தண்ணீர் கொண்டு வந்தேன்" என்று மறுமொழி கூறினர். முத்துராமலிங்கர், "இப்பெண் காரைக்குடியாமே காரைக் குடியில் யாராக இருக்கலாம்?" என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். அந்தணச் சிறுமியாக வந்த கொப்புடை யம்மையார், சிறிது தண்ணீரை இவரிடம் கீட்டி, "இதனை அருந்துவாயில் காய்ச்சல் கோப் தணிந்துவிடும்" என்று கூறினர். இவர் தண்ணீரை வாங்கி அருந்திவிட்டுத் திரும்பிப் பார்த்தார். அவ் அம்மையார் காணப்படவில்லை. உடனே காய்ச்சல் நோய் நின்றுவிட்டது. காலையில் ஆசிரியருடைய இல்லத்திற்குச் சென்று இச் செய்தியை இயம்பினர். இதனைக்கேட்ட ஆசிரியர் மிகுந்த மகிழ்ச்சி யடைந்து, "இவ்வாறு எழுந்தருளி வந்தது கொப்புடை யம்மைதான். இதைக் குறித்துச் சிறிதும் ஐயப்பட வேண்டியதில்லை," என்று திருவாய் மலர்ந்தருளினர். முத்துராமலிங்கர் அவ்விடத்திலேயே,

"ஞலோன் இறந்தும் உமையாகத் (து)
அண்ணல் இறந்துங் கமலமுறை
நலா னனத்தோன் முடிந்திறந்தும்
காத நாதி யோரிறந்தும்
காலா கிலனும் ஒழிந்திறந்தும்
கன மாதி அழிந்திறந்தும்
ஞலோ கங்கள் இறந்தின்றும்
அம்மே கொப்பை உடையாளே"

என்னுஞ் செய்யுளைப் பாடினர்.

தாதையார்பால் திகழ்ந்தது

இவர் குருகுல வாசஞ் செய்த அதிவுதயாக்கினிப் பதின்ம வருஷகாலத்தில் ஞானவாசிட்டம் என்னும்

தூணினைப் பயிலத்தொடங்கி அதனை ஐயந்திரிபறப் பயின்று வந்தார். அந்நாளில் இவருக்கு அகவை பதினறு நிரம்பியது. வாசிட்ட நூலும் முடிவுக்கு வந்தது. வாசிட்ட நிறைவைச் சிறப்பாக முடிக்கவேண்டும் என்று எண்ணினார். அதன் பொருட்டு நல்ல நாளொன் குறிப்பிட்டுக் கொண்டு தந்தையாரிடம் பொருள் வேண்டுமென்று கேட்டார். தந்தையார் யாதும் மறுமொழி கூறாமல் மவுனமாக இருந்தார். தந்தையாருடைய மவுனம் இவருக்கு வெகுளியை உண்டாக்கிற்று. "காது செவிடாகி விட்டதோ?" என்று கூறிவிட்டுத் தம் ஆசிரியரின் இல்லத்திற்குப் போய் நடக்கவேண்டியபடி நடக்கட்டும் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவர்,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது"

என்று தமது பொய்யாமொழியிலே (திருக்குறளில்) புகன்றருளினார். அம்மொழி பொய்படுங்கொல்? முத்துராமலிங்கர் தாதையாரைப் பார்த்துக், "காது செவிடாய் விட்டதோ?" என்று கூறிய அக்கணந் தொடங்கி அவருடைய காதுகள் இரண்டுஞ் செவிடாகப் போயின. எவர் எது கூறினும் ஒன்றுங் காதிலே விழவில்லை. அவர் மிகுந்த அச்சங் கொண்டார். "அந்தோ! பொருளினிடத்திலே கொண்ட பேராவினாலே கெட்டேன். என்னுடைய உலோப குணம் என்னைக் கெடுக்கிறது!" என்று சொல்லித் தம்மைமத்தாமே நொந்து கொண்டார். உடனே புறப்பட்டு உகந்தலிங்க தேசிகருடைய திருமனைக்குச் சென்றார்; அவரைக் கண்டு வணங்கினர். நிகழ்ந்ததைக் கூறினர்; "இத்தொல்லையைப் போக்கியருளுமாறு செய்தல் வேண்டும் என்று" சொல்லி வேண்டிக் கொண்டார். உகந்தலிங்கதேசிகருடைய திருவடிகளிலே வீழ்ந்து

அடியற்ற மரம்போற் கிடந்தார். உகந்தனிக்க தேசிகர் திருவுளம் இரக்கினர். "உம்முடைய தொல்லையைப் போக்குகிறேனும் வருத்தப்படவேண்டாம்" என்று தேறுதல் உரைகள் கூறினர். தம் மாணவராகிய முத்தாமணிக்கை அழைத்த, "இவருடைய தொல்லை தீர்க்குமாறு இவருக்குத் திருவீழி வழங்குவாயாக!" என்று கூறினர். ஆசிரியருடைய கட்டளையைத் தலைமேற்கொண்ட இவர் தம் முடைய தந்தையாருக்குத் திருவீழி வழங்கினர். அவ்வளவில் தந்தையாருடைய காதுகள் நன்றாகக் கேட்கத் தொடங்கின. தந்தையார் தம்முடைய மைந்தனைக் கட்டித் தழுவிக் கொண்டார். "உன்னுடைய பெருமையை உள்ளவாறுணராதபடியினாலும், மகன் என்னும் எண்ணத்தினாலும் பொருளினிடத்திலே கொண்ட பற்றினாலும் உனது மொழிக்கு மறுமொழி கூறாமல் இருந்துவிட்டேன். இனிமேல் உன்னுடைய விருப்பப்படி நடக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். வேண்டிய பொருளைப் பெற்றுக் கொள்வாயாக," என்று கூறி விரும்பிய பொருளைக் கொடுத்தார்.

வாசிட்ட முடிவு விழா

முத்தாமணிக்கர் தாமதமின்றி பொருளைக் கொண்டு வாசிட்ட முடிவு விழாவைச் சிறப்பாக நடத்தத் தொடங்கினர். திருவண்ணாமலை சகளிய ஞானதேசிகர் முதலிய எண்ணிறந்த அடியார்கட்குத் திருமுகங்கள் அனுப்பி வரவழைத்தார். தம்முடைய ஆசிரியரை உயர்ந்த இருக்கையில் எழுந்தருளச் செய்து, பால் தயிர் முதலிய வற்றாலும் கங்கை முதலிய திருத்த நீர்களாலும் திரு முழுக்குச் செய்வித்தார். உயர்ந்த ஆடையணிகளால் அழகு செய்தார். விழாவுக்கு வந்த அடியார்களுக்குஞ்

செய்யவேண்டிய சிறப்புக்களை யெல்லாஞ் செய்தார். பிறகு, ஆசிரியருடைய உடன்பாடு பெற்றுக் காரைக்குடியை அடைந்தார்.

கோவிலூர்க்குச் செல்லுதல்

முத்துராமலிங்கர் ஒருநாள் தம் நண்பராகிய எல்லான் செட்டியார் என்பவரோடு சிவனம் என்ற கோவிலூருக்குச் சென்றார். அங்கிருந்த கோவிலுக்குப் போய்க் கொற்றவாளீசுவரரையும் திருநெல்லியம்மையையும் போற்றி வழிபட்டார். தம் நண்பராகிய எல்லான் செட்டியாரைப் பார்த்து, "இக்கோயில் மிக அழகுடையதாகவும் பழமையானதாகவும் தனித்து வசிப்பதற்குத் தகுதியுடையதாகவுங் காணப்படுகிறது. ஆகவே நாம் இனிமேல், இக்கட்டிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் இவ்விடம் வந்து இறைவழிபாடு செய்து செல்வோம்," என்று கூறினார். அவ்வாறே சென்று செய்து கொண்டுமிருந்தார்கள்.

குருவின் விடுபேறு

பிறகு பொருள் வைத்த சேரிக்குச் சென்றார். கலி - சகம் -இல் வெகுதானிய ஆண்டு பங்குனித் திங்கள் மகநாளில் குருநாதராகிய உகந்தலிங்க ஞானதேசிகர் வீடு பேற்றையடைந்தார். அவருடைய திரு உடலை அடக்கஞ் செய்தார். திருவண்ணுமலையில் எழுந்தருளிய சகானிய ஞானதேசிகர், அவருடைய மாணவர்களாகிய சிவகுருசாமி பரசுராமசாமி, நாகை அருணாசல சாமி, திருவாரூர் தட்சணாமூர்த்தி சாமி முதலிய பெரியவர்கட்கும் மற்றும் அக்காலத்தில் இருந்த அடியவர்கட்கும் திருமுகம் அனுப்பி வரவழைத்தார். குருபூசை முதலியவைகளை மிகச்சிறப்பாக நடத்தினர். அப்பெரியார்மீது;

"தடமுயர் கடல்சூழ் பொருள்வளன் னகரம்
தனின்மதத் தேகமாய் லிளக்கித்
திடமுடன் சருதி சாத்திரவே தாகம
சின்தையில் அநுபவச் தெளிந்து
படிதனில் தனேவக் தடித்தவர்க் கெங்கும்
பரமசற் குருவதாய் உணர்த்தி
அடியவர் அடிகட் கேபுகத் தாட்சி
அன்பதி கயிலைவாழ்த் தனனே."

என்னுஞ் செய்யுளையும் பாடினர். தம்முடைய ஆசிரியரின் சமாதியின்மீது கோயில் அமைத்து அதன் பக்கத்தில் மடம் ஒன்றையும் ஏற்படுத்தினர். சமாதிக் கோயிலில் பூசை முதலியன நடைபெறுதற்கு நிலபுலன்களையும் பொருள்களையும் உண்டாக்கினர். திருத்தில்லையில் இருந்த வீரபத்திர அடிகள் என்னும் பெரியவரை அழைத்து அங்கு எழுந்தருளச் செய்தார். தாம் சிலகாலம் உடன் இருந்து விட்டுப் பிறகு காரைமா நகரை அடைந்தார்.

கோவிலூரில் கொட்டகை

காரைக்குடியில் இருக்கும்போது நல்லான் செட்டியார் நோடு கோயிலூருக்குச் செல்லும் வழக்கம்போல் ஒருநாள் சென்றார். இரைவழிபாடு செய்துகொண்டு காரைக்குடிக்குப் புறப்படத் தொடங்கினர். அப்பொழுது பெருமழை பொழியத் தொடங்கியது. மழை எளிதில் விடவில்லை. இருவரும் அவ்விடமே அம்மன் திருமுன்பு இருந்த கூரைக் கொட்டகையில் தங்கினர். பெய்த பெருமழையால் கொட்டகை ஒழுகிச் சேறாகி விட்டது. இருவரும் இரா முழுவதும் உறங்காமல் விழித்துக் கொண்டு உட்கார்ந் திருந்தனர். மறுநாள் காலையில் நல்லான் செட்டியாரை அனுப்பித் தொழிலாளர்களை வரவழைத்து அக் கொட்ட கையைப் பிரித்து முன்போலவே பனையோலையினல்

கட்டும்படி கட்டளையிட்டார். தொழிலாளர்கள் பணியை முடிக்கவே அப்புறப்படுத்தும் பொருட்டுக் கொட்டகையின் மீதேறினர். அக்கொட்டகையின் கல்கள் அடியற்றிருக்கையாலே அல்லது இவரைக் கொண்டு அதனைக் கற்பணியாக்கிக் கொள்ளவேண்டுமென்று திருவெல்லியம்மையார் திருவுளங் கொண்டமையாலே அக்கொட்டகை அடியோடு சாய்ந்து விட்டது. அதனைக் கண்டு இவரும் கல்லான் செட்டியாரும் மிகுந்த வியப்படைந்தனர். "வேண்டிய பொருள் சேர்த்துக் கொண்டுவந்து இதனைக் கற்பணியாகச் செய்து முடிப்போம்," என்று பேசிக் கொண்டு இருவரும் காரைக்குடிக்குத் திரும்பிவிட்டனர்.

ஆச்சிக்குக் காட்சி

முத்துசாமிக்கர் காரையை அடைந்தபின் திருப்பணி செய்ய எண்ணியதை மற்றுவிட்டு வேறு செயல்களில் ஈடுபட்டிருந்தார். திருவெல்லியம்மையார் முத்துசாமிக் கரைத் தடுத்தாட் கொள்ளத் திருவுளங் கொண்டார். ஓர் அந்தணச் சிறுமியைப் போலக் கோலம் பூண்டு. முத்துசாமிக்கருடைய தாயாரின் திருமுன்பு தோன்றினர். ஆச்சியைப் பார்த்து, "உன்னுடைய மகன் எங்கே?" என்று உசாவினர். ஆச்சி, "அவன் வெளியே போயிருக்கிறான்" என்று கூறிவிட்டு அம்மையாரின் அழகைப் பார்த்து வியந்து கொண்டு நின்றார். அந்தணச் சிறுமியாக வந்த அம்மையார் ஆச்சியைப்பார்த்து, "உன்னுடைய மகன் வழிபாட்டிற்குக் கோயிலுக்கு வந்தபோது, வெயிலுக்கும் மழைக்கும் உதவியாக இருந்த கொட்டகையைப் பிரித்து அப்புறப்படுத்தி விட்டுக் கற்பணியாகச் செய்கிறேன் என்று கூறிவிட்டு வந்தான். பிறகு எத்தகைய முயற்சியுஞ் செய்யாமல் இருக்கிறான். விரைவாக வந்து அத்திருப்

பணியை முடிக்கச் சொல்லு," என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு மறைந்தருளினர். தம்முடைய மகன் இல்லத்திற்குத் திரும்பிய உடனே ஆச்சி இச்செய்தியைக் கூறினர். கேட்ட முத்துராமலிங்கர் பேராசந்தக் கடலிற் படிந்து இன்பக் கண்ணீர் சொரிந்தார். தம்முடைய தாயாரைப் பார்த்து, "உலக மாதாவாகிய பராபரையைக் கண்களாலே கண்ட நீயே சிறந்த கல்விவாட்டி!" என்று சொல்லிப் பாராட்டிப் புகழ்ந்தார்.

திருப்பணிகள் செய்தல்

பிறகு முத்துராமலிங்கர் அம்மையின் திருமுன்பு முன் எண்ணியவாறே கற்பணியால் மண்டபம் செய்வித்த தோடுமேலும் பல திருப்பணிகள் செய்ய எண்ணினர். திருப்பணியின் பொருட்டுத் தனவணிகர்களும் மாணவர்களும் கொடுத்த பொருளைக்கொண்டு, அம்மையார் கோயிலின் கருவறை (கருப்பக்கிரகம்), அரசு கோபுரம், விமானம், வாயில் கூபம், சுடாகங்கள், பூம்பொழில்கள், தென்னஞ் சோலைகளால் சூழப்பட்ட திருவீதிகள், தேர்கள், மடம் முதலியனவற்றைச் செய்து கோயிலாரைப் பூலோக கயிலாய மாக்கினர். இவருடைய திருப்பணியைக்கண்டு வியப்படைந்தவர்கள் இவருக்குக் கோவிலார் ஆண்டவர் என்று சிறப்புப்பெயர் சூட்டினர். பழனியப்ப ஐயர் என்பவர்,

"மடமுண்டோ சிவாலயங்கள் மிகுதி யுண்டோ
வரசிட்டம் படிப்பதுண்டோ மனத்துள் ஞானத்
திடமுண்டோ சல்வர்தமிழ் படிப்பா ருண்டோ
திவ்வியமாம் உதாரமுதற் குணங்க ளுண்டோ
விடமுண்டோன் அடியர்குழாம் மிகுதி யுண்டோ
யெய்யறஞ்சத் திரம்விளைப்பூல் காவும் உண்டோ
வடலைகலக் கிறைவனெனும் முத்துராம
வள்ளல்திருக் காரைநகர் வாரா முன்னம்."

என்று வியந்து பாடியுள்ளார். மற்றும், கல்லல், காரைக் காத்தான், சாக்கோட்டை முதலிய ஊர்களிலும் திருப்பணிகள் செய்வித்தார்.

தெய்வவழிபாடு

தேவிகோட்டை இராமநாதன் செட்டியார் என்பவர் இவரைக்கண்டு வணங்கி, "அடிகள்! தெய்வத்தைக்கண்டு போற்றுதற்குரிய வழியாது?" என்று கேட்டார். அதற்குக் கோனிலார் ஆண்டவராகிய இவர்,

"தெய்வ வழிவறிந்தத் தேவதையைப் பூசைபண்ணித்
தெய்வ வடிவாந் திறங்கேளீர்—ஐயமிலா
சற்குருவால் தாளுணர்தல் சந்ததமும் சிந்தித்தல்
நிற்குமது வான நிலை."

என்று செய்யுளால் மறுமொழி பகர்ந்தார்.

மேலுஞ்சில திருப்பணிகள்

மேற் கூறியவாறு பலபணிகள் செய்துகொண்டிருந்த ஆண்டவரிடம் தேவிகோட்டை அருணாசல அடிகள், கண்டனூர் அருணாசல அடிகள் முதலியோர் வேதாந்த நூல்களை ஓதி உணர்ந்துகொண்டிருந்தனர். ஒரு காலத்தில் ஆண்டவர் அவ்வூர் அதளக்கண்மாய்க்கரையில் பூசனை முதலிய பாதுமின்றி வெயிலில் இருந்த அகத்தீசுவரர் என்னும் லிங்கத்தை எடுத்துக்கொண்டு வந்து, கொற்றவாளீசுவருடைய கோயிலில் அமைக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு சென்றார். பஞ்சாக்கர சுவாமி கோயிலுக்கு வடபால் குப்புச்சி ஊருணிக்கு அண்மையில் மறவன்கோட்டை என்னும் ஊர் இருந்து அழிந்த இடத்தில் ஒரு கோயில் இருந்தது. அதில் இருந்த சுவாமியின் பெயர் கைலாசநாதர், அம்மையின் பெயர் திரிபுர சுந்தியம்மை. கோயில் மிகவும் பழுதடைந்து ஒருவேளை

மட்டும் பூசை நடைபெற்றுக்கொண்டிருந்தது. அக்கோயிலில் எழுந்தருளியிருந்த அம்மையார் வெண்பட்டாடையணிந்து அந்தணச் சிறுமியாக ஆண்டவர்முன் தோன்றி, "அப்பா! ஒருகுடந் தண்ணீருக்கும் ஓர் உருண்டைச் சோற்றிற்கும் இவ்விடத்தில் இருவரும் காத்துக்கொண்டிருக்கிறோம்," என்றுகூறி மறைந்தனர். ஆண்டவர் கைலாசநாதரையும் நித்திய கலியாணியம்மையையும் கொற்றவாளீசர் கோயிலில் கொண்டுபோய்ச் சேர்க்க எண்ணினர். கொற்றவாளீசுரர் கோயிலுக்கும் திருநெல்லியம்மை கோயிலுக்கும் நடுவில் ஊரார் வழிபட்டு வந்த பிரமக்காளி என்னும் தெய்வதையின் இருப்பிடம் ஒன்று இருந்தது. அவ்விடத்தில் எழுந்தருளிய காளியை அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் கைலாசநாதரையும் நித்திய கலியாணி அம்மையையும் எழுந்தருளச் செய்தார். பூசை வழிபாடு முதலியன சிறப்பாக நடைபெறுமாறு ஏற்பாடு செய்தார்.

ஐயுளி கோயிலும் பாட்டும்

கைலாசநாதரையும் நித்திய கலியாணி அம்மையாரையும் மறவன்கோட்டையில் இருந்துகொண்டு வருங்காலத்தில் அங்கிருந்த பஞ்சாக்கர நாயகி உருவிலிவாக்காய் (அசரீரியாய்) ஆண்டவரைப் பார்த்து, "நான்மட்டும் இங்கு தனித்திருப்பது உமக்கு அறமாகுமா?" என்று மொழிந்தாள். அம் மொழியைக்கேட்ட ஆண்டவர் அவ்வம்மை பாரையும் எடுத்துக்கொண்டுவந்து சேர்க்கும் எண்ணத்தோடு கோயில் அமைத்துக்கொண்டிருந்தார். ஆண்டவரைப் பார்க்கவந்த கல்லான் செட்டியார், "திருநெல்லியம்மையார் திருப்பணிக்காக வந்த பொருளைப் பிடாரிக்காகச் செலவிடுதல் ஒழுங்காகுமா?" என்று உசாவினர். உடனே ஆண்டவர்,

"கண்ட பொருளல்ல காணும் பொருளல்ல கண்டபொருள்
மண்டு மிருளல்ல மாயுமொளியல்ல மன்னுமொளி
பண்டென் பதுமல்ல வின்றென்ப தல்ல பராபரமாம்
அண்டம் அடக்க அடங்காப் பெருவெளி ஐயனீயே."

என்னுஞ் செய்யுளைக்கூறி, "அடா! கல்லாள்! இத் தன்மை யான ஐயனி அம்மையாரை நீ தாழ்வாக என்னுவது உன்னுடைய அறியாமையையே காட்டுகின்றது," என்று கூறி அத் திருப்பணியை முடித்து அவ்வம்மையாரை அக் கோயிலில் அமைத்துக் குடமுழுக்கையும் (கும்பாபிடேகம்) செய்து பூசையும் நடந்து வருதற்கு ஏற்பாடு செய்தனர். பிறகு முன்பு தாம் எண்ணியபடியே அதனைக்கண்மாயில் இருந்த அகத்தீசுவரரையும் கொணர்ந்து கோயில் ஒரிடத்தில் எழுந்தருளச் செய்து பூசைக்கும் ஏற்பாடு செய்தனர்.

மருத்தம் தீர்க்கப் பாடியது

அந்நாளிலே அடியார்களுக்கு வேண்டிய உதவியை எப்பொழுதுஞ் செய்துகொண்டிருந்த இராயபுரம் அப்புக் குட்டிச் செட்டியார் என்பவர் தம்மகனை இழந்து பெரிதும் வருந்திக்கொண்டிருந்தார். அவருடைய மனத் துன்பத்தை உணர்ந்த இவர்,

"கனிற் குழலி மலடிபெற் றுணட் களித்தவன்தான்
கனிற் கருதப்பொய் யானதுபோல் கனிமுற்ற
தனமிக்க மக்களும் பெண்டிருஞ் சற்றமும் தன்னுடம்பும்
இனமுற்ற என்னை அறியப்பொய் யாகி இருந்ததுவே."

என்னுஞ் செய்யுளை எழுதி அனுப்பினர். இதனைப் பார்த்த அவர் ஒருவாறு மனவருத்தம் மாறியிருந்தனர்.

பேதப்பார்வை

பன்னத்தூர் சின்னையா என்பவர் ஆண்டவனைப் பார்த்துப், "பேதப்பார்வை எப்பொழுது நீங்கும்?" என்று உசாவினர். அதற்கு இவர்,

"விண்ணுதி பூதமெலாஞ் சிவமே யாகும்
மெய்யுருவும் பொய்யுருவுஞ் சிவமே யாகும்
கண்ணுண வேதமெலாஞ் சிவமே யாகும்
கருதரின்ற தினைவெல்லாஞ் சிவமே யாகும்
எண்ணிறந்த பேதமெலாஞ் சிவமே யாகும்
இப்படியே நினைந்தோறுங் காண்பா லுகில்
பெண்ணுணரும் அலியாகும் பேத மின்றிப்
பிரமமயம் ஆதல்நிண்ணம் பேதம் இன்றே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். மேலும் அவர் ஆண்ட வரைப்பார்த்து, "யான் எனது என்னும் ஆணவத் தன்மைகள் எவ்வாறு நீங்கும்?" என்று கேட்க,

"தன்மய மாஞ்சத்தி தானிலைக்க நாமவுரு
மின்மயம்போல் தோன்றி விளிந்திடுமே—என்மயமே
ஆமெ யனைவையெல்லாம் ஆலால்யா னும்மெனதும்
போமே சிவமயமாய்ப் போம்."

என்றும் வெண்பாவால் மறுமொழி கூறினர்.

கற்பகப்பிள்ளையார் பாட்டு

ஆண்டவர் பிள்ளையார்பட்டி நகரத்தார் வேண்டுகோளின்படி இறைவழி பாட்டிற்குப் பிள்ளையார் பட்டிக்குச் சென்றார். அப்பொழுது,

"முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள்
முழுதகற்றம் முகத்தி னுனை
அற்பசுகத் தெனையழுத்தா ஐங்கரனைப்
பிற்பவரும் அகற்றுங் கோலவச்
சொற்பழுத புரியாத வணிகர் குலம்
தினம்பணிபுந் துணைத்தா ளாணைக்
கற்பகத்தின் மிடியகற்றம் கற்பகமாம்
விநாயகனைக் கருத்தில் வைப்பாம்."

என்னுஞ் செய்யுளை இயற்றினர்.

திறனைக் காட்டி

ஒருவன் தன்னுடைய மதிநுட்பத்தினிடத்தில் நிற்கையில் சாணிய நிலையில் கல்லிலில் படுத்திருக்கும்போது கொற்றவனிடம் பிறந்திருக்கிற அரிய கல்லைக் குடையாகப் பிடித்துக்கொண்டு உடையாரும் முக்கண்ணரும் உமாதேவியோடு வெள்ளிடையில் வந்து திருக்காட்சி கல்லி மறைந்தருளினர்.

அஞ்சாத பெருமான்

தொண்டன் ஒருவன் அதிகமில் இருக்கும்போது, கோயிலுக்கு மேற்கில் கல்லாசனம் தொங்கிக் கொண்டிருந்த சாணியொன்றைச் சிற்சாரில் கோயில் கொண்டிருந்த அஞ்சாத பெருமான் என்னும் ஐயனுக் தொண்டித் தம் முதலில் புற்று வளர்ந்திருந்ததைக் காண்பித்து, "இவ்வாறு வளரான் புற்றெடுக்குமாறு நான் இருப்பது முறையா?" என்று கேட்டார் தொண்டன் தம்முன் தோன்றிய அவரைப் பார்த்து, "நீர் யார்?" என்று கேட்க, ஐயனர், "நான் அஞ்சாத பெருமான்" என்று சொல்லி மறைந்தார். தொண்டன் மதுரன் கல்லான் செட்டியாரை அழைத்துக் கொண்டு அஞ்சாத பெருமானின் கோயிலுக்குச் சென்றார். கோயிலின் சுவரில் புற்று வளர்ந்திருந்ததை உறுதித்துத் தன்னிச் சாமியின் முதலில் புற்று வளர்ந்திருந்ததை கல்லான் செட்டியாருக்குக் காட்டினர். "இவ்வாறு புற்று வளர்ந்திருப்பானேன்?" என்று கேட்டார். அதற்குக் கல்லான் செட்டியார், "இக்கோயிலைக் கட்டி முடிப்பதற்கு இவ்வளவு தொகை என்று குத்தகையாகப் பேசி அத் தொகையைத் தச்சரிடம் கொடுத்திட்டோம். அவன் இவ்வாறு மோசடியாகக் கல் வைத்து ஏய்த்திருக்கிறான்," என்று கூறினர். தொண்டன் தச்சனை அழைத்துக் கண்டித் தார். "இக்கோயிலை விரைவில் கல்லி முடித்துக் கொடுத்

முடித்தல் வேண்டும்" என்று கட்டளையிட்டார். அவன் அவ்வாறே செய்து முடிப்பதாகக் கூறினான்.

தச்சனுக்குத் தொல்லை

ஆண்டவர் அறிவுரைப்படி தச்சன் கோயில் வேலையை விரைவாகத் தொடங்கவில்லை. "இதோ அதோ" என்று போக்குக் காட்டி ஏமாற்றிக் கொண்டிருந்தான். அத் தச்சனின் மனைவி கர்ப்பங் கொண்டாள். அக்கர்ப்பம் உரு மாய்ந்து முதல் தொடங்கியது. தச்சன் அச்சம் கொண்டான். பெரியார் கட்டளையை உடனே நிறைவேற்றுதபடியால் உண்டான கேடு என்று எளிதில் உணர்ந்து கொண்டான். ஆண்டவரிடம் ஓடிவந்து அடிகளில் விழுந்தான். நிகழ்ந்ததைச் சொல்லி வருந்தினான். "அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுதல் வேண்டும். இனிமேல் கணமும் காலந் தாழ்க்காமல் வேலையைச் செய்து முடிக்கிறேன் என்னுடைய மனைவியின் கரு அழிந்து போகாமல் திருநீறு கொடுத்தருளுதல் வேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டான். "பெரியோரைப் பேணு தொழுகிற் பெரியாரால் போ விடும்பை" நேரும் அன்றே? அருட்கடலாகிய ஆண்டவர் அவனிடம் திரு நீற்றைக் கொடுத்து, "இதனை உன் மனைவியின் நெஞ்சிற் போடின் அவள் வெந்துபோவாள்; உன் வீட்டின் கூரை மேற் போடுவையாயின் அவளுக்கு சேர்ந்துள்ள இடுபுது ஒழிந்த கருமுற்றி ஆண் குழந்தையைப் பெறுவாள். அக் குழந்தைக்கு, 'அஞ்சாத பெருமான்' என்று பெயரிட்டு கல்வியோடு பிழைத்திரு" என்று அருளுரை கூறி அனுப்பினர். அவன் தான் பெற்ற திருநீற்றைக் கொண்டுபோய்த் தன்னுடைய வீட்டுக் கூரைமேற் போடவே அஃது எரியத் தொடங்கியது. அதனை அவன் அறிவாக்கு

விட்டு உள்ளே புகுந்து தன் மனைவியைப் பார்த்தான். அவள் இரத்தப் போக்கு நின்று நலம் பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். ஐயனர் கோயிலையும் விரைவில் கட்டி முடித்தான். ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளிய படி அவனுக்கு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு அஞ்சாத பெருமான் என்று பெயரிட்டான்.

திருப்பெருந்துறைக்குச் சென்றது

திருப்பெருந்துறை அண்ணலிடம் செட்டியார் என்பவர் கோவிலூருக்கு வந்து, திருமட நிழலுக்காக ஆண்டவரைப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து திருப்பெருந்துறைக்கு அழைத்துக் கொண்டு சென்றார். ஆண்டவர் திருப்பெருந்துறையை அடைந்து ஆன்மநாதக் கடவுளைக் கண்டு போற்றி வழிபட்டபோது,

"தொந்தமும் கடந்த தூயோர் துதித்திடற் குரிய பாதம்
அந்தமும் நடுவும் இன்றி அமர்ந்திடும் அம்பொற் பாதம்
சந்ததஞ் சுகஜித் சத்தாய்ச் சதோதித மான பாதம்
ஒத்தனைப் படியே தோன்றும் திருப்பெருந் துறையான் பாதம்."

என்னுஞ் செய்யுளை இயற்றினர். திருப்பெருந்துறையில் சில நாள் தங்கிக் கோவிலூருக்குப் புறப்பட்டார். வரும் வழியில் இராமநாதன் செட்டியார் என்பவர் ஆண்டவரைத் தமது மாத்தூர்க் கோவிலுக்கு அழைத்துக் கொண்டு சென்றார். அங்குச் சென்று இறைவழிபாடு இயற்றும் போது,

"ஞாலமுற்ற வீசர் அடியினிணையைச் சேர்ந்தவனக்(கு)
எவ்வாண்டும் ஒருசே இடருண்டோ—வையந்தாங்கும்
புவிவிளக்கச் சஞ்சரிக்கும் பானுகண்ட
தாமிமம் போகாதோ சொல்"

என்னும் செய்யுளை இயற்றினர். பிறகு கோவிலூரை அடைந்தார்.

அம்மையின் திருவருள்

ஆண்டவர் திருவீதிக்குத் தென்பால் ஒரு திருமடம் அமைக்கத் திருவுளங் கொண்டார். மடத் தொடக்கத் திற்கு நல்வேளை பார்த்து வேலை தொடங்க முகூர்த்தஞ் செய்தனர். அவ்வேளையில் தேங்காய் கொண்டு வருவதற் குச் சென்றவர் உரிய வேளைக்கு வந்து சேரவில்லை. எற்படுத்திய நல்வேளை கெருங்கிவிட்டதே என்று எண்ணி ஆண்டவர் திருநெல்வேலியம்மனின் திருக்கோயிலைப் பார்த் தார். அப்பொழுது அக்கோவிலில் இருந்து ஓர் அந்தணச் சிறுமி ஒரு தட்டில் வெற்றிலை பாக்கும் இரண்டு தேங்காய் களும் கொண்டு வந்தனள். ஆண்டவர் அவைகளைத் தம்முடைய கைகளிற் பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று நின்றனர். அப்பொழுது அங்கிருந்த குட்டையன் ஆசாரி என்பவன் அந்தணச் சிறுமியைப் பார்த்து, "அம்மே! நீ யார்?" என்று வினவினன். அப் பெண் அவ்வளவில் மறைந்தனள். ஆண்டவர், "அம்மே! நின் திருவருளால் இவ்விடத்தில் மாறாத அன்னதானம் நடைபெறுதல் வேண்டும்" என்று கூறி முகூர்த்தஞ் செய் தார். அவ்விடம் பெருமடமாய்ச் சிறந்து விளங்குவதாயிற்று.

இறுதி

கோவிலூரில் தாம் அமைத்த மடத்தில் இருந்து அன்பர்கள் பலருக்கு வேதாந்த நூல்களைப் போதித்துக் கொண்டிருந்த இவர் தம் வீடுபேற்றை அடையுங் காலம் நெருங்குவதை உணர்ந்தார். கல்லல் ஐயா என்பவரைப் பார்த்து, "தம்முடைய வழிமுறையில் உள்ள பெரியோர் களையும் அன்பர்களையும் அழைக்கவேண்டும்" என்று கட்டளையிட்டார். கல்லல் ஐயா என்பவர் பலவிடங்கட் குஞ் செய்தியனுப்பினர். சிக்கல் வீரபத்திர அடிகள்

பசுபதிகோவில் ஆறுமுக அடிகள், திருவிடை மருதூர் பிட்சு அடிகள், குன்றக்குடி திருவண்ணமலையாதீனத்து வேலாயுத அடிகள் முதலிய பெரியார்கள் பலர் வந்து கூடினர். மற்றும் துறவு சுவாமிகள், நேமத்தான்பட்டி பழநியப்ப ஐயா, கோட்டையூர் அண்ணாமலை ஐயா, மதுரைக் குட்டை ஐயா, கருணாநிதி என்னும் சிதம்பர ஐயா, கல்லல் வெள்ளையப்ப ஐயா, பள்ளத்தூர் முத்து வீரப்ப ஐயா முதலியவர்களும் வந்து ஆண்டவரைச் சூழ்ந்திருந்தனர். ஆண்டவர் கல்லல் ஐயாவைப் பார்த்து, "வெள்ளையப்பா! இம்மடாலயத்தில் எப்பொழுதும் வழி முறையாக அடியார் குழாங்கள் இருந்து பரிபாலனஞ் செய்து விளங்கிவர வேண்டுமே!" என்று கேட்டனர். அதற்கு அவர், "அடிகளின் கட்டளைப்படி நடந்து கொள்ளுகிறேம்" என்று கூறினர். ஆண்டவர் தமது பக்கத்தில் நின்ற தேவகோட்டை அருணாசல அடிகள் என்னும் துறவு சுவாமிகளைப் பார்த்து, "அருணாசலம்! நீ இன்றுமுதல் இம்மடாலயத்தில் இருந்து அடியார்களுக்கு அருள் புரிந்து வருவாயாக" என்று கட்டளையிட்டுக் கலி சகசஅ-இல்-சார்வாகனசகாப்தம் - களகூசு-இல் பிலவங்க பங்குனித் திங்கள் எட்டாம் நாள் உத்திர வீண்மீனில் வீடுபேற்றை யடைந்தார். சூழ்ந்திருந்த அடியார்கள் அப் பெரியாரின் திருவுடலைச் சமாதிவைத்துச் செய்யவேண்டிய சிறப்புக்களையெல்லாம் செய்தனர். இப்பெரியாரால் உண்டாக்கப்பட்டதே கோபிஎர் மடாலயம்.

வீடுபேறடைந்த நாள்

ஆண்டவர் வீடுபேறடைந்த செய்தியைத் திருத்தில்லையில் அந்நாளில் வசித்திருந்த ஆறுமுக நாவலர் கேள்வியுற்றுப் பின்வரும் பரிபூரணப் பாடலை இயற்றினர்.

"சிர்கொண்ட சகவருடம் ஆயிரத் தெழுநூற
சேரும்அற பத்தொன்பதில்
திருமருவு பிலவங்க வருடமதில் மீனமாம்
திங்களொட் டாந்தேதியில்
திரமருவு பாணுவா ரத்திணுத் திரமெனச்
செப்புகட் சத்திரத்தில்
சிறந்தபு ணர்பெனுந் திதியதனில் இனிதுவரு
திகழ்கன்னி லக்கினத்தே
கார்கொண்ட புயல்உண்ணன் மலரயன் வருந்திடும்
காணரு பெருவாழ்வெனும்
கறைமிடற் றிறைநாச கட்கபர மேசுரன்
கருணையுரு வோடமர்ந்து
கனவெழில்கொண் மணிமாட நிலவுசமி வனமெனக்
கழுமுமுயர் பதியில்வாசன்
கணிதமற சிடர்தம தகவிருள் துரத்தவரு
கருதரிய ஞானதபனன்
போர்கொண்ட காமத்து சோதலோ பாதியாம்
புகல்குற்றம் நீங்குபுனிதன்
பொறையறி வடக்கமருள் முதலகற் குணமொடு
பொருந்திவன ருற்றமுதல்வன்
புவனமூன் றிலுமிவன் புகழ்சென் றிடற்கிடம்
போதா தெனச்சிறந்தோன்
பொருவிலா துயர்சுத்த வேதாந்த சாத்திரம்
போதமிக் குள்ளதிபுணன்
பேர்கொண்ட நிர்மல சமாதிசாட் சாத்கார
பிரதாப மிகுசிரேட்டன்
பெருமைமிறை தருமுத்த ராமலிங் கக்குரு
பிறங்கிவிடும் அத்துவிதகிட்
பிரபஞ்ச நிர்விடய நிட்களா நீதமரம்
டெருவெளிய தாகிநின்ற
பேசரும் அகண்டபரி பூரண சுகாகாத்த
பிரமமா யிலகிலுனே."

இயற்றிய நூல்

இப் பெரியார் இயற்றிய பலபாடல் சுவாதுபவத் திருவாக்கு என்னும் பெயரோடு வழங்குகிறது.

புகழ் நூல்கள்

இப் பெரியார்மீது அப்பாவுப்புலவர் என்பவர், "முத்து சாமலிங்கர் பெஞ்சதிவுறுத்தல்" என்னும் நூலைப் பாடியிருக்கிறார்.

"வேதமே தியரும் விண்ணோர் வித்தகர் எவரும் போற்றும்
சோதியா முத்துசாமன் அயதாட் இணையி னுன்னே
கோதிலா தனையடைபெற்ற குறிப்பைநீ குனித்திடாது
தீதையே கினைந்து தன்பம் செறிவதென் செப்பாய் நெஞ்சே."

என்பது அந்நூலில் ஒருபாட்டு. வேறு சிலரும் இப் பெரியார்மீது புகழ்நூல்கள் பாடியுள்ளனர்.

ஈ. அச்சுதாநந்த அடிகள் - ஈ

[1868]

தோற்றம்

இவர் தொண்டைவளநாட்டிலே சென்னைக் கணித் தாக உள்ள கோவிந்தபுரம் என்னும் ஊரில் சுப்பராய பூபதி என்பவருக்கும் காமாட்சி அம்மையார் என்பவ ருக்கும் அருமைமத் திருமகனாகத் தோன்றினர். இவர் தோன்றிய காலத்தைத் தீழ்வரும் பாடல்கள் விளக்கு கின்றன.

"உயர்ந்தகற் சாலி வாகன சகாத்தம்
உறுமொரா யிரத்தெளாயிரத்து
மயக்கரு மோகைம் பதினுடனுற
வண்ணிய சயவெனும் ஆண்டில்

இலைந்தி மாதி யிலையொரு பதினை
மேலைந்தே நிலிற்குருவாரம்
மிலைந்தறம் அமர பக்கமெ னுரைத்தும்
மிளிர்வெ நிசெதி தமதாம்.

*ண்ணு மாதவ னேடொனிர் அம்புலி
வண்ண மாயுறம் வண்டிதி யோடமர்
நின்ன மார்ச்த யத்திகழ் சித்தினைத்(த)
அன்னல் தோன்றினன் அண்டர் விபக்களே."

கல்வியும் இறைவழிபாடும்

இளம்பருவத்தே பள்ளிக்குச் சென்ற கலைபல பயின்று விழுமிய அறிவுகலன் பெற்றார். பின்னர் இவருடைய உள்ளம் இறைவழிபாட்டின் மேற்சென்றது. இறைவன் எழுந்தருளிய சிவப்பதிகள் பலவற்றிற்குஞ் சென்று இறைவழிபாடு செய்தார்.

ஆசிரியரை அடைதல்

பல சிவப்பதிகட்குஞ் சென்று இறைவழி பாடியற்றிய இவருக்கு ஆசிரியரை அடைந்து அருள் பெறவேண்டும் என்னும் எண்ணம் பெரிதாயிற்று. பலவிடங்கட்குஞ் சென்று ஆசிரியரைத் தேடலுற்றார். அக்காலில் பழமலையில் (விருத்தாசலம்) வேதசிரோமணி சிவசிதம்பர தேசிகர் என்னும் பெரியார் ஒருவர் மெய்ஞ்ஞானச் செல்வராக விளங்கியிருந்தார். அவருடைய பெருமையைப் பலரும் நன்குணர்ந்த இவர் அவரிடஞ் சென்று அருளுரைபெற்றுக் கடைத்தேற வேண்டும் என்று எண்ணினார். பழமலையை அடைந்து தேசிகருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆசிரியர் இவருடைய பக்குவநிலையை அறிந்து அருளுரை கூறி அச்சுதாநந்தர் என்று பெயரும் வழங்கினார். ஆசிரியருடைய அருள் பெற்ற இவர், அவர்மீது பாக்கள் பலபாடிப் பரவினார்.

"கதிர்கொள் மேனி கற்பனையால்
களிம்பு தோய்ந்து கிடப்பேனைத்
துதிகொள் சிதம்ப ராரியனுய்த்
துலக்கும் வாய்மை தெறி பெற்றேனை
மதிக்கும் அவன்றன் இன்னருளால்
மாதர் மோகப் படுகுழியில்
குதிக்கும் அதனும் இலதாகும்
கொன்னை யேதிக் கதறுத்தேன்."

என்பது அப் பாடல்களில் ஒன்று. இவர் சங்கராச்சாரியாரு டைய திருவருளையும் பெற்றிருந்தார். செய்யுள் பாடும்திறம் நன்கமையப்பெற்ற இவர் தியாகராஜ பூதி என்னும் நாலை இயற்றியிருக்கிறார். அந்நூலுள், திருவருள் விலாசப் பரம குரு வணக்கம், மாபு வணக்கம், திருவடிமாலை, பொருண் மாலை, பாதத்துவ நிச்சயம், மகாதேவமாலை, அதிபூதி நிலையம், குருவருட்பேறு, பிரணவசகித குருநாமன்தவம், குருநாம சங்கீர்த்தனம், சிவநாம சங்கீர்த்தனம், அரிநாம சங்கீர்த்தனம், சிவசண்முகநாம சங்கீர்த்தனம், புசுங்கப்ப யாத நவகம், திருநீற்றியல், பஞ்சாக்கரவியல், மலையம், அத்துவிதவுண்மை, ஆட்கொண்ட முறைமை, மும்பொரு ளொருமை, குருவருட்பான்மை, குருவருட்கோலம், குரு வருட்காட்சி, நெஞ்சறிவுறுத்தல், சிவானுபவவிளைவு, அவதாரலீலை, திருச்சாழல், அன்னைப்பத்து, குயிற்பத்து, அடைக்கலப்பத்து, ஐக்கியானுசந்தானம், அனுபவமாற் றுமை, ஆய்ந்தறிவடக்கல், முடிபாவுவகை, பிராத்தனை, சங்காரசுந்தமாலை, திருப்பள்ளியெழுச்சி முதலிய நூற் றெண்பத்தாறுண்டு பகுதிகள் உள்ளன.

"ஆலம் அமுதாய் அருக்கிடு வானை
ஆரிய னெனி அருள்செயும் தோனை
மாலவ தாரமாய் மண்ணிதித் பானை
வாய்மலர்ந் தோர்மொழி வாய்மைசொல் வானைக்

கோல மெலாமும் கொளும்பெரு மாலைச்
கூடிக் குலாவுதற் கொள்ளையி னாலே
வேலி லிரவிற் குயிலே வரவே
இலையுடன் கூறென் இன்னுயிர் சாலே."

என்பது குறிப்பத்தில் ஒருபாட்டு.

---

5. சிதம்பரஞான தேசிகர்

தோற்றம்

"மேலாய தறவினுக்கோர் துணையாகி உள்ளான்
விரிக்தபல புவனமுக்கான் றிருசோற்றிற் கண்டோன்
காலாய மறைமுடியின் பொருள்விளக்க வெடுத்த
கலமாண வர்க்கருளித் தன்மயமாக் கிடுவோன்
பாலாய சிவதருமம் பற்றறப்பா லிப்போன்
பரப்பிரம சுவாநுபூ தியிற்சிறந்த மேலோன்
தூலாய யாவுருணர்ந் தவர்மனுவின் வெத்த
துவலுமொரு சிதம்பரதே சிகனெனுமா பெரியோன்."

என்று பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பின்னவர்களால் பாராட்டப்பெற்ற இப்பெரியார் பாண்டி வள நாட்டில் தெவிகோட்டையில் தோன்றியவர். இளமைப் பருவத்திலேயே தமது மூண்டு அறிவு தன்னை யோதி உண்மை ஞானம் கைவரப் பெற்றார்.

மடாலயத் தலைவர்

பெய்யறிவிற் சிறந்து விளங்கிய இவர் கோதிலர் மடத்தின் தலைவராக அமர்ந்து தம்மையடைந்த மெய் யடியார்கட்கு அறிவுறுத்தினைப் போதித்து அவர் தம் பிறவிக் கடலுக்குத் தெப்பமாக விளங்கிப் பேருண் புரிந்துகொண்டிருந்தார். மூன்று பெரியோர்கள் கடத்திய கொற்றவாளீசர் கோயில் திருப்பணியையுந் தாம் மேற் கொண்டு இனிது கடத்தினர்.

பொன்னம்பல அடிகள்

ஒரு சமயம் சிதம்பரஞான தேசிகர் கூத்தப்பிரானைப் போற்றி வழிபடுவதற்காகத் திருத்தில்லையம்பதிக்குச் சென்றார். அப்பொழுது கோட்டையூர்ப் பெத்தாச்சி அடிகள் என்பவர், பின்னுள்ள் மகவல்ல நவநீதம், பகவத்கீதை முதலிய ஞான நூல்களுக்குச் சிறந்த உரைவெழுதியருளிய பொன்னம்பல அடிகள் என்பவரைக்கொண்டுவந்து எதிரே நிறுத்திப், "பெரியீர்! இப்பிள்ளை மிகு மேதாவியாக இருத்தலின் பாடஞ்சொல்லி மாணவராகக் கொண்டு ஆட்கொண்டருள வேண்டும்," என்று வேண்டிக் கொண்டார். சிதம்பர தேசிகர் அவ்வாறே பொன்னம்பல்லனை மாணவராகக் கொண்டு, அறிவு நூல்களெல்லாம் போதித் தருளினர். வேதாந்தக் கலையை நன்கு கற்றுணர்ந்த பொன்னம்பல அடிகளாரும் சிறந்த பேரறிவாளராகத் திகழ்ந்தனர்.

தில்லையில் திருப்பணி

சிதம்பர ஞானதேசிகர் தம் மாணவராகிய தேனி கோட்டை இலக்குமணச் செட்டியார் என்பவரைப் பார்த்துத் "திருத்தில்லைத் திருமூலாதர் திருக்கோயிலைப் பழுதுபார்த்துக் குடமுழுக்குச் செய்யவேண்டும்" என்று கட்டளையிட்டனர். செட்டியார் தம்மினத்தலைவனோடு கலந்து பேசிப் பெரும்பொருள் திரட்டிக்கொண்டு தேசிகருக்குச் செய்தியை உணர்த்தினர். தேசிகர் திருத்தில்லையை அடைந்து செய்யவேண்டிய திருப்பணிகளைச் செம்மையாகச் செய்து முடித்துப் பெருஞ் சிறப்போடு குடமுழுக்கையும் நடத்திக் கோயிலாருக்கு மீண்டார்.

கோயிலூரில் திருப்பணி

கோயிலூரில் அடியார்கட்கு அருளுரை வழங்கி அறிவுறுத்தல் போதிப்பதோடு கொற்றவாளீசர் கோயிலுக்கு

மேலுஞ் செய்யவேண்டிய திருப்பணிகளையெல்லாம் கண்டு கடத்தினர். கோயில், மடம் ஆகியவைகளுக்குச் சித்தர் மூதலியவைகளையும் வகுத்து மடாலய அறங்களும் திருக் கோயில் பூசை முதலிய வழிபாடுகளும் கண்டு கடைபெற வதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் குறைவற நிறைவேற்றினர்.

கோயிலூர்ப் புராணம்

அக்காலில் திருநெடிதபுரம் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பல நிலப்பிரதிகட்குப் புராணங்கள் பாடி அரங்கேற்றஞ் செய்துகொண்டிருந்தார். சில அன்பர்கள் அப்புலவரைக் கொண்டு கோயிலூருக்கும் புராணம் பாடுமாறு செய்விக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். தேசிகர் அவ்வாறே புராணம் இயற்று வதற்கு ஏற்பாடுகள் செய்தார். வடமொழியில் உள்ள வாறே கோயிலூர்ப் புராணத்தைப் பிள்ளையவர்கள் தமிழில் இயற்றினர். வடமொழியில் இருந்த வேதாகமச் செய்தி களும் அவ்வாறே ஆங்காங்கு அமைக்கப் பெற்றன.

"அலமுந்த ராமலிங்க தேசிகன்போ
அருள்பெற்றோன் சுருண ஞான
மேயலரு ஞாலநே சனவன்பால்
அருள்பெற்ற வீசக்கஞ் சன்ற
பாயபுகழ்த் தெய்வாதே சென்மொழிய
உயர்மணிப் பதிப்புராணம்
வாயுமையப் பிள்ளைதமிழ் மீனாட்சி
சுந்தரமே வகுத்திக் கோனே."

வேறு

"நிகழ்தருசின் மயரூப நெய்வாதே சென்மொழிய
இகழ்தருதல் இலாதவன்சொல் ஏற்றபெரும் புண்ணியத்தால்
புகழ்தருமிப் புராணத்தைப் பாடினேன் புன்மையெலாம்
அகழ்தருபே ரறிவுதலை யாவடைத் தனன்பாலும்."

என்னும் சிறப்புப்பாயிரப் பாடல்களால் இப் பெரியார் அப்பெரும் புலவரைக்கொண்டு புராணம்பாடச் செய்தது இனிது விளக்கமாம். புராண் அரங்கேற்றம் இனிது நடை பெற்ற முடிந்தபின் தேசிகர் பின்னவளுக்குத் தக்க வரதன்கொடை வழங்கிப் பெருமைப்படுத்தினர். தேசி கரின் பெருங்கொடையைப் பெற்ற பெருப்புலவர்,

"சோர் கழுசீர் தேம்பர தேசிகன் செய்கையால்
ஏர் தரவரும் செம்மை நிறையென் னெஞ்சகத்தே
சேர்ந்திட் தாமணி என்கோ இரண்டு நிதியமென்கோ
கூர் தரவறி வாளன் பேரு ளாயினதே."

என்னும் செய்யுளைப் பாடித் தமது நன்றியறிவுடைமை யைப் புலப்படுத்திக்கொண்டார்.

இலட்சண விருத்தி

இலட்சண விருத்தி என்பது வேதாந்த நூல்களில் ஒன்று இப் பெரியார் அந்நூலில் 60க பாடல்கள் கொண்ட தமிழ் நூலாக இயற்றியருளினர்.

"ஒருமைரு கூத்தாடி பலவே டத்தை
உறதலைவ னாமாறி பலவே டங்கொண்
டாருயி ரதனின்வெளிச் சமே யாதி
அயர்வனவின் உட்சமே தூதி மற்ற
சிலநாளு ழுத்தியிலில் வாணி நேரும்
நீரான மலச்செயலைக் கண்டு கொண்டு
சேருமதற் கின்னிபமாய்ச் சாட்சி யாதித்
திகழ்நாரா யணனைசென் றறிவாய் வைத்த."

என்பது அந்நூற் பாடல்களில் ஒன்று.

நிறுநி

இவ்வாறு அருமையெரும் பணிகள் பல செய்துகொண்டு மெய்ஞ்ஞானச் செல்வராக விளங்கிய இவர் கலி சகாவரை-ச்

குச் சரியான சாத ஆண்டு ஆடித்திங்கள் சுக்கிலம் சனிலே வீடுபேற்றையடைந்தார். பொன்னம்பல அடிகள், இராமசாமி ஞானதேசிகர், கோடக கல்லூர்ச் சுந்தர அடிகள் முதலான பெரியோர்கள் பெரியாரின் உடலைச் சமாதி வைத்தனர். அப்பொழுது எண்ணற்ற அடியார்கள் அங்கு போக்க சமாதி விழாவைச் சிறப்பித்தனர். அப் பொழுது கண்டனர் முத்தாரம அப்பா என்பவர்,

"சிருமருவு மாசித் தைம்பதொள் ளுமாண்டு
செறிதாது வருடத்தினில்
சிகழ்டட மாதமதி சான்கான தேதியும்
செறியமர பட்சத்தனில்
சினசோம வாரமே காதசி சோகணி
சிகழ்தலை லக்கினத்தே
தேனைகர் அதனில்வக் தவதார மாகிவே
தென்கழனி யம்பதியினில்
குருசேத குமுத்து சாமலிங் கேசனருள்
கொண்டுமே அடியவர்க்குக்
கூறுன அப்பதி இருத்துபின் அதற்சகம்
குணமாக அருளுகின்றோன்
கோதிலரு ணாசல சுவாமிகட் கினியசுத்
குலமுடைய சூடாமணி
கொண்டலென வேபொழியும் மண்டலத் தாவணிசர்
குழுவெலாம் பணியவல்லோன்
மருமருவு கொற்றவான் சன்கல் சிருவெல்லை
மாதவன் கருணையாலே
மதிமன்னர் சிதிமன்னர் கலிமன்னர் புலிமன்னர்
வந்துபணி சென்றதிர்ன்
மங்களம தானமட வாலயசி வாலயம்
மலர்வனஞ் சந்திரமுதல்
மலர்வான புவனத்த னைகளுண் டாகவே
வந்தகா ணலவன்னலாம்

மருமருவு மலர் குணிபழுதல் சான்குமே
அழகான திருவருவமாம்
அறிவான கல்வியெல் லம்பொதுமை சீர்த்திமை
அரவதுக் கடலமுடபா
அத்தனித சீச்சய சிதம்பர சுவாமியென்
குச்சுக் குருஞ்சி
தண்டபுரி பூரண தாசித சிற்சொருபம்
குகிறுச் அதிசயரிதா."

என்றுந் செய்யுளைப் பாடினர். இப்பெரியார் தம் குரிய ராகிய முத்துராமலிங்க ஞானதேசிகர் மீது.

"வானவ ரசமர் தொடர்பிலுல் உலகோர்
வழுத்தறம் வன்னிலைக் காண
வானவ ரத்ன மணியற முகனை
மாசற கொற்றவான் இறையை
வானவர் முதலவன் பாலன வலவன்
வணக்குரல் திருவெலை மாலை
வானட நதனு முத்தரா மேச
வன்னலை வணக்கிவாழ்த் திடுவாம்
சித்தரும் பரசாச்ச்ற
சிவிருக் கழலி தன்னில்
பித்தனும் வினையும் குளப்
பொருள் உருவா புற்ற
முத்தனும் முத்த ராம
முதல்வன்ச் சமல பாதம்
சித்தமும் தொழுது வாழ்த்தி
செஞ்சினில் இருத்தல் செய்வாம்."

என்றுந் செய்யுட்களை இயற்றியிருக்கிறார்.

5. ஞானசித்தர்

தோற்றம்

தென்பாண்டி நாட்டிலே திக்கெலாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்திலேயுள்ள ஆழ்வார்திருநகரி என்னும் திருக்குருகூரிலே இவர் கொல்லம் கஅசுஉ-ஆம் ஆண்டுக்குச் சரியான பிரபவ ஆண்டு மார்கழித்திங்கள் விசாகநன்னாளிலே பிறந்தார். தந்தையார் பெயர் முத்துச்சாமியார் பின்னர்; தாயார் பெயர் சிதம்பர வடிவம்மையார். ஞானசித்தர் பிறப்பதற்கு முன்னரே அறமுகப்பெருமான் முத்துச்சாமியார் பின்னரின் கனவில் தோன்றி 'உனக்கு இன்னாளிலே குழந்தை பிறக்கு'மென்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறே ஞானசித்தர் பிறந்தார்.

ஞானசித்தர் பெருமை

அக்காலத்தில் பாஞ்சாலங்கோட்டையிலே இருந்த மகாராசசாமி என்னும் பெரியவர் சித்தர் பிறந்திருக்குஞ் செய்தியைத் திருவருளால் உணர்ந்து சித்தர் பிறந்தவின திருமனைக்குச் சென்றார். முத்துச்சாமியார் பின்னரைப் பார்த்து, "அருந்தவமுடையீர்! நும்மில்லிற் குழந்தையாகப் பிறந்துள்ளவர் பேரருள்மிக்க அருண்ஞான சித்தரேயாவர். இவருடைய பெருமைகளை எம்முடைய ஆசிரியர் எனக்கு விரிவாக உரைத்திருக்கிறார். இக் குழந்தையினை நீர் அறமுகப்பரமன் என்றே கொள்வீர்," என்று கூறிக் குழந்தையைப் பார்த்து வணங்கிச் சென்றார்.

மற்றொரு பெரியார்

சிலகாலஞ் சென்றபின் வேறொரு சிவயோகியார் சித்தர் பிறந்துள்ள திருமாளிகைக்கு எழுந்தருளினர். சித்தக் குழந்தையைப் பார்த்துப் போற்றி வணங்கினர். பிறகு தாய்தந்தையர்களைப் பார்த்துச், . "சிவஞானச்

செல்வங்களே! இக் குழந்தைக்கு மூன்றாவது அகவையில் ஒரு தொல்லையுண்டாகும்; அது நீங்கும் பொருட்டு ஓர் அரசமரத்தினுடைய வேர்ப்புதரில் நீங்கள் உங்களுடைய கைகளால் வைத்து எடுத்து வருவீர்களாயின் குழந்தைக்கு நோக்கிய தொல்லை நீங்கும். பதினொரு நிழமை (வாரம்)கள்சென்ற பிறகு அப்புதரில் இருந்து வெளிவரும் பாம்பு ஒன்று உங்களுடைய குழந்தையைத் தொட்டுச் செல்லும்," என்றுகூறி நீங்கினர். ஆண்டுகள் மூன்று சென்றன. சித்தர்க்கு உடல் இளைத்தது. மூன்று பெரியோர் மொழிந்ததை எண்ணினர் பெற்றோர்கள். திருக்குருகூர் ஆண்ட பெருமான்பிள்ளை மண்டபத்தின் அண்மையில் உள்ளதும் அவ்வூராரால் வணங்கப்பெற்று வருவதுமான அரசமரத்தை வலம் வந்து புதரில் குழந்தையை வைத்து வைத்து எடுத்துக்கொண்டிருந்தனர். பதினொன்றாவது நிழமையில் சிறப்பான திருமுழுக்குகள் வழிபாடுகள் முதலியன செய்து குழந்தையை வேர்ப்புதரில் வைத்து விட்டுப் பெரியோர்கள் சேய்மையில் நின்றனர். நெடுங் காலமாக அம் மரப்பொந்தில் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு பெரிய பாம்பு படத்தை விரித்துக்கொண்டு அக்குழந்தை யின் அண்மையிற் சென்றது. பெற்றோரும் அங்குக் குழுமி யிருந்த மக்களும் அப் பாம்பினைக்கண்டு அஞ்சியோடினர். அப் பாம்பு சித்தக்குழந்தையை மூன்றுமுறை முத்த மிட்டுச் சென்றது பாம்பு மறைந்தவுடன் தாய் தந்தையர் மகிழ்ச்சி பூண்டவர்களாய்க் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்றனர். இவ்வியற்கை நிகழ்ச்சியைக் கண்டோரனைவரும் மகிழ்ச்சி பிக்கடைந்தனர்.

கல்வி

முருகப்பெருமான் கனவில் தோன்றிய காலத்தில் 'நினக்கும் பிறக்கும் குழந்தை சித்தன் என்னும் பெய

குடைய ஞான' என்ற திருவாய் மலர்ந்தருளினமை யாலும் பலவகையான புதுமைச் செயல்கள் குழந்தையின் பாற் காணப்பட்டமையாலும் காப்புக்கட்டையும் சித்தருக்குக் கண்விழிப்பிக்கி செய்விக்கற்கு முயற்சி செய்யவில்லை. இங்ஙனமே சித்தர் அதனை பற்றையடைக்கார். சித்தர் ஐந்தாண்டை யடைந்திருக்கும்போது கர்நிமதி என்னும் பெயருடைய பெண் குழந்தை யொன்றைச் சித்தருருக்குத் தங்கையாக இத்தரையில் தோன்றியது. சித்தர் திருச்செந்தின் மாகருக்குச் சென்றார். முருகக்கடவுளுடைய திருவருளால் எல்லாக்கலைகளையும் ஓதாதுணர்ந்தார்.

முருகன் அருட்பா

தெய்வத் திருவருளுடையார்க்கு இவ்வுலகில் அரிய தொன்றில்லையன்றே? முருகப்பெருமான்மீது முருகன் அருட்பா முதலிய கிபத்தகு செய்யுட்களைப் பாடத் தொடங்கினர்.

நூல்கள் இயற்றல்

மிகு இளம்பருவத்திலேயே சித்தர் நூல்கள் இயற்றத் தொடங்கிவிட்டார். பக்தி வைராக்கியத்தினையும் ஞானவைராக்கியத்தினையும் இனிதளிக்கி, "ஞானபண்டோரா நயம் ஆதிரம்," என்னும் சிறந்த நூலை இயற்றினர். அந் நூலை அறிஞர்கள் அனைவரும் ஆராய்ந்து பாராட்டினர்.

புலவர் பூலவிக்கப்பிள்ளை

அவ்வூரிலே பூலவிக்கப்பிள்ளை யென்னும் பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். சித்தருடைய உண்மைத் தன்மையை அவர் உணர்ந்தவரல்லரிலை. 'இவருக்கு ஏன் இவ நூல்களைப் போதித்த ஆசிரியர் ஆகிட

வேண்டும். அவ்வாறு ஆலோசனைகள் நமக்கு மிகுந்த புகழுண்டாகும்' என்று எண்ணியவராய்ச் சித்தரையழைத்து, "நான் உனக்குக் கல்விப்பயிற்சி செய்விக்கிறேன்; பெரும் புலவனாக மிளிரலாம்!" என்று கூறிச் சில நூல்களையுங் கற்பிக்கலானார். ஆனால் சித்தரிடஞ் செயற்கருஞ் செயல்கள் பலவற்றைக்கண்டதும் தம்முடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டார். பொறுமையோடு இவரிடம் சில நூல்களைக் கேட்ட சித்தரின் பொறுமையை போற்றத் தக்கதன்றே?

பொதிகைமலைக்குப் போதல்

சித்தர் தாய்தந்தையரைக் செய்தியறிவிப்பாமலே வீட்டைவிட்டுப் புறப்பட்டு நாளைசிலவினைக் காண விரும்பினர். புறப்பட்டுத் திருக்குற்றாலத்தை அடைந்தார். ஆங்குச் சண்பகாடவியும், சித்திரகங்கையும், முக்கால உணர்ச்சியையுந் தரும் தருவும் ஒளி மரமும் உரோம விருக்கமும், மேதிவிருக்கமும், சாயாவிருக்கமும், சல்லிய காணியும், சௌபாக்கிய காணியும், மிருதசஞ்சீவியும், கந்தகமடுவும், சூதக்கிணறும், சூரியகாந்தமும், சந்திரகாந்தமும், அயக்காந்தமும் கருநெல்லியும் மற்றும் பலவகையான அரியபொருள்களனைத்தும் நிறைந்த திரிகூட மலையின் கண் ஒரு குகையிலே அமர்ந்து மரவுரி தரித்துக் காய்கனி கிழங்கு முதலியவைகளை யுண்டு மனமுனையையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தவஞ்செய்தார். அம்மலையில் எழுந்தருளிய அகத்தியனுக்கு அகவல்பாடிப் போற்றினர். ஏனைய சித்தர்கள் எல்லோரையும் அந்தாதியால் ஏற்றினர். ஆங்கிருந்த அருந்தவமுனிவர்கள் பலர் வந்து இவரைக் கண்டு சித்தநாதர் எனப் பெயர் வழங்கி அளவளாவிச் சென்றனர். அகத்தியர் அருள்பெற்று அவருடைய அருள் நோக்கப்படி அங்கிருந்து புறப்பட்டார்.

பச்சைமலைக் குருநாதன்

பச்சைமலைக் குருநாதன் என்பவர் சித்தர்க்குத் திருவானைக்காவில் அருள் புரிந்தனர். மேலும் சித்தரைப் பார்த்து, "அன்பனே! வானிலே பறக்கவும் மண்ணிலே தவழவும், வானவர் வணங்கவும், மற்றொருவர் உடலிலே புகுதவும், மற்றவர் உள்ளத்திலே நினைத்ததை உரைக்கவும், மோனவுரிமை எழுப்பவும் மற்றும் இத்தகைய சித்திகளெல்லாம் கைவரவும் பெற்றதும் இவைகளெல்லாம் ஞான சாதகனது அடித்தகளுக்கும் இணையாகமாட்டா. நம் முடன் பச்சைமலைக்கு வந்து ஞானபோத நிலையைப் பெற்றுக்கொள்வாயாக! உனக்கு அருள்புரியுமாறு செந்திற் கந்தன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறான்," என்றுகூறி உடனழைத்துக்கொண்டு சென்றனர். போதிக்கவேண்டிய வைகளையெல்லாம் போதித்தனர். இதனால் மகிழ்ச்சியடைந்த சித்தர் பச்சைமலைக் குருநாதனைப் பலவாறு போற்றிப் பாடினர். பிறகு பச்சைமலைக் குருநாதன் சித்தரைத் தாய்தந்தையர்களிடஞ் செல்கவெனக் கட்டளையிட்டனர். சித்தர், தம் குருநாதனின் கட்டளைப்படி புறப்பட்டுத் திருநெல்வேலியை அடைந்தனர்; குறுக்குத் துறையில் முருகனைப் போற்றிக்கொண்டு சிலநாள் தங்கியிருந்தனர்.

பெற்றோர் சித்தரைக்காண்டல்

சித்தரைப் பிரிந்தபடியினால் பெற்றோர் மிகுந்த மன வருத்தம் அடைந்து சித்தரை எல்லாவிடங்களிலுந் தேடிப் பார்த்துக்கொண்டிருந்தனர். சித்தரைத் திருநெல்வேலியில் குறுக்குத் துறையிற் கண்ட சில செய்தியைத் தாய் தந்தையர்க் குணர்த்தினர். தாய் தந்தையர் குறுக்குத் துறையை அடைந்து சித்தரைக் கண்டு மகிழ்ந்து தம்மோ டழைத்துக்கொண்டு சென்றனர்.

ஆற்றூரில் திருப்பணி

சித்தரின் அருள்பெற்ற சுந்தர சாத்திரிகள் என்பார் "ஞானசித்தோபாக்கியானம்" என்னும் பெயருடைய நூல் ஒன்று இயற்றியதுடன் சித்தருக்குத் தொண்டு பூண்டு நின்றார். அவர் தம்முடைய ஊரான ஆற்றூருக்குச் சித்தரை அழைத்துக்கொண்டு சென்றார். சித்தர் அங்கு ஒரிற் சிறிதுகாள் தங்கியிருந்தார். அவ்வூரில் எழுந்தருளிய சோமேசப் பெருமானுக்குத் தேர் ஒன்று செய்விக்க எண்ணினர். அவ்வூரிலும் அடுத்த ஊர்களிலும் பிடியரிசிக் கலயங்கள் போட்டுப் பொருள்தொகுக்கத் தொடங்கினர். பொறுமைப் பேழைகளாகிய முக்காணி வாசிகள் சிலர் சித்தரின் செயலைக்கண்டு பொறுமைப்பட்டு இடையூறு செய்தனர். சிவத்திருப்பணிக் கிடையூறு செய்யவே மிருந்த சினமுண்டாகியது சித்தருக்கு,

"முக்காணி தனிலமரும் மாந்தர்களே கீவிர்
மூவுலகுமணைச் சிவனடியார் தம்மைமொழி யாதீர்
இக்காணி யித்திருவும் இருப்பதினி இல்லை
என்செயலாம் ஆரெழும்மூர் எருவதுக் நிண்ணம்
எக்காலத் திறுமமடியர்க் கிடுக்கண்விளை கின்ற
ஈனர்களுக் கறிவுறுத்தும் எக்காலோ மேசன்
பக்கல்வளர் தருசோம சுந்தரியின் அருளைப்
பாலருக் கருள்செய்யும் பரமேசற் குருவே"

என்னுஞ் செய்யுளைத் திருவாய் மலர்ந்தருளினர். சின்னாளில் அவ்வூர் ஆற்றப்பெருக்கால் கெடுற்றது. சீர்ப்பெருக்கால் பொருளிழப்புந் தொல்லையுமடைந்த பலர் சித்தர் மக்கள் தமது தொல்லையினை அரசினருக்குத் தெரிவித்துக் கொண்டனர். அரசினர் ஆற்றாளைத் தனிப மற்றைய ஊர்கட்குக் கல்லாம் உதவி செய்தனர். சித்தர் அவ்வூர்விட்டுப் பலவூர்களிலுஞ் சுற்றிக்கொண்டிருந்தார். தாபாரும் இறையடி எய்தினர்.

வேண்டி

சித்தர் உபதேசமே புரியாத வேண்டுகள் செய்ய விரும்பினர். புவனேசுவரியைத் தமது வழிபடு கடவுளாகக் கொண்டிருந்தார். பொருளாதாரத்தைகளில் முதலாவது வேண்டுகளைச் செய்யத்தொடங்கினவர், தூண்டு தோறும் செய்துகொண்டேயிருந்தார். இவர் தெய்வத் திருவருள் கைவரப்பெற்றவராகலின் இவரிடத்திற் பல புதுமைகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. ஓரிடத்தில் தங்காது தூத்துக்குடி, நெல்லை, நெல்லைக்குற்றாலம் முதலிய பல இடங்களுக்குச் சென்று அன்பர்களுக்குத் திருவருள் செய்து கொண்டும் தெய்வங்கள்மீது பாமாலை பாடிக்கொண்டும் இருந்தார்.

வாலமஸ்தான்

இவர் மதுரையை நாடிச் சென்றுகொண்டிருந்தபோது கொம்மைமலைப்பட்டி என்னும் ஊருக்கெழுந்தருளினர். அங்கிருந்த வாலமஸ்தான் என்பவரைக்கண்டு அளவளாவிக் கொண்டிருந்தார். வாலமஸ்தான் இவரைப்பார்த்துத் "தங்கட்கு ஆசிரியர் யார்?" என்று உசாவினர். அதற்கு இவர்,

"அலைக்கும் திருவருள் பெற்றுளை உள்ளத்தன் அன்புலிஞ்சிக்
கலைக்கப் பிரபஞ்ச மாயையெல் லாம்வினைக் காடடக்க
ஒலைக்கப் பெருமலம் ஓடச் சிவானந்த ஓதம்உலட்
டெலைக்கத் திருவைதர் தாள்பச்சை மாமலை என்னப்பனே.

தரிக்கக் கருத்தர் தவமும் பொறையும் தாமெடுவா
மரிக்கக் கருணையும் தத்துதல் வாமல் மலரடிகள்
பரிக்கத் தலையும் பருகிட வின்பமும் பாழும்வினை
இரிக்கத் திடமுந்தர் தாள்பச்சை மாமலை என்னப்பனே."

என்னும் பாடல்களைப் பாடினர். பிறகு சித்தர் மதுரையை அடைந்து அக்கயற் கண்ணிக்கும் சோமசுந்தரப் பெருமா

லுக்கும் பாமாலைகள் சார்த்தினர். அங்குச் சிலநாள் தங்கி யிருக்கையில் முத்துச்சாமி முனிவர் என்பவர் சித்தரிடம் வந்து செபஞ்போர் செய்தார். பிறகு சித்தர் திருவாலங் காலையடைந்து நான்காவது வேள்வியை இயற்றத் தொடங் கினர். மதுரையிற் செபஞ்போரிட்ட முத்துச்சாமி முனிவர் என்பவரும் அங்குவந்து வேள்வியிற் கலந்துகொண்டார்.

செத்தாரை எழுப்புஞ் சித்து

சித்தர் வேள்வியைச் செய்துகொண்டிருக்கையில் சாத்திபுரம் என்னும் ஊரில் இருந்த சுதரிசனம் ஐயர் என்பவருடைய குழந்தை பாம்பினல் கடிக்கப்பட்டு இறந்து போய்விட்டது. இரண்டு நாட்கள் வரை மருத்துவஞ் செய்தும் அக் குழந்தை பிழைக்கவில்லை. குழந்தையை எரித்து விடுவதென்று முடிவு செய்தனர். அச் சமயத்தில் அந்தணன் ஒருவன் ஓடிவந்து வேள்விச் சாலையில் வேள்வி செய்துகொண்டிருந்த சித்தரிடம் அச் செய்தியை உரைத் தான். சித்தர், "தேவியின் திருவருள் உளதேல் யாவும் நலமாம்," என்று கூறினர். அண்மையில் இருந்த சுந்தர சாத்திரி என்பவனைப் பார்த்து, "நீவிர்போய் அக் குழந் தையைக் கண்டு பிரம்பினல் ஓர் அடி அடியும், அடித்த விடத்தில் கடிக்குமானல் அக் குழந்தையை இவ்விடத் திற்குக் கொண்டுவாச் செய்க," என்று கூறினர். சாத்தி ரிகள் இடுகாட்டிற்குச் சென்றனர். தீயில் வைப்பதற்கிருந்த குழந்தையைப் பிரம்பினல் ஓரடி அடித்தார். அடித்தவிடந் தடித்தது. சித்தர் திருமுன்பு கொண்டுவரச் செய்தார். சித்தர்,

"நச்ச நாவிடம் நாச மாகிட
கண்க ருன்புவ னும்பிகை
இச்சு தன்னெழுந் தலவி டும்படி
யோ டப்பதம் உண்மையேல்

பச்சை மாமலைப் பண்ணை வன்பரி
வேடை மக்களுண் பான்மையின்
சீச்ச பத்தினை உலகை வாக்கண்டு
சினேப்ப தற்கையம் இல்லையே."

என்ற பாடலைப் பாடினார். குழந்தை உயிர்பெற்றெழுந்தது. இவ்வியற்கை செயலைக் கண்கூடாகக் கண்டவர்கள் பலரும் சித்தர் பெருமையை வியந்து புகழ்ந்து பாராட்டிக் கொண்டாடினர்கள். முத்தச்சாமி முனிவர் சித்தர்மீது பஞ்சாத்தினைப் பாமாலை பாடிப்பரவினர். வேண்டியை முடித்த பின் சித்தர் அங்கிருந்து புறப்பட்டு மதுரை சுருளிமலை முதலிய இடங்கட்குச் சென்றார். சுருளிமலையில் இருந்த கருணாநந்தர் என்பவர் சித்தரைக் கண்டு அளவளாவினர். சித்தருடைய உடலொளியைக்கண்டு வியப்படைந்தார். "அவ்வாறு ஒளிபுண்டாவதற்குக் காரணம் யாது?" என்று சித்தரைக் கேட்டார். அதற்குச் சித்தர்,

"நிக்கள் மூடியின் நிருவரு வோத்தினைக் கதிப்போம்
மக்கை மாச்சுவைத் தாவென மனநிலை மதிப்போம்
கக்கை யாடிதேற் காலையில் தூலகம் பதிப்போம்
பக்க மேதெமக் காதலால் உடல்பன பளப்பே."

என்று கூறினர். மேலும் அவருடைய ஐயங்களையும் போக்கினர்.

சுருளிமலையில் வேண்டி

ஐந்தாவது வேண்டி செய்யவேண்டிய சமயம் வந்து அடுத்தது. அன்பர்கள் பலர் சுருளிமலைக் குகையடியில் வின்றும் பெருகிவரும் அருவி வீழ்கிற இடத்திலே வேள்விச்சாலை அமைத்துச் சித்தருக்குச் செய்தி தெரியப் படுத்தினர்கள். சித்தர் வேள்விச்சாலைக்குப்போய் ஆக வேண்டிய செயல்களைச் செய்யத்தொடங்கினர். மின்னல் வாளத்திலே இடிபோன்ற முழக்கத்துடன் புலியொன்று

தோன்றியது. அங்கிருந்தோர் அஞ்சித் தலைதெறிகோலமாக ஓடிக்கொருவர் ஒட்டம்பிடித்தனர். சித்தர் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

"உலகிலெப் பொருளுமுன தருளுமு
மென மறைதன் ஓலமிடும் உண்மையதனாப்
பலதரமும் எதிருருளும பசைமா
மலைமுனிவர் பாவித்த வண்ணம்மறவேன்
சிலைதனை வேதி வருடித்த
வல்லியமும் தினதுவடி வென்னசினவேன்
கலைபலசொல் புவனும்பி கைத்தேவி
யெனினது கருணையெவ் விதமாமதோ."

என்னும் பாடலைக் கூறி வேள்விச் செயல்களிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனர். காலையில் மக்கள் திரும்பினர். இரவில் புலிமுழக்கங் கேட்டவிடத்திற்குப்போய்ப் பார்த்தனர். அப்புலி வாய்பிளந்து இறந்து கிடந்தது. அன்பர்கள், "இச் செயல் புவனும்பிகையின் செய"லென்று கூறி வியந்து மகிழ்ந்தனர். அப் புலியின் தோலை உரித்துப் பக்குவஞ்செய்து சித்தர்க்கு இருக்கை (ஆசனம்) ஆக வழங்கினர். வேள்வி முடிந்து சித்தர் அவ்விருந்து புறப்பட்டார்.

பலவிடங்கட்குச் சென்றுதல்

கோம்பை உத்தமபாளையம் முதலிய இடங்களுக்குச் சென்றார். மக்கமீராலெவ்வைவாவுத்தர் என்பார் சித்தருக்கு ஆளாகி அடிமையானார். அவர் பொருட்டுக், "கலி ஞானதீபம் ஆயிரம்" என்னும் நூலை இயற்றினர். பிறகு மேலும் பலவிடங்கட்குச் சென்றார்.

ஆஷாடபூதி

சுப்பிரமணியபிள்ளை என்னும் பெயருடைய ஆஷாட பூதி ஒருவர் சித்தரோடு சுற்றிக்கொண்டிருந்தார். அவர்

சித்தர் அடைந்துள்ள பெருமைகள் எல்லாம் அவரிட முள்ள தெய்வத்தன்மை பொருந்திய மருந்திலுள்ளான் என்று தவருன முடிவு செய்தார். சமயம் பார்த்துச் சித்த ரைக் கொன்றுவிட்டு அரிய மருந்தினைத் தாம் கைப்பற்றி விடவேண்டும் என்று திட்டம்போட்டார். சித்தருக்குத் தொண்டு செய்பவரைப்போல நடித்துக்கொண்டு திரிந்தார். ஒருநாள் குன்றிமணியளவு லிங்கத்தைப் பொடிசெய்து பாலிற்கலந்து சித்தருக்குக் கொடுத்துவிட்டார். அதனைச் சித்தர் உண்டுவிட்டார். இச்செய்தி சிறிது நேரத்திற்குள் அங்கு உள்ளவர்களுக்குத் தெரிந்து அவர்கள் உள்ளம் பதறி வருந்தினர். சித்தரோ,

"அன்றுவிடந் தனையருந்தி அகிலமெலாம்
ஒக்கலைத்த அரசே! நாயேற்
கின்றலைவந் தையிட்டான் என்செய்வேன்
முன்னுனில் இயற்றுங் கர்மம்
ஒன்றன்றி எதுமுடியா தெனதுதெளிவென்
குபிஞமென் னுடையாய் என்னுன்
சென்றடலம் விழுப்பெறுவ தென்சொல்சித்தர்
குலயமுஞ் செய்விப் பேனே."

என்னும் பாடலைக் கூறிவிட்டு பாதேசர் தொல்லையும் இல்லாது இருந்தனர். பலரும் இரும்பூதலடைந்தனர். பின்னர்ப் பலஞர்கட்கும் போய் ஞர்களுள்ள அன்பர் கட்கு அருள் செய்துகொண்டு இளம்பள்ளி நகர் என்னும் ஊருக்கு எழுந்தருளினர்.

தொழுநோய் போக்கல்

அவ்வூரில் ஒருவன் தொழுநோயால் பீடிக்கப்பட்ட வனுய் ஊருக்குப் புறம்பே இடந்த வருந்திக் கொண்டிருந் தனன். அவனுடைய நிலைமையைப் பற்றிக் கேள்விப் பட்ட சித்தர் அவனுக்கு மருந்து கொடுத்துச் சுகப்படுத்

தினர். அவ்வூர்ப் பெருநிலக்கிழாரிடமே ஓர் அறுவலில் அமர்தற்கும் ஏற்பாடு செய்தனர். சித்தரின் அருட் செயலைக் கண்டவர்கள் மிகுந்த வியப்படைந்தனர்.

மழை தடுத்து மகம் புரிதல்

ஆகுவது வேள்வி செய்ய வேண்டிய காலம் நெருங்கியது. அன்பர்கள் பலர் பொருள் உதவினர். அகண்ட காவிரியோடு மற்றாறுகளும் சேருமிடத்திலே வேள்விச் சாலையமைத்து வேள்வி தொடங்கினர். விண்ணைக்கும் முகில்கள் பரவிப் பெருமழை பெய்யத் தொடங்கியது. சித்தர்,

> "எத்தனையோ தும்பம் இயாகமதற் கெய்தியதிங்
> கத்தனையும் போக்கியரு ளம்பிகையே—மெத்தவடர்
> சத்தமே கத்தைத் தடுத்தெனது யாகத்தை
> மித்தநி யியற்றினைவப் பாய்"

என்று பாடினர். அவ்வளவில் மழை நின்றுவிட்டது. வேள்வி இனிதாக முடிந்தது.

சுக்கல் கழிச்சல் தீர்தல்

பிறகு அன்பர் சிலர் வேண்டுகோளின்படி சித்தர் திருச்செங்கோட்டிற்குச் சென்றார். அப்பொழுது அங்கு சுக்கல் கழிச்சல் நோய் பரவியிருந்தது. அந்நோயால் மக்கள் படுந்தொல்லையினை அன்பர்கள் பலர் சித்தருக் கறிவித்தனர். சித்தர் பரிமாதடனுறைய பரமனை (அர்த்த நாரீசுவரை) வணங்கி,

> "திருச்செங்கோட்டத்தா திகழ்சுக்கை பாகத்
> திருக்கையைத் தேயருளும் ஈசா—கருப்பால்
> கலங்குறுநர் மாந்தர் கழிவிடநோய் நீர்த்து
> கலங்கினைச் செய்வாயிக் கால்"

என்று பாடினர். அக்கோப் வினைவில் அவ்வூரை விட்டு அகன்றது. சித்தர் திருச்செங்கோட்டுப் பதிகம் பாடினர்.

பகைவனுக்கருளல்

முன்பு சித்தரைக் கொல்ல முயன்ற ஆதொடபூதி மீண்டும் திருவருட் சித்தர்பால் தொண்டனாக வந்து சேர்ந்தான். சித்தரிடம் இருந்த சிறந்த மருந்துகளை யெல்லாம் களவு செய்து மெதுவாக அப்புறப் படுத்தினான். இச்செயலையறிந்த அன்பர்கள் இவனை அரசாங்கத்தின் மூலமாகத் தண்டிக்கவேண்டுமென்று எண்ணியவர்களாய் ஊர்க்காவலரிடம் (போலீசாரிடம்) ஒப்புவிக்க முயன்றனர். இதனையுணர்ந்த சித்தர்,

"இன்னசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்று இயம்பி அப்பொல்லாதனை அழைத்து அவனுக்கு வேண்டியன கொடுத்து, அவனுடைய தீவினைக்கு இரங்கி அவனை அவனுடைய இருப்பிடத்திற்கு அனுப்பிவைத்தார்.

மழைபெய்யச் செய்தல்

குமரமங்கலம் என்னும் ஊரில் சித்தர் ஒரு பதிகம் பாடினர். அதில் இன்றைக்கே மழை பெய்யும் என்று இயம்பினர். இதனைக் கேட்ட சிலர் நம்பாது எள்ளி நகையாடித் திரிந்தனர். இதையுணர்ந்த சித்தர் எள்ளி நகையாடினரொடும் அவைக்கணிருந்து பதிகத்தை அரங் கேற்றினர். அரங்கேற்றும்போதே பெருமழை பொழியத் தொடங்கியது. எள்ளி நகையாடினர் நாணிச் சென்றனர். பிறகு சித்தர், திருக்கருவூர், திருஅனிசி, சென்னிமலை காங்கேயம், சிவன்மலை முதலிய பதிகட்குச் சென்று பதிகம் பாடினர்.

நூல்களை வெளியிடல்

சித்தர் திருவாய் மலர்ந்தருளிய நூல்களை அன்பர்கள் பலர் திரட்டித் தேவாரம் என்று பெயர் கொடுத்துச் சிதம்பரத்தில் வெளியாக்கி விட்டனர். இதனை உணர்ந்த சித்தர், "மூவர் பாடிய பாடல்களே தேவாரமாகும். நான் பாடிய பாடல்கள் எவ்வாறு தேவாரமாகும்? இவ்வாறு வெளியிடுவது தவறாகும். பலரும் நம்மை இழித்துரைக்கத் தொடங்குவார்கள்" என்று கூறி அவர்களுக்கு அறிவு புகட்டினார்.

பொருளையும் நோயும்

அந்நாளில் அங்குச் சரவண பிள்ளை என்னும் பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். அவர், சித்தருடைய நோக்கப்படிதான் இந்நூல்கள் தேவாரம் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும் என்று எண்ணினார். பலவாறு இழித்துரைத்துக் கொண்டு திரிந்தார். அவருக்குப் பெருங் காய்ச்சல்நோய் கண்டுவிட்டது. எத்தனையோ மருத்துவங்கள் புரிந்தபோதிலும் அந்நோய் குணம் பெறவில்லை. சித்தரின் பெருமையைச் செவ்வனே உணர்ந்திருந்த அன்பர்கள், "இந்நோய் சித்தரால் அன்றித் தீராமாட்டாது, அவரிடம் சென்று வணங்கி நோயின் கொடுமையைக் கூறி வேண்டுங்கள்; அவரைக் கண்டாலே நோய் நீங்கிவிடும்" என்று செப்பினர். புலவர் நோயின் கொடுமை பொறுக்க மாற்றாது சித்தரைபடைந்து வணங்கித் திருவெண்ணீறு பெற்றனர். புலவரின் காய்ச்சல்நோய் உடனே நீங்கியது. அதனால் மிகுந்த களிப்படைந்த புலவர்,

"பூவின்மிசைப் பானருளால் அணிமாதி சித்தி
பொருந்தினீன யாடிமெய்ச் சித்தர்புகழ் வளர்க்கும்
நாவில் சித்த சலைக்கதிபன் பொருணோதி ஒழுகும்
தமிழ்நாட்டுக் குருகைகைர் தலைக்கழகு தரித்தோன்

தேவர்பொய்யா மொழிப்படியுண் டாகவே துறந்தோன்
தீப்பிணியாம் இருட்படலம் சிதையவரு மருந்தாம்
மேவுமொளி பரப்புறுமார்த் தாண்டனென வடைந்த
வெப்பநோய் அப்பாலே கப்புகலாய் நின்றேனே.''

என்பன முதலிய பாடல்களால் பரவிப் புகழ்ந்து அடியவராயினர். பின்னர்ச் சித்தர் பலவிடங்கட்கும் போய் அடியவர்கட்கு அருள்புரிந்து பிறகு சென்னைமா நகரை அடைந்தார்.

நூல்கள் பாடுதல்

சென்னையில் அமர்ந்து சுற்றுப்பக்கத்தில் உள்ள திருவொற்றியூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர், திருமுல்லைவாயில், திருக்கழுக்குன்றம், திருத்தணிகை, அச்சிறுபாக்கம், திருவிற்கோலம், திருவாலங்காடு, திருப்போரூர், திருப்பாசூர், திருமணவூர், திருவண்ணுமலை, திருக்காஞ்சி முதலிய சிவப்பதிகட்குப் போய்ப் பதிகங்கள் பாடி அரங்கேற்றினர். சென்னையிலுள்ள கமலவிநாயகருக்கும், காசிவிசுவநாதருக்கும், சித்திவிநாயகருக்கும் பதிகங்கள் பாடினர்.

ஞானசித்த புராணம்

அந்நாளில் சென்னைமாநகரில் இருந்த திருவாளர்ச் சின்னசாமிப் பிள்ளையென்பவர் சித்தருடைய பெருமைகளையெல்லாம் கேள்விப்பட்டார். சித்தரின் வரலாற்றை நன்கு உசாவியுணர்ந்து ''ஞானசித்த புராணம்'' என்னும் பெயரோடு புராணம் ஒன்று பாடினர். புராணிகர் திருச்சிற்றம்பல ஞானியார் என்பவர் ஆசிரியப்பாப் பாடிப் போற்றினர். பூவை கனியாணசுந்தரர் சக்தப்பாக்கள் சில இயற்றிப் பரவினர். மற்றும் பல புலவர்கள் சித்தர் மீது வணக்க நூல்கள் பாடினர்.

சித்தரும் திருப்புகழ்க் கவாமிகரும்

சித்தர் திருவாமாத்தூருக்குச் சென்றார். அப்பொழுது அங்கு வண்ணச்சரபம் தண்டபாணியடிகள் என்னும் திருப்புகழ்க்கவாமிகள் எழுந்தருளியிருந்தனர். அவர் சித்தர் மீது,

"ஞானசித்த மூர்த்திகளிக் சாட்டினிலை கூடியதால்
ஞானசித்தர் சாசருறல் என்றென்ற—மானசித்தம்
உன்னதொண்டர் எல்லாம் ஒருக்குதநிற் தேத்துகின்றார்
வன்னலருண் மாட்சி மதித்து.

கொலையும் புலையுமதுக் கொற்றமன்னர் சீறி
கிலேதவரூர் செந்தமிழ்ச்சீர் நீடுக்—தலையாய
வானகத் துள்ளாரும் மனிதருக்கூ டிக்கழிப்பார்
ஞானசித்தன் ஆடல்செயு சான்.

மாகதநி சிக்கிறைவன் மாமலர்த்தாட் கன்பாச்
சாதபத்தி யாற்பதிகஞ் சாத்தி—லிாதபயன்
பெற்றயர்ந்த ஞானசித்தன் பீடும் பெருக்தகவும்
சற்றனர்ந்தேச சேயறிவர் சான்.

ஞானசித்த ஞமொருவன் கல்லெர் எடுக்குலவி
வானகமும் பூதலமும் காழ்வதனுக்—கானதமிழ்ப்
பாமாரி பெய்ததனைப் பார்ப்பதென்றன் வேட்கையென்றல்
சாமாரி ஆனையுண்மை சான்."

என்று பல பாக்களைப் பாடினர்.

வேண்டியும் மழையும்

பிறகு திருவிற்கோலம் என்னும் ஊருக்குச் சென்று தமது ஏழாவது வேண்டுகோளை அங்கு முடித்தபோது பல காலம் மழையில்லாமலிருந்த அவ்வூரில் பெருமழை பொழியவுஞ் செய்தார். அங்கு கடைசி வேண்டுகோள் திருச்சிற்றம்பல ஞானியார், பூவைச் செங்கல்வராய முதலியார், மாயூரம் திருட்டிணை ஐயர், சந்தப்புலவர் தங்கவேலுப்

பின்னே, வண்ணக் களஞ்சியம் காகவிக்க முனிவர், கடலம் சிக்காரவேலு முதலியார், அட்டாவதானம் பூலை கனியான சுந்தர முதலியார் முதலிய பல அறிஞர்கள் சித்தர்மீது நூல்கள் இயற்றி அரங்கேற்றஞ் செய்தனர்.

முகமதியருக்குரைத்தல்

பின்னர்ச் சித்தர் பல விடங்களிலுஞ் சுற்றிக்கொண்டு குலசேகரன்பட்டினத்தை யடைந்தார். அங்கு வாழ்ந்திருந்த சித்தரின் தங்கையார் இறையடி சீழ்வெலெப்பினர். அவ்வூர்ப் பள்ளி வாசலில் இருந்த மோதின்சாயபு தம்பி என்பவர் சித்தர்மீது ஊஞ்சற்பாப் பாடி வாழ்த்தரை பெற்றுச் சென்றார். பிறகு சித்தர் ஆற்றூர் என்னும் ஊருக்குச் சென்றார்.

ஆற்றூரில் மழை

அவ்வூரில் அப்பொழுது மழையில்லாமல் ஊர் மிகுதி பாகக் காய்ந்து வாடிக்கொண்டிருந்தது. ஊராரர்கள் சித்தரைக் கண்டு வணங்கிக் குறையை முறையிட்டுக் கொண்டனர். சித்தர், சோமசுந்தரி மாலை, கூடுதுறை முதலிய பாமாலை பாடிக் கூத்தப்பிரான் திருமுன்பு அரங்கேற்றஞ் செய்தார். மழைக்குறிப்பு ஒரு சிறிதும் இல்லாதிருந்தது. சித்தர் வரிசை சூழ்ச்சியின் முன்னேபோய்,

"மலர்மகளைச் சொல்லதுவு மன்மதனை முன்னுன்
னிலைதலால் வாட்டியதுஞ் செப்ப—உலகமதில்
சந்திபோல் தானுக்கால் தப்பாதில் வாறதைச்
சித்தினத்தில் வன்பொழிய வே"

என்னுஞ் செய்யுளைப் பாடினர். அவ்வளவில் பெரு மழை பொழிந்து வெள்ளம் பெருகியது. பிறகு சித்தர் சென்னையை அடைந்து அங்குச் சிலகாலம் வசித்திருந்தார். பிறகு வழிபடு கடவுளாகிய புவனேம்பிகையின் கட்டளைப்

படி மற்ற வேண்டினவெல்லாம் திருவாரூக்காவில் கடத்தினர்.

திருமணமும் மக்கட்பேறும்

பரமன் கட்டளைப்படியே சித்தர் சிதாலக்குமி என்னும் பெற்றோடலையைத் திருமணஞ் செய்த புலனும்பினை பெண்ணும் பெண் மகவையும் பெற்றனர். திருக்குருகூர்ச் சித்தர் என்னும் பெயர் அமையப்பெற்ற இப்பெரியார் அருளாடல்கள் எண்ணில. அவைகளை ஞானசித்தப் பிரபாவம் திருக்குருகூர்ச்சித்தர் மான்மியம், ஞானசித்த புராணம் முதலிய பல நூல்கள் தினவாக உரைத்தலின் சண்டு சருக்கமாகச் சிறிது கூறப்பெற்றன. இப்பெரியார் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் சிலவற்றின் பெயர்களை அடியிற் காண்க.

க.	கலைஞானம்	பாடல் எண்	5000
உ.	சத்தாத்தனித சித்தாக்த பூடணம்	,,	5000
ஊ.	மகா மூலிகை மர்மம்	,,	5000
எ.	ஆயுர்வேத ரத்தினச் சுருக்கம்	,,	ூ00
ஏ.	சித்தர் வழிமுறை வெண்பா	,,	ச00
ஐ.	சித்தசாத்திரச் செய்யுட் டிரட்டு	,,	உ00
ஒ.	சடாதர விளக்கம் என்னும் திருமந்திரம்	,,	ஒ00
ஓ.	தபோதனம்	,,	500
ஃ.	உத்தரபோத சங்கிரகம்	,,	500
50.	வைத்திய சும்மி	,,	500
55.	முப்பூவிளக்க மும்மணிக்கோவை	,,	உ0
52.	சத்தசலத் தெளிவெட்டு	,,	அ
53.	விடாத சிந்தாக பஞ்சாத்திரம்	,,	ஓ
54.	ஞான பண்டிராதனம்	,,	5000
55.	திருக்குற்றாலப் பதிகம்	,,	உ0
56.	திருமலைப் பதிகம்	,,	உ0
57.	அகத்தியர் அகவல்	,,	க
58.	சித்தர்கள் பரமாலை	,,	ச2

கக.	பாபநாசப் பதிகம்	பாடல் எண்	கo
உo.	கன்னியாகுமரிப் பகவதியம்மன்	,,	கoo
உக.	திருச்செந்திற் பதிகம்	,,	கo
உஉ.	ஆற்றூர்ப்பதிகம்	,,	உo
உகூ.	சோமசுந்தரி மாலை	,,	கo
உசு.	கூடுதுறை	,,	கoo
உஙி.	காஞ்சிபுரப்பதிகம்	,,	கo
உக.	திருக்குருகூர் வதிருப்பதி மஞ்சரி	,,	கoo
உஎ.	திருவுருமாமலைப் பதிகம்	,,	கo
உஅ.	திருவெல்வேலிப் பதிகம்	,,	உo
உகூ.	காந்திமதியம்மன் காட்சிப் பதிகம்	,,	கo
கo.	செப்பறைப் பதிகம்	,,	கo
கக.	சதாசிவ மகாலிங்கர் பதிகம்	,,	கo
கஉ.	திருப்பரங்குன்றப் பதிகம்	,,	கo
கஙி.	மதுரை மீனாம்பிகைமாலை	,,	கஉ
கசு.	இராமேசுவரப் பதிகம்	,,	கo
கஞி.	உத்தரகோசமங்கைப் பதிகம்	,,	கo
கக.	பழனியாண்டவர் மாலை	,,	கo
கஎ.	சுருளிமலைப் பதிகம்	,,	கo
கஅ.	வெள்ளியங்கிரிப் பதிகம்	,,	கo
கக.	மருதமலைப் பதிகம்	,,	கo
சo.	கோயமுத்தூர்க் கோட்டைக்குகன் பதிகம்	,,	கo
சக.	பட்டீச்சுரப் பதிகம்	,,	கo
சஉ.	அவிநாசிப் பதிகம்	,,	கo
சஙி.	திருச்சிராப்பள்ளிப்பதிகம்	,,	கo
சசு.	திருவானைக்காப்பதிகம்	,,	சo
சஞி.	அகிலாண்டேசுவரிமாலை	,,	கo
சக.	பச்சைமலைச் சற்குரு பாமாலை	,,	கo
சஎ.	திருப்பிடவூர்ப்பதிகம்	,,	கoo
சஅ.	திருவாலங்காட்டுத் திருமாலை	,,	கச
சக.	கடம்பர் கோயிற் பதிகம்	,,	உo
ஙo.	இரத்தினகிரிப்பதிகம்	,,	உo
ஙக.	திருவிக்கோய்மலைப்பதிகம்	,,	உo
ஙஉ.	கருவூர்ப்பதிகம்	,,	கo

ஐக.	இளம்பள்ளிப்பதிகம்	பாடல் எண்	கசo
ஐச.	திருச்செல்கோட்டுப் பதிகம்	,,	கoo
ஐஞ.	காரிக்கணபதிமாலை	,,	கூo
ஐஎ.	குமரமங்கலைப் பதிகம்	,,	கoo
ஐஅ.	சேலப் பதிகம்	,,	சo
ஐஆ.	பாகசைப் பதிகம்	,,	டo
ஐக.	சக்கேலப் பதிகம்	,,	டo
கo.	வெண்மலைப் பதிகம்	,,	கo
கக.	திருவஞ்சிலிப் பதிகம்	,,	கo
கஉ.	பச்சைமலைப் பரமசற்குருமாலை	,,	டo
கஊ.	கொல்லிமலைப் பதிகம்	,,	டo
கஎ.	திருவொற்றியூர்ப் பதிகம்	,,	டo
கஅ.	திருவிற்கோலப் பதிகம்	,,	கo
கஐ.	திருவாலங்காட்டுப் பதிகம்	,,	உo
கக.	திருமணவூர்ப் பதிகம்	,,	டo
கஎ.	சமணவல்லியார் பதிகம்	,,	டo
கஅ.	வடதிருமுல்லை வாயிற் பதிகம்	,,	டo
எo.	சென்னைச் சிவிலியவராதர் பதிகம்	,,	டo
எக.	சென்னைச் சபை வியாபகர் மாலை	,,	டூ
எஉ.	சென்னைத் திண்டிவியாபகர் பதிகம்	,,	சo
எஊ.	சென்னைச் சுப்பராதரேசுவரர் பதிகம்	,,	கo
எஎ.	சென்னைச் சித்திவியாபகர் பதிகம்	,,	கo
எஐ.	சென்னை செல்லமூர்த்தி வியாபகர் பதிகம்	,,	ஐo
எக.	பாலசுப்பிரமணியர் பதிகம்	,,	கo
எக.	திருக்கழுக்குன்றப் பதிகம்	,,	டo
அஅ.	திருவான்மியூர்ப் பதிகம்	,,	உo
அக.	திருமயிலாப்பூர்ப் பதிகம்	,,	சo
அo.	திருப்பரங்கிப்புலியூர்ப் பதிகம்	,,	டo
அக.	சந்தேசரட்சை	,,	கoo
அஉ.	வடபழனித்தரட்சை	,,	உo
அஊ.	சந்தி சமேசுவரர் வசந்தமாலை	,,	க
அஎ.	திருவண்ணாமலைப் பதிகம்	,,	டo
அஐ.	பிச்சாடனப் பதிகம்	,,	டo
அக.	வல்லீசுவரர் பதிகம்	,,	டo

அ. பிரமபுரப் பதிகம் ,, உ0
அ அ. சட்டைநாதர் பஞ்சாதிக்கக் கோலம் ,, ஓ
அக. திருமாற் பேற்றுப் பதிகம் ,, உ0
க0. மாயூரநாதர் பதிகம் ,, க0
கக. கும்பிகோணம் மாமகப் பதிகம் ,, க0
கஉ. திருவையாறு சப்தத்தானப் பதிகம் ,, க0
கஉ. திருவ்ளாற்றுப் பதிகம் ,, க0
கச. திருமாகாளப் பதிகம் ,, க0
கஇ. திருவம்பர்ப் பதிகம் ,, க0
கக. திருப்பழுவூர்ப் பதிகம் ,, க0
கஎ. திருவிசநல்லூர்ப் பதிகம் ,, க0
கஅ. கதிர்காமவேலர் பதிகம் ,, க0
கஉ. திருவிரும்பை மாகாளப் பதிகம் ,, க0
க00. ஞானம்பிகைப் பதிகம் ,, க0
க0க. திருவாசிலிப் பதிகம் ,, க0
க0உ. வில்வாரண்யப் பதிகம் ,, உ0
க0உ. முருகன்பாக்கப் பதிகம் ,, உ0
க0ச. வேதபுரிப் பதிகம் ,, உ0
க0இ. திரிபுரசுந்தரிமாலை ,, கo
க0க. பட்டினத்தடிகள் தோத்திரம் ,, உ0
க0எ. திருவள்ளுவர் பதிகம் ,, க0

இவைகளன்றி இன்னும் பல உள. சித்தர் திருவாய் மலர்ந்தருளியவை இவ்வாறாக; இச் சித்தர்மீது அன்பர்கள் இயற்றியவைகளை அடியிற் காண்க.

(க) திருநெல்வேலி மாவட்டம் திருக்குருகூர் ஆ. வெ. சுந்தர சாத்திரிகள் 'ஞானசித்தர் பாக்கியானம்'

(உ) மேற்படியார் 'பாகப்பிரகாசம்'

(ச) மேற்படியூர் சங்கர நாராயண சுவாமி பிள்ளைபவர்கள் புதல்வர் முத்தையபிள்ளை, 'தோத்திரப்பா'

(ஞ) யாத்தாத உபாத்தியாயர் தெ. முத்தையபிள்ளை 'அருட் பெரும் பதிகம்'

(ஞ) மேற்படியார் 'ஞான சித்தராசுத் தயிர்தாச சிந்தனை'

(க) சென்னைக்குடி வடக்கண்மனை சுப்பிரமணிய தாசர், 'சொம்பி'

(எ) மேற்படியார் 'ஞானசித்த சற்சாகரமாலை'

(அ) ஆற்றூர் உபாத்தியாயர் வெண்பாப்பிள்ளை 'விருத்தப் பாட்டு'

(க) வெண்பா கண்டபாண்டியதேவர் சித்திர புத்திர பிள்ளை, 'பொற்றிப் பதிகம்'

(கஅ) திருவெல்வேலி வண்ணார்பேட்டை வேலாயுத அடிகள், 'பள்ளு'

(கக) குலசேகரன் பட்டினம் பள்ளிவாசல் முகமீதின் சாகிபு தம்பி, 'ஊஞ்சற்பாட்டு'

(கஉ) திருவெல்வேலி, பிரமாசுத்த அடிகள், 'ஆனந்தக் களிப்பு'

(கஉ) திருவெல்வேலி தெற்குப் புதுத்தெரு, புலவர் அழகிய சொக்கநாதபிள்ளை, 'ஞானசித்தர் அம்மானை'

(கச) செப்பறைக்கவுத்த வெள்ளிமலை மகாதேவ யோகேந்திரர், 'ஞானசித்தர் சதகம்'

(கஙி) மதுரை, இராமேசுவரம் தேவத்தானம் ஒப்பிரண்டு, யாக லிங்கம்பிள்ளை, 'யாக இயல்பு'

(கசு) மதுரை, சங்கிலி சுவாமிகள், 'திருவருட்பாமாலை'

(கஎ) திருப்பரங் குன்றம் நாராயண சரணர், 'ஏகாதசமாலை'

(கஅ) திருப்பரங்குன்றம், முத்துச்சாமி முனிவர், 'சித்தராதர் பஞ்சரத்தினம்'

(கக) திசிரிபுரம், இராமசாமி கவுது, 'வெண்பிப் பதிகம்'

(உ0) மேற்பழநூர் தமிழ்ப்புலவர் முத்தச் சிதம்பரம்பிள்ளை, 'ஞானசித்தர் சன்மணிமாலை'

(உக) மேற்படிநூர் முத்தப்பிள்ளை, 'ஞானசித்தராசத்தக் கோம்பி'

(உஉ) திருவாரூக்கா, புலவர் சோமசுந்தரம் பிள்ளை, 'யாக மாலிகை'

(உஙி) கொண்டலம் பேட்டை, சேதுப்பர், 'யாகக்கும்மி'

(உசு) மாதூரம், புலவர் இருட்டிணை ஐயர், 'தோத்திரப் பதிகம்'

(உஎ) மேற்படியார் 'பஞ்சரத்தினம்'

(உக) மேற்படியார், 'கவரத்தினம்'

(உஉ) மேற்படியார், 'மும்மணிக்கோவை'

(உஙி) மேற்படிநூர் வேம்டாசலம் ஐயர், 'யாகவெண்பா'

(உக) திருவம்புலவர் சபிம்மபாரதியார்; 'கவரிமாலை'

(உ0) திருவையாறு, முத்துச்சாமிப் பாரதி, 'ஞானசித்தர் பிள்ளைத்தமிழ்'

(கூ) தருமபுர ஆதின வித்துவான் சேந்தன்குடி சுப்பிரமணிய கவிராயர், 'முத்திச் பதிகம்'

(கூஉ) சேலம் மாவட்டம், தர்மபுரி வழக்கறிஞர் சுப்பிரமணிய ஐயர், 'ஞானசித்தர் பஞ்சகம்'

(கூஉ) சேலம் வழக்கறிஞர் முதலியார், 'இரைப்பாட்டு'

(கூஎ) திருப்புனவாசி தாலுகா ஓட்டம்பட்டி, பொன்னம்பலம் பிள்ளை, 'ஞானசித்தர் உலா'

(கூஅ) மேற்படியார், 'ஞானசித்தர் இரைப்பாட்டு'

(கூக) திருச்செங்கோடு, சுப்பிரமணிய செட்டியார், 'விண்ணப்பப் பதிகம்'

(கூங) சென்னை கொட்டாஞ்சேரி சித்த சபையார், 'வேட்கைப் பதிகம்'

(கூச) திருத்தலக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திருவாரூர் சின்னச்சாமிப்பிள்ளை, 'ஞானசித்த புராணம்'

(கூசு) சித்தாந்த சரபம் அட்டாவதானம், பூவை கலியாணசுந்தர முதலியார், 'ஞானசித்த வண்ணம்'

(சஅ) மேற்படியார், 'ஞானசித்தப் பிரபாவம்'

(சக) அரசாயிச் தக்கலேதுப்பிள்ளை, 'வண்ணத் தோத்திரம்'

(சஉ) பிரம்பூர் சைவசாரல முதலியார், 'தலதரிசனம்'

(சஊ) வண்ணச் சரஞ்சிபம், சரஞ்சி சாலிக்கமுனிவர், 'வண்ணத் தோத்திரம்'

(சஎ) சென்னை, தமிழ்ப்புலவர் வேலாயுத முதலியார், 'ஞான சித்தர் வெண்பாமாலை'

(சஅ) மேற்படியார், 'இட்டை மணிமாலை'

(சக) காஞ்சியம் அட்டாவதானம் சேதுராசலு நாயுடு, 'வண்ணப் பதிகம்'

(சஎ) கொச்சி போலீஸ் இன்ஸ்பெக்டர் சின்னச்சாமிப்பிள்ளை, 'சதகம்'

(சஅ) சோமநாதபுரம் மாவட்டம் உமையொருபாகபுரம் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் சுந்தரம் கவிராயர், 'விசாரபரர விளக்கம்'

(சக) மேற்படியார், 'பரமஞ்சரி'

(ஙஅ) கள்ளிவழி பெருவிலக்கிழார் மெய்யாண்டி சாமிதாசர், 'பல சந்தச் சொற்றொடர்ப்பா'

(ஙக) ஆழ்வார் திருநகரி, திருவேங்கடம் தாத்தாச்சாரியர், 'ஞானத்தனிப்பு'

(இஉ) திருவாலங்காடு பெரியகோவில் சுந்தராசம் ஐயங்கார், 'ஞானசித்தர் சாமப்பதிகம்'

(இக) அபோத்தி சாமதாசர், 'பாகவதபவம்'

(இச) மேற்படியார், 'குருபூசாத்துவம்'

(இஞ) திருச்சோப்பள்ளி, சீனிவாச தேசிகர், 'அடைக்கலப் பத்து'

(இட) திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரபிள்ளை யவர்கள் மாணவர், திருக்கண்ணை மங்கை இராகவாச் சாரியார், 'திருஞானசித்த சம்பு'

(இவ) சீரங்கம் வேங்கடாச்சாரியார், 'ஞானசித்த வசனமிர்தம்'

(இஅ) கொட்டாம்பட்டி கருப்பையாப் பாவலர், 'ஞானசித்த சுவமணிமாலை'

(இக) திருமயிலை சண்முகம்பிள்ளையவர்கள் 'திருக்குருகூர்ச் சித்தர் மான்மியம்'

(கூ0) திருச்சோப்பள்ளி தமிழறிஞர் டேவிட்பிள்ளை, 'சித்தர் அறுபது'

(கூக) சீகாழியைச் சேர்ந்த திருஞானசி ஆறிஞர் பாலபாரதி சிருட்டிணமாச்சாரியார், 'ஞானசித்தர் ஞான்மணிமாலை'

(கூஉ) கலியாணகிரி, பாலசந்திர சாகுவதி, 'ஞானசித்தர் திருவெழுகூற்றிருக்கை'

(கூக) பசுமலைப்புலவர் வேலாயுத முதலியார், 'பதினெட்டாம் யாகப்பாமாலை'

(கூச) பிருங்கிமலை, உமாபதி சர்மா, 'யாகமஞ்சரி'

(கூஞ) 'கதேஷ்' பத்திரிகாசிரியர் சுக்காலிக்கம்பிள்ளை, 'சுவமணி மாலை'

(கூக) சென்னை வியாசர்பாடி சின்னையாச்சாமி, 'தோத்திர மஞ்சரி'

மற்றும் பல அறிஞர்கள் ஞானசித்தர்மீது தனித்தனியும் தனிப் பாடல்களும் இயற்றியிருக்கிறார்கள்.

ஏ. காமினி

"தொண்டைமாடு சன்றேருடைத்த" என்ற ஆன்றோர்களால் விதந்தோதப்பட்ட தொண்டைவள நாட்டிலே கழைக் கூத்தாடிகள் வகுப்பிலே இவள் தோன்றினாள். கழைக்கூத்துக்கனை கன்கு கற்றறிந்தாள். வேடிக்கைகளில் விச்சுளிப்பாய்ச்சல் என்பது ஒன்று. அது செய்வதற்கு மிகவும் அருமையானது. விச்சுளிப்பாய்ச்சல் என்பது உயர்ந்த மூங்கிலின் தனியில் இருந்துகொண்டு தன் காதளியாகிய தோட்டை கழுவவிட்டு அது நிலத்தில் விழுவதற்குமுன் தான் சரேலெனக் கீழ்நோக்கிப் பாய்ந்து அதனைத் தன் காதில் விழப்பற்றிக்கொண்டு மீண்டுஞ் சரேலென மேலே பாய்ந்து முன்னைய நிலையில் இருப்பதாகும். இவ்வரிய வித்தை ஒருகொடிப்பொழுதுக்குள் நிகழ்ந்து விடும். வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பவர்கள் இவ் வித்தை நிகழுங்கால் கண் இமைகொட்டாது கருத்தன்றிப் பார்த்துக்கொண்டிருப்பர். இன்றேல் இவ்வரிய வித்தையை மீண்டுங் காண்டல் அருமையாக முடியும். முன்னாளில் நம்நாட்டில் நிகழ்ந்துவந்த எத்தனையோ அரிய வித்தைகள் பெரியோருங் கற்பாருமின்றி மறைந்தொழிந்தன. காமினியின் காலத்தில் இந்த வித்தை மிகவும் அருகிவிட்டது. காமினியும் வேறு இரண்டொருவருமே இதனை அறிந்திருந்தனர். காமினியின் தந்தை மிகவும் அருமைபாடுபட்டு இவ் வித்தையை இவளுக்குக் கற்பித்திருந்தான். இவ்வித்தையை ஒருமுறை செய்பவர்கள் உடனே மறுமுறை செய்தல் முடியாது. இடையிலே ஆறு நிமிடங்கள் சென்றபின்தான் மீண்டும் இந்த வித்தையைச் செய்யலாம். அதுவரையில் மூச்சை படக்கிவோகப் பழக்கஞ் செய்துவருதல் வேண்டும். அவ்வாறின்றி ஒருமுறை செய்தவர்கள் அன்றே அல்லது

மறுகாளோ அன்றி இரண்டொரு திங்களிலோ மீண்டுந் செய்யப்புகுவாயின் அவர் மாண்டொழிதல் திண்ணம்.

காமினி இவ்வரிய வித்தகனை நன்கு பயின்றிருந்த தடன் தமிழ் நூல்களைப் புலவர் ஒருவரிடம் வரன் முறை யாகப் பாடங்கேட்டுச் செந்தமிழ்ப் புலமையும் நன்கு பெற் றிருந்தாள். வித்தைகள் செய்யுமிடத்தில் அவ் வித்தைக் குத் தகுமை தாங்கிப் பாரில்கள் வழங்கும் வள்ளல்கள் மீதும் இவள் பல புதிய செய்யுட்களைப் பாடியுள்ளாள்.

அந்நாளில் சென்னைக்கு அணித்தாகவுள்ள புழற் கோட்டத்தைச் சேர்ந்த அயனம்பாக்கம் என்னும் ஊரில் (அய்ன்றை) சடையநாதன் என்னும் பெயருடைய வள்ளல் ஒருவர் இருந்தார். அவர் புலவர்களிடத்திலும் அரிய வித்தகரைப் பயின்றவர்களிடத்திலும் பேரன்புடையவர். அத்தகையோர் தம்மாட்டணுகிப் பரிசில் நாடுவார்களை யின் தக்கவாறளித்துப் போற்றிப் புரப்பர்.

காமினியின் தந்தை சடையநாதனைப்பற்றி அறிந்தாள். அவரிடம் தன்மகளை அழைத்துக்கொண்டு சென்றாள். அவள் கற்றிருக்கும் வித்தைகளையெல்லாம் கூறினாள். சடையநாதர் தம்முன்பு வித்தையைப் செய்துகாட்டச் செய்தார். அவ்வித்தையின் அருமையை யும் பெருமையையும் பெரிதும் பாராட்டினர். அவளுக்குத் தக்கவாறு பரிசில் வழங்கினர். அடிக்கடி தம்மிடம் வந்து போகுமாறும் கூறி அடிக்கடி அழைத்துத் தக்கவாறு போற்றினர்.

காமினி தன் தந்தையோடு பல நாடுகட்குஞ் சென்று சுற்றினாள். இறுதியில் மதுரையை அடைந்தாள். அப் பொழுது அங்கு வழுதியொருவன் ஆட்சி புரிந்துகொண் டிருந்தான். அவன் அறியாமையும் ஆணவமும் ஒருங்கே

அமைபெற்றவன். அவனுடைய தவமைமின்மீம் விச்சுனிப் பாய்ச்சல் வித்தை கைடபெற்றது. பலவகையான வித்தைகளும் கைடபெற்றபின் காதினில் தோட்டை பேற்றலைபை அவ்வரிய வித்தை நிகழ்ந்தது. அவ்வித்தை நிகழ்வதற்குமுன் அது நிகழப்போதகிக் குறித்து முன் னறிவிப்புக் கொடுத்துவிட்டே அவள் அவ்வித்தையைச் செய்தாள். பாண்டிய மன்னனின் பக்கத்தில் அப்போது அவனுடைய காமக்கிழத்தியொருத்தி அமர்ந்திருந்தாள். அரசன் அவளைப் பார்த்துப் பல்லினித்து உரையாடிக் கொண்டிருந்தபோது விச்சுனிப் பாய்ச்சல் நடந்துவிட்டது. மின்னலைப்போல் நிகழ்ந்த அவ்வித்தையைக் கண்டவர்கள் கையைத் தட்டிப் போராவாரஞ் செய்து, "ஆ ஆ" என்று விளப்பொலி செய்தனர்.

அரசனே வித்தையைப் பாராமல் ஏமாந்து போனான். பக்கத்தில் இருந்தவர்கள் வித்தையின் பெருமையை வேந்தனுக்கு விளக்கினர். வேந்தன் காமினியைப் பார்த்து, "அவ் வித்தையை இன்னொருமுறை செய்; நான் பார்க்க வில்லை," என்றான். காமினியோ அரசனைப் பார்த்து, "அரசே! அவ்வித்தையை உடனே செய்தல் இயலாது. மீண்டும் அதனைச் செய்யவேண்டுமாயின் இடையில் ஆறு நிங்கள் கழிதல் வேண்டும்; இன்றேல் நான் மான கெனிடும்," என்று கூறினள். அரசனே கேட்கவில்லை. "அப்படியொன்றும் கெனிடாது. சும்மா செய்; பார்ப் போம்," என்று வற்புறுத்தினன். காமினியோ, 'அருமை யறியாத இவ்வெருமையிடம் வந்து சிக்கிக்கொண்டோமே! கமது வாணன் முடிவுக்கு வந்துவிட்டதே! இனி யாதுசெய் வது?' என்று உள்ளங் கலங்கினள். 'அபன்றையில் உள்ள சடையாதர் எவ்வளவு அருமையும் பெருமையும் உடை பவர். நான் மாண்டொழிந்தேன் என்றால் அவர் எவ்வாறு

உள்ளங் கலங்கி வருந்துவார்' என்று பெருமூச்சுவிட்டாள். அச் சமயத்தில் விண்ணிற் பறவைக்கூட்டம் ஒன்று மெதுவாகப் பறந்து சென்றது. காமினி அப் பறவைகளைப் பார்த்து,

"மாகுன் றினையபொற் றோளான் வழுதிமன்
வான்க ரும்பின்
பாதொன்று சொல்லினைப் பார்த்தெனைப் பார்த்திலன்
பையப் பையப்
போகின்ற புள்ளினங் காள்புழற் கோட்டம்
புகுவ தண்டேடல்
சாகின்றனன் என்று சொல்லீர் அயன்னைச்
சடைய னுக்கே."

என்று செய்யுள் ஒன்றைப் பாடினள். பிறகு விச்சனிப் பாய்ச்சல் வித்தகனை மற்று மொருமுறை செய்யமுயன்று மூச்சையடக்கித் தோட்டைக் கீழே விட்டுத் தாளும் பாய்ந் தாள். அடக்கிய மூச்சுக் கூட்டைவிட்டு அகன்று போய்வது. காமினி மிணமாளுள். அவள் தந்தை அழுது புலம்பி அவ் விடம் விட்டகன்றான். அங்குக் கூடியிருந்தோர் அனைவரும் அரசனைப் பலவாறு இகழ்ந்துரைத்து "அரிய வித்தகனை அறிந்திருந்த அணங்கொருத்தியைக் கொன் றாயே!" என்று வைது சென்றனர்.

அரசன் இப்பெண் சொல்லிய புழற்கோட்டம் அயன் னைச் சடையநாதன் அவ்வளவு பெரியவனை அவனுடைய தன்மையை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று எண்ணி னான். புலவர் சிலரைப்பார்த்து "அயன்னைச் சடைய னுடைய வள்ளன்மையை ஆராய்ந்து அவன் கழைக்கூத்தி கழறியபடி பெரியவன்றனை என்று பார்த்து வாருங்கள். ஒருவர் இறக்கும்பொழுதுகூட எண்ணத்தக்க பண்பு ஒருவர்பால் அமைந்திருப்பது மிக உயர்ந்ததாயிற்றே,"

என்று கூறினான். புலவர்கள் அவ்வாறே சென்றனர். பல வாறு ஆராய்ந்தனர். ஒருவர் சடையாதனைப் பார்த்து, "நான் சூல்கொண்ட மாதொருத்தியின் முதலில் சாய்பிட மிழைக்கேன்," என்றார். அப்போது சடைய நாதனின் மனைவி சூலியாக இருந்தாள். அவளுடைய முதுகிலேயே உணவிடுவதாகக்கூறி அவளைக் குனிந்து நிற்கச்செய்து அவளுடைய முதுகிலே இலையைப்போட்டு உணவைப் படைக்கச் செய்தார். புலவர்கள் 'இவர் பெரிய வள்ளல் தான்; ஐயமில்லை' என்று தணிந்து அவ்வூரைவிட்டுப் புறப் பட்டனர். அப்பொழுது வேறு சில புலவர்கள் பரிசில் நாடி எதிரே வந்தனர். அப்பொழுது மதுரைப் புலவர்கள் எதிரே வந்த புலவர்களைப் பார்த்து,

"இரவ லாளரே! பெருந்திரு உழுக
அரவுமிழ் மணியும், அலைகடல் அமுதும்
சிங்கப் பாலும் திங்கட் குழவியும்
முந்நீர் வாலும் குந்நீர் மருப்பும்
ஆமை மயிரும் அண்ணத்தின் பேடும்
எனை இரப்பினும் இல்லென அறியான்
சடையனே அயன்றைத் தலைவனே
உடையது கேண்மின் உறுபொரு ளாய்ந்தே."

என்று பாடிச்சென்று பாண்டிய மன்னனிடம் சடையநாதர் பெருமையைக் கூறினர்.

"பாகொன்று சொல்லினைப் பார்த்தமை
யாலன்று பாண்டியன்மூன்
னோகின்ற சிற்றிடை வேழம்பக்
கூத்தி னொடிவனையில்
சாகின்ற போது தமிழ்சேர்
அயன்றைச் சடையன் தன்மேல்
மாருன் றெனச்சொன்ன பாமாலை
யுன்தொண்டை மண்டலமே."

என்பது தொண்டை மண்டல சதகம்; இப் பாட்டினுள் காமினியின் வரலாறு அடங்கியிருப்பது மேற்படி சிதம்பரத் தக்க ஆதாரமாகும்.

அ. சிவசுப்பிரமணிய தேசிகர்

[19 - ஆ.]

தோற்றம்

இவர் மதுரையம்பதியில் தோன்றியவர் என்பது,

" மாதவர்க் கிருக்கையாய் மாலில வரைப்பில்
நீளிடைப் பயக்கும் நெறிநீர் வையைத்
தன்துறை கிளர்ந்த தமிழ்தரு மணிமுகில்
மண்டிலம் அளப்பான் வளர்வுறும் அணிமதில்
தாரா கணத்தினைத் தாயெண்ணி யாங்குப்
போது நீவந்த பெருகொளி மாடம்
மதவான் முதலிய வணிகர் மாகர்
புகலாத் தமிதொரு புரிசை சாக்கொல்
எனத்தாங் காணிய எழுந்தே மாப்பத்
தனத்தில் அணியித் சாப்புறக் கேள்வியில்
தேவ குலங்களில் சீர்மையில் சிறப்பில்
பாவுறும் வண்மையில் பண்மாண் புகழ்மையில்
தனக்கினை செல்வெரு தானை கிலைபெறாடம்
எனக்கதிக் தனைத்தையும் சன்றரு வாய்மையன்
பேற்கண் வல்லியார் சாதல் பிரிவிலா
இயற்கை அருளின் எட்டெட் டுத்திரு
வினையா டற்செயல் வினோத்தனான் கருணை
முனைவினிலமதாய் முன்னுரைசெய் கேசர்
உயிர்க்குணர் வெனுக உறைந்திரு மதுரை
பத்தமா கரி கண்ணு மெய்ம்மையோன்
சிவசுப்ர மண்ய தேசிகன்....."

என்பதனால் பெறப்படுகிறது.

கல்வி

இளமையிற் பள்ளிக் கனுப்பப்பட்ட இவர் பள்ளிக் கல்வியை இனிது கற்றுச் சின்னாள் இல்லத்தில் உறைந்திருந் தனர்.

ஆசிரியரை யடைதல்

உலக வாழ்க்கையில் இவருக்கு வெறுப்புத் தட்டியது. கல்லாசிரியரை அடுத்து அருளுரை பெற்று மேலாங்கதி பெற எண்ணினர். அக்காலில் விருத்தாசலத்தில் ஓர் அருட்டிருவாளர் இலகியிருந்தார். அவருடைய பெயர் வேலாச்சேரி சிவ சிதம்பர தேசிகர் என வழங்கி நின்றது. அவருடைய பெருமை யாண்டும் பரவி நின்றது. இவர் அப்பெரியரை யடைந்து அருளுரை பெற்றார். ஆசிரி யரைப் பிரியாது அவருடைய திருவடித் தொண்டு செய் திருந்து தன்றிச், சுபோதசிகாமணி, கழநிவாசல் திருவருள் சல தேசிகாத்தப்பின்னைத் தமிழ், அழகாபுரி உமையவள் ஆனந்தப்பின்னைத் தமிழ், மாகதமுத்து மாணிக்கத் திருப் புகழ், இராயபுரம் பதிற்றுப் பத்தந்தாதி சிவ சிதம்பர தேசி கர் சரணப் பதிகம் முதலிய நூல்கள் இயற்றினர். இச் செய்தி,

> " சுபோத சிகாமணி சொல்லுநற் கழனி
> வாசல் திருவரு ளாசல தேசிக
> ராதப் பின்னைத்தமிழ் நலம்புனை திருவரீன்
> சாயக் கோட்டை எறும்புள காகரி
> மேய உமையா காத்தப் பின்னைத்தமிழ்
> மாகத முத்து மாணிக்கத் திருப்புகழ்
> விராவுதென் திசைக்கண் விளங்கக் கினைந்த
> இராய புரம்பதிற் றுப்பத் தந்தாதி
> வேத சிரோணி விளக்க வருமுயர்
> சேதனக் கூச்சிவ சிதம்பர தேசிகன்
> சரணப் பதிகம் சதானந்தக் கனிப்பு"

என்னும் பகுதியால் பெறப்படுகின்றது.

" மலர்முக மிலகிய தவரித ழாடுற மணிகலை முத்தாட
வனரொளி விரிதரு நுதலணி யாடுற மகரக் குழையாடக்
குலகவ மணிவடம் ஆடுற உச்சிக் கொண்டை யணைசத்தாடக்
கொக்கை மலைப்பொறை யாலிடை மின்னற் கொடியும்
[வஞ்சத்தாட
வில்மணி மேகலை யாடக்கக்கணம் மிளிர்ப்பரி புரமாட
விரை செறி மஞ்சரி யாடுற மரகத மேனி குழைந்தாட
அலகற புவனை ராசர மாடிட ஆடுக செல்லை
அணிவன மிருமழ காபுரி உமையவள் ஆடுகசெல்லை"

என்பது அழகாபுரி உமையவள் ஆனந்தப்பின்னைத் தமிழில் ஒரு பாட்டு.

கூ. வேங்கடத்துறையான் கவிராயர்

தோற்றம்

தம்முடைய பெயருக்கு முன்னால், "வாலப்பிரமசரிய ஜாமவிசதர்" என்னும் சிறப்புப் பெயரையும் பெற்ற இவர் எறக்குறைய மூன்றாம் பாண்டுகட்கு முன்பு பாண்டிவள நாட்டிலே ஆழ்வார் திருநகரி என இந்நாளில் வழங்கும் திருக்குருகூரில் வேளாளர் குலத்தில் பிறந்தார்.

கல்வி

கருணிலே திருவுடையராய்த் தோன்றிய இவர் இளமைப் பருவத்தில் நல்லாசிரியர் இடத்தே தொல் காப்பியம் முதலிய அரியபெரிய இலக்கண நூல்களையும், சங்கத் தமிழ் இலக்கியங்களையும், கம்பராமாயணம் திருக் குறள் முதலிய பிற நூல்களையும் ஐயந்திரிபறக் கற்று உணர்ந்தார்.

வாலப்பிரமசரியம்

இவர் இல்வாழ்க்கையில் புகும் நோக்க மற்றவராய்ப் பிரமசரிய ஒழுக்கத்தினையே இறுதிவரை கடைப்பிடித்

தொழுதினமைமின் 'வலம்புரிமதி' என்னும் பெயர் இடையப் பெற்றன்.

இராமனிதன்

இவருடைய முழு அன்பும் திருமாலிடத்தும் அவர் கழுவ இராமபிரானிடத்தும் உறதியாக அமைந்தது. "கற்பார் இராம பிரானேயல்லன் மற்றக், கற்பிரே" என் பதற்கேற்ப இராமாயணம் முதலிய நூல்களேயே கற்றும் இராமபிரானையே போற்றியும் புறச் சொழாராய் இருந்தமை யின் 'இராமனிதன்' என்னும் பெயரும் உண்டாயிற்று.

திருமுழுக்குப் பணி

இவர் திருமஞ்சனமாகிய திருமுழுக்குப் பணியும் நடத்திக் கொண்டிருந்தார் எனவும், இப்பணிக்குப் பாஞ் சாலங்குறிச்சிப் பெருநிலக் கிழார் கட்டளையும் எற்படுத்தி யிருந்தார் எனவும் சிலர் என்னுகின்றனர். இவருடைய பெயருக்கு முன்னல், "ஆழ்வாருக்குத் திருமஞ்சன கைங் கரியம் நடத்திவந்த" என்னும் அடைமொழியும் இதனை உறதிப் படுத்துகின்றது.

மாறன் கோவை

இவர் நம்மாழ்வாரிடத்தே கரைகடந்த பற்றுக் கொண்டிருந்தார். அவரைபன்றி மற்றவரைக்கனைத் தாழ்ப்பதும் இன்னெனத்தணிவு கொண்டார். அவர்மீது கோவை பொன்ற இயற்றக்கருதி, மாறன் அகப் பொருளை யும் அதற் கிலக்கியமாகவிருப்பதிக் கோவையையும் பெரும்பாலும் தழுவிச், சொன்னேக்கும் பொருளேக்கும் தொடை நோக்கும் நடைநோக்கும் கன்கு அமையுமாறு மாறன் கோவை என்னும் நூலே நூறு பாடல்களமைப்பப் பாடித் திருக்கோவிலில் கொல்லமாண்டு அகம0-இல் அரங் கேற்றினர்.

"சோக்கு மாண்டொரொண் ணுற்றத் தொண்
ணுற்றில் திருக்குருகூர்
சோக்கு செந்தமிழ் கம்மாழ்வார்
கோவலை சாவலர்முன்
வாக்கு ஞானந் திகழ்வேங்
கடத்துறை வான்கவிஞன்
சோக்கு மாதிப் பிரான்கோ
யிலிலரக் கேற்றினனே."

என்பது சிறப்புப் பாயிரப் பாடல்களுன் ஒன்று.

"தொல்காப் பியம்பல நன்னூற் புராணஞ் சுருதியுமாம்
ஒல்காப் புலமைமன் னுட்டுறை நீகுரு கூர்மதிழ்ந்தார்
அல்காப் புயன்ஞிலம் போடெதிர் கூவலு மானைகளைப்
பல்காற் பிணிப்பது மேயெங்கள் கேன்வியும் பாடுமே."

என்பது பாண்டி குலமுறை இளத்தல்.

இந்நூல் கசுஅசு-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் பூனை மேடு வேணுகோபாலசாமி நாயுடு என்பவரால் நன்கு ஆராய்ந்து வெளியிடப் பட்டுள்ளது.

கம. அழகிய திருச்சிற்றம்பல அடிகள்

தோற்றம்

சோழுவள நாட்டில் காவிரியின் தென் கரையில் உள்ள திருவம்பர்மா காளத்தைச் சேர்ந்த மாகாள இலக் துறை என்னுஞ் சிற்றூரில் இப்பெரியார் சோழிய வேளாளர் குலத்தில் கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றினர்.

கல்வி

பின்னாளைப் பருவத்தில் கல்வி கற்கத் தொடங்கியவர் போதிய அளவு கல்வி கற்றார். இவருடைய மனம் இல்லை

றத்தை ஈடாகும் தரவுறத்தை ஈடிபதை. மேலோர் கட்டுரையைக் கொண்டு தாலோர் பாராட்டும் பெற்றியோப் பெறுதல் வேண்டும் என்ற உறுதி பூண்டார்.

ஆசிரியர் அடைதல்

அச் சமயில் தருமபுர ஆதினத்தில் திருவம்பல தேசிகர் என்னும் அருட்பெரியர் எழுவதுபட்டத்தில் எழுந்தருளி யிருந்தார். அத்தேசிகரை அடைந்த அறிவுத் தீக்கை முதலியவைகளை அவரிடம் பெற்றுக் கொட்டுர் அழகிய சிற்றம்பல தேசிகர், தாயுமானவர் ஆகிய மாணவர்களோடு தாமும் ஒருவராய் அறிவு தாக்கைக் கற்றுக் கொண்டிருந் தார். திருவம்பல தேசிகர் திருவடிப்பேறு பெற்றபின் கோட்டுர் அழகிய சிற்றம்பல தேசிகர் எட்டாவது பட்டத் தில் எழுந்தருளினார். பிறகு இவ்வழகிய சிற்றம்பல தேசி கரையே அறிவாசிரியராகக் கொண்டு ஒழுகினர். இவ்வாசி ரியர்மீது இயற்றியதாக என்னும் தனி இயற்றினர். ஆசிரியர் கட்டிளைப்படி சொர்க்கபுரம் மடத்திற்குத் தலைவ ராக அமர்ந்திருந்தார்.

இருடைய பெருமை

உண்மைத் தறிவிக்கு உலகில் எவ்வளவும் இறைவன் அருள் உண்டு. கோலம் மட்டும் பூண்டு "காடகத்தால் உன்னடியார் போக்கடித்த வாக்கையை, வீடகற்றே புகுந்திடுனைக் மிகப் பெரிதும் வியந்திற்றேன்" என்னும் மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திற்கு ஏற்றுக் காட்டாக விளங்குவர்கட்கு இறைவன் திருவருள் உண் டாதல் அருமை. இவ்வழகிய திருச்சிற்றம்பல அடிகள் மெய்ம்மைத் தறிவாகின் இவர்பால் திருவருள் விளக்கம் செம்மையாக அமைந்து நின்றது. அருள் விளையாடல்கள் பல நிகழ்ந்தன. தஞ்சாவூர் அரசி சாலையில்

இ. பி. காகுத்-தும் தூண்டில் படுக்கையில் உறங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். அக்கனவுத் தோற்றம் இத் தேசிகர் மிட்டையில் எழுந்தருளியிருப்பதுபோலவும் தான் அத் தேசிகரைப் பணிந்து அருள் பெறுதலும் போலவும் காணப்பட்டது. இக்கனவினை அரசனுக்கு அறிவித்து, "இக்கனவு பெரியோர் யாண்டுளர்?" என்று உசாவி னான். அரசனோடு மகான இலக்குமணக்கு சேரிலக்ஷ்மி தேசிகரைக் கண்டு வணங்கிப் போற்றினான். சொக்கபுரம் மடத்திற்கு மானியங்கள் பல அளித்துச் சென்றான். இத் தனைய புதுமைகள் பல இவர்பால் விளங்கின.

வினியோ தூது

" தரையிற் பணிந்தேன் தலையின்மாக் கைவைத்
தலையும் நிறையு நுரையும்—கரையுமிலா
மேலாஞ் சிவாதுபவ வேலைதனின் மூழ்குதற்கு
மாலாறு என்ற மனமெழ்ந்து—தூலாலே
சென்னபடி செய்யத் தொடங்கியுட னும்பொருளும்
கின்னேயுந்தா என்ற கிளந்திலன்—அன்னபடி
சந்தென்தன் பாத இணைமலரென் புன்தலைவைத்
தாழ்ந்தார்க ளாலும் அறிவரிய—சாய்ந்த
பரிசினுக்கு மேகமது பாலித்தாற் போலென்
உபரிசனுக்குச் சொன்னன் ஒருசொல்—....."

என்பன வினியோ தூதிற் சில கண்ணிகள்.

இயற்றிய நூல்கள்

இவரால் இயற்றப் பெற்ற நூல்கள்

அ. வெண்பாமாலை
ஆ. அதிவரதர் சுப்பிரபாதம்
இ. விளையாடல்
ஈ. திருப்புகழ்த் திரட்டு
உ. சிற்றிலக்கியம்
ஊ. அறுபத்தாறு விநாயகர் அகவல்

ஏ. உசாத்தானத் தோத்திரம்

அ. அருட்பாமாலை

முதலியவைகளாம். இந்நூல்களெல்லாம் அச்சிடப் பட்டு வெளியாகியுள்ளன.

" வண்டலெனத் தும்மாரி வழங்குமருள் வயலான்
மாகாள மிலத்துணையில் வருபரம குரவன்
தென்றமிழ்க் கிளிவிடுதூ தாதியாய்ப் பூவுதவல்
செய்தபல காமஞ்சொல செய்ததொகை செய்மித
வின்னரிய மெய்க்குருவைச் சீடனை னவனுமே
விளைவிமகிழ் தலுங்கூறி அறிந்தமுங்கல் விளம்பி
அள்ளிமகிழ்ந் தணைவறிவா னந்தசமுத் திரமும்
அரியதிரி பதார்த்தநீ பமுமருளி னனே."

என்னும் இப்பாடல் இப்பெரியார் இந்நூல்களை யெல்லாம் இயற்றியதை உறுதிப் படுத்துகின்றது.

இறுதி

இப்பெரியார் கி. பி. எஎசஅ-ஆம் ஆண்டில் காத்தி கைத்திங்களில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

கக. தெய்வசிகாமணிக் கவிராயர்

தோற்றம்

இவர் ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னே பாண்டிவள நாட்டிலே குலசேகரன் பட்டினத் திலே வேளாளர் குலத்தில் தோன்றியவர்.

கல்வி

கல்வியைக் கற்க வேண்டிய காலத்திலே நன்கு கற்றுச் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார். அவ்வூரில் எழுந்

தருளிய அறம் வளர்த்த அம்மையின் மீது போன்பு கொண்டிருந்தார். அவ்விறைவி மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடிப் போற்றினர்.

புலவரை வெல்லுதல்

அவ்வூரை அந்நாளில் ஆண்டு கொண்டிருந்த செந்தில் காத்த மூப்பனார் என்னும் சிற்றரசனுக்கும் இவருக்கும் மிகுந்த கண்புண்டாகியது. இருவரும் கண்பர்களாக விளக்கினர்கள்.

ஒருநாள் அம்மன்னவனுடைய அவைக்கு வேறோர் இடத்தில் இருந்து தமிழ்ப் புலவன் ஒருவன் பரிசு பெறக் கருதி வந்தான். அவன் தெய்வ சிகாமணிக்கவிராயரோடு சொற்போரிட்டுத் தோற்கடித்தத் தன்னுடைய பெருமையை நிலைநாட்ட எண்ணினன். மிகுந்த செருக்குடன் கவிராயரைப் போருக்கழைத்தான்.

கவிராயர் செருக்குற்ற புலவனுக்கு நல்லறிவு புகட்ட எண்ணினர். தாம் அவனோடு சொற்போரிடுவது தக்கது அன்று என்று முடிவு செய்தார். கல்வியறிவற்ற ஒரு சிறுவனைக் கொண்டு தோற்கடிக்க எண்ணினர். அரண்மனையில் இருந்த தையல்காரன் மகனுக்குத் திருநீறு பூசி அம்மையின் அருளை உண்டாக்கிப் புலவனோடு சொற் போரிடச் செய்தார். தெய்வியின் திருவருளால் சிறுவன் புலவனை வென்று வாகை சூடினன். பிறகு கவிராயர் அச் சிறுவனைப் பெரிதும் போற்றிக் தம் பிள்ளையைப் போன்று ஆதரித்தார். அச்சிறுவனும் பல நலங்கள் பெற்றுச் சிறப் புற்றான். இவரால் இயற்றப் பெற்ற அறம் வளர்த்த நாயகி பிள்ளைத் தமிழ் ஈடும் எடுப்பும் அற்ற சிறந்த பனுவலாக உயர்ந்து திகழ்கின்றது. அப்பிள்ளைத் தமிழை பாடுவார் பயனெலாம் பெறுகின்றனர்.

" புலவை கமழும் புனல்வாரி
புதுமுத் தெறிபுங் கரைவாரி
புவனம் முழுதும் விரும்பவளம்
பொருத்தம் பொருத்தம் அரும்பவளம்
பலதை சுழற்செய் தொழில்புரியும்
பல்லுஞ் சங்கு வலம்புரியும்
பாலை பயின்பொன் மணித்தலமும்
பவளங் டமுங்கொசுண் டணித்தலமும்
மலர்மான் கலாபம் அம்புயப் பூ
மன்னர் பொதுக்கும் அம்புயப்பூ
மதுரத் தமிழும் மெய்பிருக்கும்
மணக்கு மதுரைப் குடியிருக்கும்
குலசே கரன்பட் டினவாசனைக்.
கொழுந்தே முத்தக் தருகவே
குயிலே அறத்தை வளர்த்தகுலக்
கொடியே முத்தக் தருகவே."

என்பது மேற்படி பிள்ளைத் தமிழில் முத்தப் பருவத்தில் ஒரு பாட்டு.

கஉ. மீனாட்சிசுந்தர முதலியார் - கு
[19—ஆ]

தோற்றம்

இவர் பாண்டிவள நாட்டிலே குருவிக்குளம் என்னும் ஊரில் பெருமிலக்கிழார் ஒருவருடைய மேலாளராக அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார்.

புலமை

தக்க அறிஞர்களிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றிருந்த இவர் அவ்வப் காலங்களில் நல்லனும் எழுதினர். அறிஞர்கள் பலர் தாம் இயற்றிய

நல்லூர் இவரிடம் கொண்டுவந்த காட்டி இவருடைய சிறப்புப்பாயிரத்தையும் பெற்றுக்கொண்டு சென்றார்கள். இவர் தாம் அமைக்கும் பெருவிலக்கிழாருடைய காரியமாகச் சென்னைக்குச் சென்றபோது அங்கு அங்காளில் சிறந்த புலவராக விளங்கியிருந்த புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரைக் கண்டு அவருடைய நட்பைப் பெற்றார்.

சிறப்புப்பாயிரம்

புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் மேற்படி குருங்குளத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய மீனாட்சி சுந்தரேசுவரர் மீது சதகம் ஒன்று பாடினார். அச்சதகத்திற்கு இவர்,

" சிற்பெருகு தென்பாண்டி நாட்டுவள நாடையின்
நிகழ்குணக் காடையோங்கும்
செல்வமிரு குருவிருள மாகச்சி நிபனனி
சேர்கொண்டல் நாயகாமி
சர்பெருகும் உன்னருமை மீனாட்சி சுந்தரென்
நாதன்மேற் சதகம்ஒன்று
கடைதரு மிமைய ஏற்பதிய வுலகிலெல்
லருமுத நன்குசெப்தான்
சர்பெருகு சோலைதழ் சென்னைபம் புரைசையில்
வண்பவான் புண்யவான்மெய்க்
கலைபரி பாரநிர நிரனிட நிக்கடற்
கரைகண்ட ஞானவேகம்
சேர்பெருகு வெதார்த்த சித்தார்த்த பரசன்
சர்சயம் உணர்த்தியுணன்
சிகரிலட் டாவதா னச்சபா பதியென்ன
நிலவுரை மக்களிலனே."

என்று சிறப்புப்பாயிரம் பாடினார். இவர் எழுதிய குறிப்பு ஒன்றில், "ஷெ மகாவித்துவானுடைய புரசை அட்டாவ

காலம் சபாபதி முதலியாரைக் கவிஞராக்கி 1886-ஆம் ஆண்டு ஆகஸ்டு மீ 29 ஆந் தொடுத்துக் காலை தமிழ் விடை ஆண்டு ஆவணி 14உ ஆயிரத்து எழுநூற்று ஆறில் ஆரோகணம் கடவுள் வாழ்த்து ஆக ஈரடி ஆசிரியச் சுரிதகத்தால் வெண்பாவுக்கு வேறுபட்டு ஆசிரியப்பாவுக்கு ஒத்து வருவதாகும்.

" வாழ்த்து மீனாட்சி சுந்தரம்
வாழ்த்தை தொடர வாழ்த்து
வாழ்த்து மாலவர் தேவரை
தாழ்த்து வேண்டு மதற்கு
நீ வாழ்த்து மிவரை வரங்களைக்
வாழ்த்து மொருவ னிவர்க்கு
வாழ்த்து நீடுவாழ் மீனாட்சி
வாழ்த்து மிறை வாழ்க."

என்ற இவர்ச் சுட்டி எழுதியுள்ளார்.

நூல்கள் இயற்றல்

மீனாட்சிசுந்தர முதலியார் பெருமைக்குரிய சரித்திரப் பாத்திரமாக விளங்கிய சென்னை மாகாண அரசாங்கத்தாரும், அவருடைய குடும்பத்தாரும் அவரைப் பற்றி வைத்திருந்த அபிப்பிராயத்தை மேற்கண்ட வாழ்த்து வெளிப்படுத்துகிறது. அவர் இயற்றிய நூல்களுள் முக்கியமானவை பின்வருமாறு:

அகத்தியம்

" ஆதியிலே ஐந்தாம் ஊழி முடிவுற்ற
பின்னர் முதலாம் ஊழி பிறக்கையிலே
முன்னர் முதலாம் ஊழி முடிவுற்ற
பின்னர் முதலாம் ஊழி பிறக்கையிலே
அகத்தியனார் ஆதி அறிவுரையால் தோன்றி
முகத்தியனார் முதல் நூல்."

வாகனக்கவி, கயிலாயம்

" எயிலாயம் பொடித்தகலை இறைவர் சுந்த
ரேசரும் ஸட்சி யென்னும்
குயிலாய மொழியுடன்சால் குருவிகுண
மேடவிழாக் கொண்ட பத்தில்
பயிலாயம் பல்குகொண்டல் சாசேந்தான்
பணிக்தேத்தப் பனவர் போற்றக்
கயிலாய மீதுவக்தசர் அம்மையுமச்
சுகமதனில் களிக்கின் றூனே"

என்பன அந்நூலில் இரண்டு பாடல்கள்.

இயற்றிய நூல்கள்

க. காலங்களுக்குரிய தோத்திரமாலை
உ. சிவசயிலேசர் துதிக்கலிவெண்பா
ங. மீனாட்சிசுந்தரேசர் சதகலித்துறை
ச. நித்தியகலி பலசந்தவந்தாதி
ஞ. அக்காவர்க்கப் பலசந்தமாலை
ட. சித்தியகலி அந்தாதி
ண. மாமனுகவந்து வழக்குரைத்த லீலைப்பசனைமெட்டு
த. விருத்த குமாரபாலரான லீலைப்பசனைமெட்டு
ந. திருநாட் கண்ணி
ப. தத்துவக்கலி வெண்பா
ம. பிரபோத சந்திரோதய உரைகடை
ய. வேதாந்தசூடாமணி உரைகடை
ர. குருவணக்கம்
ல. மனக்கண்ணி
வ. சிறுத்தொண்டர் பசனைமெட்டு
ழ. தருமாக்கத சாடகம்
ள. கழுகாசலமாலை
ற. சங்காசித்தி விசாயகர்மாலை
ன. திருவுடையான்மாலை
உ0. மாசாத்தகவி
உக. அசுவபாதபத்தம்

உட. கொம்பில்லா வெண்பா
உஙு. அட்ட நாகபந்தம்
உச. உபய நாகபந்தம்
உஞ. ஏகநாகபந்தம்
உக. கமலபந்தம்
உஎ. கோமூத்திரிகாபந்தம்
உஅ. புட்பமாலிகா பந்தம்
உகூ. மாலைமாற்று
கூ(). கணைதகாவிகள்
கூக. மும்மண்டல வெண்பா
கூஉ. கட்க பந்தம்
கூகூ. இராமாயண கட்சத்திரமாத ஆசிரியம்
கூச. இரதபந்தம்
கூஞ. கசபந்தம்
கூக. சத்தப்பிரகாணம்

என்பன.

கூக. நீலகண்டதாசர்

இவர் சோழவள நாட்டிலே பத்மநாபபுரம் என்னும் தென் குளந்தை நகரில் கொல்லம் ஏ0கச-ல் தோன்றினர். இளமைப் பருவத்தில் கல்வியிற் சிந்தை செலுத்தாமலிருந்தார். மேற்படி நகரில் உள்ள நீலகண்டரது கோயிலில் எப்பொழுதும் அமர்ந்து பக்தி செய்தலே மேற்கொண்டிருந்தார். அகவை பதினெட்டு நிரம்பியபோது நீலகண்டரது திருவருள் கிடைத்தது. அது முதல் இவருக்குக் கல்வியறிவு உள்ளத்தே தெளிவாக விளங்கியதோடு செய்யுள் பாடுந் திறமும் உண்டாகியது. கடவுள் மீது பலவகையான பாடல்களை இயற்றினர். இருபதாவது அகவை முதல் முப்பத்தைந்தாவது அகவை வரையில் அரசியல் அலுவலில் அமர்ந்திருந்தார். பிறகு இல்வாழ்வில வெறுப்

புற்றுத் தலயாத்திரை, செப்புள் பாடுதல் முதலியவைகளை மேற்கொண்டார். உயிர்களிடத்திலே பேரன்புடையவராக விளங்கினர்.

மழை பெய்வித்தல், மக்களுடைய பிணிகளைப்போக்குதல் முதலிய அருட் செயல்கள் பலவற்றைச் செய்தார். கௌரி-ல் பக்தகோடிகளோடு இறைவனைப்பாடி வழிபட்டுக் கொண்டிருக்கையில் "மகா தேவ!" என்று கூறி இறைவன் திருவடி நீழலை யடைந்தார். இவரால் இயற்றப்பெற்ற பாடல்கள் அகாராதி மாலை, அகாராதி நவகம், அக்கினியிருக்கில், அங்காதி மாலை முதலிய ஐந்துக்கணக்கான பதிகங்களாகும். ஆயிரக்கணக்கான பாடல்களை ஒரே புத்தகமாகத், "திருநீலகண்ட போதம்" என்னும் பெயருடன் இவருடைய மகனும் மாணவருமாகிய ஸ்தானுநாத சிவன் என்பவர் வெளியிட்டிருக்கிறார்.

"எடுக்கமுடி யாக்கவலி தீர்க்கவும் இடுக்கமுற
ஏழையான் எற்றைதனுள்பால்
எத்தனை விதப்பாடி புக்கருணை தேடினின்
நீணிலடி பணிந்தும்இன்னம்
கடுக்கைமதி சூடிய சடைக்கடவுளேயருள்
கனிந்திடார் போற்றுண்பரீ
காட்டுருவை எதுகாண் வாட்டமற அருள்மாரி
காட்டியுய் கருணைமுகிலே
கடுக்கட வினிற்கல் மிதக்கவுற் செய்ததம்
சரிபரிக ளாய்ச்சென்றதும்
காதனின் அருளென்னில் அவ்வருள் எனக்குளி
தான்தேறி லுலொணுதோ
பொடுக்கென உதைத்தெமனை வென்றருளுவர் தமையரண்ட
போதகின் ஆதரவுசெய்
பொக்கை விலங்குசிவ சங்கர மகாதேவ
பூரணாந்த வடிவே."

" திருக்தகான் மறைக்கும் எட்டாச்
சிற்பாஞ் சோதி யாகிப்
பொருக்தலான் போல யாவும்
புருக்தயிர்க் குபிரால் வக்கும்
இருக்தெலாம் புரியும் வக்கன்
இறைவனின் சரண மாகேன்
அருக்தனே யாகி யென்றும்
அடியனேன் தனேயும் ஆளாய்."

என்பன இவருடைய பாடல்களில் இரண்டு.

கூ. ஆறுமுக அடிகள் (திரு)

தோற்றம்

பாண்டிவள நாட்டில் காவோபாக்கோவில் என வழங்கும் திருக்கானப் பேருக்கு அண்மையில் உள்ள மாக்காத்தூர் என்னுஞ் சிற்றூரிலே சர்வசித்து ஆண்டு மார்கழித்திங்கள் பதினான்காம்நாள் தோன்றினர். இவர் தோன்றியகுலம் வேளாளர் குலம். தக்தையார் பெயர் நாகலிங்கம் பிள்ளை; தாயார் பெயர் காமாட்சியம்மாள்.

கல்வி

இவருடைய தக்தையார் போலீசு என்னும் உயர் காவல் அலுவலில் அமர்ந்திருந்தார். ஆறுமுக அடிகள் ஆறுமுகம் என்றே பிள்ளைப் பெயரிடப்பெற்றார். பெயருக் கேற்ப ஆறுமுகப்பெருமானிடத்தில் மிகுந்த போன்பு கொண்டுவினங்கினர். தக்தையார் மதுரைக்கு மாற்றலாகிச் சென்றமையின் ஆறுமுகனாரின் கல்வி மதுரையில் தொடங்கியது. பிள்ளைப் பருவத்தில் கற்க வேண்டிய கல்வியைக் கற்றார். அகவை பன்னிரண்டு நிரம்பியபின் பல சிவப்பதிகட்கு இறைவழி பாட்டிற்குச் சென்றார்

ஆக்காரத்திருந்த பெரியோர்களிடமும் அறிஞர்களிடமும் முதிர்ந்த அனுபவ நரக்கினைக் கற்கத் தொடங்கினர். சிலரிடத்தில் புராணக்கதைப் படித்தார்; சிலரிடத்தில் இதிகாசக்கதைப் படித்தார்; சிலரிடத்தில் வேதாந்த நூல்களைப் படித்தார்.

மணமும் வாழ்க்கையும்

தாய் தந்தையர், தம் மக்கள் குடும்பச் சேற்றில் அழுந்தி வருந்திக் கலங்கித் தன்புறுதலைக் கண்டுகளிப்பதே இவ்வுலகில் வழக்கம். உலகப் பற்று அற்றவராக இருந்த ஆறுமுகனாரையும் தாய் தந்தையர்கள் குடும்பச் சேற்றில் அழுந்த முற்பட்டு மணஞ்செய்து வைத்தனர். தந்தையார் தாம் பார்த்த ஜார்காவல் தலைமை (போலீசு எட்) அலுவலையும் மகன் பார்க்கச் செய்தார். ஆறுமுகனார் அவ்வாறே சிறிது காலம் இவ்வாழ்க்கையில் இருந்தார்.

துறவு

"எல்லோர்க்கும் காலன் தறவின்னபாழும் கல்லோர் தறப்பர்" என்பது பெரியோர் வாக்கு. காலன் வசமிற் பட்டுக் கை தப்பியோடு மானைப்போல் ஆறுமுகனார் இல் லத்தைவிட்டு இருபத்து நான்காவது அகவையில் வெளிப் பட்டார். கோயிலூர் ஆதினத்தில் இருந்த முத்துக்கறப்ப சுவாமிகள் என்னும் பெரியாரிடஞ் சென்று அருளை பெற்றார். வேதாந்த நூல்களையும் கற்றார். பலரிடம் கனிமருள்ள வேதாந்தமடங்கட்குச் சென்று ஆங்காங்குச் சிறிது காலம் தங்கியிருந்தார். பிறகு காசி முதலிய இடங் கட்குப் பயணஞ் சென்றார்.

திருப்பாங்குன்று

வடநாடுவரை சென்று மீண்ட இவர் மதுரையில் அமர்ந்த அடியவர்கட்கு வேதாந்த நூல்களைப்

போதித்தார். நூல்கள் சிலவற்றிற்கு உரைபொழிந்தார். முருகன் திருவருள் இவருக்கு நன்கு அமைந்திருந் தமையின் எல்லாக் கலைகளையும் எளிதில் உணர்ந்தார். வடமொழிப் புலமையும் பெற்றார். அடிக்கடி திருப்பரங் குன்றிற்குச் சென்று முருகக் கடவுளைப் போற்றி வழி பட்டுக் கொண்டும் இருந்தார். இவருக்குப் பல மாணவர் கள் உண்டாயினர். தம்மிடத்திற்கு வரும் அன்பர்கட்கு வேதாந்த நூல்களின் நுட்பங்களை விளக்கியுரைப்பதோடு அதனை எழுதியும் கொடுத்தார். வேதாந்தக் கலையை அன்பர்கள் நன்குணர்ந்து மெய்ஞ்ஞானத்தைப் பெற வேண்டுமென்பதில் இவர் மிகுந்த ஊக்கங்காட்டினர். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது அறிஞர்களின் கொள்கையன்றோ?

நூல்கள்

க. கிளிக்கண்ணி
உ. ஞானவாசிட்ட அரும்பதவுரை
கூ. விவேகசூடாமணி அரும்பதவுரை
ச. பஞ்சதசப் பிரகரணம் அரும்பதவுரை
ஞ. அத்துவித உண்மை

முதலியன இவரால் இயற்றப் பெற்ற நூல்கள்.

பாட்டு

"பன்னம் புரும்புனல்போல்—நரம் பாமன் சரண்புகுந்தால்
உன்னம் குளிருமடி—கிளியே—நும் அல்லலடி கிளியே—
சிற்பரம் நாம் உணர்ந்தால் செய்வினை யாதுமில்லை
பிற்பெறு பயனுமில்லை—கிளியே பெறுவாழும் பேறுமில்லை"

என்பது இவருடைய கிளிக்கண்ணி.

இறுதி

இப்பெரியார் பார்த்திப ஆண்டு மார்கழித் திங்கள் இருபத்து நான்காம்நாள் திருப்பரங்குன்றத்தில் விதேக

கைவல்யம் அடைந்தார். அடிகளாரின் மாணவர்கள் இவருடைய உடலைச் சமாதி செய்து வழிபடுகின்றனர்.

---

59. சோமநாதபாரதி

தோற்றம்

பாண்டிவள நாட்டில் நெல்லை மாவட்டத்தில் இராமேச நல்லூர் என்னும் அழகன்கூளங் கிராமத்தில் இவர் கொல்லம் 601-ஆம் ஆண்டில் காத்திகைத் திங்களில் பிறந்தார். தந்தையாருடைய பெயர் இராமலிங்க பாகவதர்.

கல்வி

இவர் சோமநாதபாரதி யெனவும் சிவதாசர் எனவும் அழைக்கப் பெற்றார். இளமையிற் கற்க வேண்டிய கல்வி கனை நன்கு கற்கவில்லை. கல்வி யறிவற்றவராகவே தமது காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தார். பலவிடங் களிலும் சுற்றித் திரிவதே இவருடைய பொழுது போக்காக இருந்தது. இவர் திருவேங்கடம் என்னும் ஊரில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தபோது ஒரு பெரியவர் அவ்விடத் திற்கு எழுந்தருளினர். சோமநாதபாரதி கல்வி கற்காத வராக இருந்தும் சிவத்தொண்டுகளில் மிகுதியாக ஈடுபட் டிருந்ததை அப்பெரியவர் கண்டார். சிறந்த அருமறைகள் பலவற்றை இவருக்கு அறிவுறுத்தினர். அது முதல் சோமநாதர் மேலுள் சிறந்த இறையன்பு மிக்கவராகவும் நோன்பு முதலியனவகளைக் கடைப்பிடிப்பராகவும் இருந்தார்.

பாடல்கள்

முருகக் கடவுள் மீது இயற்கையாகவே பெரும் அன்பு கொண்டிருந்த இவருக்குச் செய்யுள்பாடும் திறனும் உண்டாகியது. திருச்செந்தின் மாநகரில் எழுந்தருளிய

முருகப்பெருமான்மீது இசைப்பாடல்கள் பலவற்றைப் பாடினர்.

தேவியின் திருவருள்

ஒருகால் தேவி ஓர் அந்தணச் சிறுமியாக இவர் முன்பு தோன்றினள். "என் பெருமைகளை யெல்லாம் யாவரும் அறியுமாறு நாடகமாகச் செய்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினள். அவ் வருள்வாக்கைத் தலைமேற்கொண்ட இவர் தேவிமான்மியம் என்னும் நூலைப் பாடினர். அந்நூல் இசைப் பாடல்களும் விருத்தப் பாடல்களும் அமையப் பெற்று விளங்குகின்றது. எழுத்துப் பிழைகளுஞ் சொற்பிழைகளும் மிகுதியாக விளங்கக் கொல்லம் 60அசு-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது அந்நூலில் இருந்த இரண்டு செய்யுட்களை அடியிற் காண்க.

" பரசிவன் உமையாள் தேவி பங்கனெம் பெருமா னுதி
அரனுறை கயிலைக் கேகும் ஆனந்த முனிவ ரெல்லாம்
வரமுனி ஒருவன் வாழும் வண்மையாச் சிரமங் கண்டு
வரயிகும் அவனைக் காண்போம் வருகென உடன்சென் றாரே.

கண்ணுவன் சௌண்டி லீயன் காத்தியா யண்வி யாசன்
கண்ணுமத் திரியா யாசான் காரதன் வாம தேவன்
பண்ணுறு பாத்து வாசன் பராசரன் முதலோர் சூழ
விண்ணுளோர் புகழக் கும்பன் விந்தையாய் வாவுங் கண்டே."

நூலினைப் பாராட்டித் திருநெல்வேலி தெற்குப் புதுத் தெரு நெல்லையப்பக் கவிராயர், இராசவல்லிபுரம் என்னு வழங்கும் செப்பறை சங்கர சுப்பிரமணிய காவலர், யாழ்ப்பாணம் சிதம்பர சுவாமிகள், மெய்கண்ட சிவமயம், திருவேங்கடம் சங்கர நாராயண அய்யர், திருமலைசாத்திரியார், வேம்பத்தூர் வேங்கடசுப்ப அவதானி, திருவனந்தபுரம் பத்மநாப ஐயர், திருவனந்தபுரம் முத்துச்சாமிப்பிள்ளை, இராமேசுவரம்

இராமலிங்கம் ஐயர், திருச்செந்தூர் குஞ்சபபாதி என் போர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

" மாமலிடை சூன் மணிமுடியை மர்த்தனித்த
வாமனிதை தாலே வணக்கியே—சேமமிகச்
செய்யமலர் சாத்திபிக்தச் செந்தமிழை ஓதலெல்லே
வையகத்தே கல்வி வரும்."

என்பது நற்பயனுகப் பாடப் பெற்ற பாடல்களில் ஒன்று.

---

௧௯. முருகதாசக் கவிராசர்

தோற்றம்

சோழ நாட்டில் உள்ள குலசேகரபுரத்தில் பரம்பரை வேளாளர் குலத்தில் கொல்லம் ௧0ற0-ஆம் ஆண்டு புரட் டாசித் திங்களில் இவர் பிறந்தார். இவருடைய பிள்ளைப் பெயர் சிவராமலிங்கம் பிள்ளை.

கல்வி

இளம் பருவத்தில் பள்ளிக் கல்வியைப் பண்புடன் கற்றார். முருகப்பெருமான்மீது பேரன்பு இவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. அதிஞர் சிலரை யடுத்து இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றை நன்கு கற்றார். முருகக் கடவுளின் திருவருள் வண்மையால் மிகு விரைவில் புலமையுஞ் செப்புள் பாடுக்திறமையும் பெற்றார். இவர் முருகக் கடவிளிடத்துப் பேரன்புகொண்டு விளக்கு தலைக் கண்ட அன்பர்கள் இவருக்கு முருகதாசக் கவிராசர் என்னும் சிறப்புப் பெயர் வழங்கினர்.

நூல்கள்

இவர் முருகப்பெருமான்மீது தனிப்பாடல்கள் பலவற் றையும் சில நூல்களையும் இயற்றினர். பாண்டிவள

காட்டின்கண் சிறப்புற்றோங்குகிற திரிகூடமலைச்சாரல் திருக்குற்றாலத்திற்கடுத்த வடமேல்பாலில் விளக்கும் சிறந்த பதியாகிலங்குவதும் முருகக் கடவுள் திருக் கோயில் கொண்டு விளக்குவதும் ஆகிய திருமலை என்னும் பதிக்குப் புராணம் இயற்றுதல் வேண்டும் என்று சிலர் விரும்பினர். இவர் அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கிப் பதினைந்து சருக்கங்களில் எழுநூற்று ஐம்பத்து மூன்று பாடல்களில் திருமலைத் தலபுராணம் என்னும் நூலைப் பாடிமுடித்தார்.

பாராட்டு

அந்நூலினைப் பாராட்டிச் சிலைகுண்டம் ஞான சிகாமணி முதலியார், மாயூரம் கலைசாலைத் தமிழாசிரியர் வேலாயுதமுதலியார், பேட்டை ஆறுமுகநயினார் பின்னை, திருநெல்வேலி சோமசுந்தரம்பின்னை என்போர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர்.

அந்தாதி முதலியன

மேலும் அத்தலத்தில் எழுந்தருளிய முருகப் பெருமான்மீது "திருமலைக்குமரன் அந்தாதி" திருமலைக் குமரன் திருப்புகழ், திருமலைக்குமரன் பதிகம் முதலிய வேறு நல்கவியும் இயற்றியுள்ளார்.

" வேதனோப்பிரமன் கேட்ப வின்னவர் அன்னை என்னும்
சாதனை வியாதன் கேட்ப வைமிசர் ணியற்கோன்
சூதனை வியந்து கேட்பச் சொல்லுதும் என்ன அன்பாய்
ஓதலன் பண்பை ஆண்ட முருகுக்தர்க் கருளும் காதை

இகைதை அதனைக் கேட்க இணைவிழை நின்ப மாகத்
தக்கதை என்றன் னேனும் தாழுன மிழ்ச்சி பாலே
மிக்கதை யாவிப் பான்மை விளம்புதற் கெண்மி னென்ன
பக்கமாச் செய்யன் பார்க்குப் பரிவுடன் பகர்வ தானான்."

என்பன திருமலைச் சருக்கத்தில் இரண்டு பாடல்கள்.

" கொதிரு மலைமுருகன் திருவருள்பெற்
றோங்குபெருஞ் செல்வன் செஞ்சொல்
சுகவனிதை கடனமிடு சுமுகனறி
மதரமிர்தன் தநிக்கத் தக்க
சகலவித கலிபுகொடி தனிற்பகருஞ்
சண்டப்ர சண்ட வாசி
புகழ்முருக தாசனரும் புலவர்சிகா
மணிவெனுகற் புனித சிலன்."

என்பது சிறப்புப் பாயிரப் பாராட்டுப் பாடல்களுள் ஒன்று.

---

56. இளையபெருமாள்பிள்ளை (கொ)
[19 - ஆ]

தோற்றம்

பாண்டி மண்டலத்தில் குறிச்சி என்னும் ஊரில் இவர் பிறந்தார். தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை.

கல்வி

இளமைப் பருவத்திலே கல்வி கற்கத் தொடங்கியவர் மிகு விரைவில் பல நூல்களையும் கற்றுச் சிறந்த புலமை படைத்து அறிஞரானர். இவருக்குக் கல்வி கற்பித்தவர்கள் திருநெல்வேலிக் குறிச்சி சாமி உபாத்தியாயரும் சாந்தப்ப கவிராயரும் என்பது நூலின் குரு வணக்கத்தால் பெறப்படுகின்றது. செய்யுளை இனிமையாகப் பாடும் திறமும் இவருக்குண்டாகியது.

நூல்களியற்றல்

இவர் சிறந்த புலவராக விளங்குதலைக் கண்ட சிலர் இவரைக் கொண்டு நூல்கள் செய்விக்க வேண்டும் என்று எண்ணினர். விட்டலாபுரம் என்னும் ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலே ஒட்டப்பிடாரம் பிரிவில் சாத்தூருக்குக்

நிழக்கே உள்ளது. தான் செய்விக்க எண்ணியவர்கள் விட்டிலாபுரத்திற்குத் தலபுராணம், புகழ்தல் முதலியன இவைகளைக்கொண்டு இயற்றவிக்க வேண்டும் என்று எண்ணினர். தமது நோக்கத்தைப் புலவராக வினவும் இடைமலைப் பெருமாள் பிள்ளைக்குத் தெரிவிப்பித்தனர். இவரும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி,

க. விட்டிலாபுரத் தலபுராணம்
உ. விநாயகர் பதிகம்
கூ. சுப்பிரமணியர் பதிகம்
ச. முத்துமாலையம்மன் பதிகம்
ஞ. அறுபத்துமூன்றர் ஆசிரியவிருத்தம்
ட. முத்தாட்சி குலசாதன் பதிகம்

ஆகிய ஆறு நூல்களைப் பாடித் தக்க பொறிஞர்கள் கூடிய அவையில் அரங்கேற்றஞ் செய்தார்.

விட்டிலாபுரத் தலபுராணம்

அந் நூல்களுள் விட்டிலாபுரத் தலபுராணம்: சிறப்புப் பாயிரம், காட்டுச் சருக்கம், நகரச் சருக்கம், காவேரி நகரச் சருக்கம், தலைவரிசைப் படலச் சருக்கம், பாத தரிசனம் பெற்ற சருக்கம், மடக்கு மாணிக்கம் கோத்த சருக்கம், தலைவரிசைக் காவேரிநகரை விட்டு நீங்கிய சருக்கம், திருவலதாரச் சருக்கம், கலக்காத கண்ட பாண்டியனுக்குச் சாப்பனிபனித்த சருக்கம், இராமசாமிப் பாண்டியனுக்கு வினையனித்த சருக்கம், சக்கரவேலுப் பாண்டியனுக்கு மகவளித்த சருக்கம், சிவபூசைச் சருக்கம் என்னும் பதினைந்து சருக்கங்களையும் முந்நூற்றுத் தொண்ணூற்று நான்கு பாடல்களையும் கொண்டதாக விளங்குகின்றது. பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை முதலியவைகளிற் சிறந்து விளங்குகின்றன.

ஆசிரிய வணக்கம்

"மருகல்ல கவிபுகல வருதி தரு
வாணிபுகழ் மறைவிற் பன்னர்
தருகல்ல கவிகளுக்கோர் தலைவனிறை
திருபர்முனந் தசத்தின் மீது
வருகல்ல யிரும்வென் வாத்திரித்த
சிக்கம்மீலை மதியபாத் தக்கம்
திருசெல்லைக் கந்தசா மிக்கவிரன்
சேவடிகள் சென்னி சேர்ப்பாம்;
முரசக்கள் அதிரமணிச் சிலைகையெழக்
கட்டியருன் முழக்க வாகைப்
பரசக்கப் புலவரலை சிலைபுரக்கு
மதிபொலாம் மதிக்க நற்றேன்
இரசங்கள் எனக்கவிகா லட்டாக
தானமெலாம் எடுத்த சானும்
பிரசக்க மழைபொழியும் சாத்தப்ப
சலவன்தான் பேணி வாழ்வாம்."

என்பன நூலின் குருவணக்கப் பாடல்கள். சின்னட்டாத்தி அட்டாவதானி சாத்தப்ப கவிராயர், குறிச்சி கந்தசாமி உபாத்தியாயர் ஆகிய ஆசிரியர் இருவரும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். இவ் விட்டிலாபுரத் தலபுராணம், மதுரை மூத்தராமசாமிச் செட்டியார், தூலுக்கப்பட்டி கந்தசாமிச் செட்டியார் என்பவர்களால் கஅசுஅ-ஆம் ஆண்டில் மதுரை பாண்டியன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

4. சிறப்புமிகுந்த சம்பந்தம்

தோற்றம்

பாண்டிநாட்டிலே குன்றத்தூருடனே ஒன்றாக வுள்ள வள்ளி மாகரம் என்னும் ஊரில் தொகை யூம் தூய் திலி இவர் பிறந்தார். தங்தையார் பெயர் சம்பிரமணிய பின்னே, தாயார் பெயர் முத்தம்மாள்.

கல்வி

தெம்பரம் என்ற பெயரிடப் பெற்ற இவர் அகவை ஐந்து நிரம்பிய பின் பள்ளியில் வைக்கப்பட்டுப் பள்ளிப் படிப்பைப் படித்து முடித்தபின் இல்லத்தில் இருந்து கொண்டிருந்தார்.

வறிய வலி

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்" என்பது தெய்வப் புலவர் திருவாக்கு, இவர் பழம் பிறப்பிற் செய்த தீவினையாற் போலும் சோம் களிற் கொடிய வறிய சோம் உண்டாகியது. அச்சோயைப் போக்கிக் கொள்வதற்கு இவர் எவ்வளவோ மருந்தகளை அருந்தியும் எத்தனையோ பரிகாரங்கள் உண்டாகவில்லை. யாரும் அச் சோம் மிருதிப்பட்டுக் கொண்டு சென்றதை பன்றிச் சிறிதும் குறையவில்லை. வள்ளூரில் தங்கியிருந்த இவர் இதற்கு முன்னரே திருவாலங்காடு ஆதிசம் பதினான் காவது பட்டம் சம்பிரமணிய தேசிகர்பால் தீட்சையும் கல்வாடையும் பெற்றிருந்தனர்.

தெய்வீக நிருவருள்

ஒருவன் இவருக்கு வறிய வலி பொறுக்க முடியாத அளவுக்கு மிருதிப்பட்டு விட்டது. ஆகவே இனிய

ஒன்றில் வீழ்ந்த தம் உயிரைப் போக்கிக் கொள்வது என்று முடிவு செய்து கிணற்றுக்குப் போய் விழத் தொடங்கினர். அவ்வளவில் இறைவியாளவள் ஒரு சிறு பெண்ணைப்போல் இவர் முன்பு தோன்றித், "தற்கொலை செய்துகொள்வது மிகுந்த தீவினைபின்பாற்பட்ட செயலாகும். அவ்வாறு செய்தலைத் தவிர்தி. பஞ்ச பாண்டவர்களாற் கட்டப்பட்ட இக்கோபுர வேலை இன்னும் குறைவாக இருப்பதை நீ திருப்பணி செய்து நிறைவேற்றுவாயாக," என்று கூறி மறைந்தனள். பெண்ணுரு வந்த இறைவி திடீரென மறைந்ததைக் கண்ட இவர் வந்தவள் பார்வதியே என்று தெளிந்து உடனே திருப்பணி வேலையைச் செய்யத் தொடங்கியதோடு மலைமேற்று வழிபாட்டிற் களித்தலாகிய மலர்ப் பணிவிடையையுஞ் செய்யலாயினர். அன்று முதல் வலிற்றுவலி சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கி நாளடைவில் முற்றும் நீக்கியது. அதனால் இவர் மிகுந்த களிப்பெய்தினர் கடனுன் ஆற்றினர். அக் களிப்பால் செய்யுள் பாடுந் திறனும் கைவந்தது. திரியுகங் கண்ட தேவி என்னும் இறைவிமீது,

"பொன்னில மாத ரசை பூண்டனு நினமுஞ் சிந்தை
மன்னமா முாத்து வாடும் மதியிலென் தன்னை யாள்வாய்
தன்னமா பூகக் தெங்கு சூழ்பொழில் வள்ளி யூரில்
தென்னவன் உய்ய வந்த திரியுகங் கண்ட தேவி."

என்பதை முதலாக் கொண்டு மூப்பது பாடல்கள், "திரியுகங் கண்ட தேவி மாலை" என்னும் பெயருடன் பாடினர்.

இறுதி

இவ்வாறு திருவருள் பெற்ற இப்பெரியார் இறைவியின் திருப்பணியைக் குறைவறு நிறைவேற்றி எல்லா நலங்களும்

இனிது பெற்றுச் சிறப்புற்றனர். பிறகு இவர் திருநெல் வேலி, மதுரை, திருவாவடுதுறை, திருத்தில்லை முதலிய சிவப்பதிகட்கு இறைவழிபாட்டிற்குச் சென்று மீண்டு திருநெல்வேலியை அடைந்து அங்கும் பல திருப்பணிகள் செய்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

---

௧௯. முத்துவேலுக் கவிராசர்

தோற்றம்

இவர் ஏறக்குறைய நூற்றைம்பதாண்டுகட்கு முன்பு பாண்டிநாட்டில் தம்பிப்பட்டி என்னும் ஊரில் இருந்தவர். இவருக்கு வாலசரசுவதி என்னுஞ் சிறப்புப் பெயரும் வழங்கியது.

கல்வி

இவர் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்று ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்னும் நான்கு வகையான பாக்களையும் பாடுவதில் வல்லவராக விளங்கியிருந்தார். சைவசித்தாந்த நூல்களில் வல்லவராக விளங்கிய சங்கர லிங்க முனிவர் என்பவரை அறிவாசிரியராகக்கொண்டு அருளுரையும் பெற்று விளங்கினர். வேதாந்த நூல்களிலும் இவருக்கு மிகுந்த பயிற்சியுண்டு. அந்நாளில் இருந்த மருதபாண்டியன் என்னும் பெருநிலக் கிழாருடைய அவைக்களப் புலவராக இவர் விளங்கினர். அவர் இவருக்குப் பூலாங்குண்டு என்னுஞ் சிற்றூரை முழு உரிமையுடன் பயன்படுத்திக்கொள்ளும் உரிமையை வழங்கியிருந்தார்.

சென்னைக்குச் செல்லுதல்

நாடு முழுவதுஞ் சுற்றிவரவேண்டும் என்னும் அவா இவருக்குண்டாகியது. அந்நாளில் சென்னைமா நகரில்

அசரத வோப் என்பவருடைய அமைச்சராக இராமசாமிப் பிள்ளை என்பவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளில் வல்லவர்; சிறந்த கொடையாளி. அவரைச் சென்று பார்க்க வேண்டும் என்று விரும்பிய இவர்,

"புணிதமிரு சாத்தலி லிலாசன்மெய்த் தகலுரன
பூரணன் வசவ சமப்
பொக்கிஷ்ம தானசக் கரலிக்க முனிவனிரு
பொற்பதத் தன்னே சிதரும்
போற்றசெய முத்துவே லாயுதக் கவிராச
பூபன்வர வீட்ட னைது
பூமண்ட லாதிபதி அசரது சபாபகம்
பூரணம தாக வெச்சும்
புரவல குபோபாக் கியராம சாமிநற்
புண்ணியன் வதிர்த்து கண்ட
புகழான் மெதுசப சரமெலாக் கேளுமற்
புதமான தென்கு முந்தா
புரியிலகு தனைமுத்து வடுகர தேந்ரன்மகிழ்
புவனமுழு தம்பு சக்கும்
பூபாலன் விசைவலர் பருதபான் மயரச
போசனுயர் சமுக மதனில்
னைதபெற பஞ்சலட் சணவிதட் சணைலம்
சமழும்வே தாந்த வாரி
லோசண்ட முவில்சப்ர மணியவிற் பனவி
சனென்ற மிலவி யலிலத்
சணலிலத் விபகத் பணச்சொக்க சாதத்
சலிச்சத்ர வர்த்தி என்றன்
சருங்குளஞ் சக்கர நாயண வதானிமரு
கன்சொக்கு பூபன் என்றன்
கல்லிப்ர சஞ்சிசக் கரையுதவு சாத்தக்
கலிச்சிரோ சத்தின மென்றம்
கலைமும்ற லித்வசனர் தழிமுத் தமிழ்க்குமதி
காரியுப காரி சலை

கலிங்கபுனை காகவிக் கேத்தனென் றும்மதர
கவியனைத் தகவி யென்றுங்
கலைமதக் கொண்டிடு சவாதுக் கலிச்சபை
காம்பீர்ய தூக்கன் என்றும்
மனமது சபைக்குண்மலி யாமத்ச பாசென
வழுத்தம்வெண் பாப்பு லிக்கா
வலனென்று கீழுபொன் னக்காவி னுரென்றும்
வளரிலக் கணவி ளக்க
மாகிலா மணியெனும் பண்டார மென்றுகல்
வாக்கியா வினடாரா தாரா
வலனென்று மிந்நிலவேல் தூரிலெறு செவ்வூரில்
வருகவிரு ரென்றும் வாணர்
மருவுகொன் றைக்குளத் தண்ணலி யாரென்றும்
வளமிகக் கண்டு கொண்ட
மாணிக்க காட்டினில் வினவ்விய தமிழ்ச்சிகா
மணியெனும் பெரிய முத்த
மாரியப் பக்கவிரு ரென்றதி குலசைவ
மணிதிருப் புத்தூர் வளர்
வாலசரஸ் வதிவெனது பாட்டனென வுயர்முத்த
மாரியப் பேத்தர் கவிஞன்
னைவுமே பெயர்பெற்ற முத்தமி ழகத்தியற்
கெண்மடங் கதிக மாதேனர்
இப்படிக் கவிவலவர் பதினு யிரம்போர்கள்
இவர்கள்தமில் ஒருசிறியன் யான்
ஏதவிடம் விட்டுவெகு தூரதொலை தனில்வந்த
தென்னிணில் வுலக மதனில்
எமதுரை யேராச ராசர்கள் சிரோன்மணி
னைத்துதித் தவர்கள் சமுகத்
திலகுபிர பந்தகவி வாவசரஸ் வதிபுரம்
னைவுசெற் பெயர்சை ஜுத்தி
யாவரும் புகழுவே செயவிருது பெற்றிடவும்
இயல்பாக வந்தேன் அலால்
இல்லாமை யால்வந்த தன்றுநீ தமிழ்அறிக்
திலலர்க் குதவு தாரன்

என்னலால் உனைநாடி வந்தனன் கீர்த்திசேர்
இலகநீதி அருள்புரி வையே.''

என்னும் சீட்டுக் கவியை இயற்றிக்கொண்டு சென்றார். அவருடைய சமூகத்தில் சில ஆண்டுகள் அவரால் ஆதரிக்கப் பெற்றிருந்தார். சிவிகை முதலிய நன்கொடைகள் வழங்கி இராமசாமிப் பிள்ளை இவரைப் பெரிதும் பாராட்டி வைத் திருந்தார். அவரிடம் கடந்த சிறப்புக்களால் தமது நாட்டையே மறந்து நான்கு ஆண்டுகள் சென்னையில் இருந்துவிட்டார். அதன் பிறகே இவருக்குச் சொந்த ஊரைப் பற்றி எண்ணம் உண்டாகியது. தம்முடைய ஊருக்குத் திரும்ப எண்ணினார். புறப்பட்டுப் புதுச் சேரிக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது அங்கு ஆங்கி லங்கப் பிள்ளை என்னும் பெரிய செல்வர் ஒருவர் இருந்தார். அவர்மீது, ''மயில் விடு தூது'' என்னும் நூல் பாடி யருள் கேற்றினர். இவரைப் பாராட்டி ஆங்கிலங்கப் பிள்ளை செய்ய வேண்டிய சிறப்புக்களை யெல்லாம் குறைவில்லாமற் செய்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் திருத்தில்லை, திருச்சிராப்பள்ளி முதலிய ஊர்களின் வழியாகத் தமது ஊரை யடைந்தார். இவருடைய வரவிலே இவருக்குப் புதுமை யான செய்திகள் காத்துக்கொண்டிருந்தன. சிற்றரசர் களிடம் சிற்றூர் முதலியவைகளை நன்கொடையாகப் பெற்று ஆண்டனுபவித்து வருவோர் அடிக்கடி அவ்வரசர் களுடைய அவைக்குச் சென்று அவர்களைச் செய்யுள் முதலியவைகளால் மகிழ்வித்து வரவேண்டியதை கட்டாய மாகும். முத்துவேலுக் கவிராயர் நான்கு ஆண்டுகளாகத் தமது பாவைக்கு வராமற் போகவே மருதபாண்டியர் இவருக்களித்திருந்த பூலாங்குண்டு என்னுஞ் சிற்றூரைத் தீர்வைக் கிராமமாக்கிவிட்டார். இவர் மேலும் அக் கிராமத்தை இனாமாகப் பெற மருதபாண்டியர் மீது,

"ஞாலமதில் உயர்கின்ற நிலவகத்தை ஆகதியே
காட்டிய கிரீட யான
ஈசேத்தி ஈசெயம் செயம்விசயம் மேவுரகு
ஈமச செயஞ் செயக்கன்
ஞமருகு பாண்டியதே வைபேசெயஞ் செயமெனது
கலமகிழ்ந் தினிது கேண்மோ
சாலுவரு டஞ்சென்ன பட்டணத் தசாது
சவாபுசாய் பவர்கள் சதிரில்
சதிருலா தியன்றாம சாமிபூ பதிதயவி
ஞற்சிவிகை வெகும திகளும்
கல்முறப் பெற்றுமவி டத்துப்பி ரபுகள்சேய
கயமுற்றும் இவ்வி டம்வா
காடிமூட் டைக்காரர் சத்திரம்வந் தோதாமன்று
இராத்திரிப் பெட்டி யுடனே
கைகவைக வராகனுள தைப்பிரா மணரிருவர்
கலியாது வைத்கொண்டு மப்
பாலவர்க ளும்போயி லுர்யான் விழித்தனைப்
பார்த்தவுடன் மனது கவலை
பாய்ந்தவர்க ளோத்தேடி புக்காண்கி லாமலிது
பகலசக் கற்ப மென்ற
பாதைகூ டிப்புதுச் சேரிதனில் வந்தயான்
பரிதபித் திடும்வே ளையில்
பரியுற குழந்தைகட் கணவெனவும் வாடிய
பயிர்க்குமழை மாரி யெனவும்
பாவான ருக்குதவு கற்பதரு புதுவையம்
பதியாதி பதிதன் செயம்
பதியமர சிம்மமக ராசசரு கஞ்சேது
பதிமற்று முனவர் சாதம்
பரிவுற்று மேவதிக விருதுபெற கங்கைகுல
பாக்கிய சிலாக்கிய தமிழ்வித்
பன்னன்முன் முவேவாரி யண்ணலன் மேழிப்
பதாகையன் பூமி பாலன்
யாலமத சுரூப ஞனந்த ஞனசெய
மாலன்னை உனது சமுக

வாசற்ற பந்தலி வாலசரல் வதியென்ற
மாத்ரமே வரவ ழைத்து
மாதயவு செய்ததால் அவன்மீ தி யாதுமொரு
மயிலிசைத் தூது சொல்ல
மனமிக மிழ்ந்திக வெதுமதிகன் செய்திச்ச
லையமதில் உமது தனைபோர்
வரவே புனைமுமென் மேறுமே தநியுமென
வண்மையொழி கூற வேபவ்
வரிசைபெற் றவனிமிக வாழ்த்திபே நில்லைகச்
வத்துபொன் னம்ப லத்தில்
மருவுட ராசனைத் தெரிசனஞ் செய்தால்
வழிமார்க்கம் எய்தி விடைவாய்
வளமிகுஞ் நிரிசிர புரத்தில்முத் தாக்கிருட்ண
மாலுதவி கொண்டு மிப்பால்
கோலமிகு தென்திருப் புத்தூரில் வத்தாகம்
குலதெய்வ மாகி யருளே
குடிகொண்ட காளியை யலமுர்த்தி இருபதம்
கும்பிட்டனைதஞ் சென்ற
குருவான ஞானசக் கரவிக்ச மாமுனிக்
குரிசிலே மனத்துள் வைத்துக்
கோனைக மலரலரும் வாவிதனி லேபசிய
கொட்டிபு மலர்ச்த தெனையான்
குணமுற்ற தமிழ்வித்வ சனருற்ற யுயர்முக்ய
கொறுவுனது சமுகம் வந்து
குழவிதாய் முகாதும் அதுவெனக் கருணைபொழி
குளிர்முகம் அதனை யடினேன்
குலவுசிவி வகக்கதிக விருதரும் பனமும்
கொடுத்தருன் னிலைமை பூலாக்
குண்டுவய லுர்த்த என்றன்ன தயவுளம்
கொண்டெனைக் காத்தருள் வவியே."

என்றுஞ் செய்யுளைப் பாடினர். கதிராசச் செட்டியார் முதலிய இடங்கட்குச் சென்று சிறப்புற்றவர்களை உணர்ந்த மருதபாண்டியர் மீண்டும் அவ்விராமத்தைத் கொடுத்

தக் கனப்படுத்தினர். மருதபாண்டியர் காலம் வரை இவர் அவருடைய அமைச்சராகவே இருந்து பெருமை பெற்றார். இவர் அல்லல்படுக்கணிற் பாடிய தனிப்பாடல் களும் நான்களும் பல. இவருடைய வழி முறையினருந் சிறந்த புலவர்களாகவே விளக்கிச் சிறப்புடனந் சிருடனும் வாழ்ந்திருந்தனர்.

---

20. சேரமான் ஐயர்

தோற்றம்

இவர் இராமநாதபுரம் மாவட்டத்திலே பெருங்கரை என்னும் ஊரில் கழகை-ஆம் ஆண்டிற் பிறந்தார். தந்தை யார் பெயர் சகசுகாத ஐயர், தாயார் பெயர் பார்வதியம்மாள்.

கல்வி

இவர் தமது ஐந்தாவது அகவையிலேயே தந்தையை இழந்த பாட்டனாரான கனிருஞ்சாபாரதியிடம் வளர்ந்தார். தமையனரும் தாயாரும் உடனிருந்தனர். கல்விகற்கத் தொடக்கிய இவர் பி. ஏ. வரை கற்றுப் பட்டம்பெற்றுச் சென்னை உயர்நீதி மன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக அலுவல் பார்த்தார்.

தமிழ்ப்பற்று

கனிருஞ்சாபாரதி சிறந்த தமிழ்ப் பற்றுடையவர். இசைப்பாடல்களையும் பிற பாடல்களையும் இயற்றம் திறமை படைத்தவர். சேரமான ஐயருக்கும் தமிழ் நூல்கள் பல வற்றைக் கற்பித்துத் தமிழ்ப்புலமையை உண்டாக்கினர். சேரமான ஐயருக்கு இயற்கையிலேயே தெய்வப்பற்றும் மிகுதியாக இருந்தபடியால் தமிழ் நூலில் நல்ல புலமை உண்டாயிற்று.

நூல்கள் இயற்றல்

தெய்வ வழிபாட்டில் மிகுந்த பற்றுக்கொண்ட இவர், மதுரை பொற்றாமரைக் கரையில் எழுந்தருளிய சித்தி விநாயகர்மீது பதிகம், மதுரைக்கோயிலில் எழுந்தருளிய சுப்பிரமணியக் கடவுள்மீது மதுரைச் சண்முகமாலை, சோம சுந்தரக் கடவுள்மீது சுந்தரேசுவரர் பதிகம், அங்கயற் கண்ணி பேரிலும் கயற்கண்ணி பதிற்றுப்பத்தந்தாதி முதலிய தோத்திர நூல்களை இயற்றினர். பூச்சி சீனிவாச ஐயங்கார் என்பவரிடம் இசைப் பயிற்சியையும் நன்கு பெற்றிருந்த இவர் எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங் கள் அடங்கிய கந்தகாணாமுதம் என்னும் இசை நூலையும் இயற்றினர்.

இறுதி

புகழ்பெற்று விளங்கிய இவர் தமது எழுபத்தோரா வது அகவையில் ஈசுவரு-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ் வைத் துறந்து இறைவன் திருவடிநீழலை யடைந்தார்.

உக. உலகம்மையம்மாள்

[1856]

தோற்றம்

இவ்வம்மையார் பாண்டிவளநாட்டிலே திருநெல்வே லிக்கு வடக்கேயுள்ள வள்ளிகோன்ஏந்தல் என்னும் ஊரில் குப்பையாண்டிபாபிள்ளை என்பவருக்கு மகளாகப் பிறந்தனர்.

முருகன் திருவருள்

அம்மையார் பிறந்து அகவை எட்டை யடைந்திருந் தனர். அப்போது கல்வியைக்குறிச்சி மடத்திலிருந்து

வந்திருந்த ஒரு பெரியவர் இந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு, "இக்குழந்தை நல்ல நிலைமைக்கு வரும் என்று தோன்றுகின்றது. இதற்கு ஐந்தெழுத் தருமறையைக் கற்பியுங்கள்," என்று கூறிச் சென்றனர். வீட்டிலிருந்தவர்கள் அப்பெரியவர் கூறியதைக் கேட்டும் பாதுஞ் செய்யாது பேசாமலிருந்துவிட்டனர். ஆனல் இதனைக் கேட்டுக் கொண்டிருந்த பெண்ணுக்கோ மிகுந்த மனவருத்தம் உண்டாகியது. ஐந்தெழுத் தருமறையைக் கேட்டால் அல்லாமல் உணவு கொள்வதில்லையென்று உறுதி செய்து கொண்டிருந்தனர். ஒருநான் இரவு கண்களை மூடிக்கொண்டு இறைவனை எண்ணியிருந்தபோது அருமுகப்பரமன் குழந்தை வடிவாய் அம்மையார்முன் தோன்றி, "ஓம்சிவ சரவணபவா" என்னும் ஆறெழுத் தருமறையை அருளி "இதனை இயம்புவாயாக" என்றுகூறி மறைந்தனன். அந் நாள்முதல் அம்மையார் அம் மறையைச் செம்மையாக எண்ணி வந்தனர். அம்மையாருடைய பழக்க வழக்கங் களும் புதுமையாகத் திகழ்ந்தன. முருகனுடைய திரு வருள் அம்மையாருக்கு எளிதிற் கிட்டியது.

இல்லறம்

உலகம்மையார் அகவை பதினைந்தை அடைந்தபோது பெற்றோர்கள் திருமணஞ் செய்துவைக்க எண்ணினர். கழுகுமலையில் இருந்த ஆதிகாரணபிள்ளை என்பவ ருக்குத் திருமணஞ் செய்துகொடுத்தனர். பன்னிரண்டு ஆண்டுகள் இல்லற வாழ்வு இனிது நடைபெற்றது. அதன் பிறகு கணவன் காலமானன். மேற்கொண்டு அம்மையார் சில ஆண்டுகள் இல்லற வாழ்வில் இருந்து அகப்பற்று, புறப்பற்றுக்களை யொழித்துப் பின்னர்த் துறவு நெறியை மேற்கொண்டு மோனநிலையில் இருந்தார்.

துறவும் பாடலும்

துறவு நெறியை மேற்கொண்ட அம்மையார் காசி முதலிய இடங்கட்குப் பயணம்போய் கெல்லிக்கு மீண்டனர். சிக்குபூந்துறையில் இருந்த குருவிகுளம் வேத நாயக அடிகளிடத்திலும், தென்காசி தாலுகா ஆயக்குடி பரமசிவ அடிகளிடத்திலும் அருளுரை பெற்று அறிவு நெறியை மேற்கொண்டு திட்டைகூடினர். முருகக்கடவுளுடைய திருவருளால் செய்யுள் பாடுந்திறம் உண்டாகியது. விருத்தம், வெண்பா, கண்ணி, இசைப்பாடல்கள் முதலிய பன்னிரண்டு நூல்களைப் பாடினர். இப் பாடல்கள் "சிவக்ஞான பாடல்கள்" என்னும் பெயரோடு ககுகச-ஆம் ஆண்டிலே அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டன.

"நச்சுமா மரம்போல் நாயினேன் வளர்ந்து
நாளெலாம் கழித்தனன் அவமே
இச்சையே புரிந்தேன் இடரெலாம் விளைந்தேன்
எட்டிபோல் இருக்கின்றேன் எந்தாய்
செச்சையி லாடுந் திருவடி கண்டு
சென்றுனின் றடைந்திடாப் பாவி
பச்சம்வைத் தென்னைப் பரவெளி சேர்த்தான்
பாவகி அடைக்கலம் உனக்கே"

என்பது அம்மையாருடைய பாடல்களில் ஒன்று.

உஉ. அண்ணாமலை ரெட்டியார்

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே திருநெல்வேலி மாவட்டத்திலே கரிவலம் வந்த நல்லூருக்கு அண்மையில் உள்ள சென்னிகுளம் என்னுஞ் சிற்றூரிலே அண்ணாமலை ரெட்டியார் ககுசுக ஆம் ஆண்டிற் பிறந்தார். தந்தையார் பெயர் சென்னவ ரெட்டியார். தாயார் பெயர் ஓவு அம்மாள்.

தந்தையார் கட்டளை

அண்ணாமலை செட்டியார் தோன்றிய குடும்பம் மிகுந்த ஏழ்மைக் குடும்பம். அண்ணாமலையாரின் தந்தையார் அன்றாடம் கூலி வேலை செய்து குடும்பத்தைக் கடத்திக் கொண்டிருந்தார். அண்ணாமலையைத் தந்தையார் சிலகாலந் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு அனுப்பினர். தமிழை எழுதவும் படிக்கவும் அண்ணாமலையார் உணர்ந்து கொண்டார். அவ்வளவில் தந்தையார் தம் மூன்றாவது மகன் படித்தது போதும் என்று முடிவு செய்து பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்தினர். அதனை பத்தான உடனேயே உழவுத்தொழில் மூதலியனவைகளிற் பயிற்சி பெறச் செய்தார் தந்தையார். எங்கே எவர் என்ன வேலைக்கு அழைத்தாலும் சென்று அவ் வேலையைச் செய்து கூலி பெற்றுவர வேண்டுமென்பது தந்தையாருடைய கண்டிப்பான கட்டளை. அவ்வாறே வேலை செய்து நாள் கழிக்கத் தொடங்கினர் அண்ணாமலையார்.

கல்வித் தருத்து

தமிழ்மொழியை நன்றாகக் கற்கவேண்டும் என்னும் ஆர்வம் அண்ணாமலையார் உள்ளத்தில் அளவு கடந்ததாக விருந்தது. உழைத்தால்தான் உணவு கிடைக்கும் என்னும் நிலையில் இருந்த அவர் தம்முடைய அவாவை நிறைவேற்றிக் கொள்ள வகையற்றவராக இருந்தார். இந்நிலையில் இரண்டாண்டுகள் சென்றன. வேலையில்லாத காட்சனில் அவ் வூரில் இருந்த ஒரு மடத்திற்குப் போய்ப் பொழுது போக்குவது அண்ணாமலையாருக்கு வழக்கம்.

அடிகளாரும் உதவியும்

அண்ணாமலையாருக்கு நல்லூழ் வந்தது. அவ்வூரில் உள்ள மடத்திற்குச் சுந்தர அடிகள் என்னும் பெரியார்

ருவர் வந்தார். அவர் இரெட்டியார் குலத்திற் பிறந்தவர். தமிழ்நல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்தவர். மொழிப் பற்று உடையவர். தென்னட்டில் அன்னதான மடம் என்ற சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற கலைப்புரம் மடத்தில் இருந்தவர். இம்மடம் அதற்குக் கிளைமடம். ஆகவே மேற்பார்த்தற் திருத்தி உணக்கொடை நன் முறையில் கடைபெறுதற்கு வழிவருக்கும் கோக்கத்தோடு வந்திருந்தார். அண்ணாமலையார் சுந்தர அடிகளாரிடம் நெருக்கிப் பழகத் தொடங்கினர். "தமிழ்நூல்கள் எதேனும் தங்களிடம் இருந்தால் கொடுங்கள்." என்று கேட்டு வாங்கிப் படித்து வந்தார். இவர் நூல்களை வாங்கிக் கருத்துடன் படிப்பதைக் கண்ட அடிகளார் இவருடைய உள்ளத்தில் இருந்த தமிழார்வத்தை ஒருவாறு உணர்ந்து கொண்டார். உரைவு முதலியன அளித்தற் தம்மிடமே தம்மிருந்த நூல்களைப் படிக்குமாறு செயதார். அண்ணாமலைக்குத் தமிழார்வம் மிகுதிப்பட்டதால் வேலைக்குச் செல்வதை அடியோடு நிறுத்திவிட்டு நூல்களைப் படிப்பதிலேயே காலம் செலவிட்டார். தந்தையார் வேலைக்குப் போகுமாறு கட்டளையிட்ட பொதெல்லாம் போவதாகக் கூறிவிட்டு மடத்திற்கு வந்த நூல்களைப் படித்துக்கொண்டிருந்தார். இவர் வேலைக்குப் போகாமல் மடத்திற்கு வந்த கொண்டிருந்ததைக் கண்ட தந்தையார் மடத்திற்கு வந்த இவரைப் பிடித்து அடித்தார். இவர் அடிபடுவதைக் கண்ட அடிகளார், "ஏன் அடிக்கிறீர்?" என்று தந்தையாரைப் பார்த்து உரைத்தனர். அதற்குத் தந்தையார், "வீட்டிலே குடிப்பதற்குக் கூழ்கூடக் கிடையாது. இவரை என்றும் மடத்திற்கு அடிக்கடி படிப்பதற்கு வந்துவிடுகிறான். வேலை செய்து கூலி வாங்கிவராவிட்டால் குடும்பம் பட்டினியாகக் கிடக்க நேரிடும். நாங்கள் பிச வறிய,

சினைமையில் வாழ்கிறோம். எங்கள் குடும்பப் பிள்ளைகளிற் கேலி செய்யக்கூடியவன் இவன் ஒருவன்தான். மற்றைப் பிள்ளைகள் இவனுக்கு இளையவர்கள். இவனும் சாதுரியம் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறோம். தனாதன உழைத்தாலன்றோ குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவரலாம. இவ்வளவு படிப்பதற்கு அவகாசம் கொள்ளுகிறான். இவ்வளவு இளமைப் செய்யாதிருக்கும் பொருட்டுத்தான் அடித்து அச்சுறுத்து கிறேன்," என்று மறமொழி கூறினர்.

அடிகளார் தோக்கம்

அவர் கூறியதைக் கேட்ட அடிகளார் உள்ளத்தில் அண்ணாமலையார் கல்வி கற்பதற்கு உதவி செய்யவேண்டும் என்னும் அவா உண்டாகியது. அவர் அண்ணாமலையாரின் தந்தையாரைப் பார்த்து, "இவனை அடித்துத் துன்புறுத்த வேண்டாம். கல்வி கற்கும் ஆர்வம் இருப்பதால் மடத்தில் உணவுகொடுத்து நான் கல்வி கற்பிக்கிறேன். இன்று முதல் இவன் என்னிடமே இருக்கட்டும்; நீங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள்," என்று கூறினர். அண்ணாமலையாரின் தந்தையார் அடிகளாரின் கட்டளைக்கு இணங்கியவராய் அண்ணாமலையாரை மடத்திலேயே விட்டுச் சென்றார். அன்று முதல் அண்ணாமலையாருக்குக் குடும்பக் கவலை ஒழிந்தது. மிகுந்த மனமகிழ்ச்சி பெற்றார். மடத்தி லேயே தங்கி தாள்களைப் பயிலத் தொடங்கினர். அண்ணாமலையாரின் கல்விப் பயிற்சிக்கு ஆகவேண்டிய உதவிகளை யெல்லாம் அடிகளார் செய்தார். தாம் கற்றிருந்த தாள்களை யெல்லாம் கற்பித்தார். அடிகளாரை ஆசிரியராகவும் தந்தையாராகவும் கொண்டு அண்ணாமலையார் ஒழுகி வந்தார். சூடாமணி நிகண்டு, நன்னெறி, நைடதம், பாரதம், திருக்

குறள், முதலிய பல நூல்களை ஓதியுணர்ந்தார். செய்யுள் பலவும் நிறையக் கற்றுக் அமைந்தது. பயம், நிரப்பு, மடக்கு முதலிய சொல்லணிகள் அமைத்துப் பாடத் தொடங்கினர். அண்ணாமலையரசின் அறிவாற்றல் அடிகளாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. இலக்கணமும் கற்பிக்க எண்ணினார்.

சேற்றூர் சேறல்

சேற்றூரை யடுத்த முகவூரில் கந்தசாமிக் கவிராயர் இராமசாமிக் கவிராயர் ஆகிய இருவரும் இலக்கணத்திற் சிறந்த புலவர்கள் என்றும், இராமசாமிக் கவிராயர் சேற்றூர் மன்னர் வடமலைத் திருவாத சுந்தரதாசுத் தனைக்குத் தமிழ் இலக்கண இலக்கியங் கற்பித்தவர் என்றும் அடிகளார் அறிந்திருந்தார். அம் மன்னர் வழி யாக அவ்விருவரில் ஒருவரை இவருக்கு ஆசிரியராக ஏற் படுத்தவேண்டும் என்று எண்ணினார். அண்ணாமலையரசைப் பார்த்துத் தமது எண்ணத்தை வெளியிட்டார். சுந்தர தாசுத்தனையும் செய்யுள் பாடுமாறு கட்டளையிட்டார். அண்ணாமலையரும் அவ்வாறே இயற்றினர்.

பிறகு இருவரும் ஒருநாள் சேற்றூருக்குப் போய்ச் சுந் தரதாசுத் தனையைக் கண்டனர். கலைப்புரம் படைத்த தலைவர் என்றும், செந்தமிழ்ப் புலமையுடையவர் என்றும், உண்மைத் தூதர் என்றும் அடிகளாரைப்பற்றி அரசர் முன்னரே அறிந்திருந்தபடியால் சிறப்புடன் வரவேற்றார். பிறகு உணவருந்திவிட்டு அரசரும் அடிகளாரும் உரை யாடிக் கொண்டிருந்தனர். அடிகளார் அரசரைப் பார்த்து, "இப்பையன் இரெட்டியர் குலத்தினன். எமது குலமும் இரெட்டியர் குலமே யாகும். எங்கள் குலம் கல்வியில் முன்னேற்றம் உடையதன்று. இப்பையனுடைய பெயர்

அண்ணமலை. இவன் தமிழ் கற்பதில் பேரார்வம் உடைய வனாக இருக்கின்றான். இலக்கிய நூல்கள் பலவற்றை நான் கற்பித்திருக்கிறேன். செய்யுள் பாடும் திறமையும் நன்கு அமைந்திருக்கிறது. இலக்கணம் கற்பிப்பதற்கு என்னால் இயலவில்லை. இவனுக்கு இலக்கணம் கற்பித்தல் புலவனுக் குரிய தக்கோனுடைய கடமையாகும். தன்னிடம் செய்யுள் பாடிக்கொண்டு வந்திருக்கின்றான். நாங்கள் அதனைக் கேட்டால் இவனுடைய அறிவுத் திறமையை உணர்ந்து கொள்ளலாம்," என்று கூறினர்.

செய்யுள் அரங்கேற்றம்

செய்யுளைப் படிக்குமாறு கட்டளையிட்டார் சேற்றூர் மன்னர். அண்ணமலையார் தாமியற்றிவந்த செய்யுட்களைப் படித்தார். கருத்துடன் கேட்டார் சேறை காவலர். பாடல்கள் சொல்லின்பம் பொருளின்பம் பொருந்தியிருப் பதையும், யமகம் திரிபு முதலிய அணிகள் அமைந்திருப் பதையும் பார்த்து வியப்படைந்தார். ஒவ்வொன்றாகப் படித்துக் காட்டிப் பொருள் விளக்கிவரும்போது, ஒரு செய்யுளில் கந்தரதாசு பூமனே என்று படிப்பதற்குப் பதிலாக வெங்கடேசுர பூமனே என்று வாய்தவறிப் படித்து விட்டு உடனே திருத்திக்கொண்டார். செய்யுட்கள் எல்லாம் படித்து முடிந்தன. அடிகளார் அரசருடைய முகத்தைப் பார்த்தார். அரசர் தம்முடைய மனநிறைவைத் தெரிவிப் பார் என்பது அடிகளார் எண்ணம்.

மாறுபட்ட மனம்

அடிகளார் எதிர்பார்த்ததற்கு மாறான உரைகளை மன்னர் கூறத் தொடங்கினர்: "இச் சிறுவன் இவ் வளவு சிறந்த செய்யுட்களை எவ்வாறு இயற்ற முடியும்? எட்டையபுரம் மன்னருடைய அவைக்களத்தில் இருந்த

கதை முத்துப் புலவர், ராகப் முத்துப்புலவர் என்னும் இருபுலவர் இவை பொன்ற செய்யுட்களைப் பலதலைமுறை கேள்விப் பட்டிருக்கிறோம். அப்பாடல்களிற் சில இவ ரைக்கு மனப் பாடமாக இருக்கலாம். அப்பாடல்களில் பெயரைமாற்றி எழுதிக்கொண்டு வந்திருக்கலாம். அதனால் தான் இவ்வுபதியாயிலே ஒருபாட்டைப் படிக்கும்போது, 'வேங்கடராயனே' என்று படித்திருக்கிறான். நீங்களும் அப் புலவர்களுடைய பாடலைக் கேட்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். இப் பாடல்கள் இவருடையவை அல்ல; களவு செய்த பாடல் என்றே நான் கருதுகிறேன்," என்று கூறினர்.

அறிவுத்திறனை ஆராய்ந்துணர்க

அரசரின் உரைகளைக்கேட்ட அடிகளாருக்கு இன்னது செய்வதென்ற தோன்றவில்லை. சிறிதுநேரம் மௌனத் திலிருந்தார். பிறகு உள்ளம் தெளிந்தார். அரசரைப் பார்த்து, "தாங்கள் சிறந்த ஓர் அறிஞர் என்று நான் முன்னரே கேள்விப்பட்டிருக்கிறேன். புலவரைப் புலவர் உணர்ந்துகொள்ளுதற்குரிய குறிப்புகள் நம்மிடத்துத் தெரியும். இவர் இத்தகைய செய்யுட்களைச் செய்யத்தக்க ஆற்றல் உள்ளவரல்லர் என்பதைத் தாங்கள் ஆராய்ந்து பார்த்து அறிந்துகொள்ளுங்கள்," என்றார். அரசர் அமைச்சரைத் தாமே பரிசோதித்து அறிய வேண்டுமென்று தொடங்கினார். அமைச்சரைப் பார்த்து "பரிசை என்னுடைய ஒரு செய்யுளில் குறிப்புகளில் வரவேண்டும். ஆறு பொருள் வேறுபட்டிருக்கவேண்டும். அப்பாடல் சிற்றின்பப் பொருளமைந்த பாடலைக் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு ஒரு செய்யுளை உடனே இயற்றுக," என்று கட்டளையிட்டார். அமைச்

மலையார் மிகுவிளைவில் பாட்டை முடித்து அரசரிடம் காட்டினர்.

கட்டளைக் கலிப்பா

"மாகக் காரிகைக் கும்மக வாளுடன்
மருவுங் காரிகை போலெழில் வாய்ந்தவன்
மோகக் காரிகை மிஞ்ச மயல்கொண்டான்
மொழியுங் காரிகை மெத்தையிற் சேர்குவாய்
பாகக் காரிகை யாற்செய்த காரிகை
பார்த்துப் பாடிய பாவாணர் தம்மிடி
போகக் காரிகை என்னத் தனந்தரும்
போச னேசுந் தாதாசு பூமனே."

என்பது அப்பாடலாகும். பாட்டைப் பார்த்து அரசர் திகைத்தார். உள்ளங் தெளிந்தார். எத்தகைய அருமையான செய்யுளையும் இயற்றும் ஆற்றல் இவன்பால் அமைந்திருக்கிறது என்று மதித்தார்.

இச் செய்யுளில், மாகம் கார் இகைக்கும் மகவான் - விண்ணிற்செல்லும் முகிலை ஊர்தியாகச் செலுத்தும் இந்திரன் எனவும்; உடன் மருவுங் காரிகைபோல் - அவனுடன் சேர்ந்த மங்கையாகிய இந்திராணிபோல் எனவும்; மோகக்காரிகை மிஞ்சுமயல் - மோகமுடையவன் அளவுக்கு மிஞ்சிய மயக்கம் எனவும்; காரிகைமெத்தை - அழகான மெத்தை எனவும்; பாகம் காரிகையால் - செம்பாகமான கட்டளைக் கலித்துறையால் எனவும்; காரிகை பார்த்து - பாப்பருங்கலக்காரிகை என்னும் நூலைப்பார்த்து எனவும்; மிடிபோக காரிகை என்ன தனம் தரும் - வறுமை நீக்கக் காரி என்ற வள்ளலது கையைப்போலப் பொருளை வழங்குகின்ற எனவும் ஏழுகாரிகைக்கும் ஏழுவகையான பொருள் அமைந்துள்ளன.

அரசர் உதவி

அண்ணைமலையாரின் ஆற்றலை அறிந்த சேற்றூர் மன்னர் அடிகளாரைப்பார்த்து, "நான் இவன் இலக்கணக் கற்ப தற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். என்னிடமே விட்டுவிட்டுச் செல்லுங்கள்," என்று கூறினர். அடிகளாரும் அண்ணை மலையாரைச் சேற்றூர்ப் பெருமிலக்கிழார்பால் விட்டுவிட்டுத் தம்முடைய இருப்பிடத்தை அடைந்தார். பிறகு மன்னர் முகவூர் இராமசாமிக் கவிராயரை அழைத்து அண்ணை மலையாரை அவரிடம் விட்டு, "இவருக்கு இலக்கணக் கற்பி யுங்கள்; உங்கட்கு வேண்டிய உதவியை நான் செய்கிறேன்," என்று கூறினர். அன்றுமுதல் அண்ணைமலையார் சேற்றூர் மன்னர் மனையில் உணவருந்தி முகவூருக்குச் சென்று இலக்கணங் கற்றுவந்தார். ஓராண்டுவரை அவ்விடம் இருந்து இலக்கணம் கற்று இலக்கணப்புலமை நிரம்பப் பெற்றுச் சிறந்த புலவரானார். பிறகு சேற்றூர் மன்னருக் குத் தம் நன்றியைத் தெரிவித்து அவருடைய உடன்பாடு பெற்றுத் தம்முடைய ஊரான சென்னிகுளத்திற்கு மீண்டார்.

காவடிச்சிந்து

அண்ணைமலையார் முருகனிடத்திலே பெருகிய பேரன் புடையவர். காள்தோறும் திருப்புகழைப் பாடிப் பரவி வந்தார். கழுகுமலைக்குக் காவடியெடுத்துச் செல்வோ ருடன் இவரும் கூடிச்செல்வார். அவ்வாறு செல்லும் போது வழிநடை வருத்தம் தெரியாதிருத்தற்கு ஒவ் வொருவரும் தத்தமக்குத் தெரிந்த பாடல்களைப் பாடிக் கொண்டு செல்வது வழக்கம். அவ்வாறு பாடிக்கொண்டு போவதற்காகவே இவர் "காவடிச்சிந்து" என்னும் நூலை முதல் முதலாகப் பாடினர். அதனைப் பலருக்கும்

பிற்றளித்துப் பாடச்செய்தார். அக் காலத்தில் இன்னிசை அமைந்த செய்யுளைத்தான் பெரும் பொருள் கலந்தில் உள்ள விளக்கினைமையின் அதனை எல்லோரும் மிகுந்த விருப்பத்துடன் பாடினர். அந்தால் மிருவினையில் செந்தமிழ் நாடு முழுவதும் பரவிப் புகழ்பெற்றதனிட்டது. குறவஞ்சியில் குற்றாலக் குறவஞ்சியும், பள்ளில் முக்கூடற் பள்ளும், காதலிற் கூளப்ப நாயக்கன் காதலும், தூதில் விறவிடு தூதும், பின்னர்த் தமிழில் மீனாட்சியம்மை பின்னர்த் தமிழும், கலம்பகத்தில் மதுரைக் கலம்பகமும், மடலில் வருணகுலாதித்தன் மடலும், உலாவில் திருக்கை லாய ஞான உலாவும் பிறந்து விளக்குதலிலிப்போலக் காவடிச் சிந்தில் அண்ணாமலையாருடைய காவடிச்சிந்து பிறந்து விளக்குகின்றது. ஊற்றுமலைப் பெருமிலக் கிழாராக இருந்த இருதயாலய மருதப்பத்தேவர் கழுகுமலைக்குக் காவடிகட்டிக் கொண்டு சென்றார். அப்போது அண்ணாமலையார் தமியற் றிய காவடிச் சிந்தை வழிமுழுதும் பாடிக்கொண்டு சென்றார். இதனால் பெருமிலக் கிழாருக்கு வழிநடை வருத் தந் தெரியவில்லை. அவர் மிகுந்த களிப்புடன் சென்றார். காவடிச் சிந்தில் விநாயகர் தெய், முருகன் தெய், கழுகுமலை கலம்பகம், கோவில்வளம், சம்பிரதக்கு, சற்று பிரக்கல், தலவிநாயகர்கல், தலவி ஊடல், பார்வி தலவிநின் விலைமகளைக் கூறித் தலவிவினையமைத்தல், தலவி பார்வை தூதவிடுத்தல், பார்வி தலவியின் அலைவைத் தருமை சாற்றல், தலைவன் வருத்தஞ் சாற்றல், தலைவியைக் கலந்த தலவி பார்விக்குக் கூறல், தாய் மதியைப் பழித்தல், தலவி தலைவனோடு ஊடி உரையாடல் முதலிய பல பருதிகளிற் பாடல்கள் அமைந்துள்ளன. மாதிரிக்குக் கழுகுமலை கந் வளப் பாடலை அடியிற் காண்க.

"தென்னுதமி ழுக்குதவு சீலன் தமிழ்
செப்புமண்ணை மலைக்கனு கூலன் மிகு
செழியபுகழ் விளைத்த கழுகுமலை வளத்தைதத்
தேனே சொல்லு வேனே

வெள்ளிமலை ஒத்தபல மேனை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை அந்த
வெய்யவன் கடத்திவரு தய்யவீர தப்பரியும்
விலகும் படி இலகும்

வீதிதொறும் ஆதிமறை வேதம் சிவ
வேதியர்கள் ஓதுசாம கீதம் னைத
மின்னுமலர்க் காவதனில் துன்னுமடப் பூவையுடன்
விள்ளுங் கிள்ளைப் புள்ளும்

சீதன முகிற்குவமை கூறும் நிறச்
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்ச்
சித்திரம் விகசித்த மின்னர் பற்றிப்பூசும் குங்குமச்செஞ்
சேறுங் காதம் காறும்

சித்தசித்த முக்கணைவ ரோடுங் கூடி
நேசத்தால் பிணங்குமனம் வாடும் கரு
நீலவிழி யார்வெறுத்த கோலமணி மாலைதத்தம்
நெருங்கும் எந்த மருங்கும்

கத்துகடல் ஒத்தகடை வீதி முன்பு
கட்டுதட னப்பந்தலின் சோதி எங்கும்
காட்டுவதால் சூரிரண்டு கோகட்டுமத யானையிற் பல்
கனிறும் நிறம் வெளிறும்

முத்தமிழ்சேர் வித்வசனக் கூட்டம் கலை
முற்றிலும் உணர்ந்திடுகொண் டாட்டம் நெஞ்சில்
முன்னுகின்ற போதுவதாறுந் தென்மலையின் மேவுகுற
முனிக்கும் அச்சஞ் சினிக்தும்

எத்திசையும் போற்றமார் வோரும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்சும்
இந்தாக ரந்தனை அடைந்தவர்க் கதுவும் வெறுத்
திருக்கும் அரு வருக்கும்

தள்ளியெழு வெள்ளிமலே மடங்கும் படி
சுற்றிலும் வளைத்தவகழ்க் கிடங்கும் பல
சொர்ணமலே போல்மதிலும் மின்னுவதிலை லேபுகழ்
தொண்றும் லோகம் மூன்றும்

கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை விரும்புமதி மோகன் வளர்
கழுகுமலே கோயின் வளமையென் ஞவிலடங்
காதே மட மாதே."

ஊற்றுமலேப் புலவர்

அண்ணுமலேயாருடைய புகழ் பாண்டும் பரவியது. ஊற்றுமலேப் பெருவிலக்கிழார் இருதயாலய மருதப்பத் தேவர் அண்ணுமலேயாரின் தமிழ்ப் புலமையின் பெருமையை அறிந்து தம்முடைய அவைக்களப் புலவராக அமர்த்தினர் இவர் ஆங்கு அமர்ந்து அவருடைய அவைக்குச் சிறப்புண்டாகுமாறு செய்தார். பெரு விலக்கிழார் மீது, பரணி, திரிபு, மடக்கு, சிலேடை முதலிய சொல்லணிகள் அமையப் பெற்ற சிற்றின்பப் பாடல்களேப்பாடி அவருக்கு மகிழ்ச்சியுண்டாக்கினர்.

பல புலவர்கள்

புளியங்குடி முத்துவீரக்கவிராயர், செவ்வற்குளம் கந்தசாமிப் புலவர், வண்டானம் முத்துச்சாமி ஐயர், முகவூர் கந்தசாமிக் கவிராயர், இராமசாமிக் கவிராயர் முதலிய பல புலவர்கள் அவ்வரசருடைய அவையில் அடிக்கடிகூடுவர். அவர்களுடைய பழக்கமும் அண்ணுமலேயாருக்கு உண்டாகியது. அம்மன்னர் தம்மிடம் வரும் புலவர் கட்கெல்லாம் உணவு முதலியவைகளே ஈன்று வழங்கி அவர்களுடைய பாடல்களேக் கேட்டு நன்கொடை வழங்கும் இயல்புடையவர். அவர் பெற்ற புகழ்ப்பாடல்கள் பல. அவை முழுவதும் ஒன்றுகத் திரட்டப்பட்டு "ஊற்றுமலேத்

தனிப்பாடல் திரட்டு" என்னும் தலைப்பில் வெளி யிடுவது. அப்புலவர் பெருமக்கள் பாடிய பாடல்களைப் பொருள் வகுப்பு முறையில் தொகுத்து வைத்துள்ளனர். பொருள் வகுப்பு முறையில் தொகுத்து வைத்துள்ளமையால் ஒரு பொருள் பற்றிய பாடல்களை அறிந்து கொள்ள மிகவும் எளிதாக இருக்கிறது.

செருத்துப் பாடல்

ஒரு சமயம் பாண்டிய மன்னருடைய போர் கூடியது. பல புலவர் பெருமக்கள் அவையில் சிறந்திருந் தனர். மன்னர் அண்ணாமலையாரைப் பார்த்து, "சரிகமபதநி" என்னும் ஏழெழுத்துக்களையும் யமகமாக வைத்துச் செய்யுள் பாட முடியுமா? என்று உசாவினர். அண்ணா மலையர், "பாடமுடியும்" என்றார். பாடுமாறு பணித்தார் மன்னர். உடனே இவர்,

"சரிகமபதநி யென்றே சத்துரரென்ன பாண்டியனே
சுதந்த மாகிப்
சரிகமபதநி சனகர் தாரகரு சுக்ரனெனுமத்
தந்தி வீரரை
சரிகம பதநி தனித மனைய சருந்திய னுமரும்
நாமல் வாழச்
சரிகம பதநி யெனப்பல தேவி மகத்தர வீதலய
வரசர் சேரவே."

என்னுஞ்செய்யுளைப் பாடினர். பொருள்கேட்ட அரசர் பெற்றுச் செய்யுமாறு மன்னர் பணித்தார். புலவர் முழுவீச்சில் அரங்கேற்றம் செய்யத் தொடங்கினர். அரங்க மத்தில் அண்ணாமலையார்க்கு ஆசிரியராகிய இராமசாமிக் கவிராயர் அங்கு வந்தார். அண்ணாமலையார் எழுந்து தம் ஆசிரியரை வணங்கினர். அங்கு நிகழ்வனைக் கூறிப்

பொருள் விரிக்கத் தொடங்கினர். எல்லோருக்கும் எளிதில் விளக்கும் வண்ணம் சொற்சுவைப் பிரித்துக் காட்டினர். முதல் அடியில், சரிகம் அபம் தநிபேற்று சரிகம்-வண்டே கேடு எப்திய தனிபெனுபெனக்குஎன்ற பொருள் உரைத்தார். ஆசிரியராகிய இராமசாமிக் கனிராயர் அண்ணாமலையாரைப் பார்த்து, "சரிகம் என்பது வண்டினை உணர்த்துஞ் சொல்லா? இலக்கியங்களில் எங்கேனும் வந்துளதா? அல்லது நீயே இட்டபெயரா? இதுவரையிலும் இலக்கியங்களில் வராத சொல் உனக்கு மட்டும் எவ்வாறு வந்தது? மிகவியப்பாக இருக்கிறதே?" என்றார். அண்ணாமலையார், "சூடாமணி நிகண்டில் வந்துள்ளது," என்றார். "அப்பாட்டைச் சொல்," என்றார் ஆசிரியர். உடனே இவர்; "சரிகமே சரகமே சஞ்சாளிகம் கரும்பு கிடம்" என்று விரைந்து கூறினர். ஆசிரியர், "இது முதலடியா இரண்டாவது அடியா? தினைத்துப்பார். முதலடியைக் கூறிப்பின் இதனை ஆராய்ந்து தெளிக" என்றார். "அரி அனிஷ்மிறை மந்தி அறபதம் நிலை முதற்சஞ் சரிகம்" என்பது முதலடி என்றார். "சஞ்சரிகம் என்பதுதான் வண்டின் பெயர்; சரகம் என்பதும் வண்டின் பெயர் சரிகம் என்பது வண்டின் பெயரன்று. பாடகத்தில் அமைத்தபடியினால் ஒன்றுஞ் செய்ய இயலாது. ஆராய்ந்து வேறுபொருள் அமைத்துப் பாடு" என்றார். அண்ணாமலையார் உடனே ஆசிரியரைப் பார்த்து, "திருத்தாமல் இப்படியே வேறு பொருள் அமைத்துக் கொண்டேன்," என்றார். "எப்படி?" என்றார் ஆசிரியர். "சரிகம்-சஞ்சரிக்கின்ற மேகம் என்று பொருள் கொண்டார் பொருந்தும். முன் வண்டினைத் தாது சொல் என்பது இப்பொழுது மேகத்தைத் தாது சொல் என்பாள் என்று பொருளாகிறது. மேகமும் தாதுக்குரிய பொருள்

காரணம்?" என்றார் இவர். அதிருந்த புலவர்களும் தலைவர் இராமசாமிக் கவிராயரும் வியப்புக் கடலுள் மூழ்கி இவருடைய புலமைத் திறத்தைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள். மன்னர் அமைச்சரைப் பார்த்து, "இவர் புலவரில் இரட்டையர், ஒளிராட்டி" என்ற கூறிப் புகழ்ந்தார். பிறகு செய்யுள் அரங்கேற்றம் ஆகிறது.

உரை

இதயாலய சற்கோவே! (நின்மேற் காதல் கொண்ட ஒரு பெண்) சரிகம் அபம் தனியேற்கு சந்துசொல் என்பான்-சஞ்சரிக்கின்ற மேகமே கேடு எய்திய தனியே னுக்குத் தூது சொல்க என்றும் உரைப்பாள்; மதன் ஏதைக்க மார்பில் சரிகம பதம் நிசம் மனத்தார்க்கு அருள் சங்கர எனும்-மன்மதன் ஏவிய அம்பு ஊடுருவி மார்பிற் சரிந்து நடக்கின்ற தனிமாலையை உடையவனே! நிலபதனியை உண்மை மனத்தையுடைய அன்பர்களுக்குக் கொடுக்கின்ற சங்கரனே என்ற எனது நோக்கிப் புலம்புவாள்; அந்தத்தில் நில்லை சரி-(இவருடைய) கைகளில் வளையல்கள் நிற்கமாட்டா. (உடல் மெலிவதற் கஞ்சி விழுகின்றன.) கம பதம் நிதம் நிதம் அநியாய் அருத் நிதமும் அருந்தாமல் வாடி-கலை நிறைந்த சோற்றை வென்றதாகும் தாய்மார் ஊட்டினும் உண்ணுமல் உடல் மெலிந்த, சரிகமபதநி எனப் பாடுதலை மறந்தாள். (இவை நீ சொல்லாய.

ஆலடுதுறை சென்று மீண்டது

அண்ணாமலையார் சேற்றாருக்குச் சென்று இலக்கணம்கற்கத் தொடங்கியதற்கு முன்பு திருவாலடுதுறை ஆதீனத்திற்குச் சென்றால் இலக்கண இலக்கியங்கற்கலாம் என்ற சில் மூலமாக உணர்ந்து திருவாலடுதுறைக்குச்

சென்றார். அப்போது ஆதீனத் தலைவராக எழுந்தருளி யிருந்த சுப்பிரமணிய தேசிகரைக் கண்டு தம்முடைய நோக்கத்தைக் கூறினர். தேசிகர், "இக்குள்ள அறிஞர் களிடம் படித்துக் கொள்," என்று கூறினர். அண்ணு மலையார் அங்குச் சில காலந் தங்கினர். சைவசமயத்திற் சிறந்த பெரியவர்கட்டே கல்வி உணவுந் சிறப்புங் கிடைப்பதைக் கண்டார். தமது குலத்தைக் கூறினால் சாப்பாடுகூடப் போடமாட்டார்கள் என்று முதலில் மறைத்துக் கூறிக் கற்றுவந்தார். பிறகு உண்மை வெளி வரின் உயிர்க்கு இறுதி நேரிடுமென்று சிலரால் உணர்ந்து ஒருவருக்குந் தெரியாமல் ஊர் போய்ச் சேர்ந்தார். பிறகு இலக்கணம் கற்று ஊற்றுமலைப் புலவரானபின் புகழ் எல்லாவிடங்களிலும் பரவித் திருவாவடுதுறைக்கும் எட்டி யது. அப்போது ஆவடுதுறையில் இருந்த உ. வே. சாமி நாதையர் சுப்பிரமணிய தேசிகரிடம், "சில ஆண்டுகட்கு முன்பு நம்முடைய ஆதீனத்திற்குக் கல்விகற்க வந்து சிறிது நாள் இருந்த சொல்லுமலே சென்றனிட்ட அண்ணுமலை என்பவர் இரட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பிறகு சேற்றார் மன்னர் உதவியால் முகவூர் இராமசாமிக் கவி ராயரிடம் இலக்கணம் கற்றுச் சிறந்த புலவராகி இப்போது ஊற்றுமலை இருதயாலய மருதப்பத் தேவருடைய அவைக் களப்புலவராகச் சிறந்து விளங்குகிறார். அவருடைய புகழ் எல்லாவிடங்களிலும் மண்டி நிற்கிறது," என்று செய்தி கூறினர்.

தேசிகரால் புகழப்பட்டது

இவ்வாறிருக்கும் நாளில் ஊற்றுமலை மன்னர் திருவா வடுதுறைக்கு வந்து தேசிகரைப் பார்க்க எண்ணினர். அண்ணுமலையாரையும் உடனழைத்துக்கொண்டு புறப்

பட்டார். மன்னர் முன்னர்ச் சென்று தேசிகரைக் கண்டு மீண்ட பின்னர் அண்ணுமலையர் தேசிகரைக் காணச் சென்றார். தேசிகரைக் கண்டதும்,

"அரசை ராதிபர்முன் போற்றவட பாலைக்க
தமவ தென்பால்
அரசை ராணவ்வன்ற விடைமதிச்செஞ் சடைதரித்தி வ்
வவனி போற்ற
அரசை ரார்த்தொளைக்கப் பிரமணிய குருமணியே
அடிணமேன் ரான்
அரசனை ராகமக லக்கடைக்கட் கருணைபுரிந்
தான்குவாயே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். சுப்பிரமணிய தேசிகர் அறிவாற்றல் மிகுந்தவர். பிறர் கூறும் எத்தகைய பாடல்களின் பொருளையுந் தாமே உணர்ந்து கொள்ளவல்லவர். ஆயினும் இப்பாடலில் நான்காவது அடியில் உள்ள அரசன் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் கண்டுபிடிக்க அவரால் இயலவில்லை. உ. வே. சாமிநாதையர் முதலிய பிற புலவர்களும் அங்கிருந்தனர். ஆயினும் எவருக்கும் பொருள் விளக்கவில்லை. மீண்டும் மீண்டும் படித்துக்காட்டச் சொல்லிப் பொருள் உணர முயன்றனர். ஆயினும் முடியவில்லை. பிறகு தேசிகர் பாடலுக்குப் பொருள் விளக்குமாறு அண்ணுமலையாருக்குக் கட்டளையிட்டார். அவர் பொருள் விளக்கத் தொடங்கி, (முதல் அடி) அரசனைச் சூதிபர் - அரனே! எனைச் முதலான முனிவர்கள் எனவும்; (இரண்டாவது அடி) தென்பால் அரச அனகாரையை வென்ற விடை—தென் திசை அரசனுடைய எமன் போன்ற முதலையைக் கொன்ற திருமாலாகிய ஏற்றினையும் எனவும்; (மூன்றாவது அடி) அரச ரகர் ஆர்ந்த ஒளிர்—திருவாவடு துறை என்னும்பதியில் அமர்ந்து விளங்கும்

எனவும்; (சன்கரவத அடி) சன் அரசன் அகாகம் அலை—சன் கலைமில்லாதவன் மனதுள்ள அலை கீழ்ந் யாத; (சன் - கலைமை உடையவன், அரசன் - கலைப் தவன்) எனவும்; பொருள் விரித்தார். இப்பொருளைக் கேட்டுச் தெளிவு மகிழ்ந்தார், "கீர் சாதியும் இரட்டி அறிவும் இரட்டி," என்று சொல்லிப் பொற்றிப் புகழ்ந் தார். பிறகு தக்கவாறு சிறப்புக்கள் செய்து அனுப்பினர்.

தோயும் பாயும்

புலமைமிற் புகழ்பெற்ற அண்ணாமலையார் சிற்றின்பப் பாடல்களையே மிகுதியாகப் பாடிக்கொண்டிருந்தபடியாலும் சிற்றின்ப வேட்டையில் நாட்டம் மிக்குடைய மன்னர்களை அடுத்து ஏழுகியதாலும் தாழும் இளமை மிடுகோடு இருந் தமையாலும் சிற்றின்பத்தில் அளவு கடந்த படிந்த தோயும் பாயுமானார். அரையாப்பு முதலிய கொடிய பிணிகள் இவரைப் பெரிதும் வருத்தலாயின. குமாருபர அடிகள்,

".....—தெக்கணம்
மூப்பயக்கும் என்ன இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது."

என்று நீதிநெறி விளக்கத்தில் திருவாய் மலர்ந்தருளினர். இதனையுடைய பொருள், "வேற்படைமைந்த அரசர்களை தன் அடிக்கீழ்த்தலை! அழியாத் தன்மையையுடைய தருமம் முன்னாலே விளக்கும் சிறிய இன்பத்தைத் தருவதும் பின்னாலே விளக்கும் துன்பம் பெரியது" என்பதாம். அண்ணாமலையார் முன்னர் அனுபவித்த சிறிய இன்பத்திற் காகப் பின்னர் கொடிய துன்பத்தை தருகிறார். தூண்டுக் கணக்காகப் படுக்கையிலிட்டு எழமுடியாதவராகினர். இவரைப் பொற்றிய மன்னர் இவர் பிணியாப்பைப் பட்டதைக்

கேட்டுப் பெரிதும் வருந்தினர். தம்மை வந்து பார்த்து விட்டாகிலும் செல்ல வேண்டும் என்று பல அழைப்புகள் அனுப்பினர். அண்ணாமலையார் நிலைமையோ அரசரைப் போய்ப் பார்ப்பதற்குக் கூட முடியாமல் இருந்தது. கையில் இருந்த பொருளுஞ் செலவாகி மிகுந்த தொல்லைப்பட்டார். அரசருடைய அழைப்புக்குப் பதிலாக இவர்,

"குறியிலக் கணப்படியே உறித்திரண்டிக்
கடல்சாத்தன் பாக்கி மூன்றை
மேதினியிற் பலவிதமாச் செலவு செய்து
மாறபுரி வித்த காலில்
பாதியினுல் யாண்பட்ட பாடு சொல
முடியாது பஞ்சமென்ப
தேதமில்லை தேதமில்லை இகத்தெரு
உலகுதற்கும் ஏது வில்லை." (க)

(அ - ரை.) தமிழ் இலக்கணம் எழுத்து 1 சொல் 2 பொருள் 3 யாப்பு 4 அணி 5 என ஐந்து வகைப்படும். இவ்வைவர் இலக்கணங்களையும் இவர் இப்பாட்டிற் குறிப்பிட்டிருக்கிறார். குறியிலக்கணம் - முதல் இலக்கணம் அஃதாவது எழுத்து. (சண்டு தலையெழுத்து. இரண்டாவது இலக்கணம் சொல், அஃதாவது சொல்ல முடியாது; மூன்றை - மூன்றாவது இலக்கணமாகிய பொருளை, அஃதாவது செல்வத்தை; காலிற் பாதி - நான்காவது இலக்கணம் யாப்பு + காலிற்பாதி - அரையாப்பு; பஞ்சம் ஐந்தாவது இலக்கணம் அணி - அழகு; சோமிறுல் அழகு முற்றும் போய் விட்ட தென்றதற்குப் பஞ்சமென்பது ஏதம் இல்லை என்றார்.

"பற்பலபண் முதிர்புனித்த வைத்தியத்தால்
பத்தியத்தாற் படிவஞ் சாவத்
தற்பலமுற் றெடுத்ததிற தீர்த்த கம்ப
பிறந்த பின்புன் சுருக்கம் காலை
சற்பலவின் முட்களியி னுட்களியி
னருவருவி னிர்க்க லோடி
உற்பலமென் மலர்த்தடக்கள் நிறைந்திடுதென்
வீரைகோர்க் குறுவன் மாதோ." (உ)

"கத்தினத்த மதரிச்சட் கடெயிபாரம்
கடெயிபர்தக் கண்டக் கண்ட
பத்தினத்தக் குலக்கெலாம் பயத்தநிறை
பயத்தெனப் பினேரிதர நீச்ற
மூத்தினத்த மிலவுபொன்னேச் சிறைபுரிவீ
ரைப்பதிக்குன் முகக்கா ணப்பத்
தத்தினத்த வருவலெனுங் சொல்லிதனுல்
பிழைத்ததகாண் தரைப்பூ மாதே!" (உ)

"கலிசாரம் பெறலிஜைக்தென் வருத்தமெலா
கிஜையாது கனிவி னேடுன்
செலிசார வெண்டுமென்ற போராசை
யாலிவணம் செய்தேன் வெண்பூத்
தலிசார வடனுஜை இதற்கெதிர்கின்
கலிஜிதம் தாரா யேலெற்
குலிசாரத் தலிசாத தரிப்பரமா
னத்தகைக் கடுஞ் தாதே."

(ஊ)

என்பன முதலிய பாடல்களை எழுதியனுப்பினர்.

இறுதி

அண்ணாமலையாரின் இருபத்தாறுவது அகவையிற் பற்றிய நோய் ஈன்கு ஆண்டுகள் வரை பெருந் தொல்லைக் குள்ளாக்கியது. அவரது உடல் கலம் பெறலில்லை. நோயோடு போராடிய அவர் தமது முப்பதாவது அகவையில் கடைசி ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார். பல புலவர்களுடைய வகைச் சொல் பிறருக்குக் கூற்றுவ தன்றி அவர்கட்குக் கூற்றுக முடிவதன்று. அண்ணாமலையார் தமது காவடிச் சிந்தில் ஒருபாட்டில்,

"வன்னத்தினை மாலைத் தென்னியே
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே.

உண்ணும்
உயிர்
.....' ;

என்று பாடியுள்ளார். இதனால் அவரை அறியாமலே மறைந்து அவருக்கு முடிவை உண்டாக்கிவிட்டது என்று சிலர் கூறுகின்றனர். இதிலும் உண்மை இருக்கலாம். சிறந்த ஒரு பேரிஞர் மிகு இளமைப்பருவத்திலேயே இவ்வாறு இறந்தொழிந்தது தமிழ்நாட்டின் கலக்குறைவு என்றே சொல்லவேண்டும். இவர் நீண்ட நாள் வாழ்ந்திருந்தால் எவ்வளவோ அரிய தமிழ் நூல்களைச் செய்திருப்பார்.

இயற்றிய நூல்கள்

இவர் பல தனிப் பாடல்களைப் பாடியதுடன்,

க. காவடிச் சிந்து
உ. வியாயக் தாதி
ங. வீரை கவிராச பிருட்டிணன் பிள்ளைத்தமிழ்
ச. சங்கரநாராயணர் கோயில் திரிபந்தாதி
ஞ. கருவை மும்மணிக் கோவை

*முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

உங. கனகசபைப் பிள்ளை - கூ
[1901]

தோற்றம்

இவர் தென்னற்கூடு மாவட்டத்திலே கடையநல்லூரில் பிறந்தவர். இவருடைய குலம் வேளாளர் குலம்.

கல்வி

தமிழ்க் கல்வியையும் ஆங்கிலக் கல்வியையும் இவர் கற்றுத் தேறினர்.

---

* இவ்வரலாற்றுக் குறிப்புகள் திரு. நி. சங்குப் புலவர் அவர்களால் உதவப் பெற்றன.

அறிவன்

ஆங்கிலத்தில் பி. ஏ. வரை கற்றுத் தேறிய இவர் சென்னை அரசியலாரின் கணக்கு நிலையத்தில் தமிழராகத் தொழில் பார்க்கத் தொடங்கினர். ஓய்வு நேரங்களிலெல்லாம் தமிழாராய்ச்சி செய்தலிலே இவர் தம்முடைய பொழுது போக்காகக் கொண்டு சிறந்த புலமையும் பெற்றார்.

நூல் எழுதுதல்

அறிவனில் இருந்த ஓய்வு பெற்ற பின் தூலாராய்ச்சியை மிகுதியாகச் செய்து தக்க ஆதாரங்கள் காட்டி "அருணை சிந்தாமணி" என்னும் நூல் ஒன்றை இவர் எழுதி முடித்தார். அந் நூல் பாதகண்டத்தில் உள்ள இந்தக்களின் குல கோத்திரங்களெல்லாம் நன்கு ஆராய்ந்து தக்க ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகுப்பினருக்கும் உரிய பழக்க வழக்கங்கள் ஒழுகலாறுகள் முதலியனவும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

"மன்னுசீர் ஞ்சும் வருணிக் தாமணி யென்
றன்னுமிந் நான்மெய் உலகறியப்—பன்னுதற்குத்
தம்பதமா என்னுளத்தில் சார்ந்தெல்லாம் தான்காட்டும்
கம்பமத யானைமுகன் காப்பு."

என்பது நூலின் காப்பு.

நூல்

"கோத்தீரம்—கோத்திரமென்ப தென்னை? எனின் ஒருவன் தானும் தன் மூதாதைகளும் தோன்றுதற்குக் காரணமாயிருந்த மூலபுருடன் வழியை விளக்குவதாம்.

எல்லாருக்கும் கோத்திரம் உண்டெனல்

அங்ஙனமாயின், எல்லோருக்கும் கோத்திரமுண்டோ? எனின், சிவபெருமான் ஒருவர் நீங்கலாக ஏனைய தேவர் மக்களாதியர்க் கெல்லாமுண்டு.

கோத்திரமில்லாதான் சிவபெருமானென்

சிவபெருமானுக்குக் கோத்திரமில்லாத காரணமென்ன? எனின், மேற்கூறிய தேவர் மக்களாதியரை யெல்லாம் கோபித்தற்கு, தாம் ஒருவரிடத்துக் கொண்ட அபரி முத்த சித்தருளாதிருத்தலினாலென்க. இதற்குப் பிரமாணம் பிக்கலர்கையர், மானவர் வகைப் பெயர்ப் பிரிவு சிவனென் குணத்தின் பொர்;

"பலமின்மை பிறவின்மை பற்றின்மை பெயரின்மை
உலமை யின்மை ஒருவினை இன்மை
குறைவி லறிவுடைமை கோத்திரம் இன்மையென்
நிறைவ ளிடத்தில் எண்குணமி வையே."

என்பது தானின் ஒரு பகுதி. உரை கடைகில் அமைந் தன்ன இந்நால இவ்வாற தக்க மேற்கோள்களுடன் சாதுற பக்கக்கட்குமேல் அமைந்தன்ன து.

பாராட்டு

இத் தானிரைப் புகழ்ந்த பாராட்டிச், திருநெல்வேலி செல்லையப்பன் கல்லூரிச், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், சேற்தூர் இராமசாமிக் கவிராயர், செ. ரா. சுப்பிரமணிய கவிராயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், முன்சீப் பள்ளம் எம். பூரணிக்கம் பிள்ளை, அரசர தீபகம் பிள்ளை, சேதுகாந்தான் அ. சண்முகம் பிள்ளை, புரை சபாபதி முதலியார் மானவர் தண்டலம் பாலசுந்தர முதலியார், அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார், திரு மயிலை சொக்கில்வேலு முதலியார், திருமயிலை வி. சுந்தர முதலியார், சென்னை திருமயிலைக் கொழுந்தப் பிள்ளை, சக்கரை இரத்தினவேலு முதலியார். திருவை வெங்கட வேலன், கஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் பாடசாலை வேலுச்சாமிப் பிள்ளை, தஞ்சை வ. சு. சோமசுந்தரம்

பிள்ளை, குன்றத்தூர் மதுரகவி மாணிக்க முதலியார், முத்தூர் அ. சங்கரலிங்கம் பிள்ளை, விருத்தாசலம் நியாக ராசக் கவிராசர் புதல்வர் கலியாணசுந்தரம் பிள்ளை பி. ஏ., உயர்நீதி மன்ற வழக்கறிஞர் - தி. வீரபத்திர முதலியார், சோழவந்தான் சு. அரசப்ப பிள்ளை (அரசஞ் சண்முகனார் தந்தையார்) திருமயிலை முத்துச்சாமி முதலியார், மு. ரா. அருணாசலக் கவிராயர் ஆகியோர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர்.

"சீர்வளம் நிலவளம் நிறைந்து நிலவிய
சீர்வளர் தவத்தோர் திகழ்ச் சார்ந்திடும்
ஏர்வளர் நலனெலாம் என்றும் உள்ளது
கூடலூர் என்னும் கூற்றுதைத் தோன்கழல்
பாடல் அறுத பண்புடை யப்பதி
தன்னில் வைகியமே ளாளர்தம் மரபில்
உன்னுதற் கரிய உடையோன் அருளால்
சுயம்பிர காசத் தொல்சீர் கோத்திரம்
நயம்பெற வந்து நற்செயல் நீங்காத்
திருவுங் கல்வியும் சிறப்பும் உடையோன்
உருவும் புகழும் ஊக்கமும் உடையோன்
எக்குரு மலரடி இணையுறு மனத்தோன்
திக்களிற் சார்ந்த சித்தந் திகழ்ந்தோன்
கனலினுந் தீமை காணக் கருத்தோன்
இனமுறு சால்பும் இரக்கமுங் கொண்டோன்
வன்மையென் பனவெலாம் மற்றவர் பாலுற
நன்மையென் பனவெலாம் கண்ணிய லுத்தோன்
"

....

என்பது திருமயிலை முத்துச்சாமி முதலியார் என்பவர் இயற்றிய சிறப்புப் பாயிரத்தில் ஒரு பகுதி.

உசு. திருவேங்கட நாயுடு - க. வ.

[20 - ன]

தோற்றம்

இவர் சென்னைமா நகரில் கௌரி குலத்தில் பிறந்தவர். தண்டையார் பேட்டையில் வாழ்ந்துகொண்டிருந்தார்.

கல்வி

இளமைக் கல்வி முடிந்தபின் புலமைக் கல்வி கற்க விரும்பிய இவர் சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க அடிகள் சென்னையில் தங்கியிருந்தபோது இலக்கண இலக்கியங்களை ஐயந் திரிபறக் கற்று ஆசிரியரைப் போலவே உயர்ந்த புலமை அமையப்பெற்றார்.

அறிவன்

கல்லூரிகளில் ஆசிரியத் தொழில் நடத்தல் தனிப் பட்ட முறையில் இல்லத்தில் மாணவர்கட்குப் பாடம் ஓதல், நல்கட்டு உரையெழுதல் ஆகிய அறிவல்களை இடைவிடாமல் மேற்கொண்டிருந்தார். இவருடைய உரை மிக எளிவாகவும் விளக்கமாகவும் இருக்கும். வட திருமுல்லை வாயில் கொடியிடை அம்மைமீது இரட்டை மணிமாலை ஒன்று பாடினர்.

"ஆயுந் தவமியற்கு மாயடி யேன்தனக்கோர்
காயுஞ் சிவமெனும் காதையைக் காட்டுங் கனித்துணையும்
பாயும் வினைமுத லாமிருள் சிக்கும் பரிதியுமாம்
சாயும் பிறைதவழ் செஞ்சடை யான்பக்கிற் சார்கொடியே."

என்பது அம்மாலையில் ஒரு பாட்டு.

சிறப்புப்பாயிரம்

இவர் காலத்தில் வாழ்ந்திருந்த மோகூர் முனிசாமி முதலியார் என்பவர் தொண்டைநாட்டுத் திருப்பதிச் சோத்திரக் கோவை எனப் பாடிய நூலுக்கு இவர்,

" வெண்ணிலாக் கதிர்கள் விழுதுவிட் டிலங்கும்
வேணியோன் கடுக்கைவேய்ந் திடுவோன்
பண்ணிலர் மொழியான் பங்கனும் பரமன்
பரிவுடன் அமர்ந்திடுக் தலங்கள்
எண்ணிலல் எண்ணன் கென்பர்கள் தொண்டை
காட்டினில் இசைமலாத அவற்றைக்
கண்ணிலாற் கண்டே உடல்பெறும் பேற்றைக்
கவருவான் எண்ணினன் கருத்தால்.

நிச்சலு நீறு கண்டிகை புனையும்
நேயத்தான் கற்றுணர் வோரை
வைச்சலொக் கிசமாக் கருதியே போற்றும்
மான்பினன் மதிப்பருங் குணனன்
கச்சப முதுகில் கூனிய இரும்பைக்
கருக்கிடும் பள்ளர்கள் பாவும்
உச்சமா மோசூர் வருமுனி சாமி
உததமன உணாவுண்டப புலவன.

மேயசிர்த் தலங்கள் முன்னுரைத் தவற்றை
மேவிய அன்புபின் உந்தக்
காயமும் வாக்குங் கருத்துமே யொன்றக்
கண்டுசே வித்துகா வாரப்
பாயசிர் புனைந்த பனுவண்மா லெயினைப்
பரம்பான் பதுமத்தாள் பரிக்கத்
தயதாய் அணிந்தான் அதுதொண்டை நாட்டுத்
திருப்பதித் தோத்திரக் கோவை.

வாயினைப் படைத்தார் வம்பனத் திட்டு
மறுமைக்குஞ் சிறுமையே செய்து
கோயினைப் பெருக்கிப் பேயெனப் பிறந்து
கொய்யராய்ப் போகுதல் புண்மை
தாயெனக் கருணை தரும்பரம் ப்ரனைத்
தம்மினல் அயவா தேனும்
போய்ப்பழிச் சிடுமின் எனத்தெரித் திட்டான்
புரியுங்கைம் மாறெவன் அவற்கே."

என்று கண்டு பாடல்களைச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

சேந்தரையனூர்ப் புராணம்

சேந்தனுடைய வரலாற்றை இவர் புராண முறையில் கூ. செப்புட்களில் பாடியுள்ளார்.

"கடல்புடை மேவிய காசினி
போற்றிடு காடவ னும்பிறரும்
மிடலொடு கேட்டுளம் விம்மித
ராயிட வேத மொழிப்பொருளில்
நிடமுறு சேந்தனத் தேர்ந்ட
னும்படி செப்புக பல்லாண்டென்
றடல்விடை யேறிய ஐயர்
உரைத்தனர் ஆர்த்தன தந்தபியே."

என்பது புராணத்தில் ஒருபாட்டு.

உரைச் சிறப்பு

இவருடைய உரையின் சிறப்பை இவர் நல்லா சான்மணிமாலைக்கெழுதிய சிரிவுரையில் கண்டுணரலாம். "எப்பொ தகத்த சினவாச் சிடரிக்கு, கைப்பொதகத் திச்சுழல்" என்னும் சப்புச் செய்யுள் உரையின் ஒரு பகுதியை அடிற் காண்க:

"வழுத்தல் வணக்கல் பொருளிப்புணர்த்தல் என்னும் மூவகை வழுத்தல் இது பொருளிப்புணர்த்த லென்பது. சிற்றல் இருத்தல் சிடத்தல் கடத்தல் உண்ணல் உமத்தல் முதலிய காலம் கூர்த்திறன்று மென்பார் எஞ்சா மையப் பொருள்பட எப்பொதகத்த மென்றார். அகம் எழு றருபுமாம். உம்மை முற்றும்மை. எப்பொதும் அகத்த சினவாச் சிடரிக்கென உம்மை பிரித்துக்கூட்டி உரைப் பினும் அமையும். விலக்கினுள் பாணியும் அஸ்தமுடைத்

நேரும் அன்றியளைப் புகழ்பவுளை பன்னெஎன்ற பாகின் அச்சிறப்புச் சொன்றச் கைப்பொதகமென விதச் சார்; அத கீளைளச் உடரிள்ளெவன்னும் குறிப்பான் பன்னமுக்கடவுளை என்றனர்ந்திற்ற. கழனென்னும் சதிபொருளை இரண்டனுரு சற்றிற் றெரக்கு கின்றன 'ஐயும் கண்ணை மல்லப் பொருள்னின், மெய்யுரு தொள விதிபான' என்பிதாத்தாகளின். முக்ணண் களுள் மனம் பிறத்தனின் கீளைளர்க்கிடரிக்ளெனை மனத் தின்மேல்:வைத்துக் கற்றுரேனும், வாக்சற் றதிப்பார்க் கும் காயத்தால் வழி படுவார்க்கும் இடரிக்ளெ பென்ப தாடம் இளம்பற்றிக்கொள்க."

இறதி

இவர் சாலிவாகன சகாப்தம் கஅகக-க்குச் சரியான சௌமிய ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதினெட்டாம் நாள் (கசுஅசு-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் மூன்றும் நாள்) இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

உரு. ஆற்வாரப்பபிள்ளை

[20 - ஆ]

தோற்றம்

இவர் பாண்டிநாட்டிலே திருவல்லிகேணி மாவட் டத்திலே பேயக்குளர் என்னும் ஊரில் முருகனிக்க அடியான் என்பவருக்கு மகனுகத் தோன்றினர். தந்தை யரின் இயற்பெயர் முருக உடையபிள்ளை. இப் பெயரே பின்னர் முருகனிக்க அடியான் என மாறியது. ஆற்வாரப்பபிள்ளை தோன்றிய காலம் கஅகக-ஆம் ஆண்டு மேத் திங்கள் இருபத்தாறும் நாள்.

கல்வி

ஐந்தாம் ஆண்டிற் கல்வி கற்கத்தொடங்கிப் பதின் மூன்றாவது ஆண்டுவரை தமிழ்கற்றார். பதினைந்தாவது ஆண்டிலேயே இவருக்குத் திருமணம் நடைபெற்றது. கஅருநு-ஆவது ஆண்டில் தம்முடைய பதினேழாம் அக வையில் தூத்துக்குடியை அடைந்து தம்முடைய தமைய னாரிடம் ஆங்கிலக் கல்வியையும் கற்கத்தொடங்கினார். ஆங்கிலக் கல்வியோடு நின்றுவிடாமல் தகுந்த அறிஞர் களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்று வுணர்ந்தார்.

முருகவழிபாடு

முற்பிறப்பின் நல்வினைப் பயனால் முருகக்கடவுளைப் போற்றி வழிபடும் தன்மை இளமைப் பருவத்திலேயே அமைந்தது. முருகன் திருவருளால் செந்தமிழ்ப் பாக்க ளைப் பாடுந்திறனும் உண்டாகியது. முருகக்கடவுள்மீது இசைப்பாடல்கள் முதலியவைகளைப் பாடினார்.

அஞ்சல் நிலையத்தில் அலுவல்

இருபத்தெட்டாவது அகவையில் கஅசுஅ - ஆம் ஆண்டில் திருச்செந்தூரில் அஞ்சல் நிலையத்தில் எழுத்தா ளராக அமர்ந்து அலுவல் பார்க்கத்தொடங்கினர். அன்பர் களை ஒன்றுசேர்த்து வழிபாட்டுக் கூடம் (பசனை மடம்) ஒன்றை அமைத்து முருகனைப் போற்றும் பணியிலும் ஈடு பட்டார்.

பல இடங்களில் அலுவல்

பிறகு முப்பத்தொன்றாவது அகவையில் தூத்துக்குடி மாவட்ட நிலையத்தலைவர் அலுவலகத்தில் அலுவல் பார்க்கத் தொடங்கினர். முப்பத்திரண்டாவது அகவையில் குல

சேகரன் பட்டினத்தில் உதவி நீதிமன்றத்தில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். முப்பத்து மூன்றாவது அகவையில் சிவகுண்டத் தாலுகாவில் தலைமை எழுத்தாளராக அலுவல் பார்த்தார். முப்பத்தொன்பதாவது அகவையில் தென்திருப்பேரையில் சென்னியூ இன்சுபெக்டராகத் தொழில்புரிந்தார்.

நூல்கள் இயற்றுதல்

இவர் அலுவல் பார்த்த இடங்களிலெல்லாம் ஒழிவு நேரத்தை முருகக்கடவுளைப் போற்றுதல் நூல்கள் இயற்றுதல் முதலியவைகளிற் செலவிட்டார். திருச்செந்தூரில் அஞ்சல் நிலையத்தில் அலுவல் பார்த்துக்கொண்டிருந்த போது பிரமோத்திரகாண்டத்தில் சிவயோகி பெருமை புரைத்த வாலாறு முதலியவைகளை நாடகமாகப் பாடி "சுமதி விலாசம்" என்று பெயர் கொடுத்து கசரசுஅ-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார். குலசேகரன் பட்டினத்தில் இருந்தபோது கச்சிகொண்ட பாண்டீசர் மீதும் அறம் வளர்த்த அம்மன்மீதும் ஊசல், நலுங்கு முதலியன இயற்றி அச்சிட்டு வெளியிட்டார். மற்றும், கப்பல் சிந்து, வள்ளியூர்த் தலபுராணம், முருகக்கடவுள் இசைப்பாடல், கந்தர்மீது அந்தாதி, வள்ளியூர்க்காவடி வைபவம், அம்பா சமுத்திரம் மரகதமாலை, மகளிர் இலக்கணம், நிரகாச்சிரம தர்மம் முதலிய நூல்களையும் இயற்றினர். இவைகளெல்லாம் அச்சாகி வெளிவந்துள்ளன.

பொதுநலப் பணிகள்

பொதுநலப் பணிகளில் ஊக்கங்காட்டிய இவர் பல இடங்களில் வழிபாட்டுக் கூடங்களை ஏற்படுத்திக் கடவுள் வழிபாட்டில் தாமும் சுறுபட்டு அன்பர்களையும் சுறுபடுத்தினர். பின்னையார் கோயில் ஒன்றுகட்டி அதில் பின்னை

யாரை அமைத்தார். தமக்கு உரிமையான காசி விசுவநாதர் கோயிலில் சுவாமிக்கு ஒன்று ஏற்பாடு செய்து நிலம் முதலியவைகள் உண்டாக்கினர். மேற்படி கோயிலிற் பல திருப்பணிகள் செய்தார்.

பயணங்கள்

இறைவழிபாட்டின் பொருட்டுப் பல சிவப்பதிகட்கும் செல்வதில் இவர் மிகுந்த ஊக்கங்காட்டினர். அலுவலில் இருக்குங்காலத்தில் அடிக்கடி விடுமுறைபெற்றுக் கன்னியா குமரி, இராமேசுவரம் முதலிய இடங்கட்குச் சென்றார். ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் மதுரைக்கு வந்திருந்தபோது,

"மருப்பொலியும் மதுரைநகர்ச் சொக்கேசர்
அங்கயற்கண் மங்கை யோடும்
உருப்பெரிய பொன்னுற்செய் சப்பரத்தா
வணிமறுகில் உலாப்போந் தண்பர்
இருக்குமறை ஓதவும்பின் தமிழ்வேதம்
முழங்கிடவும் எளிமை யான
கருக்குருவிக் குபதேசஞ் செய்தகிருக்
கோலத்தைக் கண்ணுறுந் தேனே.

வலியாணுக் குபதேசம் கண்பகலிற்
செய்தபிரான் மங்கை யோடு
கலியாத கற்பதரு மீதுமரி
மேலுற்றும் கண்ணுறும் வீதி
சலியாத தொண்டர்குழாம் நெருக்கிஆ
சுக்காரா தஞ்சம் என்னும்
ஒலியோயா தனைபிரவித் தேட்டேனென்
மலர்க்கம் உறப்பெற் றேனே."

இவை முதலிய பல செய்யுட்களால் வாகனக் கவிதை பாடினர். எழுபத்து மூன்றாவது அகவையில் திருவஞ்சைக் களம், ஆல்வாய் முதலிய இடங்களுக்குச் சென்றார்.

காஞ்சியாத்திரை

காஞ்சிக்குச் செல்லத்தொடங்கித் திருவண்ணுமலை, திருக்காளத்தி, திருப்பதி, பண்டரிபுரம், பூனை, பம்பாய் முதலிய இடங்கள் வழியாகக் காஞ்சிக்குச் சென்று வட நாட்டில் உள்ள பல பதிகளையும் போற்றி வழிபட்டார். காஞ்சிக்குப் பயணப்பட்டுத் திருவேலை அடைந்தகும்,

"கெல்லைப் பதிசிக்கம் ஒன்பதிலே கீக்கிச்சித்
நில்லைப் பதிபத்தில் சென்றமர்ந்து—தொல்லைவினை
போக டடாசன் பொற்பதத்தைக் கைதொழுதோம்
தாகமுடன் எல்லோருஞ் சார்ந்து."

என்று பாடினர். திருவண்ணுமலையை அடைந்தபோது,

"பன்னென்று காலைப் பதிஅண்ண மாமலைக்கு
மன்னியன்று மாலையினி லங்கெய்திப்—பொன்னென்று
மேனியான் உன்னுவோர் தங்கட்கு மேல்வீடு
தானருள்வா னேத்தாழ்ந்தோம் சார்ந்து."

என்று பாடினர். ஏவ்வோர் வோருக்கும் இவ்வாறே ஏவ் வொரு வெண்பா உரைத்தார். காஞ்சியை அடைந்தபோது,

"எக்குஞ் சிவலிங்கம் எக்கும் சிவாலயங்கள்
தக்குமிட மெல்லாஞ் சத்திரங்கள்—அக்கச்சே
கட்டும் படித்தறைகள் கல்லைகளும் காஞ்சிகர்
சிட்டாத பாலிகளுக் கே."

என்று பாடினர். இவ்வாறு பாடிய செய்யுட்கள் "காஞ்சி பாத்திரைக் கலிகள்" என்னும் பெயரோடு ஒன்றுபடுத்தப் பட்டிருக்கின்றன. இவ்வாறு வடநாட்டிலும் பயணஞ் செய்து திரும்பிய இவர் பிற்காலத்தில் துறவு நிலையை மேற்கொண்டொழுகி வீடுபேற்றையடைந்தார்.

ஏகாச்சிரமதர்மம்

இவர் இயற்றிய நூல்களில் ஏகாச்சிரம தர்மம் என்பது உரைநடையில் அமைந்தது. ஆடவரும் பெண்டி

கும் அறவொறி வழுவாத நடத்தற்கு இன்றியமையாத விதி முறைகளைத் தக்க மேற்கோள்களுடன் கூறுவது. இந்நூலைப் பாராட்டித் திருநெல்வேலியைச் சேர்ந்த பாண்டியம் சுந்தர சூரத்தி பொராணிக், அப்பா சமுத்திரம் தாலுகாவடக்கு காரகுறிச்சி உமையொருபாகஞ் செட்டியார், ஆவுடை யப்பன் செட்டியார், கலியாணிபுரம் கல்ல சிவன் பிள்ளை, முன்னீர்ப்பள்ளம் சுசுசமூர்த்தியாபிள்ளை, திருநெல்வேலி கலிராச முத்துக்குமாரசாமியாபிள்ளை, முன்னீர்ப்பள்ளம் முத்துச்சாமியாபிள்ளை, தூத்துக்குடி தெ. ச. சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

---

2. சிங்காரவேலு முதலியார் - மா

[1900]

தோற்றம்

இவர் சென்னைமாகாணத்தில் திருட்டிணம்பேட்டையில் இருந்தவர். தந்தையார் பெயர் மாரியப்பமுதலியார்.

கல்வி

கல்வி கற்கத்தொடங்கிய இவர் பள்ளிக் கல்வியைக் கற்று முடிந்ததும் தக்க அறிஞர்கள்பால் புலமைக் கல்வியையும் நன்கு கற்றுச் செந்தமிழ்ப் புலவரானார்.

"

.....

வாழ்மாரி யப்ப வள்ளல் இயற்றிய
தாழ்விலாத் தவப்பயன் தானென வந்த
சுந்தரப் பதல்வன் சொற்குரு சரதன்
சுந்தரத் திருவுள சன்மை கொண்டோன்
வெளிவே அறிந்த சிவனடி யாரைப்
பலமு தலைப் பணியும் அன்பினன்
கனிவுறும் கனிவுறும் சுந்தன் கழலினை

மனமும் மதுவர மாண்புறும் அகத்தன்
பொறையுஞ் செல்வமும் பொலிவுறுங் கலையும்
அறமும் இரும்புலி அகலறை மலையின்
மடக்கையர் என்ன மகிழ்வுறப் பெற்றோன்
வீடுறுதற் கண்டன் வேண்டின் ஒன்றும்
சந்திரன் பொற்ற தண்குளக் குற்றாச்
சந்திரன் திகழும் சந்திய டாய்மையன்
சிவராத்திரியென்னுஞ் செந்தமிழ்ப் பனுவல்."

என்று இவ்வாசகத்தை ஆக்கி ஆலவாய் முதலிய பாடல்களைப் பாடினார். முருகக் கடவுளிடத்திலே பேரன்பு கொண்டு விளங்கிய இவர் அடிக்கடி திருப்போரூர்க்குச் சென்று முருகனைப் போற்றி வழிபடுதலைக் கடமையாகக் கொண்டார். அக்கடவுள் மீது,

க. அங்கப்பத்து	கக. குயிற்பத்து
உ. அச்சப்பத்து	கஉ. சிற்பாதப்பத்து
ஊ. அழுமைப்பத்து	கஊ. சேவற்பத்து
எ. அடைக்கலப்பத்து	கஎ. தாலாட்டு
ஏ. அதிசயப்பத்து	உ0. திருப்பள்ளியெழுச்சி
ஐ. அருட்பத்து	உக. திருப்பள்ளியெழுச்சி
ஒ. ஆசைக்களிப்பு	உஉ. திருவருட் புகழ்ச்சி
ஓ. ஆசைப்புகழ்ச்சி	உஊ. மெய்காப்பத்து
ஔ. உண்மைதெளிப்புகழ்ச்சி	உஎ. சமாவலி
கo. ஊசல்	உஏ. செந்தேன் விருந்து
கக. எச்சரிக்கை	உஐ. பதிகம்
கஉ. எந்தாய்ப்பத்து	உஒ. புகழ்ச்சிமாலை
கஊ. கருணைப்பத்து	உஓ. பொதுநிலைப்பத்து
கஎ. சாட்சி	உஔ. வாழ்த்துப்பத்து
கஏ. கிளர்ப்பத்து	கo. சேஷப்பத்து

என்பன இயற்றப்பட்டன. இந்நூல்கள் ஒவ்வொன்றும் அக்காலத்திலே இருந்த அறிஞர் பலரால் அச்சிற் பதிக்கப் பெற்றிருக்கின்றன.

"தொண்டர்கள் தமக்காக மேருவில் உண்தச்சை
சுடர்முடியின் மண்சுமந்தான்
தோலா வழக்கினைக் கொண்டடிமை கண்டபின்
சுகமுடன் ஈதுசென்றான்
அண்டருயிர் பெற்றிடக் கடலிலெழு கஞ்சமலை
அடலொடு கதத்தடைத்தான்
குயிழை இலக்குமட மன்னையுள் எக்குளிர
அன்னைபோல் முன்புவந்தான்
தெண்டிரைப் பாலிகதி சூழ்திருச் சாபுரியில்
திருமுடி வனைத்துநின்றான்
சேயாத லால்உனது திருவடிகள் சரண்எனச்
சேர்ந்தவெனை யாளல்வேண்டும்
மண்டலமு தாகவே சிறைதனை விரித்திந்த
மானிலத் தாடும்வண்ண
மயிலேறி மகிழுவத் தருள்செயும் குமரனே
வளர்கொச்சோ ருர்முருகனே."

என்பது பதிகத்தில் ஒருபாட்டு. இவருடைய தலைவர் பாராட்டிக் காஞ்சி - நாகலிங்க முதலியார், காஞ்சிபுரம் சிங்காரவேலுத் தேசிகர், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், கோமளபுரம் இராசகோபாலபிள்ளை, ஆ. சுப்பராயபிள்ளை, நக்காடு அண்ணாச்சாமி முதலியார், மயிலை - மா. சுப்பராய முதலியார், காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இவை புதல்வர் பாலசுப்பிரமணிய முதலியார், கருங்குழி ஏகாம்பர முதலியார், புதுவை வேங்கடசாமி காயரு, வேலூர் வீரபத்திர முதலியார், பானையம் வேலுச் செட்டியார் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

கழக வெளியீடு : 458

தமிழ்ப் புலவர் வரிசை

[இருபதாம் புத்தகம்]

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை - 1.

First Edition: Nov., 1958.

THAMIZH PULAVAR VARISAI—XX

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் காட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித் தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப்புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தன்ன மின்மை, தாய்மொழிப்பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடந்து நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் காட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறு களையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையி லேயே கற்று அதன்படி ஒழுகுவது, காட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக் கருதித் தமிழ்ப் புலவர் வரிசை யில் இதுகாறும் பத்தொன்பது நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல் இவ்வரிசையில் இருபதாம் புத்தகம் ஆகும்.

இதன்கண் முனிசாமி முதலியார் (மோதூர்) முதல் நாராயண சாமிப் பிள்ளை-மே. கி.—ஈறாக உள்ள புலவர் பெருமக்கள் வரலாறு களும், அந்தாக்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல் களும், உள்ளுறை கயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக் கித்தந்த தீரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் பத்தொன்பது புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார்.

உள்ளுறை

			பக்கம்
க.	முனிசாமி முதலியார் - மோகூர்	...	1
உ.	அப்பாச்சாமி முதலியார் - வீ	...	6
கூ.	காதமுனி முதலியார் - மயிலை	...	8
ச.	சுந்தர முதலியார் - வி	...	12
ஙி.	ஆதிசேஷம் சுந்தரகாதப் பிள்ளை	...	16
ஞ.	விசுவகாலையர் - சு	...	19
ட.	தி. செ. சுப்பிரமணிய பிள்ளை	...	22
ண.	பக்காருப்பத்தர் - வி	...	29
த.	சிதம்பர பாரதியார்	...	32
க0.	மதுரஞ்சுந்தர பாண்டியனார்	...	35
கக.	இராமலிங்கக் கவிராயர் - பொ. பீ.	...	40
கஉ.	சுப்பிரமணிய ஐயர் - பீ	...	51
கங.	முத்தைய பிள்ளை - பொ	...	53
கச.	ஆ. சத்தியவேற் பிள்ளை	...	56
கஞ.	தத்துவபோதகர்	...	59
கட.	வில்வியார்	...	64
கண.	காசப்ப முதலியார் - அ	...	67
கத.	பெரும்பற்றப் புலியூர் கம்பி	...	69
கந.	அசந்திருட்டின ஐயக்கார்	...	72
உ0.	குணங்குடி மத்தான் சாகிபு	...	77
உக.	பெருமாளையர்	...	86
உஉ.	சாமிநாத பிள்ளை - வி	...	92
உங.	பரராசசிங்கன்	...	95
உச.	திருமலைவேற் கவிராயர் - ச	...	98
உஞ.	பாலசுப்பிரமணிய முதலியார் - மா	...	107
உட.	ஏகம்பவாணன்	...	112
உண.	முத்தாரக்த அழகன்	...	126
உத.	தொண்டைமான் முத்தையர	...	134
உந.	காரணைசாமிப் பிள்ளை - வே. இ.	...	110

தமிழ்ப் புலவர் வரிசை

இருபதாம் புத்தகம்

க. முனிசாமி முதலியார் - மோகூர்

[1900]

தோற்றம்

தொண்டைவள நாட்டிலே மாகூரப்பெரு மோகூரிலே இவர் பிறந்தார். பிறந்த ஊரை மறத்தலாகாதென்று தம் முடைய பெயருக்கு முன் மோகூர் என்று சேர்த்து வழங்கி வந்தார். ஆங்கிலக் கல்வி கற்றதோடு தக்க அறிஞர்கண்பால் தமிழ்க் கல்வியுங் கற்றுப் புலமை பெற்றார்.

அலுவல்

ஆங்கிலக் கல்வியையும் இவர் கற்றிருந்தபடியால் சென்னை பியர் ஆபீசில்-டூராபிக் ஓவர்சியராக அலுவல் பார்த்தார். ஓய்வு நேரங்களில் கல்வி கற்க விரும்பிய மாணவர்கட்குத் தமிழ்க் கல்வியைக் கைம்மாறு கருதாமல் கற்பித்தார். இவரிடம் கல்வி கற்ற பலர் புலவர்களாயினர். அவ்வாறு புலவர்களாகி நூலியற்றிச் சிறப்புற்றவர்களில் பெ. மு சிவஞானச் செட்டியார் என்பவர் ஒருவர்.

சமயத்தொண்டு

இவர் சைவசமயத்திலே மிகுந்த பற்றுள்ளவர். சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற் சேர்ந்து சிவப்பதி செல்லுதல் இறைவழிபாடாற்றுதல் புகழ்ப்பாக்கள்

பாடுதல் ஆகியவைகளையும் மேற்கொண்டார். தாஞ் செல்லுங் தொண்டைநாட்டுச் சிவப்பதிகட் கெல்லாம் புகழ் தால் இயற்றினர். இவரால் இயற்றப் பெற்ற தால்கள்,

க. விநாயகர் தோத்திரம்
உ. திருக்கச்சி கம்பம் இரட்டைமணிமாலை
ங. திருக்கச்சி மேற்றளி விருத்தம்
ச. திருக்கச்சி ஏகாம்பத்தன் தளி ஒருபா ஒருபஃது
ஞ. திருக்கச்சி அநேகதங் காவதம் கலமணிமாலை
ட. திருக்கச்சி நெறிக்காரைக்காடு திருநாட்டகம்
ண. திருக்குராக்கணி முட்டம் கொச்சகக் கலிப்பா
த. திருமாகறல் விருத்தம்
ந. திருவோத்தூர்ச் சந்தக் கலி விருத்தம்
ப. திருப்பனங் காட்டூர் மக்ஞலிருத்தம்
ம. திருவல்லம் ஆசிரிய விருத்தம்
ய. திருமாற் பேறு பதிற்றுப்பத் தந்தாதி
ர. திருவூறல் விருத்தம்
ல. திரு இலம்பயங் கோட்டூர் விருத்தம்
வ. திருவிற் கோலம் சோடசப் பாமாலை
ழ. திருவாலங்காடு ஆசிரிய விருத்தம்
ள. திருப்பாசூர்க் கலி விருத்தம்
ற. திருவெண்பாக்கம் மும்மணி மாலை
ன. திருக்கள்ளில் ஆசிரிய விருத்தம்
உ0. திருக்காளத்திப் பதிகங்கள்
உக. திருவொற்றியூர் மாலை
உஉ. வடிவுடையம்மை திருவானபஞ்சகம்
உங. திருவலிதாயம் கலித்துறையந்தாதி
உச. வடதிருமுல்லைவாயில் பதிகம்
உஞ. கொடியிடை நாயகியம்மை பஞ்சரத்தினம்
உட. திருவேற்காடு கான்மணிமாலை
உண. திருமயிலைப் பதிகம்
உத. திருவான்மியூர் வெண்பாவந்தாதி
உந. திருக்கச்சூர்மாலை
கூ0. திருவிடைச்சுரப்பதிகம்

கக. திருக்கழுக்குன்றப் பதிகம்
கஉ. திரு அசிறபாக்கப் பதிகம்
கங. திருவுக்கரைப் பதிகம்
கச. திரு அரசிலிப்பதிகம்
கஙி. திரு இரும்பைமாகாளம் பஞ்சாத்தினம்
கஞ. திருப்போரூர்ப் பதிகம்
கட. திருப்போரூர் வெண்பாவுக் தாதிமாலை
கண. திருத்தணிகை வெண்பா அந்தாதி மாலை
கத. திருத்தணிகைக் கொச்சகக் கலிப்பா
சஙி. திருத்தணிகைப் பதிகம் கெஞ்சொடு கினத்தல்
சக. ஆருடையபின்னையார் பதிகம்
சஉ. ஆருடைய அரச பதிகம்
சங. ஆருடைய அரச பஞ்சாத்தினம்
சச. ஆருடையகம்பி கொச்சகக் கலிப்பா
சஙி. ஆருடைய அடிகள் கொச்சகக் கலிப்பா
சஞ. வேளாண்மாபு விளக்கம்

முதலியன. இவர் மருத்துவத்துறையிலும் சிக்திபெற் றிருந்தா ரென்று தெரிகிறது. இம்மைக் காரியங்களோடு மறுமைக் காரியங்களிலும் தக்கவாறு ஈடுபட்ட இவருடைய மாண்பு போற்றற் தக்கதே.

பாடற் சிறப்பு

ஏவ்வோர் ஊரின் பாடல்களிலும் அவ்வப்பதியின் சிறப்பு, வீடு பேறடைக்தவர்கள் செய்தி, இறைவன் திருப் பெயர், இறைவி திருப்பெயர், பதிமாக்கள், திருத்த சீர்கள் முதலியவைகளையும் முடிந்த அளவு சுட்டிச் சொல்லு கிறார். பாடல்கள் இனிமையும் பொருட் செறிவும் அமைக்து செம்பாக நடையிற் செல்லுகின்றன.

"சேலொத்த விழியினர் பாலொத்த மொழியினர்
தேனெத்த மெல்லிதழினர்
செண்டொத்த முலையினர் வண்டொத்த குழலினர்
தேசற்ற தேகத்தினர்

வாலுற்ற விடவரவின் அல்குல் நடத்திலர்
வண்ணமிசறி செஞ்சத்திலர்
மன்னுமணி கலையணிபு மின்னலன விடையிலர்
மடவன்ன ஒயில்நடையிலர்
மாலுற் றனக்கண்விடு மலர்வாளி யாலுயிர்
மயங்கிமன தலையசாலும்
வஞ்சகர்க் காளாய் வகைத்தமுறி வாக்கவொரு
கோடிவக் தனமம்மணீ
தாலத்தை யோடிடு அனத்தவன் தங்கையே
தமியனேற் கருளுகண்டாய்
தஞ்சமெனும் அன்பருறு சஞ்சலந் தஞ்சவரு
பஞ்சாட்ச ரீகௌரியே.”

னன்பது வடிவுடையம்மை தியானபஞ்சகத்தில் ஒரு பாட்டு. இவருடைய நூல்களைப் பாராட்டி, தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், வி. கோ. சூரியநாராயண சாத்திரியார், திருமயிலை. சண்முகம் பிள்ளை, க. வ. திரு வேங்கட சாயுடு, சக்காடு இரத்தினவேலு முதலியார், அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார், யாழ்ப் பாணத்து மேலைப்புலோலி சு. கதிரைவேற் பிள்ளை, வித்துவான் சதகுமணி சாயுடு, பிரமயங்குப்பம் முத்து லிங்கப் பிள்ளை, கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார், நூல சிரியரின் மாணவராகிய சிவஞான செட்டியார், பே. சுப்பா ராவ் ஆகியோர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர். நூல்கள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்துத் தொண்டைநாட்டுப் பிரப்பதித் தோத்திரக் கோவை என்ற பெயரமைத்துத் தம்முடைய நண்பராகிய புதுச்சேரி பொன்னுச்சாமி முதலி யாரைக் கொண்டு வெளியிடச் செய்தார்.

சிறப்புப்பாயிரம்

“ உலகொரு மூன்றும் இலகுற அளந்த
திருமறு மார்பத் தொருதனித் தேவன்

காணுற வுங்கிச் சேணுயர் குழுமி
கந்தியெம் பொருப்பின் எக்கையெம் ஈசன்
செஞ்சடைக் கூத்தன் கஞ்சடை கண்டன்
செம்மலர் சோன்குழல் மெய்ம்மணத் திருத்தம்
தீதடை யப்பெறு மாதவ னிட்டன்
தெய்வச் சுரபிழுன் பெய்தெழு தீம்பால்
பெருகிய பாவிப் பெருவளஞ் சுரக்கும்
தொண்டை யாளுஞ்சீர்மண்டல மதனின்
மாகூ ரப்பெறு மோகூ ரென்னும்
கல்லூர் அகத்துத் தொல்குடிப் பிறந்தோன்
....
புண்ணியத் தலந்தொறும் கண்ணி வழிபடும்
பலங்கடி வேட்கைச் சிவனடி யாரது
கூட்டஞ் சேரும் நாட்டம் உடையோன்
விதிவழுவாது துதிபெறு தொண்டை
மண்டலஞ் சேரும் என்டகு நாவலன்
பதிவரும் எம்பசு பதியைப் பாடும்
வழிபா டாற்றி மொழிபெறு பற்பல
தோத்திரஞ் சேர்த்த சாத்திரம் ஈங்கு
இதயத் தெண்ணி உதவின னுமால்
மதரா சார்பர் சதுரா நாபீஸ்
பியர்தன் ஓவர் சியராம் எங்கள்
கனிவா சகஞ்சேர் முனிசா மிப்பேர்ப்
பாவல் லோனெனும் நாவல் லோனே.”

என்பது கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்களால் இயற்றப்பெற்றது.

2. அப்பாசுவாமி முதலியார் - சி
[1906]

தொழில்

தொண்டை வளநாட்டிலே சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பொன்னேரிக்கு அண்மையில் உள்ள கள்விப் புத்தூரிலே வேளாளர் குலத்திலே இவர் தோன்றினர். தந்தையார் பெயர் வீராசாமி முதலியார்.

கல்வி

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் என்னும் மும்மொழி களையும் இவர் நன்கு கற்றுத் தேறினர். தமிழிலே செய்யுள் செய்யக்கூடிய திறமையும் இவருக்கு நன்கு அமைந் திருந்தது.

அரசியல்

முதன்முதல் ஆங்கில ஆசிரியராக வேலைபார்க்கத் தொடங்கினர். பிறகு மாவட்டத்தலைவர் அலுவலகத்திலே மொழி பெயர்ப்பாளராக அமர்ந்தார். அதன்பின் சிதம் பரம், திருத்தாசலம் முதலிய இடங்களில் தாசில்தாராக வேலை பார்த்தார்.

பலதிறன் தங்கள்

பொதிய மலையைச் சார்ந்த குற்றாலம், திருச்செந்தூர், திருநெல்வேலி, மதுரை, மேலைச் சிதம்பரம் ஆகிய ஊர்க ளிலே வதிந்து மேற்கொண்டு தங்கியிருந்தார்.

ஓய்வு

உலக அலுவல்களில் இருந்து இவர் ஓய்வு பெற்றபின் சென்னை மாகாண புரசலவாக்கத்தில் அமைதியான வாழ்க் கையை மேற்கொண்டார். மதுரைமக்கும் பலதாரத்தக்க

தாய வீட்டுநெறிச் சேறலே உளத்தில்கொண்டு திங்கள் கூத்தப்பிரானே இடைவிடாது போற்றிப் பணிந்தார்.

நூல் இயற்றல்

சிவபெருமானுடைய இலக்கணம், ஆன்ம இலக்கணம் பதிபசுபாச இலக்கணம் ஆகியவைகளை சுருங்க ஆராய்ந்து தொடங்கிச், "சுத்தாத்துவித சைவசித்தாந்த பரபோதம்" என்னும் அறிவுநூலை எழுதி முடித்தார். அந்நூல், நூலை வந்த ரசப்பிரசங்கம், வேதாந்த நூனசார போதனை, நூலைபதேச ரத்நாவளி என்ற மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.

பாராட்டு

இந்நூலினைப் பாராட்டிச் சித்தாந்த சபையம் அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார், திருநெல்வேலி புதுத் தெற்குத்தெரு கவிராச நெல்லையப்பபிள்ளை, திருவில்லிபுத்தூர் தையல்பாகம்பிள்ளை, அய்யம்பட்டிப் புலவர் பொன்னுச் செட்டியார், மே. சொ. சுப்பிரமணியக்கவிராசர் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

"சிந்தூத்த இடப்பாலும் வலப்பாலும்
அரியயர்கள் செவ்வே சின்ற
பார்பூத்த தண்ணுமைதா னக்கொண்டு
னிழமுழக்கிப் பாலி சிற்க
ஏர்பூத்த பொற்சபையில் சிவகாமி
கனிக்கடம் என்றுஞ் செய்யும்
தார்பூத்த சடாசன் குஞ்சிதமே
வழுவைசித்தம் சாற்று வாமால்.

சீர்தாங்கு திருமுடிமேல் பிலவணியும்
பெருமானே இமவன் தன்னைக்
கார்தாங்கும் இமயமலை மகளுகந்த
காதலனைக் கபால மேந்தும்

எர்தாங்குக் காகமலத் தெம்மானைப்
பெம்மானை இணையொன் றில்லாச்
சிர்தாங்குத் திருத்தில்லை மணிமன்றுள்
கடத்தானைச் சிந்தை செய்வாம்."

என்பன கூத்தப்பிரான் வணக்கச் செய்யுள்கள். இந்நூல் கஉ0கூ-ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. இவர், "ஆத்மபோதப் பிரசங்காமிர்தம்" என்னும் நூல் ஒன்றும் எழுதியுள்ளார். அந்நூல் சிவத்தோத்திர ரத்னாவளி, தேகாபாச லட்சணம், பிரம லட்சணம், ஞானிகளின் மகிமை முதலிய பல பிரிவுகளை உடையதாக விளங்குகின்றது. இரண்டு நூல்களும் வெளிவந்து வெகுகாலமாய்விட்டன.

கூ. நாதமுனி முதலியார் - மயிலை
[கி. பி. 20 - ஆ]

தோற்றம்

தொண்டைவள நாட்டிலே சென்னை மாநகரில் உள்ள மயிலையில் வேளாளர் குலத்தில் இவர் பிறந்தார். தந்தையார் பெயர் நாராயண முதலியார். தாயார் பெயர் அங்கம்மாள்.

கல்வி

இளமையில் கற்க வேண்டியவைகளைக் கற்று முடித்தபின் புலமைக்கல்வி கற்க விரும்பிய இவர் அந்நாளில் மயிலையில் பெரும் புலவராக விளங்கியிருந்த தணிகாசல முதலியார் என்பவரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்கத் தொடங்கி வரன் முறையாகக் கற்றுச் சிறந்த புலமை யடைந்தார்.

புராணச் சொற்பொழிவு

கல்லியை நன்கு கற்றபின்பு புராணச் சொற்பொழிவு செய்வதற்கும் பழகிப் பலவிடங்களில் செய்தார். இவருடைய சொற்பொழிவு கேட்டார்ப் பிணிக்குந் தகைமையுடையதாய்ச் சிறந்து விளங்கியது. அறிஞர்கள் பலர் ஒன்று கூடி இவருக்குப் 'புராணசிகாமணி' என்னும் சிறப்புப் பெயரை அளித்தனர். சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள அங்காளம்மன் கோயிலில் மாசிமாதம் தமிழும் தனைத்தினிதோக்குமாறு பதினைந்து ஆண்டுகள் புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

திருமயிலைத் தலபுராணம்

செய்யுள் பாடுவதிலுஞ் சிறந்து விளங்கிய இவரிடம் அன்பர்கள் பலர் புராணம் ஒன்று திருமயிலைக்கு இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். இவர் அதற்கு இணங்கி முதனூலாகிய வடநூலைக் கழுவிக் கற்றவர் கட்கேயன்றி மற்றவர்கட்கும் பயன்படுமாறு இனிய தமிழ் விருத்தப்பாக்களால் திருமயிலைப் புராணத்தைப் பாடி முடித்தார். அப்புராணம் பன்னிரண்டு படலங்களையும் ஐந்நூறுக்கு மேற்பட்ட செய்யுட்களையும் உடையது.

பாராட்டு

புராணத்தைப் பாராட்டி, கோமளேசுரன்பேட்டை ம. இராசகோபாலபிள்ளை, வேதாந்த கருக்கபோதகாசிரியர் கோ. வடிவேலுச்செட்டியார், ஆனூர் சிங்காரவேலு முதலியார், இ. சுப்புச்சாமி முதலியார், பண்டிதரத்தினம். புழலை கு. க. திருநாவுக்கரசு முதலியார், வல்லி-ப. தெய்வ நாயக முதலியார், கோதண்டபுரம் தி. க. திருநாசுக்கரசு மோகூர் சண்முக முதலியார் என்போர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர். இவருடைய புதல்வர்,

" எல்லிலே நீங்கியமை கண்மயிலாப் பூரித்த
கிற்குமயி லேப்பநிலின் னீள்சரிதம்—எற்குகக்த
எல்லையாம் காதமுனி இன்புலவர் எனினித்தான்
சத்தமுற ஆர்வந் தணைத்த."

என்னும் பாடலோடு தொடங்கி மூன்றாவது எழுதி யுளளார்.

" மயிலேயென வாழ்த்துவர்கள் மாதர்க்கரு வாசார்
மயிலேயென வேபுகல்வர் மதலிபயம் நீப்பார்
மயிலேயெனப் போற்றுமவர் மாதவஞ் யாவர்
மயிலேயினில் வாழ்பவர்கள் மாண்கயிலே சேர்வார்"

வேறு

" ஆதலான் மேலோர் போற்றும் அருந்தரு மயிலையே போல்
மாதலம் இருக்கும் என்ற மனத்திலுங் கருத வேண்டாம்
பூதலத் திதனின் மாயாப் போகுமான் தீதன் ரூயின்
நாதனுர் கையிலிட்டு நண்ணியே கிலேகொள் வாரே"

என்பன நகரப்படத்தில் இரண்டு பாடல்கள். நம் தமிழ் நாட்டிலே தமிழறிஞர்கள் தமது வரலாற்றினை எழுதிவைப்ப தில்லை. எழுதிவைக்க விரும்பும் மற்றவர்கள் வரலாற்றுக் குறிப்புச் செய்திகளைக் கேட்டாலும் கொடுப்பதில்லை. கோடிக்கு ஒருவரோ இருவரோ தமது வரலாற்றுக் குறிப்புக்கள் மறைந்து போகாமல் பாதுகாப்பவர்களும் இருக்கிறார்கள். திருமயிலைத் தலபுராண ஆசிரியராகிய இவர் தற்சிறப்புப்பாயிரத்தில் தமது வரலாற்றைப் பத்துப் பாடல்களில் கூறுகிறார்.

இப்பாடல்களை இங்கே காண்க:

" சக்கிரன் தவழுஞ் சோலைச் சங்கமார் மயிலை மேவும்
வித்தகர் புயத்தைப் பெற்ற வில்வமா ரிஷியின் கோத்ரன்
சுத்தாகக் கங்கை யின்றன் மரபினன் சுயம்ப்ர காசக்
கத்தாகள் கரியோன் மைந்தன் கனவீர பத்ர கேசன். (க)

வீரபத் திரனென் றேபேர் விளங்கவாழ் போதவற்குப்
பாரினில் வேங்கம் மாவோப் பத்துக்கள் மணஞ்செய்வித்தார்
வேளியும் மலரும் போன்ற விருவர்க்கும் பிறந்தா னேர்சேய்
நாரணன் என்றே பேரை நன்கவற்கிட்டார் மாதோ. (உ)

இட்டபின் ஏழாம் ஆண்டில் ஈன்றவர் கயிலை சேர்ந்தார்
கட்டெழில் அங்கம் மாவைக் கைப்பிடித் தன்னேன் வாழ்நான்
மட்டவிழ் கொன்றை எம்மான் மாண்பெருங் கருணை தன்னால்
இட்டமாய் வாழ வீன்றான் என்னையோர் சுதனை யம்மா. (ஊ)

நற்சுதன் எனக்கு காத முனியெனு நாமஞ் சாத்தி
வீற்பனர் புகழு மேலோன் வியன்தணி காச லண்பால்
நற்கலே விட்டபோது கவனமாய்ப் பாடங் கேட்டுச்
சொற்றவ ருறு தொண்டுசூழ்ந்தமா ணவனாய்ன் றேன். (எ)

புராணங்கள் புகலும்வண்மை போதித்துவருநா ளன்பாய்
அராவணி உடையோன் காதை யாலுமே யறையக் கேட்டோர்
விராவியே புராண நத்னு கசமென விளம்பு பட்டம்
பாரினிலே சூட்டப் பெற்றேன் பரமனார் கடாட்சத் தாலே (ஐ)

செழுந்தமிழ் வளருஞ் சித்தாந் திரிப்பேட்டை தனில மர்ந்து
முழுதரு எங்கா ளம்மன் முதியதோ ராலயத்தில்
வழிவழு வாத வைசவம் வளரவே புராணம் வைக்க
மொழிவழா வண்ணம் யானும் மூவைவந்து
வருடஞ் சொன்னேன். (ஏ)

மத்தியில் மயிலை யின்சீர் வழுத்துமா ரூரார் கேட்ப
ஒத்ததால் இன்ன மியாலே ஒன்றடி யேனும் பாடி
எத்திசை புள்ளா ருக்கும் இன்பமே கல்க வேண்டிச்
சித்தமுற் றன்பு கூர்ந்து சேர்ந்தனன் ஆல யத்தை. (ஏ)

கானலிர் புன்னை யின்சூழ்க் கற்பக வல்லி முன்னர்
கானின்று போற்றும் போது காரணன் தங்கை தானும்
மானவ முடியும் அத்தால் மகிழ்வுடன் பாடென் றன்பாய்
ஆனவா காயவாணி ஆகனின் றருள்வா ளாதலுன். (அ)

ஆலயத் தச்சொல் லோர்பால் அந்தணன் புகலக் கேட்டே
சாலியில் சாலும் பாடச் சற்பகவல்லி காதை
கோலமாய்க் கிடைக்கக் கண்டு கொண்டதே யிதமாக
ஞாலத்தில் வினவ்கு மாறு நயனுறப் பாடி னேனே. (கூ)

குறைகுணங் காணு மிக்கோர் குறையையென் பால தாக்கி
நிறைகுணங் கொடுமோ வேகூ வெடிதுமா தரிப்ப ரன்றே
மறைமுதல் அவன்சீர் பற்றி வந்தன னாத லானே
கறைதபு குணத்தோர் காணில் கடவுள்கண் ணோற்ற தாமே." (க0)

இச்செய்யுள் களுன் இவ்வரலாறு அமைந்திருத்தல் அறிக.

" சிவம்பெருகுந் திருமயிலைத் திருவாளன்
சிவபெருமான் சேவ டிக்கண்
தவம்பெருகுஞ் சிக்கைதபுளான் தமிழினியல்
புகழுணர்ந்தான் தாப மாறத்
திவம்பெருக சாதருனித் திசைம்புலவன்
தாரணியோர் தினமும் போற்ற
கவம்பெருகத் திருமயிலைத் தலபுரா
ணம்விரிவா ரவின்ருன் மாதோ."

இது வேதாந்த தருக்கபோதகாசிரியராக வினவ்கோ கோ. வடிவேலுச்செட்டியார் இயற்றிய சிறப்புப்பாயிரம்.

ஈ. சுந்தர முதலியார் - வி

[1904]

இவர் சென்னை மாகாணில் திருமயிலையில் வாழ்ந்திருந் தவர். மேற்படி மயிலையில் சித்திரச் சத்திரம் (ஓவிய அறச்சாலை) கட்டிய வியாசர்பாடி வீராயக முதலியாரின் உடன் பிறந்தார் புதல்வர். இவர் இலக்கண இலக்கியங் கற்றுப் புலமைபெற்றுத் திகழ்ந்தார். இசைப் பயிற்சி

தினும் வல்லவர். இவர் பல பதிகளினும் எழுந்தருளிய சிவ பெருமான் மீது "சிவராமசலங்கீர்த்தனம்" என்னும் இசைப் பாமாலை, திருவொற்றியூர் வடிவாம்பிகை மீது தோத்திரப் பதிகம், சுந்தராம்பிகைபதிகம், திருச்செந்தூர்ச் சிவ சுப்பிரமணியர் பதிகம், தொழும்பு கதிசேசன் பஞ்சதத்தினம், திருவள்ளுவநாயனார் வருகைப் பஞ்சகம், திருவள்ளுவ தேவர் தியானட்டகம், ஆண்டார் குப்பம் முருகக் கடவுள் ஆனந்தக் களிப்பு, செண்பகக் கந்தர் திருவிழாக் கொம்மி முதலிய நூல்களைப் பாடியிருக்கிறார். இந்நூல்களைப் பாராட்டிக், கொட்டாம்பட்டிக் கருப்பையாப் பாவலர், பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மேற் படியார் மாணவர் தியாகராசச் செட்டியார், உ. வே. சாமிநாதையர், திரிசிரபுரம் மாதருபூதம் பிள்ளை, சித்தாந் தரத்திநாகரம் அரன்வாயில் வேங்கடசுப்புப் பிள்ளை, திருநெல்வேலி ச. சுப்பிரமணிய பிள்ளை, சீவில்லிபுத்தூருக் கடுத்த புனல்வேலி அநந்தசுப்பையர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், பெரும்புலவர் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், திருக்கழுக்குன்றம் சிவஞான சுவாமிகள், தொழுவூர் வேலாயுத முதலியார், சென்னை சோதிடக் களஞ்சியம் சிற்றம்பல முதலியார், காஞ்சிபுரம் இராமசாமி காவுடு, திருமயிலை சண்முகம்பிள்ளை, தண்டலம் பாலசுந்தர முதலியார், க. வ. திருவேங்கடராவுடு, முத்தமிழ் சதாசுகம் திருவேலாத்தூர் பாதகனி, காசிங்கபுரம் வீராச்சாமி முதலியார், சக்காடு இரத்தினவேலு முதலியார், குன்றத் தூர் மதுரகனி - மாணிக்க முதலியார், தசாவதானம் - பேறை செகநாத தள்ளை, திருச் சிவபுரம் வேலாயுத முதலி யார், திருமயிலை செந்தில் வேல் முதலியார், பூவை-வீரபத்திர முதலியார், திருமயிலை முத்துக்கிருட்டிணை முதலியார்,

பொன்னேரி சுந்தரம் பின்னர், திருமயிலை வெ. சுப்பராய முதலியார் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர். அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார்,

"சோதிபதி பூதிசிதி சோதிமதி நீதிவிதி
சோதியிலை யென்னி லென்னைத் தோன்றியுறை—நீதில்
மயிலைகற் சுந்தர மாகவிஞன் செய்யுள்
லியன்றுப் பழச்சுவைக்கு மேல்."

என்று பதுமபந்த வெண்பாவால் சார்த்துக்கவி வழங்கியுள்ளார். இசைப்பாடல்கள் பல பதிகளிலும் சுட்டிப் பாடப்பட்டுள்ளன. திருமறைக்காட்டைப் பற்றிப் பாடியுள்ள பாடலை அடியிற் காண்க.

ருது. இராகம் - சுருட்டி - சாப்பு தாளம்

பல்லவி

வேதாரணியர் பொற்பதமே—நெஞ்சே
வேண்டித் தொழுக்கவருஞ் சுகமே.

அநுபல்லவி

வேதங்கள் பூசித்துக் காப்பிடுந் திருவாயில்
விநியுடன் அப்பர்சம்பந்தர் காண்பொற்கோயில்--வேதாரணி

சரணங்கள்

மறைவிரி கடற்கமா குற்றக்கே மன்னி
மாதேவி யாழினைப் பழித்தமொழி கன்னி
கறைமிடற் றண்ணலைக் கைகுவித்தே சென்னி
கதிபெறு மார்க்கத்தைதக் காணவே உன்னி—வேதாரணி
என்றைக் கிருந்தாலும் இறப்பது மெய்யே
எவரிடத்தும் பொருள் நிலைப்பதும் பொய்யே
குன்றவில்லி யின்பதஞ் சதமென இரு கையே
கொண்டுபணிய வருள் கூட்டுந்தி செய்யே—வேதாரணி
வாழ்வை நிலையென்று மதித்தறி தன்னாதே
வையகந் தனிலேவீண் வார்த்தையை விள்ளாதே

தாழ்சடை யானரும் பண்டங்கைத் தள்ளாதே
சாதுக்களைக் கண்டாற் சலித்துக் கொள்ளாதே—வெகாரணி
தாய்தந்தையற்றவ னெனப்பகைமை மூட்டும்
சத்தருக்க வேண்ணம் பலியாமலே தூட்டும்
செய்கந்தன் சேர்த்தனத்தை கீலே சாட்டும்
செம்மலத் திருச்செல வெதிசனஞ் சாட்டும்—வெகாரணி

"கண்ணும் இந்தச் சுவியுகத்தில்
சாடுந் தெய்வம் சீவல்லால்
விண்ணில் ஒருவர் உண்டேயோ
வேலா! அடியேன் விளைதீர்ப்பாய்
கண்ணன் மகிழுஞ் கழலோனே!
சற்றேர் நெஞ்சில் உறைவோனே!
திண்ண மோங்குந் திருச்செந்தூர்த்
தேவே! அமரர் சிகாமணியே."

என்பது திருச்செந்தூர்ச் சிவகுப்பிரமணியர் பதிகத்தின் ஒரு பாட்டு.

".....
இரும்புகழ் அகலா இனிபாத் செல்வம்
மிஞ்சிவாழ் பவர்குழ் லியாசர் பாடிதனில்
தஞ்சமென் பவரைபோர் தமனைப் போற்றும்
அறமெதிர் சோழிய வேளாண் மாபினில்
சிறந்தருள் விளக்கச் செபமுறத் தேர்ந்த
நிருவிடை பாகோத் நிமலில் தோன்றிய
உருவனர் ஞான உத்தம குணத்தன்
அப்பர் சமீல் அருந்தலப் பேற்றுல்
இப்பர் தனில்வர் நிலருத் செல்வன்
சிவனடி யவரைச் சிவமெனப் பரவுல்
லவனருண் மறவா அருஞ்சிவ சேசன்
சுந்தரன் எனும்பெயர் சொந்தமாக் கொண்டோன்
....."

என்பது சிறப்புப்பாயிரம் ஒன்றில் ஒரு பகுதி.

---

9. அமிர்தம் கங்காதரனார் பின்னர்

தோற்றம்

சோழவளநாட்டில் திருவிசைபுரத்தில் சிறந்த புலவராக விளங்கியிருந்த அமிர்தம் பின்னர் என்பவருடைய அருமைத் திருமகனாக இவர் தோன்றினர்.

கல்வி

தந்தையாரிடமே கற்க வேண்டிய கலைகளெல்லாம் நன்கு கற்றுச் சிறந்த புலமைபெற்றார். செய்யுள் பாடும் திறம் இவருக்கு நன்கு அமைந்தது. இவர் தம்முடைய தந்தையாரிடமே கல்வியைக் கற்றவரென்பது,

"நித்திக்குந் செந்தமிழை ஐந்திலக்க
ணத்தோடும் நிகழ வோட்டி
முத்திக்கு வித்தான முழுமுதலின்
தன்னிலையை முறையிற் காட்டிச்
சித்திக்கும் இச்சுவையில் லென்றருளி
இன்றமெற்குத் தெளிவை சாட்டும்
எத்திக்கும் புகழ்ந்தை அமிர்தகவி
காலலன்தான் இறைஞ்சு மெந்தே."

என்னும் ஆற்றுப்படைச் செய்யுளொன்றால் பெறப்படு கின்றது.

நூல்கள் இயற்றல்

நூல்கள் இயற்றத் தொடங்கிய இவர், வடநூற்ப் புராணம், திருவிசைமேற் கோவை, பெத்தாச்சி செட்டியார் மீது புலவாற்றுப்படை, திருவாவடு துறை அம்பலவாண தேசிகர்மீது பொன் விடுதூது முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். திருவிசைபுரம் எஸ். பி. ஐ. கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். இவ

ருடைய தந்தை வெளியாதற்குப் போதரவு புரிந்த னைக்குண்டாக்கியவர் இராமசாராயணப் பிள்ளை என்னும் செல்வரொருவராவர். இவரே திருச்சிராமலிங்கக் கோவையையும் பாடச் செய்த பொருள் வழங்கினவர் என்று தெரிகிறது. இவரைத் திருச்சிராமலிங்கக் கோவையில்;

"ஒப்பார்க் கருள்செய ராமச ராயனென் றன்முனின்
புரப்பார் தமையும் புரக்கச் சோமனெப் புல்லவனுன்
ஒப்பார் கிரகவென் வெம்பசிக் கின்னமு தோர்ந்தருளால்
தப்பா ருனிர்ச் சிலேவேல் உயிரென்னுட் டங்கவி தே."

என்னுஞ் செய்யுளில் பாராட்டியுள்ளார். திருச்சிராமலிங்கக் கோவையைப் பாராட்டி, ஞானியார் அடிகள், காஞ்சிபுரம் இராமசுந்த யோகி, அட்டாவதானம் கலியாணசுந்தரர், கா. ஆலாலசுந்தரம் பிள்ளை, கா. ர. கோவிந்தராச முதலியார், பக்தவத்சலம் பிள்ளை, சோமுமாதேவி குப்புச்சாமிப் பிள்ளை, தஞ்சை இலக்கண விந்துவான், மு. கோவிந்த சாமிப் பிள்ளை, சடகோப ராமானுசாச்சாரியார், பழனி சுப்பிரமணிய பகவதர் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர். சிவசுந்த சாகர யோகிசுவரர் தண்முகம் பாடியுள்ளார்.

வயலூர் அந்தாதி

வயலூர் அந்தாதி என்பது வயலூரில் எழுந்தருளிய முருகக் கடவுண்மீது நாற்ற வெண்பாக்களால் ஆகிய வெண்பா வந்தாதி.

"தூய வயலூரில் தூத்தமரும் தூறுகா
தினனெனவே காத்தருளுந் தேசிகனே—கானவொரு
நற்குறத்தி காதலனே நான்களிக்க மாமயில்மேல்
உற்றெனக்கு முன்வா உவந்து."

என்பது அந் நூலில் ஒரு பாட்டு. நாலிப் பராட்டிச் சதாசிவப் பிரமம், சோக்கம் உயர்திலப் பள்ளித் தமிழா

சிரியர் குரு சுப்பிரமணிய ஐயர், திருச்சிராப்பள்ளி செயின்ட் சோசப் கல்லூரித் தமிழாசிரியர் ஏ. ஏம். சடகோப இராமானுசாச்சாரியார், திருச்சிராப்பள்ளி மு. ருடேச முதலியார், வேங்கடராவ், சோழமாதேவி குப்புச்சாமிப் பிள்ளை, மதுரை அழகர்சாமிப் பிள்ளை, திருச்சிராப்பள்ளி அ. ம. சாமிநாதபிள்ளை, தேனிகோட்டை பெரிய கருப்பன் செட்டியார், கோ. வைத்தியநாத ஐயர், திண்டி மங்கலம் சின்னச்சாமிப் பிள்ளை, உறையூர் சாமகிராம ஐயர் ஆகியோர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். நூல் அரங்கேற்றிய காலம் களம் முதலியவைகளைக் கீழ்வருஞ் செய்யுட்கள் புலப்படுத்துகின்றன.

"காசினிசொல் கலியையா யிரத்திரு
நாம்வருடக் கான புத்தி
வாசிமிகு மைதத்திக்கள் மூவிரண்பா
ளுணதனில் வளர்முற் பக்கம்
பேசினிய பாதுகோன் சொன்பான்
கழுகையினிற் பிறங்க மேவும்
மூசிவரு கவமிசோ கணித்திதிசேர்
கன்னுளில் முறையே யாக

பூமேவும் மேல்வயலூர்த் திருமுருகன்
சந்நிதியிற் புலமை மிக்கோர்
காமேவு விற்பன்னர் நிறைசபையிற்
சிவபுரத்து கடுவார் கொன்கை
மாமேவு நீதிபதி அந்தணன்தற்
பாலசுப்ர மணிய வள்ளல்
தாமேவு சபாபதியா லீற்றிருக்குந்
ததுதிபெறு சபையின் கண்ணே.

நிமதிகொள் செல்சடையார் தக்ததமிழ்
னிமழ சனி லத்தே
திமதிகொள் தாதாதன் அந்தாதி
'வயலூர்வேள் அடிக்கே பாடி

விதியினால் கேற்றிப்போற் காப்புழுதற்
பலபரிசு வினக்கப் பெற்றுன்
இதினினிய புகழுண்டோ புலவோர்க்கில்
கார்பெற்றூர் இவன்போல் அம்மா."

சு. விசுவநாதையர் - சு

தோற்றம்

கொங்கு வளநாட்டிலே அவிநாசி என்னும், ஊரில் கஅசுஅ-ஆம் ஆண்டு (சுக்கில ஆண்டு) ஆடித்திங்கள் இருப தாம் நாள் இவர் பிறந்தார். தந்தையார் பெயர் சுப்பிர மணிய ஐயர். தாயார் பெயர் மீனாட்சியம்மையார். இவர்க ளிருவரும் மகப்பேறில்லாமல் காசிமா நகர்க்குச் சென்று விசுவநாதப் பெருமானைப்போற்றி வழிபட்ட பலனல் இவர் பிறந்தமையின் விசுவநாதன் என்று பெயர் சூட்டப் பெற்றூர்.

கல்வி

ஐந்தாண்டளவிலே பள்ளியில் வைக்கப்பெற்றூர். தமிழ் மொழி ஆங்கிலம் வடமொழி முதலியவைகளைக் கற்றுணர்ந் தார். தெய்வத் திருநெறியையே இவருடைய மனம் பற்றி நின்றது. திருவிளையாடற் புராணம் பெரியபுராணம் முதலிய நூல்களை உரை கடையில் படித்துச் சிவனடியாரிடத்தும் சிவபெருமானிடத்தும் போன்புகொண்டு நிகழ்ந்தார்.

முருகக்கடவுளைப் போற்றுதல்

முருகக்கடவுளிடத்திலே இவருக்கு காலும் அன்பு வளர்ந்துகொண்டிருந்தது. முருகக்கடவுள் இவருடைய கனவிலே அடிக்கடி தோன்றிக் காட்சியளித்தனர். அதனல் செய்யுள்பாடும் திறமும் கன்முக உண்டாகியது.

ஆசாக்கால் போக்கல்

இவர் இவ்வாறு முருகன் திருவருளுக்குரியராய் விளங்கிக்கொண்டிருக்குங்கால் இவருடைய தம்பியார்க்குத் திருமணஞ்செய்ய உறுதிசெய்து அதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளையுஞ் செய்தனர். மணகாலும் நெருங்கியது. இத்தகைய சமயத்தில் மணமகனுடைய கால்கள் யானைக் கால்போல் வீங்கலாயின. பலவகையான மருந்துகளைப் பயன்படுத்தியும் எத்தகைய குணமும் உண்டாகவில்லை. இதனைக்கண்ட இவர் முருகக்கடவுளைப்போற்றிப் பணிந்து இவ்வீக்கம் தொலைய வேண்டுமென்று பெரிதும் வேண்டி உருகின்றார். ஓர் இரவிற்குள்ளேயே வீக்கம் தீர்ந்து குணமாகிவிட்டது.

"இங்ஙனம் இருக்க அன்றூர் இளவலுக் கெவருங் காண
மங்கல மணவி ழாநாள் வந்திட மணம கற்குப்
பொங்கிய வீக்கங் காலைப் போதகக் கால்போ லாக்க
எங்குல மருந்தி னெதும் எகிடக் காண தையர்.

வேலவா என்னை யாண்ட வித்தகா சிவகி ரிக்கண்
சிலவா கல்லோர் நெஞ்சச் சினகரத் திருக்கு மன்னுக்
கோலவா கனனே நீயே குணஞ்செய வேண்டும் ஞானப்
பாலகா என்றூர் வீக்கம் பறந்ததோர் இரவிற் குள்ளே."

பொறித்துறையில் வேலை

முருகன் திருவருளுக்கிலக்காக விளங்கிய இவர் அரசியற்றொழிற்துறையிற் புகுந்து உதவிப் பொறியாளராகப் பணியாற்றினர்.

செய்யுளியற்றல்

முருகன் திருவருளால் செய்யுள் செய்யத்தொடங்கிய இவர் முருகக்கடவுள்மீது இசைப்பாடல், திருப்புகழ்ப் பாக்களைப்போன்ற சந்தப்பாடல்கள் முதலியவைகளை

இயற்றி வாகவி. அ. சுப்பிரமணியபாரதியார், காஞ்சிபுரம் இராமாசுந்தரேசு, வெளுத்தசாசு பொதுவர் முதலியவர் கண்டுகொண்டு திருத்தி அச்சிற் பதிப்பித்த வெளிடப் பள்ளார். இவருடைய பாடல்களில் ஒன்றை அடியிற் காண்க.

இராமேசுவரம்

"கடலெயி லாமிசை இமகிரை தேனாத
சரளை யோசனுப கடமணி யாரைபோல மதிகொளு மாறுப
கருமர வீரதீர கடலுற மாதிசேட வரவணை மீதுமேவு
கனிகொளு மாலினேச மருகோனே கரதல வேலுமாட குணமயி லோடியாட
கருணைய தோகைகூடி வரவேலனும் கடலெம தாழியோழி கலை பொதுமாத
சமய பரமபாழி கலிபரமன் சதுர கோலமேறு கதிய சயபாத
சரணன் பெயராக நரவேலனும் மடலினி வீபமாலை புதுமலை மாப்பதாம
மறையவ ரூதரேசம் அருள்வரவே மதிதல மாழிகூழ வளமெழு சாமஞ்ச
வரதல மேடைபால குமரேசனே."

நிறுவி

இவருடைய நால் கசுகசு-இல் வெளிப்படுவது. இவர் காலமான சான் முதலியன விளக்கமாகவில்லை.

எ. தி. செ. சுப்பிரமணியபிள்ளை

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே திருநெல்வேலிக்குத் தென் கிழக்கில் இரண்டு கல் தொலைவில் உள்ள மேலப்பாளையத் திலே கி. பி. கழிந்த-ஆம் ஆண்டு (கொல்லம் கoகூக) வைகாசித்திங்கள் ககக-ஆம் நாள் சுப்பிரமணியபிள்ளை பிறந் தார். தந்தையார் பெயர் செல்லம்பிள்ளை. தாயார் பெயர் பேச்சியம்மையார். இவர் தாம் பிறந்த ஏழாவதுநாள் தாயை இழந்தார்.

கல்வி

இவர் தாம் பிறந்த மேலைப்பாளையத்திலே பாட்டனார் வீட்டிலே அவ்வூரில் இருந்த திண்ணைப்பள்ளிக்கூடம் ஒன்றிலே தமிழ் கற்கத்தொடங்கினர். பிறகு ஆங்கு ஏற்பட்ட ஆங்கிலப்பள்ளியிலே ஆங்கிலமும் கற்றார். அகவை பத்து நிரம்பியபின் திருநெல்வேலியை அடைந்து கற்கத் தொடங்கினர். ஒவ்வோராண்டிலும் வகுப்பில் முதல் மாணாக்கராயிருந்து பதினாறாவது அகவையில் பிரவேச பரீட்சையில் (மெட்ரிகுலேஷன்) தேறினர்.

தொழில்

பதினேழாவது அகவை முதல் பதினேழு ரூபா ஊதி யத்தில் தாம் கல்விகற்ற பள்ளியிலேயே கீழ் வகுப்பு ஒன்றுக்கு ஆசிரியராக ஏற்படுத்தப்பெற்றார். பிறகு சிங்கம் பட்டி இளவரசருக்குத் தனியாசிரியராக அமர்த்தப் பெற்றார்.

திருமணம்

இவருக்கு நான்குமுறை திருமணம் நடைபெற்றது. முதல் மணம் பத்தொன்பதாவது அகவையில் நிகழ்ந்தது.

ஒன்பதாண்டுகட்குப் பிறகு வீரலட்சுமியம்மாள் என்னும் அம்மணவி காலமாகவே, இருபத்தெட்டாவது அகவையில் அருணாசலத்தம்மாள் என்னும் பெண்மணியை மணம் புரிந்துகொண்டார். இப் பெண்மணியுஞ் சில ஆண்டுகளிற் காலமாகவே பிறகு சங்காவடிவம்மாள் என்னும் பெண்ணை மணம்புரிந்தார். பிறகு மூப்பத்தெட்டாவது அகவையில் நான்காவது திருமணம் நடைபெற்றது. இம் மனைவிமார் களிடம் மக்களும் பலர் தோன்றினர்கள்.

மேலுங்கல்வி கற்றல்

சிங்கம்பட்டியில் ஆசிரியராக இருந்தபோது மேலுங் கல்விகற்று வழக்கறிஞராகவேண்டும் என்று எண்ணினர். இருபதாவது அகவையில் கல்லூரியிற் சேராமல் தனி யாகவே படித்து எப் - ஏ. பரீட்சையில் தேறினர். பிறகு இருபத்தோராவது அகவையில் வழக்கறிஞர் தேர்வுக்குப் படித்துத் தேறி வழக்கறிஞர் வேலைக்குரிய பட்டமும் பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் வேலைக்குச் சென்றார்.

தமிழ்மொழிப்பற்று

இவர் தமிழ்மொழியினிடத்திலே மிகுந்த பற்றுடைய வராக இருந்தார். திருநெல்வேலியில் அந்நாளில் அழகிய சொக்கநாதபிள்ளை என்னும் செந்தமிழ்ப்புலவர் வாழ்ந் திருந்தார். இவர் திருநெல்வேலியில் தெற்குப் புதுத் தெருவில் குடியிருந்தார். வணக்கமாகப் பேசுவதிலும் வேடிக்கையாகப் பேசுவதிலும் இருவொருள் பயக்குமாறு சிலேடையாகப் பேசுவதிலும் நன்றாகச் செய்யுள் இயற்று வதிலும் வல்லவர். அழகிய சொக்கநாதபிள்ளையும் சுப்பிர மணிய பிள்ளையும் நெருங்கிய நண்பர்களாவார்கள். இரு வரும் இலக்கண இலக்கியங்களைப்பற்றியும் செய்யுள் நயங் களைப்பற்றியும் உரையாடுவார்கள். போட்டிபோட்டுக்

கொண்டு புதுச்செய்யுட்களும் இயற்றுவார்கள். அழகிய சொக்கநாதபிள்ளை அநேக தமிழ்நூல்களை இயற்றினர். அந் நூல்களிற் சில வெளிவருவதற்கு இவர் உறுதுணையாகவும் அமைந்து நின்றார்.

ஆராய்ச்சி

இவர் தனிப்பட்ட முறையிலும் அழகிய சொக்கநாத பிள்ளையோடு சேர்ந்தும் வேறுபல நண்பர்களோடு கலந்தும் நூல்கள் பலவற்றை ஆராய்ச்சி செய்தார். நண்பர்களோடு உரையாடிக்கொண்டிருக்குங்கால், திருக்குறள், சிவகசிந்தா மணி, சிலப்பதிகாரம், காலடியார், கம்பராமாயணம், வில்லி பாரதம் முதலிய நூல்களிலேயிருந்து பாடல்களை மேற் கோளாக எடுத்துக்கூறுவார். கம்பராமாயணச் செய்யுள் கலங்களில் ஈடுபட்டு அவைகளைப் பாராட்டுவார். கம்பராமா யணத்தில் மிக அருமையானவை என்று தாம் எண்ணிய பாடல்களில் ஓர் ஆயிரத்தைத் தொகுத்துவைத்தார். அவை கட்கு உரைகள் எழுதி அவைகளை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பது அவருடைய எண்ணம். ஆனல் அவ் வெண்ணம் நிறைவேறவில்லை. வழக்கறிஞராகித் தமது வேலையைத் திறம்பெற நடத்திக்கொண்டிருந்தார். உண்மை யான வழக்குகளைத்தான் நடத்த உடன்படுவாரேயல்லாமல் பொய் வழக்குகளை ஒருநாளும் நடத்த உடன்படமாட்டார். வழக்காளியையும் எதிர் வழக்காளியையும் ஒன்றுபடுத்திப் பகையைத் தீர்த்துவிடலாம் என்று தோன்றினல் அவ் வாறே செய்துவிடுவார். மற்றவர்களைப்போல் வருமானம் கெட்டுப்போகும் என்று ஒருசிறிதும் எண்ணவேமாட்டார்.

செய்யுள் இயற்றுதல்

இவர் தனியாக நூல்கள் எதுவும் இயற்றவில்லையா யினும் தனிப் பாடல்கள் பல பாடியிருக்கிறார். ஒருகால்

இவர் தம்முடைய கண்பார்வை குறைவை உட்கார்ந்த வரையறுத்துரைத்தார். அப்பொழுது ஒரு சிற பெண் பாட்டுப் பாடிக்கொண்டு பிச்சை எடுக்க வந்தாள். இவரைக் கண்ட கண்பார்வை, "எங்கே இப் பெண்ணை ஒரு செய்யுள் இயற்ற; பார்க்கலாம்" என்ற வேடிக்கையாக விளையாடினார். இவர் பிற்ற சேர்த்திருந்த,

"ஓலை யுளிர்ப்பி னரிற்ற மாயின
நீல மலர்கொற்ற வேல்பிள்ளாய்—கோதையர்
கண்பிட்டுப் பாடு குயிலை யுனக்குள்ள
மாப்பிள்ளை நான்வருவ னால்"

என்ற பாடினார். இவ்வாறு இவர் வென்ப இலக்கணம் பிழையாமலும் வினாவையும் வேடிக்கையாகவும் பாடி பதைக் கேட்ட கண்பார்வை மிகுந்த வியப்படைந்தார்கள்.

மற்றொரு சான் இவரும் இவருடைய கண்பார் ஒருவரும் உலாவச்சென்ற ஊருக்கு வெளியே சற்றிக்கொண்டிருந் தார்கள். இருவருக்கும் இலேடைப் பாடல்களைப்பற்றி உரையாடல் நிகழ்ந்தது. இலேடைப் பாடல்கள் பலவை கடினமென்றும் அக் காரத்தார்கள் மிகுந்த சருத்துடன்றி இலேடைப் பாடல்களைப் பாடுதல் என்றும் கடினமான கண்பார் பேசினார். இவரோ, "இலேடைப் பாடல்களைப் பல வகை அல்லாவது கடினமானதன்ற, சிறிது முயன்றும் பட லாம்," என்ற கூறினார். கண்பார் சவாலில் இன்ற மாம் ஒன்றைச் சுட்டினாள். "இம் மாநிலத்தும் மனிதனைக் குறித்து இலேடையாக ஒரு பாடல் இயற்றலாம் பார்ப்போம்," என்றார். இவரோ இவ்வாறு விளக்கினார்,

"பல்லைய மாந்தரையர் பன்னியம் பெறுதலால்
கல்லை யுறுதியுறக் காண்கையால்—சொல்லை
வினாவென்ற என்றும் வருதி வளர்தலும்
மனிதனை யொக்கும் மரம்."

என்னும் பாடலைக் கூறினர். இவருடைய கண்பர் தாமும் ஒன்று பாடியிருப்பதாகக் கூறி,

"மண்ணைஇலே பாச்சொனலால் மற்றுக்குக் கைதலால்
பண்ணை எனிருப்பும் பண்பிலுல்—பெண்ணை
இனிதலத்த கொண்டிபற்றம் சான் பனைப்பில்
மனிதனை டொக்கும் மாம்."

என்றுஞ் செய்யுளைக் கூறினர்.

பிறகு மற்றொருநாள் கண்பர்கள் இருவரும் வேறொரு கண்பர் வீட்டிலே உரையாடிக் கொண்டிருந்தார்கள். மருத் துவருக்கும் விலைமகளுக்கும் நிலைடையாக ஒரு செய்யுள் இயற்ற வேண்டுமென்று பேசி முடிவுசெய்து கொண்டார் கள். இவர்,

"புத்தமுதந் தந்திடலால் பூசுதயி லந்தரலால்
முத்தங் கொடுக்கும் முறைமையால்—பத்தியங்கள்
பக்குவமாய்ச் சொல்லும் பரத்தையரும் பண்டிதரும்
ஒக்குமுறை உண்டென் றுரை."

என்னும் பாட்டைப் பாடினர். இவருடைய கண்பரோ,

"கைகாட்டப் பார்த்தலால் கட்டுறிப்பால் ஓர்ந்திடலால்
மையூட்டி மேலும் மருந்திடலால்—மெய்காட்டி
இன்பதமும் வாடாடரும் எழுத் கணிகையரும்
மன்பதையுள் ஒப்புடையர் மன்."

என்னுஞ் செய்யுளைக் கூறினர். (முத்தக்கொடுக்கும் — முத்த - அக்கு - ஒடுக்கும் = முத்தக்கை நீருக்கிப் பண்ணும் செய்யும்.) இவரும் இவருடைய கண்பரும் முன்னர் நகரசபை உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்தனர். எல்லோரிட முஞ்சென்று கெஞ்சி ஓட்டுக்கேட்கும் வேலையை அப் பதவி பளித்தலால் அப்பதவியை வெறுத்தொதுக்கி விட்டார்கள். இவர்கள் நகர சபையில் பதவி மேற்கொண்டிருந்தபோது இரும்புக்கடை முதலிய இடங்கட்குப் போய் எல்லோரிட

மும் ஓட்டிரப்பது பழக்கம். அப் பதவியை விட்ட பிறகோ னவனாயும் ஒரு பொருட்படுத்தாமல் தெருவிற் பெருமிதத் துடன் செல்லலாயினர். இந் நிலைமையை எண்ணி விபரித்த இவர்,

> " இரும்புக் கடையாரும் ஈனையரும் இப்போ
> தரும்பிற் கடையராய்த் தோன்ற—விரும்பா
> விதியின் செயலென்று வெண்ணினமே னெல்லேப்
> பதியின்மேல் வைத்த பரிவு."

என்று பாடினர். இவருடைய நண்பர் வீட்டில் பதினைந்து ஆகவையுடைய சொக்கன் என்னும் பையன் ஒருவன் பணி யாளனாக இருந்தான். அவன் தென்னை மரத்தில் தலைகீழாக ஏறுவதிலும், தெப்பக்குளத்து நடு மண்டபத்தின் மீது ஏறிக் குளத்தில் குதித்து நான்கு பங்கங்களிலும் நீந்துவதி லும் கெட்டிக்காரனாக இருந்தான். அவன்மீது ஒரு செய்யுள் இயற்றவேண்டும் என்று இவருக்கு அவா உண்டா யிற்று. உடனே அப் பையனைப் பார்த்து,

> " ஆலவாய் சென்றங் கானடியைப் போற்றுபவர்
> சாலப் புகழ்ந்தணைக்கும் பேருடையாய்—ஞாலத்தில்
> தென்னைமரம் ஏறலிலும் தெப்பத்தில் நீந்தலிலும்
> உன்னைநிகர் உண்டோ உரை."

என்று பாடினர்.

இசையறிவு

இவருக்கு இசையறிவும் உண்டு. பாடல்களைச் சந்தத் தைத் தழுவியே படிப்பார். பொருள் விளங்குமாறு பாடு தலிலும் வல்லவர். ஏறக்குறைய நாற்பதுக்கு மேற்பட்ட பொதுவான இராகங்களின் பெயர்களை உணர்ந்திருந்தார். பாடகர்களின் உயர்வு தாழ்வுகளையும் அளந்தறிவதில் வல்லவர்.

இறுதி

தமது அறுபத்து மூன்றாவது அகவையில் ககூக-ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் இவருடைய முதுகில் சிறு சங்கு போல் கடிப்பு ஒன்று உண்டாயிற்று. பிறகு அது சுளையில் வளர்ந்தது. அதனால், இவருக்கு மேலும் பல தொல்லைகள் உண்டாயின. ககூகக-ஆம் ஆண்டு மேத் திங்கள் கசு-ஆம் நாள், இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவனடைய திருவடி நீழலையடைந்தார்.

அ. பங்காருப்பத்தர் - சி

தோற்றம்

தொண்டைவள நாட்டில் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த நமண்டி என்னுஞ் சிற்றூரில் இவர் கஅஎக-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் மூன்றாம்நாள் (பிரசோற்பத்தி யாண்டு மாசித் திங்கள் இருபத்தேழாம் நாள்) பிறந்தார். இவருடைய குலம் விசுவகரும குலம். தந்தையார் பெயர் சின்னத்தம்பிப்பத்தர், தாயார் பெயர் கங்கையம்மை.

கல்வி

இளமைப் பருவத்தில் இவர் தமிழுந் தெலுங்குங் கற்கத் தொடங்கினர். தெற்குணம் என்னும் ஊரிலே சின்னஞ் பயின்றார். பிறகு தந்தையார் புதுச்சேரியை அடைந்தமையின் இவரும் அங்கடைந்து குலத்தொழிலைக் கற்றார். மேலுங் கல்வி கற்க வேண்டும் என்னும் அவா மிகுதிப்படவே அந்நாளில் புதுவையைச் சார்ந்த குயப்பாள யத்தில் இலக்கிய இலக்கணங்களில் மிகவல்லவராகச் சிறந்து விளங்கிய பெரும் புலவர் பு. அ. பெரியசாமிப் பிள்ளை என்பவரிடம் மேலும் இலக்கண இலக்கிய நூல்களைக்

கற்றார். வளவனார் மடத்தில் இருந்த சண்முக அடிகள் என்னும் பெரியாரிடம் கைவல்லிய மென்னும் வேதாந்த நூலையும் கற்றுணர்ந்தார்.

வடமொழி

இவர் வடமொழியையும் கற்க விரும்பிப் புதுவையில் இருந்த சாந்தானந்த குருசாகுவதி அடிகள் என்னும் பெரியாரிடம் கற்றார். வடமொழி நூல்களையும் ஒருவாறு ஓதியுணரத் தக்க நிலையுண்டாயது.

ஆசிரியர்

இலக்கண இலக்கியப் பயிற்சியில் இவர் சிறந்து விளங்குதலைக் கண்டு சிலர் இவரிடம் கல்வி கற்கவிரும்பினர். அவ்வாறு விரும்பியவர்கட் கெல்லாம் இவர் பாடஞ் சொல்லுதலை மேற்கொண்டார்.

மொழி பெயர்ப்பு

கஅகஉ-ஆம் ஆண்டில் ஆறுமுகம் பிள்ளை என்பவர் ஏற்படுத்தியிருந்த விக்டோரியா அரசியார் அவையில் தாமும் ஓர் உறுப்பினரானார். அவ்வவையில் இருந்த நிலைமைக் கொருமுறை, "இலகு வேகம்" என்னும் பெயருடன் இதழ் ஒன்று வெளி வந்து கொண்டிருந்தது. அவ்விதழில் தாமும் எழுதத் தொடங்கினர். சாந்தானந்த அடிகளால் தொடங்கிச் செய்யப்பட்ட விவேக தருப்பணம் என்னும் வேதாந்த நூலைத் தமிழில் மொழி பெயர்த்து வெளி யிட்டார்.

ஆசிரியத் தொழில்

கஉ0உ-ஆம் ஆண்டில்முத்தியாலுப்பேட்டையில் உள்ள கல்லூரியில் ஆசிரியராக அமர்த்தப் பெற்றார். அக்கு மாணவர்களுடைய கல்வி வளர்ச்சியைக் கருதி நன்கு

உழைத்தார். இதனால் மாணவர்களும் அதிகாரிகளும் இவரைப் பெரிதும் பாராட்டிப் போற்றி மதித்தனர். இவருடைய சீர்த்தி நாளும் வளர்ந்தோங்கியது. ஆம்-ஆம் ஆண்டில் கல்வே கல்லூரில் ஆசிரியராக அமர்த்தினர்கள். அங்கும் தமது திறமையை நன்கு காட்டிப் பேரும் புகழும் பெற்றார்.

கலீமகன் கழகம்

ஆஆஅ-ஆம் ஆண்டில் கலீமகன் கழகத்தை ஏற்படுத்தி உறுப்பினர்கள் எல்லோரும் இலக்கண இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடும்படி செய்தார். கழகத்தில் மிகுந்த ஊக்கம் காட்டி மெய்வருத்தம் பாராது உழைத்தார். ஆண்டு விழாக் காலத்தில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளின் தலைமையின் கீழ்ப் பல பேரறிஞர்களின் சொற்பொழிவுகள் நிகழச் செய்தார். அந்நாட்களில் புதுவை மாநகர் பொலிவு பெற்றுச் சிறந்து விளங்குதலே மக்களினவருங் கண்டு மகிழ்ந்து இவரைப் பாராட்டிப் போற்றினர்கள். அவைபின் சொற்பொழிவால் உள்ளூர் மக்களே அன்றி வெளியூர் மக்களும் மிகு பயன் பெற்றார்கள்.

> "செவிக்குண வில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கும் ஈயப் படும்."

என்பது பொய்யாமொழியன்றே? இக்கழகத்தில் இவரும் அடிக்கடி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

கலீமகன்

நீங்கள் இதழ் ஒன்றைச் செம்மைபெற நடத்துதல் வேண்டும் என்னும் வேணவா இவருக்கு மிகுதியாக இருந்தது, "கலீமகள்" என்னும் பெயருடன் இதழ் ஒன்றை நடத்தி அதில் அரிய கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டார்.

குலப்பணி

குலவளர்ச்சியிலும் இவர் பெரிதும் ஊக்கம் காட்டினர். தென்னிந்திய சிவனருமப் பெருமக்கள் பெருங் குழுச் செயலாளர்களில் தாமும் ஒருவராக அமைந்து பேருதவிபுரிந்தார். கசுஉஉ-ஆம் ஆண்டில் சிவன கரும அலுவ ஒன்றைப் புதுவையில் நிறுவினர்.

பண்பு

இவர் செய்யுள் பாடுவதில் மிகுந்த நிறமையுடையவர். இவருடைய வாக்குரயம் வடலூர் இராமலிங்க அடிகளின் வாக்கைப்போல் எளிமையும் இனிமையும் அமைந்து விளங்கியது. இவர் எவரிடமும் வன்சொல் வழங்கார். எல்லோரிடமும் இனிமையாகவே பழகும் இயற்கை வாய்ந்தவர். இவரோடு பழகியவர்கள் இவரைப் பிரிந்திருக் நறுகு வருந்துவர்.

நூல்கள்

விவேக நருப்பணம் என்னும் நூலைத் தெலுங்கில் இருந்த மொழி பெயர்த்ததன்றி நூல் வடிவாக வேறு பாதலுஞ் செய்ய வில்லையெனினும் தமது பத்திரிகையில் இவர் எழுதிய கட்டுரைகள் பல. இயற்றிய தனிப் பாடல்கள் பல.

இறுதி

பேரும் புகழும் பெற்று விளங்கிய இவர் கசுஉஙு-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இருபதாம் நாள் இடைவிடாத உழைப்பின் காரணமாக நோய்வாய்ப்பட்டுத் தமது ஐம்பத்தொன்காவது அகவையில் இவ்வுலக வாழ்வைத் நறந்து இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

இரங்கற்பா

இவர் காலமானபோது இவருடைய நண்பர்களும் உற்றார் உறவினரும் பெரிதும் வருந்தினர். அறிஞர்கள் இரங்கற்பாப் பாடினர். புதுவைக் கனிமகன் கழகத்தார்,

"சற்றமிழ் தூரிப்பார் சாலிவத்தே பாலொளப்
பெற்றவரீ விண்ணுலகப் பேறதனை - மற்றெண்ணேம்
பித்தரைப்போ லேசிக்றேம் பேசம் வையறியேம்
உத்தமனே சின்பிரிவை ஓர்த்து."

மக்களொடு சின்மனைவி மாணவரும் சுற்பினரும்
தக்கதனை சுவ்வழுத்து தந்தனிக்க - அக்காலம்
பூண்டவன்றற் ருன்அடைதல் பூவினிற்பல் காலொன்னும்
ஆண்டகையே ஆமோ அறை."

என்று கூறி இரங்கினர். மற்றும் மா. எல்லப்பநாயகர், நா. வேங்கடாசல நாயகர், கல்வே கல்லூரி மாணவர்கள் ஆகியோரும் இரங்கற்பா விளைத்து வருந்தினர்.

கூ. சிதம்பர பாரதியார்

தோற்றம்

பாண்டி வளநாட்டிலே சிவகங்கைச் சீமையைச் சேர்ந்ததும் புலவரை வீரபாண்டியபுரம் என்னும் வேறு பெயரைப் பெற்றதுமாகிய மழவராயனி என்னும் ஊரில் வாழ்ந்திருந்த சுப்பிரமணிய பாரதியார்* என்பவருக்கு இவர் இரண்டாம் திருமகனாகத் தோன்றினர். சுப்பிரமணிய பாரதியார் பிள்ளைப்பேறில்லாதபடியினால் மனம் வருந்திக் குன்றக்குடி என்னும் மயூரகிரியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான்மீது பிள்ளைத்தமிழ் நூல் ஒன்றை ஓதி

---

* இவருடைய வரலாற்றைத் தமிழ்ப்புலவர் வரிசை கஎ-இல் காண்க.

ரானில் பாடினர். அதன் பயனாக மக்கள் இருவர் தோன்றினர். மூன்னவர் பெயர் சுப்பராமர். இரண்டாவதாகத் தோன்றிய இவர் காலம் கழகூடம் ஆண்டு. இவருக்குச் சின்னச்சாமிப் பாரதியார் என்று மற்றொரு பெயரும் உண்டு.

கல்வி

கல்விகற்கத் தொடங்கிய இவர் தம்முடைய தந்தையாரிடமும் பிற அறிஞர்களிடமும் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் நன்கு ஓதியுணர்ந்ததோடு இசை நூற்பயிற்சியையும் இனிது பெற்றார். செய்யுள் பாடுந்திறன் நன்றாக அமைந்தது. திரிபு, யமகம், சிலேடை முதலிய பாடல்களை எளிதாகவும் விரைவாகவும் இயற்றினர்.

வாழ்க்கை

செய்யுள் பாடுந்திறம் நன்கு அமையப்பெற்ற இவர் செய்யுள் இயற்றலையே தமது பொழுதுபோக்காகக் கொண்டார். செல்வர்கள் பெருநிலக்கிழார்கள் முதலியோர்மீது செய்யுட்கள் பாடித் தக்கவாறு நன்கொடை பெற்றார்.

இயற்றிய நூல்கள்

இவர் பல நூல்கள் இயற்றியுள்ளார். நொளனந்தப் பெரின்பக் கீர்த்தனம், மதுரைக் கும்மி, கோகரணக்கும்மி, குன்றக்குடிக் குமரன் வண்ணம், பெரியபுராணக்கீர்த்தனை, உருக்குமணி கலியாணம், துருவ சரித்திரம், குசேல சரித்திரம், அம்பரீஷ மகாராச சரித்திரம் என்பன அவற்றுட் சில. இவர் இசை நூல் வல்லாராக இருந்தமையான் பெரும்பாலும் இயற்றிய நூல்கள் யாவும் இசை நூல்களாகவேயுள்ளன. இசைப்பாடல்களினூடே விருத்தப்பாடல்களும் பல காணப்படுகின்றன.

இவர் சோழிப்பெருமான்மீது பாடிய இசைப்பாடல் ஒன்றை அடியிற் காண்க:

ராகம் - சுருட்டி. தாளம் - ஆதி

பல்லவி

தமிழுரிசை பேசுமறை வாசை (தமி)

அனுபல்லவி

திருவேலை சாயலி தினமிழ் சேசை (தமி)

சரணங்கள்

க. தூசையதனிலே அலைபுமென் பாலே
பாசம்வருங் காலே பதத்தாமென் மேலே (தமி)

உ. சித்தமிரங் காதை திவ்யமலர்ப் பாதை
பத்தர்க்கருள் தாதை பலத்திர்க்கும் போதை (தமி)

க. அம்பலத்தி லாடும் அய்யனதி கூடும்.
சம்போமறை பாடும் சபம்புனல் சூடும் (தமி)

ச. பெத்தசை சாட்டம் பெருஞ்சக்தைக் கூட்டம்
உன்றன்பதச் சேட்டம் உற்றபினென் வாட்டம் (தமி)

இறுதி

இவர் சுன்சோதரம் சிலவழிபாடு செய்தல் முதலிய சல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தொழுகினர். மேலும் பிறவிக்கடலுட்படாத வீடுபேற்றை படைதற்குத் தவறு தெறிவையும் மேற்கொண்டு ஒழுகினர். இவருடைய மகனைத் தோன்றிய இராமசாமி ஐயர் என்பவரும் சிறந்த புலவராக விளக்கியிருந்தார்.

---

60. மதுரஞ்சுந்தரபாண்டியனார்

[20 - ஈர]

தோற்றம்

இவர் நீலமணிமிடற் றுலவாயிறைமர் மதுரை மாநகரிலே வாழ்தலை மேற்கொண்டவர். நாள்தோறும் அப் பெருமானுக்குத் தேவாரப்பணி செய்து வருபவர். ஓதுவாராகிய இவர் தேவாரம் ஓதுதலோடு தமது ஓதுதற் றொழிலை நிறுத்திவிடாமல் பலவகையான நூல்களையும் ஓதிப் புலமைபெற்றார்.

முருகவழிபாடு

முருகக் கடவுளிடத்திலே பேரன்புகொண்ட இவர் முருகக்கடவுள் எழுந்தருளிய திருப்பதிகட்கெல்லாஞ் சென்று வழிபடுதலையும் மேற்கொண்டார். தொலைவி லுள்ள திருப்பதிகட்குஞ் சென்று வருவார்.

திருவருண்மலை

பன்றிமலைச் சாரலின்கீழ்த் தென்பால் ஓடும் வராக நதியின் தென்கரையிலே திருக்குளந்தை என்னும் ஊர் உளது. அஃது இக்காலத்தில் பெரியகுளம் என வழங்கப் படுகிறது. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாகச் செய்த பரமன் திருவிளையாடலைத் திருவிளையாடற் புராணம் ஓதினோர் அறிவரும் உணர்வர். பன்றியின் முகம் பெற்ற அப் பன்னிரு வரும் முருகக்கடவுளின் திருவருளைப்பெற்று அக் கடவு ளுக்குத் திருமுழுக்குச் செய்தற்கு உண்டாக்கிய குளமே பெரியகுளமாகும். இவ்வூர் காளைட்மில் பலராலுந் திருப் பணி செய்யப்பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இப்பதியில் எழுந்தருளிய முருகக்கடவுளிடத்திலே இவர் மிகுந்த மெய் யன்புடையவர். அடிக்கடி சென்று வழிபட்டுத் திரும்புவார். அவ்வூரினர் சிலர் அப் பெருமான்மீது பாமாலை ஒன்று

பாடவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். இவர் அவர் கண்டபடி வேண்டுகோளுக்கிணங்கித், "திருக்குளந்தை முருகக்கடவுள் திருவருண்மாலை" என்னும் நூலை இயற்றிக் கொடுத்தார்.

பாட்டு

"சாதியெனும் பேய்பிடித்தார் எல்லாருங் கூடித்
தாழ் வுயர்வொன் றறியாமல் சாத்தினையும் வீணை
வீதியிலே வாசலிலே கோயில்குளக் கரையிலே
மேல்கீழென் றொருவரைமற் றொருவர்வெறுத் தலைவர்
நீதியிலே நிலத்துலகில் வாழும்வழி காணார்
நெருக்குநெருக் கடியான்மெய்க் நெறியுணரா மாட்டார்
ஆதியிலே இருந்தவியல் அறிந்தவர்தாழ் குளந்தை
அடைந்தேனென் ஆறுமுக மணியேயவர் தருவே."

என்பது அம்மாலையில் ஒருபாட்டு. இதனால் இவ்வாசிரியர் சாதிபேதங்களையெல்லாம் வெகு காலத்திற்கு முன்னமே வெறுத்துச் சமரச சுத்த சன்மார்க்கத்தை எய்திவிட்டார் என்பதை நாம் உணருகிறோம். இத்தகைய திருந்திய மனப் போக்கைப் பெறுதற்கு எவ்வளவோ அருந்தவங்கள் ஆற்ற வேண்டுமென்பதை எல்லோரும் கண்குளிர்வர்.

அருளால் நோய் தீர்த்தல்

இவர் சித்தமருத்துவ நூல்களிலும் வல்லவர் ஆயினும் தமக்கு வந்த பிணிகளையெல்லாம் முருகன் திருவருளை நாடித் தீர்த்துக்கொண்டாரே யல்லாமல் மருந்தை நாடித் தீர்த்துக்கொள்ளவில்லை. இவ்வுண்மையினை இவர் திருவருண்மாலை அறுபத்தேழாவது பாட்டில்,

"முன்னொருநாள் வயிற்றுநோய் பொறுக்கமுடி யாது
முருகாவோ வெனவிரவோர் இலையான்முன் தீர்த்துப்
பின்னொருநாள் இடதுவிலாப் புடையிடையென் பிழுக்கில்
பெரும்பிளவைப் பிணிதோன்றப் பெரிதும்வரும் துறைநான்

தன்னெருவைப் கொடித்தமைழமேல் தோய்தாகீ போர்த்திற்
தோன்றுபெயர் அருளினைகோய் தொலைக்தநிம் தன்னருளே
மன்னெருபூல் கொடிபிடிதோன் மருவுமெழிற் குளத்தை
வளர்ந்தோங்கும் ஆறுமுக மணியேயவர் தருளே."

நூல்கள் வெளியிடுதல்

வெளிவாத பழைய நூல்களை வெளிப்படுத்தவேண்டு மென்பதில் இவர் மிகுந்த ஊக்கத்துடன் உழைத்தார். செங் கோன் தளைச்செலவு என்பது தலைச்சங்க நூல். தாப் புலித் தொடரால் ஆகியது. செங்கோன் என்னும் வேந்தன் தலையூழிக் கண்ணிருந்தவன். இவன் கடல்கொள்ளப்பட்ட தான எழுநூற்றுக்காவத தொலையுள்ள நாற்பத்தான்பது நாடுகளிடையே நின்று பெயர்ந்துவட விமயத்தைச்சேறலைச் செப்புவது. அந் நூலை இவர் கிடைத்தை ஒழுங்கு செய்து வெளிப்படுத்தினர். அரசஞ் சண்முகனருடைய திருக்குறள் விருத்தியை அச்சிட்டு வெளியிட்டார். இடைக் காடனர் பாடிய மூவடிமுப்பது என்னும் நூலைப் தேடிப் பிடித்து வெளியிட்டார். முருகக் கடவுள் வாழ்த்துத் திருவகவல் என்பதும் இவரால் இயற்றப்பெற்றது. இந்நூல் திருப்பரங்குன்றத்தை முதலாகவும் பழமுதிர் சோலையை இறுதியாகவுங்கொண்டு வலமாக முறையே வாழ்த்திச் செல்வது. இதனைப் படித்துப் பலரும் நற்பலன் பெறுவின் றனர். திருப்பரங்குன்றம் முருகக் கடவுளின்மேல் முருக மணிமாலை என்னும் முப்பத்திரண்டு பாடல்கள் கொண்ட நூலையும் இவர் பாடியிருக்கிறார்.

" அலைகடற் செந்தில்செங் கோடுதென் பழனிமலை
ஆவினன் குடிபுன்வேளூர்
ஆசில்வய ணூர்பசும் புல்வயல் விராலிமலை
அழகுபூம் பாலைசுருளி

மலைதணிகை மலைமுருக மலைகழுகு மலைமலைய
மலைமயில் மூதிமலைசீர்
மருதமலை புகழிமலை வளர்சென்னி மலைவெண்ணெய்
மலைவேள்வி மலைதிருமலை
இலைமணல் கொள் மாஆற்று மலையிருங் குன்றம்
இலங்குதென் குளந்தைபோரூர்
இலகுமா தாந்தமற் றனதலமெ வாசீக்கம்
இன்றியொளிர் கின்றனடரே
சிலைமனக் கள்வனேற் கருள்வதெல் லாமருள்க
தென்பரங் குன்றில்நீடும்
தெய்வமணி யேயருட் சைவமணி யேதெருட்
செய்யுமெய்ம் முருகமணியே.''

என்பது அம் மாலையில் ஒரு பாட்டு.

மழை பொழியப் பாடல்

சென்ற பல ஆண்டு புரட்டாசித் தொடக்கத்தில் மழையே யில்லாது நீர் நிலைகளெலாங் காய்ந்து திருப்பரங் குன்றத்தில் தண்ணீர் கிடைப்பது அருமையாயிற்று. அவ்வூர் வாழ்நர் பெரிதும் உளம் வருந்தினர். அப்பொழுது இவர் முருகக் கடவுள் வழிபாட்டிற்குச் சென்று அங்குச் சில நாட்கள் தங்கினர். தண்ணீர்ப்பஞ்சக் கொடுமையைத் தாமே நன்குணர்ந்தார். புராணச் சொற்பொழிவாளர்கள் மூவரைக்கொண்டு விராட பருவத்தைப் படிக்கச்செய்தார். அப்படிச் செய்தும் மழை பெய்யவில்லை. பிறகு இரண்டு பாடல்களை இயற்றிப் புராணச் சொற்பொழிவாளரிடங் கொடுத்து, ''இதனைப் படியுங்கள். உறுதியாக ஒரு வாரத்தில் மழை பெய்யும்'' என்று கூறினர். அவரும் அவ்வாறே அப் பாடல்களைப் படித்துத் திருப்பரங்குன்றமர்ந்த முருகனை வணங்கினர். ஒரு கிழமைக்குள் மழை பொழிந்தது. அப் பாடல்களை அடியிலே காண்க:

" முன்னே பாணர் பரிபாடல்
முழுதுங் கேட்ட முழுமுதலே
மூவா அமிழ்தே அருளளிக்கும்
முனிவா முனிவர்க் கருண்முதலே
பின்னே சங்கப் பெரும்புலவர்
பீடார் முருகாற் றுப்படையைப்
பேணி மகிழ்ந்தாய் அருட் சேந்தன்
பெரிய விருத்தந் தனில்மகிழ்ந்தாய்
அன்னே அதன்பின் அருணகிரி
அருட்பாப் புகழுஞ் செவிமடுத்தாய்
அலைபோல் நின்னூர் கனிதழைக்க
அடியேன் ஈண்டு மழைவேண்டி
இன்னே புகலும் பாட்டுங்கேட்
டெண்ணி யாங்கு மழைதருவாய்
எந்தாய் பரங்குன் றுடையானே
என்னுள் இலங்கும் எழிற்சுடரே.

விரும்பும் அடியார் தமதகத்துள்
விளங்கும் விளக்கே வெளிகடந்த
வெளியின் ஒளியே ஒளிஒளிரும்
வேலேந் தியகைப் பெருமானே
அரும்பு மலருங் காயுமினி
தனிக்குங் கனிபு மாயுயிர்கள்
அருத்தப் புனலிற் கில்லாதுன்
அயர்ந்தெய்த் தலர்வ தழகோசொல்
கரும்பும் அமிழ்தும் பாலுக்தேன்
கலந்த பாகும் போன்றினிக்கும்
கனியே கனியின் சுவையேயென்
கருணைக் கடலே கடலமிழ்தே
திரும்பும் படிக்கு முகில்களெலாம்
திரண்டுன் தலத்தில் மழைபொழியச்
செய்யாய் பரங்குன் றுடையானே
செய்யாய் அருள்நீ செய்யாயே."

இவருடைய நூல் வெளியிடுகின்ற க. சுப்பிரமணிய பிள்ளை முதலிய அறிஞர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

கக. இராமலிங்கக் கவிராயர். பொ. மீ.

(அட்டாவதானம்)

[20—ஆம்.]

தோற்றம்

இவர் மதுரை மாவட்டம் திருமங்கலம் பிரிவு பேரையூரில் அட்டாவதானம் மீனாட்சிசுந்தரக் கவிராயர் என்பவருக்கு மகனாகத் தோன்றியவர்.

கல்வி

தம்முடைய தந்தையாரிடமே இவர் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் நன்கு ஓதி உணர்ந்தார். தந்தையாராகிய மீனாட்சிசுந்தரக் கவிராயரே பன்றி அவருடைய தந்தையாராகிய பொன்னுங்கூட அவதானிகள் என்பவரும் அவதானத் திறமை பெற்றிருந்தனர் என்று தெரிகிறது. மீனாட்சிசுந்தரக் கவிராயர் தம்முடைய மகனரையும் அவதானஞ் செய்யப் பழக்கினர்.

அவதானம்

அவதானம் என்பது கிரகவாற்றலைக் கொண்டு ஒரே சமயத்தில் பல காரியங்களைச் செய்து அனைவரின் விபப் படைபச் செய்தல். ஒரே சமயத்தில் எட்டுக் காரியம் புரிவோர் அட்டாவதானி எனப்பெறுவர். இவர் எட்டுக் காரியங்களைச் செய்யப் பழகியிருந்தமையின் அட்டாவதானி எனப் பெயர் பெற்றார்.

இவர் செய்த செயல்கள்

க. அவரைக் தொடங்கி முடியும் வரையிலும், "சன்முகனாதன் சன்முகனாதன்" என்ற அடுக்கை கூறுதல்.

உ அன்னையில் வருபவர்களை "வருக்கள்" என்ற அழைத்தல்.

ங. இளைட சக்கில் கழற்றியும் பூட்டியும் காண்பித்தல்.

ச. முதலில் முறைப்படி எறிற சிறகள், கெல் இலை கதிர் மொத்தஞ் சேர்த்தத் தனித் தனியாகச் சொல்லுதல்.

ஞ. இடைநடுவில் ஒருவர் சொல்லிய தமிழ் மொழியைச் சிறிது நேரம் பொறுத்துச் சொல்லியவர் கேட்கும் பொது தவறுத கூறுதல்.

ட. கணக்குகளை ஒற்றை பொழுதுத் தொகை இரட்டை பொழுதுத் தொகை படிபடித் தொகை இலைகளைத் தனித் தனி தூரத்திற்குள் கேட்டால் மொத்தஞ் சேர்த்த மொழிதல்.

ண. ஒற்றை கிளைக் கணக்குத் தீர்த்த விடை பகர்தல்.

அ. சதுரங்கம் விளையாடுதல்.

ஈ. இருபத எழுத்துக்குள் அடக்கக்கூடிய ஒரு தமிழ் மொழியை அல்லது செய்யுளை ஒருவர் எழுதிக் கொண்டு எழுத்தக்களை முழுதும் மாற்றி மாற்றிச் சொன்னல் அதனை முறைப்படி சொல்லுதல்.

கo. (பதிறை மனையில் தொகையமைத்தல்) ஒருவர் சொல்லிய தொகைகளதலை அதனை மனைக்கு மனை மாறுபாடாக வந்த தொகை வாரதபடி எழுதச் செய்து எவ்வரிசையில் சான்கு சான்கு மனையாய்ப்

பார்க்கினும் சொல்லிய தொகை வரும்படி படைத்தல்.

கக. (பொருளுரைத்தல்) வில்லிபுத்தூராழ்வார் பாரதம், கம்பர் இராமாயணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், அருணைசலப் புராணம், அரிச்சந்திர புராணம், வைடதகம், நீதி நூல், கோவை, சிறுப் புராணம் ஆகியவைகளில் பாடமுள்ள பாடல்களைச் சொல்லிப் பொருள் உரைத்தல்.

கஉ. (எட்டெழுத்தாணிச் செய்யுள்) பதியின் பெயரும், தெய்வத்தின் பெயரும் முதலெழுத்துங் கூறினல், கூறியபடி அமைத்து, வெண்பா, கலித்துறை, கலிவிருத்தம் என்னும் இம்மூன்று பாக்களுக்குள் ஆறு பேர்களுக்கும் அவ்வாறே கொம்பில்லா வெண்பா ஒருவருக்கும், சதுரங்க மனையில் எந்த மனையை முதலாக நடத்தும்படி கேட்கினும் குதிரைபாயும் முறைப்படி மனையொன்றுக்கு எழுத்தொன்று வீதம் சுசை மனைகளிலும் சுசை-எழுத்துக்களை எழுத்துங் குதிரையுமாக நடக்கச் செய்து குதிரைபடி வெண்பா ஒருவருக்கும் ஆகக்கூடுதல் எட்டுப்பேர்களுக்கும் எட்டுச் செய்யுள் எழுத்தெழுத்தாகச் சொல்லுதல்.

பாட்டு

இவர் தாம் இயற்றிய அவதானச் செயல்களைப் பின் வரும் ஆசிரிய விருத்தச் செய்யுளில் அமைத்துப் பாடியிருக்கிறார்.

" சிங்கொண்ட கடகட தடவிட வாரணத்
திவ்யமுக மேப்பணிந்து
திசைக்களி பயத்தொடு திகைத்திட முயிற்றிடான்
சிதைத்திட வரைக்கு லங்கள்

நிலநிலவி யுலகெங் கிருளிடைவ ரினிதிற்
நிலைசமற வுதிசடன்
சிலவென்ப தட்டசக் கந்தேப தும்மலின்
செல்லுமதி கறிவரதுக்க
மித்தரொடு கத்துருவர் மின்னாரக்கள் மெய்புருடர்
தெவ்வரை சதம்புதிலர்
நிலக்கிட வீழிப்புகை மிகக்குபு குபீரெனத்
நிகழாக் கருகுலக்கச்
செதுண்ட பகிரண்ட முதலான வெளியெலாஞ்
சென்றுவிசை கொண்டுலாவும்
சித்தமயில் வாகனக் குமரகுரு பரனேயென்
சிந்தையு ளிருத்தியேத்தித்
தார்கொண்ட வெண்கமல மீதுலவு சரஸ்வதித்
தாயையன் நாவில்வைத்துத்
தகுந்தபுல வோர்பெரியர் சபையிலுள் ளோர்களேத்
தவருமே லெதுதித்தச்
சலவரு வோரைவா ருங்கென வாயீச்ச
தாவுமற வாமல்அன்பாய்த்
தக்குசஸ் முகரதன் என்னவுக் கையாட
சக்கிவி தணைக்கழற்றச்
சாந்தெனது முதலிலெறி கல்லிலெறு செல்லாத
சரியாப் எதித்தணைக்கத்
தருமொத்தை யொழுகிரட் டையவொழுகு பழையய
தாயதொகை தேர்த்தபகரத்
தக்கபடி யொத்தைய வீரவின் கணக்கினைத்
தான்கண்டு தீர்த்தசொல்லத்
தழுவுமிரு பத்தக்குச் அட்சய தானமும்
சாற்றிய விரதமுந்தித
எர்கொண்ட பதிலுறு மனையிலே சொன்னதொகை
ஏற்றமுறை யாயடைக்க
இராமாய ணக்கோவை நீதிநூல் பாரதம்
இலக்கணிச் சக்தகாண்டம்
இனியவரு ணசலப் புராணனை னின் கதையொ
டெண்ணுநிரு வினாயாடன்மற்

நியம்புகி ருவிலுமெ னிதயத் துதித்தகவி
எனையும்பிர சங்கதவில
இரதகச தரகம்ப தாதிகிறை சதுரங்கம்
இடையில்வினை யாடிவரவும்
இசைகொள்வெண் பாகவித் துறைகலி விருத்தமிவை
என்னுமுப் பாவிலொன்றும்
எங்குமகிழ் கடவுளுள தலமுமுன் எழுத்தையும்
இசைத்திடக் குதிரையடிகொம்
பிலாதவெண் பாவினுடன் எட்டெழுத் தாணிக்
கெழுத்தெழுத் தாயுரைத்து
நேர்கொண்ட அட்டாவ தானகவி இவ்விதம்
கிரப்பியு முடித்தமகிழ்வல்
கேரலார் மகுடமுடி சிதறநடம் இடும்உக்ர
நிக்ரகப் புரவிநகுலன்
நிதிவளம் மிகும்பேரை யம்பதிந ராதிபதி
நீதிபதி யாதிபதியாம்
நீணிலம் புகழ்முத்து விசயதும் பையனுரை
நிதமெச்சு கின்றநிம்மம்
நேசமுயர் சாலியம் பதியழகு நம்பிகுரு
நேமமற வாதபுனிதன்
நிருபர்தரு வரிசைபெறு வசியகுல அவதானி
நிகரிலாத் தமிழுணர்ந்தோன்
நிமிடகவி பாடுதிறன் மீளட்சி சுந்தர
நிதாணி அருளியகுமாரன்
நேர்த்திமிகு தமிழ்ராம லிங்கமென் றேபெயர்
நிலத்தவளர் கின்றனனே.''

அட்டாவதானம்

இவர் பேரையூர் பெருநிலக்கிழார் முத்துவிசய தும்பையசாமி தும்பிச்சி நாயக்கரவர்களின் அவைக்களப் புலவராகச் சிறந்து விளங்கி அவரால் பெரிதும் பாராட்டி நன்கொடைகள் வழங்கப் பெற்றவர். மேற்படி பெருநிலக் கிழாரின் முன்பு ஆயிரத்து-ஆம் ஆண்டு சூலைத் திங்கள்

எட்டாம் வள் அவதானத் செய்த சிறப்புப் பெற்றார். மேற்படி பெருமக்களோர் இவரைப் பாராட்டிப் பின்வரு மாறு எழுதியுள்ளார்.

மதிப்புரை

"இந்த சன்மதிப்புத்தகம் மூலம் தெரிகிறபடி யாதெனில் இந்தச் சமீன் சமத்தான வித்துவானும் அட்டாவதானியுமாகிய நிரு பெ. மீ. இராமலிங்கக் கவிராயர் அவர்கள், வித்துவான்களும் அட்டாவதானி களும் வழிவழியாகப் பிறந்த ஓர் உயர் குடியின் தோன்றி யவர்; ஆகலின் இந் நன்மதிப்புத்தாலுக்கு இலக்காகும் இவரும் முன்னோர்க்குரிய அதே உயர் குணங்கள் இயற்கையாகவே அமையப் பெற்றவர் என்பதில் யிப்பு ஒன்று மில்லை.

"இந்தச் சமீன் ஆதரவில் இந்த மாவட்டத்தின் உயர் பணியாளர், உயர் குடிமக்கள் இவர்கள் முன்னிலையில் ஓர் அட்டாவதானம் நிகழ்த்தப்பெற்றது. இந்நிகழ்ச்சி தெய்வீக மென்றே பாராட்டற்பாலதாயிருந்தது. பொருட்குவையும் நிலங்களும் நன்கொடையாக வழங்கப் பெற்றன.

"இந்நிகழ்ச்சியை ஓர் இளம்பாவர் பார்த்தவர்க்குக் கூட அதன் நினைவின் உள்ளத்தின் ஆற்றலும் செல்வியும் உயர்வும், தொடக்க முதல் இறுதிவரை ஆண்டு நிலவும் இறை அருளொளியும் விளக்கக் காணப்படும்."

மற்றும் இவரைப் பாராட்டிச் சான்றோர் பெருமக் களுள், "இந்த மதிப்புத்தகம் மூலம் தெரிகிறபடி யாதெனில் நிரு. பெ. மீ. இராமலிங்கக்கவிராயர் அவர்கள் கவிஞர் அவதானிகள் வழிவழி வந்த ஓர் உயர்குடும் பத்தைச் சார்ந்தவர்.

"அவரது கவிப்புலமை தோன்ற அவர் அடிக்கடி முதல் தரமான செய்புட்கள் இயற்றுவதுண்டு. அவர் அண்மை யில் உள்ள ஒரு சபீனில் ஓர் ஊரில் உறைபவராதலால் அவரை நான் அடிக்கடி கண்டதுண்டு. அப்பொழு தெல்லாம் அவர் இளைப்பதற்கு முன் முயற்சியின்றிப் பாமழை பொழிவர்.

"பண்டிதர் என்ற முறையில் இவர்தாம் தேர்வுகளில் தேறியவராயிற்றே. இத்தகையவர் பெருஞ்சொல் விகழ்த்து வதில் உள்ள சிறப்பென்னவென்று மக்கள் வினவுதல் கூடும். ஆனல் பண்டிதர் பலரும் விளக்கத்தகுதிய பாக்களையும் செய்திகளையும் அழகுபெறச் செவ்வனே இவர் விளக்கியுள்ளார். பொதுவாகக் கூறினல் பண்டிதர்கள் ஒங்கியறைந்து பேசியும் பெரிய நூலுரைகளை மேற்கோளாக எடுத்தடுக்கிப் பகட்டியும் அதற்கும் விட்டுக் கொடுக்காது யாரேனும் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால் தாம் கூறும் ஒன்று தவிர வேறு விளக்கம் இல்லையென்றும் தொன்று தொட்டு வழிவழியாக ஏற்கப்பட்டது அதுவே என்றும் கூறிப் பசப்புவர். ஆனல் இப்பெரியாரோ எனின், மிகப் பொருத்தமான விளக்கம் தருவதோடமையாது வேறும் இரண்டு மூன்று விளக்கங்கள் தருவர். இஃதல்லாமலும் இவர் ஆட்ட சாட்டமற்ற அமைந்த சீமான் என்பதை யாவரும் தாமே காணக்கூடும்.

"இவர் பல இடங்களில் வெற்றிகரமாக அட்டாவதா னம் இயற்றியுள்ளார். எனது அரண்மனையிலும் இவர் இப் பக்கத்துள்ள புலவர்கள் பெருமக்கள் பலரும் கூடிய இடத்தில் வைத்து வெற்றிகரமாகவும் முயற்சியின்றியும் ஓர் அட்டாவதானம் விகழ்த்தினர். பிறர் ஒன்றிரண்டு காட்களிலேயே செய்யக் கூடிய சில கடுமையான கணக்கு

கவி இவர் மிக எளிதாக இரண்டும் இரண்டும் நாலு என்ற அளவில் நீர்த்து விடைபனித்தார். இறைவன் அருள் பெற்றவர்க்கன்றி அட்டாவதானம் போன்ற செயல் கிகழ்த்தல் அரிதெனக் கண்டல் எளிதே. அவரின் அருமை பெருமைகளை உணர்ந்த நான் அவருக்கு என்செய் கிலமாகச் சில காணிக்கள் வழங்கியுள்ளேன். இவைபன்றி வேறு பொருள் உதவி எதையும் மறுத்து இக்கிலம் ஒன்றே அடிக்கடி வந்து தம் வேறு திறங்களைக் காட்ட இடந்தரும் என்று கூறினர்; அங்ஙனம் பலதடவை காட்டியும் உள்ளனர்" என்று எழுதியுள்ளார்.

மதுரையில் அட்டாவதானம்

கசுகூசு-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பன்னி ரண்டாம் நாள் (பிரமாதியாண்டு கார்த்திகைத் திங்கள் இருபத்தேழாம் நாள்) மதுரை மாநகரில் தெற்குச் சித்திரைத் தெருவில் உள்ள வெள்ளியம் பலத்தில் இவர் அட்டாவதானஞ் செய்தார்.

> "பாம்மருவு வேதியரே! பண்டிதரே!! செல்வர்களே!!!
> ஏம்மருவு பத்திரிகை இன்பமதாய் - நீர்தெரிந்தே
> அட்டாவ தானத்தை அன்பினொடு பார்த்தருள்வீர்
> நட்டாமல் இக்குலத்தை நான்."

என்ற அனைவருக்கும் அட்டாவ தான அழைப்புப் பத்திரிகை அனுப்பப்பெற்றது. புலவர் பெருமக்களுஞ் செல்வர்களுந் திரண்டிருந்தனர். முருகன் திருப்பெயரைக் கூறிக் கொண்டும், இலாட சக்கிரி பூட்டல் கழற்றல் எதிர் காண்பவரைப் போற்றல், சதுரங்கமாடுதல் எனத் (பாத் திரம்) தொனிலைக் கொண்டு அதன் பெயரும் எடையுஞ் சொல்லுதல், புராணச் செய்யுள்களுக்குப் பொரு ளுரைத்துச் சொற்பொழிவு செய்தல் முதலியவைகளோடு

அட்டாவதானஞ் செய்தார். ஓர் அன்பர் மதுரை இலட்சுமியம்மன் மீது சுத எழுத்துக்களால் அமையுமாறு குறிஞ்சிப்பதி வெண்பா ஒன்று பாட வேண்டும் என்று கேட்டதற்கு,

(அ) "நிச்சணி மேனி நிகழ்மதுரை லட்சுமியின்
செச்சையலர் தாளைத் தினம்பணிந்தால் - எச்சமிலே
பூமாது வாழ்வு, பொருத்த மிகுசேரு
மாமா தருண்பெருகு மால்."

என்று பாடினர். ஓர் அன்பர் திருச்செந்தூர் செந்தி லாதிபன் பேரில், "சக்கத் தமிழ்முழுதுக் தா" என்று சற்றடி அமையுமாறு ஒரு வெண்பா இயற்ற வேண்டும் என்று கேட்டதற்கு,

(ஆ) "மங்களமெக் காலும் மருவு திருச்செந்தூர்
அங்குலவு மெய்ச்செந்தி லாதிபனே—இங்குனது
பைங்கமலப் பாதம் பணிந்தேன் மகிழ்தெனக்குச்
சக்கத் தமிழ்முழுதுக் தா."

என்று பாடினர். ஓர் அன்பர் கதிர்காமம் சுப்பிரமணியர் பேரில் ஒரு வெண்பா இயற்றவேண்டும் என்று கேட்டதற்கு,

(இ) "மங்கையுமை யின்ற மதலைகதிர் காமத்தில்
தங்குசிவ சுப்ரமண்ய சாமிபதம்—தங்கமொடு
வந்தித்துப் போற்றி வருவோருக் கெல்லாரும்
சிந்தித்த மைத்தருவன் தேர்க்து."

என்று பாடினர். ஓர் அன்பர் மதுரை மீனாட்சியம்மன் பேரில் கலி விருத்தம் ஒன்று இயற்றவேண்டும் என்று கேட்டதற்கு,

(ஈ) "அண்டம் போற்ற அருண்மது ரைப்பதி
வண்டு குழ்குழல் மங்கைமீ னாட்சியை
வண்ட ருண்ருணைத் தேத்திக் தொழு கிடப்
பண்டு செய்வினை யாவும் பறக்குமே."

என்று பாடினர். ஓர் அன்பர் குன்றக்குடி முருகன் பேரில் கட்டளைக் கலித் துறை ஒன்று பாடவேண்டும் என்று கேட்டதற்கு,

(இ) "கொண்டல் பொழிந்து வளமேவு குன்றக் குடிவில்வளர்
வண்டிணை போற்று முருகேசன் பாதம் இறைஞ்சினர்க்குத்
தண்டாத செல்வங் குறையாத வாழ்வு தழைத்தலொடு
அண்டாது வெய்ய வினைபாவும் ஓடி அகன்றிடுமே."

என்று பாடினர். ஓர் அன்பர் திருப்பதி வேங்கடாசலபதி மீது ஒரு வெண்பா இயற்ற வேண்டுமென்று கேட்டதற்கு,

(ஈ) "சீர்மேவு மேன்மைத் திருப்பதியில் வாழ்கின்ற
ஏர்மேவும் எக்கன் இராட்சகராம்—தார்மேவு
வெங்கடாச லேசர் வியன்பாதம் போற்றினர்தம்
வெங்கலி மிகத்தவிரு மே."

என்று பாடினர். ஓர் அன்பர் அப்பக்கரைத் தொட்டியப்பட்டி திருமேனி அம்மன் பேரில் கலி விருத்தம் ஒன்று பாட வேண்டும் என்று கேட்டதற்கு,

(உ) "பூமி லெங்கிப் பொலியுமப் பக்கரை
வாம மின்றிரு மேனியம் மைபதம்
மேம மாக மிதந்துதித் தேத்திடக்
காமர் செல்வங் கதித்துக் கவினுமே."

என்று பாடினர். ஓர் அன்பர் மதுரை மீனாட்சியம்மன் மீது கொம்பிலா வெண்பா ஒன்று பாடவேண்டும் என்று கேட்டபோது,

(ஒ) கோம்பிலா வெண்பா

(அ) "உன்னக் கனியும் நயம்மதனை மீனாட்சி
வன்னக் கமல மலர்ப்பதத்தி—னன்னுதமிழ்
உத்தமியுன் சேர்த்தி உலக்ததத்தில் என்றுமை
வைத்தனன்ம கிழ்ந்தருள வா."

என்று பாடினர். ஓர் அன்பர் இருபது எழுத்துக்களடங்கிய குறள் வெண்பா ஒன்றை இயற்றி எழுத்துக்கள் எல்லாவற் றையும் மாற்றிச் சொன்னபோது அக்குறள் வெண்பாவை,

"அருளா கிறையே அறிவா மிறையே
கருவா மொழியே கதி."

என்று நேராகச் சரிப்படுத்திச் சொன்னர். மற்றோர் அன்பர்,

"கயனிறை வளமுறு சிவகிரி மருவிய பெருமாளே.'

என்னுந்தொடரின் எழுத்துக்களை மாற்றி மாற்றிச்சொன்ன போது இத் தொடரையும் நேராகச்சொல்லி அவதானத்தை முடித்து,

"சிலவுஞ் சேமலம் பெறுமதுரை
வசிகேசர் சிறப்புந் தேங்கி
ஆருலவுஞ் சடிலதான் நடனமிடும்
தங்கள்வெள்ளி யம்ப லத்தில்
பேருலவும் படியெனைக்கொண் டவதானம்
கனைகடத்திப் பெருமை யார்ந்தே
வாருலவும் தமதுரிமை மிகப்புரிந்தார்
சீரோழி வாழ்க மாதோ."

என்று வாழ்த்துரையுங் கூறினர். அவதான முடிவில் தக்கவாறு நன்கொடைகள் வழங்கிச் சிறப்புக்கள் பலவுஞ் செய்தனர்.

பாராட்டுரை

அவதானத்தைக் கண்டு மகிழ்ந்தவரும் வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையர் மகனுமாகிய பாஸ்கரையர் அவர்கள்,

"வாரமிக்கு வந்தவித்து வான்கள் மனமகிழச்
சாரமுள்ள அட்டாவ தானம்வெகு—நேரத்தில்

செய்தபுகழ் பெற்றுன் செயாரம விக்கலவி
வெய்தபலன் யாவுமுற வே.
கண்ணபிரா மாதி கவில்கரத் திகைமாசம்
எண்ணுமிரு பத்தே ழிகைசத்தினம்—வண்வெள்ளி
அம்பலத்தில் அட்டாவ தானமாக் கேற்றினுன்
இம்பர்புகழ் சாமவிந்த மே."

என்று புகழ்ந்து பாடினர். ஏரம்பையர் என்பவர்,

" திங்களணி யீசனடஞ் செய்வெள்ளி அம்பலத்தே
மங்களஞ்சேர் வைசியரா மாமணிகள்—இங்கிதமாய்த்
தக்தருளும் அட்டாவ தானஞ்செய் கீர்த்திபினை
வக்துகாண் பாரறிகு வார்."

என்று பாடினர். மற்றும் விருதுநகர் இராமசாமி செட்டியார், மதுரை சுப்பையர், பேரையூர் மகாலிங்கம் செட்டியார், மதுரை அம்மைபப்ப பிள்ளை, சூரிய நாராயணன் செட்டியார், சிவில்லிபுத்தூர் குருசாமி பாரதி, மதுரை சாமிநாதத் தம்பிரான், சாலிச்சந்தை பேரம்பல நாடார் என்பவர்களும் புகழ்ந்து செய்யுள் இயற்றினர்கள்.

ஈஉ. சுப்பிரமணிய ஐயர் - மீ

தோற்றம்

இவர் பாண்டிவள நாட்டிலே கோட்டையூரிலே மீனுட்சி சுந்தரம் ஐயர் என்பவருடைய அருமைத் திரு மகனுக ஏறக்குறைய நூறு யாண்டுகட்கு முன்பு தோன்றினர்.

கல்வி

கல்வி கற்கத் தொடங்கிய இவர் தமிழ்க் கல்வியைச் சுப்பராயர் என்பவரிடத்திலும், செந்நெற்குடி வீமகவி

என்பவரிடத்திலும் சென்று கற்றுத் தேறினர். இலக்கண இலக்கியங்களைச் சென்று கற்றுத் தேறிய இவருக்குச் செப்புள் பாடுந் திறமையும் சென்று அமைந்திருந்தது.

கல்வி பயிற்றல்

இவருடைய கல்வித் திறமையைக் கண்ணுற்ற சிலர் இவரிடம் கல்வி கற்கத் தொடங்கினர். அவ்வாறு கற்றுச் சிறப்படைந்தவர்களுள் வேங்கட்டராமையர், வெ. இ. இராமசாமி ஐயர், வீணை தீர்த்தான் ஆசாரி, சொ. முத்தையபிள்ளை முதலியோர் சிலராவர்.

நூல் இயற்றல்

கம்பராமாயணத்தை அடியொற்றி வெண்பாக்களாகப் பாடவேண்டும் என்று எண்ணிய இவர், பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், உயுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களையும் ஒன்பதினாயிரத்து முந்நூற்று எழுபத்தெண்பது பாடல்களாகப் பாடி முடித்தார்.

> "மன்னவன்சொல் அன்றேல் மறப்பழியை நின்பணியென்.
> பின்னடன்றன் செல்வமியான்பெற்றதன்றே - என்னவித்தின்
> செல்வரம் வனமின்றே சேரவிடை தாவென்றான்
> சொல்வசன் மலர்த்தாச் தந்தை."

என்பது அயோத்தியா காண்டம் கைகேயி சூழ்வினைப் படலத்தில் ஒரு பாட்டு. தாலப் பாராட்டி இராமச்சந்திர சாத்திரிகள், சீச பாகவதர். வீமசேனு. கவிராயர், ஆவுடையார் கோயில் க. சுப்பிரமணிய ஐயர், வெ. இராம சாமிஐயர், பரமேசுரக் குருக்கள், வீணை தீர்த்தான் ஆசாரி, சொ. முத்தையபிள்ளை, வேங்கட்டராமையர் ஆகியோர் சிலப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

"பல்லவர் செல்வம் கல்லவர் துய்ந்த
சோட்டையு மென்ன மாட்டிய கரான்
அந்தணர் குலத்தின் வந்தவ தரிந்தோன்
மீனுட்டி சுந்தரம் தானுட்டி செய்த
தவத்தா லுதித்த வள்ளரு புலத்தன்
மீப்பிரர் மதிக்கும் சப்பிர மணியனென்
றெப்பது பெயரால் செப்பது குணத்தான்
கல்விக் கனஞ்சியம் கருதிவப் பெருங்கடல்
மாணாக்கர் தமக்குப் பேணுக்க முடனே
தயந்தரு கல்வி வியந்தரப் புரிவோன்."

என்னும் பகுதி பரமேசுரக் குருக்களின் பாடலில் ஒரு பகுதியாகும். இந்நூலைக் க. வீ. அள். மு. இராமநாதன் செட்டியார் என்பவர் அச்சிற்பதிப்பித்து வெளியிட் டுள்ளார். தர்க்காம்பாள் பதிகம் முதலிய வேறு சில நூல்களும் இவரால் இயற்றப் பெற்றுள்ளன.

கக. முத்தையபிள்ளை - பெ

தோற்றம்

பாண்டியன் காட்டிலே தூத்துக்குடி என வழங்கும் திருமந்திர நகரிலே இவர் தோன்றினர். தந்தையார் பெயர் பொன்னம்பலம் பிள்ளை.

கல்வி

இவர் இளமைக் கல்வி புலமைக் கல்வி முதலியவைகளைக் கற்றதோடு சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத்தேறினர். இடையிடாது சைவ நூல்களை ஆராய்ந்தையும் சைவசமயச் சொற்பொழிவுகள் செய்தலையுமே தமது தொழிலாகக் கொண்டார். தேவகோட்டையில் சிவாகம சங்கம் எனப் பெயரிய சங்கத்தை நிறுவி அதன் வாயிலாகச் சமயத்

தொண்டு செய்தார். தூத்தக்குடிச் சைவசித்தாந்த சபையின் உப தலைவராகவும் மதுரைத் தமிழ்ச் சங்கத்து உறுப்பினராகவும் இருந்தார்.

ஆதீன சைவப் பிரசாரகர்

இவருடைய சைவ சித்தாந்தப் புலமை எல்லாரிடங் களிலும் பரவிற்று. திருவாவடுதுறை யாதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்குத் "திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகர்" என்ற பெயர் கொடுத்துத் திருக் கோயில் முதலிய இடங்களில் சைவசித்தாந்தச் சொற் பொழிவுகள் செய்து வருமாறு ஏற்பாடு செய்தார்.

நூல்கள்

இவர் சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரை, தச காரிய விளக்கம் முதலிய நூல்களும் பல மறுப்புரைகளும் எழுதியுள்ளார். பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் சிவஞான சித்தியார் பொழிப்புரையில் இவரைப் பற்றி,

"இவ்வுரையாசிரியராகிய பொ. முத்தையபின்னை யவர்கள் தம்பாலப்பருவம் முதல் சிவஞானபோதம் முதலிய சைவசாத்திரங்களை இடைவிடாது ஆராய்ந்து தமிழ் நாட்டில் உள்ள சபைகளிலும் பிறவிடங்களிலும் சைவ சித்தாந்த சம்பந்தமான பல அரிய உபந்நியாசங்கள் செய்து வருகின்றனர். உபந்நியாசஞ் செய்யுங்கால் எடுத்துக் கொண்ட விஷயத்தைக் குலையில்லாதவாறில் பிரவேசி யாமல் மேற்கொண்ட விஷயத்தைத் தொகைவகை விரிகளால் விளக்கி தற்பிரமாணங்களை இன்றியமையாத விடங்களில் காட்டி விளக்கமான செஞ்சொற்சிறப்புடன் இறுதியில் தொகையுரை உரைத்து முடித்துக் காட்டுவதில் மிக்க திறமை வாய்ந்தவர்.

"திருவாவடுதுறை ஆதீனத்தில் இப்பொழுது மகா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்களும், வயோது கொடுக்கும் வள்ளன்மையும், கூர்ந்த அறிவும், தெளி முதலிய தமிழ் மாதைகளில் தணுகிய ஆராய்ச்சியும் உடைய வள்ளலும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிகாஸ்வாமிகள் பின்னவர்களின் சைவசித்தாந்த ஆராய்ச்சியையும் உபந்நியாச ஆற்றலையுங்கண்டு மகிழ்ந்து தம் ஆதினத்துச் சைவப் பிரசாரகராக இருந்த பற்பல காலங்களிலும் சைவசித்தாந்த உபந்நியாசங்கள் புரிந்து வரும்படி கட்டளையிட்டருளினர்கள். பின்னவர்களும் அக்கட்டளையை மிக்க சிரத்தையுடன் ஏற்று நடாத்தி வருகின்றனர். இவர்களுக்கு மேன் மேலும் ஓங்கும் வண்ணம் சிவஞானச் செல்வத்தையும் இன்னோன்ன ஞானசாத்திர ஆராய்ச்சியிலும் உரையெழுதுவதிலும் உபந்நியாசஞ் செய்வதிலும் மிகுந்த விருப்பத்தையும் முயற்சியையும் கண்ட வாணாளையும் பிறவெல்லங்களையும் பரமகருணை நிலையமாகிய சிவபிரான் அருளிக் காப்பாராக," என்று எழுதியுள்ளார்.

இவர் இயற்றிய தசகாரிய விளக்கத்தைப் பாராட்டிச் சிவசண்முக மெய்ஞ்ஞான சிலாசாரிய சுவாமிகள்,

"நிருமன் நிரமேறும் செல்வன் வகாரன்
அடக்க மலரு லும்புமென் மிதியை
மாற்றிய தேவன் மலரடி யும்புமென்(று)
தூற்றுஞ் சென் அரும்பொருள் பலவும்
சேப்பவர் மனக்கொள வினைபச் வெட்ப
மொழிபிர சக்க வீழுமிய சமர்த்தன்
சந்நதர் மிழ்தலே பெற்றி சென்போன்
கரை முண்தக் கடுக்கைச் சடைபோன்
அடிமலர் இருந்தி அலைரு சொன்றே
பொருளெனக் கருது பொருளில்சம் சத்தன்

எல்ல மற்றம் வாலறி வுலகம்
சோதறத் தெரிந்த குணக்குன் றினோன்
வேல சாத்திர இயறு முணர்ந்தோன்
முத்தைய சாமப் பத்திவ் வோனே."

என்ற சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார்கள்.

---

58. ஆ- சந்தியேம்பிள்ளை
[கி. பி. 20 - நூ.]

தோற்றம்

சோழவளநாட்டில் பட்டுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள தாமரைக்கோட்டை என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் இவர் தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் ஆதமுகம் பிள்ளை.

கல்வி

இவர் பள்ளிக்கல்வியைப் பாங்குறக் கற்று முடித்தபின் புலமைக்கல்வி கற்க விரும்பினர். சமவளநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த சி. சவரிராய பண்டிதர் சிறந்த புலவராக விளக்குதலை யறிந்து அவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுச் சிறந்த புலமைபெற்றார். இனிய செய்யுட்களை விரைவாகப் பாடுந்திறமையும் இவருக்கு நன்கு அமைந்தது.

ஆதமுகனிடத்தில் அன்பு

இவருக்கு முருகக்கடவுளிடத்தில் பொன்றும் பெரும் பக்தியுண்டு சிறந்து விளக்கியது. முருகக்கடவுளை காலும் வணங்கிப் பூசனை புரிவார். அப் பெருமானுடைய திருவருளாலும் இவருக்கு நன்மைகள் பல உண்டாயின.

வாழ்க்கை

மருங்காபுரி சமத்தானப் புலவராகச் சிலகாலம் இருந்தார். பிறகு திருக்குடந்தையில் பாரதமித்திரன் என்னும் கிழமைத்தானைத் தாம் ஆசிரியராக இருந்துகொண்டு வெளியிட்டார். அந்நாளில் நாத்திகமும் சுயமரியாதை இயக்கப்போரால் பொருந்தாக் கொள்கைகள் பலவும் தலை விரித்துக் கூத்தாடின. இவர் எதற்கும் அஞ்சாது ஆத்திகத்தைத் தாணியில் நிலைக்கச் செய்வதே தமது கடமையெனக்கொண்டு அரிய தொண்டு செய்தார். பிறகு தேவகோட்டையில் தங்கியிருந்தார். இவர் அவ்வச் சமயங்களில் இயற்றிய நூல்கள் பல. தேவகோட்டையில் இருந்தபோது அன்பர் சிலருடைய வேண்டுகோளுக் கிணங்கி மந்திர மூர்த்தி விநாயகர் பிள்ளைத்தமிழ் என்னும் நூலை இயற்றினர். இந்நூல் சுபாது ஆண்டு மாசித்திங்கள் இருபத்து மூன்றும் நாளில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.

"கந்தமலி கற்பகத் தருமேவும் இந்திரன்
கமலன்மால் விபுதர்முதலோர்
காமுறுங் கன்னிமட வன்னமனை யாமொழித்
கந்தாத் தற்குளிர்தருஉந்
சந்தமந் தலைநான் டனைக்காக்க வருவிடந்
தனையழுது செய்துகண்டம்
தனில்நீல மணியெனத் தாங்குசங் கரனருள்
தழைத்தமெய்ஞ் ஞானவழிவே
பந்தம தறுத்தயோ கத்தவர் உளத்தினில்
பரபோக சுகானந்தமாம்
படர்மதியின் அபிர்தமென மிளைபிரம மேயருள்
பழுத்தொழுகு தேவதருவே
மும்தமறை மூலமா கியகளப முகமந்த்ர
மூர்த்திப் பிரான்வருகவே
முழுதலகும் அடிபணிய வருமிறகு சேரிவருள்
முதன்மைரா யகன்வருகவே."

என்பது வருகைப் பருவத்தில் ஒருபாட்டு. நாமக்கல் மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை ஆசிரியர் சு. நல்ல சிவன்பிள்ளை, தேவகோட்டை மெய்யப்ப செட்டியார், புதுவயல் சோமசுந்தரஞ் செட்டியார், திருவையாறு அரசர் கல்லூரி, இரா.ம. கோவிந்தசாமிப்பிள்ளை, தேவகோட்டை இராமநாதன் செட்டியார் தலைசிரியரின் புதல்வர் ச. செந்தில் நாயகம் பிள்ளை, தேவகோட்டை அண்ணாமலைச் செட்டியார், நூலை இயற்றச் செய்த சாமிநாதன் செட்டியார் முதலியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

"முத்தமிழ் உணர்ந்த ஆறு முகப்பெயர் புனைவ லான
உத்தமக் குரிசில் ஐயந் தன் உலகறி புலமை வாய்ந்தோன்
கத்திய தூல்க ளாக்கிக் கடற்புவி பினுக்குத் தந்தோன்,
சத்திவேல் காம னூற்றூர்த் தாங்கிடுந் தரும சீலன்.

பூம்பொழில் சூழ்ம ருங்கா புரிச்சமத் தான வித்வான்
தேம்பொழி மதுரப் பாடல் செய்திடுந் திறமை மிக்கோன்
சம்பன தோளார் வஞ்சக் கண்வலைப் படாத தூயர்
சூம்பெருந் தவத்தோர் போற்றும் உறுமுகக் கடவுட் கன்பன்.

பாரத மிந்தி ரப்பேர் படைத்தபத் திரிகை யாதி
சூர தகர்ம சமத் தூபயத் திரிகை பின்ன
சேரு டோத்தி ரன்மை நிலவுல கினுக்குத் தந்தோன்
நாரணி மதிக்கும் பிள்ளைத் தமிழ்த்தனி தலைத் தானே."

சம்பன கல்லசிவன் பிள்ளையின் பாடல்களிற் சில.

இறுதி

இவர் சில ஆண்டுகட்குமுன் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

5. தத்துவபோதகர்

தோற்றம்

இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த தன்னி மாகாணத்தில் கதினை-ஆம் ஆண்டில் ஓர் உயர்ந்த செல்வக் குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு இடப்பெற்ற பின்னப்பெயர் ஸபஸ்ட்டி - டி - மொதிலி என்பது.

கல்வி

இவர் தம் தாய்மொழிக் கல்வியை நன்கு கற்றுத் தேர்ந்தார். இயற்கை பறிவுத்திக்வாக விளக்கியமையின் இவருக்கு தம்மொழியும் எளிதாகவும் நன்முகவும் படிவ நாயிற்று.

சமயத்தொண்டில் விருப்பம்

அந்நாளில் இத்தாலி இங்கிலாந்து முதலிய நாடுகளில் தோன்றிய பலர் வெகு தொலைக்கு அப்பால் உள்ள இந்தியாவுக்கு வந்து சமய வளர்ச்சிக்குத் தொண்டுபுரிந்து கொண்டிருந்தனர் இவர் அறிந்தார். தாமும் இந்தியாவை அடைந்து சமயத்தொண்டு புரிய எண்ணினார். கேரள் நகரத்தில் இருந்த சுகின் சபையிற் சேர்ந்து சமயக் கல்வி பயின்றார்.

இந்தியாவுக்கு வருதல்

சமயக்கல்வி பயின்று முடித்த பின்னர் கொல-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்தார். தமிழ்நாட்டில் மதுரை மாநகரைச் சிறந்த கிளக்குதிசையும் பெரிய நகரமாக இருந்தமையும் உணர்ந்த இவர் தமது சமயத்தொண்டிற்கு மதுரைமாநகரமே சிறந்த இடமென்று கருதி அங்குச் சென்று தங்கினார்.

சூழ்ச்சித்திறன்

இவர் தமிழ்நாட்டிற்கு யந்த சொக்கம் இக்குள்ள மக்களைச் சிறித்தல சமயத்திற் சேர்த்தற் தம்முடைய சமயத்தை விரிவுபடுத்த வேண்டுமென்பதே. ஆகவே இவர் அதற்குத் தக்கவாறு சூழ்ச்சித் திறத்தடன் வேலை செய்பதைதடக்கினர். தம்முடைய உண்மையிலே இக் குள்ளாருக்குத் தெரிதின் தம் செயம் சாயாத என்ற கள்குணர்ந்தார். எனவே இவர் தம்முடைய கடைபுடை பாவனைகளை முற்றிலும் மாற்றிக்கொண்டார். முதலாவது வேடமாகத் தம்முடைய பெயரைத் தத்துவபோதகர் என்ற மாற்றி அமைத்தார். அதற்குத் தக்கவாறு கோலத் தையும் துறவுக் கோலமாகப் புனைந்துகொண்டார். புலால் உணவை அடியோடு நீக்கினர். சைவ உணவை ஒரோவேளை உண்டார். நெற்றியிற் சந்தனம் அணிந்தார். மார்பில் பூணூல் போட்டுக்கொண்டார். பூணூல் மூன்று புரிகள் பொன்னிறமும் இரண்டு புரிகள் வெள்ளிநிறமும் அமைக்கப்பட்டிருந்தன. மூன்று புரிகள் இறந்தவர்களின் மும்மூர்த்திகளைக் குறிப்பன என்றும் இரண்டு வெள்ளிப் புரிகளும் இயேசு இறந்தபின் உடலையும் உயிரையும் குறிப்பன என்றும் மக்களுக்குத் தத்துவார்த்தம் கூறினர். பூணூலில் சிலுவையொன்று கட்டித் தொங்கவிட்டுக் கொண்டார். இவருடைய கடைபுடை பாவனைகளைக் கண்ட மக்கள் இவரைச் "சுவாமி" என்றே அழைப்பாராயினர். அதனால் இவருடைய பெயர் "தத்துவபோதக சுவாமி" என்ற கிளைத்தது. மேலும் இவர் தம்மை அந்தணர் என்றுஞ் சொல்லிக்கொண்டார்.

பழம் பார்ப்பனர்

மதுரையில் இருந்த அந்தணர்கள் இவர் தம்மையும் ஓர் அந்தணர் என்று கூறியதில் நம்பிக்கை கொள்ளவில்லை.

தத்துவபோதகர் அவர்கள் நம்புமாறு செய்வதற்குப் பழமையான பனைபோலில் வடமொழியில் தாமே ஒரு சாசனம் எழுதிக்கொண்டு உரோமாபுரியில் உள்ள ஏகனின் சபைக்குருமார்கள் இந்தியாட்டு அந்தணர்களைப் பார்க்கிலும் பழமையான அந்தணர்கள் என்ற காண்பித்து அவர்களை நம்பச்செய்தார்.

ஏகரவேதம்

இவர் வடமொழியையும் தென்மொழியையும் கண்டு கற்றறிந்தார். இருமொழிகளிலும் கண்டுகப் பேசவும் சொற்பொழிவு செய்யவும் செய்யுள்கள் இயற்றவும் பழகிக் கொண்டார். இவருடைய அறிவுரைகளைக் கேட்பதற்கு எண்ணற்ற மக்கள் கன்தோறும் இவரிடத்தில் வந்தனர். சிறிதுகாலம் சார்பாகச் சுலோகங்கள் சிலவற்றை வடமொழியில் எழுதிவைத்துக்கொண்டு அவை ஏகரவேதம் என்றும் கடவுளால் செய்யப்பட்டன வென்றும் ஐந்தாம் வேதமாகிய அதனைத் தாம் உரோமாபுரியில் இருந்து கொண்டு வந்ததாகவும் கயிறுதிரித்தார். எல்லோரும் அவர் கூறிய கூற்றுக்களை உண்மையென்றே நம்பினர்.

மன்னனிடஞ் செல்ல மறுத்தல்

தத்துவ போதகருடைய செய்திகளையெல்லாம் அக் காலில் மதுரைமாநகரில் அரசுபுரிந்திருந்த காபக்க மன்னன் கேள்விப்பட்டான். இவரைப் பார்ப்பதற்கு விரும்பித் தன்னிடம் அழைத்து வருமாறு கட்டளையிட் டான். தன்னுடைய உண்மை வடிவத்தை அரசன் அறிந்துகொண்டால் தனக்கு ஏதேனும் தீங்கு நேர்க்கூடும் என்ற எண்ணி அஞ்சிய இவர் அரசனிடஞ் செல்ல மறுத்துவிட்டார். மன்னன் இவரை வற்புறுத்திபழைக்கவு மில்லை.

மதம் மாறாதும் கோடலும்

இவர் பல இந்து சமயத்தினைரைத் திரித்துவர்களாக மாற்றினர். ஆயினும் மதம்மாறிய அவர்கள் சந்தனம் அணிதல் பூணூல் அணிதல் குடுமி வளர்த்தல் தெய்வம் போற்றல் முதலிய இந்து சமயப் பழக்கவழக்கங்களை விடவில்லை. இவரும் அவைகளை யெல்லாம் விட்டுவிடுமாறு அவர்களை வற்புறுத்தவில்லை. மதுரையில் இருந்த மற்றைத் திரித்துவ சமயக்குரவர்கள் தத்துவபோதகருடைய செயலைக் கண்டித்தனர். . இவரைப் பற்றிப் பல குற்றச் சாட்டுக்களைக் கொச்சியில் இருந்த திரித்துவ சமய மேலதி காரிகட்கு அறிவித்தனர். அவர்கள் இவரைக் கொச்சிக்கு அழைத்துக் குற்ற உசாவல் புரிந்தனர். அவர்களால் எத்த கைய முடிவுங்கட்டமுடியவில்லை. உரோமாபுரியில் உள்ள "போப்" என்னுஞ் சமயத் தலைவருக்கு அறிவித்தார்கள். அவர் இவருடைய செய்கையில் தவறு எதுவுமில்லை யென்று முடிவு தெரிவித்தார்.

உண்மை வெளியாகியது

அடிக்கடி தத்துவபோதகர் குற்ற உசாவலின் பொருட் டுக் கொச்சிக்குச் செல்லுதலை மதுரையில் இருந்த மக்கள் அறிந்தனர். செல்லுங் காரணமும் அவர்கட்குப் புலனா யிற்று. இவரும் ஒரு வெள்ளைக்காரர்தாம் என்றும் தம்மை யெல்லாம் திரித்துவர்களாக்குதற்கே வந்திருக்கிறார் என் றும் மதுரை மக்கள் உணர்ந்துகொண்டார்கள். அந் நாளில் இந்தியாவையும் மற்றைய ஐரோப்பியர்களையும் பறையரிலும் மிக இழிந்தவர்களாக எண்ணி ஒதுக்கி வந்தார்கள். தத்துவ போதகரின் உண்மை நிலையும் வெளிப் படவே இவரையும் மிக இழிந்தவராக எண்ணி வெறுத் தொதுக்கத் தொடங்கினர்கள். மதுரைமா நகரில் இவருக்

இருந்த செல்வாக்கு அடியோடு ஒழிந்தது. பிறகு ஊர் ஊராகச் சென்று சமய போதனை செய்துகொண்டு திரிந்தார். மதுரையில் இருந்ததைப்போல் வேறெங்கும் கிறிஸ்தவர்களிருக்கமுடியவில்லை.

இறுதி

இவருடைய உண்மை கிறிஸ்துவை உணர்ந்து கொண்ட தூறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் இவரை எதிர்த்துச் சொற்போரிட்டுத் தோற்கடித்தார். அப்பொழுது சிவப்பிரகாச அடிகள் செய்த தூல் ஏசுமத கண்டனம் என்பது. ஏறக்குறைய நாற்பதாண்டுகட்குமேல் இந்தியாவில் சமயத் தொண்டு புரிந்த இவர் இலங்கைக்குச் சென்று சிலகாலஞ் தங்கியிருந்தார். பிறகு சென்னை மாகாணமைபடைந்து மயிலாப்பூரில் உள்ள தோமையார் ஆலயத்துக்கு அண்மையில் சிறு வீடு ஒன்று அமைத்துக் கொண்டு அதில் வாழ்ந்திருந்து கூடுதல்-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினேராம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

இயற்றிய தூல்கள்

தமிழிலும் வடமொழியிலும் செய்யுள் செய்யும் ஆற்றல் அமையப் பெற்றிருந்த இவர் செய்யுள் வடிவில் தூல்கள் செய்யவில்லை. உரைநடை வடிவிற் பல தூல்களை ஓலைச்சுவடியிலும் கடிதத்திலும் எழுதினர். அக் காலில் இந்தியாவில் அச்சுக்கூடமே ஏற்படவில்லையாதலால் இவருடைய தூல்களெல்லாம் அச்சாகவில்லை. எழுதிய தூல்கள்,

க. மந்திரமாலை
உ. சுத்தசன்மார்க்கம்
ங. ஞானோபதேச காண்டம்
ச. தடாணநிட்காரம்
ஞ. சத்தியவேதலட்சணம்

க. பரமதூஷணபிரகரணம்
ச. சூனை நிவாரணம்
ஞ. பிரபஞ்சவிசார விருத்தியாசம்
ட. தமிழ் போச்சரிச அகராதி
ண. அரிச்சுவடி விருத்தியாசம்
த. தலச் சதகம்
ந. பூஜை நிலை
ப. நீதி சொல்
ம. கடவுள் நிருணயம்
ய. புனர்சென்ம கூட்சேபம்
ர. சித்தாந்த வெண்பாவியாசம்
ல. தத்துவக் கண்ணாடி
வ. ஏகாதசர் சரித்திரம்

என்பன.

இந் நூல்களில் § மறைந்தொழிந்தனபோக எஞ்சிய சில நூல்கள் இருப்பனவாகத் தெரிகிறது.

ண. ஸ்ரீவரரி

தோற்றம்

இவர் ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றியவர். வைணவ அந்தணர். பள்ளிபிற் சிறிது கல்வி கற்றபின் ஆண்டாள் கோயிலில் தம்மால் இயன்ற பணிகளைச் செய்துகொண் டிருந்தார்.

வழி

"வழிநெருவலி யாவன மற்றெருன்ற சூழிஞர் தான்றும் தறம்" என்பது தொல்காப்புலவர் நிருவாக்கு. பழகினோப் பயனில்லாவருக்கு யாபுண்டாகிற்று. உடலெல் லாம் புழு நெளிந்த கண்டோர் அருவருக்கத்தக்க நிலைமை

அடைந்தார். இவரைக் கண்டோர் அனைவரும் மனம் வெறுத்து இகழ்ந்து ஒதுங்கி அகல்வாரினர்.

ஊருக்கு வெளியே வாசம்

நம்மால் பிறர் மனம் துன்புறக் கூடாது என்று எண்ணிய இவர் ஊருக்கு வெளியே ஒதுக்கிடமொன்றில் குடிசையமைத்துக் கொண்டு அதில் தங்கியிருந்தார். இவருடைய தாயார் இவருக்கு வேளைக்கு வேளை உணவு கொண்டுபோய்க் கொடுத்து வருவாராயினர்.

ஆண்டான் திருவருள்

ஒருநாள் பெருமழை பிடித்துக்கொண்டது. இவருடைய தாயாரினால் காலாகாலத்தில் உணவு கொண்டு செல்ல இயலவில்லை. வில்லியாரோ நோயின் கொடுமையாலும் பசியின் கொடுமையாலும் மிக வருந்தினர். அது போது ஆண்டானுக்கு நண்பகல் வழிபாடு நடைபெற்றது. இவரோ ஆண்டானை எண்ணினர். தமது வருத்தத்தைப் போக்கியருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ஆண்டான் இவரை ஆண்டு இவருடைய தொல்லையைப் போக்க எண்ணினான். இவருடைய தாயாரின் வடிவத்தைத் தான் கொண்டாள்: அரவணைத்தனிகையையும் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு இவரிடம் வந்தான். அவைகளை இவருக்கு அளித்தான். இவர் அவைகளை உண்டார். இவருக்கிருந்த உடற்பிணியும் பசிப்பிணியும் அக்கணமே அகன்றன. உடனே இவர் பெருவியப்படைந்தார். தம் முடைய தாயாரைப் பார்த்து, "அம்மா! இவைகள் உனக்கு எங்கிருந்து கிடைத்தன?" என்று கேட்டார். அன்னையார் வடிவில் வந்த ஆண்டான், "ஆண்டாள் கொடுத்தருளினாள்" என்று சொல்லிவிட்டு உடனே மறைந்தருளினான். அப்பொழுது இவருடைய தாயார் வழக்கம்போல் உணவு

எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். தம்முடைய தாயாரைக் கண்டவுடனே வில்லியார் முன்னே எழுந்தருளி உணவு கொடுத்துத் தம்முடைய சோலையைப் போக்கியது ஆண்டாளே என்று அறிந்தார். அளவிடற்கரிய இன்பக் கடலில் அழுந்தினர். ஆண்டாளைப் புகழ்ந்து பாட எண்ணினர். எவ்வாறு பாடுவது என்று எண்ணி மயக்கினர். "பூவெல்லெடுத்துப் பாடுக" என்று வானொலி கேட்டது. உடனே இவர்,

"பூமா தெனத்தேகர் போற்றிடத் தனருணிவர்
புண்ணியப் பலமிதென்னப்
புவியோ ரனைத்தலகு மீன்றதா யெனவதிசர்
போதமிகு செல்வமெனவே
நாமா தெனப்புலவர் கொண்டாட வாழ்வார்கள்
கங்குல மடன்றைதன்ன
சக்கிரு வாங்கேசர் தக்கிருத் தேவியென
சானிலத் தவதரித்தாய்
பரமாதன் முத்தமிழ்த் திருவாய் மொழிப்பதுகள்
பரசட்டி யாசட்டிடப்
பள்ளிதயில் கொள்ளுமென் கிள்ளைக்கு வள்ளப்
பகர்தேதல் ஊட்டியென்னத்
தேமா கதங்களி அருத்திக் கருத்துடன்
செங்கையில் இருத்திவேதத்
திருப்பாவை மங்கையர் சீருப்பாற் பயித்திடுத்
திருமல்லி வனகாடியே."

என்னும் பாடலை முதலாகக் கொண்டு பதினாறு அகவிய திருத்தக்கதேவர் பாடி அதற்கு, "ஆண்டாள் சக்கிர கலை மாலை" என்று பெயர் சூட்டினர்.

இறுதி

இவ்வாறு ஆண்டாளுடைய அருளுக்கு இலக்காகிய இவர் திருப்பணிகள் செய்து பரமபதத்தை அடைந்தார்.

தோற்றம்

சோழவள நாட்டிலே திருத் தில்லைப்பதிக்கு அண்மை யில் உள்ள பெருமாத்தூர் என்னும் ஊரிலே இவர் ஏறக் குறைய நூறு ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றினர். தந்தையார் பெயர் அருணாசல முதலியார்.

கல்வி

இளமைப் பள்ளிக் கல்வியைப் பின்னர் தொடங்கிய இவர் அந்நாள் முறைப்படி சில அந்தாதிகள் கலம்பகங்கள் முதலியவைகளையும் சிதண்டு முதலியவைகளையும் கற் றுணர்ந்தார்.

தன்னெறிப் பாடல்

இவர் இல்லறத்தினராயமைந்திருந்தும் இவருடைய மனம் பெரியோர் நாட்டை நாடியது. அந் நாளில் திருத் தில்லையில் சுத்த அத்வைதானுபவாந்தராகிய ஸ்ரீமான் சப்பராய அடிகள் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார் இவர் அவரிடம் அறிவுறுவல்களை ஒதியுணர்ந்தார்.

ஞானசாரம்

இலக்கண இலக்கியப் பயிற்சியாலும் அறிவு நூற் பயிற் சியாலும் செய்யுள் பாடும் திறமைபெற்ற செய்யுளாகப் பாடுமாறு கட்டளையிட்டார். இவர் வேதாந்தப் பொருள் களை உள்ளடக்கிய அத்வைத சிந்தாமணி என்னும் ஞானசார நூலை இயற்றினர். அந் நூல் 600 கீருத்தப் பாக்களால் அமைந்தது.

"அலைநீரக் கெடுங்காலம் தன்னோத் தானே
அறியாத மயலதனால் பவத்தின் பத்தில்
தளர்வுற மோர் சிவன்முன் சனனத் தாற்றம்
சத்தரும மீட்காம்ய நவத்தின் பேரால்
வளமுறுமா னிடசத்த தேசம் பெற்ற
மறவகன்ற அத்வித நூல் மார்க்கங் கண்டு
களிமலர்க் கோன்பணைத்த சகம்பொய் யென்றே
நற்குருவை மெய்கேட்க நாடி னனே."

என்பது சார நூலின் முதற் பாட்டு.

பாராட்டு

இந் நூலைப் பாராட்டிப் பாதூர் சண்முகம் பிள்ளை, புவனகிரிப் பட்டணம் சிவசிதம்பர பாகவதர், மதுரை மாவட்டம் வீரைநல்லழகப் பிள்ளை, அதிவீராமன் பட்டினம் காத்தமுத்து உபாத்தியாயர், முத்துப்பேட்டை பொன்னுச்சாமிப் பிள்ளை, பெருமாத்தூர் அருணைசலஞ் செட்டியார், சத்தகுழி குப்புசாமிப் பிள்ளை முதலியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர். கீழ்வரும் பாடல் இவ் நூலைய வாலாற்றைச் சுருக்கமாகக் கூறுகிறது.

"சிறந்த செக்கமல தேவியழகு கழனிசூழ்
திருவிடம் பதியின்மேல்பால்
திசைமிகு சுவேதாரண்ய குழ்பெரிய மாத்தூர்
திகழ்தத்தசற் பேற்றினாலும்
சிறந்த சுவதீர்த் தரபிலருணாசலம்
சுன்தரா கப்பன்என்போன்
இசையான நல்வேத சாரமா வாக்பழும்
எண்ணென்கு உபநிடதமும்
பாரினுந்த சட்சமய சாத்திர வேதங்களும்
பதினெண் புராணமுதலாய்ப்
பல்லோ ருரைத்தவற நூலெலாந் தம்முனே
பார்த்துத் தெளிந்தபின்னர்

"எந்தாய் எனதுடலை உனதென்னை என்றிடைக்
குறையாமற் றாங்கிடுதற்கும்
எழிலுஞ் சுற்றமு மேவலர் சம்மதமும்
எனதீ தாமென்பரே."

---

54. பெரும்பற்றப் புலியூர் நம்பி

தோற்றம்

இவர் பாண்டிவள நாட்டிலே பெரும்பற்றூர் என வழங்கும் செல்லூர் எனப்படுவது எழுநூறு ஆண்டு கட்குமுன்பு தோன்றியவர். இவ்வூர் அறிஞர்கள் பலருக்கு இருப்பிடமாக அமையப்பெற்றுப் பெரும் புகழும் பெற்றது. வேதாந்த நூல்கள் பல இயற்றிய தத்துவராய அடிகள், நாராயண முனிவர், ஞானக்கலசி சொக்கநாதபுலவர் முதலிய நூல்கள் இயற்றிய விசாகப்பெருமாள், ஞானவரோதய நூல் இயற்றிய ஞானவுத்தார், பலவற்றை இயற்றிய பட்டினத்தார், பாரபாமாலை பாடிய அம்பிகாபதி ஐயர், வெண்பா வருக்கக் கோவை பாடிய பெருமாள்ஐயர், பாகவதம் பாடிய சென்னைச் சூடாளர், அழகர் கலம்பகம் பாடிய கவிக்குஞ்சரம் ஐயர், பிரபந்த நிதிகள் செய்த முத்தாலங்கட சுப்பையர் முதலிய பேரறிஞர்கள் இவ்வூரினராகிய தோன்றினர்கள்.

கல்வி

இவர் தமிழ் மொழியையும் வடமொழியையும் கற்ற இம்மொழிகளிலுள்ள இலக்கண இலக்கியங்களையும் ஐயுறவுணர்ந்த இருமொழிகளுக்கும் சிறந்த அறிஞராவர்.

புராணம் இயற்றுதல்

அக் காலத்தில் வாழ்ந்திருந்த பாண்டிய மன்னர்களில் ஒருவன் இவருடைய தமிழ்ப் புலமையை கற்குணர்ந்து

இவரைக்கொண்டு திருவிளையாடற் புராணத்தை ஆக்குவிக்க எண்ணித் தன்னுடைய கோக்கத்தை இவருக்குத் தெரியப் படுத்தினான். இவரும் அம்மன்னனுடைய வேண்டுகோளுக் கிணங்கித் திருவாலவா யுடையாருடைய திருவிளையாடல் கள் எல்லாவற்றையும் செய்யுட்களாகப் பாடி முடித்தார்.

" சொக்கனென் றொருகா லோதில்
துயர்கெடும் பழைய மாசும்
சொக்கனென் றொருகா லோதில்
தொலைவிலாச் செல்வம் உண்டாம்
சொக்கனென் றொருகா லோதில்
கருதிசொல் யாண்டுஞ் செல்லும்
சொக்கனென் றொருகா லோதில்
சொர்க்கமும் எளிதா மன்றே.
திருத்திய இறைவ னெண்ணெண்
டிருவிளை யாட்டி லொன்றைப்
பொருத்திமுன் கற்போர் கேட்போர்
புலியுழ் அரச ரகிப்
பெரும்பயன் துய்த்து நீங்காப்
பிறப்பிறப் பொழித்தெய் தெப்தர
அரும்பெருஞ் சிவலோ கத்தில்
அணைவதற் கையமின்றே."

என்பது தருப்பயன் உரைக்கும் பாடல்களில் ஒன்று.

பாராட்டு

புராணத்தை இயற்றச் செய்த மன்னன் அரங்கேற்ற முடிவில், பல விருதுகளையும், பல்லக்கு முதலியவைகளையும் வழங்கிச் சிறப்புச் செய்தான். அப்பொழுது இவர் மகிழ்ந்து,

" பல்லக்கு மேலேறிப் பல்லக்கு மேயிட்டோம்
பல்லக் கணிசொக்கைப் பாடினோம்—பல்லக்கு
மன்னு குறையுண்டு மண்மதிக்கும் விண்மதிக்கும்
என்ன குறையுண் டெமக்கு."

என்னுஞ் செய்யுளைப் பாடினார்.

குண நலங்கள்

சிவபெருமானிடத்திலும் அவனடியார்களிடத்திலும் இவர் மிகுந்த அன்பு பொருந்தியவர். தம்முடைய கருத்தைப் பிறர் எளிதாக உணர்ந்துகொள்ளும் வண்ணஞ் செய்யுள் இயற்றுவதில் இவர் மிகுந்த திறமையுடையவர். பிறரை நல்வழிப்படுத்தக் கருதி அறநூல் கருத்துக்களை இடம் நோக்கி அமைத்துச் செய்யுள் செய்வார். இவர் திருத்தில்லையில் கூத்தபிரானிடத்தில் பொன்பு கொண்டு அவ்விடமே தங்கி வாசஞ்செய்யத் தொடங்கி யமையின் "பெரும்பற்றப் புலியூர் நம்பி" என்னும் பெயரை அடைந்திருக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றனர்.

ஊரின் பெருமை

பழநி மாம்பழக்கவிச் சிங்க நாவலர் வேம்பத்தூரைப் புகழ்ந்து,

"வேதநூல் வாழிதவ வேள்வித் துறைவாழி
நீதிநூல் வாழி நெறிவாழி—ஓதுதமிழ்
வல்லாராய் நிம்பை வளம்பதிவாழ் மாசனங்கள்
எல்லாரும் வாழி இனிது.
பொங்குகடல் வாழி புயல்வாழி சீர்வாழி
நங்குநூல் வாழி தமிழ்வாழி—துங்கமிகுந்
தேசமெலாம் போற்றத் திறல்படைத்த வேம்பத்தூர்
மாசனங்கள் வாழி மகிழ்ந்து."

என்னுஞ் செய்யுட்களைப் பாடியுள்ளார்.

66. அங்கதிருட்டிணை ஐயங்கார்

தோற்றம்

பாண்டியன் சட்டநாதர் திருக்கரிக்குத் தெற்கே மூன்றமைல் தொலைவில் உள்ள தென்திருப்பேரை என்னும் ஊரில் இவர் சைமினி கூத்திர கலவாரசமயத்து பூர்வசிகை வைணவ அந்தணர் குலத்தில் கடைக்கூ-ஆம் ஆண்டிற் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கணி சிவராச ஐயங்கார். தாயார் பெயர் குழைக்காத நாச்சியார். அங்கதிருட்டிணை ஐயங்காருடைய பாட்டனாரும் சிறந்த தமிழ்ப்புலவர்; அவர் திருவனந்தபுரம் கப்பசிமான் சுவாதித் திருநாள் அரசர் பெருந்தலைகயிடத்தில் வட்டக்கடுக்கன், பொன் வீரசங்கிலி முதலிய பரிசுகளும் திங்கள்தோறும் உதவிப் பொருளும் பெற்றவர்; சின்னத்தம்பு குழைக்காதையங்கார் என்னும் பெயருடையவர்.

பெயர்

இவர் "அங்கதிருட்டிணை ஐயங்கார்" என்னும் பெயரை இடுகுறிப் பெயராகப் பெற்றிருந்தார். காளைடையில் அபிநவ காளமேகம், அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார் முதலிய சிறப்புப் பெயர்களுந் தோன்றலாயின.

கல்வி

உரிய காலத்தில் கல்விகற்கத் தொடக்கிய இவர் பெற்றோர்பால் வடமொழி தென்மொழி வேதக்கலைக் கடலுங் கற்றுணர்ந்தார். திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் வடமொழி பயின்றார். தம் இருபதாவது அகவையில் பெரும்புலவரானார்.

ஆத்தான வித்துவான்

வானமாமலை மடத்தில் இருபத்தைந்தாவது பட்டத்தில் எழுந்தருளிய பரமஹம்சேந்த்ர சின்னக்கலியன்

இராமாநுச சிவச்சலாமிகள் என்பவர் இருமொழிப் புலமையுடன் பலமொழிப் புலமையும் நன்கு அமையப் பெற்றவர். அவர் ஐயங்காருடைய புலமைத் திறத்தை உணர்ந்து தம் முடைய ஆத்மான வித்துவானுக்குச் சால்வை முதலிய பரிசுகளை வழங்கிப் பெருமைப்படுத்தினர்.

தனிப்பாடல்களும் நூல்களும்

சிறந்த புலமைத்திறம் பெற்ற இவர் அவ்வவ்வமயக்கட் கேற்பத் தனிப்பாடல்களும் நூல்களும் இயற்றத்தொடங்கினர். இவருடைய தனிப்பாடல்கள் காளமேகப் புலவருடைய தனிப்பாடல்களைப்போற் சிறந்து விளங்கினமையின் அறிஞர்கள் இவருக்கு, "அபிநவ காளமேகம்" என்ற சிறப்புப் பெயர் வழங்கினர். இவர் பாடிய சிலேடைப் பாடல்களிற் சிலவற்றை அடியிற் காண்க:

கருடனுக்கும் திருடனுக்கும் சிலேடை

"எப்பணியுங் தாக்குதலா லெண்ணுஞ் சிறையுறலால்
இப்புவியோர் முன்பாவி யென்பதனால்—செப்புபுகழ்ச்
சக்கிரிபாற் கைகூப்பித் தாழ்ந்திடலால் காவீரு
தக்கருடன் திருடன் தான்."

(அ - கை.) பணி - பாம்பு; அணிகலம். சிறை-இறகு; சிறைச் சாலை. முன்பாவி - வீ-பட்சி. சக்கிரி - திருமால்; அரசன்.

வேம்புக்கும் ஸ்டாம்புக்குஞ் சிலேடை

"மிக்க மிலேச்சதலம் வெண்டலையு மேவுதலால்
தக்க மரசத் தலைபுறலால்—பக்கமதாம்
பற்றும் பணியும் பாக்குசனை அச்சமுகப்
பற்றிரமே வேப்பமரம் பார்."

(அ - கை.) மிக்கமிலே - மிக்க விலை. வெண்தலை - வெள்ளி தலை. வெண்டலை - ஸ்டாம்பு வெண்டலை. அரசத்தலை - அரசமரத்தினிடத்து, அரசன்தலை. (வேம்பும் அரசம் ஒன்றுக வினக்குதலைப் பலவிடங்களிலும் பார்க்கலாம்.)

இவர்தாடு கூடவிருந்த இவருடைய அந்தாதிச் சிலர் பாத்து இவர் யார்?" என்று கேட்டபோது பாடியது

"எல்லோர் குடும்பன் யாம்பும் காவிதன் இன்சொல் தட்டான் புல்லன் இடத்தில் காடான் பொருந்திய வீடையன் மேலோர் சொல்லுரம் வில்லு செஞ்சொற் தருகனிச் சாணிர் தேவன் இல்லுற மெனக்குத் தானு விலைச்தனன் அறிமின் நீரே."

(அ - ம.) குடும்பன் - கல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன்; நல் இழிந்த குலத்தினன். காவிதன் - இனிமையாகப் பேசுபவன்; மயிலினோனன். பொருந்திய வீடையன் - கல்லிசைருந் தக்க வீடையளிப்பவன்; இடையர் குலத்தினன். செஞ்சொற்றருக்கன் - மனம் உருக்குமுடையவன்; முகமதியன். சாணிர் தேவன் - பூசான்; தேவர் என்னும் குலத்தினன்,

இவருடைய தனிப்பாடல்கள் ஒன்றாகச் சேர்க்கப் பட்டுத், "தனிப்பாமஞ்சரி" என்னும் பெயரோடு கழகத்தும் தூண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

நூல்கள்:

க. திருவலங்கச் சிலேடைமாலை
உ. திருப்பெயர்க் கலம்பகம்
ங. கண்ணன் பிள்ளைக்கவி
ச. பத்ம சாபவல்லபி சந்திரன்பாமாலை
ஞ. மருடதாரண வைபவ வெண்பாமாலை
ட. வேல்வி விளக்க மாலை
ண. நிட்பதேசப் பாமாலை
த. மணவாள மாமுனி வாழ்த்திருநாமம்
ந. திருவெண்பா சதகம்
ப. சற்பகவிராயர் பதிகம்
ம. வேண்டும் நிதி

எனபன இவரால் இயற்றப்பெற்ற தனி நூல்கள்.

பாராட்டு

இவருடைய நூல்கள் அறிஞர் பலருடைய பாராட்டுதலைப் பெற்றன்ன. "மருடதாரண வைபவ வெண்பா

மாலை'' என்பது ககுகக-ஆண்டில் டில்லிமா நகரில் நிகழ்ந்த முடிசூட்டு விழாச் சிறப்பைப் பற்றியதாகும். இம் மாலைத் தங்கத் தோடாவைப் பரிசிலாகப் பெற்றது. அரசருடைய வெள்ளி விழாவில் இவர், ''கமலபந்த வெண்பா''ப் பாடினர். அப் பாடல் பொற்பதக்கத்துடன் கூடிய தங்கச் சங்கிலியை வெகுமதியாக அடைந்தது. சென்னைக் கவர்னராகவிருந்த கோவுன்தரை என்பார் இவருடைய செப்புளியற்றும் வண்மையை நேரிற் கண்டுணர்ந்து கைகுலுக்கிப் புகழ்ந்து கொண்டாடினர். மற்றும் திருமணம் செல்வக்கேசவராய முதலியார், உ. வே. திருநாராய ணையங்கார், உ. வே. சாமிநாதையர், வேம்பத்தூர்ப் பிச்சு வையர், வேம்பத்தூர் சௌந்தரம் ஐயர், திருநெறபுரம் ஆ. கா. பிச்சை இபுராகிம்புலவர், தி. அ. சோ. இராமலிங்கம் பிள்ளை, கோபாலசமுத்திரம் சண்முகதாசப் பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, டி. கே. சிதம்பரநாத முதலியார், சோமசுந்தர பாரதியார், மதுரைத் திருட்டிணசாமி ஐயங்கார், காரப்பங் காடு நிடாயவேதாந்த வித்துவான் தேசிக வரதாச்சாரியர், வியாகரணவித்துவான் சின்னக் காஞ்சிபுரம் இராமானுசாச் சாரியர், யாழ்ப்பாணம் கணபதிப் பிள்ளை, விருதுநகர் இராம லிங்கக் குருக்கள், திண்டுக்கல் வீராச்சாமிப் பிள்ளை, திருநெ புரம் அமிர்தம் சுந்தரநாதப் பிள்ளை, பாலகவி அருணா சலையங்கார் முதலியோர் ஐயங்காருடைய நல்லறிஞர் பாராட்டிப் புகழ்ந்துள்ளார்கள். உ. வே. திருநாராயணை யங்கார் அவர்களுடைய செப்புள் ஒன்றை அடியிற் காண்க:

தேசையாசிரியப்பா

திருமக னென்றும் மருமக னொடுவாழ்
சியன் தென்திருப் பேரைமா நகரோன்
தேசமர் சீலி வாசனே தியனூர்
கண்மைப் புதல்வன் தொன்முறை வழாது

வடமொழி தென்மொழி நிடதல் நூலுந்
தலவர சம்மென வுலவுந் சமயம்
வேதமுந் தமிழ்தரு வேதமும் உணர்ந்தோன்
உயர்ந்தோர் குழாத்தி லுட்டோளைப் பெற்றோன்
அந்த பனைத் தலத்தன் பதமிசைப்
புனைந்தசீர் நிரவை மாலையும் பொன்னிரும்
திருவ ரச்சே விலைமட மாலையும்
திருப்பே ரைப்பதி விருப்புற மாற்று
லம்படி மின்சொற் கலம்பகம் முதலாப்
பலபிர பந்தம் பலமுறப் பாடி
வானமா மலைமுனி வாரருள் அபிவ
பின்னைப் பெருமான் எனும்பெயர் பெற்றோன்
தனிப்பா மஞ்சரி மினிப்பா லியம்பினன்
சை யேகக் கலியெனப் புனிசொலும்
அந்த இருட்டிண வாரியன்
னிந்த செஞ்சொற் கவிஞ ரேறை."

திருமணம் செல்வக்கேசவராயமுதலியார் 12-6-1911-இல் இவரைக் குறித்து எழுதியுள்ள சில உரைகளை அறிதற் கண்ண.

"பாரிஸ்பக்கோட்டையில், சைவ சமாபிவிர்த்தி சபையின். இருபத்தைந்தாவது வருடோத்சவத்தின் பொருட்டு னன் சென்றிருந்த காலத்தில், தென்திருப்பேரை, கனி. ஸ்ரீ அனந்தகிருட்டிண அய்யங்காரும், அவர் சகோதரரும் அங்குற்றிருந்தனர். நானும் பிறரும் தங்கியிருந்த மாளிகை யில் அவரைச் சந்திக்கும் சமயம் கேர்ந்தது. கேர்ந்த விடத்து, அனந்தகிருட்டினர் தாமிபற்றிய ஸ்ரீ பத்மாப வ்வாமி சந்நிதகாரமாகி, திருவாக்கச் சிலேடை மாலை, தனிப்பாமஞ்சரி, திருப்பேரைக் கலம்பகம் முதலிய நால் களின்தம் பல பாக்களை எடுத்தோதி னாக்கினர். புதிய வசன நூல்களை வாசிப்பதும், எழுதுவதும் எனக்குப் பழக்கமேயம். புதிய செய்யுள் நூல்களை யான் பார்ப்பது

மில்லை; கவனித்துக் கேட்பதும் இல்லை. ஆதலால், இந்தக் கதியின் விசேடத்தைக் கேட்ட அளவில், காரணம் அந்த காலத்தில் வந்த கவிஞரே சொல்லிவிட்டார? என்ற ஐயம் புகுதலரிற்று. இவருடைய மடக்குகளைக் கேட்ட அளவில், எல்லப்ப நாவலரையும், பின்னப்பிறகு அவர்களையும், மீண்டும் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் எழுகிற்று. முப்பாலில் முதலான பலதத்துவப் இவர்பால் கண்டு எனப் பாடல்களை அப்பால் மிதுனலான வெறுப்பும் போந்தது....."

---

20. குணங்குடி மத்தான் சாகிபு

தோற்றம்

"எப் பூத்த யமுகமும் அருள்பூத்த
இருவிழியும் எழிற்செவ் வாயும்
தாய்பூத்த மணிமார்பும் அடியாரைப்
பரிந்தணைத்துத் தாங்கும் கையும்
சீர்பூத்த மலர்த்தாளும் கண்டெனியேன்
தொழுவதென்றே சிகழ்த்தல் வேண்டும்
சீர்பூத்த செம்மையில்வாழ் குணங்குடியே
யெய்த்துளாத் தேவ தேவே."

என்ற அறிஞர்களாற் பாராட்டப் பெற்ற குணங்குடி மத்தான் சாகிபு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குணங்குடி என்னும் ஊரில் இசுலாமிய குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு இடப்பெற்ற இயற்பெயர் பா. கன்தான் அப்துல் காதிர லெப்பை.

கல்வி

கன்தான் அப்துல் காதிர சின்ன நைன தொடக்க வான குணங்குடியில் சிறிது தமிழ்க் கல்வி கற்றார்.

இவருடைய உள்ளம் எதிலும் பற்றற்ற நிலையில் இருந்த படியால் தமது தெளிவை மேற்கொள்ள விரும்பிப் பலவிடங் களிலும் சுற்றிக் கொண்டு திரிந்தார். பதினேழாவது அகவலில் தம் தந்தையாரிடமே அருளுரை பெற்றார். அதன் பிறகு மேக்கரை சென்று கைக்கா சாகிபு என்ப வரிடம் தமது சமயக் கல்வியை ஓதி முடித்தார். கைக்கா சாகிபு ஒரு நாள் திறந்த வெளியில் அமர்ந்து மாணவர் பலருக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தார். அப் பொழுது திடீரென்று பெருமழை பிடிக்கத் தொடங்கியது. படிக்கத் தொடங்கியவர்கள் மூலைக்கொருவராய் ஓடி மழையில் நனையாமல் இருப்பதற்கு இடந்தேடிக் கொண் டனர். கைக்கா சாகிபும் வந்தால் அப்துல் காதிறு லெப்பையாகிய குணங்குடி மஸ்தானும் எழுந்து எங்கும் ஓடவில்லை. இருந்த இடத்திலேயே இருந்தனர். இவர்கள் மீது மழைத் தண்ணீர் விழுந்து நனைக்கவில்லை. மழை இவ்விருவரைவுஞ் சுற்றியே பெய்து கொண்டிருந்தது. இப் புதுமையைக் கண்டவர்கள் மிகுந்த வியப்புந் திகைப்பும் அடைந்து இருவரையும் போற்றி வழிபடலானார்.

திருநெல்வேலியில் வாணிகம்

கைக்கா சாகிபுவிடம் கல்வி கற்று முடிந்தபின் திருமண முடித்துக்கொண்டு சின்னான் அத்தர் முதலிய வாசனைப் பொருள்களை வாணிகஞ் செய்துகொண்டிருந்தார். அக் காலில் அவ்வூரில் ஷாம் சாகிபு என்னும் பெரியார் ஒருவர் வசித்திருந்தார். அப்பெரியாரோடு குணங்குடி மஸ்தான் நெருங்கிப் பழகினர். அவரிடம் அருளுரையும் பெற்றார். பிறகு உலக வாழ்க்கையில் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. தமக்காக உறுதி செய்யப்பட்டிருந்த மாமன் பெண்ணையும் மணந்து கொள்ளாமல் வெறுத்துத் துறவி யாகி எங்கும் திரியத் தொடங்கினர்.

தவம் புரிதல்

தமக்குத் தோன்றிய இடங்களில் அமர்ந்து தவஞ் செய்பவரானர். "கனியேனும் வறிய செங்காயேனும் உதிர் சருகுகந்த மூலக்கனேனும், கனல்வாதை வந்தெய்தின் அன்னிப் புசித்த கான் கண்மூடி மௌனியாகித், தனியே திருப்பதற் கெண்ணினேன்" என்னும் பெரியார் வாக்கைக் கடைப்பிடித்தவராய் இலை காய் கனி சருகு முதலியவை களைச் சாப்பிட்டுக் கொண்டு சதாசிவமலை, சாகமலை, ஆனை மலை முதலிய மலைகளிலும், இருள் சூழ்ந்த காடுகளிலும் பனிதோய்ப்புகளிலும், ஆற்றங்கரைகளிலும் ஏழு ஆண்டு கட்குமேல் தவஞ் செய்தார். இவரிடம் புதுமைகள் பல விளங்கலாயின. ஆகவே மக்கள் இவரிடத்தில் மிகுந்த நம்பிக்கை காட்டலாயினர்.

பாக்கள் இயற்றுதல்

இனிய பாக்களைப் பாடும் ஆற்றலும் இவருக்கு உண்டா யிருந்தது. கிடைத்த பொழுதெல்லாம் பாக்களைப் பாடலானார். அவ்வாறு இவரால் இயற்றப் பெற்ற பாடல்கள், முகியித்தீன் சதகம், முகியித்தீன் ஆண்டவர் கொச்சகம், அகத்தீசன் சதகம், குருவருணிலை, தவநிலை, தானினிலை, நிபமநிலை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, காட்சிநிலை, தியான நிலை, சமாதிநிலை, மகமது நபி யாண்டவர் வணக்கம், தவமே பெறவேண்டுமெனல், குறையிரக்கியுரைத்தல், நாகூர் மீரான்சாகிபு விருத்தம், ஆனந்தக்களிப்பு, நிராமயக் கண்ணி, பராபரக் கண்ணி, இரகுமான் கண்ணி, எக்காலக் கண்ணி, கண்மணிமாலைக் கண்ணி, மனோன்மணிக்கண்ணி, சந்தீசுரக் கண்ணி முதலிய பல பிரிவுகளாக அமைந் தன்னன. இவர் நாயுமானவர் பாடலை ஒன்று பின்றவி ரென்பது இவருடைய பாடலை நோக்குவார்க்குத் தெள்ளி தின்புலனும்.

தன்னியலிணைக்கம்

"ஓவா வெஞ்சுப்போது மாபெரும் பாலிலீல்
வலிவத்தில் எக்கும்ஓலே
அரிபாவம் அர்பாவம் என்பெரும் பாதகம
தரப்பால் எடுத்தோதுவேன்
மையான கண்ணீர் உலகத்துள் ளகப்பட்ட
மாபாவி நீபாவியான்
மருபூபு சுபுகாணி பானவுமை காடாத
மடமைமுடி கொண்டபாவி
பொய்யான வாழ்வதனை மெய்யாக எம்பியுன்
பொன்னடி மறந்தபாவி
பொல்லார்சன் சேசமே அல்லாது கல்லோர்ப்
புறக்கணித் திட்டபர்வி
கையுமோர் பொய்புலக ஞகியே யுமதடிமை
காயிலுங் கடையாவலோ
சற்குணக் குடிகொண்ட பாத்தலுர வானகுரு
சாதன் முனிவித்தீனே."

என்பது ஒரு வணக்கப் பாடல்களில் ஒன்று.

இயற்றிய புதுமைகள்

இவ் பல புதுமையான செயல்களை நிகழ்த்தியதாகப் பலவிடங்களிலும் வழங்குகின்றன. அவற்றுட் சில செய்திகள் பின்வருமாறு:

காய்த்த இரும்புக்கு முத்தம்

ஒரு நாள் மத்தான் ஓர் ஊரில் சென்றுகொண் டிருந்தார். அப்பொழுது பாரோ ஒருவன் இவரைப் பின் தொடர்ந்து வருவதாக அறிந்தார். அவன் தம்மை நெருங் கியதும் தம்மைப் பின் தொடர்ந்து வருதல் வேண்டாம் என்றும் அவ்வாறு வரின் தாம் செய்வது போலவே அவனும் செய்ய வேண்டியதாக இருக்கும் என்றும் அவனுக்குத் தெரியப்படுத்தினர். அவன் அவர் செய்தவிப்

போலவே தானுஞ் செய்வதாகக் கூறி உடன் சென்றான். சிறிது தொலை சென்றவுடன் நங்கை யொருத்தி எதிர்ப் பட்டாள். மத்தான் அவளைக் கட்டிப் பிடித்து முத்த மிட்டார். இவரைப் பின்தொடர்ந்து சென்றவனும் அவ்வாறே செய்தான். மேலுஞ் சிறிது தொலை சென்ற வுடன் கொல்லன் ஒருவன் பழுக்கக் காய்ந்த இரும் பொன்றைக் கூடத்தில் வைத்து அடித்துக் கொண் டிருந்தான். மத்தான் அந்த இரும்பை யெடுத்து முத்த மிட்டார். இவரைப் பின்தொடர்ந்து சென்றவன் "என்னால் இக்காரியத்தைச் செய்ய முடியாது" என்று கூறிவிட்டு இவரைப் பின்தொடராமல் ஓடிப்போனான்.

மூன்றுநாள் தொழுகை

ஒருநாளிலே மத்தான் குப்பைமேடுகளில் தங்கிச் சில காட்கள் கிட்டை செய்து கொண்டிருந்தார். அவ்வூரில் இருந்த முஸ்லீம்கள் இவருடைய பெருமையை உணர்ந்து கொள்ளவில்லை. இவர் தொழுகை முதலியன புரியாமல் போலிக் கோலம் பூண்டு பொய்த்தவியாக நடிப்பதாக இகழ்ந்துரைத்தனர். உடனே இவர் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்ளுதற்கு நீர் கொணரச் செய்து கால் கைகளைச் சுத்தஞ் செய்து கொண்டு தொழுகை நடத்தத் தொடங்கினர். மூன்று நாள் இரவும் பகலும் தொழுகையை நிறுத்தாமலே நடத்திக் கொண்டிருந்தார். இவரை இகழ்ந் துரைத்தவர்கள் இவருடைய பெருமையை உள்ள வாறுணர்ந்து போற்றி வழிபடலாயினர்.

தலை கீழாகத் தவம்

ஒரு சிற்றாரையடுத்திருந்த ஒரு காட்டில் இவர் ஒரு மரத்தின் மீது தலைகீழாக நின்று நிட்டை செய்து கொண்டிருந்தார். இப்புதுமையைக் கண்ட ஒரு மனிதன்

இச் செய்தியை வள்வாழ்மக்களுக்குத் தெரியப்படுத் தினன். மக்கள் அனைவரும் அங்குத்திரண்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கிப் போரவரைந் செய்தனர். இனி இந்த இடத்தில் தங்கியிருப்பது இயலாது என்று முடிவு செய்த அவர் உடனே புறப்பட்டு வேறிடத்திற்குச் சென்று விட்டார்.

பெருமை கொள்ளல்

சென்னையில் ஒரு செல்வர் மிகப்பெரிய விருந்தொன்று நடத்தினர். விருந்திற்கு வருமாறு இவருக்குஞ் செய்தி யனுப்பினர். குறிப்பிட்ட நாளில் மத்தான் அவ்விருந் திற்குச் சென்றார். இவருடைய கோலம் பைத்தியக்காரக் கோலமாக இருந்தபடியாலும் இவருடைய பெருமையை உணர்ந்து கொள்ளாமையாலும் வாயில்காப்போர் இவரை உள்ளே விடாமல் தடுத்தனர். தம்முடைய புதுமையான ஆற்றலால் உள்ளே புகுந்த இவர் ஓர் இலையில் அமர்ந்து தற்றுக் கணக்கான பேர்வழிகட்கு ஆக்கப்பட்டிருந்த உணவுகளெல்லாம் இவர் ஒருவரே உண்டுவிட்டார். பிறகு சென்றவர்கட்கு உணவில்லாமற்போகவே செல்வர் அவர் கட்கு மற்றொருநாள் விருந்து வைப்பதாகக் கூறியனுப்பிய தோடு மத்தானின் பெருமையையும் விரிவாக எடுத் துரைத்து மிகழ்ந்த புதுமையைக் கூறினர்.

சென்னையில் தவம்

சென்னைமாநகரை யடைந்த மத்தான் அங்கு இராய புரம் என்னும் இடத்தில் தங்கினர். அந்நாளில் அவ்விடம் பெருங்காடாகவும் பாம்பு தேள் முதலிய நச்சுயிர்கள் மிகுந்த வெளியாகவும் விளங்கியது. மத்தான் அவ்விடமே தமது தவத்திற்குத் தகுந்த இடம் என்று முடிவுசெய்து தங்கினர். சென்னை மாநகர்வாழ் செல்வர்கள் குணங்குடி

யாரின் பெருமையை உள்ளவாறுணர்ந்து பெருமைப் படுத்திப் போற்றினர்.

இறுதி

எறக்குறைய பத்தாண்டுகட்குமேல் சென்னையிலேயே தங்கித் தவம்புரிந்துகொண்டிருந்த இவர் இசுலாமிய ஆண்டில் தமது நாற்பத்தேழாவது அகவையில் இறைவனடி சேர்ந்தார். அவ்விடத்திலேயே அவரை அடக்கஞ்செய்து கட்டிடங்கட்டினர். இப்பொழுது அவ்விடம் சிறந்த தர்காவாக விளங்கிக்கொண்டிருக்கிறது. சிறப்புக்களும் கைகூடப்பெறுகின்றன.

புகழ் நூல்கள்

குணங்குடியாரின் பெருமையை உணர்ந்த புலவர் பெருமக்களும் இவர்மீது நூல்கள் பாடிப் போற்றிப் பரவினர். திருத்தணிகையில் இருந்த சரவணப் பெருமாளையர் நான் மணிமாலை என்னும் தோத்திர நூல் பாடினர்.

"முறைமுறைதவ் தாசசெல்லாம் வணங்கச் சீர்சால்
முடிபுனைந்த புடவிமுழு தாளும் பெரும்
அறைதருமோர் வீட்டினுக்கே அவாவுண் மேவி
அரைக்ருக்கோ செமொழித்துக் கந்தை சுற்ற
பொறையுறின் நிருவருள்பெற் றறைய மேற்றன்
புண்ணியரா லொருபொருளென் றெண்ணற் கரியோ
குறைவறுசற் புகழ்பரம யோகி யென்னும்
குணக்குடியா னேவினக்குக் கூறலாமே."

என்பது நான்மணிமாலையில் ஒருபாட்டு. ஐயாச்சாமி முதலியார் என்பவர் தோத்திரப்பா, பதிற்றுப் பத்தந்தாதி முதலியன பாடினர். வேங்கடராயபிள்ளைக் கவிராயர் என்பவர் பத்திப்பாடல்களால் தோத்திரப்பாப் பாடினர். மகாலிங்கையன் சபாபதி முதலியார், பஞ்சரத்தினம்

பாடினர். செய்கப்தல் காதிர் நயினர் லப்பை என்பவர் ஒருபா ஒருபஃது பாடினர்.

"போத அன்புடைய தாய்தந்தை தந்தணைவர்
போதை தந்தமனையார்
பேறுன மைத்தர்புடை சூழ்சால் பெருக்கினோ ரூர்
போ கிறைத்தடறவார்
தூ சிருந்திடினும் தூரு வந்திடினும்
தூதாரம் ஒன்றுமிலையால்
தூதாத வன்செயலி னூலே எதிர்த்தலினை
தூடாத கன்றொழியுமீமல்
சாராத வெம்பவ மெலாமோட எங்கணில
தாழாதி கம்பரமூர்
தாமாக மின்றருளி னுள்வீர்க னென்றுமத
சார்பா யடைந்தவெளியேம்
வோதி கொண்டமண மார்பா லிரிந்தமலர்
விழிகருணை யாலேக்கியே
வேதாகு ணங்குடியி னுதா அருந்தவ
வீனேதா புரந்தருள்கவே."

என்பது ஒருபா ஒருபஃதில் ஒருபாட்டு. செய்கப்தல் காதிர் நயினர் லப்பை என்பவர் குணங்குடி மத்தான் சாகிபு அவர்களோடு உடன்கற்ற ஒருசாலி மாணவர். அவர் இவ ருடைய வரலாற்றை ஓர் அகவற்பாவில் பாடியுள்ளார்:

".....
ஒப்பில் குணத்தி னேங்கிய சுல்தான்
அப்துல் காதிரி லெப்பை யாலீம்
எனப்பெயர் விளக்க மெழுத்து வருகையில்
வனப்பறாடும் வாலை வயது பதினேழில்
தந்தைதான் தொழுது தருங்கரம் பற்றி
மூந்த உபதேச மொழிகலம் பெற்றத்
தன்னிலை திரியாத் தவத்திய லெடுத்து
மன்னிலை கொள்ளு மனத்தி னுனே
தவத்தினை தியல்பும் தாபதர் இயல்பும்

லத்துறை உணர்த்து கண்ணூல் பலவும்
கைதருங் கீழ்க் கரைதனில் வாழும்
செய்கப்தல் காஜிரி வெப்பை
ஆலீ மிடத்தில் அருளிலே டோதிச்
சாலவுக் தேறித் தாபத முணர்கொண்
டருணபி கிதறத் தாயீத்திருநகர்
திருபிதா டிருகான் காண்டினி லுலக
முற்றுக் துறந்து முறைபல கடித்து
பற்றற் றலைவனும் பயன்பட வொழுகித்
தேக்கமழ் சோலைத் திரிசிர புரத்தில்
ஓங்கிய அறிவால் உயர்ந்த ஆலீம்
தன்னிலை புணரும் தன்மையுங் குணமும்
முன்னிலை இயல்பு முழுதும் பதிந்து
பூமியில் எவர்க்கும் பொருளா மௌலடி
சாம்சாகிபு தம்மைத் தொடர்ந்து
மாட்சிமை தருகெறி வகைகலங் தலங்கத்
தீட்சைபெற்றுச் சிறந்தன பெற்றுத்
தனிநிலை ஒருமையைத் தாங்கி யிருவினைத்
துணியினை ஒருவி மும்மலர் தொலைத்து

.....

னொன்தெழு சதுர கிரியினும் புருக்கினி
வளர்ந்த மலையினும் காக மலையினும்
யானை மலையினும் இருங்குகை செறிந்த
ஏனை மலையினும் இருளடை வனத்தும்
பல்விலங் காடிய பினமரப் பொதும்பு
கல்விலங் காடிய பொழினதிக் கரையினும்

.....

தவ்வண சிலையான் வடதிசைக் கடைத்து
கண்டா செவருங் கனிகூர்க் துள்ளம்
தொண்டாய்த் தொழுதிடத் தோற்றமா தலாய்ப்
பண்ணுட் டவரும் பலன்பெறத் தரிசனம்
தன்னுல் உயர்தவர் தாங்குரு வினாய்
மன்னுணர் விளுஞ்சில வதியுணர் விளுஞ்சில
தன்னுணர் விளுஞ்சில கடைபயில் கையாய்

சோலையி னுள்ள சோர்தல வெவக்கும்
நீலமு புளியும் உயர்தே சிகராய்ப்
பொன்னேமா மிதிலையப் போதலிற் போதும்
சென்னேமா சகரஞ் சிறப்பொடு புகுந்தார்
.....”

இப் பகுதிகளில் இவருடைய வரலாற்றைக் குறிப்புக்கள் விளக்குதலைக் காண்க.

உக. பெருமானாயனார்
(வேம்பத்தூர்)

தோற்றம்

பாண்டிவள நாட்டில் வானவீரன் மதுரையென முன்னனில் வழங்கி இந் நாளில் மானுமதுரையென மருவி கிற்கும் ஊருக்கு அண்மையில் உள்ள வேம்பத்தூரில் சோழிய அந்தணர் குலத்தில் இவர் தோன்றினர்.

கல்வி

வேம்பத்தூரில் அந் நாளில் எல்லோருமே சிறந்த புலவராக விளங்கியிருந்தார்கள். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் பாடிய பெரும்பற்றப் புலியூர் நம்பி, பாகவதம் பாடிய செவ்வைச்சூடுவார் முதலிய அறிஞர்களும் அவ்வூரினரே. பெருமானாயனர் மிகு இளமைப் பருவத்திலேயே. கற்கவேண்டிய கலைகளையெல்லாம் நன்கு கற்றுச் சிறந்த புலவரானார்.

நல்ல வாழ்க்கை

அக்காலத்தில் புலவர்களாலேர் நாடெங்குஞ் செல்லு தலும் நமக்குப் பிடித்தமான இடங்களில் ஆதரவு கிடைப் பின் அவ்விடமே தங்கி வாழ்க்கையை நடத்திக்கொண்டி

ருத்தலும் வழக்கம். பெருமானேயர் பல ஊர்களையுஞ் சுற்றிக் கொண்டு திருநெல்வேலியை அடைந்தார். அவ்வூரினர் இவருடைய புலமையை வியந்து அவ்விடமே தங்குமாறும், கல்வி பயில விருப்பமுள்ளவர்கட்குக் கல்வி கற்பிக்குமாறும் கூறி வேண்டிய உதவிகளைச் செய்தனர். பெருமானேயர் அவ்விடமே தங்கினர். சில ஆண்டுகளுக்குப் பின் வேம் பத்தூரை யடைந்து திருமணமும் முடித்துக்கொண்டு மீண்டும் நெல்லியை அடைந்து வசிக்கலானர்.

நெல்லி வருக்கக் கோவை

நெல்லியப்பர்மீது ஏதேனும் ஒருநூல் இயற்ற வேண்டும் என்று எண்ணினர். நெல்லி வருக்கக் கோவை என்னும் நூலைப் பாடி முடித்தார். வருக்கக் கோவை என்பது மொழிக்கு முதலாகும் உயிரெழுத்துக்களையும் உயிர்மெய் எழுத்துக்களையும் கொண்டு அகர வரிசை முறைப்படி பாடப்படுவது. மாறன் வருக்கக் கோவை, பாம்பலங்காரர் வருக்கக் கோவை முதலியன தமிழ்மொழியிலே உள்ளன.

அரங்கேற்றமும் தடையும்

நெல்லி வருக்கக் கோவையைப் பாடிமுடித்த பெருமானேயர் அக் கோவையை அரங்கேற்ற வேண்டுமென்று ஊர்வாழ் செல்வர்களிடம் உரைத்தார். ஊரார்கள் அரங்கேற்றம் நடைபெறுவதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். நெல்லியப்பர் கோயிலிலே நன்னாள் ஒன்றிலே அரங்கேற்றம் தொடங்கியது. பல செல்வர்களும் அறிஞர் களும் குழுமியிருந்தனர். பெருமானேயரும் வந்து அமர்ந் தார். ஆசிரியர் தம் அண்மையில் இருந்த மாணவர் ஒரு வரை நூல் வாசிக்கும்படி கூறினர். அவர்,

"தேரோடும் வீதியெலாஞ் செல்வதுஞ் சங்கினமும்
சீரோ டலாவிவரும் செல்வமே—காரோடும்
கந்தரத்த சந்தரத்தர் கந்தரத்த சந்தரத்தர்
கந்தரத்த சந்தரத்தர் காப்பு."

என்னும் காப்புச் செய்யுளைப் படித்தார். பட்டைப் படித்த சிரத்தியுடன் கட்டத்தில் இருந்த ஒரு புலவர் எழுந்தார்: "இப் பாட்டில் ஒரு தவறு இருக்கிறது. 'வீதி யெல்லாம் செல்வதுஞ் சங்கினமும் சீரோ டலாவிவரும்' என்ற பாடியிருக்கிறீரே. தெருவில் வருஞ் சங்கினமும் சீரோடு ஓடுகின்றனவா?" என்று உசாவினர்.

நிகைப்பு

தொடக்கத்திலே காப்புச் செய்யுளிலேயே தம்முடைய பாட்டிற்குத் தவறு சொல்ல ஒருவன் புறப்பட்டானே என்ற எண்ணமுடன் ஐயருக்கு மிகுந்த நிகைப்புண்டாகி விட்டது. அவர் சலத்தளர்ச்சி படைத்த பசாமல் இருந்துவிட்டார். கூட்டத்தில் இருந்தவர்களை ஐயர் மறுமொழி கூற வகையறியாமற் சோர்ந்துவிட்டார்போலும் என்ற எண்ணினர். அரங்கேற்றத்திற்கு அபசகுனம் ஏற்பட்டுவிட்டபடியால் மேலே அரங்கேற்றஞ் செய்வ தில்லை யென்ற முடிவு செய்தார். கூடியிருந்த கூட்டத் தாரைப் பார்த்து, "அன்பர்களே! என்னுடைய மனநிலை இப்பொழுது சரியாக இல்லை. இன்னொரு சமயத்தில் இத் தலை அரங்கேற்றஞ் செய்து கொள்ளுகிறேன்," என்று கூறிக் கூட்டத்தைக் கலைத்துவிட்டுப் புறப்பட்டார். ஐய ருடைய மனைவியார், "அரங்கேற்றம் முடிந்ததா?" என்று உசாவினள். ஐயர் "நான் அரங்கேற்றத்தைத் தொடங்கும் பொழுது ஒருவன் அபசகுனமாக எழுந்து, 'தெருவிலே மீன்களும் சங்குகளும் தண்ணீரோடு ஓடுகின்றனவா?'

என்று கினைத்தான். அதனல் நான் தளர்ந்து அரக்கேற் றத்தை நிறுத்திவிட்டேன்," என்று கூறினர்.

மகன் தோன்றுதல்

பிறகு பெருமானேயர் அரங்கேற்றஞ் செய்யத் தொடங்கவில்லை. ஆண்டுகள் சில சென்றன. பெருமா னேயருக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் ஐந்தாண்டை யடைந்தவுடன் தந்தையாரிடமே கல்வி கற்கத் தொடங்கிக் கற்றுக்கொண்டிருந்தான். அவனுக்கு அகவை பத்து நிரம்புவதற்கு முன்னரே பெருமானேயர் இவ்வுலகவாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை எய்தினர். மகன் தக்க அறிஞர்களிடத்திலே மேலும் கல்வி கற்கத் தொடங்கிச் சிறந்த புலவனனன். தந்தையிறந்த பிறகு மைந்தன் சொந்த ஊரான வேம்பத்தூருக்குப் போகவில்லை. செல்வி யிலேயே வசித்திருந்தான்.

சுவடிகளை ஆராய்தல்

சிறந்த அறிஞனை ஐயருடைய மகன் ஒருநாள் தன் தந்தையாருடைய சுவடிகளை ஆராயத் தொடங்கினன். என்ன என்ன நூல்கள் இருக்கின்றன என்று பார்த்துக் கொண்டு வரும்போது செல்வி வருக்கக் கோவை அவன் கையிற் சிக்கியது. அஃதையால் இயற்றப்பெற்ற தென்று பார்த்தபோது தன்னுடைய தந்தையாரலேயே இயற்றப் பெற்றதாக இருக்கக் கண்டான். நன்கு முழுவதும் படித் தப்பார்த்தான். அருமையும் பெருமையுஞ் செறிந்ததாக வினங்கியது. அதனைத் தன் தாயாருக்குக் காட்டி, "அம்மா! இதோ பார்த்தாயா? என் தந்தையார் செல்வி வருக்கக் கோவை என்னும் அரியநூல் ஒன்றைப் பாடி யிருக்கிறார். தந்தையார், நூல் பாடியுள்ளார் என்னுஞ் செய்தியை நீ என்னிடம் இதுவரையில் கூறவில்லையே?" என்று கேட்டான்.

தாயின் மறுமொழி

இதனைக் கேட்டதற்கு சிறுவனுடைய தாய், "தம்பி! நீயேன் அந்தச் சுவடியை எடுத்தாய்? என்னுடைய வாழ்க்கை முழுவதே அச் சுவடியிலுள்ளது. அவன் அச் சுவடியைப் பாடி முடித்து கன்னன் ஒன்றிலே அரங்கேற்றச் செய்யத் தொடங்கினர். அப்பொழுது அங்கு வந்திருந்த ஒருவன் முதற் பாட்டைப் படித்தவுடனே, 'தெருவிலே வெல்லம் மீன்களும் சக்குகளும் தண்ணீரோடு ஓடுகின்றனவா?' என்று கேட்டு அபசகுனமாகத் தடை செய்தானும். அவ்வளவில் உன் தந்தையாருக்கு மிகுந்த மனத் தளர்ச்சி உண்டாகிவிட்டது. அவர் மேலே அரங்கேற்றத்தை நடத்தாமல் அலைபைக் கலைத்துவிட்டு வீட்டிற்கு வந்து விட்டார். அது முதல் அவருடைய முகத்தில் மகிழ்ச்சிக் குறி தோன்றவே யில்லை. வெகு நாள் வரையில் மனவருத்த மாக இருந்து காலமாகிவிட்டார். உன் தந்தையின் முடி வுக்கே காரணமாக இருந்தது இச் சுவடிதான். நம்முடைய வாழ்வைக் கெடுத்தற்கு நமனுக இருந்த இச் சுவடியை நீயேன் எடுத்தாய்? இருந்தவிடத்திலேயே வைத்துவிடு," என்று கூறினன்.

மைந்தன் மறுமொழி

தாய் கூறியதைக்கேட்ட மகன், "அம்மா! இஃதோர் அரிய தால். இதைப்போன்ற சிறந்த நூலை நான் பார்த்த தில்லை. 'தேரோடும் வீதியெலாம் செங்கயலும் சங்கினமும், நீரோடு வாவிவரும் நெல்லையே' என்ற முதற் பாட்டில் பாடியிருக்கிறார். இதன் பொருள்: வீதியெலாம் தேரோடும்; செங்கயலும் சங்கினமும் நீரோ டுலவி வரும் நெல்லை என்பது. தேரோடும் வீதியில் செங்கயலும் சங்கினமும் நீரோடு ஓடுவதாகப் பாடவில்லை. இதற்கு மறுப்பொழுக்

காணமுடியவில்லை; தங்களைப் பல வருத்தத்தால் அரண் செற்றத்தை நிறுத்திவிட்டார்களோ?" என்ற கூறினான்.

அரண்காற்றுக் கிறப்பு

பிறகு வீரர்கள் அந்த அரண்காற்றுச் செய்வதற்கு முயற்சி தொடங்கினான். அவனுடைய வீரர்கள் செங்கையப்பர் கோயில் அரண்காற்றுச் செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். அரண்காற்றம் இனிதாகவே பெற்றது. அவனின் கூடவிருந்தோர் அனைவரும் பெருமாளுடைய வருக்கக் கோலையைப் பெரிதுமாராட்டிப் பெருமாளுக்குச் செய்யவேண்டிய சிறப்புக்களையெல்லாம் அவருடைய மைந்தனுக்குச் செய்து களிப்படுத்தினர்கள். பெருமாளுக்கு ஏற்பட்டிருந்த பெருமைத் தாழ்வும் அடியோடு தொலைந்தது. கூடியிருந்த அறிஞர்கள், "முன்னை முன்னத்த காதலும் பின்னை முன்னத்த கொம்பு மிருந்த வலியுடையது" என்ற கூறி மகிழ்ச்சி படைந்தார்கள். பெருமாளுடைய மனைவி தன் மைந்தனைப் பார்த்து, "உன் அறிவுத் திறமையைக் கண்டு மகிழ உன்னுடைய தந்தையார் இல்லையே" என்ற கூறி இன்பக் கண்ணீர் சொரிந்தாள்.

மைந்தன் பெயர் அம்பிகாபதி என வழங்கிய தாகத் தெரிகிறது. சென்ற வருக்கக்கோலையை அன்றிப் "பரபரமதி" என்னும் மகிழ்ச்சிச்சொற்றம் இவ் பாடலின் சாரம். இவருடைய கல்வித் திறமையைக் குறித்த கல்வெட்டுக்கள் பல்லவ மன்னன் ஒருவன், சென்னை, மதுரை, திருநெல்வேலி, சேலம் என்னும் எல்லாப் பெயரும், எல்லா ஊரின் களமி பெயரும் அம்மை பெயரும் அமையுமாறு செய்யுள் ஒன்ற பாடுமாறு கேட்டுக் கொள்ள இவர்,

"இலகே முலைத்தர் சொக்கர்முத் தீசர்பத்தொழுவோர்
கலைதோர்தென் காஞ்சி மதுரைகெல் வேலி கருவைவத்த
பலதேன்வ ருன்னிதெம் பங்குநிற் பீர்வத்து பாதத்தொழு
உலகே கயற்கண்ணி யேவடிவே யெங்க ளொப்பனையே,"

என்று பாடினராம்.

"கண்ணுறு சாத்து மரியயன் போற்றுங் கழைமுத்தற்குப்
பண்ணுறு சொல்வருக் கக்கோவை தன்னைப் பரிவுடனே
வெண்ணீ றணியம்பி காபதி வீரையில் வேதியன்சொற்
றெண்ணுறு மெட்டும் படிப்பார் தமக்கில்லை தன்பங்களே."

என்பது செல்லிவருக்கக் கோவையில் தூற்பயன் உரைக்கும் பாட்டு.

சௌந்தரிய லகரி என்னும் தூலைப் பாடிய வீரைக் கவிராசப் பண்டிதர் என்பவர் இவருடைய தந்தையார் எனவுங் கூறுகின்றனர்.

---

௨௨. சாமிநாதபிள்ளை - வி

தோற்றம்

இவர் கருந்திட்டைக்குடி வி. சாமிநாதபிள்ளை என்று வழங்கப் பெறுவர். ஆறுமுக நாவலரின் மாணவரும், தஞ்சை எஸ். பி. ஜி. கல்லூரித் தமிழாசிரியராயிருந்த வருமாகிய விசுவலிங்கப் பிள்ளை என்பவருக்குத் திருமகனாக இவர் தோன்றினர்.

கல்வி

பத்தாவது வகுப்புவரையிற் பள்ளியிற் படித்து ஆங்கிலப் படிப்பை முடித்துக் கொண்டார். பிறகு தம் தந்தையாரிடத்திலும், தஞ்சையில் இருந்த தமிழ்ப்புலவர்களிடத்திலும் தமிழ்மொழியினை முறையே பாடங்கேட்டுத் தெளிந்தார்.

தமிழ்ப்பணி

புலமைக் கல்வியைப் புலக்கொளக் கற்ற இவர் வடார்க் காடு மாவட்டத்தில் முப்பதாண்டுகள் தமிழாசிரியராகத் தமிழ்த் தொண்டு செய்தார்.

வாழ்க்கை

"பேய்கொண்டாலும் கொளலாம் பெண் கொள்ளல் ஆகாதே" என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்களன்றே? இவர் திருமணஞ் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையில் புகவில்லை. தாம் வாணாளைத் தமியராகவே கழித்தார். தேவாரம் திருவாசகம் ஓதுதல், திருக்கோயில்கட்குச் சென்று இறைவழிபாடு செய்தல், செய்யுள்கள் இயற்றுதல், பத்திரிகைகட்குக் கட்டுரை வரைதல், தமிழ்மொழியைக் கற்க விரும்பும் மாணவர்கட்குக் கல்வி கற்பித்தல் ஆகியவைகளிலேயே இவருடைய காலஞ் செலவாகியது.

உருவத்தோற்றம்

சமிநாத பிள்ளையை நாம் காணவேண்டுமாயின், கழுத்து மூடியகோட்டு, சரிகைத் தலைப்பாகை, தூய வெண்ணீறும் அழகிய பெரிய சந்தனப் பொட்டும் விளங்கும் அகன்ற நெற்றி, கழுத்திலிருந்து கால்வரை நீண்டு தொங்கும் வெள்ளிய மேலாடை, முற்காலத்திய தமிழாசிரியர்களின் பண்பாட்டைக் காட்டும் அழகிய சிறப்பு ஆகியவைகளை மனத்திலே எண்ணிக்கொள்ள வேண்டும். அவ்வாறு எண்ணிக்கொள்வோமாயின் தோற்றம் புலனாகும்.

பண்பு

இனிய இசையுடன் தமிழ்ப் பாடல்களை ஆர்வமுறத் தம் மாணாக்கர்களின் உள்ளத்தில் பதியுமாறு ஓதிக் கருத்தைத் தெளிவாக விளக்குவார். தம் நண்பர்களுடன் உரையாடுங்கால் நகைச்சுவை தோன்றுமாறும் இலக்கண

இலக்கிய நயங்கள் திகழுமாறும் உரையாடுவர். தமிழில் முதன்மையாக விளங்கும் மாணவர்களைத் தம்முடைய இல்லத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ஊக்கமூட்டுவர். புத்தகங்கள் பரிசளிப்பர். நல்ல தலைப்பைப் பாடஞ் சொல்லுவர். அம் மாணவர்களின் பெற்றோர்களைக் கண்டு பாராட்டுவர். இதனால் மாணவர்களும் இவரிடத்தில் பேரன்பும் கன்மதிப்பும் கொண்டு விளக்கினர்.

இயற்றுதல்

பாடல்கள் இயற்றுதல் இவருக்கு மிக எளிமையாக அமைந்திருந்தது. திருவோத்தூரில் திருக்கோயில்கொண் டருளிய ஞானமுலையம்பிகையின் மீது ஓர் அந்தாதி இயற்றி வெளியிட்டார். அவ்வச் சமயங்கட்கு ஏற்றவாறு தனிப் பாடல்களும் இயற்றினர். பாடல்கள் தெய்வத்தின்மேல் பாடப்பட்டதாயின் பத்திச்சுவை வழிதலிலக் காணலாம். வேதமொழிபெயர்ப்பாளர் சிவாகந்த அடிகள் என்னும் பெரியார் இயற்றிய திருவொற்றியூர் மான்மிய உரைநடைக்கு இவர் அளித்த சிறப்புப்பாயிரத்தின்,

"வேதமொழி பெயர்ப்பாளன் வேதாந்த சித்தாந்த
விவன்மார்க் கத்தி
மாதவமார் தருவோர்கோ மணிவடதூல் ஒதுதமிழின்
வரம்பு கண்டோன்
ஓதவரும் பெருங்குணத்தச் சிவாகந்த பரிந்திரப்பேர்
உற்ற மேலோன்
போதவணி பெறவிபத்தி அச்சிட்டிக் குதவுளனி
புரிந்தான் அன்றே."

என்பது ஒரு பாடலாகும்.

இறுதி

இவர் சில ஆண்டுகட்கு முன்னர்க் காலமானர்.

૩૬. பரராசசிங்கன்

தோற்றம்

இவன் சமுவன் சட்டிலே அரச செலுத்திக்கொண் டிருந்தவன். புலமைத்திறம் மிக்கவன். பூவேந்தனைப் புகழ்பெற்றிருந்தமைதாடு பாவேந்தனவும் சிக்திபெற் றிருந்தான்.

பாட்டு

ஒரு காலத்தில் கண்டிநாடு பஞ்சத்தால் வருந்தியது. அப்போது இவன் நெல்லனுப்பி உதவிபுரிய வேண்டுமென்று சடையவள்ளலுக்குச் செய்தி தெரியப்படுத்தினன். சடைய வள்ளல் அரசன் எதிர்பார்த்ததற்கு மேல் மிகுதியான நெல்லை யனுப்பி வைத்தார். இதனல் மிகுந்த மகிழ்ச்சி யடைந்த அரசன் சடையவள்ளலின் கொடைநலத்தை வியந்து புகழ்ந்து,

"இரவுகண்பக லாகிலென்பக லிருளறவீர வாகிலென் [லென்
இரவிலெண்டிசை மாறிலென்கட லேழுமேறிலென் வற்றி
மரபுதக்கிய முறைமைபேணிய மன்னர்போகிலெ னதிலென்
வளமையின்புற சோழமண்டல வாழ்க்கை காரண மாகவே
கருதசெம்பொனி னம்பலத்திலொர் கடவுணின்ற நடிக்குமே
காவிரித்திரு நெடியவேலொரு கருணைமாமுகில் தவிலுமே
தருவுயர்ந்திடு புதலைவம்பதி தக்குமாணிய சேகரன்
சந்ரன்தரு சடையனென்றெரு தருமதேவதை வாழுமே."

என்னுஞ் செய்யுளைப் பாடினன்.

அந்தகக்கவி

இவ்வரசன் சிறந்த அறிஞனாகவும் கொடையாளியாக வும் விளங்குதலையறிந்த அந்தகக்கவி வீராகவ முதலியார் சமாடு சென்று இவ்வரசனைக் கண்டு பரிசில் பெற்று

வருவதென்ற முடிவு செய்தார். அவ்வாறு அவர் முடிவு செய்ததற்கு அவர் தம்முடைய மனைவியோடு கொண்ட ஊடல் காரணமாக அமைந்து கின்றது. மாணவர் ஒரு வரைத் தனியாகக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு மரக்கல மேறி சுழ நாட்டை யடைந்தார். இவர் அந்தகர் என்பதை அறிந்த அமைச்சர்கள் சிலர், "அரசாளுபவர் அந்தகர் களாயுள்ளவர்களைப் பார்த்தல் கூடாது" என்று கூறித் தடுத்தனர். தினையொன்று போட்டுக்கொண்டு அரசன் அமர்ந்திருந்தான். புலவர் அரசவையை அடைந்தார். அரசன் தினைபிட்டுக்கொண்டிருந்தமை மாணவன் புலவருக் குணர்த்த எண்ணினான். அதனை வெளிப்படையாகக் கூறு மல், "சிவசிதம்பரம்" என்றான். புலவர் உண்மையை உணர்ந்துகொண்டு,

"கரைகோட் டினக்கண்றும் கல்வள காடு கயத்தளிப்பான்
விரையோட்டு தார்ப்புய வெற்பீழ மன்னனென் றேவிரும்பிக்
கரையோட்ட மீதின் மாக்கலம் போட்டுனைக் காணவந்தால்
நிரையோட்டு மீயிருந் தாய்சிங்க பூப சிதோமணீயே."

என்று பாடினார். புலவரின் தெய்வத்தன்மையை உணர்ந்து கொள்ள விரும்பிய அரசன் கையில் வில்லேப்பிடித்துக் கொண்டு விற்றிருந்தான். அப்போது அமைச்சர்கள், "இப்போது அரசருடைய கோலம் எவ்வாறான"தென வினவினர். உண்மையை உணர்ந்துகொண்ட புலவர்,

"வாழுமீனக் கைக்கோ மானிவ்வே மானிவ்வே
ஏழு மரமரமை இக்கிவ்வே—தூறி
அலையடைத்த செக்கை அபிராமா இன்ற
சிலையெடுத்த வாறமைக்குச் செப்பு."

என்று பாடினார்.

அரசன் புலவர் தெய்வத்தன்மை பமைந்தவரே என் பதை உணர்ந்து புலவர் விரும்பிய பரிசில் வழங்கிப் பாராட்டினான். அப்போது புலவர்,

"பொக்குமிடி யின்பத்தம் போயதே என்னிதை
வெற்றும் வீருதுபத்த மேற்றதே—குங்குமத்தோய்
வெற்பத்த மானபுயன் வீரபரா சசிங்கம்
பொற்பத்தம் இன்றளித்த போது."

என்று பராட்டிப் பாடினர்.

பராட்டு

அரசன் புலவரோடு சில தினங்கள் கொருத்திப் பழகினன். புலவருடைய கல்விப் பெருமை அரசனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

"இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியத்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருந் தாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீ ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றன் னமுத் தமிழுயுமே."

என்று வியந்து பாராட்டிப் பாடினன்.

புலவருடைய பாடல்கள் பாவும் அரசனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. ஆகவே அவன்,

"வீரகன்மூத் தமிழ்க்கவி வீ ராகவன்
வாகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வானனும் ஒக்கக் கூடினுந்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே."

என்றும் புகழ்ந்து பாடினன். இவன் பதினைரும் நூற்றாண்டில் வாழ்ந்தவன் எனவும், இவனுடைய பெயர் பராசசேகரன், பராசசிங்கையாரியன் என்றும் கூறப்பெற்றதென்றும் உரைப்பர். இவனைப் புகழ்ந்து பிறர் பாடிய பாடல்கள்,

"சூட்டும் பராசர் தொன்முடிமேற் செவ்வானைத்
தீட்டும் பராச சேகர—வீட்டுபுகழ்ச்
சிங்கைக்கோ வேமகிழ்ந்து சோளாட் சக்தனமென்
கொங்கைக்கோ வேதனையா ரும்.

மற்றைத் சக்கைப் பரிசே ரொரு மன்னன் வெற்பில்
பற்றைப் சம்பதப் பாலைச் திடை வெல்பதி
பற்றைத் சக்கடல் தற்றைத் சக்ய வற்றைத்தம்
சற்றைத் சக்கொரு வேலை யுமது சனக்கே."

என்பன.

உசு. திருமலிவேற் கதிரமர் - ச

சோற்றம்

சண்டிய புகழ்சேர் பாண்டி சன்னாட்டில் செல்லி மாவட்டத்தைச் சேர்ந்த கரிவலம் வந்த நல்லூர்க்கு அண்மையில் உள்ள "எட்டிசேரி" என்னுஞ் சிற்றூரில் கஅசுஅ-ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். தந்தையார் பெயர் சங்குப்புலவர்; தாயார் பெயர் வீரம்மாள்.

குடிச்சிறப்பு

இவர் பிறந்த குடி புலவர் வழிமுன்றைச் சேர்ந்த சிறந்த குடியாகும். சேற்றூரில் இருந்த மன்னர் ஒருவர் பெற்றாரபதி அம்மை கோயில்முன் மண்டபம் கட்டுவ தற்காக, "மண்சாயும்படி கதிபாடுக" என்ற இப் புலவர் (தூற்பிறந்த சங்குப்புலவரை வேண்டிக்கொண்டதாகவும் கூறலே அவர்,

"சிலேச வொளுத சடசே புரிந்த சறையூர
சிலேசர் தலம்பற்ற வெல்சேசை சரதேச் சண்டலெ
உலேசர் உண்மைத்தப் சத்யசீசெய்ய உலதுளார்
பலேசய வென்றெ தலம்பெற்ற சயலி யரத்திலே.

சிலேச வெயலே சயலும் வென்றெ திருப்பணிச்சே
சூச்ச முடன்வந்த சேசரும் வென்றெ வசப்புதலன்
வாச்ச ஞ்சுதமிழ் சொன்னென்றென் சேறை யரதநுக்குப்
பாச்சிய வெபெற்ற சயலி பெரிய பாலதிலே.

புகழவும் வேண்டும் உலகமெல் லாமுனைப் போற்றமலை
கழவும் வேண்டுக் திருப்பணி வேலைக்கு சாலுலைத்தேன்
இகழவொண் ணாம லெனைக்காக்க வேண்டும் இமயமலை
மகனென வந்து தவம்பெற்ற காயகி மாதகங்கையே."

என்னுஞ் செய்யுட்களைப் பாட மலைசாய்ந்தது. அன்றுமுதல் இன்றுவரை இவர்கள், "மலைசாயப் பாடிய சங்குப்புலவர் குலத்தார்" என்று புகழ்பெற்று விளங்குகின்றனர். இவரும் சீட்டுக் கவிகளில் "மலைசாயப் பாடியபுலவர் வழியினன் யான்" எனக் கூறியிருப்பதும் இதனை வலியுறுத்தும். "மலை நகரக் கவிபகர்ந்த அழுதசங்குக் கவிராயன் வழியில் வந்தோன்" என்று ஒருபுலவர் இத் திருமலைவேற் கவிராயரைப் புகழ்ந்திருப்பதும் ஈண்டு எண்ணத்தக்கது.

கல்வி

இளம் பருவத்தில் கல்விகற்கத் தொடங்கிய இவர் ஏட்டிலே எழுதி எண்ணையும் எழுத்தையுங் கற்றார். பிறகு நிகண்டு, கருவையந்தாதி, குறவஞ்சி முதலிய இலக்கியங் களெல்லாம் தம் மூதாதையாகிய திருமலைவேற் புலவர் என்பவரிடங் கற்றார். இளமையிலேயே செய்யுள் இயற்றுந் திறமும் அமைந்தது. இவருடைய தந்தையார், உடன் பிறந்தார் இருவர் ஆகியோர் புலவர்களாயிருந்த படியால் கல்விநலம் மிகு எளிதாகவே கிட்டியது. இலக்கியங்கள் பல கற்றபின் இலக்கணங் கற்க விரும்பினர். நெடுநாள் நேடியும் வாடியும் ஓடியும் இலக்கணங் கற்பிக்கத் தகுந்த ஆசிரியர் அகப்பட்டிலர்.

இலக்கணங் கற்றல்

"சேற்றூரை யடுத்த மூகவூர் என்னும் ஊரில் கந்த சாமிக் கவிராயர், இராமசாமிக் கவிராயர் என்னும் இருவர் இலக்கணப்புலமை வாய்ந்தவர்கள்; உடன்பிறந்தவர்கள்;

ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் பல ஊர்கள் சென்று குறில மன்னர்களையும் வள்ளல்களையும் பாடிப் பரிசில் பெற்று சுவைமிகு வாழ்கின்றனர். இப்பொழுது மூப்புப் பருவம் வந்து அடைந்ததால் பாண்டுந் செல்ல இயலாமல் தம்மூரிலேயே தங்கிருக்கின்றனர். கல்விகற்க விரும்பும் மாணவர்கட்குக் கையாறு கருதாமல் கற்பிப்பதில் அவர்கள் மிகச்சிறந்த பாந்த நோக்கம் உடையவர்கள். பல மாணவர்கட்குக் கல்வி கற்பிக்கின்றனர். அவர்கள்பாற் சென்றால் இலக்கணம் கற்கலாம்" என்னுஞ் செய்தி இவருக்கு எட்டியது. தந்தையாரை அழைத்துக்கொண்டு மூகவூருக்குச் சென்றார்; தம் விருப்பத்தைக்கூறி வேண்டிக் கொண்டார். தந்தையாரும் தமது நிலைமையையும் மைந்தன் இலக்கணங் கற்கவேண்டுமென்று பேராவலுங்கொண்டு அவனதையும் விரிவாகக்கூறினர். தந்தையாரிடம் கவிராயர், "கற்கும் ஆர்வம் இருந்தாற்போதும்; இங்கிருந்து நன்றாகக் கற்கட்டும்; நான் தாராளமாகக் கற்பிக்கிறேன்," என்று கூறி அவ்விடமே தங்கியிருந்து கல்விகற்குமாறு கூறினர். நன்னூல், அகப்பொருள், புறப்பொருள், யாப்பருங் கலக் காரிகை, தண்டியலங்காரம் முதலிய நூல்களைக் கற்பித்தார். இரண்டாண்டுகளுக்குள் அங்கிருந்து கல்விகற்று நன்மாணவ னென்ற பெயர் எடுத்தார். பிறகு தமது ஊரான எட்டி சேரியை அடைந்தார். பிறகு இவருடைய பேரும் புகழும் பரவும் பரின.

பரிசு பெறுதல்

மூக்கலைப் புலவர்கள் பலர் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர் என்பது சங்கநூல்களை ஆராய்ந்து தெளிந்தோர் புலனும். இந்நாளைப்போல அந்நாளில் ஆசிரியத்தொழில் பாவனையும், ஆசிரியத்தொழில் புரிந்து

தும் வருவாய் பொதியதாக இல்லாமையும் அவர்கள் பரிசில் பாடவேண்டியதற்குக் காரணமாயின. இவர் குல சில மன்னர்கள்பால் சென்று தமது கல்வி பாற்றலைக் காட்டிப் பரிசுபெற எண்ணினர். தென்னாட்டிற் பெரும் புகழ்பெற்ற விளங்கிய ஊற்றமிக்க மன்னர் இருவரையே மருதப்பர் தெரிந்து என்பவர் இலக்கண இலக்கியப் புலமையிற் சிறந்தவராய்ச், செந்தமிழினருமை யறிந்த பரிசு நல்கிப் பாலைக்கலிப் பொற்றபவராய் விளங்குகின்றார் என்றுஞ் செப்தி இவருக்கு எட்டியத அம் மன்னர்மீது செய்யுள் பாடிச் செல்வோர் பெரும்பாலும் சிற்றின்பக்கலிகளைப் பாடிச்செல்லத வழக்கம். அதற்குக் காரணம் பெருவிலக் கிழார்களாகிய அவர்கள் இன்பவாழ்க்கையில் இனிது திளைத்த சின்றமையேயாம். இவரும் அவர்மீது பமகம், திரிபு, சிலேடை முதலிய வகைகளிற் சிற்றின்பச் செய்தி கலை பலைடத்துச் செய்யுள் பாடிக்கொண்டு சென்று அவனை மகிழ்வித்தார். அவரும் இவருடைய வரிசை பறிந்து தகுந்தவாறு பரிசு நல்கிப் பெருமைப்படுத்தினர்.

"நீதமர சுவாமி பாதமா
வரசுமகன் விரும்பு சேயை
மாதமர சுவாமி திருவீரை
வளர் மலை சாப்பாய்
காதமர சுவாமி மதிசார
வளர்சொறுதல் சுவர்க்கண் டம்பா
வாதமர சுவாமி வரவெல்லிலும்
வெளிதமர வுயிரைத் தாரை."

என்பது, அவர்மேற் பாடிய பாக்களில் ஒன்று. இருத பாலை மருதப்ப தேவரை அடுத்தடுத்துப் பலகாலும் கண்டு பலபாடல்கள் பாடிப் பரிசில் பெற்ற வருவத இவருடைய வழக்கமாக விருந்தது. அம் மன்னர் எல்லாவு அருமை

யான பயனை நிரப்பிலேடை பலமைந்த செய்புட்களின் பொருள்களையும் தாமே அறிந்தவைகள்ளும் ஆற்றலுடை பவர். அம் மன்னரை மயக்கவைக்கவேண்டும் என்னும் கருத்துடன் இவர் ஒரு செய்புள் இயற்றி வேறொருவர் மூலமாகக் கொடுத்தனுப்பினர். அச் செய்புளில் இரண்டு பொருள் அமைந்திருந்தது. வெளிப்படையாகப் பார்க்கும் போது, "புலவர் மன்னரைப் பார்க்க வந்ததாகவும், பாரச் சேவகன் வம்பாகப் பிடித்துத் தள்ளிவதாகவும் அதைக் குறித்து விதிலை விளைந்து வருந்தியிருப்பதாகவும், அச் சேவகனை உடனே விலக்கிவைப்பதுதான் நீதியோம்" என்று வெளிப்பார்வைக்குப் பொருள் தோன்றும். ஆனால் உட்பொருளோ "ஒரு கலிங்க அம்மன்னர் பலரிவரும் போது கண்டதாகவும், கரும்பு வில்லுடைய காமன் மலரம்பு தொடுத்துத் தன்னை வருத்துவதாகவும், இதுவும் விதியென நினைத்துப் புலம்பியிருப்பதாகவும் அம் மன்ம தன் போரை விலக்கித் தன்னைச் சேர்ந்து இன்பந்த வேண்டும்" என்று கூறுவதாவும் அமைந்தது. அப்பாட்டு,

"நிமித தென்னிரைப் பதிபிரித
பாலையே னின்னைக் காண
நாரமும் றவர்தபொழு நின்றடிச்சே
வகனெனவம் பாகத் தரப்
போதலுவே னென்றெதிர்த்தான் இதவும்விதியோ
னெனினைத்துப் புலம்பி னேனிக்
கோதரிய வேலைத்தப் புனவனை
விலக்கிவைப்ப தொழுக்கு நானே."

என்பது. இதனைக் கண்டவுடன் பெருவிலக்கிழார் திகைத் தார். புலவரை யாதிற்காவலன் தள்ளித் தாக்கினன் போலும் என்று எண்ணினர். உடனே புலவரை வர வழைத்தார்; அண்மையில் இருக்கச் செய்தார். "எவ்வாறிற்

சலனன் தங்கனைத் தன்னிற் தாழ்ந்தவன்?" என்ற உரை னர். புலவர் புன்முறுவல் பூத்தார். "இச் செய்யுள் சிற்றின்பத்தலை அமைந்தது. மற்றையொரு பொருளைத் தருவது" என்றார். உடனே அரசர் "சிலன் கூறுவேண் டும். நன் ஆராய்ந்து பின் விளம்புறேன்" என்றகூறிச் செய்யுளை கன்கு ஆராய்ந்து பொருள் கண்டார். பிறகு புலவரைப்பார்த்துப், "பொழுது இன்றடிச் சேலகன்" என்பதனை மட்டும் விளக்குமாறு கேட்டார். புலவர், "தினைமயாலிய விலிவுடைய வீரன் என்றும், கரும்பு வில்லுடைய காமனைக் குறிப்பால்உணர்த்தியது" என்றும் விளக்கினர். இதனைக்கேட்ட மன்னர் அளவிறந்த மகிழ்ச்சி யடைந்தார். தம்மோடு பலநாள் தங்கச்செய்து போற் றினர். இவருடைய திருமணத்திற்கு வேண்டிய செல், திருமணப்புடைவை முதலியவைகளையும் வழங்கினர்.

செற்றூரிற் பரிசு பெறுதல்

செற்றூர் மன்னராக விருந்த வடமலைத் திருவாத சுந்தரதாசத்தரை என்பவரைக் கண்டு பமகம், திரிபு, இலேடை முதலிய அமைந்த பாக்களைப் பாடிப் பரிசு பெற்றுப் பெரும் புகழும் எய்தினர். சுந்தரதாசத்தரை முதலர் இராமசாமிக் கவிராயரிடம் இலக்கண இலக்கியம் கற்றுச் செய்யுள்பாடும் திறமைபெற்ற புலவராகத் திகழ்ந்தனர். இவருடைய தனிப்பாடல்கள் பல தனிச் செய்யுட் சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளன. இவர் தேவதானம் பெரிய கோயிலுக்குச் சென்றிருந்தபோது,

"சரசரம் பிறந்தென்றல் தேருடையான்
தனைக்காரப்ப தருணை பொக்கும்
அரசரம் பிரமனிடத் தொன்றையறத்
தொல்சோறை தரும் அம்மை

[Illegible]
[Illegible]
[Illegible]
[Illegible]"

[Illegible]. [Illegible] [Illegible] [Illegible]? [Illegible]

"[Illegible]
[Illegible]
[Illegible]
[Illegible]"

[Illegible] [Illegible].

[Illegible]

[Illegible]; [Illegible]. [Illegible]. [Illegible]. [Illegible], [Illegible], [Illegible],

வேற்றூர் சேறல்

எட்டிசேரியில் வாழ்ந்திருந்த இவர் கசுஂ0-ஆம் ஆண்டில் மதுரை மாட்டத்தில் உத்தமபாளையத்தை அடுத்த பூசாரிக் கவண்டன்பட்டிக்கு வந்து வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். முதலில் தந்தையார் மறைந்தார். சில ஆண்டுகள் கழித்துத் தாயார் மறைந்தார். வீரம்மாள் என்னும் பெயர் பெற்றிருந்த இனிய புதல்வியொருத்தி மறைந்தாள். வாழ்வு துன்பவாழ்வாக மாறியது. இருமல் இளைப்பு என்ற கோயும் வந்து பீடித்தது. எங்குஞ்சென்று பொருளீட்ட வழியின்றி வறுமையால் வாடினர். தாய் தந்தையர் புதல்வி ஆகியோர் மறைந்தபோது இவர் வருந்திப்பாடிய இரங்கற்பாக்கள் பல.

நூல் இயற்றுதல்

பூசாரிக் கவண்டன்பட்டியில் வாழ்ந்திருக்கும்போது முன்னிருந்த வளையபடுத்த கரிவலம் வந்த நல்லூரில் வாழ்ந்திருந்தவ. மருதப்பஞ்செட்டியார், ஆ. மருதப்பஞ்செட்டியார், பால்வண்ணஞ் செட்டியார் என்னுஞ் செல்வர்கள் இவரைத் தம்மூருக்கு வருமாறு கடிதம் எழுதி அழைத்துத் தங்கச் செய்தனர். வேண்டிய உதவிகளைச் செய்துகொடுத்துக் கருவைத் தலபுராணத்தைப் பாடுமாறு கேட்டுக் கொண்டனர். இவரும் அப் புராணத்தை இயற்றத் தொடங்கினர். (செ. வீரப்ப முதலியார் என்பவரும் சில பகுதிகள் பாடியுள்ளனர்) மேற்படி புராணம் நாற்பது படலங்களையும் கடைசரு செய்யுள்களையும் உடையது. அப் புராணத்தைப் பாராட்டிப் போடிநாய்க்கனூர் கு. அண்ணாமலைப் பிள்ளை, மார்க்கயன் கோட்டை பழனிச்சாமியாசாரி, சுந்தர ஆசாரி, எட்டிசேரி அருணாசலக் கவிராயர், இவருடைய புதல்வராகிய சங்குப் புலவர், செவ்வற்குளம் கந்த

சாமிப் புலவர், தென்மலை இராமசாமிச் செட்டியார், சாமிநாதப் புலவர் என்போர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர்.

தாலி அவ்வூர்க் கோயிலில் அரங்கேற்றஞ் செய்து முடித்தார். பாடுவித்தவர்கள் இவருக்குத் தகுந்த நன்கொடை வழங்கிச் சிறப்புச் செய்தனர். மற்றும் இவரால் இயற்றப்பெற்ற நூல்கள் திருக்கருவைச் சந்தப்பா, வெண்செந்துறைப்பாமாலை, திருக்கருவைப் பால்வண்ணநாதர் வண்ணம், புதல்வை அழகப்ப செர்வை வண்ணம், கருவை மும்மணிமாலை, கோமதியம்மை பதிகம், குருநாதத் தேவர் காதல் முதலியன. மற்றுஞ் சீட்டுக் கவிகள், பிராதுக் கவிகள், யமகம் திரிபு சிலேடையணமைந்த கவிகள்; பல்வேறிடங்களிற் பாடிய தனிக்கவிகள் ஆகியனவுகளை அவருடைய புதல்வர் சங்குப் புலவர் அச்சிடவேண்டும் என்னும் நோக்கத்தோடு தொகுத்து வைத்திருக்கிறார். சொற் போர்புரிவதிலும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிகளைப் பாடுவதிலும் சிறந்தவராகிய இவர் நோய்வாய்ப்பட்டுப் பல ஆண்டுகள் மனையிலேயே தங்கும் படி நேரிட்டபடியால் இவருடைய புலமை தமிழ்நாட்டிற்குத் தக்காங்கு பயன்படாது போயிற்று. இவருக்குப் பாக்கிய லட்சுமி என்னும் பெயருடைய பெண்மகளும் சங்கு என்னும் பெயரையுடைய ஆண் மகனும் உள்ளனர்.

இறுதி

இவர் தமது எழுபத்தைந்தாவது அகவையில் சுபானு ஆண்டு (கஉகூச) பங்குனித் திங்கள் இருபத்து மூன்றும் நாள் இறைவன் திருவடிநீழலை எய்தினர். அப்பொழுது இவருடைய புதல்வர் சங்குப் புலவர் வருந்திப் பாடிய இரங்கற்பாக்களில் ஒன்று,

"பலனுதவு கொல்லமா பீரத்த னாற்றப்
பத்தொன்ப தினடிசெம் சுபானு வாண்டு
வலனுற பங்குனியில் இருபத்து மூன்ற
மால்வாரம் பூர்வபக்கம் திதிபன் மூன்ற
லமருவம் பூரான் அன்றி ராவில்
சற்குருவைத் தலபூரா ணம்ப கர்ந்தான்
புலனெலாம் போற்றுமெந்தை திரும லேசன்
புண்ணியவான் பரமபதம் புகுந்தான் மன்றே."

என்பது.

உ நு. பாலசுப்பிரமணிய முதலியார் - மா

தோற்றம்

இவர் கலயநல்லூரும் ஆண்டு மார்கழித் திங்கள் எட்டாம் நாள் சென்னை திருமயிலையில் தோன்றினர். தந்தையார் பெயர் மாசிலாமணி முதலியார்; தாயார் பெயர் அன்னம்மாள். தாயாரும் தந்தையாரும் சைவ சமயத்தில் மிகுந்த பற்றுடையவர்கள். சிவ வழிபாட்டில் உறுதியுடையவர்கள். திருமயிலைக் கபாலீசுரர் திருக்கோயிலில் அமர்ந்தருள்ள சிக்காரவேலரைப் பெரிதும் போற்றி மகப்பேற்றின் பொருட்டு வழிபட்டுக்கொண்டிருந்தனர். அப் பெருமானுடைய திருவருளால் இவர் பிறந்தமையாற் பாலசுப்பிரமணியன் என்ற பெயர் சூட்டப்பெற்றனர். முதலியாருடைய தாயரைப் பெற்ற பாட்டியார் இவர்க்கு "ஞானக்கண்" என்ற பெயர் இட்டனர். ஆயினும் அப் பெயர் நிலை பெறவில்லை.

கல்வி

இவர் தம்முடைய ஐந்தாவது அகவையிலேயே கல்விப் பயிற்சி தொடங்கப்பெற்றார். தந்தையார் அரசியல் துறை

அலுவலராக இருந்தமையின் பலவிடங்கட்கு மாற்றப் பட்டார். ஆகவே இவருடைய இளமைப் படிப்பும், பெங்களூர், சேலம், உதகமண்டலம் முதலியவிடங்களில் படிக்கவேண்டியதாயிற்று. ஆம் ஆண்டில் சென்னை பி. எல். உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது பாரத்தில் சேர்ந்து படிக்கத் தொடங்கினர். கல்வியிற் பேருக்கம் காட்டி அனைவரும் வியக்குமாறு கற்றார். இவர் கற்ற பள்ளியில் ஆங்கிலமும் போதிக்கப்பட்டமையால் அதனை யும் கற்றுணர்ந்தார். ஆம் ஆண்டில் எஸ். எஸ். எல். சி. தேர்வில் சிறப்பாகத் தேறினர். மாகாணக் கல்லூரியில், பி. ஏ. தேர்வில் முதல் வகுப்பில் முதல்வ ராகத் தேறிப் பரிசுகள் பெற்றார். தமிழ் மொழிபெயர்ப்புக் கட்டுரைக்காகப் பணமுடிப்பும் அளிக்கப் பெற்றது. இவரை வெளிநாட்டுக் கல்விக்கனுப்புதற்கு ஆசிரியர் மார்க் அண்டர் முயற்சித்தனராயினும் தந்தையார் அதற்கு இணங்கவில்லை.

சட்டப்படிப்பு

ஆம் ஆண்டு ஜூலை முதல், ஆம் ஏப்பிரல் வரை சட்டக் கல்லூரியிற் சேர்ந்து பயின்றார். பி. எல். தேர்வில் முதல் வகுப்பில் இரண்டாவதாகத் தேர்ச்சி அறிவிக்கப் பெற்றார். முதலாவதாகத் தேர்ச்சி அறிவிக்கப்பட வேண்டிய இவர் அவ்வாறு அறிவிக்கப்பட மைக்குக் காரணம் சூழ்ச்சியாக இருக்கலாம் என்று பலரும் எண்ணினர்.

தொழில்

ஆம் ஆண்டு முதல் ஆம் ஆண்டு வரை மிகப் புகழ்பெற்ற அல்லாடி கிருட்டிணசாமி அய்யரிடம் நிரம்பத் தொழில் பயின்றார். பிறகு பலரும் வியக்கு

மாது வழக்கறிஞராக இருபத்தைந்தாண்டுகள் வரை தொழில் புரிந்தார்.

திருமணம்

ககக-ஆம் ஆண்டில் பார்வதியம்மாள் என்னும் பாலையைத் திருமணம் புரிந்த இல்லற வாழ்வை மேற் கொண்டார்.

கடவுள்பற்று

முதலியார் தமது இளமைப் பருவத்திலேயே இறை வழிபாட்டில் உளங்கொள்ளுமாறு தாய் தந்தையர் பழக்கி னர். அவர்களும் கடவுள்பற்று மிக்கவர்களாதலின் இவரும் ஆங்கிலக் கல்வி கற்றும் மேல்நாட்டு நாகரிக வலையுட் சிக்கித் தடுமாறுதல் கடவுள்பற்று இறைவழிபாடு சைவசமயப் பற்று முதலியவைகளை மேற்கொண்டு ஒழுகினர். இவருடைய தந்தையார் பெங்களூரில் அரசியற் பணிபுரிந்துகொண் டிருந்த காலத்தில் பிளேக் என்னும் தொற்று நோய்க்கு உள்ளானார். தக்க மருத்துவர்கள் மருந்து கொடுத்தனர். திருவெண்ணீறு பூசித் திருமுறை ஓதுதலையும் சிறந்த மருந்தாகக் கொண்டனர். "அப்பினேன் திப்பினே" என் னும் திருப்பதிகம் அடிக்கடி ஓதப்பட்டது. தாயார் தமக் குத் தாலிப் பிச்சை தருதல்வேண்டும் என்று அடிக்கடி திருவருளை வேண்டி நின்றார். தந்தையாரும் தெய்வத் திருவருளால் நோய் நீங்கி உயிர் பிழைத்தார்.

பொதுநலத் தொண்டு

இவருக்குச் சைவ சித்தாந்த மகாசமாசத்தின் தொடர்பு ககஉக-ஆம் ஆண்டு முதல் ஏற்பட்டது. இருபத் திரண்டு ஆண்டுகள் செயலாளராக இருந்தார். மூன்று முறை சித்தாந்தம் என்னும் திங்களிதழுக்கு ஆசிரியராக அமைந்து பணியாற்றினர்.

தன்மை

அவைகட்குத் தன்மை தாங்கிச் சொற்பொழிவு நிகழ்த்துதலில் இவர் நிறமுடையவர். இவருடைய தன்மை யின்கீழ் நென்னூட்டிற் பல சபை விழாக்கள் இனிது நடை பெற்றன. இவருடைய சொற்பொழிவு எல்லோரும் கன்கு புரிந்துகொள்ளுமாறும் கேட்டார்ப் பிணிக்குந் தகுதி யோடும் கோரும் வேட்பவும் சிறப்புடன் அமைந்து நிகழும்.

நூல்கள் வெளியீடு

தேவாரம் திருவாசகம் முதலிய சைவ நூல்களையும், சிவஞானசித்தியார் முதலிய சைவத்தமிழ் இலக்கியங்களையும், சங்கத் தொகை நூல்களையும் அழகுற அச்சிட்டு அடக்க விலைக்கு அனைவருக்கும் கிடைக்கும்படி செய்த பெருமை இவருக்கே உரியது.

அறநிலைக்காவலர்

சைவ வைணவத் திருக்கோயில்களுக்கு அறநிலைக் காவலராகவும் தொண்டாற்றினர். கோவூர் சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அறங்காவலராகப் பத்தாண்டுகள் பணிபுரிந் தார். அக் காலத்தில் கோயிலுக்குப் பல திருப்பணிகள் இயற்றினர். திருவிடவெந்தை நித்தியகல்யாணப்பெருமான் கோயிலுக்கு ஐந்தாண்டுகள் அறங்காவலராகப் பணி புரிந்தார்.

காசித் சொற்பொழிவு

கூடு-ஆம் ஆண்டில் காசிப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற ஆங்கிலத்தில் சைவசித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அச் சொற்பொழிவு நிட்பமும் நட்பமும் அமைந்து சிறந்து விளங்கியது. பலரும் முதலியாரைப் போற்றிப் பாராட்டினர்.

உரை

திருமுருகாற்றுப்படை முதலிய நூல்களுக்கு உரை யெழுதியுள்ளார். இவருடைய கட்டுரைகள் பல சித்தாந்தத் தில் வெளிவந்துள்ளன.

அரசியல் தொண்டு

காந்தியடிகளுடைய ஒத்துழையா இயக்கத்திலும் சேர் பட்டார். கஉஉ0-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் எ முதல் ஒன்பது திங்கள் சட்டசபை உறுப்பினராகவிருந்து பணி புரிந்தார். உப்புச் சத்தியாக்கிரகத்தில் அரசினர் செய்த கொடுமைகளை நடுநின்றுரைத்து உண்மையை வெளிப்படுத்து தற்குச் சென்னை மகாசன சபையார் ஏற்படுத்திய மூவருள் இவரும் ஒருவராக அமைந்து நின்று உலகிற்கு உண்மையை வெளிப்படுத்தினர்.

மணி விழா

கஉஉ௫-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஏழாம்நாள் இவருக்கு அறுபதாண்டு நிறைவாகியது. இவருடைய இல்லத்தில் மணி விழாச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அதையொட்டி மேற்படி யாண்டில் மேற்படி திங்களில் இருபத்தைந்தாம் நாள் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில், கே. பாலசுப்பிரமணிய ஐயர் தலைமை யில் பாராட்டுக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. இவ்விடத் தினிலும் அறிஞர்கள் பலர் பாராட்டுரையும் வாழ்த்தும் வழங்கினர்கள்.

இறுதி

பெரும் புகழும் பெற்றுச் சிறந்த வினங்கிய இவர் கஉ௫அ-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பதினெட்டாம் நாள் வெள்ளிக்கிழமை தமது அறுபத்திரண்டாவது அகவையில் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

உசு. ஏகம்பவாணன்

தோற்றம்

இவர் தென்னாட்டிலே ஆற்காட்டில் வாண முதலியார் என்பவருக்கு மகனாகத் தோன்றினர். வாண முதலியார் சிறந்த செல்வர். ஆயிரம் ஏர் வைத்துப் பயிர்த்தொழில் செய்து மிகுந்த பொருள் தேடிச் சிறந்த செல்வராக வாழ்ந்திருந்தார். அவர் தமக்கு ஆண் மகன் பிறந்தவுடனே காலக் கணிதர்களை யழைத்துப் பிறந்த நாட்குறிப்பு எழுதுமாறு கட்டளையிட்டார். காலக் கணிதர்கள் அவ்வாறே எழுதினர். மிகு விரைவில் தந்தையாராகிய வாண முதலியார் தம் மனைவியோடு காலமாதல் கூடும் என்னுஞ் செய்தி பெறப்பட்டது.

பண்பினையான்

நாள்கள் சில சென்றன. முதலியாருடைய மனைவி காலஞ் சென்றார். காலக் கணிதப்படி மனைவி காலஞ் செல்லவே தமக்கும் முடிவு ஏற்படக்கூடும் என்பதை முதலியார் உணர்ந்து கொண்டார். முதலியாருடைய உறவினர்களில் யாரும் முதலியாருக்கு நம்பிக்கையுடையவர்களாகத் தெரியவில்லை. உறவினர்களிடம் பொருளையும் புதல்வனையும் விடுப்பின் மகனுடைய உயிருக்கே இறுதி ஏற்படக்கூடும் என்று அஞ்சினர். தம்முடைய பண்ணை யாட்களில் ஏகன் சாம்பான் என்னும் பெயருடையவன் சிறந்த நற்குணமும் உண்மையும் உடையவனாக இருந்தமை நன்குணர்ந்திருந்த அவர் ஏகன் சாம்பனிடத்தில் தம்முடைய மகனையும் பொருளையும் ஒப்புவித்தார். மேலும் அவனைப்பார்த்து, "அப்பா! இச் சிறுவனை உன்னுடைய பிள்ளையைப்போல் நினைத்து வளர்த்து ஆளாக்கிவிடு.

கொஸ்மியிலே இன்ன இடத்தில் பெரும் பொருள் புதைத்து வைத்திருக்கிறேன். அதையும் நீயே எடுத்துப் பைய னுடைய செலவுக்குப் பயன்படுத்து," என்று கூறிவிட்டு அதற்காக வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து முடித்தார். சில நாட்களில் தாமும் காலமானார்.

கல்வி

பண்ணைபாளாகிய ஏகன் சாம்பான் வாணமுதலியாரு டைய கட்டளையை ஒழுங்காக நிறைவேற்றலானான். முதலி யாருக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளை யெல்லாம் குழந்தையைக் கொண்டு நன்முகச் செய்வித் தான். வேளாளர் குலத்தில் சிறந்து விளங்கிய ஒருவனைக் கொண்டு குழந்தைக்கு உணவு முதலியன அளிக்கச் செய்து எத்தகைய குறையும் ஏற்படாமல் நன்முக வளர்த் தான். அவனை ஐந்து சீரம்பிவுடன் பள்ளிக்கனுப்பிக் கல்வி கற்கச் செய்தான். அதன் பிறகு மேலும் சிறந்த கல்வியைப் பெறச் செய்யவேண்டும் என்று எண்ணிக் கம் பரைக் கொண்டு கல்வி கற்பிக்கச் செய்தான்.

பூதங்காத்த பொருள்

கல்வி கற்றுச் சிறந்த அறிவுபெற்றபின் தம்முடைய அலுவல்களை யெல்லாம் தாமே பார்த்துக் கொள்ளத் தொடங்கினர். ஏகன் சாம்பான் சிறந்த பெண்ணைத் தேடித் திருமணமும் செய்வித்தான். வாண முதலியாரு டைய பொருள்கள் முழுவதையும் ஒப்படைத்தான். புதைக்கப்பட்ட பொருள் இருக்குமிடத்தையும் தெரியப் படுத்தினன். இவர் பண்ணையாள் கூறிய இடத்தில் உள்ள பொருளை வெட்டி யெடுக்கத் தொடங்கினர். அப்பொரு ளைப் பூதங்காத்துக்கொண்டிருந்தது. ஆகவே வெட்டும் பொலையனுடைய மூக்கிலும் வாயிலும் இரத்த உதிரம்

பெருகியதால். அவன் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். மேலும் கருங்குளவிகள் புறப்பட்டுக் கொட்டத் தொடங்கின. இவர் அம் முயற்சியை நிறுத்திவிட்டு இதற்கு யாது செய்யலாம் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். அன்றிரவு கனவில் அப்பூதம் இவருக்குமுன் தோன்றி, "நான் பல காலமாகக் கண்ணை இமை காப்பதுபோல் பாதுகாத்து வரும் எழுகோடி வெண்பொற் காசுகளையும் நீ எளிதாகக் கைப் பற்றிக் கொள்ளலாம் என்று எண்ணுகின்றாயோ? அஃது ஒருநாளும் நடவாது. எனக்கு மன நிறைவு உண்டாகுமாறு, அருள், அன்பு, உண்மை முதலிய நல்லியல்பு களையுடைய ஒரு மனிதனை எனக்குப் பலிகொடுத்தால் இப்பொருளை உனக்குக் கொடுப்பது மல்லாமல், நானும் உனக்கு அடிமையாகி நீ காலால் இட்ட வேலையைத் தலையாற் செய்துகொண்டு இருப்பேன்" என்று கூறிவிட்டு மறைந்தது.

பன்னீயான் பலி

இவர் உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டார். ஏகன் சாம்பானை உடனே வரவழைத்துத் தான் கண்ட கனவினைக் கூறினர். அவன் இச் செய்தியைக் கேட்டு விட்டுக், "கட்டாயம் முயற்சி செய்து அப்பொருளை அடையத்தான் வேண்டும்" என்று கூறினன். இவர், "யானைப் பலிக்கு அழைக்கிறது?" என்று கேட்டார். அதற்கு ஏகன் சாம்பான் "இதைப்பற்றி வீணாக எண்ணமிட்டுக்கொண்டிருப்பானேன்? நான் அன்பு அருள் முதலிய நற்குணங்களெல்லாம் அமையப் பெற்றவன்; என்னையே பலி கொடுக்கலாம். நான் மிகுந்த களிப்போடு பலியாவதற்கு உடன்படுகிறேன்" என்று கூறினன். இதனைக் கேட்டு இவர், "சிவசிவா! இப்படியும் நீ இயம்பலாமா? நீ எனக்குப் பெற்ற தந்தையைவிடப் பெரிய தந்தையன்றோ? எனக்கு நீ செய்துள்ள

கன்றினையெல்லாம் யானும் கலிங்கத்தான் இயலை? எனக்கு இப்பொழுது இருக்கிற செல்வம் போதும்; எனக்கு இனிமேல் பொருள் வேண்டாம். அந்த ஏழுகோடி வெண் பொற் காசுகளையும் பூதமே காத்துக் கொண்டிருக்கட்டும். யான் இனிமேல் அந்த வழிக்கே போகிறதில்லை" என்று கூறினான். ஏகன் சாம்பான் 'நம் எத்தனை பேர்க்கு இருந் தாலும் ஒரு காசுக்கு இறக்கத்தானே வேண்டும்? பாருக் கும் பயனில்லாமல் வீணாக இறப்பதனால் பயனென்ன? இப் பொழுது இறந்தால் நம் தலைவருக்கு ஏழுகோடி வெண் பொற் காசுகள் அகப்படுமே' என்று எண்ணமிட்டான். அன்றிரவு ஒருவருக்குந் தெரியாமல் புலையனிருக்கிற இடத்திற்குப் போய்க் கழுத்தை யறுத்துக்கொண்டு பூதத் திற்குப் பலியாகி விட்டான்.

ஏகனுக்கு இறுதிக்கடன்

பூதம்வாண முதலியாருடைய மகனின் கனவிற்போய், "உன்னுடைய பண்ணையான் எனக்குப் பலியாகிவிட்டான். இனிமேல் உன்னுடைய தந்தை புதைத்து வைத்த ஏழு கோடிப் பொன்னையும் நீ எடுத்துக் கொள்ளலாம். யானும் மூன்று வின்றதுபோல் உனக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கிறேன்," என்று கூறியது. உடனே வாண முதலியார் திடுக்கிட்டெழுந்தார். பொருள் புதைக்கப்பட் டுள்ள இடத்திற்கு விரைந்து சென்று பார்த்தார். ஏகன் சாம்பான் கழுத்தறுபட்டுக் குருதிப் பெருக்கில் இறந்து கிடந்தான். கண்டதும் சோர்ந்து நிலத்தில் விழுந்தார்; பெரு மூச்சுவிட்டார்; மயங்கி நெடுநேரம் கிடந்தார்; கண்ணீர் விட்டழுது கதறினார். செய்யவேண்டிய இறுதிச் சடங்கு களையெல்லாம் தம்முடைய கையினாலேயே செய்து முடித் தார்.

ஏகம்பவாணன்

ஏகன் சாம்பான் செய்த பேருதவியை மறந்துவிடா திருப்பதற்காக வாண முதலியாருடைய மகன் தம்முடைய பெயரைத் திருத்தி யமைத்தார். அவனுடைய பெயராகிய ஏகன் என்பதை முதலிலும் தமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியராகிய கம்பருடைய பெயரை இடையிலும் தம்முடைய தந்தையார் பெயரை இறுதியிலும் சேர்த்துத் தம்முடைய பெயரை "ஏகம்பவாணன்" என்று அமைத்தார். இப் பெயர் நாளடைவில் ஏகம்பவாணன் என்று மருவிற்று. பிறகு ஏகம்பவாணர் பூதங்காத்திருந்த பொருளை வெட்டி யெடுத்து வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தார். பூதமும் முன்பு தான் கூறியபடி ஏகம்ப வாணருக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தது. பெருஞ் செல்வராக விளங்கிய இவர் பயிர்த் தொழில் செய்வதிலும் நூலாராய்ச்சி செய்வதிலும் தம்முடைய காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்.

மூவேந்தரும் முதலியார் மனைவியும்

ஏகம்பவாணர் இவ்வாறு அரசரும் மதிக்கத்தக்க பெருஞ்செல்வச் சிறப்போடு வாழ்ந்துகொண்டிருக்கையில் ஒருநாள் மூவேந்தரும் ஏகம்பவாணரைப் பார்க்கும் பொருட்டு அவருடைய இல்லத்திற்கு வந்தார்கள். முதலி யார் வெளியே சென்றிருந்தார். "முதலியார் எங்கு சென் றுள்ளார்?" என்று வீட்டிற்குள் ஆளனுப்பி உசாவினர். முதலியாருடைய மனைவி, "முதலியார் கழனிக்குச் சென் றுள்ளார்," என்று மறுமொழி சொல்லியனுப்பினள். இதனைக் கேட்டதும் வேந்தர்கள், "முதலியார் முடிசூடப் போகிறாரோ!" என்று சிறிது ஏளனமாக முதலியா ரையும் அவருடைய தொழிலையும் கட்டிப் பேசினர். இம்

மொழிகள் முதலியோருடைய மனைவியின் காதிலே விழுந்தன. அவளும் நன்கு கல்வி கற்றுப் புலமை பெற்றவள். செய்யுள் பாடுந்திறமுடையவள். சூவேலந்தர்களின் மொழி அவளுக்கு மிகுந்த சினத்தை உண்டாக்கிற்று. உடனே அவள், "நம்முடைய முதலியார் முடிசூடுவது மெய்தான். ஆயினும் அவர், இந்தச் சாற்றமுடியையோ சூடுவார்? சோழசோழ பாண்டியர்களாகிய சூவேலந்தருடைய படைகளை அழித்துத் தொலைத்து ஆனைகளைக்கொண்டு சேறுக்கிக் குருதியோடிய நிலை நிறுத்து அச் சேற்றில் அம் மன்னர்களுடைய முடிகளையன்றோ சூடுவார்" என்னும் பொருளமைத்துச்,

"சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தெக்கி
ஆனை மிதித்த அடிச்சேற்றில்—மானபிரான்
மாவேந்தன் எகம்ப வாணன் பறித்தாட்டான்
சூவேலந்தர் தங்கள் முடி."

என்னும் பாடலை எழுதி அரசர்களிடம் அனுப்பினள். அப் பாடலை அவர்கள் படித்துப் பார்த்தார்கள். "இவன் இத்தகைய வீரதீர வீரனா? இதனை நாம் அறியாமற் போனோமே! சரியது; இருக்கட்டும்," என்று மிகுந்த இறுமாப்புடன் கூறிவிட்டு அவ்விடம் விட்டுச் சென்றனர்.

சோமன்னன்

வேந்தர்கள் திரும்பிச் சென்ற பிறகு எகம்பவாணர் வீட்டிற்கு வந்தார். அவருடைய மனைவி சூவேலந்தர்கள் வந்த செய்தியையும் அவர்கள் சொல்லியதையும் சொன்னாள். எகம்பவாணருக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. 'சரியது; இவர்களுடைய ஆணவத்தை அடக்கவேண்டும்' என்று முடிவுசெய்தார். தம்முடைய பூதத்தைப் பார்த்து, "நீ உடனே போய்ச் சோமன்னனைத் தூக்கிக்கொண்டுவா!" என்று கட்டளையிட்டார். பூதம் சோமன்னனிடம் போய்

அவனை அவன் படுத்து உறங்கிக்கொண்டிருந்த கட்டிலோடு தூக்கிக்கொண்டு வந்துவிட்டது. அவனைச் சிலர்ான் வளையிற் சிறைக்கூடத்தில் அடைத்து வைத்தார். அவன் சிறையில் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். "யாகாவராயினும் நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். நாம் நாவினை அடக்கிப் பேசாமையால் இத்தகைய தொல்லைக்குட் சிக்கிக்கொண்டோம் என்று உள்ளம் வருந்தினான். ஆண்டு தோறும் கப்பங்கட்டுவதாகவும் முதலியாருக்கு அடங்கி நடப்பதாகவும் உடன்படிக்கை செய்துகொண்டு விடுதலை பெற்றுத் தன்னுடைய ஊருக்குப் போய்ச் சேர்ந்தான்.

சோழமன்னன்

பிறகு ஏகம்பவாணர் பூதத்தைப் பார்த்துச், "சோழ மன்னனைப் பிடித்துக் கொண்டுவா!" என்று கட்டளையிட்டார். பூதம் அவ்வாறே அவனையும் பிடித்துக்கொண்டு வந்தது. சோனிடம் உடன்படிக்கை செய்துகொண்டதுபோல் சோழனிடமும் செய்துகொண்டு அவனையும் சிறை நீக்கி அனுப்பிவிட்டார்.

பாண்டிய மன்னன்

இறுதியில் பூதத்தைப் பார்த்துப், "பாண்டிய மன்னனைக் கொண்டுவா" என்று கட்டளையிட்டார். பாண்டியன் பேய்க்கு விரோதமாகிய வேப்பமாலையை அணிந்திருப்பவனைகையால் பூதம் அவனிடத்திற்குப் போவதற்கு அஞ்சிப் பின்வாங்கியது. ஏகம்பவாணர் தம்முடைய ஆசிரியராகிய கம்பரிடத்திற்குப். போய் நடந்த செய்திகளைச் சொல்லி, "இதற்கென்ன சூழ்ச்சிசெய்யலாம்?" என்று உசாவினார். அதற்குக் கம்பர், "பெண் யானையைக் கொண்டு ஆண் யானையை வசப்படுத்துவதைப்போல் பெண்

கனைக்கொண்டு அவனை மயக்கி அவ்வேப்பமாலையைக் கைப் பற்றிக்கொண்டு வருமாறு செய்துவிட்டால், அதன் பிறகு பாண்டியனைப் பிடித்துக்கொண்டு வருவது மிகு எளிதாகும்," என்று கூறினர். தம்முடைய வீட்டில் வேலைசெய்கிற அழகிய பணிப்பெண்கள் நான்கு பேரை அழைத்து, "நீங்கள் ஏகம்பவாண முதலியார் இயம்புகிற வண்ணஞ் செய்யுங்கள்!" என்று கட்டளையிட்டு அனுப்பினர்.

பணிப் பெண்கள்

ஏகம்பவாணரிடம் அனுப்பப்பெற்ற பெண்கள் நால்வரும் அழகிலும் கல்வியறிவிலும் ஆடல்பாடல்களிலும் சிறந்தவர்கள். காமச் செய்யுள் இயற்றவும் வல்லவர். 'கம்பர் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடு'மன்றே? ஏகம்பவாணர் அப் பெண்கள் நால்வரையும் விலையுயர்ந்த ஆடையணிகளால் அழகு செய்து, "நீங்கள் பாண்டியனிடத்திற்குப்போய் அவனிடம் உங்களுடைய ஆற்றலைக் காட்டி அவன் அணிந்திருக்கும் வேப்பமாலையை எவ்வகையிலேனும் கவர்ந்து கொண்டுவந்துவிடுங்கள்" என்று சொல்லியனுப்பினர். அவர்கள் நால்வரும் தேவமாதர்களைப் போல் பாண்டியனிடத்திற்குச் சென்றார்கள். மயில் ஆடுவதைப்போல் ஆடினர்கள்; குயில் கூவுவதைப்போல் இசை பாடினர்கள்.

பாண்டியன் பரிசு

அம் மாதர்களுடைய ஆடல்பாடல்களைக் கண்டு பாண்டியன் மனங்களித்தான். முத்துமாலை மோகனமாலை முதலாகிய அணிகலன்களை நன்கொடையாக வழங்கினன். அப் பெண்கள் அரசனைப் பார்த்து, "அரசே! நீர் எங்களுக்குப் பரிசு கொடுக்கும்பொழுது எங்களைக் கேட்டு எங்களுடைய விருப்பப்படியன்றே கொடுக்கவேண்டும்?

அல்லது செப்பமிலையே!" என்றான். பாண்டியன் பாலைப்பாடிய கருத்தை உணர்ந்தவனாயினும் "நீ என்ன சொல்லுகிறாய். உன் விருப்பப்படியே செய்கிறேன்; வேண்டியதைக் கேளுங்கள்" என்று சொன்னான். அப் பெண்களில் ஒருத்தியின் தாய் பாண்டியனைப் பார்த்து, "ஓ அரசே! என் பெண் நீ கொடுத்த முத்தாரமோ மலர்மாலை முதலியவைகளின்மேல் விருப்பம் கொண்டவள் அல்லள்; நீர் அணிகின்ற வேப்பமாலை மீது தான் கொண்டிருக்கிறாள். ஆகையால் அதனை அவளுக்குக் கொடுக்கவேண்டும்," என்றும் பொருளை அமைத்து,

"மாப்பைந்தார்க் கல்லமுத்த வண்ணத்தார்க் கல்லவென்பெண்
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு மெல்லவிழ் சிலிமா முகமிழை
தூர்ந்திருக்கும் வீரமாறு?"

என்றும் செப்புநீர்ப் பாடினான். பாண்டியமன்னன் இப் பாடலைக் கேட்டுவிட்டு 'வேப்பமாலையை எப்படிக் கொடுக்கிறது அதனைக் கொடுக்கக்கூடாதே' என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். அரசன் பாதம் மறைமொழி கூறிருக்கையே, இன்னொருத்தி அதே கருத்தை அமைத்து,

"தென்னை மீளவர சிலிமை முகதலை
மன்னவ பண்டி வளாடா—முன்னம்
கொம்புக்குச் சாடுதிர்த்த தம்பதகிழ் வாடா
கும்புக்கு கேம்பலே கண்."

என்று பாடினான். பாண்டியமன்னன் இதற்கும் மறைமொழி கூறவில்லை. முடிவில் இன்னொருத்தி,

"வேம்ப நிறையின்ப சொல்லுக்கு நீங்கேன்ற
வேம்ப நிறமுகை வேண்டாவே—மீன்பாயும்
வேலையிலை வேலைவத்த மீனவ கின்புயற்ற
மாலையிலை மாலைவத்தான் மான்."

என்று வெறொரு பாட்டைப் பாடினள். பாண்டியமன்னன் இதற்கும் வாய் திறவாமல் மௌனமாகவே இருந்தான். அதன் பிறகு இன்னொருத்தி அப் பெண்களைப் பார்த்து, "பாண்டியமன்னர் இவ்வேப்ப மாலையைக் கொடுப்பதற்கு மனமிசையாமல் இருப்பதற்கு கஞ்சத்தனம் காரணமன்று. இவர் சிறந்த கொடையாளி; இதனை நாம் இப்பொழுது இவர் வழங்கிய பரிசிலைக்கொண்டே உணர்ந்துகொள்ளலாம். பிறகு ஏன் எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறார் என்றால் ஆற்காரிலே இருக்கிற ஏகம்பவாண முதலியாருடைய பூதம் வந்து தம்மைப் பிடித்துக்கொண்டுபோய்விடும் என்னும் அச்சத்தினாலேதான் கொடாமல் இருக்கிறார். இதனை நீங்கள் உணர்ந்துகொள்ளாமல் அவர்மீது குற்றஞ் சொல்லுகிறீர்கள் என்னும் கருத்தை அமைத்து,

"இலது புகழ்தரை ஏகம்ப வாணன்
அலகை வருவருமென் றஞ்சி—உலகறிய
வானவர்கோன் சென்னிமேல் வண்தை வனைவெறிந்த
மீனவர்கோன் கல்லிடான் வேம்பு."

என்னும் பாடலைப் பாடினள்.

வேப்பமாலையைப் பெறுதல்

அவள் கூறியதைக்கேட்டுப் பாண்டியமன்னன், 'இவள் நம்மைக் கேலி செய்கிறாள்' என்று மிகுந்த வெட்கமடைந்தான். 'இனிமேல் என்ன கேரிட்டாலும் கேரிடட்டும்; மானம் போனபின் உயிர் இருந்து பயன் என்ன? உலகத்தின் என்று மட்டும் பெயர் எடுக்கக் கூடாது. கண்ணன் தான் தேடிய கல்வினையையும் அன்றே தானஞ்செய்தான்!' என்று எண்ணி அப்பொழுதே தான் அணிந்திருந்த வேப்பமாலையைக் கழற்றிக்கொடுத்தனிட்டான். அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டுபோய் முதலியாரிடத்தில்

கொடுத்தனிட்டார்கள். அவர் அதனைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுப் பெண்களுக்குத் தக்க நன்கொடைகள் வழங்கி அனுப்பிவிட்டார்.

பாண்டியன் சிறைப்படல்

பிறகு தம்முடைய பூதத்தை அழைத்து, "வேப்பமாலைக்காக அஞ்சிக்கொண்டிருந்தாயன்றே?" இப்பொழுது அம்மாலை என்னுடைய கையிலே வந்துவிட்டது. இனிமேல் நீ சிறிதும் அச்சமில்லாமல் போய்ப் பாண்டியனைப் பிடித்துக்கொண்டுவா" என்று சொன்னார். இவருடைய கட்டளைச் சொற்கள் முழுவதும் வெளிவருவதற்குள்ளேயே பூதம் விரைந்து சென்று பாண்டிய மன்னனைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டது. ஏகம்பவாணர் பாண்டிய மன்னனுடைய காலுக்குங் கைக்கும் கடுமையான விலங்குபோட்டு மிகப்பாதுகாப்பான கடுஞ்சிறையிலே அடைத்துவிட்டார். பாண்டியன் ஏகம்பவாணருக்கு எவ்வளவோ நல்லுரைகளைக் கூறினன். இனிமேல் அவ்வாறெல்லாம் பேசாமலிருப்பதாக உறுதிமொழிகள் அளித்துப் பார்த்தான். முதலியார் எதையுங் காதிலே போட்டுக்கொள்ளவில்லை. பிறகு அவன் தன்னுடைய மனைவிக்குச் செய்தி சொல்லியனுப்பினன். "நீ எவ்வாறாயினும் ஏகம்பவாணருடைய சினத்தை மாற்ற வேண்டு"மென்று தெரியப்படுத்தினன்.

விடுதலையடைதல்

பாண்டியனுடைய மனைவி சிறந்த அறிவாளி. செய்யுள் இயற்றத்தக்க செந்தமிழ்ப் புலமைபெற்று விளங்கினள். அவள் ஏகம்பவாணருடைய கொடை நலத்தைப் புகழ்ந்து,

> "என்கலிகை என்சிவிகை என்கவசம் என்துவசம்
> என்கரியீ தென்பரியீ தென்பரோ—மன்கவன
> மாவேந்தன் ஏகம்ப வாணன் பரிசுபெறும்
> பாவேந்த ரைவேந்தர் பார்த்து."

என்னுஞ் செய்யுளை எழுதி ஏகம்பவாணரிடத்திற்கு அனுப்பினுள். அப் பாட்டை இவர் படித்துப் பார்த்தார். மிகுந்த விளைவையுடைய பரிமாவைச் செலுத்துகின்ற சூரிய மண்ணனையொத்த ஏகம்பவாணமுதலியாரைப் பாடி அவரிடத்தில் யாளை குதிரை குடை கொடி முதலாகிய பல வகைப்பட்ட பரிசுபெற்றுவருகின்ற புலவர்களைப் பார்த்து, அதற்குமுன்பு அம்முதலியாருடனே எதிர்த்துத் தோற்றுத் தத்தம் விருது முதலானவைகளை இழந்த அரசர்கள், "இப் புலவர் பிடித்துக்கொண்டு போகின்ற குடை நான் பிடித்திருந்தது, அவர் ஏறிச் செல்லுகின்ற தண்டிலை நான் ஏறியது, இவர் அணிந்துள்ள கவசம் நான் அணிந்திருந்தது, இவர் பிடித்திருக்கிற கொடி நான் வைத்திருந்தது, இவர் ஏறிவரும் யாளை என்னுடையது. இவர் செலுத்துகின்ற குதிரை என்னுடையது," என்று சொல்லி வருத்தம் அடைவார்கள் என்னும் பொருள் விளங்கியது. அப் பாட்டினால் ஏகம்பவாணர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அவருடைய சினம் ஒருவாறு ஆறியது. பாண்டியனைச் சிறைநீக்கி உடன்படிக்கை செய்யச் செய்து அனுப்பிவிட்டார். சூழ்வேந்தரும் ஆண்டுதோறும் ஏகம்பவாணருக்குத் திறை செலுத்திக்கொண்டிருந்தனர்.

ஏகம்பவாணரின் கொடைத்திறம்

ஏகம்பவாணர் அரசர்களைப் பார்க்கிலும் மிகுந்த செல்வச் சிறப்போடு விளங்கியிருந்தார். கல்விச் செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் ஒருங்கே பெற்ற இவர் தம்மை நாடிவரும் புலவருக்குப் பெரும்பொருள் பரிசு வழங்கிச் செல்வத்தை இனிது பயன்படுத்தினர். ஒருநாள் புலவர் ஏகம்பவாணரிடஞ்சென்று யாளை குதிரை பல்லக்கு முதலிய சிறந்த பரிசுகளைப் பெற்றுக்கொண்டு திரும்பி

னர். திரும்பிச் செல்லும் புலவருடைய தோற்றம் ஓர் அரசன் செல்வதுபோற் காணப்பட்டது அப்பொழுது இளைப்புலவர் ஒருவர் பரிசுபெற்றுச் செல்லும் புலவருக்கு எதிரே வந்தார். அவர் தமக்குமுன்னால் வருபவர் ஓர் அரசர் என்று எண்ணிக்கொண்டார். பிறகு அவரிடஞ் சென்று, "தேர், யானை, குதிரை முதலியனவைகளைத் தொகுதிப் பொருளாகப் பெற்றுக்கொண்டு வருகின்ற அரசரே! உம்முடைய நாடு யாது? உம்முடைய பெயர் யாது? இதனை எனக்குச் சொல்லியருளவேண்டும்" என்று சொல்லி வேண்டிக்கொண்டார். பரிசுபெற்றுவரும் புலவர் இளைப் புலவரைப் பார்த்து, "வீணையைக் கையிற்கொண்டு வாசிக்கின்ற புலவரே! வருக! வருக!! நான் நினைத்திற செய்தியைக் கேளுமி: நான் அரசனல்லேன்; நீரும் நானும் கல்வியினால் ஒத்த குலத்தினர்களே யாவோம். மகதநாட்டிற்குத் தலைவனும், தென்னாற்காருக்கு உரியவனும் ஆகிய ஏகம்பவாண முதலியார் மனமகிழ்ந்துகொடுத்தனன்கொடையைப் பெற்று வருகிற புலவன் நானுவேன். நீரும் இவ்வாறு பரிசுபெற்றுக் கொண்டுவரலாம். விரைவாக அவரிடத்திற்குப் போம். அச் செல்வர் வாழ்கின்ற சந்திரகாந்தக்கல் அமைத்த முற்றங்களிலும் முத்துப்பதித்த சிகாக்களையுடைய மாடமாளிகை கூடகோபுரங்களிலிடத்தும் ஆத்திமரம் இருக்கின்றது; உயர்ந்த வேப்பமரம் இருக்கின்றது; வளர்ந்த பனைமரம் இருக்கின்றது; அதன்பக்கத்தில் அரசர் பலர் நிற்பர். அரசர்களைச் சமந்த சில யானைகளையும் அங்கே காணலாம் இவைதாம் அந்த வாண முதலியாருடைய இல்லத்தை அறிந்துகொள்ளத்தக்க அறிகுறிகளாகும்," என்னும் பொருளை அமைத்து ஆற்றுப்படையாகப் பின்வருஞ்செய்யுளைப் பாடினர்: அப்பாடலை அடுத்த பக்கத்திற் காண்க.

"தெரு வோப்புகவி வாரணத்தொகுதி
திறைகொ ணர்ந்துவரு மன்னனின்
தேச மேதுன தூர நாம மேதுபுகல்
செங்கை யாழ்தடவு பாணரே
வாரு மொத்தகுடி நீரு நாணுமக
தேவ ரூறைதகர் காவலன்
வாண பூபரிம கிழ்ந்த வித்தவெகு
மானை பெற்றுவரு புலவன்பான்
சீரு மிப்பரிசு பெற்று மீண்டுவர
வாகு மேகுமவன் முன்றில்வாய்
கித்தி லச்சிகர மாட மானிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்குருயர் வேம்பு நிற்கும்வளர்
பனையும் நிற்குமத னருகிலை
அசு நிற்குமர வசைச்சு மக்தசில
அத்தி நிற்குமடை யானமே."

[அ - வர.] உவ - பிடரிமயிர் முன்றில்வாய் - முற்றத்தே. கித்திலச் சிகர மாடமானிகை - முத்தாக்கள் பதிக்கப்பெற்ற முடியை உடைய மாளிகைகள். ஆர் - ஆத்திமாலை. சண்டு ஆத்தி மாலையை அணிந்த சோழனென்று பொருள் கொள்க. வேம்பு - வேப்பமாலை. சண்டு வேப்பமாலையை அணிந்த பாண்டியன் என்று பொருள் கொள்க. பன - பனைமாலையை அணிந்த சேரன் என்று பொருள் கொள்க. அரவைச் சுமந்த அத்தி - அரசர்களைத் தம் மேற்கொண்ட யானை.

இவ்வாறு சிறந்த புகழுடன் விளங்கியிருந்த இவர் நூல்களோ தனிப் பாடல்களோ செய்ததாகத் தெரிய வில்லை. செல்வச் சிறப்பில் திளைத்திருந்த இவருக்குப் பாடல்களோ நூல்களோ இயற்றவேண்டிய கட்டாய மேற் படவில்லை போலும். அன்றி, எத்தனையோ புலவர் பெரு மக்களுடைய பாடல்கள் மறைந்தொழிந்தன; அந் நிலையை இவருடைய பாடல்களும் அடைந்திருத்தலுங் கூடும்.

உ. முத்தாரந்த அடிகள்

தோற்றம்

திருநெல்வேலியில் இருந்த கார்காத்த வேளாளர் குடும்பம் ஒன்று மதுரையை அடைந்து அம்மன் சந்நிதித் தெருவில் குடியேறி வாழ்ந்திருந்தது. அக்குடும்பத்திலே 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்குச் சரியான ஆண்டு பங்குனித் திங்கள் உத்-ஆம் நாள் வெள்ளிக்கிழமை முத்தாரந்த அடிகள் தோன்றினர். இவருக்கு இடும்பற்ற பின்னைப் பெயர் முத்தையா என்பது. தந்தையார் பெயர் திருமலைப் பின்னை; தாயார் பெயர் அம்மணியம்மாள். இவருக்குத் தமையனார் ஒருவர், அவருடைய பெயர் சுப்பைய பின்னை. தம்பியர் மூவர். தங்கையர் இருவர்.

இளமையும் கல்வியும்

அகவை ஐந்தை தம்பியுடன் பள்ளிக்கு அனுப்பப் பெற்றார். எட்டாண்டுகள் வரை பள்ளிதில் பயின்றார். பிறகு மாமன் முதலியோருடன் கொழும்பை யடைந்து அங்கு அரிசி மண்டியில் வாணிகம் பயின்றார். பிறகு பத்தொன்பதாம் அகவையில் மீண்டும் மதுரையை அடைந்தார். அங்குச் சிலநாள் இலைவழிபாடு செய்துகொண்டு தங்கியிருந்தார். இவருடைய உள்ளம் உலகவாழ்க்கையை நாடவில்லை.

திண்ணைக்குச் செல்லுதல்

இவ்வாறாக வெறுப்பே சென்ற தமையனிட வேண்டும் என்ற முடிவுசெய்தார். தமது கையில் இருந்த சிறு தொகையை எடுத்துக்கொண்டு பாருக்குள் தெரியாமல் ஒருநாள் காலை நான்கு மணிக்குப் புகைவண்டி யேறிப் புறப்பட்டார். மதுரையைப் போல் திருநெல்வே

யும் புகழ்பெற்ற சிறந்த இடம் என்று கேள்விப்பட்டிருந்த படியால் தில்லையை அடைந்து சில காளேனும் கூத்தப் பிரானைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்னும் எண்ணம் உள்ளத்தில் இருந்தபடியால் திருத் தில்லையை அடைந்தார். சிவகங்கையில் நீராடிவிட்டுக் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டார். கூத்தப்பிரான் திருமுன்பு வெளியே நீண்ட நேரம் உட்கார்ந்துகொண் டிருந்தார். தில்லைவாழ் அந்தணர் மூவர் இவரைத் தம்பால் அழைத்தனர். ஒருவர் தொண்ணையில் இருந்த பஞ்சாமிர் தத்தை எடுத்து இவருக் களித்தார். அஃது அன்று கூத்தப் பிரானுக்குத் திருமுழுக் காட்டப்பட்டது. பிறகு அங்கே வந்த திருநீலகண்ட அடிகள் என்னும் பெரியாரும் இவரைக் கண்டு பஞ்சாமிர்தம் வழங்கிச் சென்றார். அன் றிரவும் கோயிலில் தானே தங்கியிருந்தார்.

ஆசிரியரை யடைந்து கல்விகற்றல்

மறுநாள் இவர் கூத்தப்பிரான் திருமுன்பு உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த துறவி யொருவர் இவரைத் தம்மோடு அழைத்துக்கொண்டுபோய் மௌன தேசிகர் ஆதீனத்திற் சேர்த்தார். அப்பொழுது அங்குச் செல்லப்ப ஞானதேசிகர் என்னும் பெரியார் கல்வி யறிவாதிகளிற் சிறந்தவராய் அறிவாசிரியராக அமர்ந்திருந் தார். இவரை அழைத்துக்கொண்டு சென்ற துறவி அப் பெரியாரை யடைந்து வணங்கி இவரையும் வணங்கச் செய்தார். பிறகு அப்பெரியாரைப் பார்த்து, "அடிகள்! இச் சிறுவன் இங்கிருந்து தொண்டு செய்யவும் கல்வி கற்க வும் விரும்புகிறான். இவனை ஏற்றருளல்வேண்டும்," என்று வேண்டிக்கொண்டார். அப்பெரியார், 'அப்படியாயின் இருக்கட்டும்' என்று அருளுரை வழங்கித் தம்மோடு

தங்கச் செய்தார். இவர் அப் பெரியோருக்குரிய பணிகளெல்லாஞ் செய்து கொண்டு ஓய்வு நேரங்களில், சோணசைலமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, கால்வர் நான்மணி மாலை, மறைசையந்தாதி முதலிய சிறுநூல்களையும்; நிரபுலிங்களிலை, கானத்திப் புராணம், காஞ்சிப். புராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் முதலிய பெருநூல்களையும்; இலக்கணச் சுருக்கம், நன்னூல் முதலியவைகளையும் பாடங் கேட்டார். மேலுஞ் சங்கநூல் முதலியவைகளையும் ஓதியுணர வேண்டும் என்னும் அவாமேலிட்டது. தம் எண்ணத்தை ஆசிரியர்பால் வெளியிட்டார். ஆசிரியர், "ஒருவரிடமே எல்லா நூல்களையும் ஓதியுணர்வதைப் பார்க்கிலும் பலரிடமும் ஓதியுணர்தல் அறிவு நன்கு விரிவதற்கு வழியாகும். தக்கவிடஞ் சென்று கற்றுவருக" என்று உடன்பாடு கல்கினர்.

கோதகரும் கவியரசும்

காஞ்சைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்கள் அந்நாளிற் செட்டிநாட்டில் கோகநகர் என்னும் ஊரில் கற்பக விநாயக கலாசாலையில் ஆசிரியராக அமர்ந்து மாணவர் பலருக்குக் கல்விகற்பித்துக் கொண்டிருந்தனர். அங்குக் கல்விப் பயிற்சி பெறுவதற்கு வழியிருக்கிறது என்பதை உணர்ந்த இவர் அங்குச் சென்று சான்காண்டுகள் கல்வி பயின்றார். வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காடு முதலிய இடங்கட்குஞ் சென்று விடுமுறைக் காலங்களில் தங்கியிருப்பார். கோகநகரில் கல்விகற்று முடிந்தபின் மீண்டுந் தில்லையை அடைந்து தம் ஆசிரியரோடு தங்கினர்.

ஆசிரியர் மறைவு

தில்லையை அடைந்த இவர் ஆசிரியருடைய கட்டளைப்படி ஆதின அலுவல்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு

அறிவு நல்கினைப் பாடம் கேட்டார். இங்ஙனமில் மூன்று ஆண்டுகள் சென்றன. ஆகூஉ-ஆம் ஆண்டில் ஆசிரியப் பெருந்தகையார் விடுபேற்றை அடைந்தார். அதன் பிறகு விடுபேற்றின் பினக்கடுகிழா முடிவுபெறும்வரை அங்கிருந்தார். பிறகு அவ்விடம்விட்டு வேறிடஞ்செல்ல உன்னினார்.

சென்னை சேர்தல்

பிறகு திருவையிட்டுப் புறப்பட்டுச் சென்னைமா நகரை அடைந்தார். அப்பொழுது அங்கு முருகேச முதலியார் என்னும் இல்லறப் பெருமகனார் சித்தியானந்த அடிகள் வேதாந்த நூல்களினும் தருக்க நூல்களினும் இலக்கண இலக்கியங்களினும் மிக வல்லுநராக விளங்கியிருந்தார். இவர் அவரை யடைந்து தருக்க நூல்களையும் விசாரசாகரம், விருத்திப் பிரபாகரம், தத்துவாது சந்தானம் முதலிய வேதாந்த நூல்களையும் ஈராண்டு ஆண்டுகள்வரை உடனிருந்து பயின்றார்.

வடநாடு செல்லுதல்

ஆகூஉ-ஆம் ஆண்டில் வியாசர்பாடி கோதண்டராம முதலியார் என்னும் அன்பரோடு புறப்பட்டுக் காசி, இருடிகேசம், திருக்கேதாரம், பத்ரிநாராயணம் முதலிய ஊர்கட்குச் சென்று இறைவழிபாடு செய்துகொண்டு திரும்பினர்.

திராவிடமிப்பின்னூற் தொடர்பு

சென்னையில் செங்கல்வராய நாயகர் தொடர்பினால் காவேரிநதி சிவப்பிரகாச அடிகளார் தங்கியிருந்த ஆசிரமம் ஒன்று உள்ளது. வடநாடு சென்று திரும்பிய இவர் ஆகூஉ-ஆம் ஆண்டில் மேற்படி ஆசிரமத்திற்கு வந்து தங்கினர். சென்னையிற் சிறந்த கொடைவள்ளலாக விளங்கிப் புகழ்

பெற்றிருந்த த. ப. இராமசாமிப் பிள்ளை என்னும் செல்வர் ஒருவருக்கும் இவருக்கும் நட்புண்டாயிற்று. அவர் இவரிடம் திருக்குறள் முதலிய நூல்களைப் பாடங் கேட்டார்.

வடமொழிக் கல்லூரி

சென்னைமாகாணத்தில் வடமொழிக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பது காபாத்திர சிவப்பிரகாச அடிகளாருடைய நோக்கமாக இருந்தது. ஆனால் அந்நோக்கம் அந்நாளில் நிறைவேறவில்லை. அதனை இவர் நிறைவேற்ற எண்ணினார். தம்முடைய நோக்கத்தை மேற்படி இராமசாமிப் பிள்ளைக்குத் தெரியப்படுத்தினார். வடமொழிக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு அவர் இணங்கினார். சூளை ஸ்மசபைக்கு நேஸ்வரர் தெருவில் இருந்த கட்டிடம் ஒன்றில் வடமொழிக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. மாணவர் பலர் சேர்ந்து வடமொழி பயின்றனர்.* பாடசாலைக்கு இவ்வடிகளாரே தலைவராக அமர்ந்து எல்லாப் பொறுப்புக்களையும் இனிதேற்று நடத்தினார்கள். ஏழெட்டு ஆண்டுகள் வரை நன்கு நடைபெற்ற அப்பாடசாலை பிறகு மூடப்பட்டு விட்டது.

வேதமொழி பெயர்ப்பு

இவர் வடமொழிக் கல்லூரியை நடத்திக்கொண்டிருக்கும்போது காஞ்சிபுரம் சிவாகந்த யதீந்திரர் என்னும் பெரியார் ஒருவர் பாடசாலைக்கு வந்தார். அவர் வடமொழியிலும் தென்மொழியிலுஞ் சிறந்த புலமை வாய்ந்தவர். அவரைக்கொண்டு வேதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடவேண்டும் என்று இவர் எண்ணினார். தமது கருத்தைப் பிள்ளையவர்கட்குத் தெரியப்படுத்தி ஏற்பாடு

---

* இப்பாடசாலையில் நானும் சில காலம் கல்விபயின்றதுண்டு. (சு-ர்.)

கனை யெல்லாஞ் செய்தார். சாமவேதம், பசுர்வேதம் முதலியன தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாயின.

வேப்பேரியில் வாசம்

அடிகளார்க்கும் இராமசாமிப் பிள்ளைபவர்கட்கும் இடையே சில கருத்து வேற்றுமைகள் உண்டானபடியினாலேயே பாடசாலை மூடப்பட்டது. வேதமொழிபெயர்ப்பு வேலையும் நின்றுவிட்டது. அடிகளார் வேப்பேரியில் அன்பர் ஒருவருடைய பங்களாவில் தங்கியிருந்து கொண்டு அன்பர் பலருக்கு வேதாந்த நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் போதித்துக்கொண்டிருந்தார். சங்கம் ஒன்று ஏற்பட்டு அதிலும் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

வியாசர்பாடி

நான் ககூஉ0-ஆம் ஆண்டுமுதல் பத்தாண்டுகட்கு மேல் தங்கியிருந்த வியாசர்பாடி சிவப்பிரகாச அடிகளாரின் திருமடத்தின் தலைவர்கள் காலமாகிவிட அம்மடம் எடுப்பார் கைக்குழந்தையாகிப் பலவழிகளினுஞ் சீரழிந்து வந்தது. அம்மடத்திற்குத் தக்க தலைவரை அமைக்க எண்ணிய யான் இவ்வடிகளாரையே அங்குக்கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமென்று பன்முறை அழைத்தேன். இவர் பிடி கொடாமலே பேசினர். என்னுடைய நண்பரும் காரைக்குடி சிவப்பிரகாச அடிகளாரின் மாணவருமாகிய டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் இவரை மேற்படி மடத்தின் தலைவராக்க வேண்டிய கட்டாயத்தைப் பற்றி ககூசை-ஆம் ஆண்டில் மிக வற்புறுத்திக் கூறினேன். அவர் உடனே முயற்சி செய்து இவரை ககூசை-ஆம் ஆண்டில் அம்மடத்தின் தலைவராக்கி விட்டார் அதுமுதல் இறுதி வரை அம்மடத்தின் தலைவராக இருந்து அம்மடத்தைப் பல வழிகளினுஞ் சீருஞ்சிறப்பும் பெற இனிது நடத்திக்

கொண்டிருந்தார். மடத்தில் உள்ளவர்கட்கு நாள்தோறும் பாடங்கள் நடத்தியதன்றி வெளியார்கட்கும் நிழமை தோறும் பாடஞ்சொல்லிக்கொண்டிருந்தார்.

நூல்

இராவண நிருதசிவதாண்டவ தோத்திரம் என்னும் நூலை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். அந்நூல் அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளது.

தனிப்பாடல்கள்

இவர் அவ்வப்போது பாடிய பாடல்கள் பல. நூல்கள் பலவற்றிற்குச் சிறப்புப்பாயிரமும் வழங்கியுள்ளார். கொல்லாமையைக் குறித்து,

"நன்றுமிக நன்றுயிர்கட் கின்னேரக் கந்தான்
நாடுநலம் பெற்றுய்ய நாட்டங் கொண்ட
வென்றிமனத் தன்னோருக்கு மணிதே விக்கு
விளைந்தவரு ளெலாவுலகும் மேவிப் போற்றும்
குன்றவிலா அறமெனைவக்கும் பெரிதாம் இந்தக்
கொல்லாமை அறமென்றகுறள்வாய்த் தேவர்
இன்றல்பொருட் டுலகனைத்துங் கொல்லா தாயில்
தேடவிலைக் கூன்தருவார் இலையென் றாரே."

என்று பாடியுள்ளார். ஓரிடத்தில் தளசி நட்டுப் பயிராக்கப் பட்டிருந்தது. யாரோ ஒருவன் அங்குவந்து ஒரு தளசிச் செடியை வேரோடு பிடுங்கித் தருமாறு கேட்டான். இவர் கொடுக்க மறுத்தார். அப்பொழுது மூர்த்தி என்பவன் ஒரு செடியை வேரோடு பிடுங்கிக் கொடுத்து விட்டான். உடனே சினங்கொண்ட இவர்,

"மூர்த்தி உனக்கேண்டா மூடத் தனமதனைத்
தீர்த்தன் மகிழ்வைத்த தீந்துளவை—ஆர்த்தநீ
வந்து பிடுங்கி வழிப்போக்கன் கையீந்த
தெந்தமதியாலே டா."

என்று விரைவாக ஒரு பாடலைப் பாடினார். அன்னையில் இனிக்கச் செட்டித்தெருவின் மறைமலையடிகள் நூல்நிலையச் நிறக்கப் பெற்றபோது அக்குலவந்து சிறப்பித்ததோடு,

"அருளார் மறைமலைப்பேர் அண்ணல் தொருத்த
பொருளாத்தன் மன்றத்திற் புக்குத்—தெருளாரும்
நல்லன் தமையாய்ந்து நன்னறிவு பெற்றதிரு
சல்புடனே வாழ்க தழைத்த."

என்னும் வாழ்த்துப் பாடலையும் வழங்கினார்.

நண்பர்கள்

அறிஞர் பலர் இவருக்கு நண்பராக இருந்தனர். அவர் களுட் குறிப்பிடத் தக்கவர்கள் பொன்னம்பல சிவம், நிரு நீல கண்ட அடிகள், பண்டித சித. சாமாபண அடிகள், சிதம்பரம் பரஞ்சோதி யடிகள் முதலியோராவர். சுசுஉ-ஆம் ஆண்டுமுதல் எனக்கும் அறிமுகமாகி இதுவரை பல நன்மைகள் புரிந்திருந்தனர்.

பண்பு

இவருக்குச் சினம் உண்டாயதை யாரும் பார்த்த தில்லை. அப்படி யாரேனுஞ் சிறிது உண்டாயின், அதனைத் தமது உள்ளத்திலேயே மறைத்துவிடக் கூடிய பான்மை யமைந்தவர். எல்லோரிடமும் அன்பும் அருளும் உடையவர். தம்மால் இயன்ற உதவியைப் பிறருக்குச் செய்யச் சிறிதும் பின்வாங்கார்.

இறுதி

இத்தகைய குணநலன்களெல்லாம் இனிதமையப் பெற்ற இவர், சுசுஅ-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் உச-ஆம் நாள் தமது உடலுபாதியைவிட்டு வீடுபேற்றை யடைந்தார்.

அன்புங் அருளும் தலைநின்ற வப்தெலை
இன்புடனே வந்தித் தவர்சார்ந்து—முன்பார்த்த
முத்தரைச் தப்பலன்கொள் முன்னவனே! இப்பதிக
முத்திதனைப் பெற்றுயே முன்பு

உஅ. தொண்டைமான் முத்தையர்

தோற்றம்

புதுக்கோட்டை அரசர் மரபினராகிய இவர் பாண்டி வளநாட்டிலே திருநெல்வேலியிலே கி.ஆ.க-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இருபத்திரண்டாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சிதம்பரத் தொண்டைமான்.

கல்வி

பள்ளியில் வைக்கப்பட்ட இவர் தொடக்கப் படிப்பை நன்கு படித்தார். இவருடைய தகப்பனார் இவரை ஆங்கில உயர்தரப்படிப்பிற்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணினார். இவருக்கென ஒரிடம் கல்லிடைக் குறிச்சி சென்றது. தம் மூடைய பதினேட்டாவது அகவையில் காரைக்குடிக்குச் சென்று ஒரிடம் கல்லைக் கற்கத் தொடங்கினார். மூன்றாண்டுகள் இருந்து கற்றார். அங்கு நடந்த அரசினர் தேர்வில் தேறினார். பிறகு மூன்றாண்டுகள் சென்னையில் உள்ள ஒரிடம் கல்லூரியிற் படித்தார். தேர்வில் சிறந்த முறையில் தேறினார்.

வேலை

ஒரிடம் விடுத்து இவர் சிறந்த பயிற்சி பெற்றிருந்தமை உயர்ந்த பதவிகட்கும் போகவிட்டது. இராமநாதபுரத்தில் மதுரையில் ஒரிட ஆசிரியராகப் பணிபுரிந்தார். பிறகு சென்னைக்குச் சென்றுவிட்டார். இவருக்குத் திருச்சூர்,

சோபமுத்தார் முதலிய இடங்களில் வேலை கிடைத்தது. ஆயினும் இவர் அவ்வூர்களில் நிலைத்திருந்து வேலை பார்க்க வில்லை. முதலில் தென்னிந்திய ரயில்வேயில் அம்பா சமுத்திரத்தில் வேலை பார்த்தார். பிறகு இக்கல்லூரியில் உதவி ஒவிய ஆசிரியராக அமர்ந்தார். அதை பன்னிரண்டு முப்பதாண்டுகள் உழைத்தார். இவருடைய தந்தையார் தமிழ்மொழியில் சிறந்த புலமைபெற்றுத் திகழ்ந்தார். இவரும் ஓவ்வு நேரங்களிலெல்லாம் தமிழ் ஆங்கிலம் முதலியவைகளை கன்கு கற்று இருமொழிகளுஞ் செப்புன்கள் இயற்றத்தக்க நிலையை அடைந்தார்.

திருமணமும் குடும்ப வாழ்க்கையும்

இவருக்கு அகவை இருபத்தொன்றான காலத்தில் ஆஸ்டிச்சியம்மாள் என்னும் பெண்மணியைத் திருமணம் புரிந்தார். ஓராண்டுக்காலம் இல்லற வாழ்க்கையை இனிது நடத்திய அம் மனைவியார் இறைவன் திருவடிநீழலை யடைந்தார். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்னுந் தெய்வப் புலவர் திருவாக்கிற்கு இலக்காக இவர் தம் வாழ்க்கைத் துணைவி யிடத்துச் சிறந்த அன்பை வைத்திருந்தார். அம்மாற்குரி யாளை இழந்த இவர் உளம் பெரிதும் வருந்தியது. அவ் வருத்தத்தாற் கருத்திற் பல கவிதைகள் எழுந்தன. அவற் றில் வருவன காண்க.

"மண்ணைமர்ந்த வீடுகட்டும் சிறபருவத் திருந்தே
மங்கைநீ மனைவாளன் சாலனையே புற்றுப்
பண்ணைமர்ந்த தேனொலிக் கருவியா புனையும்
பாடலு னினையுமவர் பாவித்தே வளர்த்தார்
கண்ணைமர்ந்த காரிகையாய் கீயாலுப் சாறும்
காலையாய் உனைமணந்த களிப்புற்றிக் கிருந்தேன்
விண்ணைமர்ந்த பரம்பொருளுன் விதியெட்டைத் திறிக்க
விண்புகுந்தாய் காண்டு வீணிலை மாலே.

பன்னெடுநாள் வாழ்கவெனப் பெரியவெலாம் கண்ணைப்
பட்சருடன் மணிமுழவிற் பரிவாக ஆசி
சொன்னெடுநேர் சாம்பலைப்பெற்றனர்கம் மனிற்றோம்
சொற்படியே ஆகாத தொன்னைவினைப் பயனால்
பின்னெடுநாள் கிடைக்க ஆற்றாத பிரிந்தாய்
பித்தற்றான் பலம்பப் பெரியதனை அளித்த
என்னெடுநெஞ் சினிவிருக்கும் இவறலர்திருச் செயலை
என்னென்பேன் என்னென்பேன் ஏதுமறியேனே.

உடலுயிரும் பூமணமும் ஒன்றையொன்ற பிரிவுற்(று)
உலகியலில் காண்பதில்லா உண்மைபொய்க்கு மாறு
மிடலுறநின் னுளிருந்து கீடறைந்தாய் காலை
மிதமற்ற உடல்போலும் மிதித்தமலர் போலும்
விடலையெனத் திரிகின்றேன் நீயோவின் ணகரில்
விசையாட விளைகின்றாய் விருப்பமிது வானால்
கடலுலகில் காதலுரம் வைத்தபெருங் கருணைக்
கடவுணெண்ணம் எவ்வாறும் கணிக்குமியல் பிலனே.

மணக்கின்ற அந்நாளில் ஒருநாளும் உமையே
மறந்தறான் பிரிந்திருக்கேன் மறையோரே சாட்சி
பிணக்குறுநீர் கடந்தாலப் பிணக்கதனைக் காதல்
பெருகெழிற்சிக் குறிப்பாகப் பேணுவன்றான் என்றே
இணக்குறுற உரைத்தமொழி தனைமறந்திட் டென்னை
எக்குறுறச் செய்தெவணீ எமைமறந் தொளித்தாய்
குணக்குறுதல் சற்றிலையும் தேடலிலைக் கலறக்
கொண்டனையே சின்குறிப்புக் குறிக்குமியல் பிலனே."

இவைபோன்ற இரக்கற்பாக்கள் பாடி வருந்தினர். பிறகு இரண்டாவது திருமணம் புரிந்தார். இல்லற வாழ்க்கை நடத்தி இன்பம் துகர்ந்து வாழ்ந்திருந்தனர். அம் மனைவி யிடத்தில் மக்கள் பலர் தோன்றினர். சிறந்த அறிவாளி னாகத் திகழ்ந்து விளக்கும் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், தொ. மு. இரகுநாதன் ஆகியோர் இவ ருடைய அருமைப் புதல்வர்களே.

ஓவியத் திறன்

இவருடைய ஓவியத்திறன் ஒப்புயர்வற்றதாகச் சிறந்து திகழ்ந்தது. ஓவியம் வரைதலும் சிறந்த படம் பிடித்தலும் இவர் காலத்தில் திருவெல்வேலியில் இவரை சிறந்து விளக்கின. இவருடைய ஓவியப் படங்கள் பல ஊர் தனிலும் இப்பொழுதும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன. கைகூடக்-கூடும் தூண்டில் திருவெல்வேலி—திருச்செந்தூர்ப் புகைவண்டிப் பாதையைத் திறந்துவைப்பதற்கு அப்பொழுது கவர்னராக இருந்த வில்லிங்டன் சென்றார். அப்பொழுது அவர் கையில் வைத்துக்கொள்வதற்கு திகழ்ச்சிக் குறிப்பொன்றை இவர் ஓவியத்தில் வரைந்து கொடுத்தார். அவ் ஓவியத்தில் திருவெல்வேலியில் உள்ள கோயில், திருச்செந்தூர்க் கடற்கரை, மணல்மேடு முதலிய காட்சிகளையும் இவ்விரண்டு ஊர்களையும் பிணைத்துப் புகை வண்டி ஓடுதலையும் காட்டி வரைந்திருந்தார். இவ் ஓவியத்தைக் கையில்வாங்கிய கவர்னர் இவ்வளவு சுற்பகாலத்தில் முடிய ஓவியமாக் தாம் பார்க்கவேண்டுமென்ற விரும்பி பலமுறை அவரைவரவழைத்துப் பேசி மகிழ்ந்தார். அவ் ஓவியத்தைப் பற்றி அப்பொழுது திருவெல்வேலி மாவட்டத் தலைவராக விளங்கிய டேவிஸ்தரை யென்பவர் புகழ்ந்து கடிதம் எழுதினர். ஓவியத்தில் வல்லவரான இவர் புகைப்படம் பிடிப்பதை மிகச் சிறப்பாக இருக்கும்.

சமயம்

வை சமயத்தில் தோன்றிய இவர் எச் சமயத்தையும் அழுத்தமாகப் பற்றிக் கடைசி சமயம் இன்னதென்ற மற்றவர்களுக்குப் புலப்படுத்தவில்லை. உலகில் சிறந்த அறிவாளராகத் திகழ்ந்தோர் சம்மதமும் சம்மதம் என்ற உயர்ந்த நிலையைப் பின்பற்றியிருந்தார்கள். இவரும் அந் நிலையையே மேற்கொண்டிருந்தார்

சமூகத் தொண்டு

சமூக முன்னேற்றத்தின் பொருட்டும் இவர் உழைத்தார். அதன்பொருட்டுத் தொண்டைமான் என்னும் பத்திரிகையையும் சிறிதகாலம் நடத்தினர். சமூக முன்னேற்றத்திற்காக இவரோடு உழைத்தவர்கள், தென் காசி குருமூர்த்தித் தொண்டைமான், பாளையங்கோட்டை, மனோன்மணிபெருமாள் தொண்டைமான் முதலியோராவர்.

ஆங்கிலப் பாடல்கள்

இவர் ஆங்கிலக் கல்லூரிகளில் படித்து ஆங்கிலத்தில் தேர்ச்சிபெறவில்லையென்றாலும் ஆங்கிலத்தை நன்கு கற்றுச் செய்யுள் பாடும் திறம் அமையப் பெற்றிருந்தார்.

தமிழ்ப் பாடல்கள்

தமிழ் மொழியினிடத்திலே பேரார்வங்கொண்டிருந்த இவர் இராமலிங்க அடிகளின் அருட்பா, தேவாரம், திருவாசகம் முதலிய அருட் பாடல்களை நன்கு படித்து இன்புற்றதுடன் தாமும் தமிழ்ப் பாடல்கள் பலவற்றை இயற்றினர். புதுக்கோட்டை விசயரகுநாத தலைமைத் தொண்டைமானைக் காணச் சென்றபோது அவர்மீது கலம்பக அடிகள் அமைந்த மெய்க்கீர்த்தி என்னும் அகவற்பாவைப் பாடிக்கொண்டு சென்றார். இவர்க்கிராத தாகூர் எழுதிய ஒரு கவிதைக் கோவையை ஆறு பாடல்கள் மொழிபெயர்த்தார். இராசராம் மோகனர்மீது வாழ்த்துப் பாடல்கள் பாடினர்.

"கடல்புடை உதித்த காவிரி தனிலே
கவின்மிக விளக்குமிக் காட்டில்
உடல்பொரு ளாவி அனைத்தையும் பரக்கே
உதவிடும் உத்தம சீலர்

மிடல்பெறு மனத்தர் பலபல வினத்தர்
மேலினர் அவர்தமுள் விசேட
அடலுறு பெரியோன் சரசர மோகன்
அவனடி பரவுதும் மகிழ்ந்தே."

என்பது அவ் வாழ்த்துப் பாடல்களில் ஒன்று.

இயற்றிய நூல்கள்

திருவொற்றியூர்த் தியாகேசர் காதல், செல்லி சாபகர் குறம், அருள்கடன் விண்ணப்பம், தனி தீபக் கவிகள், ஆட்கொண்ட பதிகம், பகவத்கீதை அகவல், பிரமமுக்தம் முதலியன இவரால் இயற்றப் பெற்றன. பகவத்கீதை அகவல் மூன்று அத்தியாயக்கட்கே எழுதப்பட்டுள்ளது. தியானச் சிந்தனைகள், இந்தியச் சிற்பம் முதலியன இவருடைய உரைநடை நூல்கள்.

"தெருவதனில் என்னெனவொத்த சிறுமியரோ டன்று
சிரித்தமணல் வீடுகட்டித் திரியுமியல் பறிந்து
கருவதனில் உனைக்கலந்த கண்ணனை னென்று
கைபிடித்தார் செல்லூரகர்க் கடவுளர்கள் மாதே
பருவமுற்றம் அவர்வாலை எதிர்பார்த்து நின்றேன்
பாவிமத வேளுமெனைப் பகைத்துயிரை வதைத்தான்
திருமொழி சொல்வாரோ அன்றியெனைக் கலந்தே
திருத்திக்கை வைப்பாரோ தேர்ந்தனைகின் குறமே."

என்பது செல்லி சாபகர் குறத்தில் ஒரு பாட்டு.

இறுதி

தன்னதமகற் காற்று நன்றிகனே. நன்னூற்றி முடித்த இவர் ககக-ஆம் ஆண்டு குன் திங்கள் இருபத்தாறும் நாள் தமது ஐம்பத்தெட்டாவது அகவையில் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

உ. நாராயணசாமிப் பிள்ளை - வே. கி.

தோற்றம்

தொண்டைவள நாட்டிலே இராய வேலூரிலே பிருந்த யாதவகுல திலகராகிய திருட்டிணசாமிப் பிள்ளை என்பவ ருக்கு இவர் புதல்வராகத் தோன்றினர். இவர் தோன்றிய காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

கல்வி

கல்வி கற்கத்தொடங்கிய இவர் மிகுமுயற்சியோடு புலமைக் கல்விகற்றுச் சிறந்த தமிழறிஞராஞர். பிறகு சென்னைமா நகரையடைந்து இராயபுரத்தில் வசிக்கத் தொடங்கினர். அதனல் இவருடைய பெயர் "இராயபுரம் வித்துவான்" என்று வழங்கலாயிற்று.

சமகாலப் புலவர்கள்

இவர் காலத்தில் தமிழ்நாட்டில் சுதரிசன தாசர், தஞ்சை சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், சிவக்குனம் பாலகவி தெய்வநாயகப்பெருமான், சித்தமத் கவிராயர், சதாவதானம் வால சுப்பிரமணிய ஐயர், பெக்கலூர், சு. இராமசாமிப் புலவர், அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார், திருக்கழுக்குன்றம் சுந்தரசாமி முதலியார், தஞ்சை வைரக்கண் வேலாயுதப் புலவர், புதுவை சடாட்சர தீக்ஷிதர், இராயபுரம் சௌரிராய முதலியார், பு. த. செல்லப்ப முதலியார், து. அண்ணுமலை முதலியார், சதுர் சச்சிதானந்த அடிகள், மதுரகவி கண்ணியப்ப பிள்ளை, வேலாயுத நாடார் என்போர் சிறந்த புலவர்களாக விளங்கியிருந்தனர். இவர் களில் பலர் இயற்றிய தலுக்கு இவர் சிறப்புப்பாயிரமும் வழங்கியுள்ளார்.

தனிப் பாடல்கள்

புலவர்களாக விளக்குவோர் தனிப் பாடல்கள் பல இயற்றுவது வழக்கம். இவரும் அவ்வாறே தனிப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். திருமண வாழ்த்துக்கள் இரங்கற் பாக்கள் முதலியனவும் இயற்றியுள்ளார். வெண்மணி தம்பி பிள்ளை என்பவர் மீது,

"சுத்தாகா யம்பழனம் வனசஞ் குவை
சோறவேய் விளக்குசை கசப்பா றத்தை
ஒத்தசெழி லிலைபதத்துப் பதமொவ் வொன்றும்
உறின்மூலக் காரப்ப ணெங்கை மூத்தால்
லைத்தலபி தானவள்ளல் கின்னைப் பாட
வல்லனல்லை லுயிரூகின் மாட்டெற் குள்ள
சித்தஞ்செய் வித்ததுகண் பிரியா வன்பு
செல்குலாய் கலணபுட்பம் பெய்கு வாயே."

என்னும் சுடுவெழுத்தலங்காரம் முதலிய பாடல்கள் பாடியுள்ளார்.

சுத்தாகாயம் - தூவெளி	[redacted] - காம்பு
பழனம் - பண்ணை	விளக்கு - நீ பிலை
வனசம் - தாமரை	கசகசப்பால் - அபின்
குவை - கணிகை	தத்தை - கின்னை
சோற - சாதம்	செழிவு - மிகவு

இப் பத்து மொழிகளின் சுடுவெழுத்தைக் கூட்டினால் வெண்மணிதம்பி பிள்ளை என்று வருதலைக் காண்க. இவ்வாறே சாரபணம் பிள்ளை என்பவர் மீது சுடுவெழுத் தலங்காரம் அமைத்துக் கலிவொன்று பாடினர்.

"பத்தலினி பெரியசபை தூற வானி
பகதவனம் வடிவெனவெண் பதமெட் டுள்ளே
மத்திமத்தின் சுடுவெழுத்தால் பெயர்ப வடைத்தம்
மாண்பிணக்கே அமைந்தபுகழ் மலிவாய்ச் செய்ய

எத்திசையும் புகழ்சென்னி யம்பாகத் தத்து
இணையில்லாகர் அவதரித்த இனிய சோர்
உத்தமனே இதுகவிதை உள்ளத்தா னாய்ந்தென்
உரியதிருக் கருணைவெள்ளம் பெருக மாதோ."

என்பது அக்கனி.

பத்தி - தசம்,	வாணி - அம்பு,
கிளி - சுகம்,	பசு - கபிலை,
பெரியசபை - மாசாது,	தவளம் - வெண்மை,
நாறு - சதம்,	வயல் - வீரை.

இச் சொற்களின் கடுவெழுத்துக்களைச் சேர்த்தால் சகாராதம் பிள்ளை என்று வருதலைக் காண்க. இவருடைய தனிப்பாடல்கள் ஒன்றாகத் திரட்டப்பட்டுப் புத்தக வடிவில் வெளிவந்துள்ளன. அதனைப் பாராட்டித் தஞ்சை சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், கோமளபுரம் இராசகோபால பிள்ளை, காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு, திருமயிலை சண்முகம் பிள்ளை, காஞ்சிபுரம் சபாபதி முதலியார், திருவாவடுதுறை கடராசப் பிள்ளை, வேங்கடாசல ஆச்சாரி, அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார், அ. முனிசாமி முதலியார், பு. த. செய்யப்ப முதலியார், சின்னப்பாவு முதலியார், குளப்பாக்கம் கதிர்வேல் நாயகர், யாழ்ப்பாணத்து மாணிப்பாய் ஆ. முத்துக்கம்பிப் பிள்ளை, உருத்திரகோடிப் பிள்ளை, சடாட்சர ஆரியர், இராயபுரம் சொக்கலிங்கம் பிள்ளை, தேவாதூர் முருகேச உபாத்தியாயர், திருக்கழுக்குன்றம் கந்தசாமி முதலியார், க. திருவேங்கட நாயுடு முதலியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

புகழ்ப் பாமாலை

இராயபுரம் சிவக்கொழுந்து வ. சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் இவர்மீது 'புகழ்ப் பாமாலை' என்னும் நூலும் இயற்றியுள்ளார்.

"சோருஞ் செந்தமிழின் செய்யுட் டொறையனைத்தும்
ஏரார மால்கிருட்டிணன் சன்றமைப்—போராரும்
காசா யணசாமி காவலனைப் போலெவர்கள்
பாசா யணஞ்செய் பவர்.

மாவீர சோழியமும் வண்மைதரு கற்குறளும்
மாவீர மாபுணர்த்து மற்றோர்க்கும்—தாசேர்த்து
சற்றிலைசயுங் கேத்திகொளும் காசா யணசாமிப்
பார்த்திபற்கு.சோர் பகர்."

என்பன அம் மாலையில் இரண்டு செய்யுட்கள்.

மாணவர்கள்

சிறந்த அறிஞராக விளங்கிய இவரிடம் பலபேர் தமிழ் கற்றுச் சிறந்த புலவர்களாக விளங்கியிருந்தனர்.

இயற்றிய நூல்கள்

க. திருவாக்கப் பதிகம்
உ. அருணாசலேசர் பதிகம்
ஈ. தேனூர்மொழியம்மை பஞ்சரத்தினம்
ச. ஐயனார் பஞ்சரத்தினம்
ஞ. திரௌபதையம்மை பஞ்சரத்தினம்
ங. திருக்கச்சிப் பேரருளாளர் மாலை
எ. திருக்கச்சி வரதராந்தாதி
அ. சயவரதர் சதகம்
க. சரசுவதி தோத்திரம்
கo. இலக்குமி பதிகம்
கக. சர்வசமய சமரச தோத்திரம்
கஉ. மன்மதன் சரித்திரக் கண்ணி
கஈ. இசைக்கவி சத்திரசதகம்
கஞ. பஞ்சரத்தினப் புகழ்மாலை

இறுதி

கஅஎ-ஆம் ஆண்டுவரை வாழ்ந்திருந்த இவர் காலமான நாள் முதலியன விளங்கவில்லை.

தென்னட்டுப்
பழங்கதைகள்

ஆசிரியர்: சு. அ. இராமசாமிப் புலவர்

[ஆறு பகுதிகள்: தனித்தனி விலை ரூ. 5-00]

தென்னட்டில் பண்டைக் காலத்தில் வழங்கிவந்த கதைகள் பல. அவை கற்பனை நயம் செறிந்தனவாய், கேட்போருக்கு இன்பம் மூட்டுவனவாய், பொழுதுபோக்குக்கு ஏற்ற கதைகளாய்த் திகழ்ந்தன. இடைக்காலத்தில், புதுக்கதைகள் பல தோன்றியதால் பழங் கதைச் சுவையினை மக்கள் மறந்தனர்— அவற்றின் ஒளி மங்கின. அவற்றை மீண்டும் புதுப்பித்து மக்களிடையே பரவச்செய்மின், மக்கள் பழமை இன்பத்தை மீண்டும் துய்க்க வாய்ப்பேற்படும் எனக் கருதி திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களைக் கொண்டு செப்பம்செய்து, இனிய எளிய தமிழில் இக்கதைகளை வெளியிட்டுள்ளோம். இவை ஆறு பகுதிகளாய் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் படித்தின்புறத்தக்கது.

கழக வெளியீடு : கக அ

தமிழ்ப் புலவர் வரிசை

[இருபத்தோராம் புத்தகம்]

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Jan., 1959.

THAMIZH PULAVAR VARISAI—XXI

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப்புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தக்கலமின்மை, தாய்மொழிப்பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடாஉழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றனர்.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவதற்கும், காட்டுக்கும், மொழிக்கும் செய்யும் கல்தொண்டாகும் எனக் கருதித் தமிழ்ப் புலவர் வரிசையில் இதுகாறும் இருபது நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல் இவ்வரிசையில் இருபத்தோராம் புத்தகம் ஆகும்.

இதன்கண் சம்பந்த சாஸ்திரியார் முதல் கோவைசையர் சி.— ஈறாக உரு புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. இந்நூலின் இறுதியில் பதினோ முதல் இருபத்தொன்றாவரை உள்ள ஆறு புத்தகங்களில் வெளிவந்துள்ள புலவர் பெருமக்களின் பெயர் அகர வரிசையும் சேர்க்கப்பட்டுள்ளது. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித்தந்த தீரு. கூ. அ. இராமசாமிப் புலவர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகும்.

இதனையும் முதல் இருபது புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

தமிழ்ப்புலவர் வரிசை என்னும் பெயரோடு தமிழ்ப்புலவர்களின் வாலாற்றை எழுதத்தொடங்கியதைக் குறித்துத் தமிழ்ப்புலவர் வரிசை பதிகூன்றாம் புத்தகத்தின் முன்னுரையில் விளக்கமாக எழுதியிருக்கிறேன்.

ஒன்று முதல் பதினைந்து புத்தகங்களில் முன்நூற்றெண்பது புலவர் பெருமக்களின் வாலாறுகள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதப்பெற்று வெளிவந்தன. மேற்படி வாலாற்று வரிசைக்குத் தமிழ் உலகில் வரவேற்பும் பாராட்டும் உள்வாதலை உணர்ந்து மேலும் அம் முயற்சியில் ஈடுபட்டேன். இம் முயற்சியில் ஓரளவு வெற்றிகிடைத்ததென்றே சொல்லவேண்டும். கண்பர், திரு. பச்சையப்பன் அவர்கள் பல வாலாற்றுக் குறிப்புக்கள் தந்தனர். கோவைக்கிழார் திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் கொங்குப் புலவர் பலருடைய வாலாற்றுக் குறிப்புக்கள் வழங்கினர்கள். பேரூர் சாந்தலிங்க அடிகளாரின் மடத்து நூல் நிலையம், மயிலம் சிவஞான பாலைய அடிகள் தமிழ்க் கல்லூரி நூல் நிலையம், பாகனேரி தனலெவசிய இந்துஞர் தமிழ்ச்சங்க நூல் நிலையம் முதலியவைகளில் இருந்து பல வாலாறுகள் கிடைத்தன. இவ்வாறு கிடைத்த வாலாறுகளெல்லாம், கசு, கள, கஅ, கக, உ0, உக என்னும். ஆறு புத்தகங்களாக வெளியிட்டுள்ளோம். இடையே காலமான புலவர்களும் இவ்வரிசையில் இடம்பெற்றுள்ளனர்.

ஆசிரத்திற்கு மேற்பட்ட புலவர்களின் பெயர்களும் குறிப்புக்களும் அவர்கள் இயற்றிய நூல் விளக்கங்களும் நூலின் பாடல்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. அவை, "தமிழ்ப்புலவர் அகராவரிசை" என்னும் பெயரோடு விரைவில் வெளிவரும்.

பதினொரும் புத்தகத்தில் சக புலவர் பெருமக்களின் வரலாறுகளும், பதினெழாம் புத்தகத்தில் கக புலவர் பெருமக்களின் வரலாறுகளும், பதினெட்டாவது புத்தகத்தில் கக புலவர் பெருமக்களின் வரலாறுகளும், பத்தொன்பதாவது புத்தகத்தில் உசு புலவர் பெருமக்களின் வரலாறுகளும், இருபதாவது புத்தகத்தில் உக புலவர் பெருமக்களின் வரலாறுகளும், இருபத்தொன்றுவது புத்தகத்தில் உஞ புலவர் பெருமக்களின் வரலாறுகளுமாகக் கூடுதல் கஅஞ புலவர் பெருமக்களின் வரலாறுகள் ஆறு புத்தகங்களிலும் இடம்பெற்றுள்ளன. இவ் ஆறு புத்தகப் புலவர்களின் பெயர்களே இறுதியில் உள்ள அகராவரிசையில் காணலாகும். ஒன்று முதல் இருபத்தொரு புத்தகங்களிலும் இடம்பெற்றுள்ள புலவர்கள் ஐந்நூற்று அறுபத்தைந்து பேர்களாவர்.

வரலாறுகள் தேடிய காலங்களில் முன் வெளிவந்த புலவர்களைப்பற்றிப் பல செய்திகள் தெரிந்தன. அச் செய்திகள் அவ்வவ் வரலாறுகளிற் சேர்க்கப் பட்டுள்ளன. அவை மறுபதிப்பில் வெளிவரும்.

வெளிவந்துள்ள புலவர்களின் வரலாற்றிற்குச் சரியான விளக்கம் தெரிந்தவர்கள் எழுதியனுப்புவார்களாயின் மறுபதிப்பிற் சேர்த்து வெளியிடப்பெறும்.

இவ் வரிசையில் இனிமேல் நூல்கள் வருதல் வரலாறு கிடைப்பதைப் பொறுத்துள்ளது. இவ் வரலாற்று முயற்சி இவ் வளவிலேனும் வெற்றிபெற அருளிய இறைவன் திருவடிக்கு வணக்கஞ் செலுத்துகிறேன். இத்துறையில் உள்ளஞ் செலுத்தி எனக்கு ஊக்கந் தந்து இவ்வளவு புலவர்களின் வரலாற்றை உலகிற்கு வெளிப்படுத்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சிப் பொறுப்பாளர் திருமிகு. வ. சுப்பையா பிள்ளை யவர்கட்குத் தமிழ் உலகம் நன்றி செலுத்துங் கடமையுடையதென்பதற்கு எட்டுணையும் ஐயமின்று.

பைந்தமிழ்ப்பணிகள்,
கருப்பக்கிளர்,
(தஞ்சைமாவட்டம்)
22-1-1959.

கூ. அ. இராமசாமிப் புலவர்.

உள்ளுறை

			பக்கம்
க.	சம்பந்த சரணலயர்	...	1
உ.	திருவாக்கத் தருதனர்	...	5
க.	வெங்கடாசலசாரியர்	...	9
ச.	பொன்னரிசுக் கலியாண சுந்தரன்	...	50
ஞ.	திருட்டிணமாச்சாரியார்	....	56
க.	இராகோபாலப் புலவர்	...	59
எ.	காசாயணசாமிப் புலவர் - உ.	...	62
அ.	கன்னையப்பப் புலவர் - அ.	...	67
க.	காளியண்ண பின்னை	...	75
கO.	அறிவானந்த அடிகள்	...	77
கக.	கன்னையப்பப் புலவர்	...	79
கஉ.	தங்கமுத்துப் புலவர்	...	82
கக.	முத்துக்குமார புலவர்	...	83
கச.	சுவரிப் புலவர்	...	86
கஞ.	தெய்வசிகாமணிப் புலவர்	...	88
கக.	வெங்கடாசல ஐயங்கார்	...	91
கஎ.	சரவண தேசிகர்	...	93
கஅ.	சிவபோக அடிகள்	...	94
கக.	சாத இராசன சற்குரு	...	102
உO.	சுப்பிரமணிய ஐயர்—தஞ்சை	...	107
உக.	திருமலை சன்னைபா கவுடர்	...	113
உஉ.	பஞ்சாசரி அடிகள்	...	116
உக.	கனகசபாபதி ஐயர்	...	126
உச.	உ. ஸ. சாமிநாத பின்னை	...	129
உஞ.	எனையது.	...	133

தமிழ்ப் புலவர் வரிசை

[இருபத்தோராம் புத்தகம்]

5. சம்பந்த சாஸ்திரியார்

தோற்றம்

சைவசமயாசிரியர்கள் காலவர்களில் ஒருவராகிய திருஞான சம்பந்தப் பிள்ளையாருக்கு இவர் மாமனர் என்று சொல்லப் பெறுகிறார். இவர் திருஞானசம்பந்தருடன் வதிந்து அவரைப் பாதுகாத்துக் கொண்டிருந்ததுடன், பிள்ளையார் செல்லும்பதிகள் தோறும் உடன்சென்று அவர் இயற்றுந் தேவாரப் பதிகங்களை உடனுக்குடன் எழுதிப் பாதுகாக்கும் பொறுப்பும் இவருக்கு உரியதாக இருந்தது. இவர் இலக்கண இலக்கியப் பரிச்சயமும் வல்லவராகையால் நன்றாக எழுதவும் வல்லவர்.

புத்தர்களை வெல்லுதல்

திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டிற்குச் சென்று சமணர்களை வென்று சைவசமயத்தை அங்கு நிலைநிறுத்தி விட்டுப் பாண்டிநாட்டைக் கடந்து பல சிவப்பதிகளையும் வணங்கிக்கொண்டு திரும்பினர். புத்தர்களுக்கிடமான போதிமங்கை என்னும் ஊர் ஒருங்கியது. பிள்ளையாருடைய அடியார்கள் கடலோசையைப்போல் சிவ சிவ முழக்கஞ் செய்தார்கள். சங்கு முதலிய ஒலிக் கருவிகள் முழங்கின. "பரசமய கோளரி வந்தார். பரசமய கோளரி வந்தார்" என்று யாண்டும் பேரொலி எழும்பியது. இதனைக்

கேட்டுப் புத்தநந்தி மிகுந்த சினங்கொண்டான். "என்னை வாதில் வென்ற பிறகல்லவோ வெற்றிச் சின்னத்தை முழக்க வேண்டும்?" என்று கூறித் தடுத்தான். பின்னையாருடைய உடன்பாட்டைப் பெற்றுச் சம்பந்த சாணலையாகிய இவர்,

"புத்தச் சமண்கழுக் கையர் பொய்ஞானச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
மித்தை நீறணி யார்வி னோப்பலைக்(கு)
அத்தி மாலை அஞ்செ ழுத்துமே."

என்னும் திருப்பாடலைப் பாடினர். மேலும் "இப்புத்த னுடைய தலை உருண்டு விழுமாறு இடி இடிக்கக் கடவது" என்று சாப மொழியும் கூறினர். அவ்வளவில் இடியொன்று வீழ்ந்தது. அதனால் புத்தனுடைய உடலும் தலையும் வேறுயின. அவன் நிலத்திலே வீழ்ந்து புரண்டான். இதனைக் கண்ட புத்தர் கூட்டம் அஞ்சியோடியது. இச் செய்தியைப் பெரியபுராணம்,

"அருமறைச்சொற் றிருப்பதிகம் எழுத மன்பர்
ஆடையை பின்னையார் திருவாக் காலே
உருமிடித்த வீழப்புத்தன் உத்த மாங்கம்
உருண்டுவீழ் தெனப்பொரு உரைமுன் விட்டார்."

"ஏயர்த்தார் சைவமெறி ஆணை உய்க்க
எதிர்விலக்கும் இடையூற்றை எறிந்து சீக்கும்
மாறில்வலி மந்திரமாம் அசனி போல
வாய்மையுரைத் திருத்தொண்டர் வாக்கி னாலே
வேதமொழிப் பொருளேற்பான் வந்த புத்தன்
மேனியையும் தலையினையும் வெவ்வே றாகக்
கோபட தரிகிடப் புத்தர் கூட்டம்
குலைந்தோடி வீழ்ந்தவெருக் கொண்ட தன்றே"

என்று கூறுகின்றது. அஞ்சிக் குலைந்தோடிய புத்தர்கள் பிறகு ஒருங்கு கூடினர்கள். "இச் செய்கை வஞ்சனையோ அல்லது அவர்களுடைய சைவசமயப் பெருமையோ"

என்று சொல்லி மருண்டார்கள். "மந்திர வாதம் இல் லாமல் சொற்போர் செய்வதற்கு வாருங்கள்" என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். சாரி புத்தன் என்பவனைத் தங்களுக்குத் தலைவனாகக் கொண்டு சொற்போர் செய்ய வந்தார்கள். திருஞானசம்பந்தப் பிள்ளையார் "கல்லது" என்று கூறி ஓரிடத்தில் அமர்ந்தருளினார். சம்பந்த சாணலயர் திருஞானசம்பந்தருடன் உடன்பாடு பெற்றுக் கொண்டு அவனோடு சொற்போர் செய்யத் தொடங்கினர். இருவருந் தத்தஞ் சமய உண்மைகளைக் கூறி நீண்டநேரம் சமயப் போர் நிகழ்த்தினர். இறுதியிற் புத்தர்கள் தோற் றனர். திருஞானசம்பந்தர் சைவசமயமே சிறந்த சமயம் என்று புத்தர்கட்கு அறிவுரை கூறி அவர்களைச் சைவர்க ளாக்கித் திருநீறணியச் செய்தனர். இவ்வுண்மையைப் பெரிய புராணம்,

"வாதமா லெனறின்றித் தோற்றான் புத்தன்
மற்றவனே வென்றருளிப் புகலி மன்னர்
பாதமலர் மலைபணிந்தார் அன்பர் தங்கள்
பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார்."

"அன்றவர்க்குக் கவுணியர்கோன் கருணை சோக்கம்
அனைதலிலுல் அறிவின்மை அகன்று நீங்கி
முன்றொழுத விழுத்தொழுத்த சைவ ராகுர்
முகைமலர்மா சியின்வெண்ணம் பொழிந்த தெங்கும்
சின்றனவுஞ் சிரிப்பனவுஞ் சைவ மேயாம்
நிலைமையவர்க் கருள்செய்த சண்டை வேந்தர்
சென்றவெ லுப்பதிகள் பணிய வேண்டித்
திருக்கடவூர் அதன்மருங்கு சேர வந்தார்."

என்று மூவாறியிடுகின்றது.

நூல் இயற்றுதல்

திருஞானசம்பந்தரோடு இவ்வாறு உடன் வசித்திருந்த இவர் சீகாழியில் தங்கியிருந்தபோது அடியவர் பலர்

இவரைப் பணிந்து, "வேதசிவாகமங்களின் தத்துவப் பொருள் வடமொழி வல்லார்க்கேயன்றி மற்றையோர்க்கு எளிதிற் புலப்படமாட்டா தாகையால் தத்துவங்களைத் தமிழில் விளக்கி ஒரு நூலைச் செய்தருள வேண்டு"மென்று வேண்டிக்கொண்டார்கள். இவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினர். வேதசிவாகமங்களில் இருந்து பதி பசு பாசத் தன்மைகளைத் திரட்டித், "தத்துவ விளக்கம்" என்னும் பெயரினால் ஒரு நூலை இயற்றினர். ஐம்பத்தொரு பாடல்களால் அமைந்த அந் நூல் கலித் துறையால் ஆயது.

"எய்தும் பொருளொரு மூன்று பதிபசு பாசமென்றே
மெய்தந்த ஆகமங் கூறு மவற்றினுள் வெங்குருவாழ்
வைதந்து கண்டன் பதிபசு என்ப தறுக்கண் மற்றுக்
கைதந்த பாசங்க ளாணவ மாயையுங் கன்மமுமே."

என்பது நூலிற் பத்தாவது பாட்டு.

இறுதி

திருஞானசம்பந்தப் பிள்ளையோடொடு உடனுறைந்த இவர், அவர் ஆச்சாபுரம் என்னும் திருநல்லூர்ப் பெரு மணத்திற் ரேன்றிய சோதியிற் கலந்தபோது தாமுங் கலந்தார்.

காலம்

திருஞானசம்பந்தர் காலத்தில் இருந்தவர் இவர். எனவே இவருடைய காலம் திருஞானசம்பந்தருடைய காலமென்று பெறப்படும்.

தத்துவப்பிரகாசம்

வடமொழி தென்மொழியில் வல்ல போசராசன் இத் தத்துவ விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டு ஆரியமிருந்த

சுலோகத்தினால் தத்துவப் பிரகாசம் என்னும் வடமொழி நூலை இயற்றினர்.

மேற்கோள்

இவரியற்றிய தத்துவ விளக்க நூலிற் காணப்படுஞ் சில செய்யுட்கள் மற்ற ஞானசம்பந்த தேசிகராலும், சிரம்ப வழகிய தேசிகராலும் தனித்தனி இயற்றப்பட்ட சிவஞான சித்தியார் உரைகளினும், மதுரைச் சிவப்பிரகாசர் செய்த சிவப்பிரகாச உரையினும் மேற்கோளாகஎடுத்துக் காட்டப் பட்டுள்ளன.

உரை

இத் தத்துவ விளக்க நூலுக்குக் காசி வாசி செந்தி னாதையர் ஓர் அழகிய விரிவுரை எழுதி வெளிப்படுத்தியுள் ளார். அவ்வுரையில் தத்துவ விளக்கச் செய்யுளுக்கு மூலமாக நின்ற வேதாகம புராணப் பிரமாணங்களையும், அவற்றிற்கு இன்றியமையாத வேண்டற்பாலனவற்றையும் வேண்டுமிடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.

---

2. திருவாங்கத்தழுதனார்

தோற்றம்

சோழவள நாட்டிலே திருவாங்கத்திலே இவர் தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் அணி யரங்கத்தழுதனர். இவருடைய குடி மூங்கிற்குடி.

கல்வி

கல்வி கேள்விகளிற் சிறந்து வைணவ சமய நூல்களே யெல்லாம் இவர் நன்கு கற்றுத் திருவரங்கம் பெரிய கோயிலில் ஆசானியராய் இருந்தார். உடையவர் என்னும்

இராமாநுசரை மதியாமல் இவர் தம்முடைய விருப்பப் படியே காரியங்களை நடத்திக்கொண்டிருந்தார். 'பெரிய நம்பி' என்ற இவருக்குச் சிறப்புப் பெயரும் வழங்கிக் கொண்டிருந்தது.

அரங்கன் திருவருள்

இவர் இராமாநுசரை மதியாமல் காரியங்களை நடத்திக் கொண்டிருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. எவ்வாறேனும் இவரைத் திருவரங்கத் திருப்பதியினின்றும் வெளியேற்றிவிட வேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருந்தார். பெரிய பெருமாளான திருவரங்கர் ஒருநாள் இராமாநுசருடைய கனவிலே தோன்றிப், "பெரியகோயில் நம்பி (திருவரங்கத்தமுதனார்) வெகுகாலமாக நம்மையே நம்பிக் கொண்டிருக்கிறார். அவரை வெளியேற்ற முயல்வது நல்லதன்று," என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆசிரியரும் மாணவரும்

இராமாநுசர் கண்விழித்தெழுந்தார். தம்முடைய தலைமை மாணவராகிய கூரத்தாழ்வானை யழைத்துப், "பெருமாளுக்கு நம் பகைவனான பெரியநம்பி இவ்விடம் இருப்பதே திருவுள்ளமாக இருக்கிறது. ஆகவே நமக்கு இவ்விடத்தில் வேலையொன்றும் இல்லை. நாம் காஞ்சிபுரத்திற்குச் செல்வோம்" என்று கூறினர். அதற்குக் கூரத் தாழ்வார், "பெருமாளுக்கு அவ்வாறு திருவுள்ளமிருந்தால் பெரிய நம்பியை "அடியவராக்கியருளுவார்" என்று கூறினர். அப்படியானால் அவரை நம் வழிப்படுத்தும் பார்ப்போம்," என்று திருவாய் மலர்ந்தருளினர். கூரத் தாழ்வார் காளைடைவில் அழுதனரை வசப்படுத்தி இராமாநுசருக்கு அடியவராக்கினர். இராமாநுசரும் திருவரங்கத் தமுதனரும் பிணக்கந் தீர்ந்து இணக்கமானார்கள். இவ்

விண்ணக்கம் காளடைவில் முதிர்ந்து இருவரும் மிக வேண்டி யவர்களாய் ஒன்றுபட்டிருந்தார்கள். அமுதனார் தமது கடமைகளை யெல்லாம் கூரத்தாழ்வானிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கி நின்றார்.

சிறப்புக்கள்

இவ்வாறு இவர் கோயில் காரியங்களை யெல்லாம் கூரத் தாழ்வானிடம் கொடுத்துவிட்டுத் தாம் கோயிலில் தொடர்ச் பில்லாமல் ஒதுங்கி நிற்கவே இராமாநுசர் இவரிடத்தில் இரக்கங்கொண்டார். புலவரான திருவரங்கத்தமுதனார் இவ்வாறு ஒழிந்திருக்கலாகாது என்று எண்ணினார். பெருமாள் முன்னிலையில் பிரபந்தங்களை இசையுடன் பாடும் பிள்ளை திருவரங்கப் பெருமாளரையரைக் கூப்பிட்டு, "இன்று முதலாக இயற்பாவை நீங்கள் சேவிக்கவேண்டாம். இனி அமுதனாரே சேவிக்கவேண்டும்" என்று ஏற்படுத்தி அமுதனருக்கும் அவ்வாறே கட்டளையிட்டருளினர். அது முதல் இயற்பா சேவிக்கும் நாளில் அரையருக்குச் செல்லும் மரியாதை வரிசையெல்லாம் அமுதனருக்குச் செய்ய ஏற்படுத்தி, இப்பாவைச் சேவித்துச் சாற்றின பின்பு அரையருக்கு நடப்பதைப்போல வரிசைகளுடன் வீட்டிலே விடுவித்தருளும்படி இராமாநுசர் ஏற்பாடு செய்தருளினர். அதுமுதல் இன்றும் அச் சிறப்பு அவருடைய வழிமுறை யினருக்கு நடைபெற்று வருகிறது.

இராமாநுச நூற்றந்தாதி

பிறகு திருவரங்கத்தமுதனார் இராமாநுசர் மீது கலித்துறையில் நூற்றந்தாதி ஒன்று பாடினர். அவ்வந்தாதி திருவரங்கர் திருமுன்பு அரங்கேறியது. இவ்வந்தாதி இராமாநுசரையும் ஆழ்வார்களையும் மற்றுஞ் சில ஆசாரி யார்களையும் புகழ்ந்து பாடப்பட்டது. சொற்சுவையும்

பொருட்பொலிவும் உடையது. இவருடைய வழிமுறையினர் திருவாங்கத்தில் வடக்குச் சித்திரை வீதியிற் குடியிருந்து கோயில் சிறப்புக்களையும் இன்றைக்கும் பெற்றுவருகிறார்கள். இராமாநுச நூற்றந்தாதியைப் புகழ்ந்து வேதப்பிரான் பட்டர் என்பவர்,

"இனியென் குறைமதி சென்பெரு மானும் திருவரங்கத்தில்
முனிதக்க நூற்றெட்டுச் சாலித் திரியென்று முன்பொருநாள்
கனிதக்க செஞ்சொற் கலித்துறை யந்தாதி பாடித்தந்தான்
புனிதன் திருவாய் கத்தரு நாமிய புண்ணியனே.

மூன்றே விநாயகரை மூக்கிற் குடியமுதன்
பொன்னம் கழற்கமலப் போதிரண்டும்—என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்திவனே தென்புலத்தார்க்
கென்றுங் கடவுளடியேன் யான்.

நயந்தரு பேரின்ப மெல்லாம் பழுதின்றி நண்ணினர்பால்
சயந்தரு சீர்த்தி இராமா நுசமுனி தாளிணைமேல்
உயர்ந்த குணத்தத் திருவாய் கத்தரு தோற்றும்நன்பால்
இயம்பும் கலித்துறை அந்தாதி தந்த இசைகெழுசீரே."

என்ற புகழ்ந்து பாடியிருக்கிறார்.

"பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாற னடிபணிந் தாய்ந்தவன் பல்கலையோர்
நாமன்ன வந்த இராமா நுசன்சர ணாரவிந்தம்
சேமன்னி வாழுகெஞ் சேசொன்று வோமவன் சேமக்கலே."

என்பது இராமாநுச நூற்றந்தாதியின் முதற்பாட்டு.

5. வேங்கடநாதாசாரியர்

தோற்றம்

தொண்டைவள நாட்டிலே காஞ்சிமா நகரிலே தூப்புள் என்னுமிடத்தில் இவர் சாஸ்வாகன சகாப்தம் 1333-க்குச் சரியான விபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் (கி. பி. 1412-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள்) திருவோண நாளிலே தோன்றினர். தந்தையார் பெயர் அநந்த சூரியார்; தாயார் பெயர் தோதாத்திரி அம்மையார். இவர் திருவேங்கடமுடையானுடைய திருவருளினாலே தோன்றிய படியால் வேங்கடநாதாசாரியர் என்று திருப்பெயர் வழங்கினர்கள்.

சடங்குகள்

குழந்தைக்கு நடைபெற வேண்டிய சடங்குகளெல்லாம் உரிய காலங்களில் நடைபெற்றன. மூன்றாந் திங்களில் கதிரவனைக் காட்டினர்கள். நான்காந் திங்களில் திங்களைக் காட்டினர்கள். ஆறாந் திங்களில் உணவூட்டினர்கள். முதலாண்டு நிறைந்ததும் ஆண்டு நிறைவு விழாக்கொண்டாடினர்கள். மூன்றாம் ஆண்டில் குடுமி வைத்தார்கள்.

கல்விப் பயிற்சி

ஐந்தாம் ஆண்டில் எழுத்தறிவித்தற்குப் பள்ளிக்கு அனுப்பினர்கள். தெய்வத் திருவருளால் உலகில் தோன்றிய வேங்கடநாதர் கல்வியை மிக எளிதாகவும் விரைவாகவும் கற்றுக்கொண்டிருந்தார். ஒருநாள் தந்தையார் தம்முடைய மைத்துனரைப் பெரியார் ஒருவருடைய விரிவுரைப் போவைக்கு அழைத்துக்கொண்டு சென்றார். விரிவுரை நிகழ்த்திக்கொண்டிருந்தவர் தாம் உரைத்த

ஒரு செய்தியைத் தவறுக உரைத்தார். எல்லோரும் தயங்கிச் சிறிது நேரம் அதைக் குறித்து எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்கள். சிறுவராக இருந்த வேங்கடராம சாஸ்திரியார் அவர்கள் ஐயுற்றுத் தயங்கிய செய்தியை விளக்க மாக எடுத்துரைத்தார். இவருடைய அறிவுக் கூர்மையைக் கண்டு எல்லோரும் மிகுந்த வியப்புந் திகைப்பும் அடைந் தார்கள். சிரிவுரை விகழ்த்தியவர் சிறுவரைப் புகழ்ந்து வாழ்த்துரை வழங்கிப் போற்றினர். பிறகு இவர் அரிஞர் பலரிடத்தில் வடமொழி நூல்களையும் தென்மொழி நூல் களையும் நன்கு கற்றுணர்ந்தார். ஏழாம் அகவையில் உபநயனஞ் செய்விக்கப்பட்டார், மறைநூற் பயிற்சி தொடங்கப்பட்டவுடனே முதல்நாள் கூறியதை மறுநாளுங் கூறத் தொடங்கவே இவர், "நேற்றுக் கூறியதை இன்றுந் திரும்பச் சொல்வானேன்? மேலே சொல்லியருள்க" என்று ஆசிரியரைப் பார்த்து வேண்டிக்கொண்டார். ஆசிரியர் இவரைப் பார்த்து, "நேற்றுக் கூறியதைச் சொல், பார்ப்போம்" என்றார். இவர் எத்தகைய தயரும் இல்லாமல் முதல் நாள் ஆசிரியர் கூறியவாறே கூறினர். ஒருமுறை உரைத்ததை மறுமுறை சொல்லுந் திறம்பெற்றுள்ள இவருடைய ஆற்றலைக் கண்ட ஆசிரியர், இவர் எதசந்தக் ரோகி—அஃதாவது ஒருபோது கேட்டதை மறுமுறை சொல்லுந் திறம்பெற்றவர்—என்று மிகுந்த களிப்படைந்தார். நான்கு மறைகளையும் ஆறு அங்கங்களை யும் மீமாஞ்சம், காவ்யம், வியாகரணம் முதலிய எல்லா நூல் களையும் மிகு விரைவாகக் கற்பித்தார். இவர் கற்கவேண்டிய எல்லாவற்றையும் நன்கு கற்று வடமொழி தென்மொழி ஆகிய இருமொழி நூல்களிலும் வல்லவராய்ச் சிறந்து எல்லாரும் போற்றி வழிபடத்தக்க உயர்ந்த நிலையிலே விளங்கியிருந்தார்.

மணமும் இல்வாழ்க்கையும்

இவர் திருமணப் பருவத்தையடையவே தாய்தந்தை யர் இவருக்குத் திருமணஞ் செய்து வைக்க எண்ணினர்கள். ஒத்த அழகும் அறிவும் வாய்ந்த ஓர் ஒண்டொடியைத் தேர்ந்தெடுத்துத் திருமணஞ் செய்து வைத்தார்கள். இல்லற தருமத்தை இவர் இனிது நடத்திக் கொண்டு காஞ்சிமா நகரில் தானே இனிது வாழ்ந்திருந்தார். சன் மாணவர் பலருக்குத் தாம் கற்றுணர்ந்த நூல்களெல்லாம் கற்பித்துக்கொண்டிருந்தார்.

திருவஹீந்திரபுரத்திற்குச் செல்லுதல்

திருவஹீந்திரபுரம் என்னும் வூர் காஞ்சி நகரத்திற்குத் தெற்கே எட்டுக்காத தொலையில் உள்ளது. இவர் அவ்வூருக் குச் சென்று அங்கு வாசஞ்செய்து தம் ஆசாரியர் தமக்குக் கற்பித்த கருடமந்திரம் பலித்தற்குக் கருடத் தியானஞ் செய்ய எண்ணினர். அவ்வாறே அப் பதிக்குச் சென்று அங்குள்ள கருடநதியில் நீராடி ஒளடதாத்திரி என்னும் மலையின் தாழ்வரையில் எழுந்தருளிய தேவநாதசாமியைப் பாடி அம் மலையின் முடியில் உள்ள அழகிய சிக்கர் திருமுன்பு உள்ள அரசமரத்தின் கீழில் இருந்தகொண்டு கருடத்தியானஞ் செய்துகொண்டிருந்தார். கருடன் இவர் முன்பு தோன்றினன். அபக்கிரீவ மறையை இவருக்கு உரைத்தருள் செய்துவிட்டு மறைந்தருளினன். அப்போது இவர் முதன் முதலாகக் கருடன்மீது வடமொழியில் ஐம்பது சுலோகங்களாக்கொண்ட 'கருடபஞ்சா சத்' என்னும் நூலைப் பாடினர்.

அபக்கிரீவ காட்சி

பிறகு கருடன் அருளிய அபக்கிரீவ மறையை உரைத் தகொண்டே அபக்கிரீவரை எண்ணினர். அவரும்

இவருக்குத் தொன்றிக் காட்சியளித்தார். அப்போது இவர் அபக்கிரீவர் மீது அபக்கிரீவ தோத்திரம் என்னும் தலை வடமொழியிற் பாடினர். அந்த இவருடைய இரண்டாவது தலமாகும். அபக்கிரீவருடைய அருளினால் இவர் எல்லாக் கலைப்நிலையும் இனிதடைந்தார். பிறகு தேவ நாயக சுவாமிமீது 'தேவநாயக பஞ்ச நதத்' என்னும் தமது மூன்றாவது நூல் பாடினர்.

நூல்கள் இயற்றல்

நூல் இயற்றும் பழக்கம் உண்டானவுடனே மேலும் நூல்களை இயற்றத் தொடங்கினர். வடமொழியில் அச்சுத சதகத் தோத்திரம் என்னும் நான்காவது வடமொழி நூலைப் பாடினர். தமிழ் மொழியிலும் நூல்கள் செய்யத் தொடங்கி, மும்மணிக் கோவை, சுவாத்தின மாலை, ஊசற்பா, பந்தற்பா, கழற்பா, அம்மானைப்பா, ஏசற்பா என்பனவற்றைப் பாடினர்.

சமயப் போர்

அயிந்தை நகரில் இவர் தங்கியிருந்தபோது பதினெண் சமயத்தவர்களும் வந்து தங்கள் தங்கள் சமயங்களே மிகவுஞ் சிறந்தனவென்று சொற்போரிட்டார்கள். அவருடைய சமயங்களையெல்லாம் இவர் கண்டித்துப் 'பரமத பங்கம்' என்னும் நூலை இயற்றினர். சக்கரவர்த்தித் திருமகன் மீது 'ரகுவீர கத்தியம்' என்னும் வடமொழி உரை நடை நூலையும் இயற்றினர். இந்த இராமாயண வரலாறு அமைந்தது. பிறகு கண்ணன்மீது கோபால விம்சதி என்னும் நூலைச் செய்தார். இந்நூலில் உள்ள பாடல்களாவும் கண்ணன் துதியாக அமைந்துள்ளன. கல்லான நெஞ்சும் கரைந்துருகும்படி இனிய சுவைப் பண்பமைந்துள்ளன.

அழுக்காறுற்றோர் செயல்

இவர் எல்லாக் கலைகளிலும் வல்லவராய் விளங்குதலைக் கண்டு சிலர் இவர்மீது அழுக்காறு கொண்டார்கள். எவ்வாறேனும் இவருடைய பெருமையைக் கெடுக்கவேண்டுமென்று நிட்டம் போட்டார்கள். கொத்தன் ஒருவனை அழைத்து இவரோடு போராடி வெற்றிகொள்ளுமாறு சில அறிவுரைகளைக் கூறி அனுப்பினர்கள். அக் கொத்தன் இவரிடம் வந்து, "ஐயரே! என்னுடன் சரியாக யாதொரு குறையுமின்றி ஒரு கிணறு கட்ட வல்லீரானால் நீர் எல்லாம் அறிந்தவரென்பது நகும். இன்றேல் நகாது." என்று கூறினான்.

கிணறு கட்டுதல்

கொத்தன் கூறிய உரைகளைக் கேட்ட இவர் அவனுடைய ஆணவத்தை அடக்கவேண்டும் என்று முடிவு கட்டினர். அவ்வாறே கட்டுவதாக ஒப்புக்கொண்டார். கொத்தனும் இவருமாகச் சேர்ந்து கிணற்றைக் கட்டத் தொடங்கினர்கள். இவர் ஒரு பாதியையும் கொத்தன் ஒரு பாதியையும் கட்டுவதென்று ஏற்பாடாயிற்று. கல்லை கற்களையெல்லாம் கொத்தனுக்குக் கொடுத்துவிட்டு தாம் சிறு சிறு கற்களை வைத்துக்கொண்டு கட்டத் தொடங்கினர். அவ்வாறு கட்டிவரும்போது இவர் கட்டிய பாதி கொத்தன் கட்டிய பாதியைவிட வட்டமாகவும் அழகாகவும் இருந்தது. இவர் எல்லாம் வல்லவர் என்பதைக் கொத்தன் எளிதில் உணர்ந்துகொண்டான். இவரை வணங்கித் தன்னுடைய பிழையைப் பொறுக்குமாறு வேண்டிக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கினான். இக் கிணறு இன்னாளிலும் திருவெங்கிரை புரத்தில் தனிமட்டமாகக் காணப்படுகிறதாகச் சொல்லுகிறார்கள்.

திருக்கோவலூர் செல்லுதல்

பிறகு இரண்டாவது முறையாகத் திருமால் பதிகட்குப் பயணஞ் செய்யத் தொடங்கினர். அவ்வூருக்கு வடமேற்கில் காத தொலைவில் உள்ள திருக் கோவலூருக்குச் சென்றார். திருக்கோவலூர்ப் பெருமான்மீது தேக வீகண்ணதி என்னும் வடமொழி துதிச் செய்தார். அவ்விடத்தில் சில காலம் தங்கியிருந்தார். பிறகு காஞ்சிக்குத் திரும்பினர்.

நூல்கள் இயற்றல்

காஞ்சியில் மாணவர் பலருக்கு நூல்கள் போதித்துக் கொண்டும் நூல்கள் இயற்றிக் கொண்டுமிருந்தார். வடமொழியில் 'வாதாரச பஞ்சா சத்' என்கிற தோத்திரத்தை இயற்றினர். தமிழில் "திருச்சின்ன மாலை, அடைக்கலப் பத்து, பன்னிருநாமப் பாட்டு, வைணவ தினசரி, அத்தி கிரிமகாத்மியம்" என்னும் நூல்களை இயற்றினர். வேங்கடேசனம்மான்மீது வடமொழியில் 'அட்டபு சாட்டகம்' என்னும் நூலைப் பாடினர். யதோக்தகாரி எம்பெருமான்மீது 'யதோக்தகாரித் துதி'யை இயற்றினர். காமாசிகா நரசிம்மர் மீது 'காமாசிகாட்டகத்துதி' பாடினர். தூப்புல் விளக் கொளிப் பெருமான்மீது, 'சரணாகதி தீபிகை' என்னுந் தோத்திரத்தையும், திருப்புட்குழி ரணபுங்கவ சுவாமிமீது 'பரமார்த்தத் துதி' என்னுந் தோத்திரத்தையும் பாடினர். அப்பொழுது திருப்புட் குழியில் பலரும் குளிர்காய்ச்சலால் வருந்தியது கண்டு சக்கர ஆழ்வார்மீது 'சுதரிசன அட்டகம்' பாடினர். படைக்கலங்களின் மீது 'சேட சாயுதத்துதி' பாடினர்.

திருமலைக்குச் செல்லுதல்

பிறகு திருமலைக்குச் செல்ல எண்ணினர். வழியில் உள்ள சோளசிங்கபுரம் போய்ச்சேர்ந்தார். அங்குக் கடிகா

சனத்தில் எழுந்தருளியிருக்கும் அழகிய சிங்கரைப் போற்றி வணங்கி 'கடிகாத் தறி' என்னுந் தொத்திரத்தைச் செய்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டார். வழியில் பொன்முகரி யாற்றில் சீராடி யட்டகண்ணைச் செய்தார். அஸ்மேன் மக்கைத் தரிசனை வணங்கினார். கோழத் திருப்பதிக் கோவிந்தராசனையும் போற்றி வழிபட்டு மலை யேறினார்; வேங்கடாசலபதி பெருமானை வணங்கிப் போற்றினார். 'தயாசதகம்' என்னும் வடமொழி நூலைப் பாடினார். இங்குச் சில காலந் தங்கியிருந்தார்.

நண்பர்கள்

பிறகு காசி முதலிய வட நாட்டுப் பதிகட்குப் பயணம் போக விரும்பினார். திருவேங்கட முடையானிடம் உடன் பாடு பெற்றுக்கொண்டு புறப்பட்டார். மாணவர் சிலரோடு தக்கபதினை யாற்றையடைந்தார். சீராடல் முதலியவை களை முடித்துக்கொண்டு மேலே செல்லத் தொடங்கினர். இவரோடு இளம்பருவத்தில் மாதவர் என்பவர் கூடப் படித்துக்கொண்டிருந்தார். அவர் துறவுபெற்றுக்கொண்டு விந்தியாசனிபர் என்னும் பெயரோடு தேச சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தார். புக்காபப் பட்டணம் என்னும் ஊரில் இருந்த பெருமான் கோயிலில் அந்த விந்தியாசனி யரும் இவரும் ஒருவரையொருவர் கண்டார்கள். நீண்ட நேரம் இருவரும் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

விந்தியாசனிபர் பேயோட்டுதல்

பிரமராட்சத ஒன்று புக்காபபுரத்தைப் பெண்ணைப் பிடித்துத் தொல்லைசெய்து கொண்டிருந்தது. அதனை எவராலும் ஓட்டமுடியவில்லை. இவ்விரண்டு பெரியார் களின் வரலைக் கேட்டறிந்த அரசன் உடனே இவர் களிடம் வந்தான்; இவர்களை வணங்கிப் போற்றினன்.

தன்னுடைய மகளைப் பிடித்திருக்கும் பிரம ராட்சசை ஓட்டியருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அதனை ஓட்டிவிட்டால் பெரும்பொருள் தருவதாகவும் சொன்னான். எம்பெருமான் இருக்கும்போது நாம் இக் காரியத்தில் ஈடுபடக்கூடாது என்று சாண்டி வேங்கட நாதராசனியர் தம்மால் முடியாதென்று மறுத்து விட்டார். இவருடைய கண்பர் துறவியாகவிருந்தும் பொருளிடத்தில் விருப்பங்கொண்டார். அவரிடம் மனவுறுதியில்லை. உடனே புறப்பட்டு அரண்மனைக்குச் சென்றார். அவ்வாசனுடைய மகளைப் பிடித்திருந்த பேயை ஓட்டினார். அரசனிடம் நன்கொடை பெற்றார். பிறகு விசய நகரத்தை அடைந்து அந்நாட்டு அரசனுக்கு அமைச்சராக அமர்ந்திருந்தார்.

காசிக்குப்போய் மீளுதல்

பிறகு வேங்கட நாதராசனியர் திருவாரூர், வடமதுரை, கோவர்த்தனம், திருநாவலனம், புட்கரம், நைமி சாரணியம், பதரிகாச்சிரமம், சாளக்கிராமம், திருவயோத்தி முதலிய பதிகளில் எழுந்தருளிய பெருமானைப் போற்றிப் பணிந்து கொண்டு காசியை அடைந்தார். கங்கையில் நீராடி நாட் கடன்களைச் செய்தார். பலநாள் அங்குத் தங்கியிருந்தார். பிறகு அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுச் சகநாதம், சிம்மாத்திரி, அகோபிலம் முதலிய பதிகளை வணங்கிக்கொண்டு திருமலைக்குத் திரும்பி வந்தார். அங்குச் சிலநாள் தங்கிப் புறப் பட்டார். திருவெவ்வுளூர், திருநின்றவூர், திருவல்லிக் கேணி, திருநீர்மலை, திருவிடவெந்தை, திருக்கடன் மல்லை, பெரும்பூதூர் முதலிய பதிகளையும் போற்றி வணங்கிப் புகழ்ந்து பாடிக் காஞ்சியை அடைந்தார். அக் காஞ்சி மாநகரில் சிலநாள் மிருந்த களிப்போடு வாசஞ் செய்து கொண்டிருந்தார்.

துறவியின் தோல்வி

காஞ்சிமாநகரத்திற்கு ஒரு வேதாந்தத் துறவி வந்தார். அவர் வேங்கட நாதாசாரியருடைய கல்வித் திறத்தையும், ஞானம், மனவுறுதி மேன்மை ஆகியவைகளையுங் கேட்டறிந்தார். அவருக்கு மிகுந்த அழுக்காறுண்டாகி விட்டது. இவரிடம் வந்து தம்மாலியன்றமட்டும் சொற்போர் செய்து இறுதியில் தோல்வியடைந்தார். அவர் கொடிய மந்திரசக்தி பெற்றவர். எக்காரியத்தையுஞ் செய்யக்கூடியவர். அவர் ஒரு குளத்திற்குச் சென்று தண்ணீரைவிடாமல் குடித்துக்கொண்டே யிருந்தார். அவர் குடித்த தண்ணீர் முழுவதும் மந்திர ஆற்றலால் இவருடைய வயிற்றில் நிரம்பி வயிறு பெருக்கத் தொடங்கியது. இவர் இதற்குக் காரணம் யாது என்று ஆராய்ந்தார். தோல்வியுற்ற துறவியின் சூதென்றுணர்ந்தார். அண்மையில் இருந்த ஒரு தூணை ஆயுதத்தால் கீறினர். அத் தூணில் இருந்து தண்ணீர் வெள்ளமாகப் பெருகியோடியது. தோல்வியுற்ற துறவியோ குளத்துத் தண்ணீர் முழுமையையும் குடித்துத் தீர்த்தார். வேங்கட நாதாசாரியருடைய வயிறு வெடித்துப் போயிருக்குமென்று எண்ணிக் கொண்டு இவரை வந்து பார்த்தார். தூணிலிருந்து நீர் பெருகியோடுவதைப் பார்த்து மிகுந்த வியப்படைந்தார். தம்முடைய ஆணவம் அகன்று அவ்விடம் விட்டு நீங்கிப் போனார்.

உதவி மறுப்பு

துறவியாக இருந்து அமைச்சராக மாறிய வித்தியாரணியராகிய இவருடைய நண்பர் இவர் காஞ்சிமாநகரில் எளிய முறையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று உணர்ந்தார். இவர் மனவுறுதியிலும் பற்றின்மை

வதும் ஐயமேற்றே காலங்கழிக்க வேண்டும் என்னும் எண்ணத்தாலும் எளிய முறையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை உணராத அவர் மறைவிலும் இவ்வாறு இருக்கிறார் என்று எண்ணிக் கொண்டார். இவருக்கு உதவிசெய்ய வேண்டுமென்று முடிவு செய்தார். "தேவரீர் இவ்விடத்திற்கு எழுந்தருளினால் அரசர் கல்வி உதவி செய்வார்" என்று கடிதம் ஒன்று எழுதி ஓரிடம் கொடுத்து அனுப்பினர். இவர் அக் கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்தார். அதற்கு மறுமொழியாக "வையாபிகை பஞ்சகம்" என்று ஐந்து சுலோகங்களை எழுதியனுப்பினர். அவர் இவர் எழுதியனுப்பிய சுலோகங்களால் இவருடைய மன நிலையைத் தெரிந்துகொண்டார்.

கோயிலுக்குச் செல்லுதல்

எல்லாக் கலைகளிலும் வல்லவனான வடநாட்டுப்புலவன் ஒருவன் மாணவர் பலருடன் திருவாக்கத்திற்கு வந்தான். அவன் அங்குள்ள வைணவர்களைப் பார்த்து, "என்னோடு சொற்போர் செய்து இராமாநுசருடைய வேதாந்த மார்க்கத்தை நிலைநாட்டிக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்யத் தவறினால் உங்களிற் பலருக்கு ஏற்பட்டு கடைபெறும் சிறப்புக்களும் வரிசைகளும் நீக்கப்படும்" என்று சொல்லி வற்புறுத்தினான். அங்குள்ளவர்கள் அவனோடு சொற்போர் செய்வதற்குத் துணியவில்லை. அவனை எதிர்த்துச் சொற்போர் செய்து வெற்றி கொள்ளத்தக்க ஆற்றலுடையவர் வேங்கடநாதாசாரியரே என்று அவர்கள் முடிவு செய்தார்கள். அச் செய்தியைக் கடிதத்தில் எழுதி வேங்கடநாதாசாரியருக்குத் தெரியப்படுத்தினர். திருவாக்கத்துக்கு எழுந்தருளி அந்த வடநாட்டுப் புலவனை வென்று தோற்கடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

இவர் திருவரங்கத்திற்குச் சென்று அப் புலவனைத் தோற் கடிப்பதற்கு எண்ணினர். மாலவர் பலரோடு பயணப் பட்டுத் திருவரங்கத்தை யடைந்தார். காவிரியில் நீராடி அரங்கநாதனைப் போற்றிப் பணிந்தார். பிறகு ஒரு மண்ட பத்திலே போய் அமர்ந்தார்.

வடநாட்டுப் புலவனை வெல்லுதல்

தனது கல்வியறிவை மிகுதியாக மதித்துப் பாராட்டிக் கொண்டிருந்த வடநாட்டுப் புலவன் சமயம் வாய்த்தது என்று எண்ணினான். இவரிடம் வந்து இவரைப் பார்த்து, "உம்முடைய சீர்த்தி பெரிதாக இருக்கிறபடி ஆகாரம் (வடிவம்) சிறியதாக இருக்கிறது" என்று ஏளனமாகப் பேசினான். அப் புலவன் கூறிய மொழியையே பொருளாகவைத்துக்கொண்டு அப் புலவனைப் பார்த்து, "ஆகாரம் தீர்க்கமாயிருக்க அதனைக் குறுகியதென்று நீர் எவ்வாறு கூறலாம்?" என்று சொல்லிச் சொற்போரைத் தொடங்கினர். வழக்கண்டைக்கு வந்தவரிடம் மொழித்திறனும், கல்வி நிலையும் எவ்வளவில் உளதென்று அறிந்துகொண்டு அவர் எடுத்துக் காட்டிய நியாயங்களை யெல்லாம் கண்டித்துக் கொண்டே வந்தார். இரண்டுபேருக்கும் இரண்டு மூன்று நாள் சொற்போர் தொடர்ந்து நடைபெற்றது. இவருடைய மாணவர்கள் உடனிருந்து அச் சொற்போரைக் கவனித்து ஓலையில் எழுதிக்கொண்டே வந்தார்கள். நாடோறும் இரவில் அரசரிடம் படித்துக் காட்டிச் சொற்பிழை முதலிய வைகளைத் திருத்தி வேறு சுத்தப் பிரதியும் செய்து வைத்தார்கள். அஃதொரு பெரிய சொற்போர் நூலாகிவிட்டது அதற்குப் பெயர் 'சததூடணி.' அத்வைதமத கண்டனத் தோடு வேறு மத கண்டனமும் அதிற் கூறப்பட்டுள்ளது பிறகு ஒருநாள் இரவில் வடநாட்டுப் பண்டிதர் தம்முடைய தோல்வியை ஒப்புக்கொண்டார்.

முகத்திற் கரிபூசியது

"நான் இவ்வூரில் உள்ள பண்டிதர்கள் எல்லோரிலும் சிறந்தவனைபால் வேங்கடநாதசாரியாரம் தங்களுக்குக் கோவிலில் மரியாதைகள் முதலியன கடத்தப் பட்டவுடன் எனக்கு கடத்தப் படவேண்டும்" என்று கேட்டுக்கொண் டார். இவர் அதன்படியே நடத்தப்படுமென்று சொல்லி விட்டு ஒரு சூழ்ச்சி செய்தார். கோவிலில் இருந்த பக்த கோடிகட்கு முதலில் மரியாதைகளை நடத்தச் செய்தார். பிறகு தாம் அவைகளைப் பெற்றுக்கொண்டு இறுதியில் வட நாட்டுப் புலவருக்கு மரியாதையைச் செய்யச் செய்தார். இதனல் இவருடைய அறிவுத் திறமையைப் பொதுமக்க ளும் மிக மதித்துப் பாராட்டி "நம்முடைய புலவர் வட நாட்டுப் புலவருடைய முகத்திலே கரி பூசிவிட்டார்" என்று சொல்லி ஆரவாரஞ் செய்தார்கள். வடநாட்டுப் புலவரோ மிகுந்த இழிவுக்குள்ளாகித் தலை கவிழ்ந்தார். வேங்கடநாதசாரியரைப் பார்த்துத் "தங்களை யாரும் எந்த விதத்திலும் தோற்கடிக்க முடியாது" என்று கூறிப் புகழ்ந்துவிட்டுத் தம்முடைய நாட்டிற்குச் சென்றார். அன்று முதல் இவருடைய புகழ் எல்லாத் திசைகளிலும் பரவியது. மீண்டும் திருவரங்கம் சேர்ந்தார்.

திருவரங்க வாசம்

பிறகு இவர் திருவரங்கத்தில் தங்கி யிருந்துகொண்டு காள்தோறும் பெருமானை வழிபட்டார். பலருக்கு நூல் களைப் போதித்து அறிவுரை கூறினர். அப் பதியில் இருந்த பெரியோர்கள் இவருடைய அறிவு நலனையும் ஒழுக்கத்தை யும் பாராட்டினர்கள். இவர் திருவரங்கத்தில் தங்கியிருந்த போது பாடல்கள் பல கோயில்களைப் பற்றிப் பாடினர். அவற்றுள் ஒன்று:

"சோத அருணமுதம்பொதிந்த கோயில்
அம்புயத்தோன் அயோத்திமன்னர்க் களித்த கோயில்
தோத்த தணிவீரன் தொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாய் கோயில்
சோத பயனெல்லாஞ் சேர்க்கும் கோயில்
செழுமறையின் முதலெழுத்தச் சேர்ந்த கோயில்
நீதாத வினையனைத்தும் நீக்குங் கோயில்
திருவாங்கம் எனத்திகழும் கோயில் தானே."

என்பது.

மேலும் நூல்கள் இயற்றல்

சோழநாட்டாரும் பிறநாட்டாரும் வேங்கடநாதசாரியருடைய பெருமையைப் புகழ்ந்து பாராட்டத் திருவரங்கநகரில் தங்கியிருக்கும்போது வேதாந்தப் பொருளை ஸ்ரீ பாஷ்யத்தின் கருத்தின்படி தெளிவாக எடுத்துக் காட்டிச் சொற்பொழிவு செய்தார். இச் சொற்பொழிவுகளின் சாரத்தையெல்லாஞ் சேர்த்து ஐந்நூற்றைம்பத் தைந்து பெரிய சுலோகங்களால் அதிகரண சாராவளி என்னும் நூலைச் செய்தார். இராமாநுச பாஷ்யத்தின் ஒவ்வொரு பிரகரணத்திலும் அடங்கியுள்ள செய்திகளெல்லாம் ஐயந் திரிபற எல்லோரும் அறிந்து கொள்ளத்தக்க சிறப்புவாய்ந்த நூல் இதுவே. இச் சிறந்தநூல் வெளியாகவே இவர் பாஷ்யக்காரரது அவதாரமோ அல்லது பட்டருடைய கூரேசர் தோன்றினவரோ என்று எல்லோரும் புகழ்ந்து கொண்டாடினர்கள். திருவாங்கத்தில் இருக்கும்போது இவர் மேலும், சிவங்க காச்சியார்பேரில் தாதி, பூஸ்தாதி, நீளாஸ்துதி, தசாவதார தோத்திரம் பரிசாச சப்ததி என்னுஞ் சிறந்த நூல்களைச் செய்ததோடு, தத்துவமுக்தாகலாபம் சர்வார்த்த சித்தி, நியாயசித்தாஞ்சனம், நியாய பரிசுத்தி, சேச்வரமீமாம்சை, மீமாம்சா

பாதுகை, தத்துவமுகை, அதிகாணதர்ப்பணம், வாதிக்கிய கண்டனம் முதலிய நூல்களை இயற்றினர். மற்றும் அன்பர் களுடைய வேண்டுகோளின்படி 'கியாசதிலகம்,' 'கியாய சங்கிரகம்,' 'கியாசதசகம்' முதலிய நூல்களையும் இயற்றினர்.

கௌடம் புலவர்களை வெல்லுதல்

இவர் மிகுந்த சிறப்புடன் திருவரங்கத்தில் வசித்துக் கொண்டிருக்கும்போது வடநாட்டில் இருந்து சில கௌடப் புலவர்கள் வந்தார்கள். தமிழில் ஆழ்வார்கள் பாடிய நூல் களையும் ஆழ்வார்களையும் இகழ்ந்து சில குதர்க்கங்கள் செய் தார்கள். இவர் பல எடுத்துக்காட்டுக்களாலும் இலௌகிக யுக்திகளாலும் அவர்களை வென்றார். தமிழ் வேதம் வட மொழி வேதசாரமாய்த் தெளிவு பொருள்கொண்டு விளங்குவ தென்றும் மெய்ப்பித்தார்.

திருட்டிணமிச்சரை வெல்லுதல்

திருட்டிணமிச்சர் என்னும் ஒரு பெரிய புலவர், இவர் கவிதார்க்கிக சிம்மம், சர்வதந்திர சுவதந்திரர் என்னும் விருதுகளோடு விளங்குவதைக் கேட்டுப் பொறாமைகொண் டார். இவரை வாதுக்கழைத்தார். இருவரும் பல நாள் சொற்போர் செய்தார்கள். கடைசியில் திருட்டிணமிச்சரை இவர் வென்றார். மிச்சிரனர் தாம் செய்த பிரபோதசந்திரோ தயம் என்னும் நூலை இவருக்குப் படித்துக் காட்டினர். அதற்கு மாறுகவிசிட்டாதத்துவிதக் கொள்கைகளை விளக்கிச் 'சங்கற்ப சூரியோதயம்' என்னும் நூலை இவர் இயற்றினர். இந்நூல் திருட்டிணமிசார் நூலினுஞ் சிறந்து விளங்கியது.

டிண்டிமனை வெல்லுதல்

திருட்டிணமிச்சர் தோல்வியடைந்த செய்தியை டிண்டிமன் என்னும் புலவர் அறிந்தார். இவர்மீது மிக

அலட்சியமாகச் சில கலைகளைக் கற்றுத் தமது கவித்வ வல்லபத்தை வெளிப்படுத்தினர். இவர் தண்டமனூரைடைய பாடல்கட்கு விடையாக வேறு பாடல்கள் கூறினர். தண்டி மர் பிறகு சொற்போரில் இறங்கினர். அப்போரிலும் இவர் அவரைத் தோற்கடித்தார். பிறகு அவர் தாம் செய்த, 'இராகவாப்புதயம்' என்றும் காவியத்தின் சில எடுத்துக் காட்டினர். இவர் 'பாதவாப்புதயம்' என்றும் காவியத்தை உடனே செய்துகாட்டி அவையோரையும் அவரையும் வென்றார். அவர் தோல்வியுற்று சென்றார்.

பாதூர்ப் பயணம்

திருவாங்கத்தில் வாசஞ்செய்து கொண்டிருந்த இவர் பல பதிகளிலும் எழுந்தருளிய மாயவனைப் போற்றி வழிபட எண்ணினர். திருவரங்கம் என்றும் கோயிலிலிட்டுப் புறப் பட்டுத் திருமெய்யம், திருக்கோட்டியூர், திருமலிருஞ் சோலை, திருமோகூர், மதுரை. திருப்புல்லாணி முதலிய இடங்கட்குச் சென்று வழிபாடு செய்தார்; சேதுவுக்குச் சென்று கடலில் மூழ்கினர். பிறகு திருத்தண்கால் திரு விண்ணிபுத்தூர் முதலிய பதிகட்குச் சென்றார். திருவில்லி புத்தூரில் ஆண்டாளை வணங்கி வழிபட்டுக் 'கோதாத்துதி' என்றும் தமிழ் வடமொழியில் இயற்றினர். பிறகு ஆழ்வார் திருநகரிக்குச் சென்று ஆழ்வாரை வழிபட்டார். அப்பகுதி யில் உள்ள திருமாலின் ஒன்பது திருப்பதிகளையும் வணங்கி வழிபட்டுக்கொண்டு வானமாமலை, திருக்குறுங்குடி, வண் பரிசாரம், வட்டாறு முதலிய இடங்களிலும் வழிபாடு செய்துகொண்டு திருவனந்தபுரத்திற்குச் சென்று அனந்த பத்மநாபனைப் போற்றி வணங்கினர். மீண்டும் திருவாங்கத் திற்கு வந்தார். பிறகு மேலும் பல பதிகளைப் போற்றி வழிபட்டுக்கொண்டு காஞ்சியை அடைந்தார்.

பாம்பாட்டியை வெல்லுதல்

இவர் காஞ்சியில் வசித்துக்கொண்டிருக்கும்போது மந்திர ஆற்றலில் வல்லவனான ஒரு பாம்பாட்டி சிலருடைய வேண்டுதலின்படி வேங்கட நாதாசாரியரிடத்திற்கு வந்தான். அவன் இவரைப் பார்த்து, "நீங்களோ சகல தந்திரமென்னும் விருதுபெற்று விளங்குகிறீர்கள். என்னை வெல்லுவீர்களானால் உங்களுடைய சீர்த்தி முன்னிலும் அதிகமாகவும் பரவும். நீங்கள் பாம்பு மந்திரத்தை அறிவீர்களானால் நான் எறிகிடும் பாம்புகளைத் தடை செய்யுங்கள், பார்ப்போம். என்னை வெற்றி கொள்ளாமல் விருதுகூறக் கூடாது" என்று பலவாறு கூறிச் சொற்போர் தொடுத்தான். தேசிகரோ பாம்பாட்டியோடு சொற்போர் தொடுத்தல் விரும்பத்தக்கதன்று என்று எண்ணிப் பேசாமல் இருந்தார். அப்பிடாரனை 'என்னோடு போர் செய்தனன்னை. வென்றால் அல்லாமல் நான் இவ்விடத்தைவிட்டு வெளியேறமாட்டேன்' என்று கூறிப் பழிகிடந்தான். தேசிகர் 'இப்பிடாரன் பிறருடைய ஏவுதலின்மேல் வந்துள்ளான்; எனிதாகத் திரும்பிப் போகமாட்டான்' என்று எண்ணினர். அவனைக் கூட்டிக்கொண்டு கோயிலுக்கு வடமேற்கில் கழற்செடி சூழ்ந்த ஓரிடத்திற்குச் சென்றார். ஒரு புற்றின் பக்கத்தில் தாம் உட்கார்ந்துகொண்டு கருடனை எண்ணினர். ஏழு கோடுகளைத் தரையில் குறுக்காக ஒன்றின்பின் ஒன்றாகக் கீறினர். பாம்பாட்டியைப் பார்த்து, "உன்னிடம் உள்ள பாம்புகளெல்லாம் என்மீது ஏவிவிடு" என்று கூறினர். அவ்வாறே அவனும் சில பாம்புகளை ஏவினான். அவைகள் கோடுகளைக் கடக்கமாட்டாது தயங்கி நின்றன. பிறகு அவைகளினும் கொடிய பாம்புகளை மிகுந்த சீற்றத்துடன் ஏவினான். அவைகள் சில கோடுகளைக் கடந்து வந்தும் மற்றைக் கோடுகளைத் தாண்டமுடியாமல்

தலைசாய்ந்து நின்றன. அவைகளால் படமெடுத்து ஆடவும் முடியவில்லை. பிடாரனின் சினமோ முன்னிலும் பன் மடங்கு அதிகமாயிற்று.

சங்கபாலன்

அப்பிடாரன் கொடிய நஞ்சுள்ள சங்கபாலன் என்னும் பாம்பைத் தனக்கு மூலதனமாக வைத்துக்கொண்டிருந் தான். அஃது மிகவும் கொடியதாகையால் அஃது எல்லாக் கோடுகளையும் தாண்டித் தேசிகருக்கு அண்மையில் வந்து விட்டது. தேசிகர் கருடனை எண்ணினர். கருடன் மிக விரைவாகப் பறந்து வந்து சங்கபாலனைப் பற்றிக்கொண்டு பாரும் எங்கும் காணமுடியாவாறு விண்ணிற் பறந்துவிட் டான். அவ்வளவில் பாம்பாட்டியினுடைய ஆணவம் அடங்கிப்போய் விட்டது. அவன் தேசிகருடைய திருவடி களில் விழுந்து பணிந்தான். 'சங்கபாலனை மீட்டும் வர வழைத்துக் கொடுத்தாலல்லாமல் தன்னுடைய வாழ்க்கை நடக்கமாட்டாது' என்று கூறிப் பலவாறாக வணங்கிக் கேட்டுக்கொண்டான். தேசிகர் பிடாரனுடைய பரிதாப நிலைக்கு இரங்கினர். கருடன்மீது தண்டகம் ஒன்று வட மொழியிற் செய்து போற்றினர். கருடன் ஒரு கொடியிற் சங்கபாலனைக் கொண்டுவந்து விட்டுவிட்டுச் சென்றான். அப் பாம்பாட்டி மிகுந்த விடுப்படைந்து தேசிகருடைய மந்திர ஆற்றலைப் பலவாறு புகழ்ந்து வணங்கிச் சென்றான்.

அயக்ரீவர் அருள்

பிறகு தேசிகர் திருமலைக்கேகிப் பெருமானை வணங்கி னர். பிறகு திருவரங்கத்திற்குப் பயணப்பட்டார். பயணப் பட்டு ஒருநாள் காட்டுவழியிற் சென்றுகொண்டிருந்தார். நீராடி காட்கடன்களைச் செய்தார். தினகை வழிபாடு முதலி யன செய்வதற்கு வசதியில்லாதபடியால் யாதஞ் செய்யாம

திருந்தமிட்டார். இதில் ஓர் ஊரை படைத்த தன்னுர். இவர் தன்னிருந்த அந்த ஊரில் வள்ளியில் இவரது வழி படு மூர்த்தியாகிய அபக்கிரீவர் ஒரு வெள்ளாக் குதிரையின் வடிவத்தை எடுத்துக்கொண்டு அவ்வூர்க் கடைத்தெருவிற் குப்போய் ஒரு வணிகனுடைய கடைத் தட்டியை இழுத்து விட்டுக் கடைக்குள் தலையை நீட்டி அங்குக் கடையில் வைத்திருந்த கடலை, அவரை, துவரை, கொள்ளு முதலிய தானியக்களைத் தின்றார். தின்னுதலைக் கடைக்காரன் கண் டான். அக் குதிரை யாருடையது என்று உசாவினான். வழிப்போக்கராக வந்திருக்கும் தெசிகருடையதாக இருக் கலாமென்று சிலர் கூறினர்கள். அவன் தேசிகரிடம் வந்து "உங்களுடைய வெள்ளாக் குதிரை என்னுடைய கடையில் உள்ள பொருள்களைத் தின்று சேதப்படுத்துகின்றது. எவ் வளவுதான் அதட்டி விரட்டினாலும் போகமாட்டேன் என் கிறது. அதனைப் பிடித்துக் கட்டுங்கள்" என்று சொல்லி முறையிட்டுக் கொண்டான். தேசிகர் தாம் அபக்கிரீவரைப் பட்டினி போட்டபடியால் அவர் இவ்வாறு வந்தனரென் என்று ஊகித்துணர்ந்து கொண்டார். அந்தக் கடைக்கா னிடத்தில் சிறிது பால்வாங்கி அபக்கிரீவருக்கு வைவேத்தி யஞ்செய்து தாமும் உட்கொண்டார். பிறகு கடைக்காரனைப் பார்த்து, "இனிமேல் அக்குதிரையினால் தொல்லை யுண்டாகமாட்டாது; நீ போகலாம்," என்று கூறினர்.

வணிகன் தன்னுடையது

வணிகன் தன்னுடைய கடைக்குச் சென்று பார்த் தான். அங்கே குதிரையில்லை; அது மறைந்து விட்டது. மறுநாட் காலையிலே பார்த்தபோது குதிரை வாய்வைத்த கூடைகளில் இருந்த தானியங்களெல்லாம் பொன்மயமாக னைந்தன. அபக்கிரீவரது திருவருளால் அக்கடைக்காரன்

தனவராலுறைன். பிறகு தேசிகர் திருவரங்கத்தை அடைந்தார்.

மறைநூல்களியற்றியது

சித்தாந்த சாமரகிய உண்மைப் பொருளை எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு நூல் வழிலமாக எழுதி வெளிப்படுத்தி உதவிசெய்ய வேண்டுமென்று சிலர் தேசிகரை வேண்டிக்கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி மணிப்பவள ரூபமாகத் தேசிகர் தத்துவத்திரயசுளகம், இரகசியத் திரயசுளகம், தத்துவபதவி, இரகசியப்பதவி, தத்துவகவசாதிகம், இரகசியகவசாதிகம், தத்துவமாதிருகை, தத்துவரத்திநாவலி, இரகசியரத்திநாவலி, தத்துவரத்நாவலி சங்கிரகம் முதலிய நூல்களை இயற்றினர். இந் நூல்களெல்லாம் வடமொழி தென்மொழிகளில் தேர்ச்சிபெறுத பாவருங்கற்றறிந்து கொண்டு அவைகளின் படி நடந்து நல்வழியை அடைபச் சிறந்த வழிகாட்டிகளாயின.

வேதாந்த தேசிகர்

பெரியோர்கள் இந் நூல்களை யெல்லாம் பார்த்தும் கேட்டும் பாஷ்யக்காரரின் சித்தாந்தம் அவரது கருத்தின் படி இன்னதான் கிலபெற்றதென்றும், வைராக்கியத்தில் தேசிகர் கூரத்தாழ்வானைப் போன்றவரென்றும், கலைவல்லபத்தில் பட்டரைப் போன்றவரென்றும், ஞானத்தில் ஆழ்வானைப் போன்றவரென்றும், எடுத்துக்காட்டிப் போதிப்பதில் பாஷ்யக்காரரைப் போன்றவரென்றும் பின்னும் பலவாறு புகழ்ந்து பேசினர்கள். சமயவாதிகள் இவருடைய பெயரைக் கேட்டவுடனே ஓடி ஒளிந்தார்கள். வேதாந்த போதனைக்கு இவரே ஆசானியராகி விளங்கியபடியால் இவருடைய பெயர் வேதாந்த தேசிகர் என்று எங்கும் வழங்கு

வதாயிற்று. இவர் போதித்த வேதாந்தம் மற்றையோர் போதித்த வேதாந்தம் போலிராமல் உபயவேதி உடன் பாடாக விளங்கியது. இவர் எல்லா நூல்களிலும் வல்லவ ராய் எட்டுத் திக்குகளிலும் வெற்றிக்கொடி நாட்டித் திரிந்தபடியால் சர்வதந்திர சுவதந்திரராக விளங்கினர். பொருள்களிடத்திலே பற்றின்மை இவருக்கு மேலான சிறப்பைக் கொடுத்தது. தேசிகர் பொருளை கஞ்சென்றும், இளமைதன்னைப் பிணமென்றும், மக்களின் கூட்டத்தைப் பாம்பென்றும், தலைநகரை நரகமென்றும் எண்ணி அவை களில் இருந்து விலகித் தம் பெருமைகளை மறைத்துக் கொண்டு, பிறரால் வரும் புகழ்ச்சியையும், ஊதியத்தையும் வணக்க வழிபாடுகளையும் வேண்டாத பொறுமை முதலிய குணங்கள் நிறைந்தவராய்ச் சிறந்து விளங்கியிருந்தார்.

தட்கடன்

இவர் விடியற் சாமநேரத்திற்குப் படுக்கையை விட்டு எழுந்திருப்பார். கால் கைகளைச் சுத்தஞ்செய்து கொள் வார். பிறகு ஆசாரிய வழிமுறையை மனதில் எண்ணி வணக்கஞ் செய்வார். பிறகு பகவானை மனதில் எண்ணி யிருப்பார். இந்த அன்றாட வேலைக்கு ஆனிவேரைப் போன்றது. பிறகு பகவான் மீது வணக்கப் பாடல்களைப் பாடுவார். பிறகு காவேரிக்குச் சென்று நீராடுவார். திரு நாமங்களைச் சாத்திக்கொண்டு பெருமாளுடைய கோயி லுக்குச் சென்று வழிபாடு செய்வார். தமிழ்ப் பாடல்களை யும் வடமொழிச் சுலோகங்களையும் பாடுவார். பிறகு இல் லத்திற்கு வந்து அபக்கிரீவமூர்த்தியைப் பூசிப்பார். பிறகு மாணவர்கட்குச் சிறிது நேரம் நூல்களைப் போதிப்பார். பிறகு தெருவுக்குப் போய் அந்நாளுக்கு வேண்டிய அரிசி காய்கறி முதலியவைகளை ஐயமேற்றுக்கொண்டு வரு

வார். நண்பகலிலும் பூசனை முதலியவைகளைச் செய்து விருந்தினரோடு அமுது கொள்வார். மாலையிலும் மாணவர்கட்கு நூல் போதித்தல் தெய்வ வழிபாடு செய்தல் முதலியவைகளைச் செய்து இரவில் அறிதுயில் கொள்வார்.

மாணவர்கள்

இவரிடம் மாணவர்கள் பலர் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். அவர்களுட் சிறந்தவர்களாய் விளங்கியிருந்தோர் போருளாளர், பிரபாகரசியர், வெண்ணெய்க்கூத்தசியர், விஞ்சுமூர் இராமாநுசாச்சாரியார் முதலியோர்களாவர். இவர்களிற் போருளாளர் என்பவர் தேசிகரிடத்தில் பஞ்ச சமஸ்காரம் முதலிய அருளிச் செயல்களையும் பெற்று மாணவர்களுக்குள் தலைமை பெற்றவராக விளங்கியிருந்தார். இவர் ஆசிரியரிடத்திலே பேரன்புடையவராய், மிகச்சிறந்த வராய், வேதாந்தக் கலையிலே வல்லவராய் இருந்தார். தேசிகர் இவருடைய நல்லொழுக்கத்தையும் நற்குணம் முதலியவைகளையுங் கண்டு இவருக்குப் பிரமதந்திர சுவதந்திரர் என்னும் ஞானவழி முறைப் பெயரைக் கொடுத்திருந்தார். இவர் பிறகு மனைவுதுதி மிகுந்த சிறந்த துறவியானர்.

பொறுமையும் வெற்றியும்

தேசிகருடைய புகழும் பெருமையும் நாள்தோறும் வளர்ந்து கொண்டே இருந்தது. இதனால் பொறாமையுற்ற வைணவப் புலவர்கள் சிலர் இவரைச் சொற்போருக் கழைத்தனர். இவர் இராமாநுசர் மீது தோத்திரமாகச் செய்துள்ள "யதிராச சப்ததி" என்னும் நூலில் பாடியக்காரரின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களின் திருவடிகளைத் தமது தலை மீது தாங்குவதாகக் கூறியிருத்தலால் பாகவதர்களிடத்தில் சொற்போருக்குப் போவதற்கு அஞ்சிச் சொற்போருக்குச் செல்லாமல் சும்மா இருந்து விட்டார். இவர்

சொற்போருக்கு வராமைக்குக் காரணம் சொற்போர் செய்யத் திறமின்மை தானென்று சொற்போருக்கழைத்த வர்கள் எக்குங் கூறிக்கொண்டு திரிந்தனர். அவ்வளவில் நில்லாமல் இவருடைய வீட்டின் வாயிலிலே இரண்டு மிதியடிகளைக் கட்டித் தொங்கவிட்டார்கள். தேசிகர் இதனைப் பார்த்துச் சினமோ மனக்கலக்கமோ கொள்ள வில்லை. வடமொழிச் சுலோகம் ஒன்றைப் பாடினர். அச் சுலோகத்தின் பொருள்: "சிலர் கர்மத்தைத் தஞ்சமென்று பற்றுகிறார்கள். சிலர் ஞானத்தைத் தஞ்சமென்று பற்று கிறார்கள். நாமோ பாகவதர்களது மிதியடிகளைப் பற்றினவர்களாகிறோம்" என்பதாம். சொற்போருக்கழைத்தோர் இவருடைய பொறுமையைக் கண்டு மகிழ்ந்தனர். தாங்கள் இவருக்குச் செய்த குற்றத்தை எண்ணி மனம்வருந்தினர். தம்முடைய தவற்றினைப் பொறுத்துக்கொள்ளுமாறு இவரி டம் வந்து வேண்டிக் கொண்டனர். இவர் இவ்வாறு அப் பகைவர்களை வென்றார்.

மகப்பேறு

தேசிகர் மனைவியார் உடையவராக இருந்தமையால் சிற்றின்பநாட்டம் அற்றவராக இருந்தார். ஒருநாள் இரவில் பேரருளாளர் இவருடைய கனவில் தோன்றி, "நாம் உம்முடைய மனைவியின் நிலையைக் கண்டுகளித்தோம். ஒரு கூறினாலே நாம் உமக்குப் புதல்வராகத் தோன்று கிறோம். அப்புதல்வருக்கு, 'வரதர்' என்று பெயரிடும். இதற்காக நீர் ஒருநாள் மட்டும் கருப்பதானஞ் செய்யும்" என்று கூறிவிட்டு மறைந்தருளினர். அக் கட்டளைப்படியே தேசிகர் ஒரு நல்ல நாளில் கருப்பதானஞ் செய்தார். இவ ருடைய மனைவியாரும் கருப்பமடைந்தார். நாளடைவில் புதல்வர் தோன்றினர். செய்ய வேண்டிய சடங்குகளை

வெல்லாம் முறைப்படி செய்தார். கனவில் கிடைத்த கட்டளைப்படி 'வாதன்' என்று பெயரிட்டார்.

அபகரிப்பு

தேசிகருடைய தந்தைக்கு திருவத்திபுரத்தான் வந்தது. உணவு புசித்தற்கு முதல் நாளிலேயே வைணவர்கள் சொல்லப்பட்டிருந்தார்கள். பொறுமை கொண்ட சிலர் இத்திருவத்திபுரத்தைக் கெடுத்து விடுவதற்கு எண்ணங் கொண்டார்கள். சிறிது பொருளைக் கொடுத்து முன் சொல்லி வைத்திருந்த வைணவர்களைத் தங்கள் இல்லத்திலேயே சாப்பிட்டு விடுமாறு கிட்டஞ்செய்து விட்டார்கள். அவர்களும் அவ்வாறே சாப்பிட்டு விட்டார்கள். இதனைத் தேசிகர் உணர்ந்தார். சிறிது மனக்கவலை உண்டாகியது. வேறு வைணவர்கள் அச்சமயத்தில் அகப்பட்டிலர். தேசிகர் ஒருவாறு தெளிவடைந்து எல்லாம் திருவருள் கைக்கப்படி கடைபெறட்டும் என்று மனத்தணிவு கொண்டார்.. செய்ய வேண்டியவைகளைச் செய்து இலைகளில் உணவும் படைத்தார். திரை போட்டு விட்டு வெளியேயிருந்து மந்திரசபம் செய்து கொண்டிருந்தார். பொருளாளரும் அபகரிப்பவரும் அவ்விடத்தில் தோன்றித் திருவமுது கொண்டார்கள். அவர்கள் அமுது செய்கிறபடியினால் உண்டாகும் ஒலியைக் கேட்டு இவர் மிகுந்த களிப்படைந்தார். உண்டவர்களிருவரும் உணவு முடிந்த பின்பு வெளியே புறப்பட்டார்கள். அருகில் கொண்டவர்கள் இலைக்கீழ்ப் பார்க்க வேண்டுமென்று வெளியே காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தக்கினி கண்ருகப் பார்ப்பதற்கு முன்னரே அவ் விருவோரும் கண்ணிற் புலப்படாமல் மாயமாக மறைந்து விட்டார்கள். திருவத்திபுரத்தைக் கெடுப்பதற்கு ஏற்பாடு செய்தவர்கள் தேசிகர்

தெய்வத் திருவருள் நிறையப் பெற்றவரென்று தெளிந்து இவரிடத்தில் அச்சமும் அன்பும் கொண்டார்கள். இவரிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். இவருடைய மகனாகிய வரததேசிகர் தந்தையிடமே கல்வி முதலியன கற்றுச் சிறந்து விளங்கினர்.

திருமணத்திற்குப் பொன்மழை

மணமாகப் பெறாத ஒரு வைணவ அந்தணன் மணஞ் செய்து கொள்ள எண்ணினான். அவன் கையிற் பொருளில்லாதபடியால் பலரிடமும் பொருள் இரந்து கொண்டு திரிந்தான். தேசிகர்பால் அழுக்காறு கொண்ட சிலர் தேசிகரை இழிவு படுத்த எண்ணினார்கள். மணத்திற்குப் பொருள் இரந்தவனை அழைத்துச், "சர்வ தந்திரசுவதந்திரரான தேசிகரிடஞ் சென்று பொருளிரந்தால் வேண்டிய பொருள் தருவார்" என்று கூறி அவருடைய இல்லத்தையுங் காட்டி விட்டார்கள். அவன் தேசிகருடைய திருமாளிகைக்குப் போய்த் தேசிகரைக் கண்டு வணங்கினான். "பெரியோர்கள் எல்லோரும் அடியேனைத் தேவரீர் இடத்திற்கு வருமாறு கட்டளையிட்டருளினார்கள்" என்று விண்ணப்பஞ் செய்து கொண்டான். இதனைத் தேசிகர் திருச்செவியேற்றவுடனே, "பாகவதர்கள் நியமித்திருந்தால் பெரிய பிராட்டியார் திருவருள் செய்வார்" என்று கூறித் 'திருத்தாதி' என்னுந் தோத்திரத்தைப் பாடினர். தேசிகருடைய அன்பையும் பாகவதப் பத்திரையும் கண்ட பெரிய பிராட்டியார் மன்னிருப்பன் கொண்டோன் விரும்பி பதற்கு மிகுதியாகவே விண்ணினின்றும் பொன்மழை பெய்வித்தார். அப்பொருள்களை வாரிக் கொள்ளுமாறு அவனைப் பணித்தார். அவன் அவைகளை வாரி மூட்டை கட்டிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே சென்றான்.

முன்பு இவனை அனுப்பியவன்மீது திருப்பிட்டு ஏறவேண்டு மென்று. தன்னை மன்னிக்குமாறு தெனிகருடைய அடிகளிலே விழுந்து வேண்டிக் கொண்டான். பொன் மலை பொழியப்படுவதற்குக் காரணமாயிருந்ததினால் மற்றொரு பயமும் உண்டு.

விரதத்தைக் கெடுக்க முயற்சி

பிறகு ஒருநாள் வேறுசில் தெனிகருடைய ஏகாதசி விரதத்தைக் கெடுப்பதற்குத் திட்டமிட்டார்கள். கோயில் அர்ச்சகருக்குப் பொருள் கொடுத்து ஆக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். தெனிகர் வழக்கப்படியே வழிபாட்டிற்குக் கோயிலுக்குச் சென்றார். அர்ச்சகர் ஒருவர் தளிச் சோற்றினை இவருடைய கையிலே கொடுத்தார். "தேவீர் அமுது செய்தருளும்படி பெரிய பெருமான் கட்டளையிடுகிறார்" என்று சொன்னார். தெனிகர், "அப்படியே ஆகுக" என்று அதனை ஏற்றுக் கொண்டார். "கருதி மிருதிகள் இரண்டும் கம்முடைய கட்டளைகளை. அவைகளை மீறி நடப்பவன் நமக்குத் தீமை செய்தவனாகுவான் என்ற தன் மூலமாகக் கட்டளையிட்டருளிய தேவரே இப் பொழுது அர்ச்சகர் மூலமாக இவ்வாறு கட்டளையிடுகிறார்' என்ற தெனிகர் பெரிய பெருமானைச் சிந்தனைப்பு செய்து கொண்டார். உடனே பெரிய பெருமான் அர்ச்சகர் மேல் ஆவேசித்து. "நாம் தான் கூறுவதுதான் முறை; இஃது நம்முடைய கட்டளையல்ல" என்று கூறித் தளிச் சோற்றை இவருடைய கையிலிருந்து பறித்துக் கொண்டார். பிறகு அர்ச்சகர் தெனிகரைப் பணிந்து, "அடியேன் பணத்தில் கொண்ட பற்றினால் இவ்வாறு செய்ததை மன்னித்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

பொருளைப் பொருளாகமதியாமை

ஒருநாள் தேசிகர் பிச்சையேற்கச் சென்றார். சிலர் இவருடைய மனவுறுதியை ஆராய்ந்து பார்க்க எண்ணினர்கள். இவர் தெய்வ வணக்கப் பாடல்களைச் சொல்லிக் கொண்டு தம்மை மறந்து சென்றபோது அழுதபடிபோடு பொன், வெள்ளி நாணயங்களையுஞ்சேர்த்துப்போட்டார்கள். இவ்வாறு அவர்கள் போட்டதைத் தேசிகர் உணராமல் வாங்கிக் கொண்டு போய்த் தம்முடைய மனைவியாரிடம் கொடுத்தார். அவர் அழுதுபடியை வேறு எனத்தில் மாற்றியபோது அந்நாணயங்களைக் கண்டார். அவைகளை எடுத்து வைத்துவிட்டுத் தேசிகரிடம் அச்செய்தியை அறிவித்தார். தேசிகர் அழுதுபடியை மட்டும் எடுத்துக் கொண்டு பொன் வெள்ளி நாணயங்களைக் குப்பையில் எறிந்து விடுமாறு கட்டளையிட்டார். தேவியாரும் அவ்வாறே செய்தார். அன்று முதல் தேசிகர் அழுதபடி வாங்கும்போது அதனை நன்றுகப்பார்த்தே வாங்கலானர். இவருடைய தன்மையை இவரைச் சோதிக்கத் தொடங்கியவர்கள் கண்டு மிகுந்த நாணமடைந்தனர்.

யாதுகா சகஸ்ரம் செய்தல்

இந்நாளில் திருவரங்கத்தில் அழகிய மணவாளப் பெருமாள் நயினார் என்னும் ஒரு பெரும்புலவர் கவிதை செய்வதில் மிகுந்த ஆற்றலுடையவராக இருந்தார். அவரும் அவருடைய மாணவர்களும் தேசிகருடைய 'கவிதார்க்கிக சிங்கம்' என்னும் விருதைப் பொறுக்காமல் உள்ளம் புழுங்கியிருந்தார்கள். ஒருநாள் பெருமாளுடைய திருமுன்பு திருவோலக்கஞ் சேர்ந்திருந்தது. அச் சமயத்தில் மேற்படி நயினாரும் தேசிகரும் அங்குச் சென்றனர். அங்கிருந்த பெரியவர்கள் சிலர் இவரையும் மேற்படி நயினாரை

யும் பார்த்து, "இன்று இரவுக்குள்ளாகவே பெரிய பெரு மாள்மீது ஆயிரம் சுலோகங்களை நீங்கள் இருவருஞ் செய்து முடிக்கவேண்டும். யார் செய்து முடிக்கிறார்களோ அவர் கள், 'கவிதார்க்கிக சிங்கம்' என்றப் பாராட்டப் பெறுவார் கள்; செய்து முடிக்காதவர்கள் தோல்வியடைந்தவர் களாக மதிக்கப் பெறுவார்கள்," என்று கூறினார்கள். இரு வரும் இதனை மனம் ஒப்பி ஏற்றுக்கொண்டார்கள். அழ கிய மணவாளப் பெருமாள்கவிஞர், "பாதுகா சகஸ்ரம்" செய்வதாக ஒப்புக் கொண்டார். தேசிகர், "பாதுகா சகஸ் ரம் செய்வதாக ஒப்புக்கொண்டார். பிறகு இருவரும் தத்தம் இல்லங்கட்குச் சென்றார்கள். கவிஞர் இரவெல்லாம் மூன்று ஐந்நூறு சுலோகங்களைச் செய்தார். தேசிகர் தமது இல்லத்திற்குப் போய் வழக்கம்போலவே செய்யவேண்டிய காரியங்களைச் செய்துகொண்டு அறிதுயிலில் இருந்தார்.

திருவருட்டுணை

அப்பிள்ளை தேசிகருடைய மாணவன் ஒருவனைப் போல வடிவம் எடுத்துக்கொண்டு தேசிகருடைய திருமாளி கைக்கு எழுந்தருளினார்; தேசிகரை எழுப்பினார். "உறக் கம் கொண்டிருப்பது தகுதியாகுமோ? பாதுகா சகஸ்ரம் செய்யவேண்டாமோ?" என்று கூறினார். தேசிகர் அப் பிள்ளையைத் தம்முடைய மாணவர் என்றே எண்ணிக்கொண் டார். "அப்படியே ஆகட்டும், நான் சொல்லிக்கொண்டே வருகிறேன், நீ எழுதிக்கொண்டே வா" என்று கட்டளையிட் டார். அவ்வாறே மாணவ வடிவ அப்பிள்ளை இவர் சொல்லச் சொல்ல எழுதிக்கொண்டு வந்தார். நான்காம் பாகம் முடிய முன்னரே பாதுகா சகஸ்ரம் பாதிநாள் இடையூறும் இன்றி நிறைவெறி விட்டது. மாணவராக வந்தவர், 'நான் போய் வருகிறேன்' என்று கூறிப் பிரிந்து சென்றார்.

உண்மையுணர்தல்

மதுரான் காஞ்சியில் பெரியபெருமாள் திருமுன்பு கூடியிருந்த கூட்டத்திற்கிடையில் இருவரும் போய்ச் சேர்ந்தார்கள். தேசிகர் முன்னிலையில் பாதுகா சகஸ்ரம் எழுதி முற்போன்ற மாணவனைப் பார்த்து, "இதில் நீ எழுதிய பாதுகா சகஸ்ரத்தை எடுத்துக் கொண்டுவா" என்று கட்டளையிட்டார். அம் மாணவன் பாதுகையைக் கையில் பேர்த்துப் பேர்த்து விழித்தனன். அவன் இவ்வாறு விழிக்கவே வேதாந்த தேசிகர் எல்லாம் அபக்கிரீவர் திருமேனியாடல் என்னும் உண்மையை உணர்ந்துகொண்டார். அதனை வெளியே கூறாமல், "இன்ன இடத்தில் அந்நூல் இருக்கிறது; எடுத்துக் கொண்டுவா" என்று கூறினார். அவன் அவ்வாறே சென்று குறிப்பிட்ட நூலினை எடுத்துக் கொண்டு வந்தனன். தேசிகர் அதனை முதலில் இருந்து முடிவு வரையில் படித்து நிறைவேற்றினர். அழகிய மணவாளப் பெருமாள்நயினார் காணமடைந்து யாதும் பேசாமல் மௌனமாக இருந்துவிட்டார். அங்கிருந்தவர்கள் தேசிகரைப் பார்த்து, "ஸ்ரீ கவிதார்க்கிக சிங்கம்" என்று புகழ்ந்து பாராட்டினர்கள். நன்கொடைகள் வழங்கினர்கள்.

தமிழைத் தேசிகர் புகழ்தல்

நயினார் தம்முடைய இறுமாப்படங்கி மிகுந்த நாணமடைந்திருந்தார். தேசிகர் தமிழருக்கேற்பட்டுள்ள இழிவைப் போக்க எண்ணினர்; ஒரு சுலோகத்தைப் பாடினர். அதனுடைய பொருள்: "ஒரு பெண் பன்றி வெறுக்கத்தக்க நாற குட்டிகளை விரைவாகப் பெற்றது. பெண் யானையோ வெகுநாள் கழித்து ஒரு குட்டியைப் பெறுகின்றது. அக்குட்டி அரசர்களால் கொண்டாடப் பெறுகிறது." விரைவாகச் செய்தபாதகா

சகஸ்ரம் பண்ணிக்குட்டிகளைப் போலச் சிறப்புடைய தல்லவென்று தெரிவர் தம்மைத் தாழ்த்திக்கொண்டார். இதனால் இவருடைய இயற்கை எப்பொழுதும் எளிமையும் இதழ்த்தலைப்பதும் அமைந்திப்பதும் கூடா என்பது நன்கு விளக்குகின்றது. தேசிகருடைய தன்மையைக் கண்ட அழகிய மணவாளப் பெருமான் நமிழர் மிருந்த மகிழ்ச்சி யடைந்து அன்று முதல் இவரிடம் மிருந்த விருப்பத்தோடு நடந்துகொள்ளலானார்.

திருவாய்மொழிக்கு உரை

பின்னர் லோகாசாரியரை அவருடைய தகப்பனார் வடக்குத் திருவீதிப் பிள்ளை செப்தள்ள முப்பத்தாருயிரப் படியென்னும் திருவாய்மொழியுரையை அனுப்புவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரோ தம் முடைய மாணவர்களின் சிற்பபந்தத்தினால் அதனை அனுப்பு விக்க முடியாதவரானார். ஆனால் அதனை வெளியிடாது 'நாலைக் கொண்டு பார்த்தறிதல் கடுமோ? குருமுகமாக வன்றே கேட்டறிதல் வேண்டும்' என்ற மறுமொழி கூறி யனுப்பினர். தேசிகர் தம்முடைய மாணவர்களிடம் 'அதனை யாரும் கேட்டறிதல் கூடாது' என்று கூறிவிட்டுத் திருவாய்மொழியின் பாடல்களில் அடங்கிய பொருள்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து, "நிகமபரிமளம்" என்னும் திருவாய்மொழியின் பேருரையைச் செப்தருளினர்.

வேறுசில நூல்கள்

நிரதிசயபஞ்சகத்தின் சாரம், "நிரதிசயபஞ்சகத் திற் சாற்பரிய சத்காவலி" என்னும் இரண்டு வடமொழி நூல்களைச் செப்தார். இவையன்றியும் திருப்பா ணாழ்வாரின் பாடல்களைப் அமலனாதிப்பிரானுக்கு முனி வாகனபோகம் என்னும் விரிவுரையும், மதுரகவிகளின்

பாடல்களாகிய கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு மதுரகவி இருதயம் என ஒரு விரிவுரையுஞ் செய்தார். இவ்விரண்டு உரைகளும் மணிப்பவள நடையில் எழுதப்பட்டுள்ளன. பிறகு திரு ஆராதனக் கிரமம் என்னுஞ் சிறுநூலை வட மொழியிற் செய்தார். தமிழில் ஆழ்வார்களுடைய ஊர், கள், திங்கள் பெயர், நூல்களின் பெயர் அவைகளின் பாடல் தொகை—இவைகளைக் காட்டுகிற பிரபந்தசாரம் என்னும் நூலையும், ஆகார நியமம், திருமந்திரச் சுருக்கு, த்வயச் சுருக்கு, சரமச் சுலோகச் சுருக்கு, கீதார்த்த சங்கிரகம் என்னும் நூலையும் வேறு நூல்களையுஞ் செய்தருளினார்.

அரசர் வேண்டுகோள்

இராசமகேந்திர பட்டணத்திற்கு அரசனிய சால்வக்ஷ்மி நாயகர் இராமாநுச சித்தாந்தத்தில் மிகவும் விருப்பம் உள்ளவராய் அதனை எடுத்துக் கூறவல்லவர் எங்குளார் என்று உசாவினர். இவருடைய கல்வித்திறமை அவருடைய காதுக்கு எட்டியது. தக்கார் சிலரை இவரிடம் அனுப்பித் தமக்குத் தெளிவாகத் தத்துவஞானம் உண்டாகுமாறு அருள்புரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தேசிகர் அவ்வரசருடைய கன்மையை நன்றாக உசாவித் தெரிந்துகொண்டார். பிறகு அவருடைய மனந் தெளிவடையும்படி, சுபாஷ்திதீவி தத்துவ சந்தேசம், இரகசிய சந்தேசம், இரகசிய சந்தேச விவரணம் முதலிய நூல்களைச் செய்தனுப்பினர். "நல்லவர்களை எப்பொழுதும் வணங்குதல் வேண்டும்; பிரமஞானிகட்கு அஞ்ச வேண்டும்; தன்னுடைய பாரத்தை இறைவன் மீது போட்டு விட்டுக் கவலையற்றிருக்க வேண்டும்" என்னும் அறிவுரைகளையும் எழுதியனுப்பினர். அவ்வரசன் நன்னெறியில் ஒழுகி அறிவாளியானான்.

ஆணவச் செயல்

தேசிகர் ஒருநாள் தம்வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து தூல் எழுதிக்கொண்டிருந்தார். அப்பொழுது கந்தாடை தோழப்பர் குமாரர் இலக்குமணாச்சாரியர் என்பவர் தெருவில் தவனசக்கம் முதலிய ஒலிக்கருவிகள் முழங்கப் பல்லக்கில் சென்றுகொண்டிருந்தார். அவரைப் பின்பற்றிச் சென்ற தொண்டர்கள் தேசிகர் எழுந்திருந்து வணக்கஞ் செய்யவில்லை என்று சொல்லி இவருடைய காலைப்பிடித்து இழுத்தார்கள். "நம் ஆசாரியர் எழுந்தருளும்போது நீர் ஏன் எழுந்திலீர்?" என்று சொல்லிக் கேட்டார்கள். உடனே இவர் பரபரப்பாக எழுந்திருந்து அவ்வாசாரி யரைப் பின் தொடர்ந்து போய்த் தம்முடைய குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் என்று சொல்லிப் பணிவுடன் வேண்டிக் கொண்டார். ஆணவத்தைக் குறித்த ஒரு சுலோகமும் அப்பொழுது பாடினர்.

வேற்றிடஞ் செல்லுதல்

இனிமேல் நாம் இவ்வூரில் தங்கியிருந்தால் மேலும் பாகவதாபசாரத்துக் தவறு செய்யும்படியாக நேரலாம். ஆகவே வேறு ஊருக்குச் சென்று வசிப்போம் என்று முடிவு செய்தார். கொள்ளேகாலத்திற்கு அண்மையில் காவிரி யாற்றுக் கரையில் உள்ள சத்தியகாலம் என்னும் ஊர் வசிப்பதற்குத் தகுதியான தென்று உணர்ந்து அங்குச் சென்று வாசஞ் செய்துகொண்டிருந்தார்.

ஆசாரியர் அருள் பெற்றது

தேசிகர் திருவாய்க்குலத்தை விட்டு வெளியேறுவதற்குக் காரணமாகவிருந்த கந்தாடை இலட்சுமணாச்சாரியருக்கு உடல் முழுவதும் வெண் குட்டம் உண்டாகிவிட்டது. அவருக்கு மக்கட்பேறும் உண்டாகவில்லை. அவருடைய

மனைவியார் தம்முடைய கணவரைப் பார்த்துத், "தக்கட்டு இச்சோம் உண்டாகி கிருப்பதும் மக்கட்பேறில்லாமல் இருப்பதும் வேளாத் தெகிகாரகிய பகவதருக்குச் செய்த குற்றத்தினலேயாம். அவருடைய திருமுன்போய்ப் பிழை பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்வீராகில் எல்லா வகையான நன்மைகளும் உண்டாகும்" என்று கூறினள். இலட்சமணாச்சாரியர் மனைவி கூறியதற்கு இணக்கினர். பல்லக்கு முதலிய ஆடம்பரங்கள் ஏதுவு மில்லாமல் மனைவியோடு புறப்பட்டார்; தெகிகர் இருக்கும் சந்நிதகாலத்திற்குச் சென்றார். அவ்விருவரையுந் தெகிகர் தமது திருமாளிகைக்கு அழைத்துக்கொண்டு போய்ச் செய்ய வேண்டிய உதவிகளெல்லாஞ் செய்து கன்றாகப் போற்றினர். இலட்சமணாச்சாரியர் தாமும் மனைவியும் அவ்விடத்திற்கு வந்த காரணத்தைக் கூறினர். ஓராண்டுக் காலம் அவ்விடமே இருவரும் வாசஞ்செய்து கொண்டிருந்தார்கள். நான்காம் தெகிகருக்கு வந்தன வழிபாடு செய்துகொண்டு அவருடைய திருவடித் திருத்த நீரை உண்டு கொண்டிருந்தார்கள். இவ்வாறு சிலகாலஞ் செல்லவே இலட்சமணாச்சாரியருடைய வெண் குட்ட நோய் மறைந்து விட்டது. அவருடைய மனைவியும் கருப்ப வதியாளுள். இருவரும் மிகுந்த களிப்படைந்தார்கள். தெகிகருடைய உடன்பாடு பெற்றுக்கொண்டு திருவரங்கத் திற்குத் திரும்பினர்கள்.

மகப்பேறு

ஒரு நல்ல காளில் இலட்சமணாச்சாரியருக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அப்புதல்வன் தெகிகருடைய நீர்த்தப் பெருமையினாற் பிறந்தவனைபால் அவனுக்குத் நீர்த்தப் பிள்ளை என்று பெயரிட்டார்கள். அப்புதல்வன் வளர்ந்து சிறந்த வினஞ்சினன்.

திருவரங்கத்திற்கு வருதல்

தேசிகர் திருவரங்கத்தை அடைந்து பெருமானைக் கண்டுகளிக்க விரும்பினார். மனைவி மக்களைச் சத்தியலோகத்திலேயே விட்டுவிட்டுத் திருவரங்கத்திற்கு வந்தார். அரங்கப் பெருமானைப் போற்றி வழிபட்டுக் கொண்டு சிலகாலம் தங்கியிருந்தார்.

துருக்கர்கள் படையெடுப்பு

தேசிகர் திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும்போது முகமதியர்களுடைய ஆர்ப்பாட்டம் காட்டிலே மிகுதியாகவிருந்தது. அவர்கள் குதிரைப்படையோடு வந்து திருவரங்கத்தைச் சூழ்ந்துகொண்டார்கள். கோயில் அதிகாரிகள் கருப்பக் கிருகத்தைக் கல்லினை போட்டு மூடினார்கள். பெருமானையும் நாச்சியாரையும் ஒரு பெட்டியிலே வைத்துப் பூட்டி எடுத்துக்கொண்டு நள்ளிரவில் வெளியேறினார்கள். பின்னே லோகாசாரியரும் உடன் சென்றார்.

கருநாடக பிரகாசிகை பட்டர்

திருவரங்கத்திலே கருநாடக பிரகாசிகை பட்டர் என்றும் அறிஞர் ஒருவர் இருந்தார். அவர் பாடியத்திற்கு கருநாடப்பிரகாசிகை என்னும் பெயரோடு விரிவுரை (விபாக்கியானம்) ஒன்று எழுதிவைத்திருந்தார். அதை இவருடைய கையிலே கொடுத்து, "இதை நீர் ஆராய்ந்து பார்த்து உலகத்திலே பரவும்படி செய்யவேண்டும். மற்றும் என் மக்களையும் வேதவியாச பட்டர் பராசரப் பட்டர் ஆகிய இருவரையும் அடைக்கலமாகத் தருகின்றேன். அவர்களைப் பாதுகாத்துக் காப்பாற்றியருள வேண்டும்," என்று சொல்லி வேண்டிக்கொண்டார். பிறகு முகமதியர் களுடைய கையிலே அகப்பட்டு மாண்டுபோனார்.

தேசிகர் திரும்புதல்

தேசிகர் மூகமதியர்கள் கையில் அகப்படாமல் சுரங்கியாகத் தப்பி வெளியேறினர், ஓரிடத்தில் கும்பல் கும்பலாக வெட்டுண்ட பிணங்கள் கிடந்தன. மூகமதியர்களால் இவருக்கும் இவருடைய கையில் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்கட்கும் தொல்லை ஏற்படும்போல் தெரிந்தது. சிறுவர்கள் இருவரையும் பிணக்குவியல்களிடையே மறைத்து வைத்தார். தாமும் பிணங்களோடு பிணமாக விழுந்து கிடந்தார். பிணங்களை வாரி மேலே போட்டு மூடியுங் கொண்டார். கொடிய மூகமதியர்கள் அவ்வவர்கள் பலரைக் கொன்று தொலைத்துவிட்டு வேறிடஞ் சென்றார்கள். பிறகு தேசிகர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுச் சந்தியகாலம் போய்ச் சேர்ந்தார். சுருதப்பிரகாசிகையை நன்கு ஆராய்ந்து பார்த்துப் பிறகு உலகத்திலே பரவச் செய்தார். சிறுவர்கள் இருவருக்குஞ் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாஞ் செய்து கல்வியுங் கற்பித்தார். திருவாங்க நகர் வெகுகாலம் வரையிலும் மிலேச்சர்களுடைய வசப்பட்டிருந்தது. தேசிகர் திருநாராயணபுரம் முதலிய இடங்களுக்குப் போய்ப் பெருமாள் வழிபாடு செய்துகொண்டு திரும்பினர். திருவரங்கம் மிலேச்சர்களுடைய கையிலிருந்து மீளவேண்டுமென்று தோத்திரம் ஒன்று செய்தார். அதனுடைய பெயர் 'அபீதிஸ் தவம்.'

சிற்பியை வென்றது

ஒரு நாள் சிற்பி யொருவன் தேசிகரிடம் வந்து "தாங்கள் சிற்ப நூலிலும் வல்லவரோ? என்னை வென்றுவிட்டீரானால் தங்களுடைய சருவ தந்திர சுதந்திர் என்னும் பெயர் கிடைபெறும்," என்று மிகுந்த ஆணவத்தோடு கூறினன்.

இவன் பிறருடைய தூண்டுதலால் வந்தவன். தேசிகர் சிற்பியைப் பார்த்து, "நீ குறிப்பிடும் ஓர் உருவத்தை நாம் செய்து தருகிறோம். அதற்கேற்ற இருக்கை ஒன்றை நீ உண்டாக்கி அதில் அவ்வுருவத்தை இணைக்கித் தர வேண்டும்," என்று கூறினர். அதற்கு அவன் "உங்களுடைய வடிவமைந்த உருவத்தையே செய்துகொடுத்தால் நான் இருக்கை செய்து இணைக்கித் தருகிறேன்," என்றான். பிறகு தேசிகர் திருவருள் நோக்கப்படி தம்முடைய வடிவத்தைச் செய்து கொடுத்தார். சிற்பியானவன் அவ்வடிவத்தில் கண் பார்வை சரியாக இல்லையென்று சொல்லி அதனைச் சரிப்படுத்த எண்ணினான். வடிவத்தின் கன்னத்தில் ஆயுதத்தால் சிறிது திருத்தினான். உடனே எதிரில் இருந்த தேசிகர் கன்னத்தில் சிறிது இரத்தம் கசிந்தது. அதனை அங்கிருந்தோர் பார்த்தனர். அவர்கள் சிற்பியைப் பார்த்து, "உருவம் சரியாக அமைந்து விட்டது. தேசிகரும் அதில் புகுந்துவிட்டார். இருக்கையிலுடைய தவறுதலால்தான் கண் பார்வை ஒழுங்காக அமையவில்லை" என்று கூறினர்கள். தேசிகர் இருக்கையை (பீடத்தை) வாங்கிச் சரிசெய்து உருவத்தை அதில் வைத்து இணைக்கிறார். சிற்பி தேசிகரை வணங்கித் தன்னுடைய குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவ்விடம்விட்டு மெதுவாக நழுவிச் சென்றான். இவ் வடிவத்தையும் தாம் இயற்றிய சிற்பசாரம் என்னும் நூலையும் தேசிகர் தம்முடைய புதல்வரிடம் ஒப்புவித்தார்.

வேறு சில நூல்கள்

மற்றும் இவர் தமது கல்லொழுக்க நெறிக்கு ஆதாரமாகவும் தமது போறிவின் சின்னமாகவும் வேதம் உபநிட

தம் முதன்மைகளின் மறைபொருளாயும் உள்ள கிரோதி பிளாரம், சாரசம் இரகசிபத் நிரபராதம் முதலிய தன் கீழ்ப் பிற்காலத்தவர்களுக்குப் பயன்படுமாறு செய்து தம் மாணவ புதல்வரிடமும் மாணவரிடமும் ஒப்புவித்தார். வடமொழியிலும் தென்மொழியிலும் இவர் இயற்றிய நூல்கள் பல. சிறப்புள தென்னாற்கண்மையுள்ள அருமை பாடல்கள் பல. அருளும் அன்பும், மக்கட்பண்பும் சிவ ஒழுக்கமும் இவரிடம் வாய்ந்திருந்தன. திருமால் பக்திரிற் சிறந்தவர் இவர். புதுமைச் செயல் புரிவதும் நூலியற்றலுமே இவர் கொள்கை.

இறுதி

இவ்வாறு பல புதுமையான செயல்களை யியற்றிய தோடு நூல்களும் செய்துகொண்டிருந்த வள்ளல் ஒன் றிலே அரங்கன் திருவடியை அடைந்தார்.

சில பாடல்கள்

இவர் இயற்றிய தமிழ் நூல்களில் இருந்த சில பாடல் களைக் காண்க.

அத்திகிரி மாண்மியம்

அருச்சி விருத்தம்

"உத்தம மலர்த்தல மடைத்தொரு பொழிற்றனு
உயர்த்த கணையால்,
அத்திர வரக்கன்முடி பத்துமொரு சொற்றென
உதிர்த்த நிறலோன்
மத்தக மிருத்தலிற் மொய்த்தவெனல் வைத்தது
மத்த னிடமாம்
அத்திகிரி பத்தர்வினை யொத்தற வறுக்குமணி
அத்தி யிதுவே."

பன்னிரண்டாம் ஆசிரியச் சந்த விருத்தம்

"அன்னலமு வானகைபு மன்னகைட யாளுபரும்
அன்னவ சேறிலருவான்
அத்தனைய னத்தனைய னுத்திதனை அத்திதென
உத்தி புரியான்,
கன்னகைவி டாகடமி தென்னகட வாரவுள்
கண்ணுருட கேறிபிழிவாள்
கற்பதிகள் அற்பதிகள் கற்புரள அற்புத
மருக்க நியிலுல்
கண்ணகைவி டாவிடமி னுன்னதிசி ருவிகட
மண்ணுகிரி கூடமிடியக்
கட்டவிகை பிற்றவிழ முற்றம்விழி புற்றகைடய
விட்ட ருகுற
அண்ணைய சோயனி தென்னென வீழாவமார்
மண்ணுபதி யேறிமகிழ
அச்சுதன னுனத்தனுவி லத்திகை வரத்தகைய
வற்ற னுகிளுள்."

பதினைந்தாம் ஆசிரியச் சந்த விருத்தம்

"பெடையி ரண்டையொ ரணம கைடந்துபி
ரிந்தி டாவகை பேசலாம்
பெருகும் அருவிகள் அருகு மருவிய
பெரிய மணிவரை டயிலலாம்
பிடியி ரண்டொடு களப மொன்று
பிணைந்த பொழு கோதலாம்
பிசிவி லொளியொடு கிழது மருகுதம்
இரவி இலருதல் பரவலாம்
கொடிஇ ரண்டொடு விடபி யொன்று
குளிர்ந்த வாது குலாவல்லாம்
குறைவில் சருதியு கிலவு மிலகிய
கரும வருகிலை யென்னலாம்
அடிபி ரண்டையு மடையு மன்பர்
அறிந்த போரு ளாளனர்
அனுகு மலர்மகள் அவனி மகனொடு
கரடி கிரிகிலை கவர்தலே."

அதிகாய சங்கீரகம்

பதினெட்டாம் ராசியச் விருத்தம்

'உதயசடம் உடையவொரு காலற் றணர்ந்தன
உடன் மருதம் உடையவொரு போதிற் றவழ்ந்தன
உதிதடவு மனவிலுர வோடற் றின்றன
உறகெறிபோர் தருமன்வில் லதற் குகந்தவே
மறகெறியர் முறியபிரு தானத் தவர்ந்தன
மலர்மகன்கை வருடமலர் போதிற் சிவந்தன
மறபிறவி அறமுனிவர் மாலுக் கிசைந்தன
மறுமுறையில் வருவதொர்வி மானத் தறைந்தன
அறமுடைய விசயனமர் தெரிற்றிகழ்ந்தன
அடலுரக படமடிய வாடிக் கழிந்தன
அறசமய மறிவரிய தானத் தமர்ந்தன
அணிகுருகை கதர்முனிவர் காவுக் கணைந்தன
வெறியுடைய தளவமலர் வீறக் கணிந்தன
விழுகரியொர் குமரனென மேவிச் சிறந்தன
விறலகார் படைபடைய வீயத் தொடர்ந்தன
விடலரிய பெரிய பெரு மாண்மைப் பதக்கனே."

கவரத்தின மாலை

பதினெட்டாம் கழிநெடி லாசிரியச் சந்த விருத்தம்

'ஒருமதி யன்ப ருளக்க லர்ந்தன
உலக மடங்க வளர்ந்த ளந்தன
ஒருசடை ஒன்றி யகங்கை தந்தன
உரக படக்க ரசக்கு கொண்டன
கருமரு வர்ந்த நிதன்ற ரின்றன
கருமனிரத்த நிலைசத்து சென்றன
சுடரமுடைத்து கலக்க வென்றன
தமர்க ளருத்து மருத்தி தென்பன
நிருமகள் செய்ய கரங்க ளொன்றின
நிகழ்ந்தன வுத்த மணக்க மழ்ந்தன
செழுமணி கொண்ட நிலம்பி லக்கின
நிலைதனி லன்ற ரணக்க மிழ்ந்தன

அருமறை யத்த மமர்த்த பண்பின
அயன்முடி தக்கி யமர்த்து யர்த்தன
அருடரு வெண்றி யயிக்கை வத்தன
அடியவர் சிக்கைபுதும் பதங்களே."

பரமபத சோபானம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

"அடலுரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல
அழுக்கடைந்து கழுவியநற் றரளம் போலக்
கடலொழுகிக் கரைசேர்ந்த கலமே போலக்
காட்டுத்தீ கவந்தொழிந்த களிறே போல
மடல்கவரு மயல்கழிந்த மாதர் போல
வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றூர் போல
உடல்முதலா உயிர்மறைக்கு மாயை நீங்கி
உயர்ந்தபத மேறியுணர்ந் தொன்றி னேமே."

மும்மணிக் கோவை

நீலமண்டல ஆசிரியப்பா

"பயின்மதி நீயே பயன்மதி தருதலின்
வெளியும் நீயே வெளியுற கிற்றலின்
தாயும் நீயே சாயைதச் தகத்தலின்
தந்தையு நீயே முந்திகின் றளித்தலின்
உறவு நீயே துறவா தொழிதலின்
உற்றது நீயே சிற்றின்பம் இன்மையின்
ஆறு நீயே ஆற்றுக் கருடலின்
அறமும் நீயே மறகிலை மாய்தலின்
துணைவனு நீயே இணைபிலில்லை தூதலின்
தப்பலு நீயே செய்யா னுணர்தலின்
காரண நீயே சரண னுதலின்
கற்பகம் நீயே கற்பதச் தருதலின்
இறைவனு நீயே குறைவொன் றிலாமையின்
இன்பமு நீயே துன்பத் துடைத்தலின்
யாவும் நீயே என்னுள் உறைதலின்

எனது நீயே உனதன்றி யின்மையின்
நல்லாய் நீயே பொல்லாங் கிலாமையின்
நல்லாய் நீயே வையமுண் டுமிழ்தலின்
எக்கணு மாரு மெய்யுள் வியப்பே
அக்கனே பொக்க அறிவதா ணமே."

இத்தகைய அரிய பாடல்களைக் கொண்டு இவருடைய செந்தமிழ்ப் புலமையை நாம் ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். இவ்வாறு இவர் இயற்றிய நூல்களில் சில மறைந்து போக இப்பொழுது உள்ள நூல்களின் விவரத்தை அடுத்துக் காண்க. இருமொழிப் புலமை வாய்ந்தவர்களில் இவ்வளவு நூல்களை இயற்றியவர் வேறெவருமில்லை யென்னலாம்.

இயற்றிய நூல்கள்

தமிழ்

க. மும்மணிக் கோவை
உ. நவரத்தினமாலை
ங. மடைசற்பா
ச. பத்துப்பா
ஞ. கழற்பா
க. அம்மானைப்பா
எ. ஏசற்பா
அ. பரமதபங்கம்
க. திருச்சின்னமாலை
50. அடைக்கலப்பத்து
கக. பன்னிரு சாமப்பாட்டு
கஉ. வையை நினைசரி
கஅ. சிறங்க நாச்சியார் நிரி
கஆ. பூத்நிரி
கஇ. ளோத்நிரி
கஈ. தசாவதார சோத்திரம்
கஎ. பரமபதசோபாணம்
கஏ. பிரபந்தசாரம்
உ0. ஞான தியமம்
உக. திருமந்திரச் சுருக்கு
உஉ. தலபச்சுருக்கு
உங. சமச்சோலைச் சுருக்கு
உச. சோத்த சன்றோகம்

வடமொழி

க. சுருட பஞ்ச சத்
உ. அபயதீவ சோத்திரம்
ங. சேவாலய பஞ்ச சத்
ச. அச்ச சகஸ்சோத்திரம்
ஞ. ருஷ்ரசத்தியம்
க. சோபாலவிம்சதி
எ. சேவிசத்நிரி
அ. வராக பஞ்சாசத்

கு. அட்டபுசாட்டகம்
கூ. யதிராஜசப்ததி
கூ. சமாசிசாட்டகம்
கூ. சரணாகதி தீபிகை
கூ. பரமார்த்தஸ்துதி
கூ. கதசிலை அட்டகம்
கூ. சேடசாயுதத் துதி
சு. வடிகாசலத்துதி
சூ. தயாசதகம்
சூ. வைராக்கிய பஞ்சகம்
சூ. சதத்தூடணி
உ0. அதிகரண சாராவளி
உ. எதிராசசப்ததி
உ. தத்துவமுக்தா கலாபம்
உ. சர்வார்த்த சித்தி
உ. நியாய சித்தாஞ்சனம்
உ. நியாய பரிசுத்தி
உ. சேச்சுவர மீமாம்சை
உ. மீமாம்சா பாதுகை
உ. தத்துவடீகை
உ. அதிகரண தர்ப்பணம்
உ. வாதிக்கிரய கண்டனம்
கூ. தாற்பரிய சந்திரிகை
கூ. சகலவாஸ்ய பரிஷியம்
கூ. தோத்ர சக்திரகட்சை
கூ. சத்சரித்திர கட்சை
கூ. கீர்வெய கட்சை
கூ. இரகசிய கட்சை
கூ. பாஞ்சராத்திர கட்சை
கூ. அரிநின நிலகம்
கூ. நியாச நிலகம்
சு0. நியாயச விம்சதி
சூ. நியாச தசகம்
சூ. சகாச சமர்த்தனம்

சூ. சங்கற்ப சூரியோதயம்
சூ. யாதவாப் புதயம்
சூ. தத்துவத் திரயசூடகம்
சூ. இரகசியத் திரயசாரம்
சூ. தத்துவ பதவி
சூ. இரகசிய பதவி
சூ. தத்துவ சலீதம்
0. இரகசிய சலீதம்
. தத்துவமாதிருகை
. இரகசிய மாதிருகை
. தத்துவ சத்சாவலி
. இரகசிய சத்சாவலி
. இரகசிய சிகாமணி
. அஞ்சலி வைபவம்
. பிரதான சதகம்
. அபயப் பிரதான சாரம்
. சம்பிரதாய பரிசுத்தி
. உபகார சங்கிரகம்
. சாரசங்கிரகம்
. திருமுடியலைவு
. கனகதாரசவ்துதி
. பாதுகா சகஸ்ரம்
. சமஸ்யா சகஸ்ரம்
. சிகமபரிமளம்
. ஆரதனக்கிரமம்
. அம்பாஸக்தேசம்
. சபரிதந்தி
0. தத்துவ சங்கேதம்
. இரகசிய சங்கேதம்
. அபீதிஸ்தவம்
. சிற்பார்த்த சாரம்
. இரகசியத் திரயசாரம்
. விசோதி பரிகாரம்
. சாரசாரம்

எஎ. தத்தல சத்காவலி சம்பிரகம்
எஅ. இரகிய சத்காவலி இருதயம்
எக. நிரம்பேடாபதிடத்தின் சாரம்
அ0. யக்ஞோபவீதப் பிரதிட்டை
அக. இரகிய சந்தோச விவரணம்
அஉ. நிரம்பேடாபதிடத்தின் தாத்பரிய சத்திகாவலி

என்பன.

ஊ. பொன்முடியார் கவிராய பழந்திகன்

தோற்றம்

பாண்டிவள நாட்டில் சேற்றாரில் கொல்லம் எஅ0 ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். இவர் தோன்றிய மரபு அவர்தம் கால சற்குருநாதர் வேளாளர் மரபு. இவருடைய தந்தையார் பெயர் வைகாசிபபதிப் பின்னை. தாயார் பெயர் அருட் பாலை. இவருக்கு இடப்பெற்ற பின்னைப் பெயர் சிந்தாமணிப் பின்னை.

கல்வி

ஐந்தாவது அகவையிலேயே பள்ளிக்கு அனுப்பப்பட்ட இவர் வடமொழி தென்மொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் சற்ற இருமொழிப் புலவராக இலங்கினர்.

நூல்கள்

செய்யுள் பாடத் தொடங்கிய இவர் பலவகைப்பட்ட நூல்களை இயற்றினர். 'சேறைத்தலபுராணத்தைப் பாடிச் சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நிதிக்கும்' இடையில் இருந்த அரங்கேற்றினர். அப்போது சிவபெருமானுக்கு திருவருளால் பூமாரி பொழிந்தது. அப் புதுமையைப் பார்த்த அவையிற் கூடியிருந்த மக்கள் மிகுந்த வியப்புக் கடலில் மூழ்கினர்.

பொன்முழுக்கு

புலவரின் பெருமையை கன்குணர்ந்த அரசர் புலவரைப் பாராட்ட எண்ணினர். இறைவனுக்கும் இறைவிக்கும் சிறப்பான திருமுழுக்குகளும் பூசையும் கடந்தினர். ஆதிரம் பொன்கலைப் புலவருக்கு முடிமீற் பெய்து (கனகாபிடேகம்) போற்றிப் பாராட்டினர்.

பொருமையும் பூசலும்

அங்குக் கூடியிருந்த புலவர்களில் சந்திராழுத கவிஞர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த அறிஞராயினும் பிறராக்கங்கண்டு பொருமையாகிய அழுக்காறு அவர்மாட்டுச் சிறிது இருந்தது. அழுக்காறென ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடுமன்றே? சந்திராழுத கவிஞர் வீண் போராட்டத்தில் இறங்கினர். அங்குக் கூடியிருந்த அறிஞர்களையும் அரசரையும் பார்த்து, "இவர் செய்த தூலிற் சில குற்றங்கள் இருக்கின்றன. இதனை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்," என்று கூறினர். தூலாசிரியர் முதலியோர் அவரைப் பார்த்து, "நீர் கண்ட குற்றங்கள் யாவை?" என்று உசாவினர். அதற்கு அக் கவிஞர், "நீர் செய்த புராணத்தில் உள்ள காடு நகரம் முதலிய சிறப்புப் படலங்கள் வடமொழிப் பிரமகை வர்த்த புராணத்தில் இத்தல வரலாற்றைக் கூறுஞ் சங்கிதையில் உரைக்கவில்லையே! அல்லாமலும் பிரம முனிவர் அகத்தியருக்குப் பிரித்துப் புராணஞ் செய்ததிலுங் கூறவில்லையே" என்று பல வகையான குதர்க்க மொழிகளைப் பேசினர். இதற்கு தூலாசிரியர் மறுமொழி கூறத் தொடங்கினர்: "வடமொழியிற் காந்தபுராணத்தில் சத சங்கிதையிலும், அகத்தியருக்குப் பிரித்துச் செய்த தூலாசிய மகத்துவத்திலும் பாண்டிநாட்டு நிகள் முதலியன கூறுதிருக்கத் தமிழில் மொழி

பெயர்த்த பாஞ்சாதி முனிவர் நாடு நகரம் முதலிய சிறப் பனிகள் கூறியிருக்கின்றார்; அவ்வாறு கூறுதல் குற்ற மாகாது," என்றார்.

சொற்போர் தொடர்தல்

மேலும் சொற்போர் தொடருவதை. சந்திராழுத கவிஞர் நலாசிரியரைப் பார்த்து, "பாண்டிவளநாடு ஐம் பத்தாறு நாடுகளில் ஒன்றுகளின் பாஞ்சாதி முனிவர் கூறினர். அஃதிபற்றை. மற்றைய நாடுகட்கு அவ்வாறு கூற இயலுமோ" என்றார் கவிஞர். "ஏனைய நாடுகளின் சிறப்புக் களையும் பற்பல அறிஞர்களும் பலவாறு வியக்து பாடியிருக் கிறார்கள்; மேலும் புவனகோசரப் படலத்தில் ஒரு புவனத் தில் பல அண்டங்களும் பல அண்டத்தில் பற்பல உலகங் களும், பல உலகத்தில் பல தீவுகளும், பல தீவுகளிற் பல கண்டங்களும், பல கண்டங்களிற் பல நாடுகளும், பல நாடு களில் பல நகரங்களும் உளவென்று கூறுதலால் நாடுகள் ஐம்பத்தாறுதா னென்னும் எல்லையில்லை," என்று இயம்பினர்.

தெய்வ உடன்பாடு

சந்திராழுத கவிஞர் மேலே சொல்ல வ்வகையிற்பாது சிறிதுநேரம் சிழித்தார். பிறகு ஒருவாறு எண்ணமிட்டுச், "சேக்கிழார் சுவாமிகள் கச்சியப்ப சுவாமிகள் முதலானவர் களுடைய நல்லறிவுக் கடவுள் ஒப்புக்கொண்டதைப்போல உமது நல்லறிவுக் கடவுள் ஒப்புக்கொள்ளவில்லையே?" என்றார். அங்குக் கூடியிருந்தோர் அனைவரும் 'இஃதென்ன குதர்க்க வாதமாக இருக்கிறது' என்று எண்ணினர்கள். கவிஞர்மீது மிகுந்த சினங்கொண்டார்கள். நலாசிரியருடைய பெரு மையையும் நூலின் பெருமையையும் கவிஞருக்கு எடுத் துச் சொன்னர்கள். நல் அரங்கேற்றத்தின் இறுதியில்

மலர்மழை பொழிந்ததென கவிபாடுன் ஒப்புக்கொண்டதற்குக் காரணம் என்னென்க.

மலர் மழை

கவிஞர் இம்மட்டிலாவிதும் அடங்கினரில்லை. "மலர் மழை பொழிவதை ஏழு முகில்களுன் ஒரு முகில் இயற்கை இஃதொரு புதுமையாகுமோ?" என்று வாய்ப்பறை மறைந்தார்.

தெய்வத் திருவருள்

நல்பாடிய அறிஞர் சிந்தாமணிப் பின்னர் மனைவருத்த மடைந்து ஆங்கெழுந்தருளி யிருக்கின்ற உமாதேவியை உள்ளத்தில் எண்ணித் தொழுதனர். அப்போது உமா தேவி இவருக்குத் திருவருள் செய்ய எண்ணினுள். சந்நிதியிலே வளருகின்ற கிளியொன்று உள்ளே சென்று உமா தேவியின் திருக்கையில் இருந்த தூய் செண்டையும் மோதிரத்தையும் வாயினுற் கௌவிக்கொண்டு வந்து புராணிகர் கையிலே புனைந்து, "சரி சரி" என்று சொல்லிவிட்டுச் சென்றது. அச்செயலை அங்குக் கூடியிருந்தோரனைவரும் கண்டு பெரு வியப்படைந்தனர்.

கவிஞர் பாராட்டு

சந்நிதிமுதல் கவிஞர் மிகுந்த வியப்பும் அச்சமும் அடைந்தார். அவருடைய ஆணவமும் பொருமையும் அடியோடு அகன்றது. அவருடைய பெருமையைத் தாமும் பாராட்டத் தொடங்கினர். சில பாடல்கள் இயற்றியபின்னர் தாமுக்குச் சிறப்புப் பாயிரமாக,

"சந்தாஞ் சூழுந் தண்டலைச் சோறச்
சென்மயத் திருவனுங் கணக்கில்
சந்தாஞ் சேரும் விரதமா தவரும்
சம்பெறத் தமிழினுல் தொகுத்த

மந்தர மீர வருவன் செய்த
வரலுப் சந்திமண் டபத்தில்
அந்தர் அமிழ்தம் வைப்பெனப் பொன்று
மிர்க்கலி எற்றிலுன் அரங்கே."

என்ற சிறப்புப் பாடலைப் பாடினர். ஆதிசம் பொன்னும் திருமுழுக்காட்டப் பட்டதுபற்றி இவருடைய பெயரைப் பொன்னிரம் கவிராயர் என்று வழங்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அனைவரும் உடன்பட்டனர். அன்று முதல் பொன்னிரம் கவிராயர் என்ற பெயர் வழங்கியது. அப்பொழுது பாடிக்காசுச் சுவாமிகள்,

சேயிரண்டு சண்டமிழ்த்து செறிந்த பாற்கடல் கல்லிலுர்
வேயிரண்டு மன்றிவாவி வினக்கு காவலை சேனையின்
பாயிரம்பெற காவிடக்கள் பகர்ந்த காவலன் கொடியினர்
தூயிரக்கவி சொல்லும் வல்லபான் னுயிரக்கவி ராசனை.

என்னுஞ் செய்யுளையும் பாடிப் பாராட்டினர். அவ்வளவில் இருந்த வேலியப்ப சுவாமிகள் என்னும் பெரியார்,

"சித்தா மணிக்கலிஞர் செய்தபுரா ணத்தனக்குச்
சத்தா முதலிஞர் தாமுமே—வத்திருந்த
குற்றமற கூறினுர் கோதிலை சற்றதனைப்
பெற்றவரும் ஓர்ந்ததனைப் பின்.'

'தன்காரத்தின் பூம்பினையைத் தானறுப்பி லேவாதம்
சொன்னவரே வென்றவர தாய்ச்சுமே—என்னமிழ்
தம்பினைக் திக்கலிஞர் சாழிசொலுக் கம்பொருத்த
சம்புவி வென்றதுவே சன்று."

என்னுஞ் செய்யுட்களைப் பாடினர்.

நகர்வலம்

பிறகு அரசர் பெம்மயத்தேவர் பொன்னிரம் கவிராயரைப் பல்லக்கிலேற்றி நகர் வலம் செய்வித்துச் செய்ய வேண்டிய சிறப்புக்களையெல்லாஞ் செய்து பாராட்டினர்.

சேறைத் தலபுராணம்

சேறைத் தலபுராணம், முப்பத படலங்களையும் தூரிசத்த தற்தருத்த சென்யுட்களையும் கொண்டு விளக்குறைத.

"அண்ணைபெற்ற எயில் தருத்தலம் புரிந்திடச்
செண்ணைபெற்ற அன்பிலைது சேறைபெற்ற பண்பிலும்
கண்ணைபெற்ற சேற்றை என்ற சொல்லாலும் சேறையாய்
மண்ணைபெற்ற தலத்தலங்கள் முற்றமைத உற்றிர."

என்பத திருகோப் படலத்தில் ஒரு பாட்டு. இவர் அன்னைக் காலத்தளில் தனிப் பாடல்கள் பல இயற்றிருந்தலோடு பின்வரும் நூல்களையும் எழுதியுள்ளார்.

இயற்றிய நூல்கள்

அ. சேறைத் தலபுராணம்
ஆ. தென்மலைத் திரிபுரத் தீசர் புராணம்
இ. புதுவை வடவாலீசர் புராணம்
ஈ. திருக்கண்ணீசுரர் செந்தமிழ்ப் பாமாலை
உ. திருவேலங்கை வெற்புமை சன்மணிமாலை
ஊ. சேறைப் பதிற்றுப் பத்தந்தாதி
எ. சேறையுலா
ஏ. சேறைக் கலம்பகம்
ஐ. சற்குருவார் பிள்ளைத் தமிழ்
ஒ. உபய வீரபத்ர ஒலிச்மணிமாலை

பதிப்பு

சேற்றைத் தலபுராணத்தை மு. ரா. கந்தசாமிக் கவிராயர் கதகரு தும் தூண்டல் அச்சிற் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

---

9. இராமாச்சாரியர்

தோற்றம்

சோழ வளநாட்டில் கன்னிலம் புலைவண்டி சிலைபத் திற்குத் தெற்கே கால்கு காழிகை தொலைவனில் உள்ள திருக்கண்ணபுரத்திற்கு அண்மையில் உள்ள பிள்ளை என்னும் ஊரில் கலைகை ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பத்தொன்பதாம் நாள் பிறந்தார்.

கல்வி

இளமையிற் கற்கவேண்டிய கல்வியைக் கற்றார். பிறகு கோயம்புத்தூருக்குச் சென்றார். அங்கே புத்தக வாணிகஞ் செய்துகொண்டிருந்த ஒன்னே கவுடர் என்பவரது புத்தகக் கடையில் தங்கியிருந்தார். இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தமது அறிவை மேன்மேலும் பெருக்கிக் கொண் டிருந்தார். ஒருநாள் சு. திருச்சிற்றம்பலம் பிள்ளை என்னும் சிறந்த அறிஞர் ஒரு புத்தகக் கடைக்குச் சென்றார். அப் புத்தகக் கடைக்காரர் இராட்டிணமாச்சாரியாரையும் புலவரையும் அறிமுகப்படுத்திவைத்தார். ஆச்சாரியார் புலவரின் அறிவை ஆழங்காண எண்ணினார். 'எனக்குப் படிக்கத் தெரியும்' என்ற மொழியில் எழுவாய் வினைக் யில்லையே?" என்று குறும்புத்தனமாகக் கேட்டார். அதற்குப் புலவர் நகைத்து, "அதில் 'படிக்க' என்ற சொல், 'படித்தல்' என்ற பெயர்ச் சொல்லாற்றலில் வந்தது கூடத் தெரியவில்லையா?" என்று எளிதாக இகழ்ந்து கூறினார். இவர் மிகுந்த நாணமடைந்தார். அன்றே அவரது இல்லத்திற்குப் போய் அவருடைய மாணவராகிக் கல்விகற்கத் தொடங்கினர். சங்க இலக்கியங் களையும் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் ஓதியுணர்ந்த பெரிய அறிஞராவார்.

மணமும் வாழ்க்கையும்

தம்முடைய உடன் பிறந்தாள் மகளாகிய சாரதாயி என்னும் மங்கையை மணந்து இல்வாழ்க்கையில் ஈடுபட்டார். மக்களுள் சிலர் தோன்றினர்.

ஆசிரியத் தொழில்

புலமைத் திறம்பெற்ற இவர் முதலில் சிக்காழி சபாரதய முதலியார் இந்துமதப் பள்ளியிலும், மன்னார்குடி தேசிய உயர்தரப் பள்ளியிலும் பிற இடக்களிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இராமாயணம் முதலிய நூல்களைப் படித்துச் சொற்பொழிவு செய்வதிலும் மிகுந்த புகழ்பெற்று விளங்கினார். இவருடைய சொற்பொழிவைக் கேட்க மக்கள் திரளாகக் கூடுவர்.

பாராட்டு

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் ஆக ஆம் ஆண்டில் இவருடைய புலமையைப் பாராட்டி, "பாலசரசுவதி" என்னும் பட்டத்தை வழங்கினர். சேதுபதி மன்னர் தங்கத் தோடா பரிசாகக் கொடுத்தார். வேறு பல அன்பர்களும் இவரைப் பாராட்டிப் போற்றிச் சிறப்புக்கள் பல செய்திருக்கின்றனர்.

தனிப்பாடல்

இவர் அவ்வப் சமயங்களில் தனிப் பாடல்கள் பல பாடியுள்ளார். அவற்றிற் பெரும்பாலானவை எழுதி வையாமையின் மறந்து போயின. இளமை மணத்தைக் குறித்து இவர்,

"சிற்றுடை கட்டத் தெரியாத வயிற்றுச் சிறுமியரைப்
பற்றுறு பிள்ளைக் கிழவர்கட் கீந்த பணைசெய்பாள்
பொற்றுலி கட்டிப் பொடுக்கென் றறைத்துப் புலம்பலைக்கும்
பெற்றோர்க் கேபெருங் காதக ராமிப் பெருநிலத்தே.

தலையைச் சிரைத்துத் தனிமுலை காட்டித் தலைமீதுக்
கலையைத் தரித்துக் கலியாண வீடனு காதபடி
சிலையைப் புரைதுதற் பாலைய ரைச்செய் தெடுத்தேகக்
கலையைப் பின்றலர் என்றே உரைக்குமிக் காலினிலே."

என்னுஞ் செய்யுட்களைப் பாடியுள்ளார்.

இறுதி

இவர் கலைஉ ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முன்றும் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்த இறைவன் திருவடி நீழலே படைந்தார்.

இயற்றிய நூல்கள்

க. இரட்டை மணிமாலை
உ. சோவைக் கலம்பகம்
ங. சன்றி மாலை
ச. சுவமணி மாலை
ஞ. இரட்டை மணிமாலை
ட. சீதாலட்சுமி
ண. அமிர்தவல்லி
த. மூத்தான் இலையாளான கதை
ந. இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள்
ப0. முடிசூட்டு வைபவம்
பக. திருப்பாண்டிக் கொடுமுடி மும்மணிக் கோவை
பஉ. வேசையர் விழைவு அறல்
பங. மணவாள மாமுனி நூற்றந்தாதி
பச. திருநறையூர் நம்பிமேல் விடுதூது
பஞ. அன்னிபெசண்டு வரலாறு
பட. புலவாற்றுப் படை

முதலிய நூல்களை இவர் இயற்றியிருப்பதோடு பல நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டிருக்கிறார்.

---

5. இராசகோபாலப் புலவர் *

தோற்றம்

கமர் நாடு தண்டுகட்குமுன் கள்வெரும்புக் கண்வள நாட்டில் நோநத்தம் என்னும் ஊரில் மிட்டாதார ராக இருந்த ஆயர்குலத்தினரான செண்பகக்கோனுக் என் பவருக்கு இவர் புதல்வராகப் பிறந்தார். இராசகோபாலன் என்ற பெயரிடப்பெற்றார். அகவை பத்தான காலத்தி லேயே திருக்கோயில் வழிபாடு செய்யவேண்டும் என்னும் அவா மேலீட்டினால் தாயுடன் தாய் தங்கையரைவிட்டு நீங்கினார். தமக்கையான செம்பாத்தாள் என்பவள் தானும் வருவதாகப் பின்சென்றாள்.

சடாமுனி

மைசூர் செல்லும்போது ஒரு காட்டுவழியே சென்றார். ஒருமரத்தில் உறங்கிக்கொண்டிருந்த ஒரு சடாமுனியைச் சுடைபிடித்து இழுத்து எழுப்பித் தம்முடன் அழைத்துக் கொண்டு மைசூர் சென்றார்.

மைசூரில் அரசனிடத்தில் செப்பிடுவித்தை முதலியன செய்து காட்டி உயர்ந்த அறிவால் ஒன்று பெற்றார். பிறகு திங்களூரில் அளகப்பெருமாள் திருமுன்பிருந்த அதிகாரந் செலுத்திக் கொண்டிருந்தார்.

பொய்யின் பலன்

அவ்வூர்க் குடியானவனான ஒரு வேட்டுவக் கவுண்டன் அரசினர் தீர்வை செலுத்தாமல் ஏய்த்துக் கொண்டிருந் தான். அவனை அழைப்பித்து, "ஏன் தீர்வையைச்

---

* இவ் வரலாறும் வேறு சில வரலாறுகளும் கோவைக் கிழார் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களால் கிடைத்தன.

செலுத்தவில்லை?" என்று உசாவினர். அவன் பாதும் மறுமொழி கூறாதிருந்தான். அவனுக்குத் தகுந்த அறிவு கற்பிக்கும்படி ஏவலாளர்கட்குக் கட்டளையிட்டார். அவர்கள் அவனை அழைத்துக்கொண்டு சென்றார்கள். அப்போது அவன், "இவனுக்குப் பிள்ளையா? பெண்டா? தனிக்கு என் இந்த அதிகாரம்?" என்று சொன்னான். அம் மொழி இவருடைய காதுகளில் விழுந்தது. அவனை அழைத்து, "உனக்குத் தீர்வை கொடுப்பதற்கு ஆற்றல் இருக்கிறதா? இல்லையா?" என்று உசாவினர். அவன் "இல்லை" என்று சொன்னான். அவனை விட்டுவிடும்படி சொன்னார். அவன் விடுதலைபெற்று வீட்டிற்குச் சென்றான். அவனுடைய வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. காட்டிற்குப்போகவே காட்டுச் சாலை எரிந்தும் கால் நடைகள் இறந்துங் கிடந்தன. அவன் மனம் வருந்தினான். புலவரிடம் ஓடி வந்தான். தன் குற்றத்தைப் பொறுக்கு மாறும் தீர்வையைச் செலுத்திவிடுவதாகவும் கூறினான். "நீ போய்த் தீர்வையைக் கொண்டுவா; எல்லாம் நன்மை யாகிவிடும்" என்றார். அவன் தீர்வையைக் கொண்டுவந்து செலுத்தினான். எல்லாம் வழக்கம்போல் நன்மையாக முடிந்தன.

தற்கொலை முயற்சியும் அருளும்

இவர் ஒருநாள் இனிமேல் உயிர் வாழ்ந்திருக்க வேண்டியதில்லையென்று நஞ்சைச் சாப்பிட்டார். உடனே அழகு காதப் பெருமாள் தோன்றி மகவுண்டாக வரங்கொடுத்தார். பிறகு தமக்கு அதிகாரம் வேண்டியதில்லையென்று அரசனுக்குணர்த்திவிட்டுக் கௌசிகபுரிக்கு வந்தார். அங்கே காளியம்மன்பேரிற் பாடல்கள் பாடினார். கோயிலில் சடை தரிசனங் கண்டார். கால காலேசுரர்மீது பாடல்கள் பாடினார். பிறகு கோகந்தத்திற்குச் சென்றார்.

தவம்

கோகத்தத்தில் மன்னகபம்மன் திருமுன்பு தவஞ்செய்து கொண்டிருந்தார். ஒருநாள் உணவருந்திவிட்டு மீதி உணவை இலையோடு வெளியே எறிந்தார், இலை ஒரு காகத் தின்மீது விழுந்து அதனைக் கொன்றுவிட்டது. இதனைக் கண்டு மனம் வருந்திய அவர் உணவு கொள்ளாமல் பதி னொன்று ஆண்டுகள் தவஞ்செய்தார். பிறகு அம்மன் கட்ட னைப்படி உணவு கொண்டார்.

புதுமைச் செயல்கள்

ஒரு புலால் பூனையை ஒருவன் கொன்றான். இவர் உடனே அதனை உயிர்ப்பித்தார். ஒரு காலைச் சிலர் அடித் துக் கொன்றார்கள். மூன்றுநாள்கள் ஆனபிறகு அதனை உயிர்ப்பித்தார். இவர் தவஞ் செய்துகொண்டிருந்த காலத் தில் மேலே எறிய பாம்பு ஒன்று மூன்று துண்டங்களாகிக் கீழே விழுந்தது. இவருடைய இருக்கையில் இறுமாப் புடன் உட்கார்ந்த ஓர் அந்தணன் எரிந்து சாம்பலானான்.

குறை தீர்த்தல்

வேளாளகுலத்து இராயகுமார கவுண்டன் என்ப வனுக்கு மனைவியர் மூவர் இருந்தனர். ஆயினும் மகப் பேறு உண்டாகவில்லை. இவரிடம் வந்து அவன் தன் னுடைய குறையைச் சொல்லி முறையிட்டான். இவர் அவனுக்கு மக்கட்பேறுண்டாகுமாறு வாழ்த்தினை கூறி னர். அதனால் அவனுக்குக் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு காராயணன் என்று பெயரிட்டான்.

மணமும் மக்கட்பேறும்

இராமர்கோயில் பூசாரி கருப்பக்கோனருக்குக் காளியம் மாள் என்னும் பெயருடைய பெண்ணிருந்தாள். அவள் கண்

மாலே என்னும் சோபிலல் வருந்தினன். அவனுக்கு இவர் அம்மனை கினைந்து சிறகடித்து எண்ணெய் தடவினர். அவன் சோப் நீக்கிக் குணமடைந்தான். அவனே இவர் மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்று ஊரார் வேண்டிக் கொண்டனர். இவரும் அதற்கு இசைந்து அவனை மணம் புரிந்து கொண்டார். காசபணசாமிப் புலவர், பலகிருட் டிணப் புலவர், சொக்கநாதப் புலவர், சந்திரசேகரப் புலவர் என்னும் பெயருடைய மக்கள் கால்வர் தோன்றினர்.

இறுதி

புலவர் அம்மனைத் தொழுதுகொண்டும் பதிகங்கள் முதலியனவகளைப் பாடிக்கொண்டும் நெடுநாளிருந்து வீடு பேற்றை யடைந்தார். இவருடைய வழிமுறையினர் இன்னு மும் இருக்கிறார்கள்.

பாடல்கள்

இவர் தனிப் பாடல்கள் பல இயற்றியிருக்கிறாரென்றி னும் எதுவும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

ஏ. நாராயணசாமிப் புலவர் - ரா

தோற்றம்

கொங்குவள நாட்டில் ஏறக்குறைய அறுனூறுகட்கு முன் ஆயர்குலத்தில் தோன்றியவர். தந்தையார் பெயர் இராசகோபாலப் புலவர்.

கல்வி

இவர் தம்முடைய தந்தையையே குருவாகக் கொண்டு கல்வி கற்றதன்றி முருகனுடைய அருளையும் பெற்றார்.

திருநிலை

இப்பொழுது சிவணம்பட்டிக்காடு என வழங்கும் ஊருக்கு திருநிலை என்ற பெயர் உண்டு. அதில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளுக்கு திருநிலை மூர்த்தி என்ற பெயர். முருகக் கடவுள் எழுந்தருளிய அம்மலை நாற அடி உயரமும் அரை மைல் சுற்றளவும் உள்ளது. சுற்றிலும் உள்ள ஊர்காள் அம்மலையில் எழுந் தருளிய முருகனைப் போற்றி வழிபடுவார்கள்.

ஆட்டமும் பாட்டும்

காளமணைசாமிப் புலவர் இம்மலையை அடைந்து முரு கக்கடவுளை வழிபடு தெய்வமாகக் கொண்டு போற்றினர். இவர் நான்கோறும் சுணையில் நீராடி மலையேறி ஓரிடத்தில் உட்காருவார். இவருடைய பணிவிடைக்காரனாக விருந்த குப்பக்கோனன் என்பவன் இவர் தலை மீது திருநீற்றைக் கொட்டி முழுக்காட்டுவான். அப்பொழுது அவருடைய கோலம் அஞ்சத்தக்க ருத்ரகோலமாக இருக்கும். அக் கோலத்துடன் கோயிலுக்குப் போய்;

"கஞ்சா அபினி சாராயம்
கள்ளும் கள்ளும் பொசிக்கறியும்
பஞ்சா மிருதம் பணியாரம்
பாலும் பழமுக் தேனுடனே
செஞ்சே லுலவுன் கோழியின் முட்டை
நீற்ற பன்றித் தலையுடனே
அஞ்சாட் சரமா ரத்துலகினுக்கு
தலைத் தலைவென் முதல்வனே
வேல்வேற் தலைவென் முதல்வனே."

என்று சொல்லிப் பாடிக்கொண்டு ஆடுவார்.

அருள்

இவ்வாறு சில நிகழ்ச்சிகள் சென்றன. ஒருநாள் வழக்கம் போல் கந்தாடுகையில் முருகக் கடவுள் மயிலின் மீது

தோன்றினர். "அருணகிரி திருப்புகழ் பாடியதைப்போல நீ அருட் புகழ் பாடு" என்று கூறித் திருவருள் புரிந்தார். திருவருள் பெற்ற இவர் உடனே,

"ஈர்ப்பெற்ற ரத்நகிரிச் சேவகன்மேல் நற்புகழைப்
பார்ப்பெற் றுலகில் பகர்ந்திடவே—ஊருலகம்
எல்லோர் செலிக்கும் இனிய கணபதியாம்
கல்லோனே நின்னருளே கல்கு."

என்று காப்புப் பாடினர். பிறகு,

*"சிவந்த காவியும் இடைவஸ்திரமும்
திகழ்ந்த தாழ்வட மணிர்முப் புரிநூல்
சிவந்த வெண்ணீறணி திருவழகிய வடிவேலும்

சிலம்பலம்பொலி கலிகலி கலிரென
செயற்செயற் செயமென வளரொளி சபை
தினத்தினத்திற மாகர சிவசிவ எனவோத

தவத்த வந்தரு தருகவு மெண்டிசை
சனத் தருந்தரு சகலமு மதுதரு
.....

தளத்தளத்தள மிதுவரு மிதுவரு
சரஞ் சரஞ்சர மிதுபணி ராயிரம்.
தலத் தலத்தல மதுதனி லெங்குஞ் சமரக

சுவந்த சுந்தர துரையர சவனவன்
தூசங்கமே சது ரங்க மதங்கரி
தொடர்ந்து வந்திடு மிதச்சமயம் படை அடியாக

தழைத்தெழுந்து வளர்ந்து செழுந்தருள்
சுகஞ் சுகஞ் சுகமிது தரவருக
தந்தசந்தச தரித மதாகிய மதியோதி

இலக்கணந் தன குலமதி லிடையீ
டிசைந்த சந்தத் துறையினை கூறவும்
இருந்த காளுமென் னுமகா ராயணன் இணையோகம்.

---

* மூலப்பதியில் உள்ளவாறு எழுதப்பட்டது.

இடத்தனில் சக்தி சக்ர யுகம்
இதிகாச சாகை மிலையினில் கிருஷ்ண
வேதாந்தத்தை எமது மேல்வரர் பெருமானே"

என்ற முதற் பாடலைப் பாடி முடித்தார்.

தந்தையார் எண்

இந்தப் பாட்டைப் பாடி முடித்த பின் எழுதித் தந்தை யாரிடம் காட்டினர். பாட்டின் முடிவில் பெருமானே என்று முடித்திருப்பதைக் கண்டு, "அடே! அருணாசி யார் பெருமானே என்று பாடியிருக்கிறார். வேறொருவர் அவ்வாறு பாடக் கூடாது என்று சாபம் இருக்கிறது. ஆகவே உன்னுடைய பாட்டை ஏற்றுக்கொள்ளமாட்டேன்" என்று கூறினர். இதனைக் கேட்டவுடன் இவர் மிகுந்த துன்பமடைந்தார். மனவருத்தத்துடன் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். முருகக் கடவுள் தோன்றி, "ஏன் பாடாமல் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்?" என்று உசாவினர். இவர் பாடாமல் இருப்பதற்குக் காரணம் கூறினர். முருகக் கடவுள் இவரைப் பார்த்து, "அச் சாபத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். நீ அஞ்சாமல் பாடுவாயாக!" என்றார். இவரோ தந்தையினுடைய கட்டளை யில்லாமல் பாடமுடியாது என்றார். முருகன் இவருடைய தந்தைக்கு அருள்புரிந்த மனதை மாற்றினர். "பெரு மானே" என்ற இறுதியில் அமைத்துப் பாடலாம் என்னும் எண்ணம் அவருக்குண்டாகியது. பாடுமாறு உடன்பாடு தந்தார். பிறகு அருட்புகழைப் பாடத்தொடங்கி மனமகிழ்ந்து ஒழியாமற் பாடினர். அவ்வாறு பாடப்பெற்ற பாடல் பன்னிரண்டாகிறது. ஆனால் அப்பாடல்கள் பாலும் மறைந்தொழிய இப்பொழுது பன்னிரண்டு பாடல்கள் மட்டும் எஞ்சியுள்ளன.

அனுபதி

அருட் புகழைபன்றி அனுபூதியும் பாடினர்.

"வானே மயிலே றிவரு வானே
தானே தினைத்தான் தொழுதே தினனே
சேனே வினைதர வணுகா மலருன்
வானே ரத்ன சலவல் லவனே."

என்பது அதனுதிகில் ஒரு பாட்டு.

மகப்பேறு

சோதகம் வேளாளரில் பெரியோக் கவுண்டருக்கு ஆண் குழந்தை பிறக்கும்படி அருள் செய்து நாராயணன் என்று தமது பெயரை இடச்செய்தார்.

ஒழுங்கு முறை

மேலும் இவர் சிற்றூர்கள் பலவற்றிற்குச் சென்று சிற்றூர்த் தேவதைகளைப் பாடி ஒழுங்கு முறை என்னும் நூலை இயற்றியிருக்கிறார். ஒரு சிற்றூரில் கவராத்திரி விழாவில் சிறுவர்கள் கோலடித்தக், 'கோது கோது' என்று பாடுவதைக் கேட்டு, "கோது கோது என்று அடி பாதீர்கள்; வேது வேது என்று அடியுங்கள்" என்று கூறி,

"வேது வேவே சரசர வேதுவேவே
வேலாயுதப்பெருமான் வேலாயுதச் சின்னை
வேதுவேவே சரசர வேதுவேவே—குமர வேதுவேவே
சதத்தை வென்னடனம் தேரேதிவே வருகும்
சதப்பூசம் சந்னசி சண்முகனே குழந்தை வேதுவேவே
—குமர வேதுவேவே
பரத வெந்தபாதம் பற்சாட்ச வீபூதி
வேதாந்தம் சந்னசி வேலப்பனே குழந்தை வேதுவேவே
—குமர வேதுவேவே."

என்று பாடினர்.

இறுதி

இவ்வாறு பல செய்யுட்கள் பாடியும் வியத்தகு செயல்கள் புரிந்தும் விளங்கிய இவர் இரத்னசலத்தின் அடிவாரத்தின் கண்ணமைந்த தமது மடத்தில் முருகன் திருவடி நீழலை அடைந்தார்.

அ. நஞ்சையப் புலவர் - அ

[19 - ஊ]

தோற்றம்

கொங்குவள நாட்டில் ஈரோடு தாலுகா மடத்துப் பாளையத்திற் கடுத்த திங்களூரில் கம்மைகுல வேளாளர் மரபில் அப்பச்சிப் புலவர் எனபவருக்கு அருமைப் புதல்வராகத் தோன்றினர் இவர்.

கல்வி

இவருக்கு அகவை ஐந்து நிரம்பியது. தந்தையார் கல்வி கற்பிக்க எண்ணினர். எவ்வளவோ முயன்றும் ஓரெழுத்துக்கூடப் பிடிபடவில்லை. ஆகவே இவரை எருமை மேய்க்கும் பணியில் ஈடுபடுத்தினர்.

முருகன் திருவருள்

ஒருநாள் இவர் எருமை மேய்க்கச் சென்றார். கருத்துடன் பாதுகாவாமையினல் எருமைக் கன்று ஒன்றைப் புலி அடித்துக் கொண்டு போய்விட்டது. எருமைக் கன்றைப் புலி அடித்துக் கொண்டு போய்விடவே இவருக்கு அளவு கடந்த அச்சம் உண்டாகிவிட்டது. இல்லத்திற்குச் சென்றல் தந்தையார் அடித்து வருத்துவாரே என்று எண்ணினர். திங்களூருக்கு மேற்கே நான்குகல் தொலைவில் உள்ள அருள் மலை என்னுந்திருமலையில் எழுதருளிய

முருகக் கடவுளை எண்ணி அழுதார். அருள் வடிவான ஆறுமுகப் பெருமான், கோயிற் பூசகர் சுப்பையரைப்போல் கோலம்பூண்டு நஞ்சையர்முன் தோன்றினர். இவரை விளித்து "நீ அழுவதற்குக் காரணம் என்ன"வென்று உசாவினர். இவர் நிகழ்ந்த செய்தியை உரைத்துவிட்டு விம்மிவிம்மி அழுதார். அருச்சகர் வடிவில் வந்த அறுமுகர் "அழாதே" என்று தேற்றினர். ஓர் எருக்கந் தளையில் எருக்கின் ரசத்தைப்பிழிந்து இவரைக் குடிக்கச் சொன்னர். இவர், "முடியாது" என்று கூறி மறுத்தார். கோலம் பூண்டுவந்த குமரர், "நான் குடித்தால் நீ குடிப்பாயா?" என்று கேட்டார். இவர் அதற்கு உடன்பட்டார். அவர் குடிக்கவே நஞ்சையரும் குடித்தார். அப் பாலில் முருகக் கடவுள் மெய்ஞ்ஞானத்தைக் கலந்திருந்தார். இவர் அதனைக் குடித்த பிறகு கோலத்தில் வந்த முருகக் கடவுளைப் பார்த்து "எருமைக் கன்று எங்கே?" என்று கேட்டார். அதற்குக் கோலக்குமார், அருள்மலி முருகர் மீது ஒரு செய்யுள் பாடினால் வரும்" என்றார். இவர் 'எனக்குப் பாடத் தெரியாதே" என்றார். அதற்கு அவர், "நீ பாடிப்பார் பாடவரும்" என்றார்.

செய்யுள் இயற்றல்

"மருளைமக் கண்ணி மதேசுவரி மைந்தனே"

என்று சற்றடியும் கொடுத்தார். இவர் உடனே,

"பிருமச் சம்பிர னேவனைப் பேணுவாய்
அருணைமக் கந்தா குகாவன்றன் ஐயனே
எருமைக் கன்றை இனித்தரு வாயே."

பாடலை முடித்தார். அவ்வளவில் எருமைக் கன்று கத்திக் கொண்டு ஓடிவந்தது. இவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

திருப்புகழ்

அன்ன முதல் முருகக் கடவுள் மீது அன்பு பூண்டு திருப்புகழ் பாடினர். ஆயிரக் கணக்கான பாடல்களை இவர் பாடினராயினும் இப்பொழுது எஞ்சியிருப்பனவு முந்நூறு பாடல்களே. மற்றவை சிதைந்து மறைந்து போய்விட்டன. இவர் பாடிய முதல் திருப்புகழ்;

தந்தன தந்த தந்தா தனத்தன
தந்தன தந்த தந்தா தனந்தன
தந்தன தந்த தந்தா தனத்தன —தனதான

"சென்றரு னின்ப முற்றே பனித்தலி
என்றறி வுஞ்சி துக்தே பெருத்தொரு
சிந்தையில் வந்து கற்றூ லயிற்றினில் —உருவாகி

திங்களி ரைத்தி னிற்றன் வெளிப்பட
வந்திரு கொங்கை யிற்பால் குடித்துவப்
செண்பக மின்கு யிற்போ லெழுத்தனர்
—கயிலாயநாதன்

என்றிசெய் மைந்த னென்றான் உருத்திர
னென்னை யென்ற கட்பாய் வளர்த்தன்
னம்பவருந்தி மெய்ப்பார் வையுற்றனர் —கதிரேசன்

கம்புச தங்கை மெய்க்கா ரையிட்டனர்
தன்னடி வஞ்சு கைக்கே தரித்தனர்
கந்தைய னென்றெ னைப்பே ருமிட்டனர்
—மனதாட

என்றம மிழ்த்து சற்றே தினைத்தினம்
உண்பத னெஞ்ச திற்றன் வருத்தினை
நின்பரு டன்றி ருக்கா ரணத்துடன் —விநாயகர்

என்றன்ம னத்தொ ழுத்தான் கொடுத்தன
தன்புட னென்ற னைத்தான் வளர்த்தபின்
என்றரு ளின்ச விப்பே தலைத்தனை
—தொழில்தானே

மன்றன்மி குந்த விந்தா சித்திர
செக்கையி லும்பு யத்தோ டிமச்சினி
மைந்தன்ம யக்கி டத்தா னலைப்பதும்
—கலிமோதான்

வந்தவ ரைக்க விப்போ தணித்தருள்
என்தமு னின்செ யப்பேர் இயற்புகழ்
மஞ்சை வம்பொன் முத்தே அருட்சிர
—முருகோனே."

இவ்வாறு செய்யுள் இயற்றிக் கொண்டு கொங்கு நாடு முழுவதும் பயணஞ் செய்தார். பல கோயில்களிலும் உள்ள தெய்வங்களின் மீது பாடல்கள் பாடினர்.

கதவு திறந்தது

இவர் ஒரு நாள் ஓர் ஊரிற் சென்று கொண்டிருந்தார். அப்போது ஏதோ பாடிக்கொண்டு போனார். மைவர்தனை என்பவர் அங்கே முகாம் போட்டிருந்தார். அவர் இவரைக் கூப்பிட்டு, 'நீர் யார்?' என்று கேட்டார். இவர் "நான் ஒரு புலவர்" என்று சொன்னர். பக்கத்திலே ஒரு காளி கோயில் இருந்தது. அக்கோயிலின் கதவு மூடியிருந்தது. தலை புலவரைப் பார்த்து, "இக் கோயிலின் கதவு திறக்குமா?" என்று கேட்டார். புலவர், "திறக்கும்" என்று மறுமொழி கூறினர். அவ்வளவில் மூடியிருந்த கதவுதானே திறந்து கொண்டது. புலவரின் செயலைக் கண்டு தலை மிகுந்த வியப்படைந்தார்.

மழை பெய்தது

அப்பகுதிகளில் மழையில்லாமல் இருந்தது. மழை பெய்யச் செய்யுமாறு தலை இவரை வேண்டிக் கொண்டார். இவர் உடனே,

"தந்தைக்கு னருமைதனை இன்பத்தி னுடனுனை
தந்தைக்கும் அருள்குரிலிலே
இந்தக்கு னினியமொழி கண்டுற்று மகிமைபுரி
இன்றைக்கு மழைபொழியவே
சொந்தத்தில் உலகமது நண்புற்ற அறிவினெனு
துங்கத்தில் உன்னினையவே
ணமந்தர்க்கு மனமகிழ வுங்கற்ற சிவகிரியில்
வந்துற்ற குமாகுருவே."

"கன்றே பாவின உணமயன் தந்தருன்
..கனிணழு மிருகனனே
இன்றே சர்பணி சரண சவுந்தரி
எழில்பெரு கியசிதியே
ஒன்றே சுழிமுனை அமுத குளும்புன்
னுனதிட சவுரியமே
இன்றே வெகுமழை பொழிய வரம்புரி
இயல்வெ சிரியரசே."

என்னுஞ் செய்யுள்களினைச் சிவகிரி முருகனைக் குறித்துப் பாடினர். அவ்வளவில் முகில் சூழ்ந்து மழை பொழியத் தொடங்கின. புலவர் வேறிடத்திற்குச் சென்று விட்டார்.

மழையை நிறுத்து

பெய்யத் தொடங்கிய மழை மூன்று நாள் விடாமல் பெய்தது. எங்குந் தண்ணீர் நிரம்பிவிட்டது. மேலும் மழை பெய்தால் தொல்லையுண்டாகும்போல் இருந்தது. தலையும் ஊரரும் மழையை நிறுத்த விரும்பினர்கள். இவரைத் தேடத் தொடங்கினர்கள். புலவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். மடலர் தலை புலவரைப் பணிந்து "மழையை உடனே நிறுத்த வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அதன் மேற் புலவர்;

"கட்டாப்புக் காட்டிய மாதர்கண் வானில்
காந்திகொந்த
தெட்டாப்புக் காட்டிய மூடனே எப்படிச்
சேர்குணவோ
வெட்டாப்புக் காட்டிய வானின் கருக்கலே
சீக்கிரவில
வெட்டாப்புக் காட்டையா பொன்னருள் மாமலை
வேலவனே."

என்று அருள்மலை வேலவனைப் பாடினார். மழை நின்று விட்டது.

தன்கொடை

புலவரின் புலமைத்திறத்திற்கு மகிழ்ந்து மடலர்துணை இப் புலவருக்கு சிவகிரியில் சில நிலங்களை இனமாகக் கொடுத்தார். அதில் இவருடைய வழிமுறையில் இப்போது நிலம், கூடுதல் ஆம் என்ற சாலைகள்மட்டும் உள்ளன.

திருமாறும் புலவரும்

சேலம் மாவட்டத்தில் உள்ள கபிலமலை வரதராசப் பெருமான்மீது இவர்,

"அடிமுடியும் எடுவருத வானகழி சென்றே
வெடிபுருவன் மதமருள்செய் மேன்மையும் சார
தெடினில் அமர்ந்திரு திச்சலவி வேலி
வடிவுசெயி சேலம் வளர்ந்திரு மாலே."

என்றும் செய்யுளைப் பாடினார். திருமால் காட்சி கொடுத்த தில்லை. மேலும் இவர்,

"தொட்டகுறை விட்டகுறை கபிலைசலா
தோன்றும்வெளி மூன்றுமெது கபிலைசலா
அட்டாள மிட்டபொருள் கபிலைசலா
அண்டிவரு குண்டலமோ கபிலைசலா

சட்பரிவு சட்பரிவு கயிலாலை
காணவழி காணவழி கயிலாலை
வீட்டதெது கொண்டதெது கயிலாலை
வேண்டும்பொரு ளாண்டவனே கயிலாலை."

என்னும் பாடலைப் பாடி யாடிக்கொண்டு மதுரைமீது வல மாகச் சென்றார். அப்போது திருமால் இவருக்குக் காட்சி தந்தார். அத்தமுதல் மேலும் பிருந்த ஞானத்தை யடைந் தார். இராசிபுரம் தாலுக்காவில் ஏரூர் கிராமத்தில் உள்ள ஒரு புலவர் வீட்டில் திருமணஞ் செய்துகொள்ளுமாறு இவருக்குத் திருமால் கட்டளையிட்டார். இவரும் அவ்வாறே திருமணஞ் செய்துகொண்டார். மேற்படி மாவட்டத்திலும் இவருக்குப் பூதானங்கள் கிடைத்தன.

மக்கட்பேறு

பிறகு புலவர் கவுண்டம்பாளையத்தை யடைந்து அங்குத் தங்கினர். அங்கே இவருக்கு, குமரகுருப் புலவர், கருமணப் புலவர் என்னும் இரண்டு மக்கள் தோன்றினர். புலவர் தம்முடைய வாணாள் முழுவதும் சிறந்த அருட் புலவராகவே விளங்கி இறந்தபின் அவருடைய இறுதி சாலையில் அடக்கம் செய்யப்பட்டார். பட்டுப்போன அரச மரம் தழைக்கப் பாடியது முதலான புதுமைகளையும் தோரணவாரி முதலான இடங்களில் செய்துள்ளார். பல தனிப் பாடல்களை இவர் இயற்றியதன்றித் தனிநூலாக எதுவுஞ் செய்ததாகத் தெரியவில்லை.

தென்னைமரப் பாட்டு

சென்னிமலைக்குக் கடவுள் வழிபாட்டிற்குச் சென்றார். தென்னஞ்சோலையில் இருந்த கவுண்டன் ஒருவனைக்கண்டு தென்காய் ஒன்று கேட்டார். அவன் இல்லையென்று கூறினான். சினங்கொண்ட இவர்,

"கன்னமிடுக் கள்ளருக்கும் காமலீலை மாதருக்கும்
நின்னலேவ காய்த்தாய் நெஞ்சை—இன்பலத்தில்
தேன்காய்த்த செண்ணிமலைச் செல்வனுக் காகாமன்
வன்காய்த்தாய் தென்னைமர மே."

என்று பாடினர். தென்னைமரத்தில் இருந்த குரும்பைகள் முதற்கொண்டு எல்லாம் விழுந்தனவே. தோட்டக் காரன், 'அந்தோ கெட்டழிந்தனே!' என்று அலறினான்.

கள்ளரும் புலவரும்

ஒருநாள் இரவில் சிலர் வெளிச்சத்தில் தன்னைமயாய்ப் பயணஞ் செய்து கொண்டிருந்தார். நடுவழியிற் கள்ளர்கள் பலர் புலவரை மடக்கி உடுத்தியிருந்த உடையைப் பறித்துக் கொண்டனர். அப்போது இவர்,

"பட்டப் பகல்போல் பரந்திலவாத் தானுறைக்கத்
தட்டனென்ற பேரைவிட்டுச் சோமன் பிழைத்தனைத்தாய்
வெட்டவெளி யாச்சுதுன்றன் வேட்டிவரப் போதறில்லை
அட்டியென்ன சொல்லுமைய்யா அழகுசென்னி மலையரசே."

என்று பாடினர். கள்ளர்கட்குக் கண் தெரியாமற் போய் விட்டது. அவர்கள் திகைத்துப்போய் நின்றனர். தம் தலைவர்க்குப் பொருத்தக் காப்பாற்றியருள வேண்டு மென்று வேண்டிக் கொண்டனர். புலவர் அவர்களுக்குத் திருநீறு கொடுத்தார். கள்ளர்கள் வழக்கம்போலானார்கள்.

30. காவிபவண்ணன பிள்ளை

தோற்றம்

கொல்குவள காட்டிற் பூந்தலை என்னும் ஊரிற் காருணீகர் குலத்திற் பிறந்தார்.

கல்வி

திருவாவடுதுறை முதலிய இடங்கட்குச் சென்று கல்வி கற்றார். செப்புள் பாடும் திறம் கற்றுக் அமைந்தது முருகனுடைய திருவருளும் பொருந்தியது. அதனால் இவர் வாக்குப்பெற்றருள்ள புலவராவார்.

முன்னோர்கள்

இவருடைய முன்னோர்கள் முதலில் திருச்செங்கோடு காதுகை மண்டகப் பாடியத்தில் வசித்தவர்கள். பூந்தலை வாணவராசக் கவுண்டர் தம்முடைய ஊருக்கு அழைத்துச் சென்றார். கவுண்டர் தாசிக்வேலி செப்தவென்றிருந்தார். புலவர் கவண்டரிடம் உதவிபெற்று ஐம்பது ஆண்டுகள் வரை அந்து வரித்தக்கவன்றிருந்தார். இவருடைய வழிமுறையார்கள் இன்னும் இருக்கின்றனர்.

இசையும் வசையும்

புலவர் ஒருவன் தம்முடைய சொந்த ஊருக்குச் சென்று அங்கே குமாரமங்கலம் பெருவிலக்கிழாரைக் கண்டார். அவர் இவரைத் தம்முடைய கணக்கன் மகன் என்ற ஒரு பொருட்படுத்தவில்லை. (தன்னுடைய முன்பு கணக்கு எழுதிக்கொண்டிருந்தவர் போலும்) புலவர் பெருவிலக்கிழார்மீது இசையும் வசையும் கலந்து,

"பனைமேல சோறதின்பான் சட்டிமேல
கறிதான்வன் பிச்சி புண்பான்
தூனெய் நின்பான் பூனெய் நின்பான் பலரை
மாய்ப்புண்ணி தீருந்நித் நின்பான்

தானமதுக் கஞ்சாத வணிகொள்வான்
பாம்பரையாய்ச் சுவை யென்பான்
மேன்மைபெறும் குணமங்கைப் பாலிவன்
செல்கோட்டு வேலன் தானே"

என்று பாடினர். இதனைப் பெருஞ்சித்திரனார் கேட்டுச் சினம் கொண்டார். பாட்டின் உண்மைப் பொருளைப் புலவர் விளக்கினர். கேட்டு மகிழ்ந்த பெருஞ்சித்திரனார் வண்டிய பொருளை வண்டோடையாக வழங்கி மகிழ்ந்தார்.

வகை

ஒருவன் கத்திரிச் செடிகள் போட்டிருந்தான். செடிகள் நன்கு காய்த்திருந்தன. கறிக்குச் சில காய்கள் வாங்கி வரும்படி வேலனுப்பினர். கத்திரிக் கொல்லைக்காரன் காய் கொடுக்கவில்லை. "என் அனுமதியுடனும் கத்திரிசெடி இணமாகக் காய் கொடுத்துக்கொண்டு உட்கார்ந்திருப் பதை போ போ" என்று சொல்லி அனுப்பினன். புலவர் இதனைக் கேட்டார்.

"பாத்திபிடித் தேதை பம்பாவு பட்டேதை
எத்தலில் தண்ணீர் இறைத்தேதை—சேத்தியாய்க்
காய்த்தாயே கத்திரிக்காய் கற்றவர்கட் கில்லாமல்
பூத்தாயே பூத்தே இரு"

என்று பாடினர். அன்றமுதல் கத்திரிகள் பூப்பதைத் தவிர்க் காயாமல் பூக்கள் உதிர்ந்துகொண்டே இருக்க வரின.

திறம்

பலகையரை மிபத்தகு செய்கைக்கே துலங் கியற்றிக் கொண்டிருந்த படையாள் மக்கள் இவரிடமும் மிகுந்த அச்சமும் அன்பும் கொண்டிருந்தனர். இதனிலும் வேள் குறிப்பி வேய்ப் வண்டரிடம் தங்கியிருந்த காலமாகும்.

நூல்கள்

இவர் அவ்வக் காலங்களில் தனிப் பாடல்கள் பாடிய தன்றிப் பல பாமாலைகள், விரகடக புராண வசனம், ஆத்திச் சூடி வெண்பா, பெருநிலக் கிழார்கள்மீது கோவை, பமகம், மடல், அந்தாதி, மடக்கு முதலிய நூல்கள் பாடியுள்ளார்.

---

60. அறிவானந்த அடிகள்

தோற்றம்

இவர் திருத் தில்லையை அடுத்த காட்டுமன்னர்குடியிலே செங்குந்தர் குலத்திலே தோன்றினர்.

கல்வி

இளம் பருவத்தில் படிப்பு வாசிலில்லை. தெசவுத் தொழிலைக் கைக்கொண்டார். ஒருநாள் சுற்றத்தார் ஒருவரிடம் இருந்து கடிதம் ஒன்று வந்தது. அதனைப் படிக்கத் தெரிந்தவர்களிடம் காட்டிப் படிக்கச்செய்து செய்தியை உணர்ந்து கொண்டார். கடிதத்தைப் படிப்பதற்குக்கூட தமக்குக் 'கல்விபறிவு இல்லாமற் போயிற்றன்றே என்று மிருந்த மனவருத்தம் கொண்டார். இனிமேலாவது கல்வியைக் கற்கவேண்டுமென்று முடிவு செய்தார். வறுமைக் கொடுமையால் தெசவுத் தொழிலை விடமுடியவில்லை. காலை பதினொரு மணிவரையிலும் தொழில் செய்வதும் பிறகு கல்வி கற்பதுமாகப் பொழுதுபோக்கத் தொடங்கினார். பாடசாலைக்குச் சென்றே படிக்கலானார். காலைந்து நிமிடங்களுக்குள் பிழையின்றி எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டார். கல்விமீது மேன்மேலும் மிகுந்த விருப்பம் உண்டாயிற்று. கடம்பூர்-சுயம்பிரகாச அடிகள் என்னும் பெரியாரிடம் அறிவு நூல்களைக் கற்றார். இவருக்கு அறிவு

முதிர்வதை அறிந்த ஆசிரியர் அறிவானந்தன் என்றபெயர் கொடுத்தார்.

துறவு

பிறகு அறிவானந்தர் குடும்பத்தில் இருப்பதற்கு வெறுப்புக் கொண்டார். சிவப்பிரகாசப் பயணஞ்செய்தார். தூங்கானைக்குப் பாடல்கள் பலவற்றைப் பாடினார். திருமுருகன் பூண்டியை அடைந்து அங்குச் சிலகாலந் தங்கினார். இவரிடம் பலபேர் மாணவர்களாகக் கல்விகற்றனர். அங்குச் சிலகாலந் தங்கியிருந்த பிறகு அவினாசியை அடைந்தார். அங்கே திருப்பணி செய்ய எண்ணினார். அவினாசி குளத் தருகில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கோயிலிற் சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு அங்கு ஓலைக் குடில் ஒன்றை அமைத்துக்கொண்டு அங்குத் தங்கினார். சமயாசிரியர் கட்குக் குருபூசைகள் நடத்தினார்.. அப்போது காசித் தம்பிரான் என்பவர் இவரை யடைந்து பணிவிடைகள் செய்துகொண்டிருந்தார்.

கனவும் பாட்டும்

ஒருநாள் மடத்தில் சில பொருள்கள் களவு போய் விட்டன. ஊர்க்காவல் அதிகாரிகள் (போலீஸ்காரர்கள்) வந்து "யார்மீது ஐயம்?" என்று உசாவினர். அடிகள் அவர்களை உட்காரவைத்து,

"கோதையனும் சேதனனில் வீற்றி ருக்கும்
வீழுப்பொருளை ஈயமே வினவப் பக்கென்
றுரிய செம்பொன்ற வோட்டா வென்ற
உரிமைகள்ள வெடுகரைக் கொல்றை வோட்ட
காதலுடன் பணிசெய்யும் கூதருகம் செட்டி
கற்பூரப் பணிசெய்யும் உமையஞ் செட்டி
ஆரையர்க் கொத்தர்வி அடிமை வேட்டி
அத்தனையும் அவிர்சடி அப்பன் கொண்டான்

பாதியுடல் கலந்தளிக்கும் கருணை தானே
பார்த்திருந்தான் என்செய்வான் பாவியானேன்
கோதையல லுடலுமென்றன் உடலு மாலால்
குறிப்பறியார் தங்களுக்கோ குறிக்குமோர் செய்வ
லாதையிது பெண்மன்னும் பொன்னும் பூமி
வைத்திருந்தேன் தன்னதென்று வாங்கிச்சென்றான்
தூதையிதை யாதரிவார் செவ்வாய் தோழி
சூட்சமாம் கள்ளனுடைச் சொரூபம் தானே"

என்று பாடினர். இம் மதுரமொழிப் பாடலைக் கேட்ட அதிகாரிகள் அடிகளாரின் மெய்யறிவை எண்ணிச் சென்று விட்டனர்.

மடம்

பிற்கு அடிகளார் அம்மடத்தைப் பெரிதாக்கி விநாயகர் கோவில், பூம்பொழில் முதலியவைகளை உண்டாக்கினர் இப்பொழுது அம்மடம் மிகுந்த சிறப்போடு விளங்குகின்றது. அடிகள் உலகுக்குப் பயன்படுமாறு நூல்கள் பல செய்துகொண்டும் மாணவர் பலர்க்கு அறிவுரை வழங்கிக் கொண்டும் இருந்து வீடு பேற்றை யடைந்தார்.

கக. தஞ்சைபப் புலவர் - க

தோற்றம்

கொல்லுவன ஏட்டில் கலந்தப்பாடிப் புதுனின் அக்கினி வம்சத்தில் இவர் பிறந்தார்.

கல்வி

இவருக்குப் பத்தாண்டு ஆகும்போது வைசூரி கண்டது. அதனால் கண் பார்வையை இழந்தார். பெற்றோர் களும் காலமாயினர். ஆதரிப்பார் எவரும் இல். செந்

தேவண் பாவாணம் பஞ்சாங்கம் சிதம்பர ஐயர் என்பவர் வீட்டில் வசித்து வந்தார். அவ்வையர் இவருக்கு முதலின் மீது எழுதிக் காட்டி எழுத்தைக் கற்பித்தார். எழுத்துக் கலை யெல்லாம் நன்கு உணர்ந்து கொண்ட பிறகு ஐயர் தமக்குத் தெரிந்த ஐந்திலக்கணம், இலக்கியம், சைவ நூல், காலக் கணிதம் முதலிய எல்லாவற்றையும் இவருக்குக் கற்பித்தார்.

திருமணம்

தக்காரைத் துணையினால் திருமணமும் கை கூடப் பெற்றது. அகவை ஐம்பது ஆகியும் பிள்ளைப்பேறு உண்டாகவில்லை. பிள்ளைப்பேற்றை விரும்பிச் சென்றேவன் பாவாணத்துப் பெரியநாயகி மீது தாதி, விருத்தம், கலித்தளை பந்தாதி, வெண்பா, இசைப் பாடல் முதலியன ஐந்நூறுக்குமேற் பாடினர். தெய்வத் திருவருளால் நாராயணக் கவிராயர் என்னும் புதல்வர் பிறந்தார். இவரும் நன்கு கல்வி கற்றுச் சிறந்த புலவராகிப் பல நூல்கள் இயற்றியுள்ளார்.

பாடல்

இவர் பல சிட்டுக் கவிகள் பாடினர். அவற்றுட் சிலவற்றை அடியிற் காண்க:

"பூமேவு பாதம் சமய வணேகசந்தம்
பொழிலாண்ட பாகவதமும்
புகழ்கொண்ட சிறை இலக்கண இலக்கியம்
புகழ் கொழுக்கட்டுவேலம்
மாமேவு வெண்பாக் கலித்தளை விருத்தங்கள்
வண்ணப்ர பந்தமுதலாம்
வண்மையுள பலபிர பந்தமும் சொல்லுவேலம்
வன்னியகு லப்பிரதாபச்

தேமேவு செந்தமிழ் திருந்தவே சொல்லாத
திருட்டுக் கவிப்பையல்களை
சிட்டாய்ப் பிடித்தாட்டிக் காதையுஞ் இன்னிச்
செருக்கோ டடி கொடுப்போம்
காமே மலிந்தற்ற வாணிகட் னம்புளியும்
கயமாமே லானபீடம்
நல்லகவி வாணர்களை அற்பகல் மறவாத
கஞ்சயப் புலவர் காமே."

"சிர்கொண்ட கயல்தாவு முவரிசூழ் உலகுதனில்
செந்தேவ ககராதிபன்
தேசுபெறு வண்யகுல நாசகர நாயணச்
செந்தமிழ்க் கவிநாவலன்
பார்கொண்ட வாசமட் சுருதிமனு சாத்திரம்
பதினெண் புராணகணிதம்
பண்புபெறு மாயுள்வே தங்களுரை யாகநூல்
பார்த்திவை எலாமுணர்ந்து
கார்கொண்ட புயல்தாவு சோலைக்கு மேல்வானி
கர்ணன்மே விப்பதாகை
கலவலன் நற்கருப் பணசாமி வேண்மீது
கவிசதகம் ஒன்றுசெய்தார்
வார்கொண்ட பனுவலின் சாரமெப் படியெனில்
வண்கரும் பாலையதனில்
வகுடன் பெய்தநின் பாகினை லாகிய
வட்டினை நிகர்க்குமாதோ."

இதுதி

இப் புலவரைப் பற்றி இதற்குமேற் செய்திகள் தெரிய வில்லை.

62. நங்கமுத்தும் புலவர்

[கக-ஆம் நூற்.]

தோற்றம்

கொங்குவள நாட்டில் அவிநாசியில் இருந்தவர். கல்வி கற்றுச் சிறந்த புலவராக விளங்கியிருந்த இவர் ஒரு நாள் சில சிற்றரசர்களுக்குப் போய்விட்டுக் கருவூரம் பாவூரம் காட்டின் வழியாக வந்தார்.

சாபக்காடு

கரும்பெரிச்சிக் கவுண்டன் என்ற ஒரு குடியான்வன் காட்டில் கதவு மூடிக்கொண்டிருந்தான். புலவரைப் பார்த்து, "ஓய் புலவரே! வந்த வழியே திரும்பும்," என்று சொல்லித் தன் கையில் இருந்த தடியை ஓங்கினன். புலவர் அவனைப் பார்த்து, "அப்பா! எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது; போன பிறகு அடைத்துக்கொள்," என்று சொன்னார். "முடியாது போய்விடு," என்று கூறிப் புலவரைத் தள்ளினன். அப்போது புலவர்,

> "அரும்பரிக்கா வூர்தேடி யானலைந்த காட்டில்
> வரும்படிக்காய் நேர்ந்ததனால் வந்தேன்—பெரும்பேர்க்
> கரும்பெரிச்சி காடு கதவடைத்த தானாய்
> எரும்பரித்துப் போக ஏவா."

என்று பாடினர். அன்று முதல்கொண்டு அக் காட்டில் விளைக்கிற விளைகள் முழுமையையும் எறும்புகள் அரித்துக் கொண்டுபோகத் தொடங்கியபடியால் அக் காட்டிற்குச் 'சாபக்காடு' என்று பெயர் உண்டாகிவிட்டது.

ஆற்றலே புதுமை

பிறகு சிலகாலஞ் சென்ற பிறகு இவர் தென்னாட்டில் உள்ள ஊர்களுக்குப்போகப் புறப்பட்டார். கையிற் கட்டுச்

சதங்கொண்டு சென்றார். கணிபாம்பூண்டிக்கடுத்த ஆற்றைக் கடைகில் சாப்பிட எண்ணினர். ஆற்றைப் பார்த்தார். தண்ணீர் நிறை ஓடிக்கொண்டிருந்தது. ஆகவே கொய்யப் பூக்குப் போல் குளித்தவிட்டுச் சாப்பிடலாம் என்ற நினைந்து கொய்யடி அடைந்த பார்த்தார். ஒரு துளி தண்ணீர்கூட இல்லை. ஆகவே அவர் ஆற்றைப் பார்த்து,

"பாழுங் கிடங்கே பார்தோறும் கொய்யலே
ஏழுங் கடை பார்த் தணைசாலே."

என்று பாடத் தொடங்கினர். அவ்வளவில் ஆற்றில் நீர் பெருகிவோடி வந்தது. புலவர் குளித்த முழுகி உணவருந்திவிட்டுச் சென்றார்.

இறுதி

இவருடைய பெயர் தங்கமுத்துக் கவிராயர் என்றும் வழங்கியது. இவர் தனிப்பாடல்கள் பல பாடியதாக அறியப்படுவதன்றி தல்கள் இயற்றியதாகத் தெரியவில்லை.

ஈக. முத்துக்குமாரப் புலவர்

தோற்றம்

கொங்குவள நாட்டில் அவராசித் தாலுகா சேலூரில் இருநூற பாண்டுகட்கு முன்பு செக்குத்தர் மரபில் தோன்றினர். இவருடைய தக்தையார் பெயர் அண்ணாமலை முதலியார். முத்துக்குமார் கல்வி கற்றுச் சிறந்த புலமையடைந்து திகழ்ந்தார். இளையன்மில் சடுபட்டுப் பல சிவப்பதிகட்கும் போய் இறைவழிபாடு செய்து கொண்டிருந்தார்.

தவம்

பதினொரும் அகவையில் சத்திய மங்கலத்தை அடைந்து பவானிக் கரையில் இருந்த பத்திர காளியம்மன் கோயிலில் தவஞ் செய்துகொண்டிருந்தார். அம்மன்மீது பேரன்பு செலுத்தினர். ஒரு நாள் அம்மனுடைய காட்சியை விரும்பிக் கோயிலுக்குச் சென்றார். உள்ளே நுழைந்து தாளிட்டுக் கொண்டார். வெகு நேரம் பூசை முதலிய வழிபாடுகள் செய்தார். பிறகு கம்முடைய மாலை அறுத்துப் பூசை செய்தார். கோயில் பூசகர் வந்து பார்த்தார். கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்ததைக் கண்டார். எவ்வளவோ தட்டிப் பார்த்தும் கதவு திறக்கப்படவில்லை. பிறகு ஊராரனைவரும் வந்து கூடினார்கள். திறவுகோல் துளை வழியாக உள்ளே பார்த்தார்கள். இவர் மாலை பறுத்துக் கற்பூரம் வைத்துக் கொண்டிருந்ததைக் கண்டார் கள். அவர்கட்கு மிகுந்த திகைப்புண்டாகி விட்டது. ஆற்றின் தண்ணீரும் குருதியமயமாக இருந்தது. முத்துக் குமாரனின் பத்தி அவர்கட்குப் பெருவியப்பைத் தந்தது. முத்துக்குமாரனின் மெய்யன்பைக் கண்ட அம்மை அவருக் குக் காட்சி நல்கினள். பிறகு பத்திரகாளியம்மன் கோயிற் கதவு திறக்கப்பட்டது.

காட்டுப் புலியும் கனிப் புலியும்

பிறகு முத்துக்குமார் மைசூருக்குச் சென்றார். அப்போது சாமராச உடையார் என்பவர் அரசராக இருந் தார். மக்களைச் சிறுத்தைப் புலிகள் வருத்திக் கொண் டிருந்தன. முத்துக் குமார் தனியாகப் போய்ச் சிறுத்தை யைப் பிடித்துக் கொன்று அரசருக்குக் காட்டினர். அர சர் இவருடைய ஆண்மையைக் கண்டு வியந்து தகுந்தவாறு பரிசுகள் நல்கினர்.

சோதிடங் கூறல்

மைசூர் அரசர் பிள்ளைப் பேறில்லாமல் வருந்திக் கொண்டிருந்தார். இவர் பத்திரகாளியை வணங்கி பத்தாந் திங்களில் அரசருக்கு மக்கட்பேறு உண்டாகுமென்று கூறினர். இதனை அரசர் ஆராய்ந்து பார்க்க எண்ணினர். இவரைப் பாதுகாப்புச் செய்து வைத்தார். பிள்ளை பிறந்தால் தம்முடைய பெயரை இடவேண்டும் என்று இவர் கூறினர். இவர் இயம்பியவாறே அரசருக்குப் பிள்ளைப் பேறு உண்டாகியது. அரசர் அப்பிள்ளைக்கு முத்துக் குமார உடையார் என்று பெயரிட்டார். புலவருக்குத் தகுந்த நன்கொடைகள் வழங்கியனுப்பினர்.

அழுக்காறுந் தோல்வியும்

பிறகு புலவர் பல ஊர்களுக்குப் போய் அவிநாசியை அடைந்தார். பெருங்கருணாலயம்மனைத் தொழுது போற்றினர். மிகுந்த சிறப்புடன் குதிரைமீது ஊர்வலம் வந்தார். சாணர்கள் இவர் குதிரைமீது வருவதைக் கண்டு பொறாமை கொண்டார்கள். இவரை எதிர்த்தார்கள். இவர் அவர்களை வென்று புறங்கண்டார். பிறகு சேவூர் சென்றார். அங்கிருந்த முத்துக்கருப்ப முதலி என்னும் செங்குந்தனிடம் முந்நூறு வராகன் பணங்கொடுத்துக் கேட்கும்போது கொடுக்குமாறு வாக்குறுதி பெற்றுக்கொண்டார்.

வீர சொர்க்கம்

ஊருக்கு அண்மையில் ஒரு தோட்டத்தில் ஒரு பரண் கட்டினர். கலி சஅசஉ துந்துபி யாண்டு மார்கழித் திங்கள் மூன்றாம் நாள் வீர சொர்க்கம் அடைவதாகக் கூறித் தமது உடலில் குத்திச் சங்கிலி கட்டி ஊர்வலமாக இழுத்துச் செல்லச் செய்து பல கடுமையான திருவிளையாடல்களைச் செய்து காட்டினர். தமது உடலின் ஊனைத் தண்டு

தண்டாக வெட்டிச் சூளறமிட்டுக் கொண்டு சென்றார். அப்போது பல செய்யுட்களைப் பாடினர்.

இறுதி

பிறகு பரணை படைத்து எஞ்சிய எலும்பையும் அறுத்துச் சிவபதம் அடையுஞ் சமயத்தில் முத்தக்கருப்ப முதலியை அழைத்துத் தருமஞ் செய்வதற்குப் பணத்தைக் கொடுக்குமாறு அழைத்தார். அவன் வராமல் ஓடி ஒளிந்து கொண்டான். அவன் குடியைச் சபித்தார். பிறகு கழுத்தில் அலகு பாய்ச்சிச் சுவர்க்கம் புகுந்தார்.

அங்குச் சமாதி கட்டிப் புலவரின் உடலை அடக்கஞ் செய்தனர். ௧௯௯௮-இல் ஆசாரம் விழுந்ததால் சமாதி பெயர்க்கப் பட்டதில் இவருடைய எலும்புகள் அப்படியே காணப்பட்டன. மீண்டும் அங்குச் சமாதி கட்டப்பட்டது. இவரைப் போன்ற கல் விக்கிரகம் பத்திர காளியம்மன் கோயிலில் இருக்கிறது. முத்தக்குமாரப் புலவரால் இயற்றப் பெற்ற பாடல்களும் அவர் மீது ஏனையோர் பாடிய பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களும் நாட்டிலே வழங்குகின்றன.

---

௫௬. சவரிப் புலவர்

தோற்றம்

கொங்குவள நாட்டில் கனுவக் கரை என்னும் ஊரில், ரோமன் கத்தோலிக் என்னும் கிறித்துவ வகுப்பில் சவரி முதலி என்னும் பெயருடைய இவர் தோன்றினர். இவர் தமிழ்ப் புலவர்கள் சிலரிடம் இலக்கண இலக்கியங்களையும் ஏனைய நூல்களையுங் கற்றுச் செய்யுள் பாடுந் திறமையடைந்தார்.

உதவி

இவருடைய புலமைத் திறத்தைக் கண்ட ஊரார் இவருக்குத் தானியம் உதவி வந்தார்கள். பிறகு ஒரு காலத்தில் இவருக்கும் ஊராருக்கும் பகைமை உண்டாகிற்று. இவருக்குச் செய்துகொண்டிருந்த உதவியை நிறுத்தி விட்டார்கள்.

பழிக்குப் பழி

புலவர் அறம் பாடுவதில் மிகுந்த நிறமுடையவராதலால் அறம் பாடி மழை பெய்யாமற் செய்துவிட்டார். மூன்று ஆண்டுகள் தொடர்ந்தாற் போல் மழை பெய்யவில்லை. மழை பெய்யாமற் போனதற்குக் காரணம் சவுரிப் புலவரே என்பதை உணர்ந்த ஊரார்கள் இவரை அணுகி வழக்கம்போல் தானிய கண்கொடையை வழங்கி வருவதாகவும் மழை பெய்யச் செய்ய வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்கள். புலவர் மனதிரங்கினார். பெரு மழை பொழியுமாறு,

"பங்குனியாம் நிங்கள்தனில் இருபத் தைந்தில்
பரமசுகன் கவரிபோல் பரிவுபேச
எங்களுமாய் நிறைந்தபான் செனித்த நாளே
எத்தனையோ சந்தோடம் இவனே கோக்கி."

(.....)

"மண்ணுலகுக் கன்னிமையே நிருக்கண் கோக்கி
மழைபொழிய வரமருளும் மரியே தாயே."

"பொன்னடியான் பதம் சோக என்னைச் சேர்த்த
பொழுதருந்த மகிழ்விடத்தில் போய்ச் சுற்றி
அந்தவிடன் புத்திரனைப் பெற்ற நாளே
அண்டர்களும் உலமத்தொழுதார் அந்த நாளில்

---

* இப் பாடல்கள் மூலப்படியில் இவ்வாறே அரை குறையாக உள்ளன.

என்னனெ கிழத்தி தக்க மாலை
சனருவில் மறுப்பிணைக்க கண்ணை சடத்
தம்பியேதார் குளப்போல வடித்து சடத்
தக்கமதாய் கீக்கிச் சுவைத்த பாவில்
அன்பருக்கா இட்டபிர் வீலவு மெற

மழைபொழிய வரமருள்வாய் மரியே தாயே.
அடைக்கல் செய்தவித்த மனிதர் பிழையை
அற்புதஞ்சேர் மரியேநீ அருளாற் பொறுத்த
கடகதி திமிதிமிதி முகில்ப சத்த
சமுத்திரத்தின் சீறதனைத் தாறும் அன்னி
யடனக்கள் புரியமழை கண்டு அருள்வாய்
சாயகியே எக்களது மரியே தாயே."

(.....)

பல் பாடல் மிருந்த சிறதலோடு காணப்பெறகின்றன.

---

5. தெய்வசிகாமணிப் புலவர்

தோற்றம்

கொங்கு தேசத்தில் காஞ்சிக்கோவில்காட்டில் பண்டைத் தலைவராக இருந்த சின்னச் வேலப்ப கவுண்டர் இராவுத்த கவுண்டர் ஆகியவர்களிடம் இவர் புலவராக இருந்தார். கல்வியை கன்கு கற்றவர். வாக்குப்பதித முள்ளவர்.

உணவுப் பாட்டு

ஒருநான் இவர் அந்தணத் தெரு ஒன்றின் வழியாகச் சென்று கொண்டிருக்கையில் அங்கே இவருடைய நண்பர் ஒருவர் ஓர் அந்தணன் வீட்டில் உட்கார்ந்திருந்தார். இவர் பசியோடிருந்தமை யுணர்ந்து அவ்வீட்டுப் பார்ப்பனியை அழைத்து உணவு படைக்கச் சொன்னர். உணவு பழைய

உணவாகவும் போதாதாகவும் இருந்தது. சாப்பிட்ட பிறகு, "சாப்பாடாயிற்று?" என்று நண்பர் இவரைப் பார்த்துக் கேட்டார். இவர்,

"சோறுபங்கு சென்னிமலை கம்பியான் தன்குமரன்
வேலன் மனைவி விருந்திட்டாள்—சாலவே
வைத்தாள் எனக்கு வயிறேதிசம்பச் சோதகறி
பத்தலையே எப்படியப் பா."

என்று பாடினர். மறுபடியுஞ் சமையல் செய்யச் சொல்லு மட்டும் இவர் அங்கு நிற்கவில்லை. காங்கேயம் என்னும் ஊருக்குப் போய் மன்றாடியார் சமூகத்திற்குச் சென்றார். அவருடைய மனப்பான்மையை உணர்ந்து,

"கள்ளியெருத்த கொக்கி கைதன்னிலே கொண்டுவா
வெள்ளி இருசாம வேஷ்தனில்—தெள்ளுதமிழ்
காட்டக் குமாரசெய சாங்கமன் றாடியார்
காட்டமற வூட்டமெடுத் தேன்."

என்று பாடினர். மன்றாடியார் தக்கவாறு சன்மானம் வழங்கியனுப்பினர்.

மடையன் மீது பாட்டு

கணம்பட்டி மாணிக்கவாசக மடத்திற்குச் சென்றார். குருவானவர் சமையற்காரனை யழைத்துப் புலவருக்குச் சாப்பாடு போடுமாறு கட்டளையிட்டு விட்டுப் போனார். சமையற்காரன் வெகு நேரம் வரை சமையல் செய்து கொண்டிருந்தான். இவருக்கோ பசி பொறுக்க முடியவில்லை;

"கண்டு குரப்பன் ககுகுரப்பன் காளினியில்
நின்று குரப்பன் நிகுகுரப்பன்—தெண்டிரைசூழ்
வேதாச மான விமலர் திருமடத்துப்
பாதகனும் வெங்கடேசப் பன்."

என்ற பாடி விட்டு அவ்விடம் விட்டுச் சென்றார். இவரு டைய தனிப்பாடல்கள் பல காட்டிலே வழங்குகின்றன. இவர் நூல்கள் இற்றைநாளதுத் தெரியவில்லை.

கசு. வேங்கடராய ஐயங்கார்

தோற்றம்

கொல்லை காட்டில் சிசயமங்கலத்திற்கு அண்மை யில் உள்ள கடுப்பட்டி என்னும் சிவாசபுரத்தில் வைணவ அந்தணர் குலத்தில் (கஅசுஅ) குரோதன ஆண்டு ஐப்பசித் திங்கள் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை பிறந்தார். இவரு டைய தந்தையார் பெயர் நாராயண ஐயங்கார்.

கல்வி

இளம் பருவத்தில் கல்வி கற்கத் தொடங்கினர். வட மொழியையும் தென் மொழியையும் நன்கு கற்றார். தமது குடும்பத்தில் பழங்காலம் முதற்கொண்டிருந்த மருத்துவம், சாலக்கணிதம், மாந்திரீகம் இவைகளையும் நன்கு கற்றுணர்ந் தார். இவருக்கு ஆசிரியர் தேர் வண்டிக்கால் வரலாறு எழுதிய குன்னத்தூர்ச் சுப்பராயக் கவிராயர் என்பர். "சித்ர சக்கக் கோவில்" "மும்மணிச் சதம்" முதலிய சிறப்புப் பெயர்கள் இவருக்குண்டாயின.

நூல்களும் பாடல்களும்

இவர் செல்வர்கள் மீது சிட்டுக் கவிகளும் நூல்களும் இயற்றத் தொடங்கினர். இவர் பாடிய பாடல்களின் போக்கு நன்றாக இருக்கிறது. ஆனால் செய்யுள் இலக் கணத்திற்கு ஒத்துக்கொள்ளுகிறதில்லை. வெண்பாக்களில் தவறுகள் அதிகம். செல்வர்களையே பெரும்பாலும் பொருளின் பொருட்டுப் பாடியபடியால் பொருட்சுவை

இன்ன. தற்காலத்துப் புலவர்களின் போக்கை நன்கு வெளிப் படுத்தும் பாடல்களாக அமைந்துள்ளன.

நட்புக்கிலக்கண்

* "வேதமும் ஸ்ரீவைஷ்ணர்களின் விஷ்ணுவும் ஸ்ரீவைஷ்ணர்களின் நாதம் ஸ்ரீவைஷ்ணர்—சோழிங்கபுரி பல்லவனுக் கேற்றிருப்பூர் வாழ்பழி யப்பனன்னன் கல்லெல்லம் வைதலைக் கண்டு."

"அந்தரத்தில் வாழ்வாமே தஞ்சாத மாடேசர் மந்திரத்தன் தோயாத வஞ்சிலையே—நந்திக் கனகன் பதிப்பெயர்கொள் அப்பாதன் பாவலர்தன் இனிது புரிவாய் இசைத்து."

நிலைடை

காய்க்கும் வக்கீலுக்குள் நிலைடையாகப் பாடியது.

"எச்சிக்கலையும் எடுத்தப்பி சாப்பிடலால்
இச்சித் தலையே யிருத்தலால்—மெச்சதனை
மக்கள்பாற் சென்று வயிற்சோ வாடலால்
குக்கலும்கீ ழென்னவே கொள்."

கடவுள் நீது வகை

இவருடைய சோப் நிராகரபடியால் கடவுள் நீது வகை யாகத் தொடங்கிப் பாடியபடியால் சோப் சிங்கிற்றும் அப்பாட்டு:

"அண்டக் குலவன் அமைத்தால் எருவாகு
மண்டக் குதக்குணமும் மாறுமை—தண்டப்
பணமன் மிகச்சிக்குப் பல்லவனை வத்த
தனாமே திருப்பதனால் தான்."

இறுதி

இவர் தம்முடைய இறுதி காலைத் தம்முடைய சகலக் கனிக அறிவிலும் தானே உணர்ந்து,

---

* மூலப்படியில் உள்ளவாறு எழுதப் பெற்றன

"தாரகலத்தில் சிறந்தகடுப் பட்டவாழ்நா
ராயணன் மெய்த்தவத்தால் மேவும்
கோதயனும் வேங்கட்ட சமணனவன்
மாண்புடைய வையம் சீத்து
குரோதனவான் வடப்பகியில் ஈரொன்றும்
ஞாலிவரு குருவா சத்தில்
ஓரோதயமாம் வவருண்டப் பதியவன்தன்
பொன்னடியைச் சேர்ந்தான் மாதோ."

என்று தமக்குத் தாமே இரங்கற்பா பாடி வைத்தாராம். அவ்வாறே காலமும் ஆயினராம்.

இவர் இயற்றிய நூல்கள்

க. சதகசாரம்ச சத்ரகம், (இரண்டு பாகம்)
உ. கனம்பட்டி மடம் மாணிக்கவாசகசுவாமி மீது பஞ்ச சத்தினம்
க. கல்லூர் விசவநாதர் விசாலாட்சி ஊஞ்சல் லாலி
ச. பொன்னண்டாம்பாளையம் இராமசாமிக் கவுண்டர் மீது மாதவிடுதூது
இ. தண்டபாணி பதிகம்
ங. வாதாசப்பெருமான் சதகம்
ஏ. தடுப்பதி செல்வாண்டியம்மன் பதிகம்
அ. கோவை சோணியம்பிகை பதிகம்
க. ஆனந்தப் பதிகம்
கo. காதல் விடுதூது
கக. திருவேங்கடமுடையான் பதிகம்
கஉ. செங்கண்மால் பதிகம்
கஉ. சிங்காரக் காதல்
கச. சக்திக்கும்மி

மற்றும் பல நூல்கள்.

---

* மூலப்படியில் உள்ளவாறு எழுதப்பெற்றது.

64. சரவணதேசிகர்

தோற்றம்

இவர் தொண்டைவள நாட்டிலே காஞ்சிமா நகரிலே செங்குந்தர் குலத்திலே ஏறக்குறைய இருநூறு பாண்டு கட்கு முன்பு தோன்றினர்.

கல்வி

இவர் தம்முடைய இளம் பருவத்தே பள்ளியில் அமர்ந்து சிறிது கல்வி கற்றார். பிறகு கல்வியை மிகுதி யாகப் பயில வேண்டுமென்று விருப்பங்கொண்டார். அந்நாளில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துத் தாபித மாபாடிய கர்த்தாவாகிய சிவஞான சுவாமிகள் காஞ்சிமா நகரிலே வசித்திருந்தார். இவர் அவரிடம் பல இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கல்வியிற் சிறந்து விளங்கினர். பிறகு சைவசித்தாந்த நூல்களைக் கற்க எண்ணினர். சிவஞான போகிகளின் மூதன் மாணவராகிய கச்சியப்பசுவாமிகளிடம் மெய்கண்ட சந்தான சாத்திரங்கள் எல்லாவற்றையும் கற்றுணர்ந்தார். பிறகு சுவர்க்கபுரத்தில் எழுந்தருளிய தவப்பிரகாச மூர்த்தி களிடம் பஞ்சாக்கர உண்மை உபதேசம் பெற்று அவ் வழியாலே தம்மால் வழிபட்டு வந்த ஆனந்தருத்திரேச ருக்குத் திருமதில் கட்டி நன் வழிபாடு சிறப்பு வழிபாடு முதலியன நடைபெறுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார்.

சைவச் சடங்குகள்

பிறகு திருப்போரூர்ச் சிதம்பர அடிகளிடம் கலை சோதனை முதலிய சைவச் சடங்குகள் பெற்று ஊட்டிய விரதத்தினராயிருந்து மாணவர் பலருக்குச் சைவ நூல் களைப் போதித்துக் கொண்டிருந்தார்.

இயற்றப்பெற்ற நூல்கள்

க. ஒருபா உண்மை உபதேசம்
உ. வீட்டெதி உண்மை
கூ. பஞ்சாக்கர அனுபூதி
ச. உபதேச சித்தாந்த விளக்கம்
இ. ஒருபா ஒருபது
ட. முத்தி முடிவு

என்பன.

"முத்தனில் சித்திலெக்கண் டானை புற்பிரான்
முதற்குருவாற் சமயமடை தருக்கம் வீட்டித்
தத்துவமும் ஆணவமும் கழன்று சாதனை
தலைவனெனல் அருட்டெரிவால் தலைவன் என்னல்
மெத்தமல மதையிற் பிரமம் என்னல் நீக்கி
வினக்கறிவி லொன்றிவினை யற்றிரும் இன்பத்
தொத்தலுவாய்த் தானறவழ்ந் திருப்பன் சதுர்
கொளி ஒருபா உண்மையுப தேசமாமால்."

என்பது ஒரு பா உண்மை உபதேசத்தில் ஒரு பாட்டு.

இறுதி

இப்பெரியார் சாலிவாகன சகம் கலகூடக்குச் சரியான விகாரியாண்டு ஆனித்திங்கள் கார்த்திகை நாளில் இறைவன் திருவடி நீழலில் அடைந்தார்.

கூ. சிவயோக அடிகள்

தோற்றம்

இப்பெரியார் கடுகாட்டில் வடதுரைக்கு ஐந்தாமல் தொலைவில் உள்ள கெங்கை கொண்டான் குப்பமென்னும் சிற்றூரிலே ஏறக்குறைய நூறாண்டு கட்கு முன்பிருந்தவர். இவர் தோன்றிய குலம் வீரசைவம்; தந்தையார் பெயர் விரூபாக்க ஐயர்; தாயார் பெயர் சுப்பம்மையார். இவருக்கு இடப்பெற்ற பிள்ளைப் பெயர் அப்பாவு என்பது.

கல்வி

அப்பாலவு கல்வி கற்கத் தொடங்கிய பதினை ஆண்டிற் குள் வடமொழி தெலுங்கு ஆகியவைகளையும் தமிழையும் நன்கு கற்றுணர்ந்தார். காலக்கணிதத்திலும் இவருக்குச் சிறந்த புலமை உண்டாயிற்று. இவர் இளம் பருவ முதற் கொண்டே அறிவுதரல் ஆராய்ச்சியிலும் கடவுள் வழி பாட்டிலும் முழுமனதையுஞ் செலுத்தியிருந்தார். ஞான வாசிட்ட தாலை நன்கு ஓதியுணர்ந்தார். இவரிடம் பலர் அறிவு நூல்களையும் காலக்கணிதம் முதலியவைகளையும் ஓதியுணர்ந்தனர்.

புகழ் பெறல்

அறிவு நூல்களை நன்கு பயின்றதோடு முருகக் கடவு ளிடத்திலுந் சிறந்த போன்பு கொண்டு இவர் நிகழ்ந்த படியால் இவருடைய புகழ் யாண்டும் பரவத் தொடங்கியது. மக்கள் இவர் பால் போன்பு செலுத்திப் பெரிதும் பாராட்டி னர். அடிகளாரும் மக்களுக்கு அறவுரைகள் பலவற்றைக் கூறி அவர்களை வழிநிக்கட் செலுத்தினர்.

திருமணம்

இவருக்கு அகவை இருபத்தைந்து நிறைந்தபொழுது உற்றார் உறவினர் இவருக்குத் திருமணஞ் செய்து வைக்க முயற்சி செய்தனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இவர் விருபாக்கம்மாள் என்னும் மாதினைத் திருமணஞ் செய்து கொண்டு இல்வாழ்க்கையை மேற் கொண்டிருந்தார். விழுப்பன்னம் என்னும் ஊரில் இருந்த மடம் ஒன்றில் அமர்ந்திருந்தார்.

இராமலிங்க அடிகள் தொடர்பு

சிவயோக அடிகள் தாமிருந்த மடத்திற்குப் பொன் னேரிச் சுந்தரம்பிள்ளையை அழைத்துச் சிலருக்குக் கல்வி

கற்பிக்கச் செய்தார். இந்தப் பொன்னேர்ச் சுற்றத்தின்ற இராமலிங்க அடிகளாருடைய தமையனார் சபாபதிப்பிள்ளைக்கு மருமகனாவர். இதனால் சபாபதிப்பிள்ளையும் அடிக்கடி மருதூர்க்கு வந்து சென்றார். இவ்வாறு அடிகளின் திருப்பதிகளைக் கற்பதனால் சுற்றத்தாரிடையே செல்வாக்கு உண்டாகிறது. அதனால் அவர் மிகுந்த தொல்லைக்குள்ளானார். இச்செய்தியைத் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் உணர்ந்தார். அன்பர்கள் சிலரோடு மிழலைநாதத்திற்கு வந்தார். அடிகளாரைப் பார்த்து, "காலை முதல் காம் தூறாண்டுப் பகல் முழுதும் மணிக்கு இவ்விடம் வந்து சுற்றத்தின் தமையனார் சொற்பொழிவு செய்ய கிட்ட செய்யுளில் இருந்த சொற்பொழிவு செய்த கிட்டு நான்தோறும் வடலூருக்குச் செல்லுவோம். முடிவுநாளில் காய்ச்சல் கிளம்பிடும்," என்று கூறிச் சென்றார். அவ்வாறே சொற்பொழிவும் நிகழ்ந்தது. காய்ச்சலும் குணமாகிற்று.

தமது சேய்தல்

பிறகு அடிகள் தம்முடைய சென்னை வாசஸ்தலம் திரும்பத் மடத்திற்குச் சென்ற சூத நிற்கள் வரையும் அருள்நெறியிலேற்றினார். அக்காலை அன்பர்கள் பலருக்குத் திருவருள் புரிந்தார். பிறகு வரை முதலிய இடங்கட்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் சென்று திரும்பினார்.

அன்பர்கட் கருள் புரிதல்

அடிகளார் முருகக் கடவுளின் திருச்சபை அமைத்துச் சமயச் சொற்கள் வட்டி வழிபாடுகள் செய்ற அன்பர்களுடைய எண்ணத்தையெல்லாம் இனிதளித்த அவர்கட்கு அருள் புரிந்த கொண்டிருந்தார். அன்பர்கள்

தம்முடைய விருப்பங்களை எழுதி அக்குவைக்கப்பட்டிருந்த பெட்டி ஒன்றில் இட்டனர். அவ்வர்கட்குத் தகுந்த மறு மொழிகள் செப்புள் வடிவாக அடிகளால் தெரிவித்தருளப் பட்டன எப்பொழுதும் அடிகளாரைப் பெருங் கூட்டஞ் சூழ்ந்து கொண்டிருந்தது.

அமைச்சர்க்கருளல்

சென்னை மாநில அமைச்சராக விளங்கிய திவான் பகதூர் சுப்பராயலு ரெட்டிகாரு என்பவர் அடிகளாரைக் கண்டு போற்ற எண்ணினர். நண்பர் ஒருவரை உடனழைத்துக் கொண்டு அடிகளார் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். காலக் கணிதப் புலமையிலுஞ் சிறந்து விளங்கிய அடிகளார் சில செய்யுட்களை எழுதி வைத்திருந்தனர். அமைச்சரும் அவருடைய நண்பரும் அடிகளாரைக் கண்டு வணங்கினர். அடிகளார் தாம் எழுதி வைத்திருந்த செய்யுட்களை எடுத்துக் கொடுத்தனர். அவர்கள் மிகுந்த வியப்படைந்தனர்.

தாசில்தார்

சோலையப்புரி வாசிகளிடத்திலே நிலத்தீர்வைப் பாக்கியை வசூலிப்பதற்காக வேலூரை தாசில்தார் ஒருவர் வந்தார். அவர் அடிகளாருடைய பெருமையை உணர்ந்து அடிகளாரைக் கண்டு வணங்கினர். அப்போது அடிகளார்,

"கஞ்சனைச் சங்க ரித்த கடவுளை யிருட்ன மூர்த்தி
பஞ்சமன் வீட்டில் வந்து பாணைச்சோ றெடுக்க வைத்தாய்
தஞ்சமென் றடைவ தெல்லே தாரணி யாளு வோர்கள்
செஞ்சிலும் வீடிவ தில்லை யிருட்டினே யிருளை செய்வீர்.

என்னுஞ் செய்யுளைப் பாடினர்.

செட்டி

செல்வனுகிய செட்டி ஒருவன் இருந்தான். அவன் அடிகளாருடைய பெருமையை நன்கு உணர்ந்தவனல்ல வில்லை. உள்ளத்தில் மிகுந்த ஏளனமாகவே எண்ணிக் கொண்டு அடிகளாரைக் காண வந்தான். அப்போது அடிகளார்,

"வட்டிகள் வாங்குஞ் செட்டி
வழிதனிற் பிழைகள் சொன்னுன்
சட்டிதான் கொடுப்பான் தேவி
சண்டானன் சூடும்ப மெல்லாம்
ஓட்டிடும் ஒருவா சத்தில்
ஒழியுமே பணங்க ளெல்லாம்
எட்டிபோல் ஒத்த னுக்கு
இயம்பினுள் தேவி தானே."

என்னும் செய்யுளைப் பாடினர். இதனைக் கேட்ட செல்வச் செட்டி 'அந்தோ அழிவு வருமே; பெரியாரைப் பேணு தொழிலில் பெரியாரால் போர இடும்பை வரும் என்பதை அறியாது போனேமே' என்று உள்ளம் வருந்தினன்.

கட்டிடத்திற்குப் பொருள்

ஓர் அன்பர் ஒரு கட்டிடம் கட்டிமுடிக்க எண்ணினர். ஆனல் அதற்குப் போதிய பொருளில்லை. அதுபற்றி மிகுந்த கவலையோடு அடிகளிடம் வந்தார். அவ்வன்ப ருடைய கவலையை மெய்யறிவுப் பார்வையினல் உணர்ந்து கொண்ட அடிகள்,

"கற்பக சட்டைப் போலக் கட்டடம் கட்ட வரும்
பொற்பணம் வந்து சேரும் புண்ணிய சாலை சாலே
கற்பனை கடந்தார் சேவைக் கருத்துடன் நிதிகள் சேரும்
சொற்பனம் கண்டு வாசர் சோதனை தெரிந்து கொண்டே."

என்னும் செய்யுளைப் பாடினர்.

நோய்கொண்ட பெண்

ஒரு மாது அடிகளாரிடம் அன்புடையவளாக இருந்தாள். அவளுக்குக் கொடிய நோய் ஒன்று உண்டாயிற்று. அந் நோய் நீக்கத்தை நாடிய பெண் அடிகளாரை யடைந்து வணங்கி நின்றாள். அடிகளார் அப் பெண்ணைப் பார்த்து,

"கனியுடைக் கணைசர் பாதம்
கருத்தினில் இருத்து வோர்க்கு
இனியொரு குறையு மில்லை
எதிரும் வினைக ளெல்லாம்
கனியது தோடந் தீரும்
சங்கடம் நிவர்த்தி யாகும்
வனிதைக்குஞ் சுகமுண் டாகும்
வாக்கியம் நம்பி னோர்க்கே."

என்னுஞ் செய்யுளைத் திருவாய் மலர்ந்தருளினார்.

மந்திரவாதிக்கு அறிவுரை

அந் நாளில் மந்திரவாதி ஒருவன் இருந்தான். அவன் அடிகளுடைய செயல்களெல்லாம் மந்திரத்தின் பாற்பட்டனவை யென்று மதிமயங்கி மனம் மருண்டான். அடிகளோடு சொற்போர் புரியவேண்டும் என்று எண்ணினான். புறப்பட்டு அடிகள் இருக்குமிடத்திற்கு வந்தான். அவனைக் கண்டதும் அடிகளார்,

"அட்ட கருமங்கள் வேண்டாம்
ஆணவங் கொள்ள வேண்டாம்
கெட்டதோர் செய்கை வேண்டாம்
கிருதகன் பேச வேண்டாம்
சட்டமா யிருத்த வொண்டு
சாமியைத் தஞ்சி ரானில்
இட்டபாக் கியமும் பெற்றே
எவர்களும் புகழ்வர் தாமே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். மன்னவரும் ஆனவுந் தணிந்து திரும்பிச் சென்றான்.

சொற்போரிட வந்தோர்:

மற்றொரு நாள் சிலபேர் அடிகளாரிடஞ் சொற்போர் செய்து அடிகளாருடைய பெருமையைக் கெடுக்கவேண்டும் என்று எண்ணங் கொண்டவர்களாய் அடிகளாரிடத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்களுடைய நோக்கத்தை அறிவுப் பார்வையால் உணர்ந்து கொண்ட அடிகள்,

'யாது வரினும் அதுவருக யாது போகினும் அதுபோக
நீது வரினுங் திருவடியைத் தினமும் நினைக்க அருள்புரிவாய்
மாது வரினும் மயங்காமல் மனத்தில் அழுக்குள் சேராமல்
ஏது வரினும் என்னதென்றே எண்ண நிருக்க என்னினனே.

ஏதுவரினும் என்ன தென்று எண்ண நிருக்க அருள்புரிவாய்
சூது சகம்போல் இருந்திடினும் சுத்த ஞானச் சுகமாமோ,
வாது சகம்போல் இருப்பவர்கள் வாசார் இந்த வாக்கியத்தைத்
நீது நீசத் தெளிவிப்பாய் தெளிந்தால் நீது நீங்கிடுமே.''

என்னுஞ் செய்யுட்களைப் பாடினர். சொற்போரிட வந்த வர்கள் வறிதே திரும்பிச் சென்றனர்.

மகப்பேறு

முத்து நாயகு என்பவர்க்கு வெகுகாலம் வரையில் மகப்பேறு இல்லை. தமது குறையை அடிகளாரிடத் தெரி வித்து மகப்பேற்று வரம்பெற வேண்டும் என்னும் விருப் பத்தோடு அடிகளாரிடம் வந்து வணங்கி நின்றார். அவ ருடைய உள்ளக் கிடக்கையை உணர்ந்து கொண்ட அடிகள்,

"முத்தக்கு மாதன் என்றுல் முன்வந்து நிற்கும் பின்னை
எத்திக்கும்பின்னை யாமோ எம்முடைப் பின்னை.யப்பா
பத்திக்குப் பின்னை யாகும் பரமற்கும் பக்த ருகும் [தென்."
சித்திக்குள் செங்கோல் வேந்தன் செயராமப் பிரபு வென்

சன்னஞ் செய்யுளைப் பாடினர். அவ்வன்பர் சிறிது காலத்தில் தம்முடைய மனக்குறை தீர்ந்து அரிய மகப்பேற்றை யெய்தினர்.

மடப்பள்ளியிற் கள்ளன்

ஒருநாள் இரவு அடிகளார் பெரும் கூட்டத்தின் நடுவில் அமர்ந்து முருகக் கடவுளுடைய திருவிளையாடலைப் பற்றிச் சொற்பொழிவு செய்துகொண்டிருந்தார். திடீரென்று தம்முடைய மாணவராகிய இலிங்க செட்டியார் என்பவரைப் பார்த்து, "மடப்பள்ளியிலே கள்ளன் வந்திருக்கிறான்," என்று கூறினர். கூட்டத்தில் இருந்தவர்களிற் சிலர் விரைந்தெழுந்து மடப்பள்ளிக்கு ஓடினர். கள்ளன் தன்னுடைய கையில் இருந்த படைக்கலத்தை எழுவனிட்டுவிட்டு ஓட்டம்பிடித்தான். அச் செய்தியை அன்பர்கள் அடிகளாரிடம் தெரியப்படுத்தினர். "அவனுக்கு அவனுடைய வினைக்கீடாக அத்தொழிலை இறைவன் தந்தான்," என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அடிகள் இயற்றியருளியன

அடிகள் அவ்வக் காலங்கட்கேற்பத் தனிப்பாட்டுகள் பல இயற்றியிருப்பதுடன் உமாதேவியின்மீது அருள் வாக்கியம் முதலிய பாடல்களையும் இயற்றியுள்ளார். அடிகளார்மீது அன்பர்கள் பலர் தோத்திரம் முதலியன இயற்றியுள்ளனர்.

இறுதி

பல அருட்செயல்களை இயற்றிக்கொண்டிருந்த அடிகளார் கி.பி. 1878 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் இருபத்தெட்டாம் நாள் சிவபெருமானுடைய திருவடி நீழலிலே கலந்தருளினர்.

தோற்றம்

"தலைமின்மிளை சுற்றுநிகள் சாற்றமொரு பல்லி
தான்காடி விழும்வகைபோல் சாத்திரங்கள் தந்த
உலைபதனை உணர்த்துமுண்மை உணராத்தன் மையிலும்
உற்றபெரும் பவக்கடல்வீழ்ந் தசலனை உழன்ற
வரகாரு நிலைபேற்றுக் கருணைபுடன் உவந்த
கலக்கமற நனைத்தக் கடலின்முழுக் காட்டிப்
புலைபறமோர் மோக்கமெனும் கன்னிலையிற் கூட்டப்
புலியில்லவரும் சற்குரு பொற்பதமேத் நிலைவோம்."

என்று பெரும் புலவர் திருவிளை கல்லூர் சின்னைய சாமிகள் புகழ்ந்து பாராட்டப் பெற்ற இவர், தொண்டைவள நாட்டிலே சென்னைமாநகரிலே கிபி ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சிவசங்கர செட்டியார், தாயார் பெயர் முனியம்மையார். இவருடைய குலம் வைசியர் வகுப்பு.

கல்வி

இளமைப் பருவத்தில் பள்ளியிற் கற்க வேண்டிய கல்வியைக் கற்றுத் தேறினர். பள்ளியிற் கற்றதோடு கல்வி முடிவு பெற்றதென்று எண்ணாமல் மேலும் மேலும் நன்னூல்களை ஓதியுணர்ந்தார். பழம்பிறப்பிற் செய்த நல்வினையினால் வீடுபேற்று நெறியிலே இவருடைய உள்ளம் சென்றது. பிறவிக் கடலைக் கடப்பதற்கு அறிவு நூல்களை ஓதத் தொடங்கினர். அடியார்களுடைய தொண்டிலே உள்ளத்தைச் செலுத்தினர்.

ஆசிரியரை அடைதல்

அக்காலில் சென்னை திருவொற்றியூரில் இருட்டிணை வந்த அடிகள் என்னும் பெயருடைய பெரியார் ஒருவர்

இருந்தார். அவருடைய பெயர் 'குறள் சாமி' எனவும் வழங்கியது. அப் பெரியார் உண்மை ஞானம் கைவரப் பெற்றவராய்த் தம்மையடைந்த பக்குவிகளைப் பிறவிக் கடலினின்று கரையேற்றிவிடக் கூடியவராய்ச் சிறந்து திகழ்ந்தார். அவருடைய பெருமையை இவர் பலர் வாயிலாகவும் கேள்வியுற்றார். அவரிடத்திற்கு அடிக்கடி போய் வழிபாடு பணிவிடை முதலிய செய்து வந்தார். அவர் இவருடைய பக்குவத்தை உணர்ந்து ஒருநாள் அறிவுரை கூறிச் சமாதி நெறியில் பழகுமாறு திருவருள் புரிந்தார். இவர் தம்முடைய இல்லத்திலேயே இருந்து அறிவுநூல் ஆராய்ச்சி சமாதிநெறி முதலியவைகளிலே பழகினர். சதுர் சச்சிதானந்த அடிகள் என்னும் பெரியாரிடத்தில் மிகுந்த பேரன்புடன் பதினைந்தாண்டுகள் வேதாந்த நூலைக் கற்றார். கோடக நல்லூர்ச் சுந்தர அடிகள் என்னும் பெரியாரிடத்தும் வெகு காலம் பழகிப் பல செய்திகளை யுணர்ந்தார். இத்தகைய வேதாந்த நூற்பயிற்சியால் இவர் சிறந்த வேதாந்தியாகச் சிறந்து திகழ்ந்தார்.

இல்லற நெறி

இவர் வேதாந்த நூல்கள் பலவற்றையும் ஓதியுணர்ந்து சிறந்த வேதாந்தியாகத் திகழ்ந்தாரேனும் துறவியாய் இல்லந் துறந்து செல்லவில்லை. சனகரைப்போல் இல்லற வொழுக்க நெறியிலேயே நின்று வாணிகம் முதலியவைகளை மேற்கொண்டிருந்தார். "மாதவஞ் செயினுஞ் செய்வார் வாணிகஞ் செயினுஞ் செய்வார்" என்பது பெரியோர் வாக்கு.

பதிப்பகம்

வாணிகத்தில் ஈடுபட்டிருந்ததோடு 'சிப்பன் அச்சுக் கூடம்' என்னும் பெயரோடு அச்சகம் ஒன்றை அமைத்துத்

தமிழ்மொழியில் உள்ள சிறந்த நூல்களையெல்லாம் அச்சிட்டு வெளிப்படுத்தினர். தமிழ்நூல்கள் மிகுதியாகப் பரவாமலிருந்த அந்நாளில் இவருடைய நூல் வெளியீடுகள் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த துணையாயின.

கண்டன நூல்கள்

அந்நாளில் வேதாந்திகட்கும் சித்தாந்திகட்கும் மிகுந்த போராட்டமாக இருந்தது. இரு சாராரும் ஒருவரையொருவர் தாக்கிக் கண்டன நூல்கள் எழுதுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். வேதாந்த நூற் பயிற்சியில் புலமை பெற்றுத் திகழ்ந்த இவர்,

க. தத்துவ வாதம்
உ. சங்கராசாரியர் அவதாரமகிமை
ங. வேதாந்த சங்கை நிவாரணம்
ச. அத்வைத கண்டன பரிகாரம்
ஞ. பதிபசுபாச வாதம்
ட. துவிதசைவமே மாயாவாதிகள்
ண. மாயாவாத சைவ சண்டமாருதம்
த. திருவண்ணாவர் முதற் குறள்
ந. பசு சச்சிதானந்தம் உடையதா?
ப. அனைதிக சைவ சண்ட மாருதம்
ம. மூடிவுரைச் சூறாவளி
ய. பஞ்சதசப்பிரகரணபாச விளக்கச் சண்டமாருதம்
ர. துவிதாத்துவித வாதம்
ல. துவிதசைவ மறுப்பு
வ. பேதவாத நிரல்காரம்
ழ. திருமந்திர விசாரணை
ள. சீவான்மாவின் பரிணமம்
ற. வேதாந்த தீபிகை
ன. மூதற்குறள்வாத சதகண்டனி

முதலிய இருபத்து நான்கு கண்டன நூல்களை எழுதிப் புனை பெயரால் வெளியிட்டார். அந் நூல்களெல்லாம் இந் நாளில்

"துவைத வைவகண்டனம்" என்னும் பெயரோடு விளங்கு கின்றன.

பாராட்டு

இவருடைய சற்குணம் சற்செயல் முதலியவைகளைக் கண்டாராவரும் மிகுந்த பாராட்டினர். ஒரு புலவர் இவரைக் குறித்து எழுதத் தொடங்கியபோது, "இவ் வுத்தமர் திராசை, தவம், பொறுமை, அருள், மகிழ்ச்சி, வாய்மை, அறிவு, அடக்கம் என்பவற்றிற்கு உறைவிடமா யிருந்து, நமன் வருகையை நல்கிருந்தனை நாடியிருந்தவர். இவர் எப்போதும் தம்மை அன்போடடுத்துக் கேட்பவர்க்கு ஆக்ம தத்துவோபதேசஞ் செய்வதில் மிக்க ஊர்வமுடை யவர்; குடும்பத்தில் எத்தகைய துன்பம் நேரிட்ட காலத்தும் கனிபோ முகமுடைய சுந்தரபுருடர். எவரெவ ரெத்திறத்தர் அத் திறத்தராயிருந்து அவரவர்க்கான கூறுவதில் அருஞ் சமர்த்தர்; வருணாசிரம தருமங்களில் தவறுதொழுகுவதில் சற்றிறத்தர். தம் பெறலரும் மனி மி உயிர் வீந்த காலத்தும் சிறிதும் வாடா முகத்தினராய் மக மகிழ்வுடன் விளக்கிய மகாபாரதத்தவ ஞானி. தேகோகம் பாவனை சொப்பனத்துமில்லாத தீர புருடர். தம்மைச் சிவமென்று தம்மைச் சார்ந்தொழுகும் சாது புருடர் களுக்குப் போதிப்பதில் மகா சாதுர்யவான்" என்று எழுதினர்.

இறுதி

இத்தகைய புகழ்க்கிருபை இவர் ககூ0க ஆம் ஆண்டு சனவரித் திங்கள் அ ஆம் நாள் சர்வரியாண்டு மார்கழித் திங்கள் இருபத்தைந்தாம் நாள் வீடுபேற்றையடைந்தார். இவர் காலமாவதற்கு இரண்டு நாள் முன்னர் இவருடைய மனைவியார் காலமானர்.

விவேக சிந்தாமணி

இவர் காலமானபோது விவேகசிந்தாமணி என்னும் நிகண்டு இதழ் பின்வருமாறு எழுதியது. "இவர் இங்கிலீஷ் தெரியாதவராயினும் தமிழில் கல்வி கற்றவன். வேதாந்த சித்தாந்த சாத்திரங்களில் முதிர்ந்த விவேகம் உள்ளவர்; சற்குணசீலர்; சாத்விக புருஷர்; சத்தியத்தையே பெரிதாகப் பற்றி யொழுகினவர். உண்மையான மனிதர்; உயர்ந்த மனமுள்ளவர்; சாந்தஸ்வரூபி; இவரை சமமதிக்க எந்த வருட காலத்தில் இவரைப்போல் உத்தம புருஷரைக் காண்ப தரிதாயினும் முதலில் தோன்றிய எண்ணம் மேன்மேலும் உறுதிப்பட்டு வளர்ந்து வந்ததேயன்றித் தளரவில்லை. இவர் முதலில் சவுளி வியாபாரஞ் செய்துகொண்டு சென்னை மகாசன சபை மூலமாகவும் சுதேசமித்திரன் பத்திரிகை மூலமாகவும் பரோபகாரமாக உழைத்துவந்தார். சிப்பன் பிரபு கவர்னர்ஜனரலாயிருந்து போனபின் அவரைப்பற்றிச் சனங்களுக்கு உண்டான உற்சாகத்தில் அவர் ஞாபகத்தை நிலைநிறுத்த வேண்டுமென்று எல்லாரும் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்த காலத்தில் காரியத்தில் ஒன்று மில்லாமற் போனபொழுது இவர் சொந்தத்தில் ஓர் அச்சு யந்திரசாலை ஏற்படுத்தி அதற்கு மதராஸ் ரிப்பன் பிரஸ் என்று பெயரிட்டு நடத்தி வந்தார்."

என்று பாராட்டி எழுதியது. இவர் "தூரியசனப் பிரியன்" என்னும் பத்திரிகையையும் சிறிதகாலம் நடத்தினர். இவரிடம் அருளுரை பெற்ற மெய்யறிவு கைவரப் பெற்ற வர்கள் பலர். திருவிளைசைநல்லூர்ச் சின்னைய நாயகர் என்பவர் இவர்மீது, 'இரத்தின சற்குரு நேசத்திரமஞ்சரி' என்னும் புகழ்நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார். சென்னை வியா சர்பாடியில் ஞானபாநுவாக விளங்கியிருந்த காயாரத்தில் சிவப்பிரகாச அடிகளாரும் இவரிடத்தே அறிவு நூல்கள்

சிலவற்றை ஓதியுணர்ந்தவர் என்பர். இவரால் ஏற்படுத்தப் பட்ட அச்சுக்கூடம் இவருடைய மகனிய சிவசங்கரச் செட்டியாராலும் நடத்தப்பட்டுப் பின்பு வேறொருக்கு மாறி இந்நாளில் புதுக்கோட்டையில் உள்ளது.

---

20. சுப்பிரமணிய ஐயர்—தஞ்சை

தோற்றம்

இவர் சோழவள நாட்டில் தஞ்சைமாநகரில் ஏறக் குறைய கூடு0 ஆண்டுகட்கு முன்பு தோன்றினர். இவருடைய குலம் அந்தணர் குலம்.

கல்வி

இளமையிற் பள்ளிக் கல்வியை நன்கு கற்றார். பிறகு இலக்கண இலக்கியங் கற்றுத் தமிழ்ப் புலவராகத் திகழ வேண்டுமென்று விருப்பங் கொண்டார். தக்க தமிழறிஞர் களிட்த்தே சவான் முறையாகச் சிற்றிலக்கியங்கள் பெரிய்க்கி யங்கள் இலக்கண நூல்கள் சங்கநூல்கள் முதலியனவகளை வான்முறையாகக் கற்றுத் தேறினர். செய்யுள் இயற்ற வதிற் சிறந்து திகழ்ந்தார்.

அவதானம்

அந்நாளில் அவதானம் புரிவோர்பலர் இருந்தனர். இவ ரும் அவதானம் பழகத் தொடங்கி அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம் முதலியவைகளைச் செய்து இறுதியிற் சதாவதானியானார்.

அவதானப் பாடல்கள்

இவர் பலமுறை பல ஊர்களில் அவதானஞ் செய் திருக்கிறார். ஓர் அவையில் பொன்னுசாமித்தேவர்,

"கற்றை பஞ்சாயிருக்குங் காண்" என்னும் சற்றடியைக் கொடுத்துப் பாடலை முடிக்கச் சொன்னார். உடனே இவர்,

"நிற்குகரை யெதிரிசி செல்லுமன்னை யாக்கொண்டு
தக்கதி சட்டிபொன்னுச் சம்மன்று—புக்கிலக்கை
மற்றுனைத் தேய்த்தநிரு மாறுதற்கு சிகாண்க்குச்
சற்றேபஞ் சாயிருக்குங் காண்."

என்று பாடினார். மாறுதற்கு சிகீய தூதிசேடன். பாம்புக்கு உணவு கற்றென்பது அல்வழக்கு. ஓர் அரசனுக் புகைவண்டியைக் குறித்துக் கல் (ர) இல்லாத வெண்பா ஒன்று பாடவேண்டுமென்ற வேண்டிக்கொள்ள அப் பொழுது இவர்,

"அம்புவியின் முன்னே ரரிதி னியற்றிவைத்த
பம்புருளிகை பழுதறமே—கிம்ப
லைகவண் டிமிர்கண்ணி மன்னன்மது மாசுக்குப்
புகைவண்மை வத்தபின் பு."

என்று பாடினார். வேறொருவர் கொம்பில்லாத (ல) வெண்பா ஒன்று பாடவேண்டுமென்ற வேண்டிக்கொள்ள அப்பொழுது,

புகைவண்டிக்கு

"வண்புகரி வண்டிதன்னுல் வத்தவர்க்குப் பட்புலறுத்
தண்டவர நஞ்சமாத் தட்டிவிடை—புண்டரிகம்
கத்துகதி காண்மினப்பால் வடசை மாசாட்டிச்
சித்தருணக் காட்டுந் திகழ்ந்து."

என்று பாடினார்.

அரசவண்டி—புகைவண்டி.

தபாலுக்கு

"முத்திதரு தாரு முனிவ சிருவர்முனம்
பத்திரச் சின்ற பணிந்திறைஞ்ச—சத்தமிடும்
கண்ணம் புயத்தான் கருதபதத் தான்பத்தர்த்
தின்னம் புயத்தான் சிவன்."

என்னும் வெண்பாவைப் பாடினர். ஒருவர் மாத்தினை வர்த்தனையாக மிகவுயர்ந்த கடவுளுக்கு ஒரு செய்யுள் பாடவேண்டும் என்று வேண்டிக்கொண்டபோது,

"மாத்தினையொன் றுற மன்ன வளத்தரேனும்
மாத்தினை சேர் வேம்ப மதிமுடியன்—மாத்தினையொன்
றேற்ற சிலையா வெழுந்தவனேனும் மாத்தினைசால்
சோற்றை வளைக்கல் சகம்."

[மாத்தினை ஒன்ற ஏறுமலை என்பது ஒரு மாத்தினை மிகப் பெற்ற சகம். அது சகம் என்ற ஆயிற்று. அதன்பொருள் யானை. ஓர் மாத்தினை சேர் வேம்ப என்பது ஒரு மாத்தினை மிகப் பெற்ற பதி. அது பாதி என்றாயிற்று. அதன் பொருள் அர்த்தம். மாத்தினை ஒன்ற எற்ற சிலை என்பது ஒரு மாத்தினை மிகப்பெற்ற கல். அது கால் என்று ஆயிற்று. அதன்பொருள் புதல்வன். ஓர் மாத்தினை சால் சோற்றை என்பது ஒரு மாத்தினை மிகப்பெற்ற பதத்தை - அது பாதத்தை என்று ஆயிற்று. அதன்பொருள் சரணங்களை.]

இவ்வாறு இவரால் இயற்றப்பெற்ற சித்திரக் கவிகள் பல. அவதானம் நிறைவேறிய சமயம் ஒன்றில் இவருக்குப் பெரும்பொருள் வழங்கினர். அப்போது,

"என்றுகீழ்கென் முற்றந் தெளித்து கலைபொழித்தற்
தன்றுவின் மேலவன் மார்பத் தவளரு டோய்ந்தலிந்த
மன்றரு மேலவர் வல்குல் கொடையீனை மாஞாதி
குன்றுத கற்பகச் செலிற்கு முண்டோ கொடைத்தரமே."

என்னும் செய்யுளைப் பாடினர்.

சமகாலப் புலவர்கள்

இவர் காலத்தில் வாழ்ந்திருந்த புலவர்கள் பலர். அவர்களில் சிலர் கோபமுத்தூர் வழக்கறிஞர் கந்தசாமி முதலியார், நில்லைபபூர்ச் சந்திரசேகர கவிராச பண்டிதர். பெரும் புலவர் திருநெல்வேலி மீனாட்சிசுந்தரம் பிள்ளை

புலவர்கள், திருகாராசச் செட்டியார், சி. வை. தாமோதரம் பிள்ளை, தஞ்சை ந. வீரபத்திரபிள்ளை, மாயூரம் சந்திரசேகர உபாத்தியாயர், செந்தமிழ்குடி சுப்பராய ஐயாவர்கள், தஞ்சை சுப்பிரமணிய பாரதிகள், கல்லாகனிப்பட்டி தெய்வசிகாமணிக் குருக்கள், சென்னைபுரம் வை. மு. இராமநாதன் செட்டியார், மழவை சுப்பிரமணிய ஐயர், திரு வெவ்வளூர் இராமசாமிச் செட்டியார், பொன்னேரி அமிர்த லிங்க சேதிடர், சேடசாவதானம் சுப்பராயச் செட்டியார், தேவகோட்டை வன்தொண்டச் செட்டியார், பூண்டி அரங்கநாத முதலியார், வீர. லெ. சின்னைய செட்டியார், இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவர் முதலியோராவர். இவர்களிற் பலர் இயற்றிய நால்கட்கு இவர் சிறப்புப் பாயிரமும் அளித்துள்ளார்.

சித்தியாவர்த்தனி அச்சுக்கூடம்

சென்னைமா நகரில் 'சித்தியாவர்த்தனி அச்சுக்கூடம்' என்னும் பெயரோடு அச்சுக்கூடம் ஒன்று அமைத்து நூல் கள் பலவற்றை வெளியிட்டார். அவ்வச்சுக்கூடம் அமைக் கப் பட்டபோது;

"பூமேவு காமேவு கோமேவு கோன்வதாம்
புவிமேவு தடலைமேவப்
புகழ்மேவு திதிமேவு பணிமேவி வேண்டுதப்
பொதிமேவு தவமேவுளான்
காமேவு கைமேவு சீர்மேவி நிறைகண்டி
கைமேவு பொன்னிபூட்டிக்
கனிமேவு குஞ்சரக் கன்றினைத் தருமிக்கோர்
கவிமேவ வல்குதவைப்
பாமேவு மாமேவு கலைகளினை மேகலைப்
பணிவென்ன மேவுருமையலைப்
படிமேவு கூடல்வளர் சங்கமே வியபுலவர்
பகைதீர்த்த சேயமலரோன்

"மேவு மாதைமா நரமேவு திருவையை
சேப்பதிறை வைத்தேத்து தும்
வேலும்மித் பாவர்த்த னீயெனுமச் சுவர்நிரம்
"மேடாதுத் தனைகவென்றே."

என்னுஞ் செய்யுளைக் கடவுள் வணக்கமாகப் பாடினர்.

இயற்றிய நூல்கள்

இவர் அவ்வக் காலங்களில் தனிப் பாடல்கள் பல பாடினர். அவைகளைப் பல பாடற்றிரட்டு என்னும் பெயரோடு அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இவர் காலத்திய புலவர்கள் இவரிடஞ் சிறப்புப்பாயிரம் பெறுதலே மிகப் பெருமையாகக் எண்ணி மதித்தனர். இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்:

க. இராமாயண வெண்பா
உ. காவேயாச் சோலிற்புராணம்
ங. கோட்டுர்ப்புராணம்
ச. இலுப்பைக் குடிப்புராணம்
ஞ. மாற்றூர்ப் புராணம்
ட. உப்பூர்ப் புராணம்
ண. திருமருகற்புராணம்
த. திருவேடகப் புராணம்
ந. சோணை முத்தவிநாயகர் இரட்டை மணிமாலை
ப. தலைப் பின்னைத் தமிழ்
ம. கோயிலூர்ப் பின்னைத் தமிழ்
ய. மாணிக்கவாசகர் கன்மணிமாலை
ர. புதுவைப் படிக்காசுகாதர் இரட்டை மணிமாலை
ல. அட்டைகளிய மாலை
வ. திருச்சேரி மடலை சாதாபிட சக்காச்சரிய கணிகள் தொத்திர மெலிவாயபஞ்சகம்

என்பனவன்றி மேலும் பல நூல்களியற்றி இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரியற்றிய கோயிலூர்ப் பின்னைத் தமிழ்ப் பாடல்களில் ஒன்றை அடியிற்காண்க.

"வன்னிசா யகியரசர் சென்னிசா யகியதில
மன்னுயிர் அனைத்தும் சன்ற
மாதகா யகிமறைகள் ஓதகா யகிகெடிய
மலையரையன் ஆன்று பெற்ற
கன்னிசா யகிசெய்ய கமலசா யகிபல்ல
கலைகள்சா யகிஇரவ ராம்
கண்கள்சா யகியரிய பெண்கள்சா யகிபருட்
சடலிசு யகியு ருவமாம்
மின்னிசு யகிபெருகு பொன்னிசு யகிசுத்த
விமலசா யகிடென் னுளே
மினிருசா யகியெங்கும் ஒளிருசா யகிசெம்மை
மேவிய திருக்கோ யிலூர்
தன்னிசு யகிளங்கள் நெல்லிசா யகியம்மை
சப்பாணி கொட்டி யருளே
சாந்தமுறும் அன்பருள் வழுந்தருள் டாஞ்சோதி
சப்பாணி கொட்டி யருளே."

இதனி

இவர் காலமான ஆண்டு முதலிய செய்திகள் தெரிய வில்லை. இவருடைய அவதானத்தைப் பாராட்டிச் சென்னை இராயபுரம் புலவர் நாராயணசாமிப் பிள்ளை,

"பூவிலுயர் திருத்தஞ்சை வாழ்சுப்ர
மணியனெனும் புலவர் தான்கு
பாவிலுயர் வெண்பாவும் சுப்பாவும்
மூவினமும் பரிசோ டேற்றும்
கோவிலுயர் அவதானம் ஒருநான்கும்
நீபுரந்தும் கொழுமை கேட்டு
சலிலுயர் சடனனி உடல்விளர்த்துத்
தழ்ந்தனனில் லவ்வ தென்னே"!

என்று பாடியுள்ளார்.

24. திருமலை சக்கையா கவுடர்*

தோற்றம்

தென்தமிழ் நாட்டில் மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் கன்னட நாட்டிலும் இலட்சக்கணக்கான ஒக்கலிக கவுடர் வகுப்பினர் வாழ்ந்து வருகின்றனர். விசய நகர வீழ்ச்சிக்குப் பின்னர் ராயலசீமா தக்கபத்ரா பெனு கொண்டா வட்டகையில் இருந்து காஞ்சிபுரம் மார்க்கமாகத் தமிழ் மாவட்டங்களில் குடியேறிய கன்னடம் தெலுங்கு மொழிகள் பேசும் வகுப்பினர்களில் ஒக்கலிகர்களும், அணுப்ப கவுடர்களும், தொட்டிய பலிச நாயகர்களும் ஆங்காங்கே பல பாளையப்பட்டுகள் ஏற்படுத்தி ஆண்டு வந்தார்கள். அவ்வாறு ஏற்பட்ட பாளையங்களுள் கோம்பைப் பாளையமும் ஒன்று. இப்பாளையங்கள் பின்னாளில் சமீன்கள் எனப் பெயர் வழங்கலாயிற்று. கோம்பைச் சமீன் மரபில் கன்னப்ப கவுடர் என்னும் பெரியார் மிகுபுகழ் பெற்றவர். திருமலை சக்கையா கன்னப்ப கவுடரின் புதல்வராய்க் கி. பி. கஅசசு-ஆம் ஆண்டில் பிறந்தார்.

கல்வி

இளம் பருவத்திலேயே சக்கையா பள்ளிக்கு அனுப்பப் பட்டார். கல்வியில் மிகுந்த விருப்பமும் முயற்சியும் உடையவராக இருந்தார். தமிழ்நூல்கள் பலவற்றையும் ஊன்றி கற்றுத் தேர்ந்தார். தமிழறிஞர்களுடைய கூட்டுறவும் இவருக்குத் தக்கவாறு அமைந்தது. ஆகவே இவர் செய்யுள் பாடுந் திறமும் உடையவராய்ச் சிறந்து திகழ்ந்தார். இவரால் அவ்வக் காலங்களில் இயற்றப் பெற்ற தனிப் பாடல்கள் பல. "நாகவனம் நாகவனம்" என்று

---

* இவ் வரலாற்றுக் குறிப்புகள்: திரு. B. திருமலைசக்கையா என்பவரால் உதவப் பெற்றன.

இவர் மனிதர்களைப் பாடியதில்லை. பெரும்பாலும் தெய்வங்களின் மீது பாடுதலிலேயே உறுதியாகக் கொண்டிருந்தார்.

இயற்றிய நூல்கள்

சித்திரநாயகர் பதிகம், மாலூற்று வேலப்பர் பதிகம், காமாட்சியம்மன் பதிகம், சபாநாதர் பதிகம், மல்லிகார்ஜுனர் சிலேடைப் பதிகம், சிவபரணிக் கீர்த்தனைகள், சிவபிரான் யமகவந்தாதி, மாலைமாற்று, சித்திரகவிகள், அரிச்சந்திர வெண்பா முதலிய நூல்கள் இவரால் இயற்றப் பெற்றன. உரைநடையில் 'கல்வதான குடாரி' என்னும் புனைந்துரைக் கதையையும் இவர் எழுதியுள்ளார்.

சித்திரகவிப் புலவர்

சித்திரகவிகள் இயற்றுவதில் வல்லவரானபடியால் இவருக்குச் 'சித்திரகவிப் புலவர்' என்னுஞ் சிறப்புப் பெயரும் இணைத்தது.

பத்திரிகைகளில்

இவருடைய காலத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த லோகோபகாரி, தட்சிண தீபம், மகாவிகட தூதன் முதலிய பத்திரிகைகளில் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதினர்.

சிலேடைப் பாட்டு

ஏறக்குறைய எழுபது வாண்டுகட்கு முன்னர், பி. டி. இராசன் அவர்களுடைய பாட்டனார் தியாகராச முதலியார் தமது பாளையம் இல்லத்தில் பேரையூர்ப் புலவர் மீனாட்சி சுந்தரக் கவிராயரைக் கொண்டு அட்டாவதானம் நடைபெறச் செய்தார். இவர் அனைத்தாட்டி,

"குலவுவெள் ளாடிரண்டு முட்டையிடவுமியான் கண்டேன்
சோழிதனில் ஒருகுடம்பால் தரித்திடவுங் கண்டேன்
கலமுறுபா கற்செடியில் கனமாங்காய் கண்டேன்
காளைனப் பிணைமருவி ஈனுந்திடவுங் கண்டேன்

சொலவெருதொன் றெருபசுவை வீழுக்கவுமே கண்டேன்
தொடர்வேங்கை யும்மாடு மொன்றாகக் கண்டேன்
அலமுறசீர் மீளுட்டி சுத்தசா வலண்செய்
அவதானக் தணைக்கடுப்ப அவனியிற்கண் டிலனே."

என்னுஞ் செய்யுள் ஒன்றைப் பாடினர். வெளிப்பொருளைப் பார்க்குமிடத்து வேடிக்கையாகக் காணப்படும். இப் பாட்டுப் பொருளை நோக்கினால் மிகுந்த சிறப்புடையதாக அமைந்து விளங்குகிறது.

(அ - னை) முட்டை - முட்டுத்தன்மை; சோழி - உறையூர்; சூடம் - பசு; பாகல் - பலா; நாரி - பன்னுடை; பசுவை - பசும் புல்; வேங்கை - பொன்; மாடு - பொன்.

விற்பூட்டு வெண்பா

க. திருமலை சக்கையன் என்ற தமது பேரடையையே சுற்றடியாக வைத்து,

"எழிலெலா மொன்று மிசைத்தியற்று மிம்மான்
மொழியமுது மூரல் முருந்தாம்—பொழிலார்
முதிரு மலைதனமாம் மோது திரைமல்
கதிரு மலைசக் கயன்."

என்னும் விற்பூட்டு வெண்பாவைப் பாடினர்.

நண்பர்கள்

கன்னடமொழி பேசும் ஒக்கலிக கவுடர் வகுப்பினரில் தமிழ்நூல் ஆசிரியராகவும் கணிதத்தினராகவும் சிறந்து விளங்கியவர் இப் புலவர் திலகர் ஒருவரே என்னலாம். அரசஞ் சண்முகனர், கந்தசாமிக் கவிராயர், ச. திருமலை வேற்கவிராயர், பி. பழனிச்சாமி ஆசாரியார் முதலிய சிறந்த தமிழ்ப் புலவர்கள் இவருக்கு நண்பர்களாக அமைந்திருந்தார்கள். தமிழ் நறுமணமும் இனிய சுவையும் கொண்ட இவருடைய வாக்குத் திருவருளாற்றலால் ஏற்பட்டதென்றே கூற வேண்டும்.

இதழ்

புகழ்பெற்று விளங்கிய இவர் ஆங்கிலம் ஈராயிரத்து ஆண்டில் இவ்வுலகு வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலில் அடைந்தார்.

---

22. பாஞ்சோதி அடிகள்

தோற்றம்

திருநான்மறைகளாற் போற்றி வழிபடப்பெற்ற சிறப்பும் உடையது வேதாரணியம் என மக்களால் இந்நாளிற் கூறப்பெறும் திருமறைக்காடு என்னுஞ் சிறிய ஊராகும். இவ்வூர்க்குத் தட்பால் ஏழுகல் தொலைவில் ஆயக்காண் புலம் என்னுஞ் சிறிய பேரூர் திகழ்ந்து விளங்குகின்றது. இவ்வூர் பல பெரிய பிரிவுகளையுஞ் சிறிய பிரிவுகளையுந் தன்னகத்தே கொண்ட சிறப்புடையது. இப்பேரூரில் மலையன் குத்தகை என்னுமிடத்தில் பாஞ்சோதி அடிகள் ஆங்கிலம் கஅஅஎ க்குச் சரியான சார்வரித்து ஆண்டு காத்திங்கள் பதினெட்டாம் நாள் பிறந்தார். இவர் தோன்றிய குலம் அகமுடையார் குலம். தந்தையார் பெயர் சிதம்பர தேவர். தாயார் பெயர் அஞ்சலையம்மாள்.

கல்வி

இவர் மிகு இளம்பிராயத்திலேயே தந்தையாரை இழந்தார். தாயார் இவரைப் பள்ளிக்கனுப்பிக் கல்வி கற்பிக்க எண்ணிக்கொண்டிருந்தார். ஆயினும் பள்ளியில் விட்டதாகத் தெரியவில்லை. திருத்தில்லையில் இருந்த இவருடைய உறவுக்குச் சென்றிருந்த ஒரு தருவினைப் பின்பற்றி இவரும் திருத்தில்லையை அடைந்தார். அந்நாளில் அங்குப் பொன்னம்பல சுவாமிகள் திருமடத்தில் காசி வாசி சிதம்பர

அடிகள் என்னும் பெரியோர் அறிவாசிரியராக அமர்ந்திருந்தார். தில்லையை அடைந்த இவர் அப்பெரியாரோடு உடனுறைந்து அப் பெரியாருக்குப் பணிகள் புரிந்து தொண்டராக அமைந்திருந்தபோது அங்கிருந்த அடியார்களிடம் அகவைக்குத் தக்கவாறு நூல்களை ஓதி உணர்ந்து வந்தார். தண்மாணுமழை புலம் பெற்றிருந்த இவர் மிக விரைவில் தானே அறிவு நூல்களையும் ஓதி உணர்ந்து சிறந்த அறிவு நலம் பெற்றார்.

அடிகளார் பற்று

இவர் கூரிய அறிவும் சீரிய பண்பும் சேரிய ஒழுக்கமும் அமையப்பெற்றிருந்தபடியால் எல்லோருடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவரானார். ஆதீனத் தலைவராகிய அடிகளார் இவரிடஞ் சிறந்த பற்றும் மதிப்பும் கொண்டு இவரைப் பெரிதும் பாராட்டி மதித்துவந்தார். " அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் " என்பது ஆன்றோர் புகன்ற அறிவுரை யன்றோ? இவர் மேன்மேலும் நூல்கள் பலவற்றை ஓதி உணர்ந்ததோடு உலக விவகாரங்களையும் நன்கு உணர்ந்தவரானார். காலஞ்சென்ற அறிஞர், க. மு வேங்கடசாமி நாட்டார் முதலியபலர் ஆசிரியரிடம் நூல்களைப் பாடங் கேளாது தாமே தம்முடைய கூரிய அறிவால் ஓதி உணர்ந்தனரென அறிகின்றோம். இவரும் அவ்வாறே சங்க நூல்கள் பலவற்றையும் ஓதியுணர்ந்ததோடு மேலாய அளவு வடமொழி ஆங்கிலம் ஆகியவைகளையுங் கற்றுணர்ந்தார்.

உயரிய பணிகள்

இவர் செய்யுங் காரியங்கள் மற்றவர்களைப் புகழ்ந்து பாராட்டத்தக்கனவாக விளங்கும். ஆகவே ஆதீனத் தலைவர் மடத்தின் பணிகள் பலவும் இவருடைய மேற்பார்வையில் நடைபெறுமாறு செய்தார். இதனால் நடைபெறும்

காரியங்கள் செம்மையாக அமைந்தன. பொன்னம்பல அடிகளாரின் திருமடஞ் சிறந்து விளங்குதற்கான வழி வகைகளை யெல்லாம் தக்காங்கு நாடிச் செயல்கள் புரிந்தார். மடத்தின் பொருளாதாரநிலை நன்கு அமைந்து ஐம்பதுக்கு மேற்பட்ட அடியார்கள் தங்கி வேதாந்த நூல் கற்றல் பணி புரிதல் முதலியவைகளைச் செய்தற்கு வழி யமைத்தார். இவருடைய திருப்பணியின் சிறப்பால் பொன்னம்பல அடிகளாரின் திருமடம் "பெரிய மடம்" எனப் புகழ் பெற்று விளக்கியது.

பொதுநலத் தொண்டுகள்

"ஞானிகள் விலகாசம் உலகுபகாரம்" என்பர் பெரி யோர். அஃதாவது ஞானிகளாயினர் செய்யுஞ் செயல்கள் யாவும் உலகிற்கு உதவியாக இருக்கும் என்பது. இவ ருடைய செயல்களும் அவ்வாறே அமைந்து திகழ்ந்தன. கூத்தப்பிரான் கோயிலில் படிந்திருந்த கருமையை வெண் மையாக்கித் திருப்பணிகளின் திருவிளங்கச் செய்தார். தச்சன்குளம், ஞானப்பிரகாசம் என்பனவகள் சேறு மிகுந்து தூர்ந்து மேடிட்டு நீராடற்கு இயையாதனவக ளாக விளங்கின. தக்கார் பொருளுதவிகொண்டு அத் தடா கங்களைச் சீர்திருத்தித் தில்லைவாழ் மக்களுக்குப் பயன்படு மாறு செய்தார்.

நேசவுத் தொழிற்சாலை

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும், கல்லாச் அறிவிலா தார்" என்றுரைத்த தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார். இதனுடைய பொருள், பல நூல்களைக் கற்றும் உலகத்தாரோடு ஒட்டி ஒழுகுதலைக் கற்றுக்கொள்ளாதவர் கள் அறிவற்றவர்களேயாவர் என்பது. உலக மக்கள் எது வினைப் பின்பற்றுகின்றனரோ அதனைத் தாமும் பின்பற்ற

வேண்டியது இன்றியமையாததன்றே? காடெங்கும் கதர் முழக்கம் பேரொலி செய்துகொண்டிருந்தது. நாட்டு விடு தலையை விரும்பினோர் "கதர் கதர்" என்று கதறினர். இப் பெரியாரும் கதர் இயக்கத்தில் ஈடுபட்டார். தாம் கதராடை யணிந்தார்; மடத்தில் இருந்தவர்களும் கதராடை யணியச் செய்தார். தூல் நூற்றலையும் தூல் கற்றலோடு மேற்கொண் டார். பாரதமாதா கதர்த்தொழிற்சாலை ஒன்றையும் ஏற் படுத்தி நடத்தினர். அதில் நீண்டநாள் கதர் நெசவும் நடைபெற்றது.

காந்தியடிகள் வருகை

காந்தியடிகள் திருத்தில்லைக்கு வந்தார். அவரை வர வேற்றுப் போற்றுவதில் பரஞ்சோதி அடிகள் முன்னின் றார். தமது மடத்திற்கு வரவழைத்துத் தம்மோடு தங்கச் செய்தார். மற்றும் அமைச்சர்கள் தலைவர்கள் முதலிய எவர் வரினும் இவர் இருப்பிடத்தை அடைந்து இவரோடு தங்கி விருந்தாளியாக இருந்தே செல்வர்.

நூல்கள் வெளியிடல்

பொன்னம்பல அடிகள் பகவத்கீதை, கைவல்லிய நவ நீதம் முதலிய அரிய வேதாந்த நூல்கட்கு உரை யெழுதி யிருந்தார். இவர் அவ்வுரைகளைப் பதிப்பித்து வெளியிட் டார். தத்துவராய அடிகள் என்னும் பெரியார் இயற்றிய அடங்கன்முறை என்னும் நூலையும் இவர் திருத்தமான பதிப்பாக்கி வெளிவர ஏற்பாடு செய்தார். நூல்கள் இயற்று வதிலும் வல்லவர். பொன்னம்பல அடிகள் வரலாற்றை உரைநடையாக எழுதி வெளிப்படுத்தினர். இவருடைய உரைநடைப் போக்கைச் சிறிது காண்க.

"இங்ஙனம் நெடுநாளாற்றி வருங்கால் தன் மகனின் மேனி பசையற்று வறண்டிருப்பதைக் கண்ணுற்ற அன்னை

யார் ஒரு சகி மணைக்காய பன்னிச்சிரச்கள்பால் இவன் செயல் கேட்டும் ஐயங்கொள்ளா மனத்தராய்க், 'குமரனே! உன் மேனி எண்ணெய்ப் பசையறக் காண்டலின் காரண மென்னை?' என்று வினவ அம்மைபார் முனிவுறுவனென அஞ்சி, "அம்மை சிகைக்காய் வறனத் தேய்த்த மூழ்கினு னால் இவ்வணமாகிற்'றென மொழிவர். அன்னையார் இவன் செயலறிவாம் எனச் சண்டேசர் தந்தையார் போன்று ஒளித்து நின்று கண்காணித்தனர். முன் முறைப்படி இவ முகத்தெந்தைக்கு எண்ணெய் இட்டுத் தூசோட்டி கனி மலர் தூவுய்க் கனிவுறு மொழியாற் பல கதி பியற்றி மெய்ம்மையிர் பொடிப்ப உள்ளகமுவப்பத் திலகமண்டோய வீழ்ந்திறைஞ்சித் திரும்பினர்." இது பொன்னம்பல அடிகள் வரலாற்றைச் சேர்ந்தது.

செய்புட்கள் செய்தல்

செய்புட்களை நன்கு இயற்றம் ஆற்றலும் அடிகளார்க்குப் பெரிதும் அமைந்திருந்தது. அவ்வவ்வமயங்களில் தனிப்பாடல்கள் பல செய்துள்ளனர். சென்னை பிரசிடென்சிக் கல்லூரியில் எழுந்தருளியிருந்த காலத்தில் சிவப் பிரகாச அடிகள் காலமானபோது அப் பெரியார்மீது,

"அருக்கலை முனிவர் அரம்பையர் வழுத்த
அணிவிசும் பொகுமே அருந்தம்
பெருந்தவம் உடைய இந்திர பதமும்
பிரமனம் பதமும்ம கேசனே
கருங்கடல் இடந்த விடமெனுங் காமர்
கள்வனை ஒறுத்தவ னினது
திருந்திய வதன அருமதருள் தினனும்
செப்பிர காசைத் தேனே!
என்னலுங் கனியும் கலந்தமு தினைய
கலின்பொழி மதுரைய சகமும்

இன்னலே ஒழிய அடியவர்க் குதவும்
எழில்பொழி கமலலோ சனமும்
பன்னரு மறையின் பொருளினை எளிதில்
பண்பினர்க் குதவுவல் லபமும்
என்னமில் வடிவும் காண்குறான் என்றே
சிவப்பிர காசனென் மணியே."

இவை முதலிய பன்னிரண்டு பாடல்களால் இரங்கற்பா பாடினர். மற்றும் இயற்றப்பெற்ற தனிப் பாடல்கள் பல.

அறிவுரைகள்

பொன்னம்பல அடிகளாரின் திருமடத்தின் உணவுச் சாலையில் உள்ள பலகணிகள், வாயில்கள், அலமாரிகள் (சுவர்ப்பீடைகள்) ஆகியவைகளில், "மரணம் வருவதறிந் திருந்தும் வாளுள் விளாக்கன்மின்" "உளவாதிகட் கும் புசிப்போர்க்கும் உண்ணுநர் தொழிற்கும் நாம் சாட்சி" என்பன போன்ற உயரிய அறிவுரைகளைப் பெரிய எழுத்தில் வரைந்த வடிவில் எழுதச்செய்து பலரும் படிக்கப் பய னடையச் செய்தார்.

கற்பிக்குதவி

அக்காளில் அண்ணாமலைச் செட்டியாருடைய மீனாட்சி கல்லூரி முதலியன தில்லியில் இருந்தன. அதனில் கல்வி கற்ற மாணவர்கட்கு அடிகளார் தக்கவாறு தம்மால் இயன்ற உதவிகள் செய்தனர். தக்கவர்களைக் கொண்டும் செய்வித்தனர்.

சகசானந்தருக்குதவி

திருத்தில்லையில் நந்தனர் கல்விக் கழகம் ஒன்று நாற்றப்பட்ட வகுப்பார்களுக்காக அக்காளில் தோன்றி யது. அதனை ஏற்படுத்தி இன்றுவரை சிறிய முறையில் நடத்தி வளம்பெறச் செய்து வருபவர் சாமி சகசானந்தர்

என்பவர். அவர் சென்னை வியாசர்பாடி காபாலத்திர சிவப் பிரகாச அடிகள், கோ. வடிவேலுச் செட்டியார் ஆகியோரி டம் வேதாந்தக் கலைகள் கற்று விழுமியதின்னை கைவரப் பெற்று விளக்கும் வித்தகர். அவருடைய முயற்சிகள் பாவற்றுக்கும் பக்கபலமாக அமைந்துநின்று உதவி செய் தனர் அடிகளார்.

அவைத் தலைமை

அடிகளார் கேட்டார்ப் பிணிக்குந் தகைபெலாய் உரை யாடுவதில் வல்லவர். இவருடைய உரையை ஒருமுறை கேட்டவர் மீண்டும் மீண்டுங் கேட்க விழைவர். சில அவைகளில் தலைமை தாங்கிச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி யுள்ளார். நாவலூற்று நடுப்பட்டி என்னும் ஊரில் சமரச சன்மார்க்கசங்கம் என்னும் சங்கத்தில் அடிகளார் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றியபோது அச் சங்கத்தினர் அடிகளாருக்கு வரவேற்புச் செய்யுள் படித்து அளித்தனர். அச் செய்யுளின் ஒரு பகுதி:

"உலகெலாஞ் செறிந்து நிலையுற ஆற்றிய
வலமுறு தவதரின் மலிவுற பயனெல்
தோன்றிய பெற்றியாய் சான்றாற் றகையீர்!
ஆன்றறிந் தடக்கிய அறிவுடைப் பெரியீர்!
தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளீர்!
ஓங்கிடும் புகழுற நீங்கரு கருணையீர்!
தாக்குகல் வகழுடைப் பாக்கள் பற்பல
வேண்டி சித்தவும் வேண்டா தகவை
மாண்டகு தமிழ்மறை என்பெற உரைத்த
வறிவார்க் கொன்றீ குஃதே யீகையென்
றெறியே கடைப்பிடித் தறிவிலி யேமை
வல்லிதின் ஆள்வான் பல்லிய கருணையாம்
எல்லெனப் போந்தகம் சொல்லரும் வரவே
கல்வர வாருக கல்வர வாருக

ஓதகரும் அருளான் மேதகு திருமலர்
சோதி வருகதற் சுந்தரம் வருக
ஓதகரும் அருடவெரும் வாரிதி வருக
காமுய வருகதம் காடுய வருகதல்
எமமுற் தேம்மிகு சேமமுற் றேமினி
உறத்தகும் பேறது வேறொன் றிண்றே
சிறப்புறு மடாலயத் தினறவாத் திவ்வேலில்
வீற்றிருக் தருளி விதியொடு பக்குவர்க்(கு)
ஏற்றகல் ஞானம் போற்றவே அளிக்கும்
வித்தகச் செல்வீர் வீறுடன் வருக:''

என்பதாகும்.

குண தலன்கள்

அடிகளார் ஏழை எளியவர்கட்குத் தம்மாலியன்ற உதவியைப் புரிதல் வேண்டும் என்னும் சிரிய நோக்கத் தினர். உயிர்களிடத்து அருளுடைமை, அன்புடைமை, மனவுறுதி, கடவுளன்பு, இறவி வழிபாடு முதலியன இவரிடத்தில் நன்கு பொருந்தியிருந்தன.

அன்பர்கள்

மகாத்மா காந்தியடிகள், அமைச்சர்கள், அறிஞர்கள், செல்வர்கள், வறியவர்கள் முதலிய எல்லோரும் அடி களார்க்கு இனிய நண்பர்களாக அமைந்து விளங்கினர். உலகில் எத்தகைய சிறந்தவர்கட்கும் சில பகைவர்கள் இருப்பர். அவர்கள் தம்முடைய நன்மை ஒன்றையே நாடிய புல்லர்களாவர். அத்தகைய இழிகுணம் படைத்த பகைவர்கள் காந்தியடிகள் போன்றவர்கட்குக்கூட இருந் தனரெனின் மற்றவர்கட்கிருந்ததைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அத்தகையோர் அடிகளாரை மடத்தைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க முயன்றனர். ஆனால் அவர் களுடைய முயற்சி குன்று முட்டிய குருவியின் கதியாகவே இறுதிவரை அமைந்திருந்தது.

இறை

உலகிற் பேரிலவாள்களாக வினைக்குபவர்கள் மிகவு மாகவே காலமாகி விடுகின்றனர். திருஞானசம்பந்தர் பதினாறாண்டிலும், இரு மங்கையர்களோடு இனிதமைந்த சுந்தரமூர்த்தியடிகள் பதினெட்டாண்டிலும், மிகுந்த புதுமையினைச் செய்து அறிவுலகிலே மினைக்கிய மாணிவாசகப் பெருமான் முப்பதிரண்டாண்டிலும் இறை படியடைந்தனர். கனிச் சக்கரவர்த்தியாக வினைக்கிய தமிழ் மங்கையம் சிவப்பிரகாச அடிகள் காலமானபோது அகவை முப்பது என்பர். மற்றும் எண்ணற்ற அறிஞர்கள் தமக்கு அகவை நாற்பது நிரம்புவதற்குள்ளேயே மறைந்து போயினர். இவர் தமக்கு அகவை முப்பத்தொன்பது நடைபெறும்போது மிபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தொன்றாம் நாள் (க0-க0-கஉஉஅ) இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை எய்தினர். இவர் மேலும் சில காலமேனும் உடலோடிருந்திருப்பின் தில்லை மாநகர் எல்லளவோ நன்மைகளை அடைந்திருக்கும். இவருடைய பிரிவு அன்பர்கட்கும் அறிஞர்கட்கும் எனைய வர்கட்கும் மிகுந்த கலக்கத்தைத அளித்தது. எல்லோரும் பெரிதும் வருந்தினர். அறிஞர் சிலருடைய இரங்கற்பாக்களை அடிமிற் காண்க.

இரங்கற்பாக்கள்

"அந்தரஞ் பரஞ்சோதி அடிகள்டடல் அன்றுதலை
வந்தனன் செலியதனில் மழுவெனவே தனைத்தாலை
வந்தனை மன்னுமுகம் சோகமிக்க மனத்தன்னிச்
சந்தானம் எனக்கொடுக்கும் தலையாளர் இனியாரே.

மஞ்சாரும் குழலுமையாள் மணக்கமலம் வதிதலினால்
அஞ்சாமை சமைஅளி அறிவாண்மை முதலனைத்தும்
வஞ்சாத குடிபுகுந்து வந்தாலின் பிரிவுதனை
உஞ்சாகச் சொன்னெனவும் எடுக்கமுற்றேம் அந்தோவே.

மண்ணிலவு கைலைதனில் வாலிபல புதக்கிலினி
விண்ணிலவு கைலைதனில் சிவதெக்கை வினக்கவெனத்
தண்ணளிவம் பெருமானே தமிலேன்கள் மிகவருந்தப்
புண்ணியமோ பிரிந்தசெயல் புகறுதியோர் வார்த்தையுடை."

இவை திருவையாறு அறுபத்துமூவர் மடத்தலைவராக விளங்கும் திருமிகு பண்டித சித. காசபணைசுவாமி அவர் கனின் பாடல்கள் :

"நாட்டா ணிலிற் பாஞ்சோதிக் மடத் தாரிடத்தும்
கோர்ட்டா ரிடத்தும் பிறரிடத்தும் குலவு வண்ணமப்
பாட்டால் வினைசெயல் காட்டிவிட் டோம்இனிப் பண்
[பொடம்பொன்
நாட்டா ரிட்டுச்சென்று காட்டுவம் என்றே நடந்தனையே.

பாஞ்சோதி! அந்தோ பாஞ்சோதி தன்னிற்
பாஞ்சோதி ஆகப் பாந்து—விளைத்து
கலந்தாயே அன்பர் கல்லக்கணீர் வார்க்கப்
புலந்தாயே எம்மீதிப் போது."

இவை பொன்னம்பல சிவம் என்பவர் பாடியனவைகளில் இரண்டு. மற்றும் பலர் இரங்கற்பாக்கள் பாடினர். அவற் றுள் இரண்டைமட்டும் அடியிற் காண்க.

"ஆடவர் மகளிர் சேய்கள் அணி அணி ஆகின்று
நாடியே வருந்தும் வண்ணம் நலமதார் வீபல ஆண்டு
கூடிய கன்னிப் பூரம் குலவிய புதலா ரத்தில்
பீடுடைச் சோதி என்பான் பெயர்த்தனன் கைலைநோக்கி
உத்தம சிவதையான் உயரிய சோதி என்பான்
சித்தசன் அழகை ஒப்பான் சீதரன் குணமை ஒப்பான்
பத்தியில் பாணன் ஒப்பான் பரத்தினிற் சிவதை புன்னான்
இத்தனை எவ்க வீட்டிட எனினன் அந்தோ அந்தோ."

24. கனகசபாபதி ஐயர்

தோற்றம்

இவர் சுழுவன காட்டிலே யாழ்ப்பாணத்து கல்லூரிலே சிறந்த புலவராக வினங்கியிருந்தவர். இவருடைய தந்தை யார் பெயர் வேங்கட சுப்பையர்.

கல்வி

இலக்கண இலக்கியங்களையும் புராணங்களையும் இவர் தக்க ஆசிரியரிடத்திலே கற்றுச் சொல்லாற்றலிற் சிறந்த பெயர் வாங்கினர்.

சொற்பொழிவுகள்

இவருடைய வாழ்நாள் சொற்பொழிவுகளிலேயே கழிந்தது கொழும்பிலும், மோல்மேனிலும், இரங்கோனிலும் சிங்கப்பூரிலும், சைகோனிலும், பினாங்கிலும் செட்டிமார் நாட்டிலும், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களைப் புராணச் சொற்பொழிவுகளாக நடத்தினர். மற்றும் இவர் பல ஊர்களில், சைவசமயமே சமயம், பதிலட்சணம், பசலட்சணம், பாசலட்சணம், திருநீறு, சிவதண்மணி (உருத்திராக்கம்), திருவைந்தெழுத்து, அன்பு, திருவிழாவினக்கம், மாங்கழித் திருவாதிரை, சிவராத்திரி, மகாசிவராத்திரி, திருவிளையாடற் புராணசாரம், பெரியபுராண படனை மகிமை, சங்காரமன்மியம், ஆண்மார்த்த பூசை, சிவசத்திமான்மியம், கொலை, முயற்சி, பிரமசரியம், திருவாதவூரடிகள் வரலாறுகள், சோசபம், மகாமகம், அறச்சாலை, அந்தரியாகம், மறை, அந்தணர் பெருமை, காமம், நீதிநிட்டை, அர்த்தோதய விசேடம், சேது மான்மியம், மிருதி, உயிர்ப்பலியிடுதல், பேய் வணக்கம், சிவபுராண படனம்,

நான்முகனதியோர் சிவவழிபாடு செய்வோர், சமயங்கள் பலவாக இருக்கக் காரணம், சுந்தாமூர்த்தி நாயனர் வரலாறு, பரார்த்த பூசை, சதருத்திராத்தியாய மகிமை, விட்டுணு தூடணை கண்டனம், மதம், இல்லாச் சிரமம், சாலோகியம், கள்ளாண்ணமை, செல்வம், ணைப்பொங்கல், குருபரர் வரலாறு, மறுமணம், விநாயகசட்டி விரதம், சாத்தம், பொறையுடைமை, இறப்புக் தன்பம், அருணகிரிநாதர் வரலாறு, சிவபதிப் பயணம், தவம், பத்திரிகைகளின் பயன்கள், நீலகண்ட சிவாசாரியர், உலோபம், சிவபுண்ணியம், வைகாசி விசாகம், தானங்கள், காளமேகப் புலவர், மாற்சரியம், விநாயகர் பெருமை, சிவத்துரோகம், சோமவார விரதம், வஞ்சகம், ஆனி உத்திரம், புருடார்த்தம், பிரதோடம், வேதாந்த விளக்கம், ஆரோபம், அழுக்காறு சிதம்பர ரகசியம், பிரபஞ்ச மாயை. பொய்சொற் நன்றி யறிதல், இடம்பம், ஆசௌசம், அந்தியேட்டி, சமிழ், சித்தர்கள், திருஞானசம்பந்தர் வரலாறு, நம்பியாண்டார் வரலாறு, மறைமிற கூறப்பட்ட பதிப்பொருள் சிவனே, திருநாவுக்கரசு நாயனர் வரலாறு, ஆதிசைவர் இலட்சணம், சுவராத்திரி விரதம், சேந்தனர் வரலாறு, காயத்திரி மந்திர விசேடம், ஊழ், ஆலய தரிசனம், உபநயனம், இன்சொல், குருபூசை, ஆவணிமூலம், பாதாரகமனம், முன் பிறவிக் குறிப்பு, மாளயம், வறுமை, நன்மகப்பேறு, மந்திரம், அப்பையதீட்சிதர் வரலாறு, கல்லாமூக்கம். நாலாயிரப் பிரபந்தம், துறவு, மனிதப் பிறப்பின் அருமை, ஊனுணவால் நோயடைதல், சூது, திராவிட வேதப பெருமை, கார்த்திகைத் தீபம், ஔவையார் வரலாறு, இருவினையொப்பு, யோகம், வடமொழி, மானம், சனியை, சிவனடியார் பெருமை, பெண்ணைப் பொருளாக்கு விற்றல், கதிர்காமப் பெருமை, ஆணவம், வாய்மை, பிராயச்சித்தம், காசிப்

பெருமை, பட்டினத்துப் பிள்ளையார் வரலாறு, கந்தசட்டி, ஐந்தொழில், பெண்கல்வி, கொடை, கற்பு, கல்வி, வெகுளிக்கம், சுப்பிரமணிய பாத்திரம், அறத்தாசாரிய அடிகள், சாதிபேதம் வேதத்தில் உள்ளது, இலப்பிரசாத அடிகள் வரலாறு, மனம், இலவுறுத்த பேதங்கள், பழனிப் பெருமை, தேவாலய பரிபாலனம், ஸ்தலவாதனை, குரு, பூம்பொழில், தண்ணீர்ப்பந்தல் முதலிய பல பொருள் களைப் பற்றிச் சொற்பொழிவுகள் செய்துள்ளார்.

நன்கொடை

புராணச் சொற்பொழிவு முதலியன நிகழ்ந்த இடங் களில் தக்கவாறு நன்கொடை வழங்கிப் பெருமைப் படுத் தப் பெற்றார். வரம் இலவுப்பு முதலிய மணிகள் வரிசை யாகப் பதிக்கப்பெற்றுக் கீழ் மணிபரைக்தாலிக்கும் இலவுடைய சிங்கமுகத்தோடு, ஒரு பக்கத்தில் முருகக் கடவுள் அம்மையார்களோடு மயில் வாகனில் விற்றிருக் கும் பாவனையாகச் செய்த சுற்றிலும் பெயர் வரையப் பெற்ற தங்கப் பதக்கம், பலநிறப் பட்டாடைகள், சரிகை மிட்டுயர்ந்த ஆடைகள், கௌரி சங்க ஏறமுகக் கண்டிகை முதலிய விலையுயர்ந்த பொருள்களும் வழங்கப் பெற்றன.

பாடல்கள்

செப்புள் இயற்றவதினுஞ் சிறந்த சுற்றல் பெற் றிருந்த இவர் தனிப்பாடல்கள் பல இயற்றியிருப்பதுடன் கந்தபுராண சாரம் முதலிய நூல்களும் இயற்றியுள்ளார். இவர் வண்ணப் பாடல்களை நன்கு இயற்றக்கூடிய தன்மை பெற்ற விளக்கியமைபால் இவர்க்குப், "பல வகை வண் ணப் பாவலாசம்" என்னுஞ் சிறப்புப் பெயரும் வழங்கியது. கீழ் வரும் பாடல்களில் இவருடைய வாலாற்றுக் குறிப்புக் கள் அமைந்துள்ளன.

"இப்பெரிய கல்லூரில் எகர்வே தத்தின்
இயல்செறியும் எழில்கொள் காவில்
தப்புரையான் கௌசிகல் கோத்திரத்தன்
ஆல்தம்ப ருத்திரமாம் அதனில் வந்தோன்
செப்பரும்பொற் பதத்துணையைத் துணையாவென்றும்
சிக்தைசெய்வோன் அத்தணரில் செனித்த செம்மல்
ஒப்பரிய வேக்கடகப் பென்ற சொல்லும்
ஒருமறையோன் அருத்தவத்தின் உண்மையோர்ந்தே.

கனகசபை கடம்புரியும் கடுக்கை வேணிக்
கண்ணுதலார் திருமுகமும் அகமும் மாண்கோர்
கனகசோ ருகமலர்த்து மறையோன் உள்ளம்
கருதியலா ரருள்புரிவான், கருணை வள்ளல்
கனகசபா பதிப்பெயரைக் கனமாக் கொண்ட
காட்சியெனக் கலைமதியோர் களித்துக் கூறக்
கனகசபா பதியாகி உபயத் தோடு
கனகசபாபதியாகிக் கண்ணுற் றனனே."

உசூ. உ. ரா. சாமிநாத பிள்ளை

தோற்றம்

சோழவளநாட்டில் தஞ்சைமா வட்டத்தில் திருக்குடந்தைக்கு அண்மையில் ஏழுகல் தொலைவில் உள்ள உமையாள்புரம் என்னுஞ் சிற்றூரிலே தாளாண்மைமிக்க வேளாளர் குலத்திலே ஆலாலசுந்தரம் பிள்ளை என்பவருடைய வழி முறையில் இராமசாமிப் பிள்ளை என்பவருக்கு அருந்தவப் புதல்வராக ஆங்கிலம் கணக்குக்குச் சரியான சுபானு ஆண்டு ஆடித்திங்கள் இருபத்தாறும் நாள் இவர் பிறந்தார்.

கல்வி

இளமையில் பள்ளியில் விடப்பெற்ற இவர் சிற்றின்பத்தின் பலவற்றை வென்று கற்றுத் தேறினர். பள்ளியை

விட்டு வெளியேறியதும் புலமைக் கல்வியைக் கற்கவேண்டும் என்னும் அவாத் தென்றியது. தக்க பெரியாரிடத்திலே ஏழெட்டு ஆண்டுகள்வரை காடதம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் முதலிய பேரிலக்கியங்களையும்; கன்னூல் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் கன்கு ஓதியுணர்ந்து மாணவர் பலருக்குப் பாடஞ்சொல்லும் தொழிலை மேற்கொண்டு தமிழாசிரியராக விளங்கினர்.

கோவிலூர் வாசம்

அக்காலில் பாண்டிவள நாட்டில் கோவிலூர் என்னும் சிவாரில் அண்ணாமலை ஞானதேசிகர் என்னும் பெரியார் கோவிலூர் மடாலயத்தில் மடத்தலைவராக அமர்ந்திருந்தார். அவரிடம் சில ஆண்டுகள் உடன் தங்கி வேதாகத நூல்கள் பலவற்றை ஓதி யுணர்ந்ததோடு பலருக்கு இலக்கிய நூல் களையும் போதித்தார். பிறகு செட்டிநாட் நாட்டில் பள்ளத் தூர் முதலிய இடங்களில் தனவணிகர் பலருக்கு இலக்கண இலக்கியங்களைப் போதித்துக்கொண்டு ஆசிரியராக இருந் தார்.

'சிவதேசன்' உதவி ஆசிரியர்

பலவான்குடி என்னும் ஊரில் சிவதேசன் இழைய வெளியீடு ஒன்று காலைச் சிவதேசர் திருக்கூட்டச் சார்பில் தோன்றியது. இவர் அப் பத்திரிகைக்கு உதவி யாசிரிய ராக அமர்ந்து சிறந்த பணிபுரிந்தார். அக்காலில் காத்திகம் பேரி காத் தழும்பேறுவர் கூட்டம் மலிந்து பத்திரிகை களின் வாயிலாகவும் தமது திருக்கூத்தை நடத்திவது. இவர் சிவநெறி விளக்கக் கட்டுரைகள் பல எழுதி காத்திகம் தலைதூக்காதவாறு செய்தார்.

பதார்த்த வசனி

பிறகு செட்டிநாட் நாட்டைவிட்டுத் திருக்குடந் தையை அடைந்து 'பதார்த்த வசனி' என்னும் பத்திரி

கைக்கு ஆசிரியராக அமர்ந்து இறுதி வரையில் அப்பத்திரி கையைச் சிருஞ் சிறப்புந் திகழ நடத்தினர்.

என் ஆசிரியர்

இவர் பலவான்குடியில் தங்கி யிருந்தபோது சமணம் அவ்வூரில் உள்ள திருவாசக மாடசாமியில் தங்கி யிருந் தேன். அப்பொழுது கலைசைச்சிலேடை வெண்பா, கன்னூற் காண்டிகை முதலிய நூல்களை எனக்குப் பாடஞ்சொல்லி என்னுடைய ஆசிரியராகவும் விளக்கினர்.

இயற்றிய நூல்கள் முதலியன

இவர் தனிப்பாடல்கள் பல இயற்றி யிருப்பதோடு செல்லூராபதி நிரோட்டகமாலை, திருவேரக முருகன் வண்ண மஞ்சரி, கட்டுரைத் திரட்டு முதலிய நூல்கள் இயற்றியுள் ளார்.

"தாரணி தனிலே அரிதினில் அரிதாய்ச்
சாற்றிய யாக்கையைச் சார்ந்தே
ஏரணி இளைஞன் எனத்திகழ் கலை
எழிற்கலை கற்றிடா திகழ்ந்தேன்
சூரணி சகல காரணி எனையான்
அந்தரி சுந்தரி அழகார்
காரணி வரைத் தோரணி கழனி
சுகரணி செல்லூரா யகியே."

என்பது செல்லூராபதி நிரோட்டக மாலையில் ஒரு பாட்டு. இவர் எள்ளுக்குங் கொள்ளுக்குஞ் சொற்போராகப் பாடியன.

என்

மூத்த பிள்ளை யார்க்குணவின்
முந்தியிருப்பேன் மனிதர்கன்றம்
முடியில் ஏறிச் சுகங்கொடுப்பேன்
முன்னோர் பிதிரார்க் கடன்கணிக்க,

தித்தென் றண்ணை கடைத்தார்கள்
தியாய வாதி பதிகிலேக்கு
சேய முடனே சாட்சியதாய்
தித்பேன் உண்மை சிலமாதேன்,
பூத்த பொழுதில் எனைப்புகழப்
புலவர் பலபேர் வந்திவரர்
புனியில் இருனை நீக்கவந்த
புண்ய சாலி யாளுவேன்
பார்த்தோர் என்னை கக்கியுண்பர்
பலநோய் தீர்ப்பேன் கடனடையேன்
பயனில் கொன்னே ளனைவ மொழி
பாரில் தெரியும் பகட்டாதே.

கொன்

"ஆடுங் காணத் திடை யுனைப்போல்
அவதி யடையேன் பலுவாவேன்
அரிவி புடனே கூடியழும்
தாகப் பதிகோய் தணித்திடுவேன்
ஓடி நடிக்கா விரியடங்கா
உதக மடங்கும் இடமாவேன்
உலகோர் எதையுங் கதவென்பேர்
உரையா திருக்கார் எனையதக்கார்
காடும் சூல வாயுடையார்
கடத்தும் பரிகட் குணவாவேன்
காட்டித் பட்டி மாடுகளை
கல்ல மாடாய்ச் செய்திடயான்
கடும் அதலுல் அறிருரெனைக்
கொன்னென் நூர்உனை என்னென்றூர்
குலத்திற் பெரியேன் என்னே உன்
குலக்கும் மறுக்கும் காட்டாதே.

பன்னத்தூர் அன்பர் ஒருவர் "கணம்பூ கிகாருங் கண்" என்ற ஈற்றடி கொடுத்து அதனை நிறைத்துப் பாடுமாறு வேண்டியபடி நிறைத்துப் பாடியது.

உள்ளத்தர் தன்பின் உயர்கலிதை பாத்பாடிப்
பள்ளத்தர் மேடும் பரிசுமமிழ்—வெள்கொக்
குணம்பு சிகாரும் கொக்கைதரும் பைக்கரக்
கணம்பு சிகாரும் கண்.”

இதனி

சிறந்த பழந்தமிழ்ப் புலவராக விளங்கியிருந்த இவர் ககூருடி ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபத்து மூன்று நாள் தமது எழுபத்து நான்காவது அகவையில் இறை வன் திருவடி நீழலே பலடைந்தார். இவருக்குச் சிவப்பிரகாசம், சதாசிவம் என்னும் பெயருடைய மைந்தர்கள் இருவர் உள்ளனர். அவர்கள்,

“தந்தையாய்ச் சற்குருவாய்த் தாரணியில் எந்தமக்கு
வந்தளித்த செந்தமிழ்த்தேன் வாயிலுய்—சந்ததமும்
பாடிப் பணிவல்செய் சாமிநாத வள்ளலடி
நேடிமனம் இன்றெனக்கு நே.”

என்று இரங்கற்பாப் பாடி உள்ளம் உருக்கினர். இப் புலவர் பெருமான் இறைவன் திருவடி நீழலில் என்றும் இன்புறுக.

உடு. *கணேசையர் - சி

தோற்றம்

சமவன காட்டிலே பழம்பாணந்திலே புன்னாலைக்கட்டு வன் என்னும் ஊரிலே சைவ அந்தணர் குலத்திலே கலிப கோத்திரத்திலே ஆங்கில ஆண்டு கபரசுக்குச் சரியான சகர ஆண்டு பங்குனித் திங்கள் பதினைந்தாம் நாள் கணே சையர் பிறந்தார். தந்தையார் பெயர் சின்னையர். தாயார் பெயர் சின்னம்மாள். கணேசையர் தம் தாய்தந்தையருக்கு

---

* பழம்பாணம் பண்டித வித்துவான் திரு. க. சி. சடாசரன், B. O. L. அனுப்பிய குறிப்புக்களைக் கொண்டு எழுதியது.

ஐந்தாவது மைந்தராகத் தோன்றினர். மூத்தவர் நால்வரும் பெண்மக்கள். தாய் தந்தையரும் வழி முறையாரும் ஆனை முகக் கடவுளிடத்திலே அன்புடையவர்களாதலின் இவருக்குக் கணேசையர் என்று பெயர் சூட்டினர். கணேசையரும் ஆனைமுகக் கடவுளின் அடித்தொண்டராகவே விளங்கினர்.

கல்வி

கணேசையருடைய பெரிய தகப்பனார் கதிர்காம ஐயர் என்பவர் புன்னாலைக்கட்டுவனில் சைவப் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தார். கணேசையர் அப்பள்ளியிற் சேர்ந்து கல்வி கற்றார். அரிச்சுவடி முதல் எட்டாம் வகுப்புவரை கற்றார். இலக்கணம், இலக்கியம், சமயம், கணிதம் முதலிய பாடங்களில் முதன்மை பெற்று விளங்கினர். ஆசிரியர் பயிற்சி பெற்றுப் பள்ளிக்கூட ஆசிரியராகத் தொழில் மேற்கொள்ள வேண்டுமென்பது பெற்றோர்களுடைய எண்ணமாக இருந்தது. இவரும் அவ்வாறே ஆவதற்கிருந்தார்.

வித்துவசிரோமணி

அக்காலில் யாழ்ப்பாணத்தில் பொன்னம்பலம் பிள்ளை என்பவர் வித்துவசிரோமணியாகச் சிறந்து விளங்கினர். அவர் சைவப் பள்ளிகளில் தேர்வு நடத்துபவர்களில் ஒருவராக இருந்தார். கணேசையர் கல்விகற்ற பள்ளிக்கு வந்து தேர்வு நடத்தத் தொடங்கினர். கணேசையரைப் பார்த்துக் கந்தபுராண முதற்கண்ணூலான "திகடசக்கரச் செம்முகமைந்தனான்" என்னுஞ் செய்யுளுக்குப் பொருள்கூறச் சொன்னர். இவர் தாம் கற்றறிந்தபடி, "விளக்காகின்ற பத்துத் திருக்கைகளையும் செவ்விய ஐந்து முகங்களையும் உடைய சிவபிரான்" என்று முதலடிக்குப் பொருள் கூறினர்.

தம் பொருள் விரித்தல்

கணேசபர் பொருள் கூறியதை அந்த அளவில் நிறுத்தச் சொல்லிவிட்டு வித்துவசிரோமணி தம் பொருள் விரிக்கத் தொடங்கினர். "உண்மைப் பொருள் உண்மைப் பொருள் எனப் பொருள்கள் இரண்டு வகைப்படும். உலகமைப்பொருளைக் கூறும்பொழுதுதான் இரண்டாம் வேற்றுமையுருபாகிய ஐ உருபை விரித்துப் பொருள் கூறவேண்டும். உண்மைப்பொருளைக் கூறுமிடத்து ஐ உருபு விரித்துப் பொருள் கூறல் அமையாது. சிவபிரானது முகங்களும் கைகளும் உண்மைப் பொருள்களாதலின் ஐ உருபை விரியாது, 'விளங்காநின்ற பத்துத் திருக்கைகளும், ஐந்து திருமுகங்களும் உள்ள சிவபிரான்' என்று கூறவேண்டும்" என்று விளக்கினர். அப்பொழுது சிறுவராக இருந்த கணேசபருக்கு வித்துவசிரோமணி பொன்னம்பலம் பின்னாளிடம் நன்மதிப்பு உண்டாயிற்று. 'இவர் சிறந்த அறிஞராகத் திகழ்கிறார். இவரிடஞ் சிறிது காலமேனும் கல்வி கற்றல் வேண்டும்' என்று உள்ளத்தில் எண்ணங் கொண்டார்.

மேலும் கல்வி கற்றல்

வித்துவசிரோமணி பொன்னம்பலம் பின்னாள் பாணாகலைச் சேர்ந்த வண்ணார் பண்ணையில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்திக்கொண்டிருந்தார். அவரிடஞ் சில மாணவர்கள் பாடங் கேட்டுக்கொண்டிருந்தார்கள். கணேசபர் தாமும் வித்துவசிரோமணியிடம் பாடங் கேட்பதற்கு அவருடைய உடன்பாட்டைப் பெறவேண்டும் என்னும் நோக்கத்தோடு ஒருநாள் மேற்படி திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றார். மற்ற மாணவர்கட்குப் பாடம் நடந்துகொண்டிருந்தது. வித்துவசிரோமணி தம் முடைய மாணவர்களைப் பார்த்து, "உண்ப" என்னுஞ்

சொல்லுக்கு இலக்கணம் யாது? என்று உசாவினர். அம் மாணவர்கள் தக்கவாறு விடைகூறவில்லை. அங்குச் சென்று அண்ணாமலில் நின்றுகொண்டிருந்த இவரைப் பார்த்து, "நீர் சொல்லுவீரா?" என்று கேட்டார். உடனே இவர், "உண்பது நன்னூற் சொல் உயர்திணைப் பலர்பால் வினைமுற்றாகவும், அஃறிணைப் பலவின்பால் வினைமுற்றாகவும் வரும்" என்று மறுமொழி கூறினர். இதனைக் கேட்டு வித்துவசிரோமணி மகிழ்ந்தார். இவரைத் தம் மாணவராக ஏற்றுக்கொண்டு வ்வண்முறையாக நூல்களைக் கற்பித்தார். வித்துவசிரோமணி பொன்னம்பலம் பிள்ளை காலமான பின் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரிடம் மேலும் பல நூல்களை ஓதி யுணர்ந்தார். வடமொழியையும் கற்றுணர்ந்தார். அம் மொழியிலும் வேண்டிய அளவு பயிற்சி உண்டாகியது.

ஆசிரியத் தொழில்

சிறந்த புலமையை அடைந்த இவர் தமது இருபத் தொன்றாவது அகவையிலேயே தமிழாசிரியராகப் பணி புரியத் தொடங்கினர். முதலில் வேலுப் பிள்ளை என்பவ ரால் நடத்தப்பெற்று வந்த விவேகானந்த வித்தியாசாலை என்னும் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினர். பிறகு வண்ணார் பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிற் சிறிது காலம் பணியாற்றினர். பிறகு புன்னாலைக் கட்டுவன், வசாவிளான், குரும்பசிட்டி என்னு மிடங்களிலும் ஆசிரியராக இருந்தார்.

திருமணம்

இவருடைய மாமனார் பெயர் போகவன சாத்திரி என் பது. அவருக்கு அன்னலக்குமி என்னும் பெயருடைய மகள் ஒருத்தி இருந்தாள். அம்மாதரசியை இவர் திரு மணம் புரிந்தார். அப்பொழுது இவருக்கு அகவை மூப்

பத்திரன்டு. பிறகு தமது மாமனாருடைய சொல் பன்னிக் கடத்தில் கைலாலம் ஆசிரியராக இருந்தார். அதன்பின் கிறுந்தி என்னும் ஊரில் ஏழாண்டுகள்வரை ஆசிரியராக இருந்தார்.

பேராசிரியர்

கல்லூரி ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பின்பற்றி மாம்பாணத்தில் ஒரு சங்கம் ஏற்படுத்தப் பெற்றது. அதில் பிரவேச பண்டித பரீட்சை, பாலபண்டித பரீட்சை, பண்டித பரீட்சை முதலிய தேர்வுகளும் போதனைகளும் நடைபெற்றன. அக்கு இவர் தலைமைப் பேராசிரியராக அமர்ந்து பதினோராண்டுகள்வரை அரும்தமிழ்ப் பணி புரிந்தார்.

நூலாசிரியர்

இவர் போதனாசிரியராகத் திகழ்ந்ததோடு அமைந்து விடாமல் நூலாசிரியராகவும் திகழ்ந்தார். நூலாராய்ச்சியை இடைவிடாது செய்துகொண்டிருந்ததோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்ப் பத்திரிகைகில் கட்டுரைகள் பலவற்றை எழுதினர். செய்யுள் பாடுவதிலும் சிறந்த விளங்கியமையின் செய்யுள் நூல்கள் பல இயற்றினர். மருதடி விநாயகர் இருபா இருபஃது, மருதடி விநாயகர் அந்தாதி, மருதடி விநாயகர் கலி வெண்பா, கலி விருத்தம், ஊஞ்சல் முதலியன இவரால் இயற்றப்பெற்ற செய்யுள் நூல்கள்.

"தாமுழுத் நிட்டிய தோமில் பொருளுணும்
வேளாண் மாந்தர் தானிழுந்து வருந்த
தூம் புலர்ந்து கோளுக் நிரிந்த
வானுர் தொலைந்த வறண்மிரு காலையும்
தன்னிடத் தருளிச் சின்னீர் உதவி
உலகம் புரக்கும் ருலவரை போல

உள்ளது கொடுத்தலும் வள்ளற் பெருமை
பெற்றே அறிகிலாப் பேதை மாத்தர் போல்
உற்றன பேணும் பற்றலை இந்நாள்
வாழ்க்கையும் இந்த மண்ணோர் வாழ்க்கையும்
வேண்டலன் கின்பெரு மலாடி வேண்டுவன்
குலமகட் கானத் தலைப் பகட்டினம்
சென்றபுல் லருந்த துன்னுபல் லயல்கள்
சூழும் வருத்தலைத் தொன்மா கரிடை
எனற் கதிர்போல் இலங்குவெண் மலர்கள்
விரிதரும் சினைகள் மேவு மருதடி
போற்றிட அமரரும் வீற்றிருந் தருளும்
மதமா முகத்தொரு வான்பெருங் கடவுளே"

என்பது மருதடி விநாயகர் இருபா இருபஃதில் ஒரு பாட்டு.

"போற்றலன் மாமரு நீசன் பதக்கமைப் போற்றியிக
மாற்றல னென்றன் மனத்தி னகலினை மாற்றியின்பச்
தோற்றது மோன கிலேயினைப் பெற்றுச் சுகமடைவன்
கூற்றவன் தன்னை அருளொளும் வானாற் கொலைசெய்வனே"

என்பது விநாயகர் அந்தாதியில் ஒரு பாட்டு.

"ஊர சாமுடிப் பிற்கை ஒருவமே உலகென்
ருரு மோர்வுற வடன்றனை வலுச்செய்தக் கையினிற்
சேரு மாக்கனி வாக்கினேன் தனைத்தெரி சிக்க
சேரி லாதிலாக் செய்திடு தலமேலை நிலத்தில்."

என்பது விநாயகர் கலிநிலைத்துறையில் ஒரு பாட்டு.

"வடிதருமைங் குசபாசவ் கரமேல் வைத்தாய்
வல்லையைவம் குசபாசம் உரமேல் வைத்தாய்
குடிலமிசை உளமதின் சடைமேல் வைத்தாய்
கொலிஜேபேன் உளமதின் புடைமேல் வைத்தாய்
படியுகசீர் சகவடி உன்பால் வைத்தாய்
பணிபுரிதற் சகவடி வென்பால் வைத்தாய்
வடிபுனலார் குளந்திகழ்வர்த் தலமேல் ஓங்கும்
மருதடிவாழ் ஐங்கரனே ஆடூ ரூசல்."

என்பது ஊஞ்சலில் ஒரு பாட்டு.

தமிழ்ப்புலவர் வரலாறு

சமஸ்கிருதத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் எல்லோருடைய வரலாற்றையும் "சமஸ்கிருதத் தமிழ்ப் புலவர்கள் சரித்திரம்" என்னும் பெயரோடு எழுதி வெளியிட்டார். இந்நூல் சமஸ்கிருதப் புலவர்கள் எல்லோரைப் பற்றியும் அறிந்துகொள்வதற்குச் சிறந்த கருவியாகத் திகழ்கின்றது.

உரை நூல்கள்

நாலுக்கு உரை யெழுதுவதில் இவர் சிறந்த போற்றல் பெற்றுத் திகழ்ந்தார். இராமாயணம், தொல்காப்பியம் முதலிய நூல்களுக்குக் குறிப்புரைகள் எழுதினர். தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைக் குறிப்புக்கள், செல்லதிகாரச் சேனவரையர் உரைக்குறிப்புக்கள் முதலியன மாணவர்கட்குச் சிறந்த பயனளித்து வருகின்றன. மற்றும் அரசகேசரி இயற்றிய இராகுவம்சம் என்னும் நூலின் பாயிரம், ஆற்றுப் படலம், காட்டுப் படலம், நகரப் படலம், அரசியற் படலம், குறைகூறு படலம், தேனுவந்தனப் படலம், இராகு உற்பத்திப் படலம், யாகப் படலம், திக்குவிசயப் படலம் என்பவைகட்கு அழகிய புத்துரை ஒன்று எழுதி வெளியிட்டார். மேலும் அந்நூலின் அபூதகயப் படலம், அபினவுழிஞைப் படலம், மாலீடுப் படலம், கடிமணப் படலம், மீட்சிப் படலம், இராகு கதியுறு படலம், இந்தமதி பிறப்பு கேது படலம் ஆகியவைகட்கும் உரைவரைந்து வெளியிட்டார். இவ்வுரைக்கு உ. வே. சாமிநாதையர் வழங்கிய சிறப்புப் பாயிரம்:

"உலம்பூத்த புயவரச கேசரியார் தூய்த்தமுனம் உரைத்த நாய
கலம்பூத்த சுவையிரகு வம்சசத்திற் கினியவுரை கன்றி யற்றிப்
பலம்பூத்த தமிழ்வலவர் மதிப்பவெளிப் படுத்தினன்யாழ்ப்
[பாண மேபோன்
குலம்பூத்த லருமுடையோன் கணைசையப் பெயரானன்
[குணமிக் கோனே."

தன்மை

சிறந்த பேரிலராகத் திகழ்ந்த இவருடைய தன்மை கல்விலத்திற்கேற்ப உயர்ந்து திகழ்ந்தது. பேரிலாளராகத் திகழ்ந்தும் கல்விச் செருக்கற்றவராகவே விளங்கினர். ஆனைமுகக் கடவுளிடத்தில் இவருக்கிருந்த பேரன்பை இவர் இயற்றிய விநாயக வணக்க நூல்களால் நன்கு உணரலாம். ஹேவிளம்ப ஆம் ஆண்டில் இவருக்கு அமரபதம் ஆண்டு விழாக் கொண்டாடப்பட்டது. அப்போது வாழ்ப்பாணப் பெருமக்கள் வழங்கிய இரண்டாயிரம் ரூபாக்களையும் ஆனைமுகக் கடவுளின் திருக்கோயில் திருப்பணிக்கே பயன் படுத்தினர். பொருளில் ஒரு சிறிதும் பற்றுக்கொள்ளாமல் தாய தறவினைப்போலவே வாழ்க்கையை நடத்தினர். திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலிய நூல்களைப் பெரிதும் பாராட்டிக் கற்றார். வேதாந்த சித்தாந்தச் சமரசக்கொள்கையே இவருடைய உள்ளத்திலும் அமைந்திருந்தது.

சமகாலப் புலவர்கள்

உ.வே. சாமிநாதையர், ரா. இராகவ ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார், அரசஞ் சண்முகனார், திருநாராயண ஐயங்கார், மறைமலையடிகள், வித்துவசிரோமணி பொன்னம்பலம் பிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப் புலவர் முதலியோர் இவருக்குப் பழக்கமுள்ள சிறந்த புலவர்கள்.

இறுதி

இறுதி காலில் ஆனைமுகக் கடவுளின் அடிமலர்களையே பெரிதும் எண்ணிப் பாராட்டிக்கொண்டிருந்த இவர் கரநாம ஆம் ஆண்டு கலம்பர்த்திரிக்கள் எட்டாம் நாள் தமது என்பதாவது அகவையில் ஆனைமுகக் கடவுளுடைய அடி மலரை அடைந்தார்.

பதினாறு முதல் இருபத்தொன்று வரையிலும் உள்ள ஆறு புத்தகங்களினும் வெளிவந்துள்ள

185 புலவர் பெருமக்களின்

பெயர் அகரவரிசை

	அசலாம்பிகை அம்மையார்	புத்தகம் AIDS
	*அச்சுதானந்த அடிகள் (சு.)	19
	*அச்சுதானந்த அடிகள்	18
	அட்டாவதானியார்	16
5.	†அண்ணாமலை ரெட்டியார்	19
	அநந்த கவிராயர்	16
	அநந்தகிருட்டிணை ஐயங்கார்	20
	அநந்த பாரதி சுவாமிகள்	16
	அந்தானிக்குட்டி அண்ணாவியார்	16
10.	அப்பாச்சாமி முதலியார் (வீ.)	20
	அமிர்தம் சுந்தரநாதப் பிள்ளை	20
	அமிர்தம் பிள்ளை (திருச்சி)	18
	அம்பிகைபாகப் புலவர்	16
	அரங்கநாதக் கவிராயர்	16
15.	அழகிய திருச்சிற்றம்பல அடிகள்	19
	‡அழகுமுத்துப் புலவர்	18
	அறிவானந்த அடிகள்	21
	ஆறுமுக அடிகள் (திரு.)	19
	ஆறுமுகஞ் சேர்வை	17
20.	ஆறுமுகத் தம்பிரான்	16
	ஆறுமுக முதலியார்-வகனி	19
	ஆழ்வாரப்ப பிள்ளை	19
	இடைக்காடனார்	16
	இராசகோபாலப் புலவர்	21

* இருவரும் வேறு வேறு அறிஞர்கள்.

† 5-ம் புத்தகத்தில் நீக்கி விரிவுபடுத்தப்பட்டது.

‡ 15-ம் புத்தகத்தில் நீக்கி விரிவுபடுத்தப்பட்டது.

		புத்தக எண்
25.	இராமசாமி கவுடு (க.)	17
	இராமசாமி பிள்ளை (சரஸ்வதிபுரம்)	17
	இராமசாமி ரெட்டியார் (பொன்னம்பலம்)	17
	இராமலிங்கக் கவிராயர் (பொ. மீ.)	20
	இராமலிங்க அடிகள்	18
30.	இராமானுச கவிஞர்	18
	இரு மூகாம்பிகை புலவர்கள்	16
	இரவீயக் கூவர்	16
	இலக்குமணப் பிள்ளை	17
	இலட்சுமிபதி பிள்ளை (சொ.)	19
35.	வகுப் சிரிதாகாந்த அடிகள்	16
	உருத்திரகோடிப் புலவர்	18
	உலகம்மையம்மாள்	19
	எம்பெருமாள் புலவர்	18
	எல்லீஸ்	16
40.	ஏகம்பவாணன்	20
	ஏரம்பையர்	17
	கணபதிப் பிள்ளை	16
	கமலையர் (சி.)	31
	கந்தசாமிப் புலவர்	18
45.	கந்தப் பிள்ளை (ப.)	16
	கருத்தமுத்துப் பிள்ளை	16
	கலைபாபதி ஐயர்	21
	கலைமணப் பிள்ளை (க.)	19
	கலைமணிப் புலவர்	16
50.	கலைமணி முதலியார் (பா. அ.)	17
	கமலி	19
	கர்த்திகேயப் புலவர்	16
	கர்மேகக்கோன் (ஆ.)	18
	கழக்கண் ஐயடிய வள்ளலார்	16
55.	காளியண்ண பிள்ளை	21
	இருட்டிணசாமிப் பாவலர் (தெ. பொ.)	18
	இருட்டிண பாரதி	18

		புத்தக எண்
	திருட்டிணமாச்சாரியார் (பிலவாசி)	21
	குணங்குடி மஸ்தான் சாகிபு	20
60.	குமரகுருபர முனிவர் (வ.)	17
	குமரகுரு முதலியார்	16
	கோவை கப்பரைவேந்தர்	18
	கோடீசுர ஐயர்	19
	கோபால கிருட்டிணமாச்சாரியார் (வை. மு.)	17
65.	சடகோபராமானுசாச்சாரியார் (வை. மு.)	17
	சண்முகஞ் செட்டியார் (ரா. க.)	17
	சதாசிவம் பிள்ளை	16
	சதாசிவம் பிள்ளை (சாகை)	17
	சத்தியேந்திர. (ஆ.)	20
70.	சம்பந்த சரணாலயர்	21
	சரவணமுத்துப் பிள்ளை	17
	சரவண தேசிகர்	21
	சரவணமுத்துப் புலவர்	16
	சவரிராய பிள்ளை (பண்டிதர்)	17
75.	சவரிப் புலவர்	21
	சாது இராசிய சற்குரு	21
	சாமிக்கண்ணுப் பிள்ளை	17
	சாமிநாத பிள்ளை (உ. ரா.)	21
	சாமிநாத பிள்ளை (வி.)	20
80.	சாமி வேலாயுதம் பிள்ளை	18
	சிங்காரவேலு முதலியார் (மா.)	19
	சிங்காரவேலு முதலியார் (ஆ.)	17
	சிதம்பரநாத தேசிகர்	19
	சிதம்பரசாதத் தம்பிரான்	19
85.	சிதம்பர பாரதியார்	20
	சிதம்பரம் பிள்ளை (மு.)	16
	சிவகுப்பிரமணிய தேசிகர்	19
	சிவஞான தேசிகர்	16
	சிவபோக அடிகள்	21
90.	சிவராமலிங்க அடிகள்	17

		புத்தக எண்
	வொனங்ஙையர்	17
	வென்னத்தம்பி	16
	சேஷ்பால்கு ஐயர்	16
	சுந்தர முதலியார் (வி.)	20
95.	சுப்பிரதிபக் கவிராயர்	16
	சுப்பிரமணிய ஐயர் (தஞ்சை)	21
	சுப்பிரமணிய ஐயர் (மீ.)	20
	சுப்பிரமணிய சிவம்	17
	சுப்பிரமணிய பிள்ளை. (தி. செ.)	20
100.	சேஷாத்ரிக் கவிராசர்	18
	சொக்கலிங்க சிவப்பிரகாச பண்டார சந்நிதி	18
	சோமசுந்தரப் புலவர்	17
	சோமநாத பாரதி	19
	ஞான சித்தர்	19
105.	ஞானபிரகாச வள்ளலார் (நா.)	19
	தங்கசாமி	17
	தங்கமுத்துப் புலவர்	21
	தத்துவ போதகர்	20
	தமிழாகரர்	16
110.	திருநாவுக்கரசு தேசிகர்	16
	திருமலை சக்கையா கவுடர்	21
	திருமலைவேற் கவிராயர் (ச.)	20
	திருமாளிகைத் தேவர்	18
	திருமூர்த்தி யிளைஞர்	18
115.	திருவரங்கத் தமுதனார்	21
	திருவேங்கட நாயுடு (க. வ.)	19
	தெய்வசிகாமணிக் கவிராயர்	19
	தெய்வசிகாமணிப் புலவர்	21
	தொண்டைமான் முத்தையா	20
120.	தொல்காப்பியத் தேவர்	18
	நஞ்சையப் புலவர் (அ.)	21
	நஞ்சையப் புலவர் (க.)	21
	நமச்சிவாயப் புலவர் (இலங்கை)	16

		புத்தக எண்
	நாகப்ப முதலியார் (அ.)	20
125.	நாகமணிப் புலவர்	17
	நாதமுனி முதலியார் (மயிலை)	20
	நாராயணசாமிப் பிள்ளை (வெ)	16
	நாராயணசாமிப் பிள்ளை (வே. சி.)	20
	நாராயணசாமிப் புலவர் (ரா.)	21
130.	நீலகண்டதாசர்	19
	*நெல்லியப்ப பிள்ளை (தா.)	17
	*நெல்லியப்ப பிள்ளை (தா.)	18
	பக்தவத்சலம் பிள்ளை	18
	பங்காருப் பத்தர் (சி.)	20
135.	பரஞ்சோதி அடிகள்	21
	பராசசிங்கன்	20
	பள்ளிகொண்டான் பிள்ளை	18
	பாலசுப்பிரமணிய முதலியார் (மா.)	20
	பாலபாரதி முத்துச்சாமி அய்யர்	16
140.	பால பாரதியார்	16
	பிரதிவாதி பயங்கரப் புலவர்	18
	பின் வேலப்ப தேசிகர்	18
	பெருமாளையர்	20
	பெரும்பற்றப் புலியூர்நம்பி	20
145.	பொன்னுயிரங் கவிராய மூர்த்திகள்	21
	பொன்னையா முதலியார்	16
	மதுரஞ் சுந்தரபாண்டியனார்	20
	மயில்வாகனப் புலவர்	16
	மழவராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார்	17
150.	மறைஞான சம்பந்தர் (கண்கட்டி)	16
	மாணிக்கனார் (மு.)	17
	மாதவையர் (அ.)	17
	மீனாட்சிசுந்தர முதலியார் (கு.)	19
	முக்தாநந்த அடிகள்	20

* இருவரும் வெவ்வேறுவர்.

		புத்தக எண்
155.	முத்துக்கிருட்டிண பிரமம்	16
	முத்துக்குமார கவிராயர்	16
	முத்துச்சாமிக் கவிராயர் (நகரம்)	18
	முத்துக்குமாரசாமிக் குருக்கள்	17
	முத்துக்குமாரத் தம்பிரான் (போரூர்)	16
160.	முத்துக்குமாரப் புலவர்	21
	முத்துச்சாமிப் பாரதியார்	18
	முத்துச்சாமிப் பிள்ளை (எம்.)	18
	முத்துராமலிங்க ஞானதேசிகர்	19
	முத்துவேலுக் கவிராசர்	19
165	முத்தைய பிள்ளை (பொ.)	20
	முருகதாசக் கவிராயர்	19
	முருகப்பா (சொ.)	17
	முருகேசக் கவிராயர்	16
	முருகேச பண்டிதர்	17
170.	முருதாக்கர்	17
	முனிசாமி முதலியார் (மோகூர்)	20
	முனிசாமி முதலியார் (சி.)	18
	வயித்திலிங்கம் பிள்ளை (வ)	17
	வரதராசுலு நாயுடு	18
175.	விசுவநாதையர் (சு.)	20
	வில்லியப்ப பிள்ளை	18
	வில்லியார்	20
	வீமநாத பண்டிதர்	16
	வீராசாமிச் செட்டியார்	18
180.	வெறிமங்கை பாகக்கவிராயர்	16
	வேங்கடத்துறைவான் கவிராயர்	19
	வேங்கடகாதாசரியர்	21
	வேங்கடரமண ஐயங்கார்	21
	வேங்கடராம பிள்ளை (வி.)	17
185.	வேற்பிள்ளை (ம. க.)	17